# மந்திர மோகினி



கோட்டயம் புஷ்பநாத்

தமிழில்: சிவன்

கவிதா வெளியீடு

மந்திர மோகினி

முதற் பதிப்பு : ஜூலை, 2012

உரிமை : ஆசிரியருக்கு

**விலை : ₹ 250/-**

MANTHIRA MOHINI

By KOTTAYAM PUSHPANATH
Translated By SIVAN

First Edition : July, 2012

Pages : 384

Published by:

**KAVITHA PUBLICATION**
Post Box No. : 6123
8, Masilamani Street,
Pondy Bazaar,
T. Nagar, Chennai - 600 017.
✆ 2436 4243, 2432 2177.
Telefax: 044-2436 4243
E-mail : kavitha_publication@yahoo.com
website : www.kavithapublication.in

ISBN: 978-81-8345-224-3

**Price : ₹ 250/-**

ஒளி அச்சு : சு. அசோக்குமார், சென்னை - 600 080.

அச்சிட்டோர் : சிக்மா கிராபிக்ஸ், சென்னை - 600 005.

## சில வார்த்தைகள்...

வருடம் 1991. டிசம்பர் மாதத்தின் முதல் வாரம். சென்னை அப்போலோ மருத்துவமனைக்கு அருகிலுள்ள சிந்தூரி ஓட்டலில் ஒரு சந்திப்புக்கு ஏற்பாடாகியிருந்தது. ஏற்பாடு செய்தவர் அன்புக்குரிய பேராசிரியரும், பகுதி நேரப் பத்திரிகையாளருமான திரு. அப்துல் மஜீத். அதுவரை ஒரு திரைப்படப் பத்திரிகையாளனாக இருந்த நான், அதற்குப் பிறகுதான் தொழில் ரீதியான மொழிபெயர்ப்பாளன் ஆனேன். அன்று ஓட்டலில் நான் சந்தித்தவர்களில் ஒருவர் 'மங்களம்' பத்திரிகையின் உரிமையாளர் திரு. வர்க்கீஸ். உடனிருந்தவர் தமிழ் 'மங்களம்' பத்திரிகையின் ஆசிரியராகப் பொறுப்பேற்றிருந்த திரு. பாக்கியம் ராமசாமி. இந்தக் கதையின் முன்னுரையில் இதைக் குறிப்பிடுவதற்கு ஒரு காரணம் உண்டு.

மலையாள மொழியில் வெளிவரும் மங்களம், அன்று இந்தியாவிலேயே அதிகம் விற்பனையாகும் பிராந்திய மொழிப் பத்திரிகையாக இருந்தது. வாரம் ஒன்றுக்கு பதின்மூன்று லட்சம் பிரதிகள் விற்பனையானது. 88-89-ம் ஆண்டுகளில் 'படகாளிமுற்றம்' என்ற பெயரில் திரு.கோட்டயம் புஷ்பநாத் மலையாளம் மங்களத்தில் எழுதிய நாவல் இது. தமிழ் மொழியில் பத்திரிகை தொடங்குவதற்கு முன்பாக 'மங்களம்' கன்னடத்தில் மேற்குறிப்பிட்ட கதையின் மொழிபெயர்ப்பு வெளியாகி மகத்தான வரவேற்பு பெற்றது. எனவே, தமிழ் மங்களம் பத்திரிகையிலும் அதையே தொடராக வெளியிடலாம் என்று திரு.வர்க்கீஸ் தீர்மானித்தார்.

அவரது தீர்மானம் எனக்குத் தெரியாததால், அதே டிசம்பர் முதல் வாரம் மலையாள மங்களம் பத்திரிகையில் தொடங்கியிருந்த கோட்டயம் புஷ்பநாத்தின் 'யக்ஷிமன' நாவலின் அதுவரை வெளியான மூன்று அத்தியாயங்களை மொழிபெயர்த்து, பாக்கியம் ராமசாமி அவர்களிடம் கொடுத்தேன். 'டெரர் டெத்,டெவில்' என்ற பெயரில் அது மறு வாரத்திலிருந்து தொடராக வெளியானது!

தொடர் தொடங்கிய பத்து வாரங்களுக்குப் பிறகு நான் கோட்டயம் நகர் சென்றபோது, முதன் முறையாக கோட்டயம் புஷ்பநாத் அவர்களைச் சந்தித்தேன். தொடர்ந்து அவரது நாவல்களை மொழிபெயர்க்கும் வாய்ப்புக் கிடைத்தது. நான் மொழிபெயர்த்த தொடர் வரிசையில் ஒன்பதாவது நாவல், இந்த மந்திர மோகினி. 'பாக்யா' பத்திரிகைக்காக நான் மொழிபெயர்த்த இரண்டாவது தொடர்.

ஏப்ரல் 11-17, 1997 முதல் நவம்பர் 23-டிசம்பர், 4, 1997 வரை முப்பத்துநான்கு வாரங்கள் வெளியானது. நாற்பத்தைந்து அத்தியாயங்கள் கொண்ட இந்த நாவலை, ஏறத்தாழப் பாதிக்குப் பாதி குறைத்து, முப்பத்துநான்கு அத்தியாயங்களாகச் சுருக்கிக் கொடுத்தேன். இது பாக்யாவில் வெளியானபோது நான் பயன்படுத்திய 'காம்பௌண்டுச் சுவர்' என்ற வார்த்தையை அந்தக் காலச் சூழலுக்குப் பயன்படுத்தலாமா?' என்று கேட்டு முன்று பக்கக் கடிதம் ஒன்றை வாசகர் ஒருவர் எழுதியிருந்தார். புத்தகத்தில் அதை சுற்றுச்சுவர் என்று மாற்றியிருக்கிறேன்.

ஒவ்வொரு மொழிபெயர்ப்பின்போதும் அதைப் புது அனுபவ மாகவே உணர்கிறேன். எங்கிருந்து, எவர் என்றில்லாமல், காரண காரியங்களுடன் சொல்லப்பட்ட நியாயமான விஷயங்களை மறுக்காமல் ஏற்றுக்கொள்கிறேன். அவை, எனக்கு உதவுவதுடன் என்னை வளர்க்கவும் செய்கிறது. நான் மொழிபெயர்ப்புத் தொடர் கொடுத்த பத்திரிகைகளில், இதே போன்ற வேறு நாவல்களுடன் வேறொரு மொழிபெயர்ப்பாளர் அணுகியபோது, படித்துப் பார்த்துவிட்டுத் திருப்பிக் கொடுத்ததாக இரண்டு பத்திரிகைகளில் பணிபுரியும் இருவர் கூறினர். அதன் பிறகும் நான் அந்தப் பத்திரிகைகளில் மொழிபெயர்ப்புத் தொடர் எழுதியிருக்கிறேன்.



அவர்களின் நம்பிக்கை, என்னை உற்சாகப்படுத்தியது என்பதையும் மறுப்பதற்கில்லை! அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றிகள்.

பொதுவாக மந்திர தந்திரம், இந்திரஜாலம், அமானுஷிக சம்பவங்கள் கொண்ட நாவலை வாசகர்கள் விரும்புகிறார்கள். நம் வாழ்க்கையில் நடைபெற முடியாத சம்பவங்களை, நம்மைப் போன்ற ஒரு சாதாரண மனிதன் எப்படி நேரிட்டு வெற்றிகொள்கிறான் என்பதில் நம் போன்ற ஒரு சராசரி வாசகருக்கு ஆர்வம் ஏற்படுவது இயல்பு. இதெல்லாம் தமிழ் மொழிக்குப் புதிது என்று சொல்ல முடியாது. ஒரு காலகட்டத்தில் தமிழில் இப்படிப்பட்ட கதைகளை எழுதுவதற்கென்றே மதிப்புக்குரிய எழுத்தாளர்கள் நிறையப் பேர் இருந்தனர். ஆனால், கோட்டயம் புஷ்பநாத்தின் மாந்திரீகக் கதைகள் அவற்றிலிருந்து மாறுபட்ட மையப் பொருள் கொண்டவை. ஏனையோர் அமானுஷிக சக்திகளை மனிதர்களுக்கு எதிரானவையாகக் காட்டி வெற்றி பெற்றனர். ஆனால், 'அமானுஷிக சக்திகள் மனித உறவை நாடுகின்றன. மனிதர்களுக்கு உதவுகின்றன. மனிதர்களுடன் வாழ விரும்புகின்றன' என்பது கோட்டயம் புஷ்பநாத் நாவல்களின் சிறப்பு. ஒரு வகையில் இது கிரேக்க புராணக் கதைகளின் பாதிப்பாகக்கூட இருக்கலாம். அதில் மனிதர்களை, தேவர்களும் - தேவியரும் கட்சி கட்டிக்கொண்டு ஆதரிப்பார்கள். உண்மையில் அவர்களுக்கு இடையே நிகழும் போட்டி, பொறாமை, கோபம், பழியுணர்வு போன்றவை மனிதர்கள் மூலமாக வெளிப்படுகின்றன.

மனதுக்கு இதம் தரும் கற்பனை, அதில் சுவாரஸ்யமான நம்பிக்கைகள் சேரும்போது வாசிப்பு என்பது சுகானுபவமாக மாறுகிறது. 'இன்றைய பகுத்தறிவு வெளிச்சத்தில் நமது புராதன இலக்கியங்களை உயர்த்திப் பிடித்தால் அவற்றில் எத்தனை சதவிகிதம் தேறும்?'என்று யோசிக்கிறேன். தொடர்ச்சியாக 'கடந்த ஐம்பதாண்டு கால சமுகவாழ்வில் பகுத்தறிவு வளர்ந்துள்ளதா, பக்தி இயக்கம் வளர்ந்துள்ளதா?' என்பதை என்னால் துல்லியமாக நிதானிக்க முடியவில்லை.

எப்படி இருப்பினும் இது போன்ற நாவல்கள், மற்ற வகை நாவல்களைக் காட்டிலும் அதிக அளவில் தீமை பயப்பதில்லை என்று உறுதியாகக் கூறலாம்.

கேரளத்தின் பேய்-பிசாசுகளை நான் தமிழ்நாட்டில் இறக்குமதி செய்வதாக இலக்கிய நண்பர் ஒருவர் வேடிக்கையாகக் குறிப்பிடுவதுண்டு. அது எவ்வளவுதூரம் சரியென்று எனக்குத் தெரியவில்லை. ஒருவேளை, அது உண்மையாகக்கூட இருக்கலாம்.

இந்தப் பெரிய நாவலை மொழிபெயர்க்கவும், வெளியிடவும் அனுமதியளித்த கோட்டயம் புஷ்பநாத், வெளியிடும் கவிதா பப்ளிகேஷன் ஆகியோருக்கு எனது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகின்றன.

தோழமையுடன்,
**சிவன்**

## 1

"**யா**ரது... அங்கே என்ன கலாட்டா?" புவனேஸ்வரன் நாயர் கேட்டார்.

"நம்பூதிரி வீட்டுப் பையன்தாங்க!" வேலைக்காரன் ஒருவன் பதில் குரல் கொடுத்தான்.

"போகச் சொல்லுய்யா அவன்கிட்ட!" நாயர் கோபத்துடன் கட்டளையிட்டார்.

"எவ்வளவு சொன்னாலும் கேட்க மாட்டேங்கிறாருங்க..." வேலைக்காரன் வராந்தாவை நெருங்கி வந்து பதிலளித்தான்.

"இது ஒரு பெரிய தொல்லையாப் போச்சே... என்ன சொன்னாலும் அவன் காதுல ஏறுறதில்லை..." புவனேஸ்வரன் நாயர், தான் பரிசோதித்துக் கொண்டிருந்த முத்திரைத்தாள் பத்திரங்களை அடுக்கி வைக்கத் தொடங்கினார்.

விடியற்காலையில் தொடங்கிய வேலை.

ஏறத்தாழ அறுபது பத்திரங்களுக்கு மேல் அப்போது அவரது கைவசமிருந்தன. அவை எல்லாமே அந்தக் கிராமத்திலுள்ள நாயருக்கு சொந்தமான சொத்துகள்தான்!

இந்தப் பத்திரங்களைத் தவிர, வெள்ளைக் காகிதத்தில் ரெவின்யூ ஸ்டாம்ப் ஒட்டி, கையெழுத்து வாங்கிய கட்டு ஒன்றும் தனியாக இருந்தது.

புவனேஸ்வரன் நாயர் திருவல்லூர் கிராமத்தின் ஜமீன்தார் என்றே சொல்லலாம். தவறு, ராஜா என்றே கூறலாம்.

முடியாட்சிக் காலமாக இருந்தால் நாயர் நிச்சயமாக ஒரு திவானாக இருந்திருப்பார். காரணம், அந்தக் கிராமத்தின் மொத்த நிலத்தில் ஏறத்தாழ எண்பது சதவிகிதம் இப்போது அவருக்கு சொந்தமானதுதான்.

ஆள் பார்க்கவும் கம்பீரமாக இருப்பார்.

நல்ல உயரம். வராந்தாவில் நின்றால் ஏறத்தாழத் தூணின் உயரமிருப்பார். தூரத்திலிருந்து பார்க்கிற எவருக்கும், அவர்தான் திண்ணைப் பகுதியின் மேற்புறத்தைத் தாங்கிக் கொண்டிருப்பதாகத் தோன்றும்.

அதற்கேற்ற வாட்டசாட்டமான உடம்பு. விசாலமான நெற்றி. வழுக்கை, அவரது தலையின் முன்புற வழியாக வெகு தொலைவுக்கு ஊடுருவியிருந்தது. கம்பளிப் போர்வையைக் கத்திரித்து ஒட்டியது போல் காதின் இருபுறமும் ரோமங்கள்.

தினந்தோறும் சவரம் செய்து பளபளப்பாக்கிய முகம். இடைவெளியின்றி அடர்த்தியாக வளர்ந்திருக்கும் புருவக்கொடிகள்.

அவற்றின் கீழே பாம்பின் பார்வையுள்ள கருவிழிகள்.

கழுகின் அலகு போல் நீண்டு வளைந்த மூக்கு, அகலமாகப் பரந்து கிடக்கும் மார்புப் பிரதேசம். உறுதியான-தசைப்பிடிப்பான திரண்ட புஜங்கள்.

முயன்றால் சுலபமாகவே முழங்காலைத் தொட்டுவிடக் கூடிய நீண்ட கைகள்.

திருவல்லூர் கிராமத்தில் புவனேஸ்வரன் நாயர் என்று சொன்னால் யாரும் ஒரு கணம் நடுங்குவார்கள். அவரைப் பற்றி யாராவது ஏதாவது பேசிவிட்டால், பேசியவனுக்கு மறுநாள் நாக்கே இருக்காது!

நாயருக்காக எதையும் செய்யத் தயாராக ஒரு கூட்டமே அவரிடம் இருந்தது. அதை ஒரு சிறிய ராணுவம் என்றே சொல்லலாம். இந்த ராணுவத்தில் ரகசிய போலீசார்கூட உண்டு!



நாள் கணக்கில் நடந்தே பார்த்தாலும் சுலபத்தில் சுற்றிப் பார்த்துவிட முடியாத அளவிலான நிலப்பரப்பு அவருடையது. அதையெல்லாம் அவர் கைப்பற்றியது பல்வேறு முறைகளில்.

ஒரு காலத்தில், திருவல்லூர் கிராமத்தின் பழைமையான குடும்பமான 'பனங்காட்டு மனை'யின் வேலைக்காரராக இருந்தார் ஒருவர். புவனேஸ்வரன் நாயரின் தாய்மாமனான அவரது பெயர் அப்பு நாயர்.

அப்பு நாயர் தந்திரசாலியான நபர். குறிப்பாகச் சொத்துச் சேர்க்கும் விஷயத்தில் ஒரு சூரப்புலியாக இருந்தார்.

பனங்காட்டு மனையின் அன்றைய காரணவர் (தாய்மாமன், குடும்பத்தலைவர். மருமக்கள் தாயம் என்கிற வழக்கப்படி குடும்பத்தின் மூத்த தாய்மாமன்தான் மொத்தச் சொத்துகளையும் நிர்வகிப்பவர். அவருக்குப் பிறகு அந்த வீட்டின் மூத்த சகோதரியின் முதல் மகனுக்கு அதன் அனுபவபாத்தியதை தொடரும். குடும்பச் சொத்தின் வாரிசு பெண்கள்தான். அனுபவ பாத்தியதை மட்டும் இவ்வாறு தொடரும்.) நாராயணன் நம்பூதிரிப்பாடு சுகபோகங்களில் தீவிர ஈடுபாடு உடையவராக இருந்தார். பெண்கள் விஷயத்தில் மிகவும் பலவீன மாயிருந்த நம்பூதிரி, அப்பு நாயரின் வலையில் வகையாகச் சிக்கிக் கொண்டார்.

'கிராமத்துக் கோயிலில் திருவிழா நடத்துகிறேன்' என்ற பெயரில் எந்தெந்தப் பகுதியிலிருந்தெல்லாமோ நாட்டியக் குழுக்களை வரவழைத்து நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வார்.

இப்படி வருபவர்களில் அப்பு நாயரின் திட்டத்துக்கு இணங்குபவர்கள், நம்பூதிரியின் படுக்கையறைக்குப் போகும்போது, அப்பு நாயர் நோட்டுக்கட்டுகளை சொந்தமாக்கிக் கொள்வார்.

இதைத் தவிர திருவிழாச் செலவு என்ற பெயரில் பொய்க் கணக்குகள் எழுதி, நம்பூதிரியின் சொத்துக்கள் பலவற்றைப் பெயர்மாற்றம் செய்திருந்தார்.

தற்காலிகமாக இப்படிப் பெயர்மாற்றம் செய்யப்பட்ட சொத்துகள் பிற்பாடு நிரந்தரமாகவே அப்பு நாயருக்கு உரிமையானவையாக

மாறின. அவரது காலத்துக்குப் பிறகு அவை, அவரது மருமகனான புவனேஸ்வரன் நாயருக்குச் சொந்தமானதாகத் தொடர்ந்தன.

புவனேஸ்வரன் நாயரின் ஒரே சகோதரியான சரஸ்வதியுடன், நாராயணன் நம்பூதிரி நெருக்கமான தொடர்பு வைத்திருந்தார். ஒரு வகையில் சொன்னால் அங்கீகரிக்கப்படாத கணவன்-மனைவியாகவே அவர்கள் வாழ்ந்தனர். சரஸ்வதி கர்ப்பிணியானதும் அவளுக்காகவும், அவளது குழந்தைக்காகவும் தனது சொத்தில் பாதியை அவர் மனமார எழுதிக் கொடுத்தார்.

நாராயணன் நம்பூதிரி இறந்ததுகூட எதிர்பாராத ஒரு விபத்தில்தான். சாதாரணமாக உறங்குவதற்கு முன் - அதாவது, எட்டு மணியளவில் இல்லத்துக்குச் சொந்தமான குளத்தில் குளித்த பின் பரதேவதையை வணங்கிவிட்டுத்தான் படுப்பார். அதை வெகு நாட்களாக அவர் தொடர்ந்து கொண்டிருந்தார்.

வழக்கம் போல் குளிக்கப் போன நம்பூதிரி ஒரு நாள் திரும்பி வரவில்லை! மறுநாள் அவரது உடம்பு குளத்தில் மிதக்கத் தொடங்கியது.

அதைப்பற்றி, கிராமத்தின் முற்போக்குச் சிந்தனையாளரான சந்திரன்குட்டி டீக்கடையில் இப்படிப் பேசினார்: “திருமேனி குளிக்கப் போனபோது புவனேஸ்வரன் நாயரின் ஏதோ ஒரு கையாள், திருமேனிக்குத் தெரியாமல் குளத்துள் இறங்கி அவரை மூச்சுத்திணற வைத்துக் கொலை செய்திருக்கிறான்!”

ஆனால், மறுநாள் அதைப் பற்றிப் பேச சந்திரன்குட்டி உயிரோடு இல்லை! கோயில்குளத்தின் மறுபுறத்திலிருந்த மரோட்டி (விஷத் தன்மையுள்ள காய் காய்க்கும் ஒரு மரம். இதிலிருந்து எண்ணெய் எடுத்து மருந்தாகப் பயன்படுத்துவார்கள். மரோட்டிக்காயை இரண்டாகப் பிளந்து உட்புறத்தைச் சுரண்டி அகல் விளக்கு மாதிரியும் பயன்படுத்துவார்கள்.) மரத்தில் இடுப்பு வேஷ்டியால் தூக்குப்போட்டு இறந்திருந்தார். அதன் பிறகு யாருமே புவனேஸ்வரன் நாயரைப் பற்றி எதுவும் பேசுவதில்லை. உணர்ச்சிவசப்பட்டு எதையாவது பேச வாய் திறந்தவுடன்... சந்திரனின் ஞாபகம் வரும். அத்துடன் அடங்கி விடுவார்கள்!



புவனேஸ்வரன் நாயரின் கர்ப்பிணியான சகோதரி சரஸ்வதி, திடுமென்று ஒரு நாள் தானிய அறைக்குள் இறந்து கிடந்தாள். நாயர்தான் காலால் உதைத்து அவளைக் கொன்றுவிட்டார் என்று சொல்ல எவருக்கும் தைரியமில்லை-அவர் வீட்டு வேலைக்காரி களுக்குக் கூட!

புவனேஸ்வரன் நாயருக்கு இரண்டு மனைவியர். எட்டுக் குழந்தைகள். அவ்வளவு பேரும் ஆண்கள். மனைவியர் இருவரும் உடன்பிறப்புகள். எல்லாப் பையன்களும் ஒரே அச்சில் வார்த்து எடுத்தது போல் ஒரே மாதிரியிருந்தார்கள். இரண்டு பேர் இரட்டைக் குழந்தைகள். மற்றவர்கள் முறையே ஒவ்வொரு வயது வித்தியாசத் துடன் பிறந்தவர்கள்.

எல்லா விஷயத்திலும் எட்டுப் பேரும் ஒரே மாதிரியான சிந்தனை உடையவர்கள். மது, மாது என்கிற இரண்டு விஷயத்திலும் தேர்ந்தவர்கள்!

அவர்களுக்கு உடன்படாத பெண்கள் அந்த ஊரில் நிம்மதியாக இருக்க முடியாது!

பனங்காட்டு மனையில் நாராயணன் நம்பூதிரி இறந்த பிறகு மீதமிருந்தது இரண்டு பேர் மட்டும்தான். ஒருவர் அவர் தாயார் சங்கரி. தொண்ணூறு வயதானவர். மற்றொரு நபர் அவரின் மகள் வயிற்றுப் பேரன் உண்ணிக்கிருஷ்ணன். பிறந்தவுடனேயே அவன் அம்மா இறந்து போனாள். பாட்டி சங்கரி அந்தர்ஜனம்தான் பேரனை வளர்த்தவர்.

இரண்டு வயதான பிறகுதான் பேரனுக்குக் காது கேட்கவில்லை என்பதும், வாய்பேச முடியவில்லை என்பதும் புரிந்தது. அதனால் அவனைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பவும் முடியவில்லை!

இருப்பினும் சங்கரி, நிலவிளக்குக்கு முன்னால் பூஜை அறையின் வெளியே உட்கார்ந்து ஹரிநாம கீர்த்தனம் சொல்லும்போது, தன் பெயர் என்னவென்றுகூட விளங்கிக் கொள்ள முடியாத உண்ணிக் கிருஷ்ணன் அவரின் உதடுகள் அசைவதைக் கண்ணிமைக்காமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பான். பேரனின் நிலையை உணர்ந்து வருத்தம் அடைந்த பாட்டி, அவனை முன்னால் உட்கார வைத்துப் பஞ்சதந்திரக் கதைகளைச் சொல்லித் தருவது வழக்கம்.

பேரனோ வெறுமனே சிரித்தபடி தலையாட்டிக் கொள்வான்.

அந்தப் பாட்டியும் ஒருநாள் இறந்துபோனாள். உண்ணிக் கிருஷ்ணனுக்கு அப்போது வயது பதினேழு. அவன் அநாதையாகிப் போனான்.

அதற்குள் அந்தக் குடும்பத்தின் மொத்தச் சொத்தும் புவனேஸ்வரன் நாயரின் கைவசமாகி விட்டிருந்தது.

பனங்காட்டு மனையில் ஊழியம் பார்த்தவர்கள் இப்போது புவனேஸ்வரன் நாயரின் ஊழியர்களாகியிருந்தனர்.

அந்தக் கிராமத்தில் 'பெரிய வீடு' என்று சொன்னால் அது அரண்மனைக்கு ஈடானதாகக் கட்டப்பட்ட புவனேஸ்வரன் நாயரின் வீடுதான்.

உண்ணிக்கிருஷ்ணன் இப்போது இருபத்தைந்து வயது வாலிபன். அவனைப் பார்க்கிற எவருக்கும் அவனது குறை சட்டென்று புலப்படாது. 'இவனுக்கா இப்படிப்பட்ட குறை?' என்று மூக்கில் விரல் வைத்து அதிசயப்படுவார்கள்!

ஐந்தே முக்கால் அடி உயரம். சிவந்த நிறம். அழகான கண்கள். அளவான எடுப்பான மூக்கு. சிரிக்கும்போது எப்படிப்பட்டவரும் விரும்பும் கவர்ச்சிகரமான உதடுகள்.

பிறந்ததிலிருந்து இதுவரை முகச்சவரம் செய்யப்படாத முகம். அதனால் அடர்த்தியான தாடி மீசை. வாரப்படாத தலைமுடி. அவன் மீது மரியாதையும் மதிப்புமுள்ள சவரத் தொழிலாளி அவனைப் பார்க்கும் போதெல்லாம் தலைவாரி விடுவார். ஆனால், முகச்சவரம் செய்ய உண்ணிக்கிருஷ்ணன் ஒப்புக்கொள்வதே இல்லை.

வேலைக்காரன் சொன்னதைக் கேட்டு புவனேஸ்வரன் நாயர் வராந்தாவுக்கு வந்தார்.

"என்ன வேணுமாம் அவனுக்கு ராமுண்ணி?" நாயர் கேட்டார்.

"யாரெல்லாமோ அவருக்கு எதையெல்லாமோ தப்பாச் சொல்லிக் குடுத்திருக்காங்கன்னு தோணுது முதலாளி!" வேலைக்காரன் ராமுண்ணி கூறினான்.



"என்னன்னு சொல்லிக் கொடுத்திருக்காங்க? இவன் என் மகனா?" நாயர் கேலித் தொனியில் கேட்டார்.

"இந்த மொத்தச் சொத்தும் இவரோடதுன்னு என்கிட்ட சைகை மூலமா சொல்றாரு. வேண்டாதவங்க யாரோ, பொறாமையில சொல்லியிருக்காங்கன்னு நினைக்கிறேன்."

"இது ஒரு புதுச் செய்தியா என்ன? சொல்லிட்டுப் போகட்டும்." நாயர் தெருவாசற்படியைப் பார்த்தபடி தொடர்ந்தார்: "இவன் போட்டிருக்கிற சட்டை யார் கொடுத்ததாம்?"

"சமீபத்துல இந்தத் தம்பி ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ் பக்கமா சுத்திட்டிருந்ததா, பார்த்த ரெண்டு மூணு பேரு சொன்னாங்க. போதாக்குறைக்கு திமிர்பிடிச்ச ரெண்டு மூணு போக்கிரிப் பசங்களும் இவர்கூட இருந்திருக்காங்க."

"ஓகோ... அப்படியா கதை?" என்றவாறே வீட்டுக்குள் போனவர் திரும்பி வந்தபோது அவர் கையில் பத்து ரூபாய் நோட்டுகள் சில இருந்தன.

"இந்தா ராமுண்ணி, இதை அவன்கிட்டக் கொடு! போய் எதையாவது சாப்பிட்டுத் தொலையட்டும்!"

ராமுண்ணி அந்த ரூபாய் நோட்டுகளை வாங்கி உண்ணிக் கிருஷ்ணன் கையில் கொடுத்தான்.

அதைப் பெற்றுக்கொண்ட உண்ணி, நன்றியுடன் புவனேஸ்வரன் நாயரைப் பார்த்துவிட்டு நடையைக் கட்டினான்.

"ராமுண்ணி, இப்படி வா!" புவனேஸ்வரன் நாயர் அழைத்தார்.

அவன், அவரருகில் வந்து நின்றான்.

"பெரிய பையன் கொப்பரைக்களத்தில் இருக்கிறான். அவனை நான் உடனடியாக வரச்சொன்னதாகச் சொல்லு!"

நாயர் வீட்டுக்குள் போனார்.

சற்று நேரத்துக்குள் ஸ்ரீதரன் குட்டி வந்து சேர்ந்தான்.

“ஸ்ரீதரா, நீ போய் நம்ம புலிக்குட்டியையும் அவனோட நாலு சீடப் பிள்ளைங்களையும் சாயந்தரமா வரச் சொல்லு. வரும்போது அவனுங்களை கள்ளுக்கடைப் பக்கம் கொண்டு போய்த் தண்ணி காட்டிட்டுக் கொண்டுவா!”

சொன்னபடியே எல்லாம் நடந்தன.

“இன்னிக்கு உங்களுக்கு ஒரு முக்கியமான வேலையிருக்கு. இனிமே அதைத் தள்ளிப் போடுறதுல அர்த்தமே இல்லை!”

செய்தி என்னவென்று தெரிந்து கொள்வதற்காக, புலிக்குட்டி காதைக் கூர்மையாக்கிக்கொண்டு நின்றான்.

“இன்னிக்கு ராத்திரியோட அந்த நம்பூதிரிப் பையன் இல்லாமல் போயிடணும்! ஆழமாப் புதைச்சுடுங்க. நாளைக்குக் காலையில் யாரும் அவனை உயிரோட பார்க்கக் கூடாது! புறப்படுங்க.” நாயர் மிகவும் ரகசியமான குரலில் பேசினார்.

இரவு மணி பத்துக்கு மேலாகிவிட்ட. உண்ணிக்கிருஷ்ணன் தனது வீட்டு வராந்தாவில் படுத்து உறங்கிக் கொண்டிருந்தான்.

புலிக்குட்டியும் அவன் கூட்டத்தாரும் நெருங்கியதை காது கேளாதவனும், வாய்பேச முடியாதவனுமான அந்த அப்பாவி உணரவில்லை.

ஈரமான துண்டால் வாய் மற்றும் கை கால்களைக் கட்டி உண்ணிக் கிருஷ்ணனை அங்கிருந்து கொண்டுபோனார்கள்.

கோயில்குளத்தைத் தாண்டிச் சற்றுத் தெலைவு வந்தபோது எதிரே கொஞ்சம் பேர் கியாஸ் லைட் சகிதமாக வருவது தெரிந்தது. உண்ணிக் கிருஷ்ணனைத் தூக்கி வந்தவர்கள் ஓரமாக ஒதுங்கி நின்றார்கள். அதே நேரம் அவர்களுக்குப் பின்னாலிருந்து மாட்டு வண்டி ஒன்றும் வந்து அவர்களைக் கடந்து போனது.

“வாசு, விஷயம் ரொம்பவும் ஆபத்தானது. இந்தப் பையனின் மாமாவைக் கொன்னதே என் பையன்தான். குளத்துக்குள்ள காத்திருந்து காலைப் பிடிச்சு இழுத்து அமுக்கிட்டான். இப்படிப் பட்டவங்க செத்துப் போயிட்டா பிரம்ம ரக்ஷஸா (காட்டேரியா) மாறிடுவாங்க!”



"நீ சொல்றதும் நியாயம்தான். அப்படியெல்லாம் ஏதாவது ஏடாகூடமா ஆகிட்டா நம்ம பரம்பரையே நாசமாப் போயிடும்.” ஆவி-பிசாசுகளுக்கு அதிகமாகப் பயப்படும் பப்பு கூறினான்.

"அப்படியானால் ஒரு வேலை செய்யலாம். நானும் வாசுவும் இவனை மாட்டு வண்டியில் ஏத்திட்டுப் போய் இருபது கிலோ மீட்டருக்கு அந்தப் பக்கம் எங்கேயாவது போட்டுட்டு வர்றோம். பையன் இப்ப மயக்கமா இருக்கிறான். அதுக்கு அப்புறம் இவனால இந்த ஊருக்குள்ள திரும்பிவர முடியாது!”

'அதுவும் நல்லதுதான்!' என்று மற்றவர்கள் நினைத்தனர்.

புலிக்குட்டியும் மற்றொருவனும் உண்ணிக்கிருஷ்ணனை ஒரு நோயாளி போல் மாட்டு வண்டியில் போட்டுப் பயணம் செய்தனர்.

மாட்டுவண்டி வடக்குத் திசையில் நகர்ந்தது.

நள்ளிரவு இரண்டு மணியானபோது அவர்கள் ஆள் நடமாட்டமற்ற ஓர் அத்துவானக் காட்டுப்பகுதிக்கு வந்து சேர்ந்திருந்தனர்.

புலிக்குட்டி வண்டியிலிருந்து இறங்கிச் சுற்றுமுற்றும் பார்த்தான். வலது புறத்தில் காட்டுச் செடிகள் கன்னாபின்னாவென்று வளர்ந் திருந்தன. பெரிய சுற்றுச்சுவர் ஒன்று தென்பட்டது.

பூஜையோ, முறையான பராமரிப்போ இல்லாமல் சிதிலமடைந்த ஒரு கோயில் அது என்பது பார்த்தவுடனேயே புரிந்தது.

"இங்கேதான் நாங்க இறங்கணும். வண்டியை நிறுத்துங்க!” புலிக்குட்டி, வண்டிக்காரனிடம் சொன்னான்.

வண்டி நின்றதும் வாசு ஈரத் துண்டை எடுத்து வண்டிக்காரனின் கழுத்தில் போட்டு முறுக்கினான்.

உண்ணிக்கிருஷ்ணனைத் தோளில் போட்டுக்கொண்டு நடந்த புலிக்குட்டி, அவனைக் கோயிலின் உட்புறமாக விசையுடன் வீசியெறிந்தான். வண்டிக்காரனின் பிணத்துடன் மாட்டுவண்டி திரும்பு பயணத்தைத் தொடர்ந்தது. வழியிலிருந்த பாழடைந்த கிணறு ஒன்றில் வண்டிக்காரனின் பிணத்தையும் தள்ளி விட்டனர்.

மதிலின் மறுபுறம் விழுந்த உண்ணிக்கிருஷ்ணனுக்குச் சற்று நேரத்திலேயே நினைவு திரும்பியது. அவன் முள்செடிகளின் மீது விழுந்திருந்தான்.

பல்லைக் கடித்தபடி வேதனையைத் தாங்கிக்கொண்டு மெதுவாக தட்டுத் தடுமாறி ஊர்ந்தவாறு நகர்ந்தான்.

அருகிலேயே மற்றொரு சுவர் தட்டுப்பட்டது. அதைப் பிடித்துக் கொண்டு வழி எங்கே இருக்கிறதென்று தேடுவதற்குள் மறுபடி மயங்கிச் சரிந்தான்.

நிலவு, மேகங்களின் பிடியிலிருந்து விடுபட்டுத் தெளிவாக ஒளி சொரிந்தது.

சட்டென்று திடுக்கிட்டு எழுபவனைப் போல உண்ணிக் கிருஷ்ணன் கண்களைத் திறந்து பார்த்தான்.

"உண்ணிக்கிருஷ்ணன்... உண்ணிக்கிருஷ்ணன்!" யாரோ அழைத் தார்கள்!

'அப்படி அழைத்தது தனக்குக் கேட்கிறது! காது கேட்கும் சக்தி தனக்குக் கிடைத்து விட்டதா என்ன?'

"உண்ணிக்கிருஷ்ணன்... உங்களைத்தான் கூப்பிடுகிறேன்." இப்போது யாரோ தன் உடலைத் தொடுவது போல் உணர்ந்தான். தலையை உயர்த்திப் பார்த்தான்.

நிலவொளி சுவரில் தெளிவாக விழுந்திருந்தது. அங்கே பேரழகியான ஓர் இளம்பெண்ணின் சிற்பம் இருந்தது.

'அந்தச் சிற்பத்தின் கைகள்தான் தன்னைத் தொட்டுக் கொண்டிருக்கிறதா என்ன!' ஒரு நிமிடம் குழம்பினான் உண்ணிக் கிருஷ்ணன்.

திக்பிரமையடைந்தவனாக அந்தச் சிற்பத்தின் உதடுகளைக் கவனித்தான்.

அதன் உதடுகள் அசைந்தன.

"உண்ணிக்கிருஷ்ணன்..."



## 2

உண்ணிக்கிருஷ்ணனால் தன் கண்களையே நம்ப முடிய வில்லை. தன் பெயர் உண்ணிக்கிருஷ்ணன் என்பதே அப்போதுதான் அவனுக்குத் தெரிந்தது!

'இப்படியொரு பெயர் தனக்கு இருக்கிறதா?

எல்லாவற்றுக்கும் மேலாக இப்போது தன் காது நன்றாகக் கேட்கிறது.'

"உண்ணிக்கிருஷ்ணன், என்ன பார்க்குறீங்க?"

மறுபடியும் அதே குரல். தெளிவாகக் கேட்கிறது!

அவன் கண்களை ஒரு முறை நன்றாக மூடித் திறந்தான்.

இதோ தனக்கு முன்னால் - நிலவொளியில் குழைத்தெடுத்த ஒரு தேவமனோகரி. இவ்வளவு அழகான ஒரு பெண்ணை அவன் இதுவரையிலான வாழ்க்கையில் சந்தித்ததே இல்லை.

இப்போது அவள் சிற்பமல்ல!

எலும்பும் சதையும் ரத்தமும் உள்ள அழகு வழிந்தொழுகும் ஓர் இளம்பெண்.

அவள் கண்களில் நட்சத்திரங்கள் பிறப்பெடுத்தன.

அந்தக் கன்னக் கதுப்புகளில் மாலை நேரச் சூரியனின் சிவப்பு நிறம்.

"வாங்க!" அவள், உண்ணிக்கிருஷ்ணனின் கையைப் பிடித்தபடி கூறினாள்.

நிதானமாக எழுந்தவன், கோயில் சுவரைப் பார்த்தான்.

இப்போது அங்கு சிற்பம் எதுவுமில்லை!

'அங்கே சற்று முன்பு தான் பார்த்த சிற்பம் ஒருவேளை தன் பிரமையாக இருக்குமோ!'

அவள், அவன் கையைப் பிடித்து எழுப்பியபோது, முட்செடிகளால் உடம்பில் ஏற்பட்டிருந்த காயங்களின் எரிச்சல் மாயமாக மறைந்துவிட்டது.

பௌர்ணமிச் சந்திரன் தெளிந்த ஆகாயத்தில் முழுப் பொலிவுடன் ஒளி சொரிந்து கொண்டிருந்தது. எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்பு கட்டிய அந்தக் கோயில் மீது பாலை ஊற்றிவிட்டது போல் பளபளத்தது.

கோயில் சுற்றுப்புறத்திலிருந்த தேவி மற்றும் தேவன்களின் சிலைகள் உயிருள்ளவை போல் தோன்றின.

உண்ணிக்கிருஷ்ணனின் கையைப் பிடித்துக்கொண்டு சரஸ்வதியின் சிலைக்கு முன்பாக வந்தாள் அவள்.

சரஸ்வதி தேவியின் வலது கையிலிருக்கும் எழுத்தாணியைக் கையில் எடுத்துக் கொண்டவள், உண்ணிக்கிருஷ்ணனிடம் நாக்கை நீட்டச் சொன்னாள்.

“ஹரி ஸ்ரீ கணபதாய நம” அவள் உச்சரித்தாள்.

“என் பேரென்னன்னு கேளுங்க!” அவள், அவனைத் தூண்டினாள்.

“உங்க பேர் என்ன?” மிகுந்த பிரயாசைக்குப் பிறகு அவன் கேட்டான்.

“மந்தாகினி!” பதிலளித்தாள்.

“என் பேரை நீங்களும் ஒரு தடவை சொல்லிப் பாருங்க.”

“மந்தாகினி.”

“என்ன...!” பதில் குரல் கொடுத்தாள்.

“உங்களுக்கு இப்போ எல்லாப் பாடங்களும் கைவசமாகி இருக்கிறது. இப்போதுதான் நீங்கள் சரியான ஒரு நம்பூதிரி ஆகியிருக்கிறீர்கள். இந்தக் கணத்திலிருந்து உங்களுக்குள் எல்லாவித வித்தைகளும் புகுந்து கொண்டிருக்கின்றன. ரிக் வேதத்தின் முதல் சுலோகத்தைச் சொல்லுங்கள் பார்க்கலாம்.”



“ஓம் அக்னிநீளே புரோஹிதம்
யஜ்ஞஸ்ய” தேவமிருத்விஜம்
ஹோதாரம் ரத்ன தாதமம்”

உண்ணிக்கிருஷ்ணன் எந்த விதமான தயக்கமோ தடங்கலோ இல்லாமல் ஒரு பண்டிதனைப் போல் ஒப்புவித்தான்.

“அதன் அர்த்தத்தைச் சொல்லுங்கள்!” அவள் கேட்டுக் கொண்டாள்.

“கண்ணுக்குப் புலப்படாத வடிவத்தில் உறைந்திருப்பவனும், விருப்பமான வரத்தை, வேண்டுபவருக்கு வழங்குபவனும், யாகங்களில் தேவாதி தேவன்களை அழைப்பவனும், இயற்கை வடிவானவனும், ரத்தினங்களை அணிந்தவனுமான அக்னியின் அதிஷ்டான தேவதையை நான் வணங்குகிறேன்.” அவன் விளக்கினான்.

“போதும் உண்ணிக்கிருஷ்ணன். நீங்கள் பண்டிதனாகி விட்டிருக்கிறீர்கள், சர்வகலா வல்லவனாகியிருக்கிறீர்கள்.” அவள் தன் கையிலிருந்த எழுத்தாணியை மீண்டும் சரஸ்வதி தேவியின் கையிலேயே வைத்தாள்.

“வாருங்கள்... அதோ அந்த மண்டபத்தில் சற்றுநேரம் உட்காருவோம்.” மந்தாகினி, உண்ணிக்கிருஷ்ணனை அழைத்துக் கொண்டு கோயிலுக்கு முன்புறம் இருந்த பாழடைந்த மண்டபத்தில் வந்து அமர்ந்தாள்.

“உங்களுக்குப் பசிக்கிறதா... சற்றுப் பொறுங்கள். இதோ வந்து விடுகிறேன்.” என்று சொல்லிவிட்டுக் கோயிலுக்குள் நுழைந்தவள், இரு கைகளிலும் தாங்கிய தலைவாழை இலையுடன் திரும்பி வந்தாள். அதை அவனுக்கு முன்பாக வைத்தாள்.

அவலும், நெல்பொரியும், சர்க்கரையும், கதலி வாழைப் பழமும் அதில் இருந்தன. கடுமையான பசியோடு இருந்த உண்ணி, அதை எல்லாம் மிகுந்த ஆவலுடன் சாப்பிட்டான். அதற்குள் வெண்கலச் செம்பு ஒன்றில் துளசியிலை போட்ட நீருடன் வந்தாள். ஒரே மூச்சில் அதையும் குடித்துத் தீர்த்தான்.

“நான் யாருன்னு இன்னும் நீங்க கேட்கவே இல்லையே?” வாழையிலையை எடுத்து சுருட்டி அந்தரத்தில் வீசியெறிந்தபடி அவள் கேட்டாள்.

உண்ணிக்கிருஷ்ணன் சட்டென்று மேற்புறம் பார்த்தான். ஒரு கணம் திடுக்கிட்டான்! தன் கண்ணால் கண்ட காட்சி உண்மையா? அவன் கண்களில் வியப்பு படர்ந்தது.

தலைவாழையிலை ஒரு பறவையாக மாறிப் பறந்து போனது. சிறகசைத்துப் பறப்பதுபோல் மிகவும் வேகமாக அது அந்தரத்தில் விரைந்தது.

‘தன்னுள் ஏற்பட்டிருக்கும் புத்துணர்ச்சியால் ஒருவேளை தன் கண்களுக்கு மட்டும் இப்படியெல்லாம் தோன்றுகிறதோ என்னவோ?’ என்றுகூட நினைத்தான்.

இப்போது நடந்துகொண்டிருப்பதை எல்லாம் கவனித்தால் எல்லாமே அழகான ஒரு மாயக் கனவுபோல்தான் தட்டுப்படுகிறது. அவன் சிந்தையே ஒட்டு மொத்தமாகக் குழம்பியது.

“வாங்க போகலாம்!” அவள் எழுந்தாள்.

“இன்னும் நீங்க யாருன்னு சொல்லவே இல்லையே?”

பேச்சு வந்த மகிழ்ச்சியில் அவன் படபடப்புடன் கேட்டான்.

இதைக் கேட்டதாலோ என்னவோ, கோயிலின் முன்புறத்திலிருந்த பிரமாண்டமான ஆலமரத்தின் ஆயிரமாயிரம் தளிர் இலைகள் சலசலத்தன.

அது தேவதைகளுக்கான மந்திர உச்சரிப்பு என்று உண்ணிக்குத் தோன்றியது.

“என்னை உங்களுக்குத் தெரியாது இல்லையா? இந்தக் கோயில் பூசாரியின் மகள் நான்!”

உண்ணிக்கிருஷ்ணன் தன்னையும் மீறி முதன் முதலாக அவளைப் பார்த்த சுவரின் பக்கம் திரும்பிப் பார்த்தான்.



‘அந்த இடத்தில் தான் பார்த்தது உண்மையான சிற்பமா, அல்லது தேவதையைப் போன்ற இந்தப் பெண்ணையா?’ விடை தெரியாமல் தவித்தான்.

அவன் மனம் எதையெல்லாமோ யோசித்துக் குழம்புகிறது என்பதைப் புரிந்துகொண்ட மந்தாகினி சொன்னாள்:

“வாங்க போகலாம்!”

“எங்கே போறது?” கேள்வி நிறைந்த கண்களுடன் அவளையே பார்த்தபடி கேட்டான்.

“பனங்காட்டு மனைக்குத்தான்!”

அதைக் கேட்டுத் திகைப்படைந்த அவன் விழிகள் மறுகணம் பயத்தால் மிரண்டன: “அந்த வீட்டுக்கா, நான் வரமாட்டேன்!”

“நான்தான் உங்ககூட இருக்கிறேனே... எதுக்காக பயப்படறீங்க?”

“காரணமிருக்கு. அங்கே போயிட்டா நாம ரெண்டு பேரும் உயிரோட இருக்க முடியாது!”

“அதை, நாம அங்கே போன பிறகு பார்த்துக்கலாம்... வாங்க!”

“வேண்டாம். நாம வேற எங்கேயாவது போகலாம்!”

மந்தாகினி தலைஉயர்த்தி ஆகாயத்தைப் பார்த்தாள்.

“சரி.. ஜாம நட்சத்திரம் மறைஞ்சுட்டது. ராத்திரியோட மூணாவது ஜாமம் ஆரம்பமாயிடுச்சு. என் மடியில தலை வெச்சு இங்கேயே படுத்துக்கங்க.”

அவள் சப்பணமிட்டு அமர்ந்தாள். எந்த விதத் தயக்கமும் இல்லாமல் அவன் மடியில் தலைவைத்துப் படுத்துக் கொண்டான் உண்ணிக்கிருஷ்ணன்.

அடுத்த ஒருசில விநாடிகளுக்குள் அவன் ஆழ்ந்த உறக்கத்தில் அமிழ்ந்தான்.

மண்டபத்தின் நிழல் அவன் முகத்தை மறைக்கவில்லை. அவள், அவன் முகத்திலிருந்த ரோமங்களின் ஊடாக விரல்களை ஓட்டினாள்.

அவள் விரல் பட்டதாலோ என்னவோ... மாயாஜாலம் போல் அவன் முகத்தில் வளர்ந்திருந்த செம்பட்டை கலந்த ரோமங்கள் வழித் தெடுத்தவைபோல் மறைந்தன. அவள், அந்த முகத்தின் கம்பீரமான இளமை ததும்பும் அழகை ரசனையுடன் பார்த்தாள்.

உண்ணிக்கிருஷ்ணன் சட்டென்று விழித்தான்.

கண்ணைத் திறந்து பார்த்தபோது தான், தனது சொந்த மனைக்குள் இருப்பதை உணர்ந்தான். மிகவும் பழைமையான இந்த மனையின் - நாலுகட்டின் (வீட்டின் அமைப்பை ஒட்டி எழுந்த காரணப்பெயர்) வெளிப்புறமிருந்த சவுக்கையில்தான் அவன் படுப்பது வழக்கம்.

பாட்டி இறப்பதற்கு முன்பு வரை அவன் வீட்டுக்குள் படுத்திருந் தான். கிழக்குப் புறமிருந்த திட்டிவாசல் வழியாக வெளிச்சம் உட்புறமாக எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது.

அவன் எழுந்து உட்கார்ந்தான்.

வெளிப்புறம் பார்த்தபோது மாடத்திலிருந்த துளசிச் செடிக்கு தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தாள் மந்தாகினி.

கண்களைக் கசக்கிக்கொண்டு பார்த்தான். இருந்தும் அவனுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. சந்தேகத்தால் கையின் மணிக்கட்டுப் பகுதியைக் கிள்ளிப் பார்த்தான். வலிக்கவே செய்தது!

எழுந்து கதவை நோக்கி நடந்தான்.

“விழிச்சிட்டீங்களா? அதோ கிண்டியில் தண்ணீர்!” திண்ணைப் பக்கமாகச் சுட்டிக் காட்டினாள்.

பாசம் பிடித்து, தானியம் இடிக்கும் அறை மூலையில் கிடந்த கிண்டி இப்போது திண்ணையில் பளபளத்துக் கொண்டிருந்தது.

வாய் கொப்பளித்து முகம் கழுவிவிட்டு வந்தபோது, ஆவி பறக்கும் சூடான வரகாபியை அவனிடம் நீட்டினாள்.

“மந்தாகினி!” பேசுவதற்காக அவன் வாயைத் திறந்தான். ஆனால், பேச்சு வரவில்லை.

“ஏன் தயங்குறீங்க? தாராளமாப் பேசுங்க!” அவள், அவனை உற்சாகப்படுத்தினாள்.



அப்போது புவனேஸ்வரன் நாயரின் வேலைக்காரரான ராமுண்ணி அந்தப் பக்கமாக வந்தான்.

தெருவாசற்படியில் நின்றபடி வெறுமனே ஒரு தடவை உட்புறம் பார்த்தான் அவன்.

குட்டித் திண்ணையில் உண்ணிக்கிருஷ்ணன் நின்று கொண்டிருக் கிறான். சவரம் செய்த முகம். அவனது தோரணையே மாறி விட்டிருக்கிறது. திண்ணையில் அவனுக்கு அருகே அழகான இளம்பெண் ஒருத்தி. அழகு என்றால் அப்படியொரு அழகு!

அதன் பிறகு ராமுண்ணி அங்கு நிற்கவில்லை. தலைகால் புரியாமல் ஓடத் தொடங்கினான்.

புவனேஸ்வரன் நாயர் வீட்டுத் தெருக்கதவை விசையுடன் தள்ளித் திறந்துகொண்டு, எய்துவிட்ட அம்பு போல் இளந் திண்ணையில் வந்து விழுந்தான் ராமுண்ணி.

சாய்வு நாற்காலியில் ஓய்வாகப் படுத்தபடி ஏதோ ஒரு பத்திரத்தைத் தீவிரமாக ஆராய்ச்சி செய்து கொண்டிருந்த நாயர், சத்தம் கேட்டுத் திடுக்கிட்டெழுந்து கேட்டார். “யாருடா உன்னை இப்படித் தூக்கியெறிஞ்சவன்?”

விழுந்த நிலைலேயே தலையை உயர்த்தி மூச்சிரைத்தபடி அவரைப் பார்த்தான் ராமுண்ணி.

“அந்த நம்பூதிரிப் பையன் இன்னும் சாகலை! மனையில் உயிரோட இருக்கிறான் எஜமான். சவரம் பண்ணிட்டு ராஜா மாதிரி [illegible]டுகிறான். கூடவே மஞ்சள்பழம் மாதிரி ஒரு சின்னப்பொண்ணு!”

“நீ பயங்கரமான கனவு எதையாவது கண்டயா என்ன? சம்பந்தமில்லாம என்னென்னமோ உளறுறே?” நாயர் கேட்டார்.

“நான் சொன்னது உண்மையில்லேன்னா என் ரெண்டு கண்ணையும் நோண்டி எடுத்துடுங்க. கூட இருக்கிறவ அழகின்னு சொன்னா அப்படியொரு அழகி!” ராமுண்ணி சத்தியம் செய்யும் தொனியில் பேசினான்.

“ஓகோ... அப்படியா? அப்ப உன் ரெண்டு கண்ணையுமே தோண்டிட வேண்டியதுதான். டேய், கேசவா, வா இப்படி!”

புவனேஸ்வரன் நாயரின் முதல் மனைவிக்குப் பிறந்த தலைமகன் கேசவன்குட்டி. எட்டுப் பேரிலும் மூத்தவன். எல்லாவற்றிலும் அப்படியே அப்பாவின் அச்சு. கொஞ்சம்கூடத் தயங்காமல் கொலையையும் இயல்பாகச் செய்பவன். ஒரு சண்டையின்போது அவன் சொந்த மனைவியின் கழுத்தையே நெரித்துக் கொன்றவன்.

பறந்து கொண்டிருக்கும் ஈக்களுக்கு நேராகக் காட்டினால் அதன் இறக்கைகள் உதிர்ந்து விழக்கூடிய கூர்மையான ‘மலைப்புறம்’ கத்தியை எப்போதுமே இடுப்பில் செருகி வைத்திருப்பவன்.

“என்னப்பா?” ஒரு பெரிய மோதலுக்குத் தயாரான படை வீரனைப் போன்ற மிடுக்குடன் புவனேஸ்வரன் நாயரின் முன்னால் வந்து நின்றான் கேசவன்.

“அந்தச் செவிட்டுப் பையன் நம்பூதிரி உயிரோட திரும்பி வந்திருக்கிறானாமே! பிரம்மஹத்திப் பாவத்துக்கு பயப்படாதே. அப்படியே அவன் ஒரு ரக்ஷஸாயிட்டா, எட்டி மரத்துல ஆணி அறைஞ்சிடலாம். என்ன... ஒரு சேவல்கோழியை வாங்கி அறுக்கிற செலவுதான்... செஞ்சுட்டாப் போகுது. அப்புறம் அவன் கூட யாரோ ஒரு பொண்ணு இருக்கிறாளாம்... பக்குவமா அவளைத் தூக்கிட்டு வந்துடு!”

‘பெண்’ என்ற வார்த்தையைக் கேட்டதும் கேசவன்குட்டியின் கண்கள் பளபளத்தன. ‘அவளுக்காக ஒருத்தனை என்ன... ஒன்பது பேரைக் கூடக் கொல்லலாம்!’ என்ற முடிவுக்கு வந்தான்.

“எப்போ போகணும்பா?”

“ஜாமக்கோழி கூவும்போது போனாப் போதும். அவன் உடம்புல கல்லைக் கட்டி அந்த இல்லத்துக்குப் பின்னால இருக்கிற குளத்திலேயே போட்டுடு. மறக்காம அவளை இங்கே கொண்டு வா. ரொம்பவும் அழகா இருக்காளாமே, அதையும் பார்த்துடலாம்.”

“யாரையாவது துணைக்கு கூட்டிட்டுப் போகட்டுமா?”

“யாரும் வேண்டாம்... இதெல்லாம் ஒரு ஈ, காக்காய்க்குக் கூடத் தெரியக் கூடாது!”



நள்ளிரவு ஆவதற்கு அரை நாழிகை நேரமே இருந்தபோது கேசவன்குட்டி, தேய்த்துக் கூர்தீட்டிய கத்தியை இடது கைப்பெரு விரல் நகத்தில் உரசிப் பார்த்துவிட்டுத் திருப்தியடைந்தவனாகப் புன்னகைத்தான்.

நிலவு மேகங்களுக்குள் மறைந்திருந்தது.

மனையின் தெருவாசற்படிக்கு வந்தவன் உட்புறமாகப் பார்த்தான்.

எவரையும் காணவில்லை.

பெண் ஒருத்தி அங்கு இருக்கிறாளே என்பதால், சத்தம் எழுப்பாமல் இளந்திண்ணைக்கு வந்தான்.

இந்த நள்ளிரவு நேரத்திலும் வீட்டுக்குள் யாரோ பேசும் குரல் கேட்டது.

“என்னங்க... இன்னும் தூங்கலையா?” ஒரு பெண்ணின் குரல்.

“தூக்கம் வரலை... உண்மையைச் சொல்லட்டுமா? இந்த முகத்தையே தூங்காமப் பாத்துட்டிருக்கணும்னு தோணுது!”

“ஆளில்லாத மனைக்குள்ளே யாருய்யா இந்த நேரத்துல... மரியாதையா வெளியில வாங்க!” கேசவன்குட்டியின் குரல் கர்ணகடூரமாக ஒலித்தது.

குரலைக் கவனித்த மந்தாகினி, ஒரு விநாடி உண்ணிக் கிருஷ்ணனை ஊன்றிக் கவனித்தாள்.

“யாருன்னு எனக்குத் தெரியலையே?” உண்ணி பதிலளித்தான் மெதுவான குரலில்.

“உங்களுக்குத் தெரியாதுதான். ஆனா, எனக்குத் தெரியும். புவனேஸ்வரன் நாயரின் முதல் சம்சாரத்தின் பெரிய பையன். வாங்க... என்னைத் தேடி வந்திருக்கிறவரை உபசரிக்க வேண்டாமா?”

“வேண்டாம்! கதவைத் திறக்காதே. அவனைப் பார்த்தாலே எனக்குக் குலை நடுங்கும்.” உண்ணிக்கிருஷ்ணன், எழுந்திருக்க முயன்ற அவளைத் தடுத்தபடி பேசினான்.

ஆனால், உடையைச் சரி செய்துகொண்டு அவள் எழுந்தாள்.

“பயப்படாம என்கூட வாங்க!” அவள், அவனை வற்புறுத்தினாள்.

கோல்விளக்கு (நீண்ட செப்புக் கம்பியின் கீழ்ப்புற முனை தரையில் குத்தி நிறுத்துவதற்கு ஏற்றாற்போல் கடப்பாரை போலும், மேற்புற முனையில் ஒரு வளையத்தில் விளக்கு ஒன்றும் கொண்ட அமைப்பு) ஒன்றை ஏற்றிக்கொண்டு உண்ணிக்கிருஷ்ணனையும் அழைத்துக்கொண்டு வராந்தாவுக்கு வந்தாள்.

“வந்திருக்கிறவர்கிட்ட யாரு, என்ன வேணும்னு கேளுங்க!” அவள், உண்ணியை வற்புறுத்தினாள்.

“என்னங்க இது... நடுராத்திரியில வந்து தொந்தரவு பண்றீங்க?” பயந்து நடுங்கும் உண்ணிக்கிருஷ்ணனின் வாயிலிருந்து வார்த்தைகள் திடமாக வெளிவந்தன.

உண்மையில் கேசவன் ஒரு கணம் ஆடிப் போய்விட்டான் என்பதுதான் உண்மை. இதுவரையிலும் ஊமையாகவும் செவிடாகவும் இருந்தவன், உடன் இருப்பவளின் பேச்சைக் காதில் வாங்கி, நம்மிடம் கேள்வி வேறு கேட்கிறான்!

‘ஏதோ நடக்கக் கூடாத ஒன்று நடந்திருக்கிறது!’

கேசவன் நினைத்தான். சட்டென்று அப்பாவின் வார்த்தைகள் ஞாபகத்துக்கு வரவே, இடுப்பிலிருந்த உறையிலிருந்து கத்தியை சடக்கென்று உருவினான்.

பளபளவென்று மின்னியது கத்தி.

“நல்லாருக்கே கத்தி... எங்கே இப்படிக் குடுங்க பார்க்கலாம்!” மந்தாகினி வெகு இயல்பாகக் கையை நீட்டினாள்.

கேசவன் சுதாரித்துக் கத்தியை இறுகப் பிடிப்பதற்குள், அது அவன் கையிலிருந்து நழுவி விட்டிருந்தது!



## 3

கேசவன்குட்டி அப்படியே அசைவற்று நின்று போனான். அவன் கண்களுக்கு முன்பாகவே அவன் கையிலிருந்த கூர்மையான கத்தி, அந்தரத்தில் மிதந்து அதோ எதிரில் நிற்கும் பெண்ணின் கைக்குப் போய்விட்டிருக்கிறது!

அவனால் அந்தக் காட்சியை நம்பவோ, ஜீரணிக்கவோ முடியவில்லை. ஆனால், நடந்திருக்கிறது!

தனக்கு என்ன நேர்ந்தது என்பதை உணர முடியாதவனாகப் பார்த்துக் கொண்டிருக்கும்போதே எதிரிலிருக்கும் பெண்ணின் உடல் படிப்படியாகப் பிரகாசம் அடைவதை உணர்ந்தான்.

ஒரு சில விநாடிகளுக்குள் அவள் உருவம் ஜொலிக்கத் தொடங்கியது.

அத்துடன் அந்த உருவம் மேல்நோக்கி விநாடிக்கு விநாடி வளர்ந்து உயர்ந்து கொண்டிருந்தது. மனையின் மேற்புற மச்சுப்பகுதியை உடைத்து ஊடுருவியபடி வளர்ந்தது. ஏறத்தாழ ஐந்து ஆள் உயரத்துக்கு நீண்ட அந்த உருவம், கேசவனை நோக்கித் தன் வலது கையை நீட்டியது. அப்போது அதன் கையிலிருந்த கத்தி, ஓர் ஊசி போல் மிகவும் சிறியதாகத் தெரிந்தது.

பீதி நிறைந்த விழிகளுடன் அவளை ஒரு கணம் பார்த்த கேசவன், நின்ற நிலையிலேயே பின்வாங்கித் தலைதெறிக்கும் வேகத்தில் வந்த வழியே திரும்பி ஓடத் தொடங்கினான். தெருவாசற்படியைக் கடந்த பிறகு கேசவன் எதேச்சையாகத் திரும்பிப் பார்த்தான். அந்தக் கை இன்னும் தன்னைத் தொடும் நோக்கத்தில் நீண்டு வருவது தெரிந்தது. அவனது ஓட்டத்தின் வேகம் மேலும் அதிகரித்தது. மொத்தச் சக்தியையும் ஒன்றுசேர்த்து உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு ஓடினான். அந்த ஓட்டம் முடிவடைந்த இடம் அவனது சொந்த வீட்டின் தெருவாசற்படிதான்.

‘ஸ்...ஸ்...’ என்ற சத்தத்துடன் கத்தி விசையுடன் பாய்ந்து வந்துகொண்டிருந்தது.

மறுபடியும் ஓடத் தொடங்கியவன், தனது வீட்டுக்குள் வந்துதான் நின்றான்!

“ஏன் நம்மளைத் தேடி வந்தவர் ஓடுகிறார்?” உண்ணிக் கிருஷ்ணன், மந்தாகினியிடம் கேட்டான்.

கேசவனின் கையிலிருந்த கத்தி அவள் கைக்கு வந்ததும், அவள் ஜொலிப்புடன் வளர்ந்து உயர்ந்ததும் உண்ணிக்கிருஷ்ணனுக்குத் தெரியவில்லை. சட்டென்று கேசவன் ஓடுவது மட்டும்தான் அவனுக்குத் தெரிந்தது.

“எதையாவது பார்த்துப் பயந்திருக்கலாம்...” மந்தாகினி இயல்பான குரலில் பதிலளித்தாள்.

“நம்ம வீட்டுல அவன் பயப்படுற அளவுக்கு யார் இருக்குறாங்க? இல்லை, வேற என்னதான் இருக்கு?”

“ஒருவேளை அவர் என்னைப் பார்த்துக்கூட பயந்திருக்கலாம்!” மந்தாகினி சிரித்தபடி சொன்னாள்.

“இல்லை, நாம ரெண்டு பேர் இருக்கிறதைப் பார்த்துட்டு மேற் கொண்டு ஆளுங்களைக் கூட்டிட்டு வர்றதுக்குப் போயிருக்கலாம்.”

“அப்படியெல்லாம் இருக்காது. அவர் எதுக்குங்க மறுபடி வரப் போறாரு? உங்களோட வீட்டுலதான நாம இருக்கிறோம்?”

“இல்லை மந்தாகினி... எனக்கென்னமோ பயமாத்தான் இருக்கு!” தனக்குநேர்ந்த பழைய அனுபவங்களை நினைவில் கொண்டு உண்ணிக்கிருஷ்ணன் பேசினான்.

“சரி, வாங்க நாம வீட்டுக்குள்ளே போயிடுவோம்!”

இருவரும் வீட்டுக்குள் நுழைந்ததும் உண்ணி கதவை மூடித் தாழிட்டான்.

“இவ்வளவு மாற்றங்கள் ஏற்பட்ட பிறகும் உங்க கிட்டயிருக்கிற பயம் போகலையே?” அவன் மார்பில் புரண்டபடி அவள் கேட்டாள்.

“மந்தாகினி, உனக்கு இவனுங்களைப் பத்தித் தெரியாது. பயங்கரமான ஆளுங்க!”



“இருக்கட்டும். அதுக்கு நமக்கென்ன?”

“காரணம் இருக்கு மந்தாகினி.. இந்த ஊர்ல இருக்குற சொத்துகள்ல முக்கால்வாசி எங்களோட இந்த இல்லத்துக்கு சொந்தமானது. பாட்டி என்கிட்ட இதைப் பத்தி நிறையச் சொல்லியிருக்காங்க.”

“அதையெல்லாம் திரும்பவும் நாமளே சொந்தமாக்கிட்டாப் போகுது! அவ்வளவுதானே?”

“அதுக்கெல்லாம் வழியே இல்லை...”

“சரி, நாம ஏன் வீணா கண்டதையும் பேசி நேரத்தை வீணாக்கணும்? சந்தோஷமான கனவு கண்டபடி படுத்துத் தூங்குங்க!” அவள், அவன் நெற்றியின் மீது விரல்களை அளையவிட்டாள்.

உண்ணிக்கிருஷ்ணன் உறக்கத்தில் அமிழத் தொடங்கினான்.

ஊரிலேயே மிகவும் பெரிய நெற்களத்தின் நடுவே தான் நின்று கொண்டிருப்பதாகக் கனவு கண்டான் உண்ணி. அறுவடையும், போரடியும் மாறி மாறி நடந்து கொண்டிருந்தன. சுற்றிலும் வேலை செய்து கொண்டிருந்த காரியஸ்தர் மற்றும் வேலைக்காரர்களுக்கு அருகே நின்று அவன் என்னென்னவோ உத்தரவுகளைப் போட்டுக் கொண்டிருந்தான். சாப்பாட்டுக்கும், அடுத்த விவசாயத்துக்கும் தேவையான நெல்லை இல்லத்தின் தானிய அறையில் சேமித்து வைத்துவிட்டு மீதமுள்ள நெல், கூம்பாரம் கூம்பாரமாக விற்பனையானது. மந்தாகினிதான் வீட்டு நிர்வாகத்தைக் கவனித்து வந்தாள். உரல் போட்டிருக்கும் அறையில் பகல் நேரங்களில் நெல் குத்தும் சத்தம் இடைவிடாமல் கேட்டுக் கொண்டிருந்தது.

காலையில் மந்தாகினி எழுப்பிய போதுதான் உண்ணி கண்களைத் திறந்தான்.

அதே நேரம் புவனேஸ்வரன் நாயருக்குச் சொந்தமான பெரிய வீட்டில் ஏகக் களேபரமாக இருந்தது.

கருக்கிருட்டு வேளையில் அந்த வீட்டில் முதன் முதலாகக் கண் விழித்தவர்கள் வேலைக்காரப் பெண்கள்தான்.

வீட்டின் வெளி முற்றத்தைப் பெருக்குவதற்காகத் துடைப்பமும் கையுமாக வந்தவள் சுறுசுறுப்பாக வேலையைத் தொடங்கினாள். கிழக்குப்புற முற்றத்தைப் பெருக்கி வாரிவிட்டு, மேற்குப்புறம் வந்தபோது அவள் தலை மீது எதுவோ ஒன்று இடித்தது.

அவள் சட்டென்று தலை உயர்த்தியதும், ஓர் அலறலுடன் அப்படியே தலையில் சரிந்ததும் ஒரே சமயத்தில் நிகழ்ந்தன.

அவளின் குரலைக் கேட்டு அந்த வீட்டைச் சேர்ந்த மற்றவர் களும் ஒரே நேரத்தில் கண்விழித்து எழுந்து வெளியே ஓடி வந்தனர்.

அங்கே அவர்கள் கண்ட காட்சி மிகவும் பயங்கரமானதாக இருந்தது.

இடுப்பு வேட்டியை அவிழ்த்துத் திண்ணைக்குமேலிருந்த உத்திரத்தில் சுருக்குப்போட்டு கேசவன்குட்டி பிணமாகத் தொங்கிக் கொண்டிருந்தான். அவன் கண்களும், நாக்கும் வெளிப்புறமாகப் பிதுங்கியபடி துருத்திக் கொண்டிருந்தன.

அவன் எப்போதும் தன் கைவசம் வைத்திருக்கும் 'மலைப்புறம்' கத்தி அவன் நெஞ்சின் நடுவில் ஆழ்ந்து இறங்கி இருந்தது. ஆனால், ஒரு சொட்டு ரத்தம்கூட கீழே சிந்தியிருக்கவில்லை. ஒரு சில நிமிடங்கள் வரையில் யாரும் எதுவும் பேச முடியாமல் பிரமை பிடித்துப்போய் நின்றிருந்தார்கள். எல்லோரின் கண்களும் நிலைகுத்தியபடி கேசவனின் உடம்பையே பார்த்துக் கொண்டிருந்தன.

கடைசியில் புவனேஸ்வரன் நாயரே அந்த மௌனத்தை உடைத்தார். தன் இரண்டாவது மனைவியின் மூத்த மகனைப் பார்த்துக் கட்டளையிடும் குரலில் அவர் கூறினார். "டேய் மாதவா, அவனை அவிழ்த்துக் கீழே படுக்க வையுங்க. கத்தியை உருவிட்டு, நாக்கையும் கண்ணுகளையும் உள்ளுக்குத் தள்ளுங்க. இந்த வீட்டுக்குள்ளே இப்படியொரு சம்பவம் நடந்ததா ஊருக்குள்ள ஒரு பயலுக்கும் தெரியக் கூடாது!" பேசிவிட்டுச் சட்டென்று வீட்டுக்குள் நுழைந்துவிட்டார்.

மாதவனும் அவன் இரண்டு தம்பிகளும் சேர்ந்து கேசவனின் உடம்பைக் கீழே இறக்கித் தரையில் படுக்கை வைத்தனர்.



மாதவன் அந்த உடம்பிலிருந்து கத்தியை உருவிய போதும் ஒரு சொட்டு ரத்தம்கூட வெளிவரவில்லை. கத்தியிலும் ரத்தத்தின் எந்த விதமான அடையாளமும் தெரியவில்லை.

திடுமென்று இறந்துவிட்ட ஒரு சாதாரண மரணமாக ஊருக்குச் சொல்லி, முறைப்படி அந்த உடம்பை எரிக்கவும் செய்தனர்.

ஆனால், புவனேஸ்வரன் நாயரின் மனத்தில் அந்தச் சம்பவம் ஒரு கொந்தளிப்பை ஏற்படுத்தத் தவறவில்லை!

எதற்கும் தயாராகயிருந்த முட்டாள்களான தன் ஏழு மக்களையும் தனது படுக்கையறைக்கு வரவழைத்த புவனேஸ்வரன் நாயர் அவர்களைத் தனக்கு சுற்றிலும் உட்காரச் சொன்னார்.

சரித்திர கால சேனாதிபதிகளைப்போல் மொத்தப்பேரும் அவருக்கு முன்னால் அமர்ந்தனர்.

"இது எப்படி நடந்ததுன்னு சொல்லுங்க!" என்றவர் ஒவ்வொரு வரின் முகத்தையும் வரிசையாக ஊன்றிக் கவனித்தார்.

எவராலும் எதுவும் சொல்ல முடியவில்லை. காரணம் அவர்களு டைய சிந்தனைக்கு அதீதமான முறையில் நடந்திருந்தது அந்தச் சம்பவம்.

பெரிய வீட்டின் கேசவன்குட்டி உட்பட மொத்தப் பேரும் கடத்த நாட்டின் புகழ்பெற்ற வித்தைக்காரர்களிடம் எல்லா விதமான சண்டை முறைகளையும் கற்றுத் தேர்ந்தவர்கள். எனவே, அவர்களிடம் மூளையைவிட முரட்டுத்தனம்தான் மேலோங்கியிருந்தது.

இந்தக் கூட்டத்தின் மூத்தவனான கேசவன்குட்டியை எதிர்த்துப் பேசவோ, சண்டை போடவோ அந்தப் பிராந்தியத்தில் அதுவரை எவருக்கும் தைரியம் வந்ததில்லை. அப்படிப்பட்ட வல்லமை வாய்ந்த கேசவன்குட்டி தற்கொலை செய்துகொண்டு இறந்திருக்கிறான்!

கூர்மையான அந்தக் கட்டாரி மட்டும் நெஞ்சுக்குள் ஆழ்ந்து இறங்காமலிருந்தால் கண்டிப்பாக அதை ஒரு தற்கொலை என்றே ஏற்றுக் கொள்ளலாம். தற்கொலை செய்து கொள்ளும் ஒருவன் தூக்கு மாட்டிக்கொள்வதற்கு முன் சுயமாகவே நெஞ்சில் கத்தியைப் பாய்ச்சிக்

கொள்ளமாட்டான்! கத்தியை நெஞ்சில் பாய்ச்சிக் கொள்பவன், தூக்கு மாட்டிக் கொள்ளவேண்டிய அவசியம் இல்லை, இரண்டையும் ஒரே சமயத்தில் செய்ய எந்த ஒரு மனிதனாலும் முடியாது!

“எவ்வளவுதான் யோசிச்சாலும் எங்களுக்கு எதுவுமே பிடிபடலை அப்பா!” மாதவன் கூறினான்.

“உங்க ஒவ்வொருத்தருக்கும் இதைப் பற்றி என்ன தோணுதோ அதைச் சொல்லுங்க முதல்ல!”

“அண்ணன் சொன்னதுதான் என் கருத்தும்!”

“எனக்கும் அதேதான்.”

இப்படி ஏழு பேரும் ஒரே அபிப்பிராயத்தையே தெரிவித்தனர்.

“சரி, ஏழு பேரும் ஒரே குரல்ல இப்படிப் பட்டும்படாமப் பேசுறதுல அர்த்தமே இல்லை. இதுக்கு இப்ப என்ன பரிகாரம் செய்யணும்னு சொல்லுங்க.”

மாதவன்குட்டி பேசத் தொடங்கினான்: “அப்பா அண்ணனின் நெஞ்சில இருந்து கட்டாரியை உருவினது நான்தான். ஒரு சொட்டு ரத்தம்கூட வெளியே வரலை. கட்டாரியிலயும் ரத்தத்தோட அடையாளமே கிடையாது. அதனால என்ன ஏதுன்னு விவரம் தெரியணும்னா ஒரு நல்ல மந்திரவாதிகிட்டே போய் பிரஸ்னம் பார்க்கிறது நல்லதுன்னு நினைக்கிறேன்.”

புவனேஸ்வரன் நாயர் யோசனையில் ஆழ்ந்தார். மாதவனது யோசனை நல்லதுதான்.

“அப்படிச் செய்யறதா இருந்தா எந்த மந்திரவாதியைக் கூப்பிடலாம்?”

சேகரக் கைமள் என்றொரு மந்திரவாதி இருக்கிறார். நடந்ததை நடந்தபடி மிகவும் துல்லியமாகக் கூறுவார். தேர்ந்த ஒரு ஜோதிடரும் கூட. அவரது ராசிப் பலகை என்பதே ஒரு மாயக் கண்ணாடிதான்.

“சேகரக் கைமளைக் கூப்பிடலாம்.”

“சரி, போய் அவரைக் கூட்டிட்டு வா. உடனே நாம் விஷயத்தைத் தெரிஞ்சாகணும்!” நாயர் கட்டளையிட்டார்.



தாமதிக்காமல் மாதவன்குட்டியும் அவனுக்கு அடுத்த தம்பியான சிவன்குட்டியும் சேகரக் கைமளின் வீட்டை நோக்கி விரைந்தனர்.

திருவல்லூர் கிராமத்தின் வடகிழக்குப் பகுதியில் இருந்தது அவரது வீடு.

பரம்பரையாக ஜோதிடம், பிரஸ்னம், மாந்திரீகம் போன்றவற்றில் மிகவும் கெட்டிக்காரர்களாக விளங்கியவர்கள் கைமளின் குடும்பத்தினர்.

மாதவன்குட்டியும் அவன் தம்பியும் வந்து சேர்ந்தபோது, கைமள் குலதெய்வம் மற்றும் பரதேவதைகளைத் தியானித்துவிட்டு பூஜையறை வாசலுக்கு அருகே வந்து அமர்ந்திருந்தார். யாரோ தன்னைத் தேடி வருவதுபோல் தோன்றவே, கைமள் நிலவிளக்கின் திரியை மேலும் நீட்டித் தூண்டி விட்டார்.

ஐம்பதைக் கடந்த கைமள் உயரம் குறைந்த இரட்டை நாடி உடம்புக்காரர். வட்ட முகம். சற்றுப் பதிந்தாற் போன்ற மூக்கு. சற்றுத் தடித்த உதடுகள். பூத-பிசாசுகளை விரட்டியடிப்பதில் மிகவும் புகழ் பெற்றவர்.

“யாரது?” கைமள் கேட்டார்.

“பெரிய வீட்டுக் காரணவரின் பசங்க நாங்க,” மாதவன்குட்டி பதிலளித்தான்.

“வாங்க... என்ன விசேஷம்?”

“எங்க அண்ணன் இறந்துபோன செய்தியைக் கேள்விப் பட்டிருப்பீங்களே!”

“கேள்விப்பட்டேன். ஒரு வாரமா நான் ஊர்ல இல்லை. தலைச்சேரி வரைக்கும் போயிருந்தேன். அதனாலதான் துக்கம் விசாரிக்கக்கூட வரமுடியலை. ஊரிலேயிருந்து இப்பத்தான் வந்தேன்.”

“அப்பா உங்களைக் கையோட கூட்டிட்டு வரச் சொன்னார். பிரஸ்னம் பார்க்கணும். தேவைப்பட்டா மை போட்டும் பார்க்கணும்.”

“நீங்க சொன்ன ரெண்டு வேலைகளையும் விளக்கு வெச்ச பிறகு பார்க்கக் கூடாதுங்கிறதுதான் சாஸ்திரம்” கைமள் பதிலளித்தார்.

“ஒருவேளை அப்படிப் பார்க்க வேண்டி வந்தா அதுக்கும் ஏதாவது பரிகாரம் இருக்குமில்லையா? அப்படி எதையாவது செய்துட்டு உடனே கிளம்புங்க. இந்தாங்க தட்சிணை!” மாதவன்குட்டி நூற்றியொரு ரூபாயை கைமளின் கையில் கொடுத்தபடி பேசினான்.

பணத்தைப் பார்த்ததும் கைமளின் முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது. வீட்டுக்குள் நுழைந்தவர் சற்று நேரத்துக்குப் பிறகு சோழிப்பை, ராசிப்பலகை போன்றவற்றை ஒரு பையில் போட்டுக் கொண்டு சுறுசுறுப்புடன் கிளம்பினார்.

பெரிய வீட்டின் சவுக்கைப் பகுதியில் கைமளை வரவேற்று உட்கார வைத்தனர். தெருவாசற்கதவை மூடித் தாழிட்டார்கள்.

“சவுக்கைப் பக்கமாக யாரையும் விடக்கூடாது!” என்று கண்டிப்பான உத்தரவிட்டு மாதவனையும் சிவன்குட்டியையும் தன்னுடன் இருக்கச் சொன்னார் கைமள்.

பெரிய நிலவிளக்கில் ஏழு கனத்த திரிகளைக் கொளுத்தினார். அதன் முன்புறமாக அமர்ந்த கைமள் ராசிப்பலகையை எடுத்து வைத்துச் சோழிகளை வாரி வைத்தார். கொஞ்சம் சோழிகளைச் சுழற்றி வீசினார். கழித்தார். வகுத்தார். பெருக்கினார். இறுதியில் கூட்டினார். அப்படியும் மீதம் வந்தது.

“தென்கிழக்குத் திசையிலிருந்து வந்திருக்கிறது ஆபத்து” கைமள் கூறினார்.

அதைக் கேட்ட புவனேஸ்வரன் நாயரின் நெற்றி களிவடைந்தது. அந்தத் திசையில்தானே பனங்காட்டுமனை இருக்கிறது!

கேசவன்குட்டி போனதும் அங்குதானே!

கைமள் மீண்டும் ராசிப்பலகையில் சோழிகளைப் பரப்பினார். மீண்டும் கற்றுக் கொண்ட கணக்குகளையெல்லாம் போட்டுப் பார்த்தார். உதட்டைப் பிதுக்கியபடி பேசினார்: “சந்தேகமே இல்லாமல் இது கொலைதான். கேசவன் தற்கொலை செய்து கொள்ளவில்லை!”

“நிஜமாவா!” புவனேஸ்வரன் நாயர் வியப்பு அடைந்தவராகக் கேட்டார்.



“ஜோஸியம் அப்படித்தான் சொல்லுது!”

“யார் செஞ்சாங்கன்னு தெளிவா ஏதாவது சொல்ல முடியுதான்னு பாருங்களேன்!” நாயர் கோபத்துடன் கேட்டார்.

“முயற்சி பண்றேன்!”

“ஒண்ணு பண்ணுங்களேன். இந்த விஷயத்தை மை போட்டுப் பாருங்களேன். மாதவா, போய் வெற்றிலை எடுத்துட்டு வா!”

மாதவன் சவுக்கையின் கதவைத் திறந்துகொண்டு வெளியே நடந்தான்.

தெருவாசற் கதவைத் தாண்டி வாய்க்கால் பக்மாக வந்து முருங்கை மரத்தின் மீது படர்ந்திருந்த வெற்றிலைக் கொடியிலிருந்து தேர்ந்து வெற்றிலைகளைக் கிள்ளிக்கொண்டு வந்தான்.

சேகரக் கைமள் அதிலிருந்து வடிவொத்த ஒன்றை எடுத்து மேல்துண்டால் நன்றாகத் துடைத்துவிட்டு பையிலிருந்து மை டப்பாவை எடுத்தார்.

இடது உள்ளங்கையில் வெற்றிலையை வைத்துக்கொண்டு அதன் மீது வட்ட வடிவத்தில் மையைத் தடவினார். நடுவிரலை மூக்கின் மேற்புறம் வைத்து வெற்றிலையின் கீழ்ப் பகுதியை அழுத்தியபடி வட்டமான மையின் பரப்பில் பார்வையை ஊன்றிப் பார்த்தார்.

சற்று நேரத்துக்குள் வெற்றிலையின் நடுவிலிருந்த கறுப்பு வட்டப் பரப்பு படிப்படியாக மாறி, அதற்கு பதிலாகப் பனங்காட்டு மனையின் முன்புறம் தெளிவடையத் தொடங்கியது. அங்கு உண்ணிக் கிருஷ்ணனும் மந்தாகினியும் நின்று கொண்டிருந்தனர்.

மந்தாகினி உயரமாக வளர்ந்து கொண்டிருந்தாள். கேசவன் பின்வாங்கி ஓடத் தொடங்கினான். கத்தி அவன் பின்னாலேயே பாய்ந்து வந்தது. கூடவே தன் தலையிலிருந்து இரண்டுமுடியை உருவி ஏதேதோ உச்சரித்தபடி அதைச் சுருட்டி அவனை நோக்கி எறிந்தாள் மந்தாகினி.

அந்த முடியிழைகள் இரண்டும் இரண்டு பைசாசிக வடிவமான பெண்களாக மாறுகின்றனர். அவிழ்த்துப் போட்ட தலைமுடியுடனும்,

கூர்மையான வளைந்த பற்களுடனும், கை விரல்களில் நீண்ட கூர்மையான நகங்களும் கொண்ட உடையற்ற உருவங்களாக அந்தப் பெண்கள் கேசவன்குட்டியைப் பின்தொடர்ந்தனர்.

பெரிய வீட்டின் திண்ணையில் தாவி ஏற முயன்ற கேசவன் குட்டியை, இருவரில் ஒருத்தி பாய்ந்து பிடித்தாள். அவள் கழுத்தை நெரித்துக் கொண்டிருக்கும்போது மற்றவள் கேசவனது வேட்டியை அவிழ்த்து, உத்திரத்தில் தூக்குக் கயிற்றைத் தயார் செய்தாள்.

இரண்டு பிசாசினிகளும் கேசவனின் ரத்தத்தைக் குடித்த பிறகு அந்த உடம்பைத் தூக்கில் தொங்க விடுகின்றனர். அதே நேரம் அதுவரை அந்தரத்திலேயே மிதந்து கொண்டிருந்த கட்டாரி அவன் நெஞ்சில் விசையாகப் பாயவும் செய்தது.

வெற்றிலை பிடித்திருந்த கையை எடுத்துவிட்டு, அது வரையில் தான் பார்த்த காட்சியை வாய்விட்டுச் சொல்ல விரும்பியவர் எதேச்சையாக முன்புறமிருந்த ராசிப் பலகையைப் பார்த்தார். அவ்வளவுதான்... சேகரக் கைமளின் உடம்பு பயத்தால் நடுங்கத் தொடங்கியது!

## 4

**கை**மளின் உடம்பு கிடுகிடுவென நடுங்கத் தொடங்கியது. அவரது வாழ்க்கையில் இதுவரை இப்படியொரு அனுபவம் நேர்ந்ததே இல்லை!

ராசிப் பலகையில் அவர் கண்டது என்ன? ராசிப் பலகையின் மீது அதை அசைய விடாதபடி ஒரு பாதம் அழுத்திக் கொண்டிருந்தது.

மனிதர்களுக்கு இருப்பது போன்ற ஐந்து விரல்கள் கொண்ட அழகான - ஆனால், பெரிய பாதம் ஒன்று ராசிப் பலகையை மிதித்துக் கொண்டிருந்தது.

அந்த விரல்கள் ஒவ்வொன்றிலும் மிஞ்சி போன்ற தங்க மோதிரங்கள் இருந்தன. ஒவ்வொரு மோதிரமும் தங்கக் காப்புகளின் அளவுக்குப் பெரியதாக இருந்தன. பாதத்தின் மேற்புறம் சொக்கத் தங்கத்தாலான கொலுசு ஒன்றும் தென்பட்டது. கொலுசிலிருந்த



சலங்கை மணிகள் ஒவ்வொன்றும் மாட்டின் கழுத்துப் பட்டியிலிருந்த மணியளவுக்குப் பெரியதாக இருந்தன.

கைமள் பாதத்திலிருந்து பார்வையை மேற்புறமாக உயர்த்தியவர் பார்த்தது பார்த்தபடியே நின்றார். வீட்டின் மேற்புறத் தளத்தைத் துளைத்துக்கொண்டு அந்த உருவத்தின் மேற்பகுதி வானை எட்டித் தொடுமளவு வளர்ந்திருந்தது.

"பார்த்ததையெல்லாம் இந்தக் கணத்துடன் மறந்துவிடு!" என்றொரு கட்டளைக் குரல் அவர் காதில் மட்டும் பலமாக ஒலித்தது.

அதற்குள் கைமளின் உடம்பு வியர்வையால் நனைந்து விட்டிருந்தது.

"எனக்கு எதுவுமே தெரியவில்லை!" என்று அலறிய கைமள் திடீரென்று அப்படியே பின்புறமாகச் சாய்ந்தார்.

'ஏதோ விபரீதம் நடந்திருக்கிறது!' என்பது புவனேஸ்வரன் நாயருக்கும், அவர் வாரிசுகளுக்கும் விளங்கவே செய்தது.

கைமளை அப்படியே போட்டுவிட்டு அவர்கள் எல்லோரும் வெளியே வந்தனர்.

"மாதவா, இதுக்கெல்லாம் என்ன அர்த்தம்?" நாயர் தன் மகனைக் கேட்டார்.

"அவர் எதையெல்லாமோ பார்த்திருக்கிறார். ஆனால், என்ன காரணத்தாலோ பயந்து மிரண்டு பார்த்ததைச் சொல்லாமல் மறைக்கிறார். எனக்கென்னவோ அப்படித்தான் தோன்றுகிறது." மாதவன் பதிலளித்தான்.

"மறைக்கப்பட்ட பகுதிகளை நாம் தெரிந்துகொள்ள என்ன வழி?"

"இவரை வைத்துக்கொண்டு நாம் மேற்கொண்டு எதையும் தெரிந்துகொள்ள முடியாது என்றுதான் தோன்றுகிறது."

"ஏன் அப்படிச் சொல்றே?"

"அவர் சொல்ல மாட்டார். அவர் வாயைக் கட்டிப் போட்டுட்டாங்க! வேறு என்ன?"

"அப்படின்னா?"

"அவரை நம்மளால பேச வைக்க முடியாது. அவர் ஒரு சாதாரணமான மந்திரவாதி. அவரோட உபாசனா மூர்த்திங்கள்லாம் அப்படிப்பட்டவங்க... பாவம், அவரையும் நாம தப்புச் சொல்ல முடியாது!"

"அண்ணன் சொல்றதுதாம்பா சரி!" சிவன்குட்டி அண்ணனை ஆமோதித்தான்.

"இப்படிச் சொன்னால், நாம எப்படித்தான் உண்மையைத் தெரிந்து கொள்வது?" நாயர் கோபத்துடன் கேட்டார்.

"எங்களைப் பத்தி உங்களுக்கே நல்லாத் தெரியும் அப்பா. எங்களுக்கு மனுஷங்க பயப்படலாம். ஆனால், உக்கிரமூர்த்திகள் பயப்படுவாங்கன்னு எதிர்பார்க்கலாமா?" மாதவன், அப்பாவின் கோபத்தைக் குறைக்கும் முயற்சியில் ஈடுபட்டான்.

"கேசவனை யாரோ கொன்னு கட்டித் தொங்கவிட்டதாத் தானே கைமள் முதல்ல சொன்னார். அப்படின்னா நாளைக்கு இந்த நிலைமை உங்களுக்கும் ஏற்படாதுன்னு சொல்ல முடியுமா?" நாயர், தன் மகன்களைப் பார்த்துக் கேட்டார்.

"நிஜம்தான் அப்பா. நீங்க சொன்னதுல எந்த விதமான தப்பும் இல்லை... சீக்கிரமாகவே நாங்க இதுக்கு ஒரு மாற்று வழியைக் கண்டுபிடிக்கிறோம்." மாதவன், அப்பாவிடம் உறுதியளித்தான்.

"எது எப்படிப் போனாலும், கேசவன் எப்படிச் செத்தான், யாரால செத்தான்கிறது உடனடியா எனக்குத் தெரிஞ்சே ஆகணும்! அதுக்குப் பிறகு யார் அதுக்குக் காரணமோ அவங்க தலையை வெட்டிக்கொண்டு வந்து என் காலடியில போடணும். இல்லேன்னா நம்ம பரம்பரைக்கே அது ஒரு களங்கமாத் தொடரும்!" நாயர் எச்சரிக்கை செய்தார்.

"ஞாபகம் வைச்சுக்கிறோம்!" பிள்ளைகள் உறுதியளித்தனர்.

**ச**ற்று நேரத்துக்குப் பிறகு சேகரக் கைமள் கண்களைத் திறந்தார்.

தான் இருட்டுக்குள் படுத்திருப்பதை உணர்ந்தார். மடியில் தீப்பெட்டி இருக்கிறதா என்று தடவிப் பார்த்தார், இல்லை. பக்கத்தில்



எங்காவது கிடக்கிறதா என்று அக்கம்பக்கத்தைக் கைகளால் துழாவினார். தரையில் எங்கும் இல்லை, கட்டிலின் மீது கிடப்பது புரிந்தது.

எழுந்தவர் தட்டுத் தடுமாறி நகர்ந்து கதவைத் திறந்தார். அப்போதுதான் அவருக்கு ஒரு விஷயம் புரிந்தது. 'தான் இப்போது இருப்பது தன்னுடைய சொந்த வீட்டில்!'

வழக்கமாகத் தீப்பெட்டி வைக்கும் இடத்திலிருந்து அதை எடுத்து விளக்கை ஏற்றினார்.

[illegible]பலகையும், சோழிப் பையும் வழக்கமாகத் தான் வைக்கும் இடத்திலேயே இருந்தன. எந்தப் பொருளும் காணாமல் போகவில்லை.

எல்லாம் ஒரு கனவு மாதிரி இருந்தது!

'சே... தான் எப்படிப்பட்ட ஒரு காட்சியைக் காண நேர்ந்தது!' இதுவரையில் இப்படிப்பட்ட சம்பவங்களைக் காதால்தான் கேள்விப்பட்டிருக்கிறோம். இப்போது... கண்ணுக்கு முன்னால்...'

அதே நேரம் கைமளின் மனத்தில் மற்றொரு சிந்தனை எழாமலும் இல்லை.

'இப்போது பனங்காட்டு மனையில் வசிப்பது யாராக இருக்கும்?

அங்கு இதுவரை இருந்தது காது கேட்காத, வாய் பேச முடியாத ஒரு நம்பூதிரி இளைஞன் மட்டும்தான். அவனுடன் தங்கியிருப்பது [illegible] மோகினியாக இருக்கலாமோ?' கைமளின் சிந்தனை விடை கிடைக்க முடியாத கேள்விகளில் சிக்கிக் குழம்பியது.

அதே சமயம் பெரிய வீட்டில் இருந்தவர்களின் மனத்தில் மற்றொரு சந்தேகமும் எழுந்தது.

'நாயரின் சகோதரியான சரஸ்வதி ஒரு காலத்தில் இந்த வீட்டுக் [illegible] இறந்து கிடந்தாளே... கேசவன்குட்டியின் மரணத்துக்கு சரஸ்வதியின் ஆவி ஒரு வேளை காரணமாக இருக்குமோ? போதாக்குறைக்கு சரஸ்வதி கர்ப்பிணியாக வேறு இருந்தாளே?'

அந்தக் கோணத்தில் ஏதாவது தெரிகிறதா என்று விசாரிக்க [illegible] நாயர். அப்படியொரு யோசனையைச் சொன்னவன் சிவன்குட்டிதான்.

புவனேஸ்வரன் நாயர் யோசனையில் ஆழ்ந்தார். 'உண்மைதான். அப்படி நடந்திருக்கவும் வாய்ப்பு இருக்கிறது. எனவே, அந்தக் கோணத்தில் முயற்சி செய்யவும் வழியிருக்கிறது.'

இந்த விஷயத்தைப் பற்றிக் கலந்தாலோசிப்பதற்காக கைமளிடம், மாதவன்குட்டியும் அவன் தம்பியும் போனார்கள்.

பெரிய வீட்டுத் தொடர்பான சமாசாரம் என்று தெரிந்தவுடன் கைமளின் உடம்பு பயத்தால் நடுங்கத் தொடங்கியது. அவரின் தலை சட்டென்று தாழ்ந்தது. ராசிப்பலகையின் மீது அன்று கண்ட உருவம் அவர் மனத்தில் தெளிவடைந்து வந்தது.

"உங்களால் சொல்ல முடியவில்லை என்றால் வேறு என்ன வழியிருக்கிறது என்றாவது சொல்லுங்களேன்!" மாதவன்குட்டி, கைமளிடம் கேட்டான்.

"தம்பி, உங்க வீட்டுச் சவுக்கையிலயிருந்து எப்படி என்னோட வீட்டுக்கு வந்து சேர்ந்தேன்கிறதே இன்னும் எனக்குப் புரியலை! கண்விழிச்சுப் பார்த்தபோது நான் என் வீட்டுக்குள்ள இருக்கிறேன்." கைமள் இதைச் சொன்னபோதும் அவர் குரல் பயத்தால் இடறியது.

"சரிங்க... உங்களுக்கு பயமா இருந்தால் வேண்டாம். அதோட விட்டுடுங்க. இதுக்கு தகுந்த வேறு யாரையாவது உங்களுக்குத் தெரியுமா?" சிவன்குட்டி விசாரித்தான்.

"பனங்காட்டு இல்லத்தில்தான் எல்லாவற்றுக்குமான காரணம் இருக்கிறது என்பது தெரிகிறது. அதனால, அந்த இல்லத்துல இருக்கிற சக்தியை எதிர்த்து நிற்கத் தகுந்த இன்னொரு நம்பூதிரிதான் இதுக்குப் பொருத்தம்."

"அப்படி யாராவது இருக்காங்களா?"

"இருக்கிறார். இங்கேருந்து கொஞ்சத் தொலைவு வடக்குத் திசையில 'கணக்காசேரி'ங்கிற ஒருமனை இருக்கு. அங்கே சோமதத்தன்னு ஒரு நம்பூதிரி இருக்கிறார். பேருக்கு அவர் நம்பூதிரியானாலும் உண்மையைச் சொன்னா இப்ப அவர் நம்பூதிரியே கிடையாதுன்னு சொல்லலாம். அவரைப் பத்தி நான் அதிகமா எதையும்



சொல்ல விரும்பலை. எதுக்கும் உடனடியா நீங்க அவரை சந்திக்கிறதுதான் நல்லது."

மர்மம் நிறைந்த வர்ணனைகளைக் கைமள், மாதவன்குட்டியிடம் கூறியபோது இதுவரை பார்த்தறியாத அந்த மாந்திரீகனின் மீது மாதவனுக்கு மதிப்புத் தோன்றவே செய்தது.

அந்த வீட்டை அடைவதற்கான வழியைத் தெளிவாக விசாரித்து அறிந்துகொண்ட மாதவனுக்கு, என்ன காரணத்தாலோ அன்றே புறப்பட வேண்டுமென்று தோன்றியது.

நேராக அப்பாவிடம் வந்து செய்தியைத் தெரிவித்தான்.

'சோமதத்தன்' என்ற பெயரை முன்பு எப்போதோ, எங்கோ கேள்விப்பட்டதாக புவனேஸ்வரன் நாயருக்குத் தோன்றியது. எனவே, முடிந்த விரைவில் அவரைச் சந்தித்து விவரம் தெரிவிக்குமாறு மகனிடம் கூறினார்.

உண்ணிக்கிருஷ்ணன் உயிரோடு திரும்பிவந்த செய்தி அவரை ஆச்சரியத்துடன் அதிர்ச்சிக்கும் உள்ளாக்கியிருந்தது. புலிக்குட்டி மற்றும் வாசுதேவனை அழைத்துக் கேட்டபோது, உண்ணிக் கிருஷ்ணனின் கழுத்தை நெரித்து உயிர் போய்விட்டதை உறுதி செய்த பின், இருபது கிலோ மீட்டருக்கு அப்பால் உள்ள பாழடைந்த கோயில் [illegible]க்குள் வீசியெறிந்து விட்டதாகச் சத்தியமே செய்தனர். இந்த விவரத்தைக் கேள்விப்பட்டதும் புதிதாகத் திகைப்பும் சேர்ந்து கொண்டது.

அன்று மாலை நேரத்தில் வழக்கத்தைவிட அதிகமான நேரம் புவனேஸ்வரன் நாயர் பிரார்த்தனை செய்தார். அதன் பிறகு வழக்கமான தனது பொழுதுபோக்கான பத்திரங்களைப் புரட்டிப் பார்க்கும் வேலையில் ஈடுபட்டார்.

பனங்காட்டு மனையின் சொத்துகளைத் தன் பெயருக்கு மாற்றியது தொடர்பான பத்திரங்கள் அவை. உண்மையைச் சொன்னால் அவை எல்லாமே போலிப் பத்திரங்கள்!

ஏறத்தாழ நூறு ஏக்கர் பரப்பளவுள்ள நெல்வயலைக் [illegible] மாற்றியதற்கான பத்திரம்தான் அப்போது அவர் கையில் இருந்தது.

மறுநாள் அதில்தான் அறுவடை நடக்கப்போகிறது. அருமையான நிலம். இரண்டு போகம் விளையும் வளமான பகுதி. ஒரு தடவை அறுவடை செய்தால் சுமார் இரண்டரை லட்சம் ரூபாய் கைக்கு வந்து சேரும். இப்படிப்பட்ட ஒரு நன்செய் பூமி, இந்தப் பகுதியிலேயே வேறு எங்கும் இல்லையென்று சொல்லலாம். அதையொட்டியே மேலும் இரு வயல் பகுதிகளும் இருந்தன. எவ்வளவு இருந்தாலும் கிழக்குத் திசையிலிருந்த நூறு ஏக்கர் நிலம்தான் எல்லாவற்றுக்கும் சிகரமானது. அது தொடர்பான பத்திரம்தான் அவர் கையில் அப்போது இருந்தது.

சரஸ்வதிக்காகத் திருமேனி உண்மையாகவே எழுதிக் கொடுத்த மண் அது. அந்தப் பத்திரம் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. மாறாகப் பதினைந்து ரூபாய் மதிப்புள்ள ஸ்டாம்ப் பேப்பரில் ஏனைய விவரங்கள் எல்லாம் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தன. திருமேனியின் பெருவிரல் ரேகை அடையாளம் அதில் பளிச்சென்று பதிந்திருந்தது.

பத்திரத்தைப் பதிவு செய்தால் பிறகுக்கு விஷயம் தெரிந்துவிடும் என்பதால்தான் திருமேனி அப்படியொரு ஏற்பாட்டைச் செய்திருந்தார்.

சரஸ்வதி கர்ப்பிணியான செய்தியை அறிந்தவுடன் திருமேனி செய்த ஏற்பாடு இது. பத்திரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தபோது பக்கத்து அறையிலிருந்து ஏதோ ஒரு காலடியோசை கேட்டது.

அந்த அறைக்கு வேறு வாசல்கள் எதுவும் இல்லை. எல்லாவற்றுக்கும் மேலாக அது அவருடைய ரகசிய அறையும்கூட.

கட்டில் ஒன்றும் ஓர் அலமாரியும் மட்டுமே அந்த அறைக்குள் இருந்தன. அதையொட்டி கழிவறை இணைந்த குளியலறை இருந்தது. எதிர்பாராமல் அங்கிருந்து சத்தம் கேட்டதால், நாயருக்கு சந்தேகம் ஏற்பட்டது.

'அந்த அறைக்குள் இருப்பது யார்?'

அவருக்கு மிகவும் விருப்பமான பெண்கள் மட்டுமே அதற்குள் அனுமதிக்கப்படுவார்கள். வேறு யாரும் சுத்தம் செய்யும் பொருட்டுக்கூட அந்த அறைக்குள் அனுமதிக்கப்படுவதில்லை.

உட்கார்ந்த இடத்திலிருந்து நாயர் மெதுவாக எழுந்தார். டார்ச் லைட்டைஎடுத்துக்கொண்டு சத்தம் கேட்ட அறைக்குள் நுழைந்தார்.



"யாரது?" நாயர் சன்னமான குரலில் கேட்டார்.

டார்ச் லைட் வெளிச்சம் வட்ட வடிவமாக அறைப்பகுதிகளில் பிரயாணம் செய்தது. சட்டென்று டார்ச் லைட்டை அசைக்காமல் அப்படியே பிடித்தார்.

அலமாரிக்கு அருகில் பாதப் பகுதி ஒன்று தட்டுப்பட்டது.

கையிலிருந்த டார்ச் காரணமின்றி அணைந்தது!

டார்ச் லைட்டின் சுவிட்ச்சை எப்படியெல்லாமோ அழுத்திப் பார்த்தார். ஊஹூம். அது எரியவே இல்லை!

அந்த அறைக்குள் நிற்கவே அவருக்கு பயமாக இருந்தது. வெளியே வந்தவரின் கண்ணில் தட்டுப்பட்டது மற்றொரு காட்சி.

பத்திரத்தைப் பார்த்துக் கொண்டிருந்த நாயர் அதை ஒரு ஸ்டூலின் மீது வைத்துவிட்டுப் போயிருந்தார். அதிலிருந்து ஏறத்தாழ இரண்டு முழத் தொலைவில் கோல்விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

'அந்தப் பத்திரத்துக்கு நெருப்பு வைத்தது யார்?'

கோல்விளக்கிலிருந்து தெளிக்கப்பட்ட எண்ணெயும், விழுந்த நெருப்பும்தான் பத்திரம் எரியக் காரணம் என்பது சட்டென்று புரிந்தது. அருகில் நெருங்குவதற்குள் பத்திரம் முழுமையாகச் சாம்பலாகி, பொட்டுப் பொட்டாக நெருப்புத் துணுக்குகள் கண் சிமிட்டுவது தெரிந்தது. அதனால், அதிலிருந்த ஓர் எழுத்தைக்கூட அவரால் காப்பாற்ற முடியாமல் போனது.

அறை அப்போதும் மூடியே கிடந்தது.

புவனேஸ்வரன் நாயர் கதவைத் திறந்துகொண்டு வெளியே பார்த்தார். எண்ணெய்விளக்கும் தான் வைத்த இடத்திலேயே அதே தொலைவில் எரிந்து கொண்டிருக்கிறது. யாரும் அதை எடுத்ததாகவோ, நகர்த்தியதாகவோ தெரியவில்லை.

வீட்டு வாசலை ஒட்டிய படிக்கட்டில் அமர்ந்து நாலாவது மகன் [illegible]குட்டி கத்தியைக் கூர் தீட்டிக் கொண்டிருந்தான்.

"சங்கரா, இந்தப் பக்கமாக யாராவது வந்தார்களா?" நாயர் விசாரித்தார்.

"யாரும் வரலையே அப்பா! என்ன விஷயம்?" மகன் ஆர்வத்துடன் கேட்டான்.

"அங்கு இருக்கும் விளக்கை எடுத்துக்கொண்டு வா. ரகசிய அறைக்குள் யாரோ இருக்கிற மாதிரித் தெரிகிறது" நாயர் ரகசியமான குரலில் கூறினார்.

சங்கரன் உடனே எழுந்து வராந்தாத் தூணில் செருகி வைத்திருந்த மற்றொரு கோல்விளக்கை எடுத்துக்கொண்டு, திரியை நீட்டி விட்டவனாக அந்த அறையை நோக்கி நடந்தான்.

## 5

மகனைத் தொடர்ந்து வந்த புவனேஸ்வரன் நாயர், விளக்கை அவனிடமிருந்து வாங்கிக்கொண்டு ரகசிய அறைக்குள் நுழைந்தார்.

பாதப் பகுதி தென்பட்ட அலமாரியை ஒட்டிய பகுதியை நெருங்கி, வெளிச்சத்தில் அந்த இடத்தை ஊன்றிப் பார்த்தார். ஆனால், இப்போது அங்கு அப்படி எதுவும் தட்டுப்படவில்லை!

"என்னப்பா பார்க்குறீங்க?" சங்கரன்குட்டி கேட்டான்.

"இங்குதான் யாரோ நின்னுட்டிருந்த மாதிரி தெரிஞ்சது. இந்த விளக்கை இப்படியே பிடி... எதுக்கும் ஒரு தடவை குனிஞ்சு பார்த்துடுறேன்."

அப்படியும் ஒன்றும் தென்படவில்லை.

விளக்கைக் கையில் வாங்கிய சங்கரன் ஓர் அங்குலம் விடாமல் அறையின் ஒவ்வொரு பகுதியையும் வெகு கவனத்துடன் பார்த்தான்.

"ஒருவேளை உங்களுக்கு அப்படித் தோன்றியிருக்கலாம்!" சங்கரன் கூறினான்.

"அதெல்லாமில்லை. இங்கு என்னவெல்லாமோ நடக்கிறது. கொஞ்ச நேரத்துக்கு முன்னால் இந்தக் கோல்விளக்கிலிருந்து விழுந்த



எண்ணெயாலும் நெருப்பாலும் ரொம்பத் தூரத்திலிருந்த ஒருபத்திரம் முழுசா எரிஞ்சு போச்சு. இத்தனைக்கும் விளக்கு பத்திரத்துக்கு நேராக்கூட இல்லை!"

இதைக் கேட்ட சங்கரன்குட்டியின் நெற்றி சுளிவடைந்தது... கேசவன்குட்டியின் மரணத்துடன் எதனாலோ இந்த சம்பவத்தையும் சங்கரன்குட்டியின் மனம் இணைத்துப் பார்த்தது. அப்படிப் பார்த்தால், அப்பா சொன்னது அர்த்தமுள்ளதாகவே தோன்றியது.

"சோமதத்தன்கிற ஒரு மந்திரவாதியைப் பற்றிச் சொல்லி இருக்கிறார் கைமள். ரொம்பவும் கெட்டிக்கார மந்திரவாதியாம். மாதவன் குட்டியோட நீயும் போ... என்ன ஏதுன்னாவது விஷயம் தெரிஞ்சுக்கலாம்."

"சரி அப்பா... அப்படியே செய்யறோம்."

மறுநாள் காலையில் மந்தாகினி, உண்ணிக்கிருஷ்ணனிடம் சொன்னாள்: "நம்ம இல்லத்துக்கு மேற்கே கொஞ்சத் தூரத்துல வீரராகவன் பிள்ளைங்கிற ஒருத்தர் குடியிருக்கிறாரே, ஞாபகமிருக்கா உங்களுக்கு? 'ஏராசேரி'ங்கிறது அவங்களோட குடும்பப் பேரு! அந்த வீடுவரைக்கும் ஒரு நடை போயிட்டு வர்றீங்களா?"

"எதுக்காக அங்கே போகணும்?" உண்ணிக்கிருஷ்ணன் கேட்டான்.

மந்தாகினி உத்திரத்தில் செருகி வைத்திருந்த பழைய காகிதச் சுருள் ஒன்றை உருவி எடுத்தாள்.

"இதைக் கவனிச்சீங்களா? அந்த வீரராகவன்பிள்ளை உங்க மாமாகிட்டேயிருந்து பத்தாயிரம் தேங்காயைக் கடன் வாங்கி இருக்கிறார். எப்படிப் பார்த்தாலும் இன்னிய விலைக்கு இருபதாயிரம் ரூபாயாவது தேறும். அதுக்காக எழுதிக் கொடுத்திருக்கிற கடன் பத்திரம் இது!"

"ஐயோ... என்ன பொண்ணு நீ! இதையெல்லாம் நான் இப்போ கொண்டுபோய்க் கேட்டேன்னா, அவங்களோட ஆளுங்க என்னை உதைச்சு அனுப்புவாங்க. நாம எதுக்காக இந்த வம்பு தும்புக்கெல்லாம் போகணும்?"

“இப்படியெல்லாம் யோசிச்சா அப்புறம் நாம பட்டினி கிடக்க வேண்டியதுதான். நான் சொல்றது மாதிரிசெய்யறதுதான் நல்லது. தைரியமாப் போயிட்டு வாங்க.” மந்தாகினி, உண்ணிக்கிருஷ்ணனுக்கு தைரியமூட்டினாள்.

“போய்த்தான் ஆகணும்னு நீ சொன்னா போய்ட்டு வர்றேன்!”

“இந்த மாதிரி பட்டும் படாமப் பேசினா எப்படி? கண்டிப்பா போயிட்டு வரணும்!”

கடைசியில் மந்தாகினியின் வற்புறுத்தலுக்காகப் போய்விட்டு வருவது என்ற முடிவுக்கு வந்தான் அவன்.

“இந்த விஷயமெல்லாம் உனக்கு எப்படித்தெரிஞ்சது மந்தாகினி?”

“எங்க அப்பா சொல்லித்தான் எனக்குத் தெரியும். சீக்கிரமா போயிட்டு வாங்க. அவர் எங்கேயாவது வெளியே போயிடப் போறார். இப்ப அவர்கிட்டப் பணமும் இருக்கு.”

உண்ணிக்கிருஷ்ணன் அந்தக் கடன்பத்திரத்தை எடுத்துக் கொண்டு புறப்பட்டான். சற்றுத் தூரம் நடந்த பிறகு அவரது வீடு எந்தப் பக்கம் இருக்கிறது என்கிற விஷயத்தில் சந்தேகம் தோன்றியது. இருந்தாலும் மேலும் கொஞ்ச தூரம் நடந்தவன், பாதை இரண்டாகப் பிரியும் இடத்தில் வந்து நின்றான்.

சற்று நேரத்துக்குள் வலதுபுறப் பாதை வழியாக ஒரு மனிதர் வருவதைக் கவனித்தான். சற்றுத் தொலைவுக்கு முன்னாலேயே உண்ணிக்கிருஷ்ணனை, வந்த மனிதர் அடையாளம் தெரிந்து கொண்டாற்போல இருந்தது. எனவே, அருகே வந்ததும் கேட்டார்: “உண்ணித் தம்புரான் எங்கே இந்தப் பக்கமா...?”

“நம்ம வீரராகவன் பிள்ளையோட வீட்டைத் தேடிப் போயிட் டிருக்கேன்.”

அந்த வார்த்தைகளைக் கேட்டதும் வந்தவர் வாய் பிளந்தபடி ஆச்சரியத்துடன் உண்ணியை கவனித்தார். அவர் கண்களும் அநியாயத்துக்கு விரிந்தன. என்ன பதிலைச் சொல்வது என்று புரியாமல் விழித்தார் அவர்.



“நான் கேட்டது உங்க காதுல விழலையா? வீரராகவன் பிள்ளையோட வீடு எங்கே இருக்கு?”

“கேட்டுச்சு... எனக்கு ஒரு சந்தேகம்...” வந்தவர் உண்ணியின் முகத்தைப் பார்த்தபடியே மென்று விழுங்கினார்.

“என்ன சந்தேகம்?”

“நீங்க பனங்காட்டு மனையைச் சேர்ந்த தம்புரான் உண்ணிக்கிருஷ்ணன்தானே?”

“ஆமாம்... அதில் என்ன சந்தேகம்?”

“இல்ல... அவருக்குக் காது கேட்காது; அவரால பேச முடியாதுன்னு தெரியும்!”

“அதெல்லாம் முன்னே... இப்ப காதும் நல்லாக் கேட்கும். வாயும் பேசும். அதான் நேரில பார்க்குறீங்களே. நான்தான் நீங்க சொல்ற உண்ணி... உண்ணிக்கிருஷ்ணன்!”

“கடவுளே... என்ன இது! நான் இன்னும் இந்த பூமியிலதான் இருக்கேனா?” வந்தவர் மேலும் கீழுமாக உண்ணியைப் பார்த்தபடி கேட்டார்.

“உங்களுக்கு என்ன சந்தேகம்னே எனக்குப் புரியலை. நான் கேட்ட கேள்விக்கு நீங்க இன்னும் பதில் சொல்லலலையே!”

“சொன்னப் புரியாது... என்கூட வாங்க, நானே உங்களுக்கு அந்த வீட்டைக் காமிக்கிறேன்!”

இருவரும் நடக்கத் தொடங்கினர். ஏறத்தாழ ஒரு ஃபர்லாங் நடந்த பிறகு பெரிய சுற்றுச் சுவர் உள்ள ஒரு பெரிய நாலுகட்டு வீட்டுக்கு முன்னால் வந்து சேர்ந்தனர்.

“இதுதாங்க நீங்க கேட்ட வீரராகவன் பிள்ளையோட வீடு.” சொன்னவர், மீண்டும் ஒரு தடவை உண்ணிக்கிருஷ்ணனைத் திரும்பிப் பார்த்துவிட்டு விரைவாக நடக்கத் தொடங்கினார். பின்பு என்ன நடக்கிறது என்பதைத் தெரிந்து கொள்வதற்காகவோ என்னவோ சாலை ஓரமாக ஒதுங்கி நின்றார்.

தெருவாசல் கதவைத் திறந்துகொணடு உண்ணி அந்த சுற்றுமதிலுக்குள் நுழைந்தான். வீட்டின் வெளித் திண்ணையில் சாய்வு நாற்காலி ஒன்றில், இருபுறக் கால்களையும் உயர்த்தி வைத்தபடி சாய்ந்திருந்தார் ஒருவர். உண்ணி அவரை நோக்கி நடந்தான்.

உண்ணியைப் பார்த்ததும், தன்னுடைய படுக்கை நிலையிலிருந்து எந்த மாற்றத்தையும் செய்யாமல் அந்த நிலையிலேயே கிடந்தார் அவர். அவருக்கு ஆளை அடையாளம் தெரியவில்லையென்று தோன்றியது.

"யாரது?" படுத்தபடியே கேட்டார்.

"பனங்காட்டுமனை உண்ணிக்கிருஷ்ணன் வந்திருக்கிறேன்."

அதைக் கேட்டதும்ம வீரராகவன் பிள்ளை இகழ்ச்சியாகச் சிரித்துவிட்டுக் கேட்டார்.

"அந்தப் பேரில இப்படியொரு ஆள் மாறாட்டமா?"

வீரராகவன் பிள்ளையை இப்போதுதான் உண்ணிக்கிருஷ்ணன் முதல் தடவையாகப் பார்க்கிறான். அறுபதை நெருங்கியிருந்தார். உயரம் குறைந்த இரட்டைநாடி உடம்பு. உதடுகளின் மேற்பகுதியில் மீசை கனமாக இருந்தது. சற்றுப் பரந்த மூக்கு. குறுகிய கண்கள். மார்புப் பகுதி ரோமக்காடாக விளங்கியது.

"எங்க மாமாவுக்கு நீங்க தரவேண்டிய பணத்தை வாங்கிட்டுப் போறதுக்காக வந்திருக்கிறேன்." உண்ணி தயக்கம் இன்றிப் பேசினான்.

அவன் வார்த்தைகளை ஊன்றிக் கவனித்த பெரியவர் முதலில் முகத்தைச் சுளித்தாலும் பிறகு வாய்விட்டுச் சிரித்தார்.

"நல்ல வேடிக்கை! மாமாவுக்குச் சேரவேண்டியதை வசூல் பண்றதுக்கு மருமகப்பிள்ளை வந்திருக்காரா? நல்ல விஷயம்தான்! இப்படிச் சொல்லிக் கொடுத்துப் புரிய வெச்சவங்க யாரு? அட... சொன்னவன்தான் சொன்னான்! அதைக் கேட்டு இந்த வீட்டு வாசலைத் தாண்ட உனக்கு எப்படித் தைரியம் வந்துச்சு?"

"என்னால இப்ப அதையெல்லாம் புரிஞ்சு, நடந்துக்க முடியும்கிறது நிரூபணமாகியிருக்குமே!"



"அப்படி முடிஞ்சா சந்தோஷம்! ஆமாம், இப்ப நான் எவ்வளவு ரூபா தரணும்?"

"அதிகமில்லை... இருபதாயிரம் ரூபாய்தான்!"

திரும்பவும் உரத்த குரலில் வாய்விட்டுச் சிரித்த பெரியவர் பேசத் தொடங்கினார்: "ஏதோ பத்து இருபதுன்னா உடனே எடுத்துக் கையில கொடுத்துடலாம்..."

"நீங்க அவ்வளவெல்லாம் வருத்தப்பட்டோ, கஷ்டப்பட்டோ அதிகமா எதையும் தரவேண்டாம். தரவேண்டியதைத் தந்தால் போதும்!"

"இந்தக் கடனுக்கு ஏதாவது ஆதாரம் இருக்கா?"

"நான் சும்மா உங்ககிட்ட விளையாட வந்திருக்கிறதாகவா நெனைக்கிறீங்க? இந்தாங்க, நீங்க கேட்ட ஆதாரம். நல்லாப் படிச்சுப் பாருங்க!" உண்ணி தனது பாக்கெட்டிலிருந்த வீரராகவன் பிள்ளை எழுதிக் கொடுத்த கடன்பத்திரத்தை அவரிடம் கொடுத்தான்.

அதை வாங்கி வாசித்தார் பெரியவர். அவர் கைகளிலிருந்த காகிதம் படபடப்புடன் நடுங்கத் தொடங்கியது. சட்டென்று அவருக்கு ஏதோ ஒரு யோசனை தோன்றியது. கடன் பத்திரத்தை எடுத்துக் கொண்டு சாய்வுநாற்காலியிலிருந்து எழுந்து வீட்டுக்குள் விரைந்தார்.

அறைக்குள் மேஜைமீது வெண்கல விளக்கு ஒன்று எரிந்து கொண்டிருந்தது. பக்கத்திலேயே தீப்பெட்டி ஒன்றும் இருந்தது. பத்திரக் காகிதத்தை நெருப்பில் காட்டினார். முழுவதும் எரிந்து சாம்பலான பிறகு அதைத் தரையில் போட்டுக் காலால் நன்றாகத் தேய்த்துக் கசக்கினார். கருமையான காசிதச் சாம்பல் அறைக்குள் காற்றில் பரவி அலைந்தன. பிறகு பீரோவைத் திறந்தவர், நான்கு ஐந்து ரூபாய் நோட்டுகளை எடுத்துக்கொண்டு அங்கிருந்து திரும்ப முயன்றார். ஆனால், அங்கிருந்து நகர முடியாதபடி யாரோ அவர் தோளில் கைவைத்து இழுப்பது போல் தோன்றியது. அவர் திரும்பினார். ஆனால், எவரும் கண்களுக்குத் தட்டுப்படவில்லை!

'ஒருவேளை பிரமையாக இருக்கலாம்' என்று நினைத்து மீண்டும் தலை உயர்த்தியபோது மிகவும் பெரிய கை ஒன்று அவர் கழுத்தில்

விழுந்து, பின்புறமாக அவரை இழுத்தது. விநாடிக்குள் அவர் பீரோவின் முன்னால் கொண்டுவந்து நிறுத்தப்பட்டார்.

அப்போது பீரோவின் கதவு தானாகவே திறந்துகொண்டது. அவர் கையைவிட ஐந்து மடங்கு பெரிதான கைப்பகுதி ஒன்று தனது சுட்டுவிரல் மற்றும் கட்டை விரல்களின் உதவியால் அதற்குள்ளிருந்து நூறு ரூபாய் நோட்டுக்கட்டுகள் இரண்டை எடுத்து அவர் கையில் வைத்தது.

வீரராகவன் பிள்ளையின் உடம்பு அதற்குள் பயத்தால் கிடுகிடுவென நடுங்கத் தொடங்கியிருந்தது. உயிரற்ற ஓர் இயந்திர மனிதனைப் போல் அவர் அந்த நோட்டுக்கட்டுகளை வாங்கிக் கொண்டார். அவற்றுடன் அவர் அங்கிருந்து புறப்பட்டபோது எவரும் அவரைத் தடை செய்ததாகத் தெரியவில்லை.

"இந்தாங்க... நீங்க கேட்ட பணம்!" அப்போதும் பயத்திலிருந்து முற்றிலுமாக விடுபடாத வீரராகவன் ஈனஸ்வரமான குரலில் பேசியபடி நோட்டுக்கட்டுகளை உண்ணிக்கிருஷ்ணனிடம் கொடுத்தார்.

அவன் அதை வாங்கிக் கொண்டான். பிறகு தனது பாக்கெட்டிலிருந்து எட்டாக மடித்த ஒரு காகிதத்தை எடுத்து அவரிடம் கொடுத்தான்: "நான் உங்ககிட்டக் கொடுத்த கடன் பத்திரம்தான் இது. நீங்க வீட்டுக்குள்ளே போன கொஞ்ச நேரத்துல வெளியே வந்து விழுந்துடுச்சு. ஆமாம், எதுக்காக இந்தப் பத்திரத்தை காலால மிதிச்சீங்க?"

நடுங்கும் கைகளுடன் பிள்ளை அந்தக் கடன்பத்திரத்தை வாங்கிப் பார்த்தார். அது உண்ணி தன்னிடம் தந்த கடன் பத்திரமேதான்! அதில் தன் பாதச் சுவடுகளின் அடையாளம் கூடத் தெளிவாகத் தெரிந்தது.

'அப்படியானால் சற்று நேரத்துக்கு முன்னால் தானே, தன் கைப்பட எரித்தது எந்தப் பத்திரத்தை?' பிள்ளை வியப்பு மாறாத விழிகளுடன் உண்ணியையும் பத்திரத்தையும் மாறி மாறிப் பார்த்தார்.

உண்ணிக்கிருஷ்ணன் பணத்துடன் தெருவாசற்படியைத் தாண்டிய பிறகு, பிள்ளை தன் வேலைக்காரனை அழைத்தார்: "பப்பு, இங்கே வா!"



முற்றத்தின் ஒரு பகுதியில் நெல்லை ஆறப்போட்டுக் கொண்டிருந்த பப்பு, அதை அப்படியே விட்டுவிட்டு பிள்ளையிடம் வந்தான்.

"பப்பு... பனங்காட்டுமனை உண்ணி இங்கே வந்து வாயைத் திறந்து என்னவெல்லாம் பேசிட்டுப் போறான் தெரியுமா? அவன் பழைய மாதிரி இல்லை. என்கிட்டேயிருந்து இருபதாயிரம் ரூபாயைக் கறந்துட்டுப் போறான். இதுக்கெல்லாம் என்ன காரணம்னு கொஞ்சம் விசாரியேன்." பிள்ளை படபடத்தார்.

பப்பு, உண்ணிக்குத் தெரியாமலே அவனைப் பின் தொடர்ந்தான்.

மந்தாகினி மதியச் சாப்பாட்டைத் தயார் செய்திருந்தாள். உண்ணி வந்து சேர்ந்தான்.

"போன காரியம் வெற்றிகரமா முடிஞ்சிடுச்சு இல்லையா?" வீட்டுக்குள் நுழைந்தவனிடம் மந்தாகினி கேட்டாள்.

"முடிஞ்சிடுச்சு. என்னாலேயே நம்ப முடியலை!"

"சரி, ஆள் எப்படி நடந்துக்கிட்டார்?"

"முதல்ல கடனை ஒப்புக்கிறதாத் தெரியலை. கேலியாத் தான் பேசினார். ஆனா, நல்ல மனுஷன்கிறது, அவர் வீட்டுக்குள்ளே போயிட்டு வந்த பிறகு தெரிஞ்சது. அந்தப் பத்திரத்தைக்கூட அவர் ஒரு பொருட்டா எடுத்துக்கலை. உள்ளேயிருந்து பறந்து வந்ததை நான்தான் எடுத்து அவர்கிட்டத் திரும்பவும் கொடுத்தேன்."

"ஓகோ... அவ்வளவு சுலபமா முடிஞ்சிடுச்சா? நான் நெனைச்சேன், அவர் ஏதாவது பிரச்சினை பண்ணுவாரோன்னு!"

"சேச்சே... அப்படியெல்லாம் எதுவும் நடக்கலை. ரொம்பவும் தன்மையா நடந்துக்கிட்டார்!"

"அப்புறம் உங்ககிட்டக் கேட்காம நான் ஒரு வேலை செஞ்சிருக்கேன்."

"அப்படிப்பட்ட வேலை என்னவோ?"

“வேற ஒண்ணுமில்லை. ஒரு வேலைக்காரியை வேலைக்குச் சேர்த்திருக்கிறேன். எல்லா வேலையும் செய்வாள். எங்க ஊர்க்காரப் பொண்ணு!”

“இருக்கட்டும். ஆனா, இங்கே நமக்கு எதுக்கு ஒரு வேலைக்காரி? நாம இரண்டு பேர்தானே இருக்கிறோம்?”

“இனிமேலும் நாம இப்படியே இருந்தா எப்படி? இப்பத்தான் முதல் தடவையா தரவேண்டிய ஒருத்தர் தந்திருக்கிறார். இது மாதிரி இன்னும் எவ்வளவு பேர்கிட்ட வசூல் செய்ய வேண்டியிருக்குது?”

“அப்படியா சொல்றே மந்தாகினி?”

“ஆமாம்... இப்படிச் செய்ய வேண்டியது ஏராளமா இருக்கு. அருமையா நெல் விளையுற நூறு ஏக்கர் நிலம் மட்டுமே அந்த புவனேஸ்வரன் நாயர்கிட்ட மாட்டிக்கிட்டிருக்குது. உங்களுக்கு இதெல்லாம் தெரியுமா?”

“இதுக்கெல்லாம் யார் போய் சண்டை போட்டுட்டிருக்க முடியும்?”

“யார் கிட்டயும் யாரும் சண்டை போட வேண்டியதில்லை. கையைவிட்டுப் போனதெல்லாம் ஒழுங்காகத் திரும்பி வந்தா, அதையெல்லாம் கவனிக்க நமக்கு நேரம் வேணாமா? அதுக்குத்தான் உதவிக்கு ஒரு ஆள்!”

“என்னமோ எனக்கு ஒண்ணும் புரியலை!” உண்ணிக்கு இந்த மாதிரி விஷயங்களில் அவ்வளவாக ஆர்வம் இல்லை என்பது தெரிந்தது.

“ஒரு முக்கியமான விஷயத்தைச் சொல்றேன். நான் சொல்றபடி நீங்க நடந்துக்கலேன்னா, நான் என்பாட்டுக்குப் போயிடுவேன். நான் எது சொன்னாலும் அது உங்க நன்மைக்குத்தான்னு புரிஞ்சுக்கங்க!”

“சரி, நாம முதல்ல சாப்பிடலாமே!” உண்ணி சாப்பாட்டு அறையை நோக்கி நடந்தான்.

இவ்வளவு நேரமும் பப்பு தெரு வாசற்படியின் மறுபுறம் மறைந்து நின்று கொண்டிருந்தான். உள்ளே நடந்த உரையாடல் மொத்தத்தையும் அவன் கேட்கவே செய்தான்.



இருவரும் வீட்டுக்குள் போனதும் பப்பு அவசரமாகத் தன் எஜமானர் வீரராகவ பிள்ளையின் வீட்டை நோக்கி நடந்தான்.

“என்ன, ஏதாவது தெரிஞ்சதா?” பிள்ளை கேட்டார்.

“உண்ணிகூட அந்த வீட்டுல ரொம்பவும் அழகான பொண்ணு ஒருத்தியும் இருக்கிறா. சும்மா சொல்லக்கூடாது. தேவதைதான்! எப்படிப்பட்டவங்களும் ஒரு நிமிஷம் நின்னு திரும்பிப் பார்க்குற அழகு. அவனுக்கு எங்கேருந்துதான் இந்தப் பொண்ணு கிடைச்சாளோ?”

“பொண்ணுக்கு என்ன வயசிருக்கும்?”

“வயசைக் குறிப்பிட்டுச் சொல்றது ரொம்பவும் கஷ்டம். பார்த்தா ரொம்பவும் சின்னப் பொண்ணாத் தெரியுது.”

“ஓகோ... அப்படியா சேதி!” என்று தனக்குத்தானே முனகிக் கொண்ட பிள்ளை, உடனே தன் காரியஸ்தரை அழைத்து வருமாறு கூறினார்.

காரியஸ்தர் ராமனுக்கு வயது ஐம்பது. இருந்தாலும் வித்தைகளால் உரமேறியிருந்தது உடம்பு. பிள்ளையின் அநியாய-அக்கிரம நடவடிக்கைகள் எல்லாவற்றுக்கும் தோள் கொடுப்பவர் அவர்தான். அவருக்குக் கீழ் ஓர் அடியாள் கூட்டமே இருந்தது. வழிப்பறியும் திருட்டும்தான் அவர்களது முக்கியத் தொழில். அடியாட்களையெல்லாம் கையோடு கூட்டிக்கொண்டு வருமாறு பிள்ளை, காரியஸ்தரிடம் மிகவும் ரகசியமாகக் கூறினார்.

அன்று மாலை நேரத்தில் மந்தாகினி உண்ணிக்கிருஷ்ணனிடம் சொன்னாள்: “நம்ம இல்லத்தைச் சேர்ந்த கோயிலுக்கு வடக்குப் புறத்துல இருக்கிற வயல்ல விளையுற நெல் மொத்தத்தையும் படகுல ஏத்தித்தான் பட்டணத்துக்குக் கொண்டு போவாங்க. நெல் வித்த பணத்தை இன்னிக்குத்தான் கைமாறுறாங்க. நெல்லைக் கொண்டு போறவரு மத்தாயிங்கிறவர். நமக்கு வரவேண்டிய பணத்தை வாங்காம நெல்லைக் கொண்டுபோக விடாதீங்க!”

“என்ன மந்தாகினி... நீ என்ன சொல்லுறே? அவனுங்க எப்படிப் பட்ட ஆளுங்க தெரியுமா? சத்தமில்லாம கொன்னு புதைச்சுப்புடுவாங்களே!”

"இப்ப உங்களால பேச முடியுதே! கேள்வி கேட்டா சரியான பதில் சொல்லுங்க. நீங்க போகப் போறதில்லேன்னா, நான் இப்பவே என்வழியைப் பார்த்துப் புறப்படுறேன்."

அந்த வார்த்தைகள் உண்ணிக்கிருஷ்ணனின் மனத்தை வெகுவாகக் கலக்கவே செய்தது.

உண்ணி, படகுத்துறையை நோக்கி நடக்கத் தொடங்கினான்.

## 6

**உ**ண்ணிக்கிருஷ்ணன் வயல் வரப்பில் கால் பதித்தபோது, மேற்குத் திசையில் சூரியன் ஒரு சிவப்புக் கோளம் போல் உருமாறி கீழிறங்கத் தொடங்கியிருந்தது.

அந்தப் பகுதி முழுவதும் செந்நிற ஒளி படர்ந்து கிடந்தது. விசாலமான அந்த வயல்வெளியின் வடபுறம் ஆற்றங்கரையை ஒட்டியிருந்தது. ஆற்றங்கரையில் வயலை ஒட்டி எழுப்பியிருந்த கருங்கல் சுவர் அருகே மிகப் பெரிய சரக்குப் படகு ஒன்று கயிற்றில் கட்டப்பட்டு, ஆற்றின் அலையில் சன்னமாக அசைந்து கொண்டிருந்தது.

படகின் மேற்பரப்பையும், படிக்கட்டின் மேற்பரப்பையும் ஒரு கனமான பலகை இணைத்திருந்தது. பாலம் போலிருந்த அந்தப் பலகை மூலமாக நெல் மூட்டைகள் ஒவ்வொன்றாகப் படகுக்குள் போய்க் கொண்டிருந்தது.

உண்ணிக்கிருஷ்ணன் படகை நெருங்கினான். அங்கிருந்தவர்கள் அவனை வியப்புடன் கவனித்தனர்.

பாழடைந்த பனங்காட்டு மனையைப் பற்றியும், அந்த வீட்டில் மீதமாக உள்ள ஊமையும் செவிடுமான உண்ணிக்கிருஷ்ணனையும் அங்கிருந்த எல்லோருக்கும் நன்றாகவே தெரியும்.

ஊனமுற்ற ஒருவனானதால், அவனால் எந்த விதமான பிரயோஜனமும் இல்லாததால், ஊரிலுள்ளவர்களுக்கு அவன் மீது ஒரு விதமான பரிதாபமும் இருந்தது.



பனங்காட்டுமனையின் சொத்துகள் புவனேஸ்வரன் நாயரைப் போன்றவர்களின் கைவசம் இருப்பது தெரிந்தாலும் பொதுவாக ஊருக்குள் யாரும் அதைப் பற்றி ஒருபோதும் பேசிக் கொள்வதில்லை.

"மத்தாயிங்கறவர் யார்?" படகின் அருகே நின்றிருந்த ஏழத்தாழ நாற்பத்தைந்து வயது மதிக்கத்தக்க ஒருவரிடம் உண்ணி கேட்டான்.

அவன் கேள்வி கேட்ட நபர், அந்த நூறு ஏக்கர் நிலத்தின் விவசாயத்தையும் மேற்பார்வையிட்டு நடத்திய வர்க்கி.

உண்ணியின் கேள்வி வெளியே வந்து விழுந்ததும் வர்க்கியின் தலைசுழல்வது போல் தோன்றியது. சட்டென்று விழாமல் இருப்பதற்காக அவன் நின்றிருந்த இடத்தின் அருகே வளர்ந்திருந்த தென்னை மரத்தின் மீது கைகளை ஊன்றிப் பதித்தான்.

உண்ணியின் வாயிலிருந்து வந்த பேச்சுதான் அவனை அப்படி ஆச்சரியப்பட வைத்தது!

"நான் சொன்னது புரியலையா... கேட்கலையா? மத்தாயிங்கிறவர் யார்?" இம்முறை அவன் குரல் சற்று உயர்ந்து ஒலித்தது.

தென்னை மரத்தின் மீது சாய்ந்தபடி இருந்த வர்க்கி சட்டென்று தலையைச் சிலிர்த்துக்கொண்டு தென்னை மரத்தின் பின்புறமிருந்த ஓலைக் குடிசையை நோக்கி ஓடினான்.

அது ஒரு கள்ளுக்கடை. மாதவன்குட்டியும், சங்கரன்குட்டியும் அப்போது அதற்குள் அமர்ந்து கள் குடித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு அருகிலேயே மத்தாயியும் உட்கார்ந்திருந்தான்.

மத்தாயியும் ஆஜானுபாகுவான ஒரு மனிதன்தான். உயரம் மட்டும் கொஞ்சம் குறைவு.

நெஞ்சுப் பகுதியில் கயிற்றுமெத்தை போட்டது போல் ரோமம் அடர்ந்து வளர்ந்திருந்தது. அதன் கீழ்ப்பகுதியில் பானை போன்ற தொப்பையும் அதில் துருத்தாமல் இருந்த தொப்புளும் தெரிந்தன.

"வந்திருக்கிற வர்க்கிக்கும் ஒரு பாட்டில் குடுப்பா!" மாதவன்குட்டி, கள்ளுக்கடையின் நிர்வாகியும் ஊழியருமான நடுத்தர வயது மனிதரிடம் கூறினான்.

அவர் உடனே ஒரு பாட்டிலை எடுத்து வர்க்கியிடம் கொடுத்தார். அதைக் கையில் வாங்கிய வர்க்கி, அப்படியே தன் வாய்க்குள் கவிழ்த்தான்.

“என்ன வர்க்கி, இப்படி வாயிலேர்ந்து எடுக்காமலே ஊத்திக்கிறே. எதையோ பார்த்து பயந்து மிரண்டவனை மாதிரி?”

“உண்மைதான். அந்த நம்பூதிரித்தம்பி வாயைத் திறந்து என்னமாப் பேசுறாரு தெரியுமா?”

“என்ன பேசினான்... எங்கே பேசினான்?”

“நாம நெல் ஏத்துற படகுத்துறையிலதான் நின்னுட்டிருக்கார். கேட்ட கேள்வி ‘மத்தாயிங்கிறவர் யார்’ன்னுதான்!”

“கடவுளே... இது என்ன அதிசயம்?” மாதவன்குட்டி கிளாஸி லிருந்த மொத்தக் கள்ளையும் ஒரே இழுப்பில் தொண்டைக்குள் இறக்கியபடி கேட்டான்.

மாதவன்குட்டியுடன், சங்கரன்குட்டியும் நடக்கத் தொடங்கினான்.

முகச்சவரம் செய்து அழகான வாலிபனாக நின்று கொண் டிருக்கும் உண்ணியை அவர்கள் தூரத்திலேயே கவனித்தனர். வெள்ளைச்சட்டை, கறுப்புக் கரை போட்ட வெள்ளை வேட்டி அணிந்திருந்தான். நெற்றியில் விழுந்திருந்த முடியை ஒதுக்கிவிடாமல் அலட்சியத்துடன் நெல்லை ஏற்றிக் கொண்டிருக்கும் படகையே பார்த்துக் கொண்டிருந்தான். உண்ணியின் தோற்றமும், செயலும் மாதவனையும், சங்கரனையும் அசர அடித்தது என்னவோ உண்மை!

“எதுக்காக மத்தாயியைத் தேடுறே?” வர்க்கி சொன்னது சரிதானா என்பதை அறிந்துகொள்ளும் ஆவலுடன் மாதவன்குட்டி கேட்டான்.

“நீங்க யாரு இதையெல்லாம் கேட்க? நான் பார்க்க வேண்டிய நபர் மத்தாயிதான்!”

“அவர் முக்கியமான ஒரு வேலையில இருக்கிறார். விஷயம் என்னன்னு சொன்னா கூட்டிட்டு வர்றோம்.”

“யார்கிட்டக் கேட்டு இந்த நெல்லை அவர் படகில் ஏத்திட்டுப் போறார்னு தெரியணும்!” உண்ணி தைரியத்துடன் பேசினான்.



அவன் பேச்சைக் கேட்டவர்கள் ஒருவரை ஒருவர் ஒரு கணம் பார்த்து, வாய்விட்டுச் சிரிக்கத் தொடங்கினார்கள். அந்தச் சிரிப்பு நிறுத்த முடியாத ஒரு சிரிப்பாக மாறியது.

“எதுக்காகச் சிரிக்கிறீங்க நீங்கள்லாம்? இந்த வயல் பூராவும் என்னோடது. இதோ இந்த நெல்லும் எனக்கு சொந்தமானது!”

“ஆகா... பேச வாய் வந்த பிறகு ரொம்ப நல்லாவே வேடிக்கை பண்றீங்களே, பரவாயில்லையே!”

“நான் பேசுறது வேடிக்கையெல்லாம் கிடையாது, விஷய மாத்தான்!”

“அப்படின்னா சொல்லித் தர்றேன். பனங்காட்டு நாராயணன் நம்பூதிரி. அதாவது உங்க தாய்மாமா, என் அத்தைக்கு எழுதிக் கொடுத்த சொத்து அது!”

“இந்த சொத்துக்குச் சொந்தக்காரரான உங்க அத்தை இப்போ உயிரோட இருக்காங்களா?”

“இந்தாப்பா உண்ணி, வீணா பிரச்சினையைக் கிளப்பாதே. எங்களுக்கு நிறைய வேலையிருக்கு.”

“இப்படியெல்லாம் பேசிட்டா எல்லாம் சரியாயிடுமா? நான் மத்தாயியை உடனடியாகப் பார்த்தாகணும். இந்த நெல்லுக்கான பணத்தையும் வாங்கியாகணும்!”

அதற்குள் அக்கம்பக்கத்தில் வேலை செய்து கொண்டிருந்த சிலர், அவர்களுக்குச் சுற்றிலும் சூழத் தொடங்கினர். படகில் நெல் மூட்டை ஏற்றுவதை வேடிக்கை பார்க்க வந்தவர்கள்தான் அவர்களில் பெரும்பாலானவர்கள்.

ஊராருக்கு முன்னால் அசிங்கப் படக்கூடாது என்பதற்காக, மாதவன்குட்டி பேசினான்: “நான் வீட்டுக்குப்போய், அப்பாகிட்டே இருந்து பத்திரத்தை வாங்கிட்டு வந்து காட்டட்டுமா?”

பிறகு எந்த விதமான பதிலையும் கேட்கத் தயாராக இல்லாத ஒருவனைப் போல் மாதவன் குட்டி தனது வீட்டை நோக்கி ஓடத் தொடங்கினான்.

அவன் வீட்டுக்கு வந்தபோது புவனேஸ்வரன் நாயர், வீரராகவன் பிள்ளையுடன் பேசிக் கொண்டிருந்தார். எப்போதோ ஒரு காலத்தில் வாங்கியிருந்த தேங்காய்க்கடனை இப்போது அடைக்க நேர்ந்த அனுபவத்தைப் பற்றிப் புலம்பிவிட்டுப் போவதற்காக வந்திருந்தார் பிள்ளை.

“என்ன மாதவா, இவ்வளவு சீக்கிரமா வந்துட்டே? நெல்லெல்லாம் படகுல ஏத்தியாச்சா என்ன?”

“பனங்காட்டு உண்ணி பேசுறாருப்பா!”

“அதைப் பத்தித்தான் நாங்களும் பேசிக்கிட்டிருந்தோம். சரி, அதுக்கு இப்ப என்ன, ஏதாவது பிரச்சினையா?”

“ஆமாம்பா, நெல்லு அவருதாம்!”

“என்ன!” புவனேஸ்வரன் நாயர் திடுக்கிட்டார்.

விளக்குக்கு அருகிலிருந்த அந்தப் பத்திரம் எரியும் காட்சி மறுபடி அவர் கண்களுக்கு முன்னால் தெளிவாகத் தெரிந்தது.

“மாதவா, நீ உள்ளே வா. ஒரு முக்கியமான விஷயம்.” புவனேஸ்வரன் நாயர், மகனை வீட்டுக்குள் அழைத்துப் போனார்.

பூஜையறை வாசலில் நிலவிளக்கு எரிந்து கொண்டிருந்தது. அப்போது வெளியே உட்கார்ந்திருந்த வீரராகவன்பிள்ளை ஒரு காட்சியைக் கண்டு திடுக்கிட்டார்.

விளக்குக்கு முன்னால் ஒரு பெண் உருவம் தட்டுப்பட்டது. அது தலையிலிருந்து மேற்புறமாக உயர்வது போலத் தோன்றியது. பிள்ளையை ஒரு தடவை பார்த்துவிட்டு புகைப்படலம் மாதிரி அந்த உருவம் வீட்டுக்குள் நுழைவதை அவர் கவனிக்கவே செய்தார்.

அவளின் வலது கை மணிக்கட்டுப் பகுதியில் சிவப்பு, வெள்ளைக் கற்கள் பதித்த கனமான காப்பு ஒன்று கிடந்தது.

காப்பு அணிந்திருந்த அந்தக் கைப்பகுதியைப் பார்த்ததும் பிள்ளையின் உடம்பு குப்பென்று வியர்த்தது. அன்று தன் வீட்டு பீரோவிலிருந்து பணத்தை எடுத்துத் தன்னிடமே நீட்டிய கை!



சற்று நேரத்தில் மாதவன்குட்டி அவசர அவசரமாக வாசலைக் கடந்து வெளியே போனான்.

புவனேஸ்வரன் நாயர் மறுபடி திண்ணைக்கு வந்தபோது, பிள்ளை சுயநினைவிழந்து விட்டவரைப் போல் அசைவற்று உட்கார்ந்திருந்தார்.

“என்ன பிள்ளை... என்ன ஆச்சு? ஏன் என்னமோ போல இருக்குறீங்க?”

“இல்லை... இப்போ யாராவது உங்க பின்னாடியே வீட்டுக்குள்ளே நுழைஞ்சதைப் பார்த்தீங்களா?” பிள்ளை கேட்டார்.

“இல்லையே...”

“யாரோ ஒரு பொண்ணு வீட்டுக்குள்ள நுழைஞ்ச மாதிரி இருந்தது.”

“அப்படியா... இதோ வந்திடுறேன்.” புவனேஸ்வரன் நாயர் மறுபடி வீட்டுக்குள் போனார்.

உள்கூடத்தில் அவரின் இரண்டாவது மனைவி அமர்ந்திருந்தாள்.

“யாராவது இப்போ இங்கே வந்தாங்களா?”

“இல்லையே... ரொம்ப நேரமா நான் இங்கேயேதான் உட்கார்ந்திருக்கேன். நீங்க சொல்ற மாதிரி யாரையுமே பார்க்கலையே!”

அதே நேரம் திண்ணையை நோக்கியிருந்த கதவு, யாரோ இழுத்து மூடியதைப் போல் கரகரவென்ற சத்தத்துடன் சட்டென்று மூடிக் கொண்டது.

புவனேஸ்வரன் நாயர் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்த போது வீரராகவன் பிள்ளை பயத்தால் நடுங்கியபடி அமர்ந்திருந்தார்.

“இப்போ நீங்க வர்றதுக்கு முன்னாலதான் அவள் வெளியேறினாள். அப்போதான் கதவு அடைபட்டது. நீங்க திறந்துட்டு வர்றீங்க” பிள்ளை பயம் விலகாத குரலில் பேசினார்.

‘ஓகோ... ஒருத்தி கிடந்து நம்மளை இப்படி அல்லாட வைக்கிறாளா? அவளை நான் பார்த்துக்கிறேன்.” புவனேஸ்வரன் சரஸ்வதிதான் இப்படி நடந்து கொள்கிறாள்’ என்று நினைத்தார்.

மாதவன்குட்டி படகுத் துறையை அடைந்தான். நேராக மத்தாயியிடம் வந்தவன் விஷயத்தைக் காதும் காதும் வைத்த மாதிரி சொன்னாள்.

அதற்குள் மொத்த நெல் மூட்டைகளையும் படகில் ஏற்றி விட்டிருந்தனர்.

மத்தாயி நேராக உண்ணிக்கிருஷ்ணனிடம் வந்தான்.

"நான்தான் மத்தாயி. என்னால உங்களுக்கு என்ன ஆகணும்?"

"இந்த மொத்த வயலும் எங்களுக்கு சொந்தமானது. அதாவது எங்களோட நிலத்துல விளையுற நெல்லை எங்களைக் கேட்காமலே புவனேஸ்வரன் நாயர் விற்பனை செய்யுறார். அதனால, இதுக்கான பணம் உடனடியாக எனக்கு வந்து சேரணும்!"

"அதுக்கென்ன... தாராளமா செஞ்சுடலாம். இதை நீங்க என்கிட்ட முன்னேயே சொல்லியிருக்கலாமே."

"உங்களைத்தான் தேடி வந்தேன். ஆனால், உடனே பார்க்க முடியலை."

" அப்போ நீங்க ஒரு வேலை செய்யணுமே?"

"என்ன பண்ணணும்... சொல்லுங்க!"

"நெல்லுக்கான பணத்தை நாங்க பட்டணத்துக்குப் போன பிறகுதான் வாங்குவோம். எங்க கூடவே வந்தா, அதை வாங்கி, அங்கேயே உங்ககிட்டக் கொடுத்துடுறேன்."

"சம்மதிக்கிறேன். நான் இல்லத்துக்குப் போய்த் திரும்பி வர்ற வரைக்கும் கொஞ்சம் காத்திருங்க. உடனே வந்துடுறேன்."

"அதுக்கென்ன, நீங்க வர்ற வரைக்கும் காத்திருந்தாப் போகுது."

மத்தாயி தனது திட்டத்தை மாற்றிக் கொண்டான்.

உண்ணி உடனே பனங்காட்டு மனைக்குத் திரும்பினான்.

அவன், அவளிடம் அங்கு நடந்ததையெல்லாம் விளக்க முற்படுவதற்குள் அவளே அவனுக்குப் பதில் கொடுத்தாள்: "நீங்க அவங்க கூடவே போகலாம், எந்தப் பிரச்சினையும் வராது!"



"பட்டணத்துக்குப் போன பிறகுதான் பணம் கிடைக்குமாம்."

"அப்படியே தரட்டும்... வாங்கிக்கலாம்."

உண்ணி அதற்கு மேலும் நேரத்தைக் கடத்தாமல் உடனே படகுத்துறையை நோக்கி வந்தான்.

அந்தப் படகில் உட்கார்ந்து ஓய்வெடுக்கவும், படுத்துக் கொள்ளவும்கூட வசதி இருந்தது. உண்ணிக்கு ஒரு பாய் போட்டு அதற்குள் உட்கார வைத்தார்கள்.

படகு ஆற்று நீரில் நகரத் தொடங்கியது.

வாய்க்கால் ஒன்றைக் கடந்து படகு பெரிய ஏரி ஒன்றில் நுழைந்தது.

நிர்மலமான ஆகாயம், ஒரு சின்னஞ்சிறிய நட்சத்திரத்தைக் கூட மறைக்காமல் தெளிவாகக் காட்டிக் கொண்டிருந்தது.

சற்று நேரத்துக்குள் ஒரு பாட்டில் கள் மற்றும், வறுத்தமீன் துண்டுகள் இரண்டுடனும் படகின் ஓரப் பகுதிக்கு வந்த மாதவன், மத்தாயியை அழைத்தான்.

"அப்படின்னா முதல்ல நாம இதைச் சரி பண்ணணும். அப்புறம்தான் மத்ததெல்லாம். என்ன சொல்றே!" மாதவன்குட்டி, மத்தாயியிடம் கேட்டான்.

"அப்படியே செஞ்சுடலாம். முதல்ல ருசி பார்த்துட்டு அந்த பாட்டிலை இப்படி என் கையில கொடுங்க."

மாதவன் கள் நிறைந்த பாட்டிலை வாயில் கவிழ்த்து மூன்றிலொரு பங்கைக் காலி செய்த பிறகு அவனிடம் நீட்டினான். மற்றொரு கை அதை வாங்கிக் கொண்டதும் மாதவன் வறுத்த மீன் துண்டைச் சுவைக்கத் தொடங்கினான்.

மத்தாயியும் தன்னுடைய பங்கை எடுத்துக் கொண்டான். எல்லாவற்றையும் முடித்துக்கொண்டு கைகளைத் தட்டி உதறிவிட்டு அந்தவன் பெரிய கோணி ஒன்றைக் கையில் எடுத்துக் கொண்டான். புளிக்குட்டி, வாசுதேவன் ஆகிய இருவரையும் பெயர் சொல்லி

அழைத்தான், நெல்மூட்டைகளின் நடுவே இருந்து அவர்கள் இருவரும் எழுந்து வந்தனர்.

உண்ணிக்கிருஷ்ணன் தலைமீது சட்டென்று கோணி ஒன்று வந்து விழுந்தது. கண்மூடித் திறப்பதற்குள் உண்ணி சாக்கு மூட்டைக்குள் கட்டப்பட்டான். ஏரியின் ஆழமான பகுதியை அடைந்திருந்தது படகு. அந்தக் கோணி மூட்டையை ஆற்றில் எறிந்துவிட்டுப் பயணத்தைத் தொடர்ந்தது படகு.

மாதவனும், மத்தாயியும் மீண்டும் கள் குடிப்பதற்காக படகின் முனைக்கு வந்தனர்.

ஒரு வாய்க் கள்ளைச் சுவைத்த மாதவன்குட்டி சொன்னான்- "அப்பாடா... ஒரு தொல்லை தீர்ந்துடுச்சு!"

அடுத்த விநாடி படகு பேயாட்டம் ஆடியது!

படகின் முன்புறம். சற்றுத் தொலைவில் ஒரு சுழல் ஆரம்பமாவது போல் தெரிந்தது. கண்ணுக்கு முன்பாகவே அந்தச் சுழல் விநாடிக்கு விநாடி பெரிதாகத் தொடங்கியது.

சட்டென்று பூதாகாரமான பெண் உருவம் ஒன்று நீரைக் கிழித்துக்கொண்டு மேற்புறமாக உயர்ந்தது.

மாதவனும் மத்தாயியும் பயந்து நடுங்கியவர்களாக அந்த உருவத்தைக் கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தனர்.

ஏறத்தாழ ஆறு ஆள் உயரத்துடனிருந்தாள் அவள். அவிழ்த்துப் போட்ட தலைமுடியுடன், மார்புவரை மறைக்கப்பட்ட கச்சையுடன் தென்பட்டாள்.

அவளின் வலது கையில் ஒரு கோணிமூட்டை இருந்தது.

பிரமாண்டமான அந்த உருவம் தன் பீமாகாரமான வலது காலை உயர்த்திப் படகின் முனையை நீருக்குள் அமிழ்த்தத் தொடங்கியது.

அந்த உருவம் ஏரியின் ஆழப்பரப்பிலிருந்து உயர்ந்தபோது அதற்குச் சுற்றிலும் எழுந்த தண்ணீர் அருவி கொட்டுவதுபோல் நான்கு புறமும் பரவித் தெறித்தது. அதனால் எழுந்த அலையால் படகு



தள்ளாடியதுடன் படகுக்குள்ளும் தண்ணீர் ஏராளமாகப் புகுந்து கொண்டது.

பெரிய கப்பல் ஒன்று, மிகப் பெரிய ஒரு பனி மலையின் மீது மோதியதைப் போல் அந்தப் படகு ஏரி நீரில் தள்ளாடியது.

இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் அந்தப் பிரமாண்டமான உருவத்தின் பாதம், படகின் ஒரு முனையில் பதிந்து அழுத்தவும் செய்தது.

ஒரு சிறிய காகிதக் கப்பலை, ஒரு குழந்தை தனது சுட்டுவிரல் முனையால் அமிழ்த்துவது போல் அந்தப் பெரும்படகு முன்புறமாக அமிழத் தொடங்கியது.

மத்தாயி சட்டென்று திரும்பிப் பார்த்தபோது படகின் மறுமுனை ஆகாயத்தை நோக்கி உயர்ந்து கொண்டிருந்தது.

முன் எப்போதோ ஏரிப் பகுதியில் தாத்தா படகு ஓட்டிச் சென்றபோது சுடலை, ஆனைமருது போன்ற துர்தேவதைகளைப் பார்த்ததாகச் சொன்னதும், அவர்கள் செய்ததாகச் சொன்ன பயங்கரங்களும் அப்போது மத்தாயியின் நினைவில் எழுந்தன!

## 7

பனை மர உயரக் கால்கள் கொண்ட ஆனை மருதுகள் சரக்கு நிறைந்த படகுகள் பயணம் செய்யும் கால்வாயின் இரு கரைகளிலும் இரண்டு கால்களையும் அகல விரித்தபடி நிற்குமாம். படகு அதன் நேர்கீழாக நெருங்கும்போது இரண்டு கால்களாலும் நெருக்கத் தொடங்குமாம். எவ்வளவு பெரிய சரக்குப் படகாக இருந்தாலும் பழைய பனையோலைக் கூடை மாதிரி படகு தூள் தூளாக நொறுங்கி விடுமாம்!

படகின் நிலவரம் மிகவும் கலவரத்துக்கு உரியதாக இருந்தது. படகிலிருந்து வெளியே குதித்து விடலாம் என்று ஒரு சிலர் நினைத்தாலும் ஒரு காலை நீர்ப்பரப்பிலும் மறுகாலை படகிலும் வைத்திருக்கும் பிரமாண்ட உருவத்தைப் பார்த்ததும், தண்ணீரில் குதிப்பதைவிட குதிக்காமல் இருப்பதே நல்லதென்று கருதி, தங்களின் உயிர் தப்பிக்கும் நினைவையே கைவிட்டனர்.

அது மட்டுமின்றி, அந்த சமயத்தில் படகைச் சுற்றி ஒரே தண்ணீர் மயமாக இருந்ததுடன், கரை எந்தப் பக்கமிருக்கிறது என்பதுகூடத் தெரியவில்லை. மட்டுமின்றி, விநாடிக்கு விநாடி படகும் நீருக்குள் அமிழ்ந்து கொண்டிருந்தது.

நீர்மட்டத்துக்குக் கீழே படகு மூழ்கியதும் படகிலிருந்து வெளியே குதிக்க விரும்பியவர்களின் கால்களை யாரோ கெட்டியாகப் பிடித்துக் கீழ்நோக்கி இழுப்பது போல் உணர்ந்தனர். எனவே, படகிலிருந்து யாரும் தப்பிப்பது இயலாத விஷயமானது.

விநாடிக்கு விநாடி நீருக்குள் அமிழ்ந்து கொண்டிருந்த படகில் மூக்களவு நீரில் நின்று கொண்டிருந்த மத்தாயியும் மாதவனும் ஒரு காட்சியைக் கண்டனர்.

அவர்களுக்கு முன்பாக ஒரு பனைமர உயரத்தில் நெடுநெடுவென வளர்ந்திருந்த அந்தப் பெண்ணுருவம், படிப்படியாகச் சிறியதாக மாறிக் கொண்டிருந்தது. விரைவிலேயே அது அழகான ஓர் இளம் பெண்ணாக மாறியது. அவளுக்கு அருகில் உண்ணிக்கிருஷ்ணன் நின்று கொண்டிருந்தான்.

அவள் கையிலிருந்த கோணிப்பை யாரோ ஏவி விட்டதைப் போல் பறந்துவந்து மாதவனின் உடலை முழுவதுமாக மூடியது. அவன் அந்த நிலையிலேயே தண்ணீருக்குள் அமிழவும் செய்தான்.

அப்போது மற்றோர் அதிசயமும் நிகழ்ந்தது.

நீரில் மூழ்கிக்கொண்டிருந்த புலிக்குட்டிக்கு முன்பாக மிகவும் பெரிதான வாழையிலை ஒன்று பறந்து வந்தது. தண்ணீரில் தத்தளிப்பவனுக்கு வைக்கோல் துண்டும் நம்பிக்கை அளிக்கும் என்பதற்கொப்ப புலிக்குட்டி அதைப் பிடித்துக் கொண்டான். அந்த இலை அவனுடன் சேர்ந்து மூழ்காமல் நீரின் மேற்பரப்பிலேயே மிதந்தது. நீருக்குள் அமிழவில்லை என்பது தெரிந்தவுடன் புலிக்குட்டி அதன் மீது ஏறிக் கவிழ்ந்து படுத்துக் கொண்டான். களைத்துப் போயிருந்த புலிக்குட்டி கண்விழித்துப் பார்த்தபோது, தான் கரையில் ஒதுங்கிக் கிடப்பதை உணர்ந்தான். விழித்தவன் பயத்துடன் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு அருகிலிருந்த கருங்கல் சுவரை ஒட்டி ஓடத் தொடங்கினான். அப்போது யாரோ அவனைப் பின்தொடர்வ



தாகத் தோன்றியது. கண்மண் தெரியாமல் ஓடியவன் ஏறத்தாழக் கருக்கிருட்டு வேளையில் தங்களது படகைப் பிணைத்திருந்த படகுத்துறைக்கு வந்து சேர்ந்தான்.

இடத்தை நிதானப்படுத்திக் கொண்டவன் அங்கிருந்து நேராகத் தனது வீட்டைநோக்கிப் பறந்தான்.

முந்தைய இரவில் நடந்த நம்ப முடியாத சம்பவத்துக்குப் பிறகு வீட்டிலிருந்து வெளியேறவே அவன் பயந்தான்

மதிய நேரமானபோது அவன் மனைவி கல்யாணி அவனை எழுப்பினாள்.

"என்னங்க இப்படியொரு தூக்கம்... எழுந்திருங்க."

"யாராவது என்னைத் தேடி வந்தாங்களா?" புலிக்குட்டி பயத்துடன் கேட்டான்.

"வந்திருந்தாங்க."

"எங்கேருந்து? பெரிய வீட்டிலிருந்தா?"

"நீங்க எங்கேயோ கரையேறினீங்களாமே, அங்கேருந்து வந்ததாச் சொன்னாங்க."

"வேற என்ன சொன்னாங்க?"

"ஒண்ணும் சொல்லலை. ஊர் நிலைமையே சரியில்லை. ஒரே குழப்பமா இருக்குது. நெல்மூட்டைகளை ஏத்திட்டுப் போன படகு தண்ணியில மூழ்கி எல்லோரும் செத்துப் போயிட்டாங்களாம்."

"அவ்வளவுதானா?"

"நீங்களும் அந்தப் படகில் போனதா சிலர் சொல்றாங்க... அது உண்மையா?"

"அதெல்லாம் கிடையாது. நான் நேத்து எங்கேயும் போகலை. இட்டமா உட்கார்ந்து சீட்டு விளையாடிக் கிட்டிருந்தோம்!" சட்டென்று இப்படியொரு பொய் சொல்லித் திருப்திப்பட்டுக் கொண்டான். உண்மையில் நடந்ததையெல்லாம் சொன்னால் அவள் நம்பிவிடப்

போகிறாளா என்ன? அவள் மட்டுமல்ல, யாருமே நம்பப் போவதில்லை!"

படுக்கையிலிருந்து எழுந்த புலிக்குட்டி நேராக படகுத் துறைக்கு அருகிலிருந்த கள்ளுக் கடைக்குப் போனான். இரண்டு பாட்டில் கள்ளை உள்ளுக்குள் இறக்கியதுபோது சற்றுத் தைரியம் வந்தாற் போலிருந்தது.

நேராகப் பெரிய வீட்டைநோக்கி நடந்தான். வீட்டை நெருங்கியதுமே வீட்டுக்கு முன்னால் ஆட்கள் கூட்டமாக நின்று கொண்டிருப்பது தெரிந்தது. எல்லோரும் துயரம் நிறைந்த முகத்துடன் தென்பட்டனர்.

"இதோ புலிக்குட்டி வந்தாச்சு. அவன்கிட்ட கேட்டா விஷயம் தெரிஞ்சுடும்!" புவனேஸ்வரன் நாயர் சொல்வது கேட்டது.

அவன் தயங்கித் தயங்கி நடந்தான்.

எல்லோரின் கண்களும் அவன் மீதே பதிந்திருந்தன. புலிக்குட்டி மனத்துள் ஒருவிதத் தவிப்பை உணர்ந்தான்.

"நேத்து நீ படகில போயிருந்தியா?" நாயர் கேட்டார்.

அங்கிருந்த ஒவ்வொருவரின் முகத்தையும் ஊன்றிக் கவனித்த புலிக்குட்டி பதிலளித்தான்: "இல்லையே..."

"நேத்து உன்னைப் படகுக்கு வரச் சொல்லி இருந்தாங்களா?"

"கூப்பிட்டிருந்தாங்க. அப்புறம் எதனாலயோ வேண்டாம்னு சொன்னாங்க."

"வாசு படகில் இருந்தானா?"

"எனக்குத் தெரியாதே!"

மிகவும் களைப்பு அடைந்திருந்த புலிக்குட்டி சிறு திண்ணையில் அமர்ந்தான்.

"எப்படியிருந்தாலும் நீங்க புறப்படுங்க. படகு எங்கே இருக்குன்னு முதல்ல கண்டுபிடிங்க. ஒருவேளை, அவங்க திடீர்னு



திட்டத்தை மாத்திக்கிட்டு கொச்சிப் பக்கம் போயிட்டாங்களோ என்னவோ? என்ன, ஏதுன்னு நமக்கு விஷயம் தெரிஞ்சாகணும். வழக்கம் போல ஆலப்புழை நகருக்கே போயிருந்தா இந்நேரம் திரும்பி வந்திருக்கணுமே!" நாயர் அவர்களுக்கு ஆறுதல் கூறினார்.

அங்கு நின்றிருந்த மொத்தப் பேரும் கலைந்து போனார்கள். புலிக்குட்டி மட்டும் கிளம்பவில்லை.

"டேய் ராமுண்ணி, இங்கே வா" புவனேஸ்வரன் நாயர் அழைத்தார்.

வீட்டின் பின்புறத்திலிருந்து ஓடி வந்தான் ராமுண்ணி.

"நீயொரு வேலை செய்."

எதைப் பற்றிப் பேசுகிறார் என்பதைத் தெரிந்து கொள்வதற்காகக் காதைக் கூர்மையாக்கிக் கவனத்தைத் திருப்பினான் புலிக்குட்டி.

"நீ எப்படியாவது தந்திரமா பனங்காட்டுமனைக்குப் போகணும்."

"போறேன்."

"என்னத்துக்குன்னு தெரியாம சும்மா அங்கே போயிட்டு நிற்றதுல என்ன அர்த்தம்?"

அவன் திரும்பி நின்றான்.

"அங்கே போய் அந்தக் கிறுக்குப்பையன் நம்பூதிரி உயிரோட இருக்கிறானான்னு பார்த்துட்டு வா!"

"அவரு இப்போ நல்லாப் பேசுறதா ஊர்ல சொன்னாங்க."

"இருந்தாலும் ஊமைச்செவிடு, ஊமைச்செவிடுதானே?"

"இருந்தார்னா அவரைக் கூட்டிட்டு வரணுமுங்களா?"

"அவன் அங்கே இருக்கிறானான்னு விஷயம் தெரிஞ்சுட்டு வந்தாப் போதும்."

உத்தரவைப் புரிந்து கொண்டதற்கு அடையாளமாக அங்கிருந்து நகர்ந்து மறைந்தான் ராமுண்ணி.

புவனேஸ்வரன் திண்ணையைப் பார்த்துத் திரும்பினார். புலிக்குட்டி அப்போதும் தலை குனிந்தபடி அமர்ந்திருந்தான்.

“என்ன, நீ கிளம்பலையா?”

“கிளம்பணும்” தலையைச் சாய்த்தபடி திரும்பினான்.

“உன் முழியைப் பார்த்தா சரியில்லையே. ஆடு திருடினவன் மாதிரி முழிக்கிறியே... என்ன விஷயம்?”

“உங்ககிட்ட ஒரு விஷயத்தைச் சொல்லிட்டுத் தற்கொலை பண்ணிக்கலாம்னு தோணுது...” புலிக்குட்டி திக்கித்திணறிப் பேசினான்.

அவனது பேச்சைக் கேட்டதும் நாயருக்கு ஆச்சரியமும் சிரிப்பும் ஒரே நேரத்தில் தோன்றியது. புலிக்குட்டியிடமிருந்து இப்படியொரு பேச்சை அவர் இதுவரையில் கேட்டதில்லை.

“மனசில இருக்கிறதை வெளிப்படையாகச் சொல்லு. ஏதாவது பரிகாரம் செய்ய வேண்டியிருந்தா செஞ்சுடலாம்.”

“நான் சொல்றது உண்மை. நம்மளோட நெல் மூட்டைங்களும் படகும் மூழ்கிடுச்சு!”

“என்ன... என்ன சொன்ன... நிஜமாவா?” புவனேஸ்வரன் இருக்கையிலிருந்து துள்ளி எழுந்தார்.

“நான் சொன்னதெல்லாம் நிஜம்!”

“நீ உன் கண்ணால பார்த்தியா?”

“பார்த்தேன்.”

“நீயும் படகுல இருந்தியா?”

“இருந்தேன்.”

“அப்படின்னா என்னென்ன பார்த்தே? நடந்ததை நடந்தபடி விவரமாச் சொல்லு.”

“படகை ஒரு பெரிய பிசாசு காலாலேயே ஏரிக்குள்ள அமுக்கி மூழ்கடிச்சுது. படகில இருந்த எல்லோரும் அப்படியே தண்ணிக்குள்ள மூழ்கிட்டாங்க.”



“நீ மட்டும் எப்படித் தப்பிச்சே?”

“வாழையிலை ஒண்ணு அகப்பட்டுச்சு. அதைப் பிடிச்சிட்டு தப்பிச்சிட்டேன்.”

“என்னது, வாழையிலையா! ஏரிக்கு நடுவில எங்கேருந்து வாழையிலை கிடைக்கும்?”

“அதுதான் எனக்கும் தெரியலை. ஆகாயத்துலேர்ந்து பறந்து வந்து எனக்குநேரா விழுந்துச்சு. இப்ப வரைக்கும் அந்த என் ஆச்சரியம் தீரலை!”

“அதைப் பிடிச்சுக்கிட்டு நீ தப்பிச்சு வந்ததா வேற சொல்றே!”

“ஆமாங்க. பார்வைக்குத்தான் அது ஒரு வாழையிலை. உண்மையில அது ஒரு படகு மாதிரி ரொம்ப வலுவானதாக இருந்தது!”

புவனேஸ்வரன் நாயர் தீவிர யோசனையில் ஆழ்ந்தார். அவர் மனத்தில் பல்வேறு சிந்தனைகள் கிளைவிட்டுப் பிரிந்தன.

உண்ணிக்கிருஷ்ணனைக் கொல்வதற்காகக் கொண்டு போனது முதல் தொடங்கிய துர்நிமித்தங்கள்தான் இப்போது அவன் குற்றங்குறைகளை நீக்கி இப்படிப்பட்டதொரு நிலைமைக்கு ஆளாக்கியிருக்கிறது. அவன் திரும்பி வந்த பிறகு தானும் வீரராகவன் பிள்ளையும் ஆபத்தில் சிக்கிக் கொண்டிருக்கிறோம். மேற்கொண்டும் என்னவெல்லாம் நடக்கப் போகிறதோ?

பனங்காட்டுமனைக்கு சொந்தமான சொத்துகளை வேறு பலரும் இப்போதும் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது புவனேஸ்வரன் நாயருக்குத் தெரியும். ஆனால், அதில் பெரும்பான்மையான பகுதி இப்போதும் அவரிடம்தான் உள்ளது.

“நீ இப்போ சொன்னதெல்லாம் உண்மையா இருந்தால் பழைய பாட்டி கதைகள் எல்லாம் கற்பனையில்லை, உண்மைதான்னு அர்த்தம்!”

“அந்த நூறு ஏக்கர் வயல்காட்டிலயும் ஆனைமருது இருக்குதுங்க” புலிக்குட்டி கூறினான்.

“நானும் அதைக் கேள்விப்பட்டிருக்கேன்.”

இவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போதே பனங்காட்டுமனையை அடைந்துவிட்டிருந்தான் ராமுண்ணி.

இதற்குமுன் ராமுண்ணி அந்த வீட்டுக்குப் போனதே இல்லை. அதனாலேயே அந்த வீட்டின் சுற்றுச்சுவருக்குள் காலெடுத்து வைக்க அவன் தயங்கினான்.

தெருவாசல் கதவு மூடியிருந்தது. ஆனாலும் உட்புறம் தாழிடப் படாமல் இருந்ததால் ஒரு கதவு மட்டும் சற்று உள்வாங்கித் திறந்திருந்தது. அந்த இடைவெளி வழியாக அவன் உட்புறம் பார்த்தான்.

சற்றுக் குள்ளமான, இரட்டை நாடி உடம்புள்ள பெண்மணி ஒருத்தி அவனுக்கு முதுகு காட்டியபடி துளசிமாடத்தில் படிந்திருந்த பாசத்தைச் சுரண்டிக் கொண்டிருந்தாள்.

ராமுண்ணி ஒரு தடவை கனைத்தான். உடனே அந்தப் பெண்மணி திரும்பிப் பார்த்தாள்.

"தனலட்சுமி!" அவன் நாக்கு உச்சரித்தது. அவனுக்குப் பழக்கமானவள். தெருவாசற் கதவைத் திறந்தான்.

தனலட்சுமி திரும்பிப் பார்த்தாள். அவளுக்கு முப்பது வயதிருக் கலாம். பாஸ்கரன் நாயரின் மகள். ஒரு காலத்தில் நம்பூதிரிகளுடன் அவர்களுக்குத் தொடர்பிருந்தது. 'ம்... அதெல்லாம் ஒரு காலம்... நல்ல காலம். இப்போது எல்லாமே குன்றிவிட்டிருந்தது.'

தனலட்சுமி அழகி. நல்ல நிறம். வட்டமான முகம். தசைப் பிடிப்பான உடம்பு. ரவிக்கை மற்றும் இடுப்புத் துணிக்கு இடைப்பட்ட உடல் பகுதியில், சதைப்பகுதி திண்ணென்று எடுப்பாக மீறித் தெரிந்தது. மார்புகள் ரவிக்கைக்குள் அடங்கியதாகத் தெரியவில்லை.

"யார் ராமுண்ணி ஏட்டனா? வாங்க... வாங்க."

"நீ எப்படி இங்கே?"

"இப்ப இங்கேதான் வேலை செய்யறேன்."

"எவ்வளவு நாளா?"

"இந்த வீட்டுல சின்னம்மா வந்ததுலேர்ந்து."



"இந்த வீட்டுத் திருமேனி கல்யாணம் பண்ணிட்டாரா என்ன? அவர்தான் பேச முடியாத செவிடாச்சே?"

"மெதுவாப் பேசுங்க. அவரு காதுல கேட்டுடப் போகுது. இப்போ அவர் நல்லாப் பேசுறார். காதும் கேட்குது."

"நானும் அப்படித்தான் கேள்விப்பட்டேன். அவர் உன்கிட்ட ஏதாவது பேசியிருக்காரா?"

"அப்புறம்... பேசாம இருக்க முடியுமா? ரொம்பத் தெளிவாப் பேசுகிறார்."

அப்போது மந்தாகினி திண்ணைப் பகுதிக்கு வந்தாள்.

"யாரு... ராமுண்ணிதானே?"

"ஆமாங்க!"

"இந்த வீட்டுத் தம்புரான் இருக்காரான்னு பார்த்துட்டுப் போகத்தானே வந்தீங்க?"

ராமுண்ணியின் உடல் மொத்தமும் குப்பென்று வியர்த்தது.

"உண்ணியேட்டா (ஏட்டன், சேட்டன் என்பது தன்னைவிட வயது கூடியவரை அழைக்கும் மரியாதையான சொல். கொஞ்சம் இப்படி வந்துட்டுப் போங்களேன். ராமுண்ணி உங்களைப் பார்த்துட்டுப் போக வந்திருக்கிறார்!"

அவன் வந்த நோக்கத்தை அவனிடம் கேட்காமலே தம்புராட்டி புரிந்து கொண்டாள் என்பதை உணர்ந்து ஒரு கணம் விதிர்விதிர்த்துப் போன ராமுண்ணி நெளிந்தபடி நின்றான்.

உண்ணிக்கிருஷ்ணன் சிரித்தவாறே வீட்டுக்குள்ளிருந்து வெளிப்பட்டான்.

"ஆளைப் பார்த்துட்டீங்க இல்லையா... ம்... சீக்கிரமா கிளம்புங்க!"

அவளைப் பார்த்த கணத்திலேயே மந்தாகினியின் வார்த்தைகள் ராமுண்ணியின் காதில் பாய்ந்தன. ராமுண்ணி சட்டென்று திரும்பி நடக்கத் தொடங்கினான்.

ராமுண்ணியின் கால்கள் அவனது கட்டுப்பாட்டிலிருந்து விலகி முன்புறமாகத் தானாக நகர்வது போல் அவனுக்குத் தோன்றியது.

அப்போது தொடங்கிய ராமுண்ணியின் வேகநடை புவனேஸ்வரன் நாயரின் வீட்டை அடைந்த பிறகும் நிற்கவில்லை.

புவனேஸ்வரன் நாயர் வாசலில் உட்கார்ந்திருந்தார். அவரைப் பொருட்படுத்தாதவனைப் போல் ராமுண்ணிபாட்டுக்கு வீட்டுக்குள் நடந்து கொண்டே இருந்தான்.

"என்ன ராமுண்ணி... என்ன ஆச்சு?" என்றபடி புவனேஸ்வரன் நாயர் அவனைத் தொடர்ந்து வீட்டுக்குள் நுழைந்தார்.

புவனேஸ்வரன் நாயர் வீட்டுக்குள் நுழைந்ததும் மிகவும் விசித்திரமான ஒரு காட்சியைக் கண்டார்.

## 8

**ரா**முண்ணி வீட்டுக்குள் வந்த பின்னும் எங்கும் நிற்பதாகத் தெரியவில்லை. அவன்பாட்டுக்கு நடந்துகொண்டே இருந்தான்!

"டேய் ராமுண்ணி... நில்லுடா! உனக்கு என்ன ஆச்சு?" புவனேஸ்வரன் நாயர் ஆச்சரியத்துடன் கேட்டார்.

இம்முறையும் அவன் அதைக் காதில் வாங்கியதாகவே தெரியவில்லை. எதிரே தட்டுப்பட்ட கதவைத் திறக்க முயற்சி செய்து கொண்டிருந்தான்.

அவனது செயல்கள் வழக்கத்தைவிட மிகவும் வேகமானதாக இருந்தன.

அதே நேரம் நாயரின் தலைக்கு மேலாகப் பறந்து வந்த வௌவால் ஒன்று சட்டென்று தாழ்ந்து ராமுண்ணியின் காலைக் கவ்வியது.

ராமுண்ணி சட்டென்று நின்றான்.

அவன் காலை விட்டுவிட்டு மேல்நோக்கிப் பறந்த வௌவால் விரைவிலேயே வீட்டுக்குள்ளிருந்து வெளியேறி அவர்களின் பார்வையிலிருந்து மறைந்தது.



"ராமுண்ணிஓ" நாயர் இம்முறை சற்று உரக்கவே அழைத்தார்.

"என்ன முதலாளி!" அவன் அவரைத் திரும்பிப் பார்த்தான்.

தான் நடு வீட்டுக்குள் நின்று கொண்டிருக்கிறோம் என்ற உண்மை அவனுக்கு உறைத்தது. அப்பொழுதுதான் சுயநிலைக்கு வந்தவனைப் போல் திரும்பி ஓடி வீட்டுக்கு வெளியே வந்து நின்றான்.

வீட்டுக்குள் நுழைந்ததற்காக ஏதாவது தண்டனை கிடைக்குமோ என்று அவன் பயந்தான். இத்தனை வருடங்களில் அவன் இதுவரை அந்த வீட்டுக்குள் நுழைந்ததே இல்லை. அது முறையோ, மரியாதையானதோ அல்ல.

"ராமுண்ணி, நான் கேட்டதுக்கு நீ இன்னும் பதில் சொல்லலையே. நீ ஏன் எங்கேயும் நிற்காம ஓடினே? உனக்கு என்ன ஆச்சு, சொல்லு" புவனேஸ்வரன் நாயர் கேட்டார்.

"என்னை மன்னிச்சிடுங்க முதலாளி. இதுவரையிலும் என்ன நடந்ததுன்னே எனக்குத் தெரியலை" அவன் பயந்தபடி பதிலளித்தான்.

"நான் உன்னை மன்னிச்சுட்டேன். சரி, அதெல்லாம் போகட்டும்... நான் கேட்டதுக்கு நீ இன்னும் பதில் சொல்லலையே!"

"அந்த வீட்டுத் தம்புராட்டி, 'ம்... சீக்கிரமா கிளம்பு'ன்னாங்க... அவ்வளவுதான் தெரியும்."

"எந்த வீட்டுத் தம்புராட்டி?"

"பனங்காட்டு இல்லத்துத் தம்புராட்டி. நான் அங்கேதானே போயிருந்தேன்."

"ஆமாம், மறந்தே போயிட்டேன். அங்கே வேற யாரெல்லாம் இருந்தாங்க?" நாயர் ஆர்வத்துடன் கேட்டார்.

"சொல்றேன் முதலாளி, முதல்ல நான் கொஞ்சம் தண்ணி குடிச்சுக்கிறேன். ரொம்ப தாகமா இருக்கு" ராமுண்ணி சிறு திண்ணையில் சாய்ந்தபடி பேசினான்.

"கல்யாணி, கல்யாணி..." புவனேஸ்வரன் உட்புறத்தைப் பார்த்துக் குரல் கொடுத்தார்.

வேலைக்காரி வீட்டைச் சுற்றிக்கொண்டு ஓடி வந்தாள்.

“இவனுக்குக் கொஞ்சம் சம்பாரம் (நீர் மோர்) கொண்டு வா. கொஞ்சம் அதிகமாகவே எடுத்துட்டு வா” நாயர் வேலைக்காரியிடம் கூறினார்.

கல்யாணி ஒரு பெரிய சொம்பு நிறைய நீர்மோர் கொண்டு வந்தாள். உட்கார்ந்த நிலையில் அந்த வெண்கலச் சொம்பிலிருந்த மொத்த மோரையும் ஒரே மூச்சில் குடித்துத் தீர்த்தான். பிறகு உதடுகளைத் துடைத்து விட்டுக்கொண்டான்.

“சரி, இப்பச் சொல்லு... நீ அந்த ஊமையனைப் பார்த்தியா?” நாயர் கேட்டார்.

“பார்த்தேன்.”

“நீயே உன் கண்ணால பார்த்தியா?” செய்தியை உறுதி செய்து கொள்வதற்காகத் திரும்பவும் கேட்டார்.

“ஆமாங்க, என்னை எதுக்காகப் பார்க்க வந்திருக்கிறேன்னு கேட்டபடி வெளியே வந்தார். பார்வைக்கு இப்போ எப்படி இருக்கிறார் தெரியும்களா?”

“அந்த அளவுக்குக் கெட்டிக்காரனா?”

“அன்னிக்கு ஒருநாள் நம்ம லைப்ரரி கட்டடத்துல வரவேற்பு கொடுத்தோமே, அந்த ஆபீஸர் மாதிரி இருக்கிறார்.”

“யாரு, கலெக்டர் மாதிரின்னா சொல்றெ?”

“கிட்டத்தட்ட அந்த மாதிரிதான் இருக்கார். அவர்கூட இருக்கிற தம்புராட்டியும் அப்படியொரு அழகு. இன்னிக்கெல்லாம் பார்த்துட்டே இருக்கலாம்.”

“அவளும் நம்பூதிரிப் பெண்தானா?” நாயரின் கண்களில் ஏதோ ஒன்று மின்னியது.

“நீங்க கேட்கிறபடித்தானா இல்லையான்னு எனக்குச் சொல்லத் தெரியலை, அப்படித்தான்... என்ன ஒரு... என்னால தெளிவா எதுவும் சொல்ல முடியலை” ராமுண்ணியின் கண்களில் அப்போதும் மந்தாகினியின் உருவம் தெளிவாகத் தெரியவே செய்தது.



“ராமுண்ணி, அவளுக்கு என்ன வயசிருக்கும்னு தோணுது உனக்கு?”

“அதையும் தெளிவாச் சொல்ல முடியலை. யோசிச்சா பதினேழு வயசாகவும், பத்தொன்பதாகவும் தெரியுது. அதைவிட ஜாஸ்தியாகவும் இருக்கலாம். என்னைக்கூட அவங்களுக்கு ஏற்கெனவே தெரிஞ்சிருக்கு. என் பேரைச் சொல்லித்தான் கூப்பிட்டாங்க.”

“நிஜமாவா? அது எப்படி சாத்தியம்? ரொம்ப ஆச்சரியமா இருக்கே.”

“அது மட்டுமில்லீங்க... தம்புரான் இருக்காரான்னு பார்க்கத்தானே வந்திருக்கிறேன்னு கேட்டாங்க. அவங்களுக்கு இதெல்லாம் ஏற்கெனவே தெரிஞ்சிருக்கு போலிருக்கு.”

“சரி, அங்கே வேற யாரெல்லாம் இருந்தாங்க?”

“ஆமாம், அதைச் சொல்ல மறந்துட்டேன். நம்ம பாஸ்கரன் நாயரோட பொண்ணு தனலட்சுமி இல்லே... அவள் அங்கேதான் வேலை செய்யறாள். அவளும் இப்ப ரொம்ப நல்லா இருக்கிறாள்... சொன்னாள்னு.”

புவனேஸ்வரன் நாயரின் நெற்றி சுளிவடைந்தது. ஏதோ ஒரு புதிய திட்டம் வடிவம் கொண்டது போல் அவர் முகத்திலிருந்த உணர்வுகள் மாறிக்கொண்டே இருந்தன.

‘அப்படின்னா... என்ன ஏதுன்னு நமக்கு விஷயம் விளங்கலை. உண்மைதான், இருந்தாலும் ஒருவிதத்துல நாமதான் ஜெயிக்கப் போறோம்’ நாயர் மனத்துள் சிரித்துக் கொண்டார்.

“எதுக்குச் சிரிக்கிறீங்கன்னு புரியலை” ராமுண்ணி கேட்டான்.

“நீ போனதால நமக்கு லாபம்தான். தனலட்சுமியைப் பார்த்தே இல்லையா? அதுபோதும் எனக்குஓ” நாயர் திருப்தி அடைந்ததாகத் தோன்றியது.

தனலட்சுமி அங்கு இருப்பது வரையில் அங்கு என்ன நடந்தாலும் அதைத் தெரிந்து கொள்வதில் தனக்கு எந்தவித கஷ்டமும் இல்லை என்று அவர் நினைத்தார். அது இன்னொரு வகையில் அவருக்கு மகிழ்ச்சியளிக்கவும் செய்தது.

"ராமுண்ணி, நாளைக்கு பத்து மரைக்கால் நெல்லை தனலட்சுமி யின் அம்மாகிட்டக் கொடுத்துடு. நான் கொடுத்து அனுப்பிச்சதாவும் சொல்லிடு. அது போதும்ஒ" நாயர் சொன்னார்.

"நான் கொண்டுபோய்க் கொடுத்தாலே நீங்க கொடுத்து விட்டதுதான்னு புரிஞ்சுக்குவாங்களே."

"அதுலதான் நம்ம கொக்கியே இருக்கு. நெல்லைக் குடுத்துட்டு, நான் வரச்சொன்னதா அந்த அம்மா கிட்டச் சொல்லு."

மறுநாள் காலையிலேயே நாயர் சொன்னது போல் செய்தான் ராமுண்ணி.

அதுவரை வறுமையில் உழன்று கொண்டிருந்த கமலாட்சி யம்மாவுக்கு நெல்லைப் பார்த்ததும் தலைகால் புரியவில்லை. பெரிய வீட்டு நாயரைப் பற்றி ஏகத்துக்குப் புகழ்ந்து தள்ளிவிட்டாள்.

அங்கிருந்து கிளம்பும் நேரத்தில் ராமுண்ணி, கமலாட் சியம்மாவிடம் நாயரின் கோரிக்கையைச் சொல்லத் தவறவில்லை.

"நிஜமாவா சொல்றீங்க? பெரியவீட்டுக்குப் போய் ரொம்ப நாளாச்சு. ராமுண்ணி கொஞ்சம் காத்திருந்தா இந்த நெல்லை வீட்டுக்குள்ளே எடுத்து வெச்சிட்டு நானும் உன்கூடவே வந்துடுறேன்."

சொன்னபடியே சற்று நேரத்தில் கமலாட்சியம்மா ராமுண்ணியுடன் பெரிய வீட்டுக்குப் புறப்படவும் செய்தாள்.

தெருவாசற்படி தாண்டி கமலாட்சியம்மா கால் வைத்ததும் புவனேஸ்வரன் நாயர், அவளை வரவேற்றார்.

"வாங்க, வாங்க. பாத்து ரொம்ப நாளாச்சே, எப்படி இருக்குறீங்க? வேற என்ன விசேஷம்? உங்க பொண்ணு இப்பப் பெரியவளா யிருப்பாளே!"

இந்தப் பேச்சைக் கேட்டதுமே கமலாட்சியம்மாவின் மனம் குளிர்ந்து போனது.

"அவள் இப்போ பனங்காட்டு மனையில வேலை செய்யுறா. என்னமோ கடவுள் புண்ணியத்துல அந்தத் திருமேனியோட பிறவிக் குறையெல்லாம் தீர்ந்து போச்சு."



"வேற ஏதோ ஒரு பொண்ணும் அங்கே இருக்கிறதாக் கேள்விப் பட்டேன்..." நாயர் கேட்டார்.

"உண்மைதான். நேர்ல பார்த்தா தேவலோகப் பெண்ணே தோத்துப் போயிடுவாள்னு பொண்ணு சொன்னாள்."

"ஏதாவது நம்பூதிரிப் பொண்ணா இருக்குமோ?"

"இருக்கலாம். யாருக்குத் தெரியும்? வேற மாதிரியும் இருக்கலாம். அதெல்லாம் ரொம்ப நாளாவே பழக்கத்துல இருக்கிறதுதானே."

"சரி, அதெல்லாம் கிடக்கட்டும். நான் ஒரு முக்கியமான விஷயம் சொல்றதுக்காகத்தான் வரச்சொன்னேன்" நாயர் நேரடியாக விஷயத்துக்கு வந்தார்.

"என்ன சொல்லணுமோ சொல்லுங்க."

"தனலட்சுமியை இங்கே ஒரு தடவை வந்துட்டுப் போகச் சொல்லணும்."

"ஐயோ, அதுக்கென்ன, நாளைக்கே வரச் சொல்றேன். இன்னிக்கு இனிமே சாயந்தரம்தான் வருவாள்."

"அப்படின்னா ஒண்ணு பண்ணுங்க. உங்க பொண்ணு வந்ததும் நீங்க ரெண்டு பேருமா இன்னிக்கே வாங்களேன்."

"சரி, அப்படியே செய்யுறேன்."

கமலாட்சியம்மா புறப்பட்டாள்.

அப்பா அதுவரை பேசிக்கொண்டிருந்ததையெல்லாம் சங்கரன் குட்டி கேட்டுக் கொண்டுதான் இருந்தான்.

"எதுக்கு அப்பா? அந்தப் பொண்ணை இங்கே வேலைக்குச் சேர்த்துக்கப் போறீங்களா?" தனலட்சுமியின் உருவத்தை மனத்தில் கற்பனை செய்து பார்த்தபடி சங்கரன்குட்டி கேட்டான்.

"அதுக்கெல்லாம் கிடையாது. அவள் மூலமா நாம வேற சில காரியங்களைச் செய்ய வேண்டியிருக்கு."

அதன்பிறகு சங்கரன்குட்டி வேறு எதையும் பேசிக்கொள்ள வில்லை.

சொன்னபடியே விளக்கு வைப்பதற்கு முன்பாக அம்மாவும் பெண்ணும் பெரிய வீட்டுக்கு வந்து சேர்ந்தார்கள்.

“கமலாட்சியம்மா, கொஞ்சம் அப்படித் தள்ளி நின்னுக்கிட்டா, உங்க பொண்ணுகிட்ட ரெண்டு வார்த்தை தனியா பேசிக்குவேன்” நாயர், தனலட்சுமியைப் பார்த்தபடி பேசினார்.

அதற்கு மறுப்பு ஏதும் சொல்லாமல் கமலாட்சி சுவருக்கு மறுபுறம் ஒதுங்கி நின்றுகொண்டாள்.

புவனேஸ்வரன் நாயரின் கண்கள் தனலட்சுமியின் உடலெங்கும் ஒருகணம் மேய்ந்துவிட்டுத் திரும்பின.

ஏழு எட்டு வருடங்களுக்கு முன்னால் தோப்பிலிருந்த தேங்காய் கோடவுனுக்குள் அவருடன் இரண்டு இரவுகளைக் கழித்திருந்த தனலட்சுமிக்கு இப்போது ஏனோ வெட்கம் தோன்றியது.

“பழைய மாதிரி இல்லை நீ. உடம்பு நல்லாத் தேறியிருக்குது இந்தா, இதைத் தற்சமயம் வெச்சுக்க” என்ற நாயர் தனது மடியை அவிழ்த்து ஏறத்தாழ முக்கால் சவரன் எடையுள்ள செயின் ஒன்றை எடுத்து அவளிடம் நீட்டினார்.

மிகவும் மகிழ்ச்சி நிறைந்தவளாக அதை இரண்டு கைகளையும் நீட்டி வாங்கிக்கொண்டாள்.

“கழுத்துல போட்டுக்க. அந்த அழகை நானும் பார்த்துக்கிறேன்” நாயர் நமுட்டுச் சிரிப்புடன் கூறினார்.

தனலட்சுமி செயினை ஒரு தடவை கண்ணாரப் பார்த்துவிட்டுக் கழுத்தில் போட்டுக் கொண்டாள். செயினிலிருந்த ஆடுதன் லாக்கெட்டை இரண்டு மார்புகளுக்கும் நடுவே அழுத்தி வைத்தாள்.

“அப்புறம்... தனலட்சுமி, நீ வேலை செய்யுற வீட்டுல ஏதாவது விசேஷமான செய்தி இருக்கா?” நாயர் மிகவும் நயமாகப் பேச்சைத் தொடங்கினார்.

“விசேஷம்னா அந்தத் தம்பி இப்போ ரொம்பவும் தெளிவாப் பேசுறார். காதும் நல்லாக் கேக்குது.”



“அதை நானும் கேள்விப்பட்டேன். ஆமாம், அங்கே இருக்கிற தம்புராட்டி எப்படி?”

“அவங்களுக்கென்ன, சினிமா நடிகை மாதிரி இருக்காங்க. அதுவும் சரித்திரக் கதையில வர்ற ராஜகுமாரிங்க மாதிரி...”

“அப்படின்னா?”

“சரித்திர-புராணக் கதைகள்ல தேவலோகத்தைக் காமிப்பாங்களே... அதில வர்ற தேவதைங்க மாதிரி அவ்வளவு அழகு அவங்களுக்கு.”

“ஓகோ, அவ்வளவு அழகா?”

“உண்மையிலேயே அது சுத்தமான அழகுதான்.”

“எந்த ஊர்க்காரங்கன்னு தெரியுமா?”

“அவங்கதான் என்னை வேலைக்கே சேர்த்துக்கிட்டவங்க.”

“ஊர் தெரியாதுங்குறே... சரி, உன் வீட்டுக்கு வந்து கூப்பிட்டாங்களா என்ன?”

“அதுவே ஒரு அதிசயம்தான். நான் படுத்து தூங்கிட்டிருந்தேன். அப்போ யாரோ தட்டி எழுப்பினது மாதிரி தெரிஞ்சது. கண்ணைத் திறந்து பார்த்தா சொர்க்கலோகத்திலேர்ந்து இறங்கி வந்த மாதிரி ஒரு பொண்ணு. என்கிட்ட ‘பனங்காட்டு மனைக்கு வா’ன்னு மூணே மூணு வார்த்தைதான் பேசிச்சு. அப்புறம் பார்த்தா யாரையுமே காணோம்.”

“அப்புறம்?”

“தகவல் நிஜம்தானான்னு தெரிஞ்சுக்கிறதுக்காக நான் விடியற்காலையில் பனங்காட்டு மனைக்குப் போனேன். வீட்டு வாசல்லயே என்னைத் தட்டி எழுப்பின தம்புராட்டி நின்னுட்டு இருந்தாங்க.”

நாயர் அவளை சந்தேகத்துடன் பார்த்தார்.

“எனக்கொரு உதவி செய்யணும். நாளைலேர்ந்து நீ அந்த வீட்டிலேயே படுத்துக்கணும். அந்தத் தம்புராட்டியை எச்சரிக்கையா கவனிக்கணும்.”

"அது எதுக்குங்க?"

"அந்தத் தம்புராட்டி ஒருவேளை பேய் பிசாசு மாதிரி ஏதாவது ஒண்ணா இருப்பாளோன்னு எனக்குச் சந்தேகம். அதனால்தான்."

"ஐயோ, நீங்க அந்தத் தம்புராட்டியை அப்படியெல்லாம் நினைக்கவே கூடாது. நீங்க என்ன பேச்சுப் பேசுறீங்க?"

"தனலட்சுமி, நீ 'ஐதீக மாலை'ங்கிற புத்தகத்தைப் படிச்சிருக்கியா?"

"அதையெல்லாம் நான் பார்த்ததுகூட இல்லை."

"படிச்சிருந்தா உனக்குத் தெரிஞ்சிருக்கும். அதில இப்ப நான் சொன்னது மாதிரி மாயாஜாலமெல்லாம் ஏராளமா இருக்கு. அதனால நான் சொன்னதைக் கவனி. பிசாசா, மனுஷப் பொம்பளைதானா, இல்லை மோகினி மாதிரி ஏதாவதான்னு எனக்குத் தெரிஞ்சாகணும்."

"நீங்க இப்படியெல்லாம் பேசினா எனக்கு ரொம்பவும் பயமா இருக்குது."

பொழுது இருட்டிவிட்டது. அப்போது கையில் தீபத்துடன் திண்ணையிலிருந்து ஒரு பெண் இறங்கி வந்து முற்றம் வழியாகத் தெருவாசற்படியை நோக்கிப் போனாள்.

"தீபம்... தீபம்... தீபம்..." தெருவாசற்படியருகே நின்று மூன்று தடவை சொல்லிவிட்டுத் திரும்ப வந்து துளசி மாடத்தில் கையிலிருந்த விளக்கை வைத்தாள்.

"யாரு, தனலட்சுமியா?" அந்தப் பெண் திரும்பி நின்று கேட்டாள்.

தனலட்சுமி ஒருகணம் திடுக்கிட்டுப் போனாள். தன்னையும் மீறி "தம்புராட்டி" என்று உச்சரிக்கவும் செய்தாள்.

"தனலட்சுமி, அது வேற யாருமில்லை. நம்ம வீட்டுல இருக்குற குஞ்ஞும்மாதான்."

"எனக்குத்தான் பழக்க தோஷத்துல வாய்ல அப்படி வந்திடுச்சுன்னு நினைக்கிறேன்" தனலட்சுமி மிரட்சியுடன் பேசினாள்.



"சரி, நான் சொன்னதெல்லாம் ஞாபகம் இருக்கட்டும். குஞ்ஞும்மா... கமலாட்சியை வரச்சொல்லு" நாயர் குஞ்ஞும்மாவுக்குக் குரல் கொடுத்தார்.

அந்தப் பெண் வீட்டுக்குள் போனாள். கமலாட்சியம்மா முற்றத்துக்கு வந்தாள். இருவரும் அங்கிருந்து விடைபெற்றுத் தெருவாசற்படி கடந்தனர்.

நாயர் துளசி மாடத்தையே பார்த்துக் கொண்டிருந்தார். அப்போது அவர் கண்களையே நம்ப முடியாத ஒரு காட்சி தென்பட்டது. துளசி மாடத்தில் எரிந்து கொண்டிருந்த நிலவிளக்கின் தீபநாளம் விளக்கிலிருந்து விடுபட்டு மேற்புறம் உயர்ந்து தெரு வாசற்படியின் மேற்புற வழியாக நகர்ந்து போனதைக் கவனித்தார்.

நாயரின் உடம்பிலிருந்து மயிர்க்கால்கள் அவரையும் மீறி ஒருகணம் குத்திட்டு நின்றன.

அப்போது நாயரின் இரண்டாம் மனைவி குஞ்ஞும்மா கையில் விளக்குடன் திண்ணைக்கு வந்தாள். தெருவாசற்படி வரை போனவள், "தீபம்... தீபம்... தீபம்" என்று மூன்று முறை சொன்ன பிறகு துளசி மாடத்துக்கு வந்தாள்.

"குஞ்ஞும்மா" நாயர் அழைத்தார்.

"என்னங்க."

"கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி நீதானே துளசி மாடத்திலே விளக்கேத்தி வைச்சுட்டுப் போனே?"

"ஐயோ... என்னங்க நீங்க. நான் இப்பத்தான் நேரா குளியலறையிலிருந்து வர்றேன். இன்னும் தலையைக்கூட சரியாத் துவட்டலை, இருங்க."

புவனேஸ்வரன் நாயரின் உடம்பில் ஏதோ ஒரு மாற்றம் தெரிந்தது. அதே உடம்பு ஒருகணம் அதிர்ந்தது. அவர் தெரு வாசற்படிப் பக்கம் பார்த்தார். விளக்கிலிருந்து வேறுபட்டுப் போன தீபநாளம் அப்போதும் தெருவாசற்படிக்கு மேலேயே நின்று கொண்டிருந்தது.

## 9

**தெ**ரு வாசற்படிக்கு வெளியே மேற்புறமாக எரியும் தீபநாளம் அசைவற்று ஜொலிப்பதை புவனேஸ்வரன் நாயர் பார்த்துக்கொண்டே இருந்தார்.

திடுமென்று ஒருகணத்தில் அந்தத் தீப ஒளி வெடித்துச் சிதறித் துணுக்குகளாக மாறி சுற்றுப்புறத்தில் மறைந்தது.

அன்றுவரை ஏற்படாத ஒருவிதப் பிரத்தியேக உணர்வு நாயரைப் பீடித்தது. அந்த உணர்வுதான் பயம். அவரது வாழ்க்கையில் அதுவரை அப்படியோர் அனுபவம் ஏற்பட்டதில்லை.

தனலட்சுமி சொன்னதை வைத்துப் பார்த்தால் பனங்காட்டு மனை உண்ணியுடன் இருப்பவள் அசாதாரணமான ஒரு பெண்மணி என்பது புவனேஸ்வரன் நாயருக்குத் தெளிவாக விளங்கியது.

'அப்படியில்லாவிட்டால் இப்படிப்பட்ட துர்சகுனங்கள் தனக்கு ஏற்பட வேண்டிய அவசியமே இல்லை.

எதற்கும் தனலட்சுமி வரட்டும். மிச்சத்தைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம்' என்ற முடிவுக்கு வந்தார்.

ஏறத்தாழ அதே நேரம் புவனேஸ்வரன் நாயரின் மூன்றாம் மகனான சங்கரன்குட்டி தேங்காய் கிட்டங்கியில் நுழைந்தான்.

அன்று இரவில் சங்கரன்குட்டிக்கு விருப்பமான ஒருத்தியை எப்படியும் கிட்டங்கிக்குக் கொண்டுவந்து சேர்ப்பதாகப் புலிக்குட்டி உறுதியளித்திருந்தான்.

அந்தக் கிராமத்திலுள்ள ஏழைப் பெண்கள் சிலரை வாக்கு சாதுரியத்தாலும், பண ஆசையினாலும் மயக்கி அவ்வப்போது புவனேஸ்வரன் நாயரின் மகன்களுக்கு விருந்தாக்குவது புலிக் குட்டியின் உபதொழில். புலிக்குட்டிக்கு அதன்மூலம் குறிப்பிடத்தக்க வருமானம் கிடைக்கவும் செய்தது.

அன்று இரவில், விதவையான ஈஸ்வரி அம்மாளின் மகள் அம்மிணியை அனுப்பி வைப்பதாக புலிக்குட்டி கூறியிருந்தான்.



விரைவிலேயே அம்மிணியின் கல்யாணம் நடக்கவிருக்கிறது. கல்யாணச் செலவுக்காக என்றே சங்கரன்குட்டியிடம் ஆயிரம் ரூபாயை வாங்கிக்கொண்ட புலிக்குட்டி அதில் தனது பங்குத் தொகையான இருநூற்றைம்பது ரூபாயை எடுத்துக்கொண்டு மீதியை அவளிடம் கொடுத்திருந்தான்.

ஏறத்தாழப் பத்து மணியானபோது புலிக்குட்டி, ஈஸ்வரி அம்மாளின் வீட்டை அடைந்தான். வறுமையின் கோரப்பிடியில் சிக்கியிருப்பதால் ஈஸ்வரியும் அதற்கு ஒப்புக்கொண்டாள். இந்தச் சந்தர்ப்பத்தை சங்கரன்குட்டியும், புலிக்குட்டியும் பயன்படுத்திக் கொண்டார்கள்.

புலிக்குட்டி, ஈஸ்வரியம்மாள் வசிக்கும் வீட்டின் அருகே வந்தபோது, பின்புறத்திலிருந்து அம்மிணி அவனை அழைத்தாள். "புலிக்குட்டியண்ணே, நான் இங்கே இருக்கிறேன்."

"ஓகோ, நீ தயாரா நிக்குறியா? அப்பக் கிளம்பு."

இருள் நிறைந்த பாதை வழியாக அம்மிணியுடன் புலிக்குட்டி நடந்தான்.

தேங்காய் கிட்டங்கியில் சங்கரன்குட்டி காத்திருந்தான்.

"சின்ன முதலாளி உள்ளே இருக்கிறார், போம்மா" புலிக்குட்டி கையைச் சுட்டிக்காட்டி கூறினான்.

அம்மிணி உட்புறம் போனாள்.

சங்கரன் பிராந்தியை உறிஞ்சிக் குடித்துவிட்டு அப்போது தான் காலியான கிளாஸைக் கீழே வைத்தான்.

"யாரு, அம்மிணியா, வாம்மா... பார்த்து ரொம்ப நாளாச்சு. வந்து இப்படி உட்கார்."

அவள் கட்டிலின் மீது அமர்ந்தாள்.

அவன், மேலும் நெருங்கி அவள் தோளைத் தொட்டான். தொட்டவன் ஒரு பாம்பைத் தொட்டுவிட்டது போல் சட்டென்று கையைப் பின்னுக்கு இழுத்தான்.

"என்ன அம்மிணி... உன் உடம்பு ஏன் இப்படி சில்லிட்டுப் போய்க் கிடக்குது" என்றவாறே அவன், அவள் முகத்தைத் தன் பக்கமாகத் திருப்பினான்.

அவ்வளவுதான், சங்கரன்குட்டியின் உடம்பு பயத்தால் நடுங்கத் தொடங்கியது.

அவள் முகத்தில் வெறும் எலும்புக்கூடு மட்டுமே இருந்தது.

கண்கள் இருக்க வேண்டிய இடத்தில் இரண்டு வெறும் துவாரங்கள். மூக்கு இருக்க வேண்டிய இடம் முக்கோண வடிவில் உள்வாங்கிக் குழிந்திருந்தது. ஒரு பல்கூட உதிராமலிருக்கிற எலும்புக்கூட்டின் வாய்ப்பகுதி. சதை அந்த முகத்தில் இருந்ததற்கான சுவடே இல்லை.

சங்கரன்குட்டி உரத்த குரலில் அலறினான். ஆனால், அவன் தொண்டையை விட்டுக் குரல் வெளிவரவே இல்லை. அந்த உருவம் சங்கரன்குட்டியை ஒரு குழந்தை மாதிரி எடுத்துக் கட்டிலில் படுக்கவைத்து இறுக்கி அணைத்தது. வெறும் எலும்புகள் மட்டுமே இருந்த அதன் விரல் பகுதிகளில் சட்டென்று நகங்கள் கூர்மையுடன் நீண்டன. சங்கரன் உடம்பின் மென்மையான பகுதிகளில் அந்த நகங்கள் ஆழ்ந்து இறங்கத் தொடங்கின.

"என்னை இந்த இடத்துக்கு அனுப்பி வைத்தது யார் தெரியுமா? பனங்காட்டு மனையில் இருக்கிற தம்புராட்டிதான். இந்த மாதிரி எத்தனை சின்னப் பொண்ணுங்களை நீ நாசப்படுத்தியிருக்கிறே? உயிரை விடுறதுக்கு முன்னாலயாவது நீ இதையெல்லாம் உணரணும்கிறதுக்காகத்தான் சொல்றேன். உண்மையைச் சொன்னா, அந்தத் தம்புராட்டியோட தலையில இருக்கிற ஒரேயொரு தலைமுடிதான் நான்ஓ"

**பு**லிக்குட்டி வெகு நேரம் காத்திருந்தும் சங்கரன்குட்டி வெளியே வருவதாகக் காணோம். எனவே, புலிக்குட்டி கிட்டங்கிக்குள் நுழைந்தான்.

உட்புறம் இருட்டாக இருந்தது.



மடியிலிருந்த தீப்பெட்டியை எடுத்து தீக்குச்சியை உரசி அங்கிருந்த விளக்கை ஏற்றினான்.

அங்கே அவன் கண்ட காட்சி மிகவும் பயங்கரமாக இருந்தது.

சங்கரன்குட்டி ரத்தக்குளத்தில் கிடந்தான். உடல் முழுவதும் கத்தியால் கீறியது போல் பாளம் பாளமாகக் கிழிபட்டிருந்தது. அம்மிணியை அங்கு எங்குமே காணவில்லை.

அதன்பிறகு ஒரு விநாடிகூடத் தாமதிக்காமல் புலிக்குட்டி அங்கிருந்து பறந்தான்.

சங்கரன்குட்டியின் சித்ரவதை மரணச்செய்தி நாடெங்கும் பரவியது.

சமீப காலமாக புவனேஸ்வரன் நாயரின் குடும்பத்தில் அடுத்தடுத்து நடைபெற்ற மூன்று துர்மரணங்களும் ஊரார் மத்தியில் பீதியை ஏற்படுத்தின.

'ஏதோ ஒரு பயங்கர ஆபத்து வரப்போவதன் அறிகுறிதான் இதெல்லாம்' என்று பலரும் ரகசியமாகப் பேசிக் கொண்டனர்.

**நா**யர் சொல்லியது போலவே தனலட்சுமி கவனத்துடன் மந்தாகினியைக் கவனித்து வந்தாள். ஆனால், சந்தேகப்படுமளவு மந்தாகினியிடம் அவளுக்கு எதுவும் தட்டுப்படவில்லை.

ஒரு வெள்ளிக்கிழமையன்று விளக்கு வைக்கும் நேரத்தில் தனலட்சுமி கிணற்றிலிருந்து நீர் இறைத்துக் கொண்டிருந்தாள்.

மந்தாகினி கோல்விளக்குடன் தெருவாசற்படியை நோக்கி நடப்பதை தனலட்சுமி பார்த்தாள். அவள் கையிலிருந்த விளக்கில் திரி ஏற்றப்படாமல் இருந்தது.

தெருவாசற்படியருகே வந்து நின்ற மந்தாகினி மூன்று முறை "தீபம்... தீபம்... தீபம்...." என்று சொன்ன அதே நேரம் விளக்கிலிருந்த திரி யாரோ ஏற்றியது போல் தானாகவே எரியத் தொடங்கியது.

'ஒருவேளை தன் கண்களுக்கு அப்படித் தோன்றியதோ என்னவோ?' என்ற யோசனையுடன் வாளியைக் கிணற்றில் போட்ட

தனலட்சுமி, மந்தாகினியையே பார்த்துக் கொண்டிருந்தாள். கோல்விளக்குடன் துளசிமாடத்துக்கு வந்த தம்புராட்டி அங்கிருந்த விளக்கையும் ஏற்றிவிட்டு துளசிமாடத்தை வலம் வந்தாள்.

அப்போது விளக்குக்கும் தனலட்சுமிக்கும் நடுவே மந்தாகினி வந்தபோது, மந்தாகினியின் நிழல் தனலட்சுமி மீது விழவே இல்லை. அதுமட்டுமின்றி, விளக்கின் தீபம் அவளுக்குத் தெரியவும் செய்தது. அதுவும் அவளுக்குள் சந்தேகத்தை ஏற்படுத்தியது. எனவே, மந்தாகினி இரண்டாம் சுற்று வந்தபோது தனலட்சுமி மீண்டும் ஊன்றிக் கவனித்தாள். அப்போதும் முன்பு நடந்ததேதான் நிகழ்ந்தது.

"என்ன தனலட்சுமி, என்ன பார்க்கிறே?" மந்தாகினி கேட்டாள்.

"ஒண்ணுமில்லம்மா... நீங்க விளக்கேத்துறதைக் கவனிச்சிட்டிருக்கேன்."

"நீதான் எதையுமே பார்க்கலையே. பார்த்ததெல்லாம் மறந்து போயிருக்கணுமே" மந்தாகினி சொன்னாள்.

"ஆமாம்மா.. நான் என்னத்தைப் பார்த்தேன்? எதையுமே பார்க்கலையே..."

மந்தாகினி விளக்கேற்றிய விஷயத்தையே அந்தக் கணத்தில் தனலட்சுமி மறந்து போனாள். இருப்பினும் ஏதோ ஒரு சந்தேகம் மட்டும், அடையாளம் குறிப்பிட முடியாததாக அவளிடம் தங்கியது.

இந்த சம்பவத்துக்குப் பிறகு அவள் மந்தாகினியை மறுபடியும் கவனிக்கத் தொடங்கினாள். அப்படிச் செய்யாவிட்டால் புவனேஸ்வரன் நாயரின் சொல்லை மதிக்காதது போலாகிவிடும். அவர் பரிசளித்த செயின் அப்போதும் கழுத்தில் கிடந்தது.

அன்று இரவுச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு படுத்த தனலட்சுமிக்கு உறக்கம் வரவில்லை.

உண்ணியும் மந்தாகினியும் தென்புற அறையில் படுத்திருந்தனர்.

உரலறையிலிருந்து எழுந்த தனலட்சுமி சத்தம் எழுப்பாமல் கூடத்துக்கு வந்தாள். அங்கிருந்து தென்புற அறையைப் பார்த்தாள். ஜன்னல் கம்பிகளின் ஊடாக அறைக்குள்ளிருந்து வெளிச்சம் வந்தது.



எனவே, அதற்குள் இருந்த உண்ணியும் மந்தாகினியும் இன்னும் தூங்கவில்லை என்பது புரிந்தது.

சட்டென்று அவளுக்குள் ஓர் ஆசை எழுந்தது. அதாவது இரவு நேரத்தில் மந்தாகினி எப்படி இருக்கிறாள்... என்ன செய்கிறாள் என்பதைக் கவனிக்க வேண்டும். சத்தம் எழுப்பாமல் ஜன்னலின் பக்கவாட்டுக்கு வந்தவள், எச்சரிக்கையுடன் உட்புறம் எட்டிப் பார்த்தாள்.

'ஆ!' தனலட்சுமி தன்னையும் மீறி வாயைத் திறக்கப் போனாள். ஆனால், அவள் வலது கையே அவசரமாக அவள் வாயைப் பொத்தியது.

உண்ணிக்கிருஷ்ணனின் மடியில் மந்தாகினி படுத்திருந்தாள்.

படுக்கையறையில் வேறு எதை எதிர்பார்க்க முடியும்?

பளிங்குக் கல்லில் வடித்தெடுத்த சிலை ஒன்று விழுந்து கிடப்பதைப் போல் படுத்திருந்தாள் மந்தாகினி. இடுப்பில் தங்க அரைஞாணம். கைகளில் தங்க வளையல்கள். காலில் தங்கக் கொலுசு. கழுத்தில் காசுமாலை.

தனலட்சுமி மனத்தில் திடுமென்று அப்படியொரு சந்தேகம் எழுந்தது. பார்ப்பதற்கு தம்புராட்டி ஒரு தேவதையைப் போலிருக்கிறாள்.

'ஒருவேளை மோகினியாகவோ, கந்தர்வப் பெண்ணாகவோ இருக்கலாமோ?' அவள் யோசனையில் ஆழ்ந்தாள்.

திடுமென்று தன் கழுத்தில் எதுவோ அசைவது போல் தனலட்சுமிக்குத் தோன்றியது. புவனேஸ்வரன் நாயர் கொடுத்த செயின் தன் கழுத்தில் கிடந்து நெளிவதை உணர்ந்தாள்.

கழுத்தைத் தடவிப் பார்த்தாள்.

"ஐயோ பாம்பு!" திடுமென்று அலறினாள்.

அந்தக் குரலைக் கேட்ட உண்ணி சட்டென்று படுக்கையிலிருந்து துள்ளியெழுந்தான். கையில் விளக்கை எடுத்தவன், கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தான்.

“என்ன... என்ன ஆச்சு?”

“கழுத்துல பாம்பு.”

“எங்கே பாம்பு, கழுத்துல செயின்தானே கிடக்குது” உண்ணி கேட்டான்.

மறுபடி அவள் தன் கழுத்தைத் தடவிப் பார்த்தபோது கையில் செயின்தான் தட்டுப்பட்டது. அவள் அந்த செயினை கையால் இழுத்துப் பறித்து முற்றத்தில் வீசியெறிந்தாள். உண்ணி, அவளை உரல் போட்டிருந்த அறைக்குள் கொண்டுபோய் விட்டுவிட்டு வந்தான்.

படுக்கையில் எவ்வளவுதான் புரண்டு படுத்தும் அவளுக்குத் தூக்கம் வருவதாக இல்லை.

நடுநிசிப் பறவை ஒன்று எங்கோ தொலைவில் குரல் கொடுப்பதைக் கேட்டாள்.

மறுநாள் காலையில் மளிகைக் கடைக்கு எதையோ வாங்கிவரப் புறப்பட்ட தனலட்சுமி அப்படியே பெரிய வீட்டுக்கும் போனாள்.

முந்தைய இரவில் தனக்கு நேர்ந்த அனுபவங்களையெல்லாம் புவனேஸ்வரன் நாயரிடம் விவரித்தாள்.

அவர் அதையெல்லாம் மௌனமாகக் கேட்டுக் கொண்டார்.

அவள் அங்கிருந்து கிளம்பியதும் ராமுண்ணியை கூப்பிட்ட புவனேஸ்வரன் நாயர், கைமளைக் கையோடு அழைத்து வருமாறு கூறினார்.

விருப்பமில்லாத மனத்துடன்தான் கைமள் வந்து சேர்ந்தார்.

தனலட்சுமி சொல்லிவிட்டுப் போன தகவல்கள் மொத்தத்தையும் அவரிடம் விவரித்தார் புவனேஸ்வரன் நாயர்.

எல்லாவற்றையும் கவனமாகக் கேட்ட கைமள் அதற்கு இப்படிப் பதிலளித்தார்: “இதுவரைக்கும் நீங்க சொன்னதெல்லாம் அந்தப் பெண்ணோட பயத்துனால நடந்ததாத்தான் தோணுது. எனக்கு வேறு எதையும் சொல்லத் தோணவில்லை.”

“அப்படியா சொல்றீங்க? அப்படின்னா ஒரு வேலை செய்யுங்க. மனுஷ ஜாதியல்லாததுங்களைப் பிடிக்கிறதுக்கு உங்ககிட்ட சில



வித்தைங்கள்லாம் இருக்குமே. அப்படி ஏதாவது ஒண்ணைத் தயார் பண்ணி எடுத்துட்டு வாங்க. அதை தனலட்சுமி கிட்டக் கொடுத்து அனுப்பலாம்.”

மை போட்டுப் பார்த்த அன்று தனக்கு நேர்ந்த அனுபவம் மனத்தில் மேலெழும்பி வந்ததால், கைமள் பயந்த மனத்துடன் சற்று நேரம் அப்படியே கல்லாச் சமைந்து உட்கார்ந்திருந்தார்.

“கைமளே, நான் சொல்றதை நல்லாக் கேட்டுக்கங்க. என் குடும்பத்தை அழிக்கிற வேலை நடந்துட்டிருக்கு. உடனடியா இதுக்கு ஏதாவது மாற்று ஏற்பாடு செய்யலைன்னா, நீங்களும் அதோட பலனை அனுபவிக்க வேண்டியிருக்கும். என் சந்தேகம், வந்திருக்கிறவ ஒருவேளை மோகினியாத்தான் இருக்கணும். உடனடியா அவளைக் கட்டிப் போடலையானா நமக்கு விமோசனமே கிடையாது.”

“என்னால முடிஞ்சவரைக்கும் முயற்சி பண்றேன். முடியாத பட்சத்துல நான் அன்னிக்குச் சொன்ன இடத்துக்குத்தான் போக வேண்டியிருக்கும்.”

“நீங்க சொன்னதெல்லாம் நல்லா ஞாபகமிருக்கு. இப்பத் தற்சமயம் உங்களால என்ன முடியுமோ, அதைச் செய்யுங்க.”

வெகு நேர யோசனைக்குப் பிறகு கைமள் இப்படிச் சொன்னார்: “நான் ஒரு கதலிப் பழத்தைக் கொடுத்து அனுப்புறேன். அதுதான் என்னால செய்ய முடிஞ்ச உயர்ந்தபட்ச வேலை. மோகினி ஹோம மந்திரம் ஜெபித்து, ஹோம குண்டத்திலிருந்து, மாந்திரீக சக்தியால் வெளிவரும் அந்தப் பழத்தை எப்படியாவது தம்புராட்டியைச் சாப்பிட வைத்தால் போதும். சாப்பிடுபவள் எப்படிப்பட்ட மோகினியாக இருந்தாலும் சாப்பிட்ட அரை மணி நேரத்தில் ஆயிரத்தொரு துண்டுகளாக வெடித்துச் சிதறிப் போவாள்.”

“டேய் மதுசூதனா...” புவனேஸ்வரன் நாயர் உட்புறமாகப் பார்த்து தன் நாலாவது மகனை அழைத்தார்.

உட்புறத்திலிருந்து அவன் வந்தபோது அவனுடன் பின்புறமாகக் கைகள் கட்டப்பட்டு, வாயில் துணிப் பந்து செருகப்பட்ட பதினாறு வயது மதிக்கத்தக்க பெண் குழந்தை ஒருத்தியும் இருந்தாள்.

“கடவுளே... என்ன இது. இவள் என் மகள் ஸ்ரீகுட்டியாச்சே” கைமள் பதறினாள்.

“நான் சொன்ன வேலையை நீங்க சரியாச் செஞ்சு முடிக்க லேன்னா, உங்க பொண்ணை உயிரோட பார்க்க முடியாது” புவனேஸ்வரன் நாயர் வில்லத்தனமான குரலில் பேசினார்.

கைமள் திரிசங்கு நிலையில் அகப்பட்டவரைப் போலானார்.

புவனேஸ்வரன் நாயர் சொன்னால், சொன்னபடி செய்யக் கூடியவர்.

“மதுசூதனா, இந்த கைமளை அவரோட வீட்டுல விட்டுட்டு வா. கைமளே, நீங்க சொன்ன கதலிப் பழம் எவ்வளவு சீக்கிரம் தயாராகுமோ, அவ்வளவுக்கு நல்லது. உம்... சீக்கிரமா கிளம்புங்க.”

வீட்டுக்கு வந்த கைமள் தன் மகளை உயிருடன் மீட்க வேண்டுமே என்ற கவலையுடன் உடனடியாக ஹோமத்தைத் தொடங்கினார். பத்தாயிரத்தொரு முறை சமிதை நெய்யில் மூழ்க வைத்து ஹோம நெருப்பில் போட்டார். ரத்த சாமுண்டீஸ்வரி விக்கிரகத்துக்கு முன்னால் ஹோமாக்னி கொழுந்துவிட்டு எரிந்தது.

கடைசியில் நீலநிற நெருப்புக் கொழுந்துகளுக்கு மத்தியில் அருமையான கதலிப்பழமொன்று மேலெழும்பி வந்தது. பழத்தின் கீழே அப்போது பறித்தெடுத்தது போன்ற தலைவாழை இலையென்றும் பச்சைப் பசேலென்று மேலெழும்பி வந்தது.

அதை அப்படியே வாரி எடுத்தவர், நேராகப் பெரிய வீட்டை நோக்கி ஓடினார்.

அன்று மாலை நேரத்திலேயே ராமுண்ணி பனங்காட்டு மனையின் பின்புறமிருந்த இடிந்த சுற்றுச்சுவர் வழியாக தனலட்சுமியிடம் கதலிப்பழத்தைக் கொடுத்து விவரத்தையும் சொன்னான்.

**மா**ந்திரீகரான கைமள் மாந்திரீக வித்தையைப் பயன்படுத்திப் பெற்ற சக்திமிகுந்த கதலிப் பழத்துடன் தனலட்சுமி பனங்காட்டு மனைக்குள் நுழைந்தாள்.



‘இந்தப் பழத்தை எப்படியாவது மந்தாகினியைச் சாப்பிடச் செய்ய வேண்டும்’ என்பது தனலட்சுமியின் ஒரே நோக்கமாக இருந்தது. அதுவரையில் இந்தப் பழம் காணாமல் போய்விடக் கூடாது என்பதால் மிகவும் பத்திரமாக அதை ஓரிடத்தில் எடுத்து வைத்தாள்.

இரவு நேரத்தில் குறுநொய் அரிசியால் பொங்கிய கஞ்சி குடிக்க உண்ணியும், மந்தாகினியும் சமையலறைக்கு வருவார்கள். அந்த நேரத்தில் பழத்தோடு பழமாக இந்தக் கதலிப் பழத்தையும் கொடுப்பதென்பது தனலட்சுமியின் திட்டம்.

‘இருக்கிற சூழ்நிலையை வைத்துப் பார்த்தால் இப்படி ஒரே ஒரு பழத்தைக் கொடுத்தால் அதை இரண்டுபேருமே சாப்பிட்டு விடுவார்கள். கோயில் பிரசாதம் என்றுகூடச் சொல்லிக் கொள்ளலாம். அப்படியானால் தன்மீது எந்தச் சந்தேகமும் எழாது.’

## 10

**இ**லையுடன் பழத்தை அப்படியே நெல்குதிரின் மேல் வைத்து, வாணலி ஒன்றைப் போட்டு மூடவும் செய்தாள். அதன்பிறகு வழக்கம்போல் சமையலறை வேலையில் ஈடுபட்டாள்.

சற்று நேரத்தில் எங்கோ முடி கருகுவது போன்ற நாற்றம் தனலட்சுமியின் மூக்கைத் தாக்கியது. நெல் குத்தும் அறையிலிருந்துதான் அந்த நாற்றம் வருகிறது என்பதை உணர்ந்தவள் உடனே அந்த இடத்தை நோக்கி விரைந்தாள்.

அதிசயமான ஒரு காட்சியை அங்கு கண்டாள். இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னால் எங்கிருந்தோ அங்கு வந்து சேர்ந்திருந்த கறுப்பு நிறப் பூனையொன்று, வாணலியின் மீது சிலையைப் போல் ஆடாமல் அசையாமல் நின்று கொண்டிருந்தது. அதன் உடம்பிலிருந்து புகை உயர்ந்து கொண்டிருந்தது. அதன் ரோமங்கள் தீய்ந்து கொண்டிருந்தன.

சட்டென்று விறகு ஒன்றை எடுத்துப் பூனையை வாணலியிலிருந்து கீழே தள்ளிவிட்டாள். அது ஒரு மரக்கட்டை மாதிரி சத்தமெழுப்பிக் கொண்டு கீழே விழுந்தது.

வாணலியைக் கவிழ்த்து வைத்திருந்த பகுதியைக் கவனித்தாள். பழத்தை எடுத்து வந்த இலையின் ஒரு பகுதி வெளியே நீட்டிக் கொண்டிருந்தது. நீட்டியிருந்த இலைப் பகுதியைப் பூனை கடித்துக் குதறியது மாதிரியும் இருந்தது.

வீட்டுக்குப் பின்புறம் வந்தவள் அவசர அவசரமாக மண் வெட்டியெடுத்து ஒரு சிறிய பள்ளம் தோண்டி விறைத்துக் கிடந்த பூனையை அதற்குள் போட்டு மூடினாள்.

“சே... என்ன ஒரு சக்தி” தனலட்சுமியின் உதடுகள் அவளையும் மீறி முணுமுணுத்தன.

பழத்தில் அடங்கியிருந்த மாந்திரீக சக்தி வாழையிலையிலும் பரவியிருந்தது. அதன் மிச்சிறிய பகுதி பூனையின் உடம்பில் பட்டதற்கே அது வெந்து கருகத் தொடங்கிவிட்டது. ‘இப்படிப்பட்ட பழம் தம்புராட்டியின் வயிற்றுக்குள் போனால் என்ன ஆகும்?’ என்று யோசித்தாள். ‘இரண்டு பேரும் சாம்பலாகி விட வேண்டியதுதான்.’

அதுமட்டும் நடந்துவிட்டால் மேற்கொண்டு தனக்கு என்னென்ன பரிசெல்லாம் கிடைக்கும் என்பதைக் கற்பனை செய்து பார்த்தாள். இந்த இருவரும் இறந்துவிட்டால், ஒருவேளை இந்த மனையைக்கூட புவனேஸ்வரன் நாயர் தனக்குத் தந்து விடலாம். அதற்கெல்லாம் தயங்கக்கூடிய நபரல்ல அவர்.

இரவு எட்டு மணி.

வழக்கம்போல் உண்ணிக்கிருஷ்ணனும் மந்தாகினியும் சாப்பாட்டு அறைக்கு வந்தனர்.

தனலட்சுமி இருவருக்கும் பரிமாறினாள். அவர்கள் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போதே தனலட்சுமி கேட்டாள். “கோயில் பிரசாதமாகப் பழம் ஒன்று கிடைத்திருக்கிறது கொண்டு வரட்டுங்களா?”

“கதலிப் பழம்தானே, நாங்க படுக்கப் போகும்போது கொடு போதும்” மந்தாகினி பதிலளித்தாள்.

ஒருகணம் தனலட்சுமியின் உடம்பு நடுங்கியது. பிறகு அவளே தன்னை இப்படிச் சமாதானப்படுத்திக் கொண்டாள். ‘கோயிலில் கதலிப்



பழத்தை பிரசாதமாகத் தருகிறார்கள் என்பது தம்புராட்டிக்குத் தெரிந்திருக்கும் போலும். அதனால் இப்படிச் சொல்கிறார். ஒரு வகையில் படுக்கும்போது அதைச் சாப்பிடுவதுதான் நல்லதும்கூட. படுக்கையிலேயே இருவரின் கதையும் முடிந்துவிடுமே.

சாப்பிட்டு எழுந்துபோன சற்று நேரத்துக்குப் பிறகு படுக்கை அறையிலிருந்து மந்தாகினியின் குரல் கேட்டது. “தனலட்சுமி, அந்தப் பிரசாதத்தை இப்படி கொண்டு வாயேன்.”

அதற்காகவே காத்திருந்தவள் போல் தனலட்சுமி வாழை இலையுடன் கதலிப் பழத்தை எடுத்து வந்தாள்.

“சரி... நீ போய்ப் படுத்துக்க தனம்.”

அங்கிருந்து வெளியேறினாள் தனலட்சுமி.

மந்தாகினி இலையோடு அந்தப் பழத்தை எடுத்துப் பக்கத்திலிருந்த மேஜை மீது வைத்தாள்.

“இது என்ன... வாழைப்பழத்தைத் தூக்கி மேல வெச்சுட்ட? சாப்பிட வேண்டாமா?” உண்ணி கேட்டான்.

“சாப்பிடறதுக்கு முன்னால ஒரு வேடிக்கையைப் பார்க்க வேணாமா?”

“இப்போ என்ன வேடிக்கை.”

“பார்த்துட்டே இருங்க....”

பழத்தைப் பொதிந்திருந்த இலையை அவிழ்த்தாள் மந்தாகினி. அதற்குள் பழம் இருந்தது.

“பாருங்க, பழத்தோட நிறம் மாறுறதை.”

அவள் கண் முன்பாகவே பசுமஞ்சள் நிறத்திலிருந்த பழம் பொதுவாக சூடேற்றப்படும் செப்பு உலோகம் போல் சிவப்பேறத் தொடங்கியது. கடைசியில் சிவந்து சிவந்து அது ஒரு தீக்கங்கு போல் மாறியது. அதிலிருந்து நெருப்பு ஜுவாலைகள் மேற்புறமாக எழும்பின.

“ஐயோ, என்ன மந்தாகினி இது” உண்ணிக்கிருஷ்ணன் பயம் கலந்த குரலில் கேட்டான்.

"இதுல பயப்படுறதுக்கு ஒண்ணுமேயில்லை. பார்த்துட்டே இருங்க."

ஜுவாலை விட்டு எரிந்த பழம் படிப்படியாக இல்லாமலாகத் தொடங்கியது. கற்பூரம் நெருப்பில் கரைந்து ஒன்றுமில்லாமல் ஆவதுபோல் பழம் கடைசியில் கண்ணிலிருந்து மறைந்தது. பழத்தை வைத்திருந்த வாழையிலையில் பழம் என்ற ஒன்று இருந்ததற்கான அடையாளமே சுத்தமாக இல்லாமல் போனது.

"இதைச் சாப்பிட்டிருந்தா நாமளும் இப்படி ஆகியிருப்போம் இல்லையா?" உண்ணிக்கிருஷ்ணன் கேட்டான்.

"அப்படித்தான்னு வெச்சுக்கங்களேன். உங்க விரோதிங்க யாரோ இதைக் கொடுத்து அனுப்பியிருக்காங்க."

"அப்படின்னா அதை அந்த ஆள்தான் செஞ்சிருக்கணும். நெல் கொண்டுபோன படகை மூழ்கடிச்சதுக்காக அந்த ஆள் பழிவாங்கப் பார்த்திருக்கார். அந்தக் கோபத்தோட பலன்."

"நெல் கொண்டுபோன படகை யார் மூழ்கடிச்சாங்க?"

"ஏதோ ஒரு பூதம்."

"அது எப்படி உங்களுக்குத் தெரிஞ்சது?"

"அதைப்பத்தித் தெளிவா என்னால எதுவும் சொல்ல முடியலை. ரொம்பச் சன்னமா... ஏதோ ஒரு கனவு மாதிரிதான் எல்லாம் தெரிஞ்சது."

"ரொம்பவும் நல்லதாப் போச்சு."

**ம**றுநாள் மாலையில் ராமுண்ணி பனங்காட்டு மனைக்கு வந்தான்.

மந்தாகினி உயிரோடு இருக்கிறாளா இல்லையா என்பதைத் தெரிந்து கொள்வதற்காக வந்திருந்தான்.

அவன் வந்தபோது மந்தாகினி துளசி மாடத்தின் மேற்புறத்தைச் சுத்தம் செய்து கொண்டிருந்தாள்.

ராமுண்ணியைக் கவனித்தவள் அவனை வீட்டுக்குள் வருமாறு அழைத்தாள்.



அவன் தயங்கித் தயங்கிப் படிகளில் ஏறினான்.

"ராமுண்ணிதானே தனலட்சுமிகிட்ட கதலிப் பழப் பிரசாதத்தைக் கொடுத்தது?"

ராமுண்ணி பதில் சொல்லாமல் மென்று விழுங்கினான்.

"எதுக்காக இதையெல்லாம் இன்னொருத்தர் மூலமாக குடுக்கணும்? அதை என்கிட்ட நேரடியாக் கொடுத்திருக்கலாமே."

இம்முறை மந்தாகனி சொன்ன வார்த்தைகளால் ராமுண்ணியின் நாக்கு உலர்ந்தது போலானது.

"ராமுண்ணி சொன்னபடிதான் எல்லாம் நடந்தது. பரவாயில்லை. தம்புரானையும் ஒருதடவை நேரில பார்த்தா தேவலாம்னு இருக்கா?" மந்தாகினி கேட்டாள்.

அங்கிருந்து எப்படியாவது தப்பித்தால் போதும் என்று தவித்தான் ராமுண்ணி.

"அப்ப நான் வரட்டுமுங்களா?" ராமுண்ணி படபடப்புடன் கேட்டான்.

"அவரைப் பார்க்க வேண்டியது இல்லேன்னா கிளம்புங்க."

அவசர அவசரமாக அங்கிருந்து நகர்ந்தவன் துளசி மாடத்தைத் தாண்டியதும் ஓடத் தொடங்கினான். இம்முறை பெரிய வீட்டின் சிறு திண்ணையை அடைந்தவன் களைத்துப் போய் அப்படியே உட்கார்ந்தான்.

"போன காரியம் என்ன ஆச்சு?" புவனேஸ்வரன் நாயர் கேட்டார்.

அவன் நடந்ததை விவரித்தான்.

அதையெல்லாம் கேட்டு முடிந்ததும் அவசரமாக வீட்டுக்குள் நுழைந்த புவனேஸ்வரன் உடை மாற்றிக்கொண்டு உடனேயே வெளிவந்தார். ராமுண்ணியையும் அழைத்துக்கொண்டு நேராக கைமளின் வீட்டுக்குச் சென்றார்.

புவனேஸ்வரன் நாயரே தனது வீட்டை நோக்கி வருவதைக் கவனித்த கைமள் ஒருகணம் அதிர்ந்தார். பெரிய வீட்டின் காரணவர்

சாதாரணமாக எங்கும் வெளியே போவதில்லை. எவரையும் அவரது வீட்டுக்கு வரவழைப்பதுதான் வழக்கம்.

கைமள் மிகவும் பணிவுடன் நாயரை வரவேற்று, உட்கார வைத்தார்.

'இந்தத் தடவை தனது திட்டப்படியே எல்லாம் நடந்திருக்கும்' என்று கைமள் நினைத்தார். 'மகிழ்ச்சிகரமான அந்தச் செய்தியைத் தெரிவிப்பதற்குத்தான் புவனேஸ்வரன் நாயர் நேரடியாக வந்திருக்கிறார்' என்றும் கருதினார். ஆனால், விஷயம் அதற்கு நேர்மாறாக இருந்தது.

"கைமளே, நீங்க சொன்னது நடக்கலை... தோத்துட்டீங்க."

இந்த பதில் கைமளைக் கலங்க வைக்கவில்லை. எனினும் தன் இயலாமையையும் அவரால் மறைக்க முடியவில்லை.

"நாயரே, என்னால் முடிந்த உயர்ந்தபட்ச அளவுக்கு நான் மந்திரத்தைப் பயன்படுத்தியிருக்கிறேன். மேற்கொண்டு என்னால் எதுவும் செய்ய முடியாது என்பதை ஒப்புக்கொள்கிறேன். அதனால் நீங்கள் தரும் எந்தத் தண்டனையையும் ஏற்றுக்கொள்ளத் தயாராகி விட்டேன்" கைமள் பரிதாபமாகப் பேசினார்.

"சரி, அதெல்லாம் கிடக்கட்டும். உடனடியாக நாம் செய்ய வேண்டியது என்ன என்றாவது சொல்லுங்கள்."

"அன்னிக்கே நான் சொன்னேனே... சோமதத்தன்னு ஒருத்தரைப் பத்தி. அவரைப் போய்ப் பார்க்க வேண்டியதுதான்."

"அதுதான் வழின்னு சொல்றீங்களா?"

"அவர் சாதாரணமான மாந்திரீகன் இல்லை. தேவாம்சம் உள்ள ரக்ஷஸ், மோகினி இப்படி எதுவா இருந்தாலும் அவர்கிட்ட அடங்கி வேண்டியதுதான்."

"அவர் பேரே சோமதத்தன்ங்கிறதுதானா?"

"இல்லை, அவரோட உண்மையான பேரு ஸ்ரீகண்டன்ங்கிறது வடநாட்டுப் பக்கம் சுற்றியலைந்துவிட்டு வந்த பிறகு இந்தப் பெயரைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்."



"அவரால நம்ம காரியம் நடந்துடும்னு சொல்றீங்களா?"

"எனக்குத் தெரிஞ்ச சேதிப்படி சோமதத்தனோட வயசு மூணு நூற்றாண்டு. அதிலிருந்தே தெரிஞ்சுக்கங்க, அவரோட கெட்டிக் காரத்தனத்தை."

"அப்ப நீங்களும் என்கூட வர்றீங்களா?"

"வர்றேனே... அதுக்கென்ன?" அந்த முரட்டுக் குடும்பத்திலிருந்து எப்படியும் தன் மகளைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக கைமள் ஒப்புக்கொண்டார்.

புவனேஸ்வரன் நாயரும் கைமளும் சேர்ந்து சோமதத்தனைக் காணப் புறப்பட்டார்கள். பஸ்ஸிலிருந்து இறங்கி, அங்கிருந்து நான்கு மைல் தூரம் நடக்க வேண்டியிருந்தது. ஆள் நடமாட்டம் இல்லாத பாதையில் இருவரும் நடந்தனர். சற்றுத் தொலைவில் கடை ஒன்று தென்பட்டது. கடைக்காரர் விளக்கேற்றும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார்.

புவனேஸ்வரன் நாயரும் கைமளும் அந்தக் கடையை நெருங்கி வெற்றிலைப்பாக்கு வாங்கினர். பாக்கை வாயில் போட்டுவிட்டு வெற்றிலையில் சுண்ணாம்பு தேய்த்தபடி கைமள் கடைக்காரரைப் பார்த்துக் கேட்டார். "மந்திரவாதி சோமதத்தன் வீடு எங்கே இருக்குன்னு சொல்ல முடியுமுங்களா? அவரை அவசரமான ஒரு விஷயத்துக்காகப் பார்க்க வேண்டியிருக்கு."

"இதோ, இந்தப் பாதை வழியே போங்க... பாதை முடியுற இடம் அவரோட வீடுதான். நடுவில் வேற வீடு எதுவும் கிடையாது."

"இன்னும் எவ்வளவு தூரம் போக வேண்டியிருக்கும்?"

"கிட்டத்தட்ட ஒருமைல் இருக்கும்."

"அவர் வீட்டுல இருப்பாரா?"

"அவர் எங்கேயும் வெளியே போறதில்லை. வீட்டுலேயே இருக்கார்."

இருவரும் மீண்டும் நடக்கத் தொடங்கினர். வெளிச்சம் இல்லாத வழி இருப்பினும் இருவரும் நடந்தனர். பத்து நிமிட நடைக்குப் பிறகு தொலைவில் ஏதோ ஒரு வெளிச்சம் தெரிந்தது.

“நாம அவர் வீட்டை நெருங்கிட்டோம்னு தோணுது....” நாயர் சொன்னார்.

வெளிச்சம் தென்பட்ட பகுதியை நெருங்கியபோது அங்கு ஒரு மனிதர் நின்று கொண்டிருப்பது தெரிந்தது. ஆனால், வெளிச்சம் ஏற்படுத்தும்படியான எதுவும் அவர் கையில் இல்லை.

‘அப்படியானால் வெளிச்சம் எங்கிருந்து வருகிறது?’ கைமள் யோசனையில் ஆழ்ந்தார்.

“நீங்க தத்தன் திருமேனியைத்தானே பார்க்க வந்திருக்கீங்க?” அங்கிருந்தவர் கேட்டார்.

“ஆமாம், நீங்க யாருன்னு தெரிஞ்சுக்கலாமா?”

“நான் ஒரு வழிகாட்டி. பேர் மிருதன்.”

இருவரும் அந்த மனிதனைப் பின்தொடர்ந்தனர். நடந்து கொண்டிருந்தபோது கைமளின் மனதில் சட்டென்று ஒரு சந்தேகம் எழுந்தது. ‘ஆமாம், அந்த நபர் மிருதன் என்றல்லவா சொன்னார். மிருதன் என்றால் மரணம் என்றல்லவா அர்த்தம்?’ ஒருவேளை இந்த நபர் ஏதாவது ஆவியாக இருப்பாரோ?

தொலைவிலிருந்து தாங்கள் பார்த்த வெளிச்சம் இந்த நபரின் கண்கள்தானா? எது எப்படி இருந்தாலும் எதையும் கேட்க வேண்டாம் என்ற முடிவுக்கு வந்தார் கைமள்.

இருளால் படைக்கப்பட்டது போன்ற வெளிப்புற மதில் ஒன்றும் தெரு வாசற்படி ஒன்றும் தட்டுப்பட்டது. தெரு வாசற் கதவு விரியத் திறந்து கிடந்தது.

உட்புறம் பார்த்தபோது பூஜையறை வாசலில் நிலவிளக்கு ஒன்று எரிந்து கொண்டிருந்தது.

“அதோ, அங்கே இருக்கிறார் திருமேனி” மிருதன் கூறினான். இருவரையும் அந்த இடத்துக்கு அழைத்துப் போகவும் செய்தான்.

அங்கே தென்பட்டார் பயங்கர மந்திரவாதியான ஸ்ரீகண்டன் என்கிற சோமதத்தன்.



“மிருதா, இனிமேல் நீ தேவையில்லை. போய் உன்னுடைய கல்லறையில் ஓய்வெடுத்துக் கொள்!” சோமதத்தன் கட்டளையிடுவது போல் கூறினார்.

கைமளும் புவனேஸ்வரன் நாயரும் திரும்பிப் பார்த்தபோது தங்களை அழைத்து வந்த மிருதனைக் காணவில்லை. அதற்குப் பதிலாக இரண்டு வெளிச்சப் பொட்டுகள் நகர்ந்தவாறே நீங்கிக் கொண்டிருப்பது புரிந்தது.

## 11

“உட்காருங்கள் புவனேஸ்வரன். யார், கைமளும் கூட வந்திருக்கிறாரா என்ன?” சோமதத்தன் இருவரையும் வரவேற்றுப் பேசினார்.

இந்த உபசார வார்த்தைகளைக் கேட்ட இருவரும் ஒருகணம் பிரமித்தனர்.

‘எதையும் சொல்லாமலேயே மாந்திரீக சக்தியால் பெயர்களைத் தெரிந்து கொண்டிருக்கிறார். இந்த ஒரு நிகழ்ச்சியின் மூலமே இவர் சாதாரணமான மனிதரல்லர் என்பது தெரிகிறது. கைமள் சரியான ஆளைத்தான் தேர்ந்தெடுத்திருக்கிறார்’ புவனேஸ்வரன் நாயர் மனதுள் நினைத்தார்.

“நீங்கள் எதையும் சாப்பிட்டிருக்க முடியாதே?” சோமதத்தன் கேட்டார்.

“வீட்டிலிருந்து சாப்பிட்டுத்தான் கிளம்பினோம்.”

“இருந்தாலும் ஆளுக்கொரு இளநீர், கொஞ்சம் அவலும் சர்க்கரையும் கதலிப்பழமும் சாப்பிடலாமே” மாந்திரீகர் கேட்டார்.

“உங்க விருப்பப்படியே...”

சோமதத்தன் வெளிப்புறம் பார்த்து கையால் ஏதோ சைகை செய்தார்.

உடனேயே எதுவோ கீழே விழும் சத்தம் கேட்டது. வலதுபுற முற்றத்திலிருந்த உயரமான செந்தென்னை கீழ் நோக்கி வளைந்தது. அதில் இளநீர் ஏராளமாக இருந்தன.

மாந்திரீகர் இரண்டு கைகளையும் நீட்டியபோது இரண்டு இளநீர் மரத்திலிருந்து உதிர்ந்து அவர் கைக்கு வந்து சேர்ந்தது.

கண்ணுக்குத் தெரியாத யாரோ ஒருவன் முன்புறத்திலிருந்து சீவுவது போல் இளநீரின் மேற்புறம் வெட்டப்பட்டு சீவிய இளநீர் மறுபடி அவர் கைக்கு வந்தது.

"இந்தாங்க... குடிங்க" சோமதத்தன் இளநீரை அவர்களிடம் நீட்டியபடி சொன்னார். அவர்கள் அதை வாங்கி வாயில் வைத்து உறிஞ்சும்போது தென்னை மரம் பழையபடி நிமிர்ந்து நின்று கொண்டது.

"சாப்பிடுங்கள்..." என்ற சோமதத்தன் வீட்டின் உட்புறம் திரும்பி, "குட்டிமாளு" என்று அழைத்தார்.

அப்போது இரண்டு துண்டு இலைகள் அந்தரத்தில் பறந்து வந்து அவர்களுக்கு முன்னால் யாரோ பணிவாக வைப்பதுபோல் தானாகவே தரையில் படிந்தன.

அதில் கதலிப் பழங்களும், நனைத்த அவலில் சர்க்கரை போட்டு பிசைந்த கலவையும் இருந்தன. அதைச் சாப்பிட்ட போது பால் பாயசம் போலிருந்தது.

"சரி, இப்போது வந்த விஷயத்தைப் பற்றிச் சொல்லுங்கள்."

"அதுவும் உங்களுக்கே தெரிந்திருக்குமென்று கருதுகிறேன்."

சோமதத்தன் சற்று நேரம் கண்ணை மூடி அமர்ந்திருந்தார்.

"உங்களது வீட்டின் தென்கிழக்குப் பகுதியில் உங்கள் எதிரியின் இருப்பிடம்." அவர் கண்ணைத் திறக்காமலே பேசினார்.

"ஆமாம் திருமேனி."

"மிச்சத்தை நீங்கள் சொல்லுங்கள். நான் எவ்வளவு முயன்றாலும் காட்சி தெளிவடையவில்லை."



"நீங்கள் குறிப்பிட்ட இடத்தில் பனங்காட்டு மனை என்ற நம்பூதிரியின் வீடு ஒன்று இருக்கிறது. அங்கு வாய் பேச முடியாத, காது கேட்க முடியாத இளைஞன் ஒருவன் இருக்கிறான். ஆனால், சமீப காலமாக அவனது குறைகள் எல்லாம் அகன்று விட்டிருக்கின்றன. அவன் எங்கேயோ போனான். திரும்பி வந்த போது எங்களுக்குப் பிரச்சினைகள் ஆரம்பமானது. அவனுடன் யாரோ ஓர் இளம்பெண்ணும் இருக்கிறாள்."

"அவள் சாதாரணப் பெண்ணே அல்ல என்று சொல்ல வருகிறீர்கள்... அப்படித்தானே?"

"உண்மைதான், அவள் அசாதாரணமான ஒரு பெண்" இம்முறை கைமள் பதிலளித்தார்.

"அது எப்படி உங்களுக்குத் தெரிந்தது."

"நான் பூஜை செய்த கதலிப்பழம் ஒன்றைக் கொடுத்து அனுப்பி னேன். அதைச் சாப்பிடுபவர் மனிதராக இருந்தாலும், அமானுஷிகராக இருந்தாலும் அத்துடன் இல்லாமலாகியிருக்க வேண்டும். ஆனால், அதிலிருந்தும் அவள் எப்படியோ தப்பித் திருக்கிறாள்."

சோமதத்தன் மீண்டும், 'குட்டிமாளு' என்று அழைத்தார்.

இந்தத் தடவை யாரோ நடந்துவரும் காலடியோசை கேட்டது. சிவப்பு நிறப் பட்டுத்துணியை இடுப்பில் சுற்றி, அதே போன்ற மற்றொரு சிவப்புப் பட்டுத்துணி ஒன்றால் மார்புப் பகுதிகளை இழுத்துப் போர்த்தியபடி, சுருண்ட தலைமுடியுடன் அழகான இளம்பெண் ஒருத்தி அவர்களை நோக்கி நடந்து வந்தாள். அவள் நெருங்கியபோது இலஞ்சிப்பூவின் மணம் அந்தப் பகுதியில் பரவியது. அவள் தன் இரண்டு கைகளிலும் சிவப்புநிறப் பட்டுத் துணியில் பொதிந்த ஏதையோ வைத்திருந்தாள்.

தன் கையிலிருந்து பட்டுத்துணி முடிப்பை அவள் சோம தத்தனிடம் கொடுத்தாள். அப்போது அவள் கைவிரல்களைக் ஸ்பரிசித்த கைமளும், புவனேஸ்வரன் நாயரும் ஒருகணம் திடுக்கிட்டுப் போனார்கள்.

ஒவ்வொரு கையிலும் தலா நான்கு விரல்கள்தான் இருந்தன அவளுக்கு. அந்த விரல்களில் இருந்த நகங்களும் மிகவும் நீளமாகவும் கூர்மையாகவும் வளர்ந்திருந்தன.

கைமள் சட்டென்று அவள் பாதப் பகுதியைக் கவனித்தார். அந்தக் காட்சி ஒரு மாந்திரீகனான கைமளையே அசர வைத்தது. கைமளின் முகபாவத்தைக் கவனித்த புவனேஸ்வரன் நாயரும் அந்தப் பக்கமாகப் பார்வையைத் திருப்பினார்.

அந்தக் காட்சி மிகவும் விசித்திரமாக இருந்தது. குட்டிமாளு என்கிற அந்தப் பெண் உருவத்தின் பாதப்பகுதி பின்னோக்கி நீண்டிருந்தது.

சற்று நேரத்துக்கு முன் கண்ணுக்குத் தெரியாமல் வந்த குட்டிமாளு இப்போது ஆச்சரியகரமான ஒரு பெண்ணாகத் தென்பட்டாள்.

இப்படிப்பட்ட நபர்களை வைத்துக்கொண்டு வீட்டு வேலைகளை வாங்கும் சோமதத்தன், சாமானியமான மந்திரவாதியல்ல என்பது அவர்களுக்குத் தெளிவாகப் புரிந்தது.

குட்டிமாளு கொண்டுவந்த பட்டு முடிப்பை சோமதத்தன் மிகவும் கவனமாக அவிழ்த்தார். அதில் வட்டவடிவமான கண்ணாடி போன்ற ஒரு பொருள் இருந்து.

அதை வெளியே எடுத்த சோமதத்தன் அந்தத் துணியாலேயே நன்றாகத் துடைத்துவிட்டு நிலவிளக்கை ஒட்டி பூஜையறை வாசலில் வைத்தார்.

அதை உற்றுப் பார்த்தவாறு என்னென்னமோ மந்திரங்களை உச்சரித்துக்கொண்டு, அருகிலிருந்த திருநீற்றுச் சம்புடத்திலிருந்து திருநீறை எடுத்து அதன் மீது வீசினார்.

சட்டென்று அதன் நிறம் மாறியது.

சற்று நேரத்தில் அது சரியான ஒரு முகம் பார்க்கும் கண்ணாடி போல் பளபளத்தது. சோமதத்தனின் உதடுகள் தொடர்ந்து மந்திரங்களை உச்சரித்துக் கொண்டிருந்தன. ஒரு சில விநாடிகளுக்குள் அதில் தெளிவற்ற என்னென்னவோ வடிவங்கள் தென்பட்டத் தொடங்கின. விரைவிலேயே அவை தெளிவடையவும் செய்தன.



முதலில் ஒரு பழைய மனையின் திண்ணைப் பகுதியும், பூஜையறை வாசலில் எரியும் நிலவிளக்கும் தெளிவாகத் தெரிந்தன. அதன் அருகே இளைஞன் ஒருவன் அமர்ந்து ஓலைச்சுவடி ஒன்றைப் புரட்டிக் கொண்டிருந்தான்.

"அவன்தான் உண்ணிக்கிருஷ்ணன்" புவனேஸ்வரன் நாயர் சொன்னார்.

ஆனால், அவனுக்கு அருகில் எவரும் தென்படவில்லை. மிகவும் தெளிவாகத் தெரிந்த அந்த மாயக் கண்ணாடியின் மூலமாக அவர்கள் உண்ணிக்கிருஷ்ணனை மிகவும் நெருக்கத்தில் பார்த்தனர்.

"அவளும் வருவாள்; வராமல் இருக்க முடியாது" சோமதத்தன் கூறினார்.

அவர் அந்தக் கண்ணாடியையே பார்த்துக் கொண்டிருந்த போது, எதிரிலிருந்த நிலவிளக்கின் ஏழு திரிகளின் மஞ்சள் நிற வெளிச்சத்தில் புவனேஸ்வரன் நாயரும், கைமளும் சோமதத்தனை ஏற இறங்கப் பார்த்தார்கள்.

மிகவும் கம்பீரமான தோற்றம். உட்கார்ந்த நிலையிலேயே உயரமானவர் என்பது தெளிவாக விளங்கியது. ஆனால், அவர் கை கால்கள் அந்த உடம்புக்குப் பொருத்தமானவையாக இல்லை. அவை மெலிந்து காணப்பட்டன. முகம் மற்றும் உடம்பிலிருந்த தசைப் பகுதிகள் மிகவும் உறுதி வாய்ந்தவையாகத் தெரிந்தன. ஏறத்தாழ வட்டமான முகம் என்று சொல்லலாம். புருவப் பகுதிகளில் ரோமங்கள் குறைவாக இருந்தன. இடுங்கிய, சிறிய கண்கள், பதிந்தாற்போன்ற மூக்கு, சற்றுத் சிவந்த உதடுகள். மொத்தத்தில் அழகன் என்று சொல்ல முடியாமல் இருந்தார்.

கழுத்துப் பகுதியில் பெரிய ருத்திராக்ஷ மாலையும், காதில் சிவப்புக் கல் பதித்த கடுக்கனும் அணிந்திருந்தார்.

"அருகில் வேறு எவரையும் காணவில்லையே" சோமதத்தன் கூறினார்.

"அவளும் அந்த வீட்டில் இருக்கிறாள்" புவனேஸ்வரன் உறுதி நிறைந்த குரலில் பதிலளித்தார்.

சோமதத்தன் மீண்டும் மந்திரத்தை உச்சரித்தவாறு விபூதியை எடுத்து அந்தக் கண்ணாடியின் மீது வீசினார்.

இப்போது கண்ணாடியில் காட்சிகள் மாறத் தொடங்கின. நேராக அந்த மனைக்குள் நுழைந்து பார்ப்பது போல் உட்புற அறைகளும், கூடமும், முற்றமும் ஒவ்வொன்றும் தெளிவாகத் தெரிந்தன.

சமையலறை, சாப்பாட்டு அறை, உரல் போட்டிருக்கும் அறை போன்றவை தெரிந்தன. உரலறையில் நெல் கொட்டி வைக்கும் அகலமான மரப்பெட்டியின்மீது தனலட்சுமி பாய் விரித்துப் படுத்திருப்பதுகூடத் தெரிந்தது.

"ஒருவேளை அவள் அங்கிருந்து வெளியேறி இருப்பாளோ?" சோமதத்தன் கேட்டார்.

"அதற்கு வாய்ப்பே இல்லை. அவள் அந்த வீட்டுக்குள்தான் எங்கேயோ இருக்கிறாள்."

"மறுபடியும் ஒரு தடவை பார்த்தால் போகிறது."

உண்ணிக்கிருஷ்ணன் மறுபடியும் கண்ணாடியில் தெரிந்தான். எல்லாரும் வைத்த கண் வாங்காமல் கண்ணாடியைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

சற்று நேரத்துக்குள் நிலவிளக்கின் திரி சற்று நீண்டு, வெளிச்சம் அதிகரித்ததைக் கவனித்தனர்.

சோமதத்தனதும், கைமளினதும் கண்களில் ஒரு நிறமாற்றம் ஏற்பட்டது. புவனேஸ்வரன் நாயர் அதைக் கவனித்ததாகத் தெரியவில்லை. சோமதத்தனும் கைமளும் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

சற்று நேரத்தில் உண்ணிக்கிருஷ்ணன் தன் கையிலிருந்த ஓலைச்சுவடியை முன்புறமாக நீட்டினாள். மறு விநாடி அது அந்தரத்தில் நின்று, பிறகு பூஜையறைக் கதவு தானாகத் திறந்து கொண்டதும் உள்ளே போனது. அதேபோல் வேறொரு ஓலைச்சுவடி அந்தரத்திலேயே நகர்ந்து பூஜையறைக்கு வெளியே வந்து உண்ணிக்கிருஷ்ணனை அடைந்தது. தொடர்ந்து பூஜையறைக் கதவு அடைபட்டுக் கொண்டது.



இவற்றையெல்லாம் ஊன்றிக் கவனித்த சோமதத்தன், "நீங்கள் சொன்னதுபோல் அவள் வீட்டுக்குள்தான் இருக்கிறாள்" என்றார்.

"கண்ணில் தட்டுப்படவே இல்லையே?" புவனேஸ்வரன் நாயர் கேட்டார்.

"கொஞ்ச நேரத்துக்கு முன்னால் உங்களுக்கு இங்கேயே அதே போன்றதொரு அனுபவம் ஏற்படவில்லையா?" சோமதத்தன் கேட்டார்.

"அப்படியானால்..." கைமள் வார்த்தையை முடிக்காமல் நிறுத்தினார்.

"அவளும் இதே மாதிரித்தான்னு அர்த்தம்!"

"கடவுளே, அப்படியென்றால் அவள்தான் இவ்வளவுக்கும் காரணமா?" புவனேஸ்வரன் நாயர் கேட்டார்.

"அப்படி என்ன நடந்தது?"

இதற்கு முன்பு நடந்த அதிசயகரமான சம்பவங்களையெல்லாம் புவனேஸ்வரன் நாயர் சோமதத்தனிடம் விளக்கினார். தன் மகன்கள் மரணமடைந்தது உட்பட்ட எல்லாவற்றையும் மறைக்காமல் கூறினார்.

சோமதத்தனின் நெற்றியில் சுளிவுகள் உயர்ந்தன. அவர் மூக்கு சிறுத்தது. கண்களில் கோபம் ஜ்வலித்தது. மறுபடியும் விபூதிச் சம்புடத்தில் கையை விட்டவர் அதியுக்கிர தூமாவதி தேவதையைத் தியானித்தவாறு உக்கிரமான மந்திரங்களை உச்சரித்தார். ஒவ்வொரு முறையும் அவரது உச்சரிப்புக்கு ஏற்றவாறு, அதன் சக்தியை விளக்குவதுபோல் நிலவிளக்கில் திரியின்தீபம் உயர்ந்தும் தாழ்ந்து கொண்டுமிருந்தது. கடைசியாக அவர் விசையுடன் விபூதியைக் கண்ணாடியின் மீது வீசினார்.

சட்டென்று மாயக் கண்ணாடியிலிருந்து மிகவும் பிரகாசமான ஒளியொன்று அம்பு பாய்ந்து வருவதுபோல் வெளியே வந்தது. அதைத் தொடர்ந்து ஒரு கை வெளிப்புறமாக நீண்டு வந்தது. நிலவிளக்கில் எரிந்து கொண்டிருந்த மொத்தத் திரிகளையும் வாரிக் நசுக்கி அணைத்தது.

அந்தப் பகுதியே இருளில் மூழ்கியது.

"ஓகோ, அப்படியா சேதி" என்று சொல்லிய சோமதத்தன் தன் இடது காதில் போட்டிருந்த சிவப்பு வைரம் பதித்த கடுக்கனை அவிழ்த்து எடுக்காமல் பிடுங்கி நிலவிளக்கின் முன்பாக எறிந்தார்.

அது தரையில் விழுந்த விநாடியில் தரையிலிருந்து தீ ஜுவாலை ஒன்று உயர்ந்து நிலவிளக்கின் உயரத்துக்கு நின்றது.

அறுபட்ட காதிலிருந்து ரத்தம் வடிந்து கொண்டிருந்த போதும் சோமதத்தன் அதைச் சட்டை செய்ததாகத் தெரியவில்லை.

ஜொலிக்கும் நெருப்பு ஜுவாலையின் ஒளியில் சோமதத்தன் மாயக் கண்ணாடியைப் பார்த்தார்.

கண்ணாடியின் பளபளப்பு மறைந்திருந்தது. முடிப்பிலிருந்து அவிழ்த்து எடுத்தபோது அது எப்படி இருந்ததோ, அதே நிலைக்குத் திரும்பியிருந்தது.

சோமதத்தன் கண்ணாடியைக் கையில் எடுத்தார்.

எரிந்து கொண்டிருந்த ஜுவாலைக்கு நேராகக் கண்ணாடியைக் கவிழ்த்துப் பிடித்தார். அவர் கையும் ஜுவாலையில் மூழ்கியிருந்தது.

ஜுவாலையை அழுத்துவது போல் அவர் கை கீழ்ப்புறமாக இறங்கியது. சட்டென்று உயர்ந்த ஜுவாலை கண்ணாடியையும் கையையும் மேற்புறமாக உந்தித் தள்ளியது.

"ஓகோ... என்னிடமே விளையாட ஆரம்பித்து விட்டாயா?" என்று சோமதத்தன் வலது காதிலிருந்த கடுக்கனையும் பிடுங்கி வீசி எறிந்தார்.

**அ**தே நேரம் உண்ணிக்கிருஷ்ணன் பனங்காட்டு மனையின் வராந்தாவில், நிலவிளக்கின் அருகில் அமர்ந்து ஓலைச் சுவடியை வாசித்துக் கொண்டிருந்தான். அருகிலேயே மந்தாகினி அமர்ந்திருந்தாள். அவ்வப்போது அவள் உண்ணிக்குத் தெரியாமல் வலது கையால் என்னவெல்லாமோ செய்து கொண்டிருந்தாள்.

வலது கையை மேற்புறமாக உயர்த்தியும், தாழ்த்தியும் அவள் எதையோ செய்வதை எதேச்சையாகக் கவனித்த உண்ணி கேட்டான் "என்ன மந்தாகினி இதெல்லாம்? ஈயைப் பிடிச்சு விளையாடுறியா என்ன?"



"ஆமாங்க.. பெரிய பல்லி ஒண்ணு, இதோ பாருங்க" அவள் தரையில் மூடியபடி பொத்தி வைத்திருந்த கையை உயர்த்தினாள். அதே விநாடி அவள் கையிருந்த இடத்திலிருந்து மிகப்பெரிய பல்லி ஒன்று நிலவிளக்கின் மீது பாய்ந்தது.

"இவ்வளவு பெரிய பல்லி கூடவா இருக்குது?" என்று வியப்புடன் பல்லியைப் பார்த்தான் உண்ணிக்கிருஷ்ணன்.

பல்லியின் ஒரு காதருகே ரத்தப்பொட்டு தெரிந்தது.

## 12

**ப**ல்லியின் காதுப் பகுதியில் ரத்தம் தென்பட்டதும் மந்தாகினிக்குச் சந்தேகம் தோன்றியது.

அவள் அதைப் பிடிக்க முயன்றாள். ஆனால், கைகளிலிருந்து நழுவிப் போன அந்தப் பல்லி, நிலவிளக்கிலிருந்து குதித்துப் பூஜை அறையின் தாழ்ப்பாள் மீது ஏறி மேற்புறமாக உயரத் தொடங்கியது.

மேற்புறமிருந்தபடி அது கீழ்ப்புறமாகப் பார்ப்பதை மந்தாகினியும் உண்ணியும் கவனித்தனர்.

மந்தாகினி ஒரு பூவைக் கிள்ளியெடுக்கும் லாகவத்துடன் நிலவிளக்கின் ஒரு திரியிலிருந்து தீப ஒளியை மட்டும் பறித்தெடுத்துப் பல்லியின் மீது எறிந்தாள்.

சட்டென்று அதற்கு இறக்கைகள் முளைத்தன. விசித்திரமான ஒரு பறவையாக வடிவமெடுத்த அது, வெளிப்புறமாகப் பறந்து போனது.

**அ**ப்போது புவனேஸ்வரன் நாயர் மற்றும் கைமளின் முன்பாகச் சமாதியில் அமர்ந்திருந்த மாந்திரீகனான சோமதத்தன் கண்களைத் திறந்தார்.

"உண்மைதான். ஆனால், ஒரு விஷயம். தற்சமயம் அப்படியொரு பெண் அங்கே இருப்பதை நீங்கள் தெரிந்து கொண்டதாகக் காட்டிக் கொள்ளக்கூடாது. அவளுக்கு எந்தவிதமான தொல்லையும் தருவதற்கு முயற்சிக்கக் கூடாது!" சோமதத்தன் கூறினார்.

“ஒப்புக்கொள்கிறோம். ஆனால், அவள்தானே எங்களுக்குத் தொல்லை தருகிறாள்.”

“இப்போது ஓர் உண்மையைத் தெரிந்து கொள்ளுங்கள். உங்களால் அவளை ஒருபோதும் எதிர்க்க முடியாது. அதை என்னிடம் விட்டுவிடுங்கள். நான் பார்த்துக் கொள்கிறேன்.”

“ரொம்பவும் நல்லது. அப்படியானால் இது இங்கேயே இருக்கட்டும்!” என்று கூறிய நாயர் தன் கழுத்தில் கிடந்த தங்கச் செயினை கழற்றியெடுத்து சோமதத்தனின் காலடியில் வைத்தார்.

உடனே சோமதத்தன் அதை எடுத்து நிலவிளக்கின் எண்ணெய் இருந்த பகுதியில் போட்டார்.

“சரி... நீங்கள் புறப்படலாம்” சோமதத்தன் விடை கொடுத்தார்.

புவனேஸ்வரன் நாயரும், கைமளும் அங்கிருந்து புறப்பட்டனர். வரும் வழியெங்கும் காரிருள் நிறைந்திருந்தது. ஆகாயத்தில் நிலவு காணாமல் போயிருந்தது. அதற்குப் பதில் நட்சத்திரங்களின் ஒளி பரவியிருந்தது. அந்த அரண்ட வெளிச்சத்தில் சட்டையைக் கழற்றிப் போட்ட ஒரு பாம்பைப் போல் வளைந்து வளைந்து சென்றது ஒற்றையடிப் பாதை.

“மணி பதினொன்றாகியிருக்குமென்று தோன்றுகிறதே!” நாயர் கைமளைப் பார்த்துக் கேட்டார்.

கைமள் உடனே ஆகாயத்தைப் பார்த்தார். நட்சத்திரங்களின் நிலையை வைத்து நேரத்தைக் கணித்தார்.

“மணி பதினொன்றுக்கு மேல் ஆகிவிட்டிருக்கிறது” கைமள் கூறினார்.

ஒற்றையடிப் பாதை திரும்புமிடத்துக்கு வந்தபோது, டீக்கடைக் காரர் கடையை மூடும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார்.

“என்னங்க கைமள், ஒரு காபி சாப்பிடலாமா?” நாயர் கேட்டார்.

“நானும் அதையேதான் உங்களிடம் சொல்ல நினைத்தேன் நீங்கள் கேட்டு விட்டீர்கள்” கைமள் திருப்பிச் சொன்னார்.



இருவரும் கடைக்குள் நுழைந்தனர்.

“காபி வேணுமுங்களா உங்களுக்கு?” கடைக்காரர் கேட்டார்.

“ஆமாங்க.”

“நீங்க அங்கேயே தங்கியிருக்கலாமே. தங்காமப்போனதுகூட ஒருவகையில் நல்லதுக்குத்தான்.”

கடைக்காரர் காபியைக் கொண்டுவந்து டேபிள் மீது வைத்தபோது கைமள் கேட்டார்: “எதற்காக அப்படிச் சொன்னீர்கள்?”

“நீங்க அங்கே தங்கியிருந்தா உங்களால நிம்மதியாப் படுத்துத் தூங்கியிருக்க முடியாது. அங்கே இருக்கிறதெல்லாம் ரக்ஷஸுங்க. அதனால தங்காமத் திரும்பிட்டதுகூட நல்லதுதான்.”

இந்தப் பதிலைக் கேட்ட இருவரும் மனதுள் பயப்படவே செய்தார்கள்.

“சரி, அதெல்லாம் இருக்கட்டும். இந்த நேரத்துக்கு மேல எப்படி ஊருக்குத் திரும்புவீர்கள்? கிட்டத்தட்ட நடுராத்திரியாகிவிட்டதே” கடைக்காரர் கேட்டார்.

“அதுக்கென்ன, பரவாயில்லை. நாங்க மெதுவா நடக்க ஆரம் பிச்சுடுவோம்.”

“நீங்க எங்கே போகணும்?”

“திருவல்லூர் போகணும்.”

“அப்படின்னா அந்த ஒரே வழிதான் இருக்கு. ரெண்டு ரெண்டரை மணி நேரம் நடக்கணும். பொழுது விடியறதுக்குள்ள போய்ச் சேர்ந்துடலாம்.”

“ரொம்ப நல்லதாப் போச்சு. சுருக்கு வழி ஏதாவது இருந்தா சொன்னால் ரொம்ப உதவியா இருக்கும்.”

டீக்கடைக்காரர் வழியை விளக்கினார்.

இருவரும் நடக்கத் தொடங்கினர்.

அது மாட்டுவண்டி செல்லும் பாதை. ஏறத்தாழ ஒரு மணி நேரம் நடப்பதற்குள் கால்கள் களைப்பு அடைந்தன. சுற்றுமுற்றும் பார்த்தபோது இடது புறத்தில் கோயில் ஒன்று தென்பட்டது.

அதற்குள் நிலவு உதித்து விட்டிருந்தது. நிலவொளியில் குளித்துக் கிடக்கும் கோயிலைப் பார்த்ததும் கைமள் சொன்னார். "கொஞ்ச நேரம் உட்கார்ந்து ஓய்வெடுத்த பிறகு நடக்கலாமே?"

"அப்படியே செய்யலாம்."

கருவறைச் சுற்றுச்சுவரின் வெளிப்பகுதியில் அவர்கள் ஒரு பிரத்தியேகமான காட்சியைக் கண்டனர். அங்கு சில தேவி விக்கிரகங் களைப் பிரதிஷ்டை செய்திருந்தனர்.

"இந்த இடம் மிகவும் விசித்திரமாக உள்ளது" கைமள் உட்கார்ந்தவாறு பேசினார்.

எங்கேயோ ராக்கோழி ஒன்று கூவும் சத்தம் கேட்டது.

"கொஞ்ச நேரம் இப்படியே கண்ணை மூடலாமில்லையா?" நாயர் கைமளிடம் கேட்டார்.

"அதற்கென்ன... படுத்தால் போகிறது" கைமள் பதிலளித்தார்.

இருவரும் அங்கிருந்த மண்டபத்தில் படுத்தனர்.

மல்லாந்து படுத்திருந்த கைமளின் கண்கள் ஆகாயத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தன.

'இன்று துர்காஷ்டமி நாளாயிற்றே" கைமள் யோசித்துப் பார்த்தார். சட்டென்று அவர் உடம்பிலிருந்த மயிர்க்கால்கள் சிலிர்த்து எழுந்து நின்றன.

முதல் பார்வையிலேயே அது ஒரு பகவதி கோயில் என்பது அவருக்குத் தெரிந்துவிட்டது. அதனால் துர்காஷ்டமி என்பது அவரை நடுங்கச் செய்தது.

'இரவு நேரத்தில் பகவதி நீராடப் போவார். கூடவே அவரின் பரிவாரங்களும் போகும். தேவியுடன் அவர் பரிவாரம் மற்றும் காவல்கார தேவதைகளும் செல்வார்கள்.



அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் தேவி தங்களைக் கவனித்து விட்டால் தங்களின் கதி என்ன ஆகுமோ?' என்று பயந்தார் கைமள்.

அப்போது கைமளின் பார்வை யதேச்சையாகக் கருவறைச் சுற்றுச்சுவரின் மீது பதிந்தது.

அந்தச் சுவரில் ஏராளமான சிற்பங்கள் இருந்தன. நிலவொளியில் அந்தச் சிற்பங்கள் நிழலும் வெளிச்சமும் கலந்து ஒருவித அழகை ஏற்படுத்தவே செய்தன.

கைமள் அங்கிருந்து எழுந்து ஒவ்வொரு சிலையாகப் பார்க்கத் தொடங்கினார். ஒவ்வொன்றும் ஒவ்வொரு மோகினியின் சிலை என்பதும் அவருக்குப் புரிந்தது.

ஏறத்தாழ எல்லாம் ஒரே மாதிரியாக இருந்தன சிற்பங்கள். அதாவது முழுமையடைந்த சிலைகள்.

மோகினி சிலைகளுக்கோ, ஓவியங்களுக்கோ முழுமை கிடைத்து விட்டால், அவை உடனடியாகச் செயல்படத் தொடங்கி விடும் என்பதை ஏதோ ஒரு சுவடியில் வாசித்திருப்பது கைமளுக்கு நினைவு வந்தது.

முன்னொரு காலத்தில் யாரோ ஒரு தேர்ந்த ஓவியன் வடதிசையி உள்ள கோயில் ஒன்றின் வெளிச்சுவரில் ஒரு மோகினியின் ஓவியத்தை முழுமையாக வரைந்து முடித்தான்.

எல்லா லட்சணங்களும் பொருந்தியிருந்ததால் மோகினியின் ஓவியம் உடனேயே உயிர் பெற்றது.

அவள் உறங்கிக் கொண்டிருந்த ஓவியனை நெருங்கினாள்.

அவனை எழுப்பினாள்.

உறக்கத்திலிருந்து திடுக்கிட்டு எழுந்த ஓவியன், தனக்கு முன்னால் தேவதை போல் பேரழகி ஒருத்தி நிற்பதைக் கவனித்தாள்.

உண்மையிலேயே அவள் அழகில் ஓவியன் ஒரு விநாடி மயங்கிப் போனான். அந்த அளவுக்கு அவள் பேரழகியாக இருந்தாள்.

அவள், அவனை அழைத்தாள்.

சாவி கொடுத்த ஓர் இயந்திரத்தைப் போல ஓவியன் அவளைப் பின்தொடர்ந்தான்.

ஒரு பெரிய பனை மரத்தின் அடிப்பகுதிக்கு வந்ததும், அவள் அவன் கைகளைப் பிடித்துக் கொண்டாள்.

சாதாரணமான ஒருவன் படிக்கட்டில் ஏறுவதுபோல், அவன் அந்தப் பனை மரத்தின் மீது ஏறினான். அப்போது, தான் ஏறிக் கொண்டிருப்பது பனைமரம் என்பது அவனுக்குத் தெரியவில்லை.

மேற்புறத்தை அடைந்தபோது அங்கே அழகான ஒரு கட்டில் கிடப்பதைக் கவனித்தான். அதில் உடைகள் ஏதுமில்லாமல் அந்த மோகினி படுத்துக் கொண்டாள்.

ஓவியன் அவள் அழகைக் கண்ணாரப் பருகினான். கடைசியில் அவன் மோகினியின் ஆசைக்கு இணங்க வேண்டியதாயிற்று.

மறுநாள் காலையில் பனைமரத்தின் அடியில் ஓர் இளைஞனின் உடைகளும், நகங்களும், முடிக்கற்றைகளும் கிடந்ததை ஊரார் பார்த்தனராம்.

அதன்பிறகு அந்த ஊரில் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடப்பது வழக்கமாகி விட்டன.

ஒரு கட்டத்தில் அந்தப் பனைமரத்தை வெட்டுவதென்று ஊரார் தீர்மானித்தனர். ஆனால், அதன் முடிவு மிகவும் விபரீதமாக இருந்தது. பனைமரத்தை வெட்டுவதற்காக ஓங்கிய கோடரி எங்கோ பறந்துபோய் கண்ணிமைக்கும் நேரத்தில் திரும்பிவந்து, மரம் வெட்ட வந்தவனையே வெட்டிச் சாய்த்துவிட்டதாம்.

அந்தக் காலத்தில் நம்பூதிரி ஒருவர் அந்த வழியாக வந்தார். அவர் மந்திர வித்தைகளில் தேர்ந்தவராக இருந்தார். தன்னை அழைத்துக் கொண்டுபோன மோகினியுடன் உடலுறவு கொண்ட அவர், கடைசியாக அவளை அடிமைப்படுத்தி, தன் மனைவியாக்கிக் கொண்டு உடன் அழைத்துச் சென்றார்.

அங்கிருந்த சிற்பங்கள் எல்லாமே அப்படிப்பட்ட மோகினிகளாக இருந்தன. எனவே, இவர்களும் அதுபோல் ஆவதற்கு வாய்ப்பு உள்ளது என்று அவருக்குப் புரிந்தது.



ஒவ்வொன்றாகப் பார்த்துக் கொண்டே வந்தவர், ஓர் இடத்துக்கு வந்ததும் சற்று நின்றார்.

அந்த இடத்தில் ஒரு சிலை இருந்ததற்கான அடையாளம் இருந்தது. ஆனால், சிலையைக் காணவில்லை!

கைமளின் ஆர்வம் அதிகரித்தது. இருப்பினும் அந்த விஷயத்தை வெளியே சொல்லாமல் மனதுக்குள்ளேயே பத்திரப்படுத்தினார்.

இப்போதைய சூழ்நிலையில் இந்த விஷயத்தை புவனேஸ்வரன் தம்பியிடம் கூறினால், அவர் அதற்கான விளக்கத்தைக் கேட்பார். அதை விவரிக்காமல் போனாலோ, அதில் அவர் திருப்திப்படவில்லை என்றாலோ தன் மகளின் கதி அதோகதியாகிவிடும்.

அதிகாலையில் சேவல் கூவியதும் கண்விழித்து எழுந்தவர்கள் அங்கிருந்து தங்கள் பயணத்தைத் தொடர்ந்தனர். தாங்கள் போன காரியம் நல்லபடியாக முடிந்துவிடும் என்ற நம்பிக்கை பிறந்ததால் தாயார் ஓரளவு ஆறுதலடைந்தார்.

பயண விவரத்தைத் தன் நான்காம் மகனிடம் மட்டும் கூறினார். அப்பாவின் வார்த்தைகள் அவனுக்கு மிகுந்த தைரியத்தை ஊட்டியது. 'அப்படியானால் இனிமேல் தாங்கள் பயப்பட வேண்டியதில்லை' என்று நினைத்துக் கொண்டான்.

காலை வேளையில் மந்தாகினியும் உண்ணியும் சேர்ந்து இல்லத்தின் பின்புறமிருந்த குளத்தைச் சுத்தப்படுத்தும் வேலையில் ஈடுபட்டிருந்தனர்.

"ஏங்க, உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா? இதில் உங்கள் தாத்தா ஒருவர் மூச்சுத் திணறிச் செத்துப் போயிருக்கிறார். அவரை அப்படிக் கொலை செய்தவர்கள் புவனேஸ்வரன் நாயரின் ஆட்கள்தான்" மந்தாகினி கூறினாள்.

அதைக் கேள்விப்பட்டதும் வியப்பு அடைந்த உண்ணி கேட்டான்: "இதெல்லாம் உனக்கு எப்படித் தெரிந்தது?"

"தனலட்சுமிதான் சொன்னாள்."

"ஆமாம், அவளுக்கு அதெல்லாம் தெரிஞ்சிருக்கும்."

“என்னங்க தம்புரான்...” குளத்தைத் தூர் வாரிக் கொண்டிருந்த நாணப்பன் பேச்சைத் தொடங்கினான்.

“என்ன சொல்ல வந்தீங்க, சொல்லுங்க” மந்தாகினி தூண்டினாள்.

“இதோ, இதையொட்டிக் கிடக்கிற தோட்டமும் நம்ம இல்லத்தைச் சேர்ந்ததுதான். இப்போ இதெல்லாம் பெரிய வீட்டுக்காரருக்குச் சொந்தமா இருக்கு.”

“எனக்கும் இந்தச் சந்தேகம் ரொம்ப நாளாவே இருக்கு.”

“அது எப்படி சாத்தியம்?” உண்ணி கேட்டான்.

“என்னமோ தோணுச்சு. இதெல்லாம் நமக்குத் திரும்பக் கிடைக்குமா?” மந்தாகினி கேட்டாள்.

“எங்கேருந்து? ரெண்டு ஏக்கர் நிலம். நல்ல வருமானம் உள்ளதும் கூட.”

“எதுக்காக நாணப்பா வீணான பேச்செல்லாம். எதுக்கும் ஜாக்கிரதையா இருந்துக்க” அங்கு வேலை செய்து கொண்டிருந்த சாக்கோ எச்சரிக்கை செய்தான்.

“நீ அப்படித்தான் சொல்லுவே. நீ அவங்களோட ஆளாச்சே. என்னால உண்மையைச் சொல்லாம இருக்க முடியாது. இப்பச் சின்னத் திருமேனியால நல்லாப்பேச முடியுது. காதும் கேக்குது. அதனால மேற்கொண்டும் இவரு ஏன் ஏமாறணும்?”

சாக்கோவுக்கு இந்தப் பேச்சு அவ்வளவாகப் பிடிக்காததால், சட்டென்று முகத்தைத் திருப்பிக் கொண்டான். அன்றைய வேலை முடிந்ததும் சாக்கோ, நேராகப் பெரிய வீட்டுக்குப் போய் அன்று நடந்த விவரத்தைக் கூறினான்.

“ஓகோ, அந்த அளவுக்கு ஆயிடுச்சா?” கோபம் கொண்ட நாயர் தன் மகன் மதுசூதனனை அழைத்தார்.

எங்கிருந்தோ ஓடி வந்தவன் அவருக்கு முன்பாக நின்றான்.

“அந்த நாணப்பனுக்கு வாய் ரொம்பவும் நீண்டு போயிட்டதாத் தோணுது. சாக்கோ சொல்றதைக் கவனி.”



அப்பாவின் வார்த்தைகளைக் கேட்டவுடன் மதுசூதனன், சாக்கோவுடன் புறப்பட்டான்.

இருவரும் வந்து சேர்ந்த இடம் கள்ளுக்கடைதான்.

“அந்த நாணப்பனுக்கு ஒரு மகள் இருக்கிறாள் இல்லையா?” மதுசூதனன் கேட்டான்.

“இருக்கிறாள். நல்ல அழகான பொண்ணு. பத்தாம் கிளாஸ் முடிச்சுட்டு வீட்டுல இருக்கிறாள்” சாக்கோ கூறினான்.

“வயசு பதினாறுக்கு மேல ஆகலைன்னா சொல்றே? அந்தப் பக்கமா ஒருநடை போயிட்டு வந்தா என்ன?”

“இப்ப நாணப்பன் வீட்டுல இருப்பானே?”

“அதுக்குத்தான் ஓர் ஏற்பாடு பண்ணிருக்கிறேன். நம்மளோட ஒற்றை மாட்டுவண்டியைக் கொண்டு போகலாம். வண்டியில பூட்டிட்டு வந்தா யாரும் சந்தேகப்பட மாட்டாங்க. நாணப்பனைக் கட்டிப் போட்டு அவளைத் தூக்கி வண்டியில் போட்டுக்க வேண்டியது தானே?”

“நல்ல யோசனைதான்.”

இருவரும் ஒற்றை மாட்டு வண்டியில் ஏறி நாணப்பனின் வீட்டை நோக்கிப் பறந்தனர்.

மணி பதினொன்றுக்கு மேல் ஆகிவிட்டிருந்தது.

வெளியே வண்டி வந்து நிற்கும் சத்தம் கேட்டதும் நாணப்பன் வெளியே வந்து பார்த்தான். மதுசூதனன் ஓங்கி மிதித்ததில் நாணப்பன் சத்தம் போடக்கூட மறந்தவனாகச் சுருண்டு விழுந்தான். சாக்கோ அவன் கை கால்களைக் கயிறால் கட்டி, வாயில் துணியைத் திருகி ஓர் ஓரமாகப் போட்டான்.

இதைப் பார்த்துக்கொண்டே ஓடிவந்த மகளை வாயைப் பொத்திப் பிடித்துக் கொண்டான். அவளை வண்டியில் போட்டுக் கொண்டு இருவரும் அங்கிருந்து கிளம்பினர்.

பௌர்ணமி நிலவு பகல் போல் வெளிச்சத்தை வாரி இறைத்திருந்தது.

மாட்டு வண்டி முன்புறமாக ஓடியது.

பதினாறு நிறையாத இளம் பெண் ஒருத்தி வண்டியில் அவர்களுடன் மல்லாடிக் கொண்டு வந்தாள்.

“சாக்கோ, நீ வண்டியை ஓட்டு. நான் அவளைக் கவனிச்சுகிறேன்” மதுசூதனன் வண்டியின் உட்புறமாக நகர்ந்தான்.

அவளை நெருங்கிய மதுசூதனன் அவளது பாவாடையை இழுத்தான்.

“ஏங்க எஜமான்” சாக்கோ சட்டென்று குரல் கொடுத்தான்.

“என்னய்யா?” மதுதுனன் கோபத்துடன் திருப்பிக் கேட்டான்.

“இதோ பாருங்க... எனக்கு ரொம்பவும் பயமா இருக்கு” சாக்கோ வண்டியின் முன்புறம் கையைச் சுட்டிக் காட்டினான்.

ஓடிக்கொண்டிருந்த மாடு சட்டென்று நின்றது. காளை மாடு நின்ற நிலையிலேயே தலையைத் திருப்பிப் பின்புறம் பார்த்தது.

மதுசூதனனும் சாக்கோவும் திடுக்கிட்டனர்.

## 13

**மா**ட்டு வண்டியை ஓட்டிக் கொண்டிருந்த சாக்கோ, தன் சந்தேகத்தை உறுதிப்படுத்துவதற்காக மீண்டும் முன்புறமிருந்த மாட்டைப் பார்த்தான்.

எதிரே தெரிந்த காட்சி உண்மைதான். அதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை.

ஒரு பொம்மை தனது கழுத்தை மறுபுறம் திருப்பிக் கொள்வது போல் மாடு தனது கழுத்தைத் திருப்பிக் கொண்டிருந்தது. அத்துடன் சாக்கோவை உற்றுப் பார்க்கவும் செய்தது.

அதன் பார்வையின் கடுமை சாக்கோவுக்குப் புரியவே செய்தது. வண்டிக்குள் வைத்திருந்த லாந்தர் விளக்கின் வெளிச்சம் மாட்டின் கண்களில் மோதித் தெளிவாகப் பிரதிபலிக்கவும் செய்தது. பளிங்கு உருண்டைகள் போல் அந்தக் கண்கள் ஜொலித்தன.



அப்படியும் சந்தேகம் தீராதவனாக சாக்கோ லாந்தரின் திரியை இறக்கிவிட்டுக் கவனித்தான். ஆனால், மாட்டின் கண்களில் தெரிந்த ஜொலிப்பு குறைவதாகத் தெரியவில்லை.

"பாருங்க, மாடு என்னை மிரட்டுறதை."

மதுசூதனனும் அதைக் கவனிக்கவே செய்தான். அவன் உடம்பு அப்போது பயத்தால் கிடுகிடுவென்று நடுங்கத் தொடங்கியிருந்தது.

காளை மாடு திடுமென்று பெரிதாகத் தொடங்கியது. அதற்கேற்றாற் போல் வண்டியின் பின்புறம் கீழ்நோக்கிச் சரியவும் தொடங்கியது.

ஒரு சில விநாடிகளுக்குள் வண்டியின் முன்பாகம் மேற்புறமாக உயர்ந்தது. திரும்பிக்கொண்ட காளை பின்னங்கால்களை மேலும் உயர்த்தியது. அப்போது வண்டியின் பின் பக்கமிருந்த நாணப்பனின் மகள் பொத்தென்று தரையில் விழுந்தாள். அவள் சுதாரித்து எழுந்து ஓட முற்படுவதற்குள் யாரோ அவளைப் பிடித்துக்கொண்டது தெரிந்தது. யாரென்று திரும்பிப் பார்த்தாள். நல்லவேளை, யாரோ ஒரு பெண்மணி, வேட்டியும் ரவிக்கையும் அணிந்திருந்தாள். அழகான பெண்மணி.

"அந்தப் பக்கமாகப் போய் நில்" பிடித்த பெண் நாணப்பனின் மகளிடம் கூறினாள். அவள் சட்டென்று அருகிலிருந்த மரத்தின் மறைவில் போய் நின்றுகொண்டாள்.

அதேநேரம் மதுசூதனனும் சாக்கோவும் வண்டியிலிருந்து குதிக்க முயன்றனர். சாக்கோ குதித்த உடனேயே அதன் நுகத்தடி மீது ஒரு பாதம் வந்து பதிந்தது. மிகவும் பெரியதாக இருந்த அந்தப் பாதம், நுகத்தடியை இரண்டாகப் பிளக்கவும் செய்தது. நுகத்தடியிலிருந்து விடுபட்ட மாடு முன்புறமாக ஓடி மறைந்தது.

மதுசூதனன் மேற்புறம் பார்த்தான். ஏறத்தாழ ஆறு ஆள் உயரமுள்ள ஒரு பெண். அவன் உடலில் நடுக்கம் மெதுவாக ஊடுருவத் தொடங்கியது. ஆலமரத்தின் விழுதுகள் போல் முடிக்கற்றைகள் தொங்கின. இருளை அடை காப்பது போன்ற கருமையான தலைமுடி. அழகாக இருந்தாலும் அசாதாரணமான உயரமும் அகலமும் அவனைப் பயப்படுத்தியது. கீழ்ப்புறமாகத் தாழ்ந்து வந்த அதன் கை மதுசூதனனை ஒரு பொம்மையைப் போல் பிடித்து மேற்புறமாக உயர்த்தியது.

சரியாக அவன் கழுத்தில்தான் அந்தக் கை பதிந்திருந்தது. சற்று நேரம் கையையும் காலையும் உதறிய மதுசூதனன் விரைவிலேயே அசைவற்றுப் போனான். உடனேயே அந்த உடல் பொத்தென்று வண்டியின் மீது விழுந்தது. இதையெல்லாம் பீதி நிறைந்த கண்களுடன் பார்த்துக் கொண்டிருந்த சாக்கோ, ஒரு பெரிய மரத்தின் மறைவில் நடுங்கியபடி நின்று கொண்டிருந்தான்.

நாணப்பனின் மகள் இந்தக் காட்சியைப் பார்த்த சில விநாடிகளிலேயே மயக்கமடைந்து அப்படியே தரையில் சரிந்தாள். அவள் கண் விழித்தபோது தனது வீட்டுக்குள் வழக்கமாகப் படுத்துக் கொள்ளும் இடத்தில் படுத்திருப்பதை உணர்ந்தாள். இரவு நடந்தவை மோசமான ஒரு கனவு போலத் தோன்றியது. அதையெல்லாம் உண்மையான சம்பவம் என்று அவளால் எப்படி நம்ப முடியும்? நம்பக்கூடிய விஷயங்களா அவை? எனவே, அதை ஒரு பேய்க்கனவாக நினைத்தாள்.

பொழுது விடிந்தவுடன் ஊருக்குள் ஒரே களேபரமாக இருந்தது. அவளது வீட்டின் முன்புறமிருந்த மண்சாலை வழியாக ஆட்கள் திபுதிபுவென்று ஓடிக் கொண்டிருந்தனர்.

“என்னடி முழிச்சிட்டு நிற்குறே? நீ வரலியா இந்த அதிசயத்தப் பார்க்க!” அந்த வழியாக அவசர அவசரமாக வந்து கொண்டிருந்த கல்யாணியம்மா அவளை அழைத்தாள்.

“என் விஷயம் மாமி?” அவள் கேட்டாள்.

“பெரிய வீட்டு வில் வண்டியை யாரோ தூள் தூளா நொறுக்கிப் போட்டிருக்காங்க. கூடவே மதுசூதனனையும் கொலை பண்ணியிருக்காங்க.”

உண்மையிலேயே அந்தச் செய்தி அவளை நடுங்க வைத்தது.

‘அப்படியானால் கனவென்று தான் நினைத்துக் கொண்டிருப்பதெல்லாம் உண்மைதானா?’ என்று குழம்பியவள் அந்தச் சம்பவத்தை மறுபடி நினைவுகூர முயன்றாள்.

“என்னடி மலைச்சுப் போய் நிக்குறே? வர்றியா, இல்லையா?” கல்யாணியம்மா கேட்டாள்.



அவளுக்குத் தலை சுழல்வது போல் தோன்றியது. மறுபடி வீட்டுக்குள் போய்ப் படுத்துக் கொண்டாள்.

திபுதிபுவென்று வந்தவர்கள் தகர்ந்து கிடந்த மாட்டு வண்டியையும் அதன்மீது காவடி போல் வளைந்து தொங்கிக் கொண்டிருந்த மதுசூதனின் பிணத்தையும் திறந்த வாய் மூடாமல் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அந்த வண்டியிலிருந்து விடுபட்ட மாடு சற்றுத் தொலைவில் மேய்ந்து கொண்டிருந்தது.

“சமீப காலமாகப் பெரிய வீட்டில் நடப்பதெல்லாம் இப்படிப்பட்ட துர்மரணங்களாக இருக்கிறதே?” கூட்டத்தில் ஒருவனாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த நாராயணன் நம்பீசன் தன் நண்பனான கிருஷ்ணனைக் குறுப்பிடம் கூறினான்.

“உண்மைதான். அந்தக் கணக்குல இது மூணாவது மரணம்.”

“கிடக்கிறதைப் பார்த்தா சந்தேகமில்லாம யாரோ கொலை பண்ணிப் போட்டிருக்கிறதாத்தான் தோணுது. விபத்தா இருந்தா பிணம் இந்த மாதிரித் தொங்கிக் கிடக்க வழியே இல்லை” நம்பீசன் கூறினான்.

ஊரே பரபரப்புடன் இதைப்பற்றி விவாதித்துக் கொண்டிருந்தாலும் புவனேஸ்வரன் நாயர் மட்டும் அந்தப் பக்கம் எட்டிக்கூடப் பார்க்கவில்லை. அவருக்கு இதை;வட அவமானகரமான விஷயம் வேறு ஏதாவது இருக்க முடியுமா? புவனேஸ்வரன் நாயர் தீவிரச் சிந்தனையில் ஆழ்ந்தார்.

பெரிய வீட்டுக்கார மதுசூதனன் மாட்டு வண்டியின் மீது ஒரு பிணமாக வளைந்து கிடக்கிறான் என்று சொன்னால் அதைவிட வேறு என்ன மானக்கேடு இருக்கிறது.

‘சே, என்ன செய்யலாம்?’

உடனே ராமுண்ணியை அழைத்தார்.

அதிகாலையிலேயே விபத்து நடந்த இடத்துக்குப் போய்ப் பார்த்துவிட்டு வந்தவன், திரும்பி வந்து எதுவும் தெரியாதவனைப் போல் அதைப் பற்றி நாயரிடம் ஒரு வார்த்தை பேசாமலிருந்தான்.

"ராமுண்ணி, நீ ஏதாவது கேள்விப்பட்டியா?" புவனேஸ்வரன் நாயர் கேட்டார்.

"கேள்விப்பட்டேன், பார்த்தேன்."

"ஏன், உடனேயே என்கிட்டச் சொல்லலை?"

"எப்படிச் சொல்றது... என்னன்னு சொல்றது உங்ககிட்ட? அதனாலதான் பேசாம இருந்துட்டேன்."

"அங்கே என்ன பார்த்தே?"

"எப்படிங்க அதை என் வாயால சொல்றது?"

"ஒரு வேலை செய். மதுசூதனனோட கூட்டாளி இருக்கானே, அவன்தான் சாக்கோ... அவனைக் கூட்டிட்டு வா. அவனுக்கு ஏதாவது தெரிஞ்சிருக்கான்னு பார்க்கலாம்."

ராமுண்ணி உடனேயே சாக்கோவின் வீட்டைத் தேடி ஓடினான்.

நல்லவேளையாக அவன் அப்போது வீட்டில் இருந்தான். மதுசூதனனின் மரணத்தை அவன் நேரடியாகப் பார்த்திருந்தாலும் அதன் பிறகு அந்த இடத்துககுப் போக சாக்கோவின் மனம் இடம் தரவில்லை. அந்த அளவுக்கு பயந்து போயிருந்தான்.

ராமுண்ணி வந்து அழைத்தபோதுகூட நடுங்கித் திடுக்கிட்டவனாகத்தான் சூழ்நிலைக்குத் திரும்பினான்.

'நான் மதுசூதனனுடன் இருந்ததைப் பெரியவர் தெரிந்து கொண்டிருப்பாரா?' சாக்கோ யோசித்தான். அப்படியானால் தன்னுடைய கதையும் ஏறத்தாழ முடிந்த மாதிரிதான்.

"என்ன ராமுண்ணி?" சாக்கோ கேட்டான்.

"எஜமான் உன்னைக் கூட்டிட்டு வரச் சொன்னார்."

"என்னையா, எதுக்கு?"

"தெரியலை... அதனாலதான் இங்கே வந்திருக்கேன்."

"எதுக்காக என்னைக் கூப்பிட்டு அனுப்பியிருக்கிறாரோ?" என்று புலம்பியவனாகத் துண்டைத் தோளில் போட்டுக்கொண்டு ராமுண்ணியைப் பின்தொடர்ந்தான்.



இருவரும் பெரியவீட்டுக்கு வந்து சேர்ந்தபோது மதுசூதனனின் உடம்பும் வந்து சேர்ந்திருந்தது. வீட்டுக்குச் சுற்றிலும் கூட்டம் நிரம்பி வழிந்தது. அந்தச் சூழ்நிலை அவனுக்கு ஒருவகையில் மகிழ்ச்சியை அளித்தது. இந்தச் சூழ்நிலையில் தன்னிடம் யாரும் எதுவும் கேள்வி கேட்க மாட்டார்கள் என்று நினைத்தான்.

அவன் நினைத்தபடியே அப்போது நடந்தது. உடலை அடக்கம் செய்வதிலும் துக்கம் விசாரிப்பதிலுமே அன்றைய பொழுது கழிந்தது.

அன்று காலையில் திருப்பனங்காட்டுக் கோயிலுக்கு வழக்கமான நேரத்தில் பூசாரி வந்தார்.

வெகு காலமாக அந்தக் கோயிலில் வாரத்தில் ஒரு தடவை மட்டும் பூஜை நடைபெற்றுக் கொண்டிருந்தது. பூசாரி எட்டு மைல் ஊருக்கு அப்பாலிருந்து நடந்துதான் கோயிலுக்கு வந்து சேரவேண்டும்.

வழக்கம்போல் பூஜையை முடித்துக்கொண்டு திருமேனி புறப்படத் தொடங்கும்போது சட்டென்று அவருக்கு ஒரு யோசனை தோன்றியது. வெகு காலமாக அவர் மனதுள் கிடந்த ஒரு யோசனையும்கூட. தான்னிக்காட்டு இல்லத்தாரிடம் அதைப் பற்றிப் பேசவேண்டும் என்று அவ்வப்போது அவர் நினைப்பதுண்டு.

தான்னிக்காட்டு இல்லத்துக்குச் சொந்தமானது திருப்பனங்காட்டு பகவதி கோயில். எத்தனையோ தலைமுறைகளுக்குப் பிறகு ஆண் வாரிசுகள் யாருமில்லாமல், சங்கர நாராயணனுக்குப் பிறந்தது இரண்டே இரண்டு பெண் குழந்தைகள்தான். அவரின் இரண்டு பெண்களும் வெகு தொலைவிலுள்ளவர்களைத் திருமணம் செய்து கொண்டிருந்ததால், சங்கர நாராயணன் நம்பூதிரிக்குப் பிறகு கோயிலைக் கவனித்துக் கொள்ள ஆளில்லாமல் போனது. அந்தச் சூழ்நிலையில் அவர் மைத்துனன். மனைவியின் சகோதரன் பவத்ராதனுக்கு ஒரு செய்தி கனவு மூலம் கிடைத்தது.

கனவில் பகவதியே நேரில் காட்சியளித்தார்.

திருப்பனங்காட்டு பகவதி கோயிலில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் விளக்கு வைக்க வேண்டும் என்று பகவதி கனவிலேயே ஒரு பொறுப்பைச் சுமத்தினார். அதன் காரணமாகத்தான் பவத்ராதன் நம்பூதிரி தம்பதி அந்தக் கோயிலுகக்கு வரத் தொடங்கினார்.

அப்போது பள்ளிக்கூட விடுமுறையாக இருந்ததால் பவத்ராதனின் இளைய மகளும் அவள் கணவனும் குழந்தைகளும் அப்பா வீட்டுக்கு வந்திருந்தனர். எனவே, பவத்ராதன், கோயிலை ஒட்டியிருந்த காட்டுப் பகுதியைச் சீர்படுத்தும் வேலை நடப்பதைப் பற்றித் தன் வீட்டாரிடம் சொல்லியிருந்தார்.

வேலை எந்த அளவுக்கு நடந்து கொண்டிருக்கிறது என்பதைப் பார்த்துவிட்டுப் போகலாம் என்று நினைத்த பூசாரி, ஒரு தடவை கோயில் பகுதியை முழுவதுமாகச் சுற்றிப் பார்த்தபின் கோயிலைவிட்டு வெளியேறத் தொடங்கினார்.

அப்போது ராமன் அங்கு நின்று கொண்டிருந்தான்.

கோயிலுக்குத் தேவையான பூக்களை உதிரியாகவும், மாலையாகவும் கட்டித்தரும் வேலையைச் செய்யும் ராமனின் வயது பதினான்கு. ராமனின் அப்பா கிருஷ்ணன்மாரார், கோயிலின் காரிய கமிட்டி உறுப்பினர்களில் ஒருவர். அதெல்லாம் எத்தனையோ வருடங்களுக்கு முந்தைய விஷயங்கள். அப்போதெல்லாம் கோயில் எல்லா வகையிலும் மிகவும் சிறப்புற்று விளங்கியது.

மிகவும் கம்பீரமான ஏழு யானைகள் நெற்றியில் பளபளப்பான முகபடாம் அணிந்துகொண்டு கலந்து கொள்ளும் பத்து நாள்கள் உற்சவம் நடந்த பெரிய கோயில் அது. ஆனால், இன்று அதெல்லாம் பழங்கதையாகிவிட்டிருந்தது. இப்போது அந்தக் கோயிலைக் கவனித்துக்கொள்ள யாருமில்லை. அதனால்தான் கோயிலின் சுற்றுச் சுவருக்குள் முள்மரங்களும் கருவறைப் பகுதிக்குச் சுற்றிலும் காடு போல் செடிகளும் அடர்ந்து வளர்ந்திருந்தன.

"ராமா, இந்தக் கோயில் நிலம் முழுவதையும் வெட்டிச் சீர்படுத்தினால் ஐந்து ரூபாய் பணத்தை ரொக்கமாகத் தருவதாகத் தான்னிக்காட்டு மனையின் உரிமையாளரான தம்புரான் சொல்லியிருக்கிறார். நீ போய் யார்கிட்டயும் எதையும் கேட்க வேண்டாம். நானே அதை உன்னிடம் தந்து விடுகிறேன்" பூசாரி கூறினார்.

அந்த வார்த்தையைக் கேட்டதும் ராமனின் மனம் மகிழ்ச்சியில் திளைத்தது. அவன் அதுவரையில் ஆயுளில் முழுசாக ஓர் ஐந்து



ரூபாய் நோட்டைக்கூடப் பார்த்தே இல்லை. அதனால், ராமன் அரிவாளை எடுத்துக்கொண்டு விரைந்தான்.

ஐந்நூறு ரூபாய் அவன் கண்முன்பாகத் தெரிந்ததால் மிகவும் சுறுசுறுப்பாக வேலையைத் தொடங்கினான் ராமன். பூசாரியும் அவனுக்கு உதவினார். ராமன் வெட்டிப் போடும் மரங்களையெல்லாம் பூசாரி அங்கிருந்து அப்புறப்படுத்திக் கொண்டிருந்தார்.

இந்த வேலை தீவிரமாக நடந்து கொண்டிருக்கும் வேளையில் தான் ராமன் திடுமென்று பூசாரியை அழைத்தான்: "திருமேனி உடையா இங்கே வாங்க" அவன் குரல் மிகவும் உச்சத்தில் இருந்தது.

மரம் வெட்டும் வேகத்தில் அவன் கையிலோ காலிலோ ஏதாவது காயம் பட்டிருக்கலாம் என்ற பதைப்புடன் பூசாரி அந்தப் பக்கமாக ஓடிவந்தார்.

"என்ன ராமா, என்ன ஆச்சு?" பூசாரி பரிதவிப்புடன் கேட்டார்.

"இங்கே பாருங்க.... யாரோ பேர்த்துட்டுப் போன மாதிரி இருக்கு" ராமன் சுவர்ப்பகுதியைத் தடவியபடி சொன்னான்.

திருமேனி அந்தப் பகுதியை ஊன்றிக் கவனித்தார். சுவரின் உட்புறத்தைக் குடைந்தது போல் இடம் ஒதுக்கிப் பதித்து வைத்திருந்த ஒரு மோகினி சிலையைக் காணவில்லை!

சந்தேகம் தீராதவராக அந்த இடத்தை உற்றுப் பார்த்தார். அந்தப்பகுதி ஒரு பெண்ணின் சிலை இருந்ததற்கு அடையாளமாகப் பளிச்சென்று தட்டுப்பட்டது. யாரோ அதைக் கடத்திக்கொண்டு போனதுபோல் இருந்தது. ஆனால், சிலையிலிருந்து உடைந்து போனதாக ஒரு மிகச்சிறிய பகுதிகூட அங்கு தென்படவில்லை.

யோசித்தால் அங்கிருந்த சிலை சொந்த விருப்பத்தின் பேரில் தானாகவே அங்கிருந்து இறங்கிப்போனது போல் தோன்றியது. அன்று மாலையே தான்னிக்காட்டு இல்லத்துக்கு வந்த பூசாரி, விவரத்தை அங்கிருந்த தம்புரானிடம் தெரிவிக்கவும் செய்தார்.

இளைஞரான தம்புரான் அந்த விஷயத்தில் பெரிதாக அக்கறை காட்டவில்லை. ஆனால், பூசாரி அந்த விஷயத்தை அவ்வளவு சுலபத்தில் விட்டுவிடுதாகத் தெரியவில்லை.

'இங்கிருந்து சிலை காணாமல் போனதற்கு என்ன காரணம்?' என்பதை அறிந்தே தீருவது என்று பூசாரி தீர்மானித்தார். 'விஷயம் என்னவாக இருந்தாலும் அப்போது உண்மை தெரிந்துவிடுமே?' என்பது பூசாரியின் திட்டம்.

அதற்காக தேவ பிரஸ்னம் வைப்பதென்று முடிவு செய்தார்.

## 14

**பூ**சாரி, கோயில் சிலை தொடர்பாக தேவபிரஸ்னம் நடத்தப் போவதை, தான்னிக்காட்டு மனையில் தெரிவிப்பதென்று முடிவு செய்தார்.

ஆனால், தனிமையிலிருந்து யோசித்துப் பார்த்தபோது, தான் இதை தான்னிக்காட்டு இல்லத்தாரிடம் தெரிவிக்காமல் இருப்பது நல்லதென்று தீர்மானித்தார். அதுமட்டுமல்ல, தேவபிரஸ்னம் என்பது அவ்வளவு சாதாரண விஷயமும் அல்ல.

பூசாரி, தான்னிக்காட்டு மனையை அடைந்தபோது அதன் கடைசி வாரிசான விஷ்ணு நம்பூதிரியும் அவர் மனைவி அஸ்வதியும் நல்லவேளையாக வீட்டில் இருந்தார்கள்.

விஷ்ணு நம்பூதிரிக்கு முப்பத்தைந்து வயதிருக்கலாம். பழைமையில் ஊறிய மனநிலையல்ல அவருடையது. முற்போக்கு வாதி. அஸ்வதி ஒரு டாக்டரும்கூட. வயது முப்பது இருக்கலாம். இரட்டைநாடி உடம்பு என்று சொல்லலாம். விஷ்ணு நம்பூதிரி அதற்கு நேரெதிரான உடல்வாகு கொண்டவர்.

எப்போதும் இந்த நேரத்தில் வராத பூசாரி, திடுமென்று வருவதைப் பார்த்ததும் கணவன்-மனைவி இருவரும் சந்தேகத்துடன் அவரைப் பார்த்தனர். இருப்பினும் வரவேற்பில் எந்தக் குறையும் வைக்காமல் உட்காருமாறு உபசரித்தனர்.

"என்னங்க இந்த நேரத்தில்?" விஷ்ணு நம்பூதிரி கேட்டார்.

"தேவபிரஸ்னம் ஒண்ணு நடத்த வேண்டியிருப்பதைப் பற்றி உங்ககிட்டப் பேசுறதுக்காக வந்திருக்கிறேன்..." ஏற்கெனவே



இதைக்குறித்து அவர்களிடம் விவரித்திருப்பதன் பிற்பகுதி போல் இதைக் குறித்துப் பேசினார்.

"அதுக்கு இப்ப என்ன அவசரம், அவசியம்?" விஷ்ணு நம்பூதிரி கேட்டார்.

"கோயிலைப் பொறுத்தவரை இது ஒரு பெரிய விஷயம்!" திருமேனி வியப்பு மாறாத குரலில் பேசினார்.

"பதற்றப்படாம என்ன நடந்ததுன்னு சொல்லுங்க."

"கருவறையின் வெளிப்புறச் சுவரில் பதித்து வைத்திருந்த ஒரு மோகினி சிலையைக் காணவில்லை."

"அவ்வளவுதானே?" அஸ்வதி மிகவும் லாகவத்துடன் பேசினாள்.

"இப்படியெல்லாம் அதை மிகவும் சாதாரண விஷயமாகக் கருதக்கூடாது" திருமேனி எடுத்துச் சொன்னார்.

"பகவதி சிலை அங்கே இருக்கு இல்லையா? அப்புறம் என்னங்க?" விஷ்ணு கேட்டார்.

"உங்களுக்குச் சின்ன வயசுதானே, இதெல்லாம் வேடிக்கை யாத்தான் தெரியும்."

"அப்படியில்லை திருமேனி, நான் முக்கியமான விஷயமா நினைச்சுத்தான் பேசுகிறேன். மொத்தக் கோயிலுமே சிதிலமடைஞ்சு போய்க் கிடக்கு. இதையெல்லாம் சீர் பண்றதுக்கு யார்கிட்டப் பணம் இருக்கு? முன்னாலயெல்லாம், நம்ம இல்லத்துக்கு ஏராளமா சொத்து சுகம் இருந்தது. எவ்வளவு வயல் வரப்பு இருந்தது? நான் சின்ன வயசா இருந்தப்ப இந்தக் குடும்பத்தோட வருமானம் என்னவா இருந்ததுன்னு எனக்குத் தெரியும். ஒவ்வொரு தேங்கா வெட்டுக்கும் இந்த வீட்டுல எவ்வளவு பணம் புழங்கும்?"

"நீங்க சொல்றதெல்லாம் உண்மைதான். இன்னிக்கு அந்த வருமானமெல்லாம் எதுவும் இல்லேங்கிறதுக்காக கடவுளும், கோயிலும் வேண்டாம்னு சுத்தமா ஒதுங்கிட முடியுமா என்ன?" திருமேனி திருப்பிக்கேட்டார்.

“அப்படின்னு நான் சொல்லலையே. இப்போ கோயிலோ, கோயில்ல இருக்கிற பகவதியோ காணாமல் போகலையே? எதுக்காக இப்படி உணர்ச்சி வசப்படுறீங்க?”

“கோயில்லேர்ந்து பகவதி போனாத்தான்னு இல்லை. தேவ அம்சமுள்ள எந்த ஒண்ணு வெளியே போயிட்டாலும் அதோட பாதிப்பெல்லாம் நமக்குத்தான்.”

அஸ்வதி அவர்கள் இருவரின் பேச்சையும் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

அந்த இல்லத்துக்கு மருமகளாக வந்த அவளைப் பொறுத்தவரை அந்த இல்லம் பற்றிய விஷயங்கள் எதுவுமே அவளுக்குத் தெளிவாகத் தெரியும் என்று சொல்ல முடியாது. காலையிலும் மாலையிலும் கோயிலுக்குப் போய் மற்றவர்களை மாதிரி வணங்கிவிட்டு வருவாள். அந்தக் கோயிலில் எத்தனை சிலைகள், தேவர்கள், தேவியர்கள் இருக்கிறார்கள் என்பதெல்லாம் அவளுக்குத் தெரியாது. அதைப் பற்றியெல்லாம் நினைக்கவோ,யோசிக்கவோ அவள் மனநிலை இடம்தரவில்லை.

இருப்பினும் திருமேனியின் ஆதங்கம் அவளுக்குப் புரியவே செய்தது. குறிப்பிட்ட சம்பவத்தால் அவர் மனம் மிகவும் வருத்தத்துக்கு உள்ளாகியிருக்கிறது என்பதும் தெரியவே செய்தது. அவர் முகம் அதைத் தெளிவாகக் காட்டியது.

“திருமேனி சொல்வதையும் கொஞ்சம் கேளுங்களேன். நம்மைவிட இவருக்கு இந்த மாதிரி விஷயங்களில் நம்பிக்கை அதிகமில்லையா? அதை ஏன் முரட்டுத்தனமாக மறுக்க வேண்டும்?” அஸ்வதி தன் கருத்தைத் தெரிவித்தாள்.

“சரி, அதுக்கு இப்ப நான் என்ன செய்யணும்னு சொல்றே அஸ்வதி?” விஷ்ணு கேட்டார்.

“திருமேனியோட விருப்பப்படியே நடக்கட்டுமே.”

“சரி, நீயே இப்படிச் சொல்லிட்ட பிறகு நான் என்னத்தைச் சொல்ல? நடக்கட்டும்!”



விஷ்ணு நம்பூதிரி ஆரம்பத்தில் இந்த விஷயத்தை மறுத்துப் பேசியதற்கும் காரணம் இருந்தது. தேவபிரஸ்னம் நடத்துவது சாதாரண விஷயமில்லை. அதற்காக, தான் செலவு செய்ய வேண்டிய தொகை இன்னதென்று தெரிந்தால் நிச்சயம் அஸ்வதி அதற்கு ஒப்புக்கொள்ள மாட்டாள் என்றும் அவருக்குத் தெரியும். எனவே, அவளே ஒப்புக்கொண்டு விட்டதால், விஷ்ணு அதற்கு எதிராக மாற்றுக் கருத்துச் சொல்லவில்லை.

“தேவபிரஸ்னம் நடத்துறதுக்கு எவ்வளவு செலவாகும் திருமேனி?” விஷ்ணு கேட்டார்.

“ஏறத்தாழ ஐயாயிரம் ரூபாய் வரை செலவாகலாம். இறுக்கிப் பிடிச்சா கொஞ்சம் குறையலாம்.”

“என்ன சொல்றே அஸ்வதி?” விஷ்ணு அஸ்வதியின் முகத்தைப் பார்த்துக் கேட்டார்.

“அவ்வளவுதானே! நடக்கட்டுமே... நானும் இதுவரையில் தேவபிரஸ்னத்தைப் பார்த்தது இல்லை. இந்தச் சாக்குலயாவது பார்க்கலாமே.”

திருமேனி மகிழ்ச்சியடைந்தார்.

உடனேயே தேவபிரஸ்னம் நடத்துவதற்காக யாரையெல்லாம் அழைக்கவேண்டும் என்ற ஒரு பெரிய பட்டியல் திருமேனியின் மனதில் உருவானது.

“சரி, அப்ப நான் கிளம்பட்டுமா?” திருமேனி விடை பெற்றார்.

தேவ பிரஸ்னத்துக்காக நாள் குறிக்கப்பட்டது. புகழ்பெற்ற ஐந்து நம்பூதிரிகளை அதற்காக அவர் தேர்ந்தெடுக்கவும் செய்தார். அதில் ஒருவர் தாசிகர் அலங்கோட்டு சங்கரன் நம்பூதிரி. மற்றொருவர் சுலோகங்களைத் தெளிவாக உச்சரிப்பதில் புகழ்பெற்ற தேசமங்கலத்து தேவநாராயணன் நம்பூதிரி, மூன்றாமவர் ஜோதிடக்கலை வல்லவரான மீனங்காடன் சச்சிதானந்தன் நம்பூதிரி. நாலாவதாக சோழிகளைக் கையில் எடுத்து சுலோகம் சொல்லும்போதே, எந்த ராசியில் ஆரம்பிக்கும் என்பதைச் சொல்லும் வல்லமை வாய்ந்த வேலங்குளத்து நம்பூதிரி. கடைசி நபராக சூரிய மனையைச் சேர்ந்த கோவிந்தன் நம்பூதிரி.

எல்லாருமே படுசூரர்கள்தான்!

திருப்பனங்காட்டுக் கோயிலில் தேவபிரஸ்னம் நடைபெறப் போகும் விஷயம் விரைவிலேயே எல்லா இடத்திலும் பரவியது.

அதற்குப் பிரத்தியேகமான ஒரு காரணமும் இருந்தது. அந்தக் கோயிலைப் பற்றி ஏராளமான ஐதீகக் கதைகள் உருப்பெற்றிருந்தன. எனவே, தேவபிரஸ்னம் என்று கேள்விப்பட்டதும் நடுவயதுக்காரர்கள் அவற்றில் உண்மை, பொய் எதுவென்பதைத் தெரிந்து கொள்ளலாமே என்பதற்காக மகிழ்ந்தார்கள். மொத்தத்தில் இந்தச் செய்தி ஒரு பரபரப்பை ஏற்படுத்தத் தவறவில்லை.

பிரஸ்னத்தில் கலந்துகொள்ள வரவிருக்கும் நம்பூதிரிகளுக்காக எல்லா வசதிகளும் தான்னிக்காட்டு மனையில் மேற்கொள்ளப்பட்டன. அவர்களுக்கான சமையலைக் கவனிக்கவென்றே புதிதாக இரண்டு சமையற்காரர்கள் நியமிக்கப்பட்டனர்.

அந்தக் கோயிலை ஒரு வெள்ளிக்கிழமை கட்டத் தொடங்கினார்கள் என்ற ஐதீகத்தை ஊர்ப் பெரியவர்கள் ஒட்டுமொத்தமாகச் சொன்னதால், தேவபிரஸ்னத்தையும் வெள்ளிகிழமையே நடத்துவதென்று தீர்மானித்தனர்.

தேவபிரஸ்னத்தின் முதல் நாளன்று ஏராளமானவர்கள் கோயிலுக்கு வந்திருந்தனர்.

பிரஸ்னத்துக்கான ஏற்பாடுகள் மிகவும் கவனமாகவும், முறையாகவும் செய்யப்பட்டிருந்தன.

சோழிகளை தேவஸ்தானங்களில் வைத்தனர். பிறகு மீதமுள்ள சோழிகள் குலுக்கிப் போடப்பட்டன. கர்க்கடகம், விருச்சிகம், மீனம் ஆகிய ராசிகளில் காய்கள் வைக்கப்பட்டன.

கடைசியில் மீன ராசியிலிருந்து பிரஸ்னம் ஆரம்பமானது.

முதல் சுலோகத்தின்போதே காணாமல் போன மோகினியின் பெயர் தெரிந்தது. மாலினி.

அதன்பிறகு தர்க்க சுலோகங்கள் ஆரம்பமாயின.



அவை குறித்து விவரித்தபோது, இப்போது அதனுடன் தொடர்புள்ள வேறு ஏதாவது பெயர் அங்குள்ளவற்றுக்கு இருக்குமா என்று பார்த்தால் இல்லையென்ற முடிவுக்கே வர நேர்ந்தது.

'இங்கிருந்து போன மோகினி இப்போது எங்கே இருக்கிறாள்?'

பிற்பாடு அதைக் குறித்த ஆராய்ச்சி நடந்தது.

அந்தச் சர்ச்சை பலவிதத்திலும் நீண்டது. சூரியன் ஒரு சிவந்த பட்டுபோல் மேற்குத் திசையில் கனிந்து நின்றது.

ஓவியனின் தூரிகையில் சாயம் தீர்ந்தபோது இருப்பதை வைத்து ஒப்பேற்றுவது போல் அங்கிங்காக சிவப்பும், மஞ்சளும் கலந்த நிறம் ஊனத்தல் பரவத் தொடங்கியது.

நிழல்கள் கிழக்குத் திசையில் நீண்டு, கருவறையின் மேற்புறம் பொருத்தப்பட்டிருந்த பித்தளைக் கும்பங்களின் பளபளப்பை இல்லாமல் செய்தது.

அன்றைய பிரஸ்னம் முடிவடைந்தது.

இதையொட்டி இளைஞர்கள் மத்தியில் வேறு சில அபிப்பிராயங்களும் உயர்ந்து வந்தன.

என்னவோ ஒரு காரணத்தால், அங்கு பதிக்கப்பட்டிருந்த சிலை பிடிமானமில்லாமல் கீழே விழுந்திருக்கும் என்றும், அதை யாராவது கொண்டு போயிருக்கலாம் என்றும் ஒரு சாரார் கூறினர். ஒருசிலர் இதை மறுத்தும் பேசினர்.

தான்னிக்காட்டு மனையை அடைந்த பிறகும் பகலில் நடந்த பிரஸ்னம் தொடர்பான விவாதம் தொடரவே செய்தது.

விருந்தினர்களுக்காகவென்று தயாரிக்கப்பட்ட உணவு வகைகளை ருசித்துச் சாப்பிட்ட பிரஸ்ன வல்லுநர்கள், வெளிப்புறச் சுற்றுக்கையில் அமர்ந்தும் தங்களது விவாதத்தை விடவில்லை.

வயதில் முதிர்ந்தவரான தேவநாராயணன் நம்பூதிரி, அவரின் நெருங்கிய நண்பரான வேலங்குளத்துமனை அச்சுதன் நம்பூதிரியிடம் பேச்சுக் கொடுத்தார்.

“பிரஸ்னத்தின்போது என் மனதில் ஒரு விஷயம் தட்டுப்பட்டது ஆனால், அதை அந்த நேரம் குறிப்பிட வேண்டாம் என்று தவிர்த்து விட்டேன்.”

“இப்போது சொல்லுங்களேன்!” இடையில் புகுந்து விண்ணப் பித்தவர் சூரியமனை கோவிந்தன் நம்பூதிரி.

“மோகினி சுயவிருப்பத்தின் பேரில் வெளியேறி இருப்பதாக எனக்குத் தோன்றியது.”

‘அப்படியா!’ என்பது போல் எல்லாரும் தேசமங்கலத்தாரைப் பார்த்தார்கள்.

“அதுமட்டுமல்ல, இந்த மோகினி, தேவியின் அன்புக்குப் பாத்திரமான ஒருத்தி. பயங்கரமான சக்தி வாய்ந்தவள்.”

இந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் மீளங்காடன் துணுக்குற்றார்

‘சுயவிருப்பத்தின் பேரில் வெளியேறியிருக்கும் ஒரு மோகினியைத் தேடுவதோ, கண்டுபிடிக்க முயல்வதோ அவளுக்குப் பிடிக்காமல் போகலாமோ?’ என்பதுதான் மீளங்காடன் துணுக்குற்ற தற்குக் காரணம்.

“இன்னொரு விஷயமும் இருக்கு” என்ற தேவநாராயணன் தன் சினேகிதரை ஊன்றிப் பார்த்தார்.

“அதையும் சொல்லிடுங்களேன்” வெற்றிலையில் சுண்ணாம்பு தடவியபடி கூறினார் அச்சுதன் நம்பூதிரி.

“சுலோகத்தின் நடுவே மாங்கல்யம் என்றொரு வார்த்தை வந்தது இதை யார் சொன்னார்கள் என்று தெரியுமா? ஞாபகம் இருக்கிறதா?”

“நான்தான் சொன்னேன். பார்வதி சுயம்வரத்தைக் குறித்துத்தான் அதையும் சொன்னேன்.”

“இன்னொரு விஷயமும் இருந்தது” தேவநாராயணன் நம்பூதிரி மீண்டும் நினைவுகளிலிருந்து அதைத் தேடியெடுக்க முயன்றார் “ம்...ஞாபகம் வந்துவிட்டது. விஜன் என்ற வார்த்தையைக் குறிப்பிட்டது ஞாபகமிருக்கிறதா?”



ஒவ்வொருவரும் பரஸ்பரம் பார்த்துக் கொண்டனர்.

அதே நேரம் இந்த ஐந்து பண்டிதர்களுக்கும் நடுவில் வட்ட வடிவத்தில் போட்டிருந்த தடுக்கில் வைக்கப்பட்டிருந்த வெற்றிலைத் தாம்பாளத்தில் நிழல் ஒன்று தென்பட்டது.

இந்தத் தடுக்கின் மேற்புறம் சற்றுத்தள்ளி தூண்டாமணி விளக்கு ஒன்று தொங்கவிடப்பட்டிருந்தது. விளக்கெண்ணெய் ஊற்றிக் கொளுத்தப்பட்ட அந்த விளக்கின் மூன்று திரி வெளிச்சம் போதாது என்று நினைத்ததாலோ என்னவோ... வெற்றிலைத் தாம்பாளத்தின் அருகே மற்றொரு விளக்கையும் ஏற்றி வைத்திருந்தனர். இவ்வளவு வெளிச்சத்தையும் மீறி வெற்றிலைத் தாம்பாளத்தில் ஒரு பாதச் சுவட்டின் நிழல் விழுவது போல் தேவநாராயணனுக்குத் தோன்றியது.

அவர் சட்டென்று தலையை உயர்த்தித் தூண்டாமணி விளக்கை ஏறிட்டார்.

யாரோ கையால் தட்டிவிட்டது போல் தூண்டாமணி விளக்கு பக்கவாட்டில் அசைந்தது. சவுக்கைக்குள் கொஞ்சம்கூட காற்றே இல்லாத நேரம் வேறு. ஆனால், விளக்கிலிருந்த தீபங்கள் கொஞ்சம்கூட அசையாமல் ஒளி சிந்திக் கொண்டிருந்தன.

தேவநாராயணன் தன் வலது கையைத் தாம்பாளத்தை நோக்கி நீட்டினார்.

அப்போது சுவர்ப்பக்கமிருந்து சலங்கை ஒன்று ஒலியமுழுப்புவது போல் கேட்டது.

சொல்லி வைத்தாற்போல் எல்லாரும் அந்தப் பக்கமாகப் பார்வையைத் திருப்பினார்கள்.

மரச்சுவரில் அடித்திருந்த ஆணியில் தொங்கவிட்டிருந்த, சோழிகள் நிறைந்த பையின் அடிப்பகுதியில் தென்பட்ட பாதத்தின் நிழல் கீழ்ப்புறமாக விழுந்து கொண்டிருந்தது.

“என்ன இது!”

ஐவரும் ஏக காலத்தில் எழுந்தனர்.

பையை நெருங்கியபோது, அதற்குள் எதுவும் இல்லாமல் பை சூனியமாக இருந்தது.

எதுவும் புரியாதவர்களாக ஐவரும் பரஸ்பரம் ஒருவரை மற்றவர் பார்த்தபடி விழித்தனர்.

அதே நேரம் -

மூடிக்கிடந்த சவுக்கையின் கதவு கரகரவென்ற சத்தத்துடன் திறந்து கொண்டது.

## 15

மூடியிருந்த கதவு கரகரவென்ற சத்தத்துடன் திறப்பது கேட்டதும் எல்லார் கவனமும் அந்தப் பக்கமாகத் திரும்பியது.

கதவு விரியத் திறந்துகொண்டது.

தெளிவற்ற ஓர் ஒளி வடிவம். அந்த உருவத்தை ஆண் என்றோ பெண் என்றோ எப்படி வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம்.

அது அங்கிருந்து வெளியே போவது போல் தெரிந்தது.

ஜோதிடர்களில் முக்கியமானவரான தேவநாராயணன் நம்பூதிரி வலது கையால் பூணூலை வருடியபடி வாசலை நோக்கி ஓடினார்.

திடுமென்று தான்னிக்காட்டு மனையின் தெருவாசற்படியருகே நல்ல உயரத்துடன் படர்ந்து பரவி வளர்ந்திருக்கும் புளிய மரம் ஒன்றை யாரோ மிதித்து நொறுக்குவது போல் தோன்றியது. தொடர்ந்து ஒரு பெரும் இரைச்சலுடன் அந்த மரத்தின் உச்சிக்கிளை மண்ணில் விழவும் செய்தது.

அங்கிருந்த ஐந்து நம்பூதிரிகளின் நெற்றிகளும் சுளிவடைந்தன.

"வந்து, போய்விட்டதற்கான அடையாளம்தான் இதெல்லாம். புரிந்ததா?" தேவநாராயணன் கேட்டார்.

மற்ற நால்வரும் நின்ற இடத்திலேயே அசையாமல் கல்லாகச் சமைந்து நின்றிருந்தனர்.



அதற்குள் வீட்டுக்குள் படுத்து உறங்கிவிட்டிருந்த விஷ்ணு நம்பூதிரியும் அஸ்வதியும் விழித்து எழுந்து வெளியே வந்தனர். விஷ்ணுவின் கையில் டார்ச் லைட் இருந்தது.

ஐந்து பாட்டரி கொண்ட டார்ச் லைட்டின் ஒளி புளிய மரத்தின் உச்சியை நோக்கி உயர்ந்தது. உடைந்து விழுந்த கிளையின் ஒரு முனை தெரு வாசற்படியை மறைத்துக் கொண்டிருந்தது.

"காற்றே இல்லாதபோது இது எப்படி?" விஷ்ணு நம்பூதிரி கேட்டார்.

"காற்றெல்லாம் கிடையாது" அச்சுதன் நம்பூதிரி பதிலளித்தார்.

"உச்சி மரக்கிளையை வண்டு ஏதாவது துளைத்துப் பலவீனப்படுத்தியிருக்குமோ?" விஷ்ணு கேட்டார்.

ஐவரில் யாரோ ஒருவர் பெருமூச்சு விட்ட சத்தம் தெளிவாகக் கேட்டது.

"காரணம் என்னவாக இருந்தாலும் உடைந்து விழுந்த மரத்தை அங்கிருந்து அப்புறப்படுத்த ஏற்பாடு செய்யுங்க" சொல்லிவிட்டு விஷ்ணு நம்பூதிரி வீட்டுக்குள் நுழைந்தார். அஸ்வதியும் அவரைத் தொடர்ந்தாள்.

ஆனால், பிரஸ்னம் பார்க்க வந்திருந்த ஐந்து பேராலும் அன்று முழுக்க உறங்க முடியவில்லை. அவர்களைப் பொறுத்தவரை இதுபோன்ற சம்பவம் அவர்களின் வாழ்க்கையில் இதுவரை நேர்ந்தது இல்லை.

பிரஸ்னத்தில் பலரும் சுலோகம் சொல்லி, மூல உண்மையையும் அத்துடன் தொடர்புள்ள விஷயங்களையும் சுலபமாகக் கண்டறியவே செய்வார்கள்.

அதில் சரியாகத் தெளிவடையவில்லை என்றால் ஐதீகங்களின் துணையுடன் சில நேரம் யூகித்தும் சொல்வார்கள்.

அதில் தவறுகளும் நேரலாம்.

ஆனால், இங்கு நடந்தது அதுவல்ல.

எல்லாம் தெளிவாகத் தெரிகின்றன. நினைத்ததை விட எல்லாம் சுலபமாக முன்னேறின.

அவையெல்லாம் உண்மைதான் என்பதற்கு, இதோ ஆதாரமும் கிடைத்து விட்டது.

அந்த இடத்தின் ஆழ்ந்த அமைதியை உடைத்துக்கொண்டு ஆலங்காட்டு சங்கரன் நம்பூதிரி பேசினார்: "இங்கே நடந்ததையெல்லாம் நாம நேரடியாவே பார்த்திருக்கோம். இப்போதைய சூழ்நிலையில் இங்கே நடந்ததை நமக்குள்ளேயே ரகசியமா வெச்சுக்கிறதுதான் நல்லதுன்னு தோணுது."

"நீங்க சொல்றதுக்கு என்ன அர்த்தம்?" மீனங்காடன் நம்பூதிரி கேட்டார்.

"விளக்கம் வேற வேணுமா? அதுதான் தெளிவாக தெரியுதே."

"உண்மைதான். அதுக்காக பிரஸ்னத்தை பாதியிலேயே நிறுத்திட முடியுமா?" கோவிந்தன் நம்பூதிரி கேட்டார்.

"தேவபிரஸ்னமில்லையா? அப்படியெல்லாம் நிறுத்தக்கூடாது. நிறுத்திட்டோம்னா நம்மளை முட்டாள்னு சொல்லுவாங்க ஊர்க்காரங்க. சுலபத்துல ஏதோ சிக்கல்னு கண்டுபிடிச்சுடுவாங்க" தேவநாராயணன் நம்பூதிரி பதிலளித்தார்.

"நான் ஒரு யோசனை சொல்லட்டுமா?" கோவிந்தன் நம்பூதிரி தொடர்ந்தார்: "பிரஸ்னத்தைத் தொடர்வோம். வர்றதைப் பார்த்துக்கலாம். தேவ அம்சமா இருக்கிறதால நிச்சயமா நமக்குத் தொல்லை குடுக்காது!"

எல்லாரும் அதை ஆமோதித்தனர்.

இருப்பினும் ஒவ்வொருவரும் சுயமாக யோசிக்கவும் செய்தனர். எல்லாரும் தேர்ந்த பண்டிதர்கள். ஒருவருக்கு ஒருவர் சளைத்தவர்கள் அல்லர். இதற்கு முன் எத்தனையோ கோயில்களில் தேவபிரஸ்னம் நடத்தியுள்ளனர். ஒவ்வோர் இடத்திலும் சரியான காரணத்தைக் கண்டுபிடித்து, அதற்கான பரிகாரத்தையும் சொல்லியிருக்கின்றனர்.



அதையெல்லாம் அப்படியே கடைப்பிடித்ததால் அதற்குரிய பலனும் கிடைத்திருக்கிறது.

அந்த ஐவரும் அதற்குப் பிறகு தங்களுக்குள் எதையும் பேசிக்கொள்ளவில்லை.

முறுமுறுப்பும் வாசனையும் மாறாத புதுப்பாய்களை விரித்துப் போட்டு அவர்கள் படுத்துக் கொண்டனர்.

அதன் பிறகு எதுவும் நடக்கவில்லை.

மறுநாள் சனிக்கிழமை.

ராகு காலம் முடிநதவுடன் பிரஸ்னத்தைத் தொடங்கினர்.

தேவநாராயணன் நம்பூதிரி மனதுள் ஒரு தீர்மானம் எடுத்திருந்தார்.

'எங்கே இருக்கிறாள் என்பதை எப்படியாவது கண்டுபிடித்தே ஆகவேண்டும்.'

முந்தைய நாள் வரை நடந்த பிரஸ்னத்திலிருந்து, 'யாரோ ஒரு நம்பூதிரி இந்த மோகினியை விவாஹம் செய்துகொண்டு போய் மனைவியாக்கிக் குடும்பம் நடத்துகிறான் என்று புரிந்தது. ஒருவேளை அவன் பெரிய மாந்திரீகனாக இருக்க வேண்டும். அதனால் அவனுக்குக் கட்டுப்பட்டு, அவன் சொல்கிறபடி அவள் நடந்து கொண்டிருக்கலாம்.

நேற்று அவன்தான் அவளை அனுப்பி வைத்திருப்பான். அவன் எவ்வளவு பெரிய மாந்திரீகனாக இருந்தாலும், சாதாரண மனிதனாக இருந்தாலும் அவனது இருப்பிடத்தைக் கண்டுபிடிக்க வேண்டும்!'

தேவஸ்தானங்களில் சோழிகளை வைத்தார்கள். பரதேவதையை மனதுள் தியானித்தனர்.

**மூர்த்தியே பரிகல்பித;**
**சசூதெள வர்த்தமாபுனர்ஜன்மனாம்**
**ஆல்மை தாத்மவிபாரம்**
**க்ருது சம்யஜதாம்**
**பர்த்தாமர ஜோதிக்ஷம் லோகனாம்**

**பிரளயோத யஸ்திதிள**
**விபுசம் ஜனேக தாயக்ருதெள**
**வாசானி சபாதானோ நைக கிரன்னு**
**த்ரைலோக்ய தீ போரவி...**

மூன்று முறை மனதுள் உருவிட்டு, நூற்றியெட்டு சோழியை மூன்றாகப் பிரித்து முறையே தலை, உடல், பாதம் ஆகிய பகுதிகளில் எதிர்காலம், நிகழ்காலம், கடந்த காலம் ஆகிய மூன்றையும் பிரதிபலிப்பது போல் வைத்தார்கள்.

எட்டெட்டு சோழிகளை மாற்றி வைத்தனர். சாஸ்திரிய முறையில் கணக்கிட்டனர்.

அடுத்த மந்திரத்தை மற்றவர்களுக்குக் கேட்கும் விதமாக உச்சரித்தனர்.

**தைவஜ்நேன சமாஹிததே தஸ்மயோ...**
**தேஸஸ்வாயயூர்தச**
**ப்ரஷடோ ஸ்பர்சனம் ஆஸ்ரயதரக்ஷே ஹரிதாம்**
**ப்ரஸ்னா க்ஷரானஸ்திதி...**

அடுத்த மந்திரத்தையும் சொல்லி ராசிப் பலகையைப் பார்த்தனர்.

என்ன அதிசயம்! சோழிகளைக் காணவில்லை.

'என்ன இது!'

கண்களைக் கசக்கிக்கொண்டு பார்த்தனர்.

ராசிப் பலகை சூனியமாகக் கிடந்தது.

ஆனால், கண்ணிமைப்பதற்குள் சோழிகள் மறுபடி கண்களுக்குத் தெரிந்தன.

'இடையில் நடந்தது என்ன?'

ராசிப் பலகை அசைந்தது. குளிர் சுரம் வந்தவனின் உடல்போல் நடுங்கியது. தேவஸ்தானங்களில் வைத்திருந்த சோழிகளை சுத்தமாகவே காணோம்!

அவை உயிர் பெற்றவை போல் ஓடி விளையாடின.



கூடவே மற்றொரு காட்சி...

ராசிப் பலகையின் தேவஸ்தானத்தில் சோழிகளற்ற பகுதியில் ஒரு பாதத்தின் நிழல்! கூடவே கால் சலங்கையின் சத்தமும் கேட்டது.

'கடவுளே!' என்று மனதுள் அழைத்தவாறு தேவநாராயணன் மேற்புறமாக முகத்தை உயர்த்தியபோது, பிரமாண்டமாக உயர்ந்து நின்றது ஓர் உருவம்.

கோயிலின் சுற்றுச்சுவருக்குள் நெடிதுயர்ந்து பரவிக் கிடக்கும் ஆலமரத்தை விட உயரமான ஒரு பெண்ணின் உருவம்!

அது ஓர் எச்சரிக்கையாக தேவநாராயணனுக்குத் தோன்றியது.

பிடிவாதமாக மேற்கொண்டும் பிரஸ்னத்தைத் தொடர்ந்தால் அந்தப் பாதம் அடுத்துப் பதிவது தன் தலையாக இருக்கலாமென்று அவருக்குத் தோன்றியது.

இருப்பினும் பக்திமானான அவர், அந்தக் கோயிலில் பிரதிஷ்டை செய்திருக்கிற திருப்பனங்காட்டு பகவதியை தியானித்தவாறு பிரார்த்தித்தார்.

"தோல்வி பயத்தில் நாங்கள் பின்வாங்கிவிட்டதாக பழி ஏற்படுத்திவிடாதே தாயே."

அந்தப் பிரார்த்தனை பலிக்கவே செய்தது.

சட்டென்று தெளிந்த ஆகாயத்திலிருந்து மழைத்துளிகள் விழுந்தன. பொடிச் சரளைக் கற்களை வாரி எறிவது போல் மழைத் துளிகள் பூமியில் விழுந்தன. முதல் மழைத்துளி விழுந்த இடம் ராசிப் பலகைதான்.

தொடர்ந்து காற்று அடிக்கத் தொடங்கிற்று. காற்று, சூறைக்காற்றாக மாறியது.

மழையின் சக்தி அதிகரித்து.

இடைவெளியில்லாத கடுமையான மழை.

தேவபிரஸ்னத்தை நிறுத்தினர்.

மதிய உணவுக்காக தான்னிக்காட்டு மனையுள் அமர்ந்திருந்த போது மீனங்காடன் கேட்டார்: “மேற்கொண்டு என்ன செய்யலாம்?”

தேவநாராயணன் யோசிக்காமலேயே கூறினார்: “கோயில் பூசாரியைக் கூப்பிடுங்கள். விஷயத்தைச் சொல்லி விடலாம்.”

சவுக்கைக்கு வெளியே நின்று ஜன்னல் வழியே உள்ளே நடப்பதைப் பார்த்துக் கொண்டிருந்த பவத்ராதன் நம்பூதிரி, அவசர அவசரமாகச் சவுக்கைக்குள் நுழைந்தார்.

“இந்த மழை நிக்கும்னு தோணலை. அதனால பிரஸ்னத்தை இதோட நிறுத்திக்கலாம்னு நெனைக்கிறோம்” தேவநாராயணன் கூறினார்.

இந்த வார்த்தைகள் பவத்ராதனை மிகவும் வருத்தத்துக்கு உள்ளாக்கியது.

காணாமல் போன மோகினி சிலையை எப்படியும் கண்டுபிடித்தே தீர வேண்டுமென்ற பிடிவாதத்துடன் இருப்பவர் அவர். நல்ல வேளையாக இந்தச் செயலுக்குப் பணமும் கிடைத்து, தகுந்த ஜோதிடர்களும் கிடைத்த பிறகு அது நடக்காமல் தள்ளிப் போவதை அவரால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

“மழைக்காகத்தான் நிறுத்துகிறீர்கள் என்றால் தகுந்த இடத்தை ஏற்பாடு செய்யலாம்” தேவநாராயணனிடம் பவத்ராதன் கூறினார்.

“அது சரிப்படாது.”

“இவ்வளவு தூரம் ஏற்பாடெல்லாம் செய்த பிறகு பரிகாரம் காணாமல் போவது சரியில்லை என்று நினைக்கிறேன்.”

“அதை இங்கேதான் நடத்தணும்னு நீங்க ஏன் பிடிவாதம் பிடிக்குறீங்க? மொத்தத்துல உங்களுக்கு விவரமும் பரிகாரமும் தெரிஞ்சாப் போதாதா?” அச்சுதன் நம்பூதிரி கேட்டார்.

அவர் அப்படிக் கேட்டதற்கும் ஒரு காரணமிருந்தது. உடனே அங்கிருந்து கிளம்பிவிட்டால் தான்னிக்காட்டு வீட்டாரும் ஊராரும்கூட என்ன ஏதென்று காரணம் கேட்பார்கள்.



நடந்த சம்பவத்தை நடந்தபடி விவரித்தால், அதுவும் ஏதாவது சிக்கலில் கொண்டுபோய் விடலாம். அதன்பிறகு என்னனென்ன அனர்த்தங்கள் நடக்குமோ?

ராசிப் பலகையில் கண்ட அதிசயமான காட்சியும், மேகங்களே இல்லாத வானத்திலிருந்து திடுமென்று மழை கொட்டியதையும் பார்த்தபோது சத்தியத்தைச் சொல்வதுகூட விபரீதமாகிவிடும். அதுமட்டுமில்லாமல் பிறர் நம்பாமலிருக்கவும் செய்யலாம்.

தேவநாராயணன் எதுவும் பேசாமல் மௌனமாக இருந்தார். அவருக்கு எல்லாமே ஒரே குழப்பமாகத் தெரிந்தது.

“எப்படியிருந்தாலும் எல்லாவற்றையும் நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம்” இறுதியில் தேவநாராயணன் ஒரு வழி கண்டு பிடித்தவராகப் பேசினார்.

மழையின் வலு குறைந்தது.

மழை சுத்தமாக நின்று போனால்கூட தொடங்கித் தடைப்பட்ட காரணத்தால், அன்றைக்குத் தொடர்வதில்லை என்று ஐவரும் ஒருமனதாகத் தீர்மானித்தனர்.

இரவு நேரம்.

வழக்கம்போல் சாப்பாட்டை முடித்துக்கொண்டு வெற்றிலை போட்டபடி பழங்கதைகளைப் பேசிக் கொண்டிருந்த கோவிந்தன் நம்பூதிரி பேச்சோடு பேச்சாகக் கூறினார்.

“விஷயம் கொஞ்சம் ஆபத்தானதுதான்னு தோணுது.”

“எனக்கும் அப்படித்தான் தோணுது. நாளைக்கும் நாம தொடர்ந்தா, நிலைமை இதைவிட மோசமா இருக்கலாம்” தேசமங்கலம் பதிலளித்தார்.

“ஏன் அப்படி நினைக்கிறீங்க?”

“இனிமே அதையெல்லாம் பேசிப் பிரயோஜனமில்லை. எல்லாத்துக்கும் மேல நாம மந்திரவாதிங்களா என்ன?”

“இப்படிப் பாதியில நிறுத்தறது அவமானமானமில்லையா?”

“நேரமிருக்கிறதே... நாளைக்கு அதைப்பற்றி ஒரு முடிவெடுப்போம்” தேசமங்கலத்து தேவநாராயணன் நம்பூதிரி அங்கிருந்து வெளியேறினார்.

சவுக்கையின் பின்பக்கமாகப் போனவர், வாயிலிருந்த வெற்றிலை எச்சிலைத் துப்பிவிட்டுத் திரும்பி வந்தார்.

‘சற்று நேரம் பாகவதம் படிக்கலாம்; தற்காலிகமாக இதிலிருந்து விடுபடலாம்’ என்று நினைத்தார். எனவே, சங்கிலி விளக்கின் திரியை மேலும் தூண்டிவிட்டு அதை அருகே இழுத்து வைத்துக்கொண்டார்.

அதற்குள் மற்ற நால்வரும் வசதியாகப் பாய் போட்டு உடம்புகளைச் சாய்த்து விட்டிருந்தனர்.

அவர்கள் நன்றாக உறங்கிவிட்ட பின்னரும் தேவநாராயணனுக்கு உறக்கம் வரவில்லை.

எங்கோ ராக்கோழி ஒன்று கூவியது.

நிலவொளி லேசாக மங்கி இருள் பரவியது. வழக்கத்தைவிட கெட்டியான கூரிருட்டு.

அப்போது வாசலுக்கு வெளியே ஒரு கால்சலங்கையின் சத்தம் கேட்டது.

‘கலீர்... கலீர்... கலீர்... கலீர்...’

தேவநாராயணன் திடுக்கிட்டார்.

## 16

‘ஒருவேளை வருவது அவள்தானோ?’ தேசமங்கலத்து தேவநாராயணன் நம்பூதிரி யோசித்தார்.

ராசிப் பலகையில் பார்த்த நிழலும், அதன் தொடர்ச்சியாகத் தான் பார்த்த பீமாகாரமான உருவமும் சட்டென்று அவர் மனதில் தெளிவடைந்து வந்தது.

‘வேறு யாராவதாக இருக்குமோ?’ திருமேனிக்கு சந்தேகம் தோன்றியது.



‘கதவைத் திறக்கலாமா... வேண்டாமா?’ என்று தயங்கி ஒரு கணம் யோசித்தவர், கதவைத் திறக்காமலிருப்பது அவமரியாதையாகவும், கோழைத்தனமாகவும் தோன்றியதால் சட்டென்று திறந்தார்.

திறந்தவர் ஓர் எட்டுப் பின்னுக்கு நகர்ந்தார் - திறந்த வேகத்திலேயே.

இளந்திண்ணையில் ஓர் உருவம் நின்று கொண்டிருந்தது. அசல் தேவதை போலவே இருந்தாள். அந்த உடம்பிலிருந்து ஒருவித ஒளி பிரகாசித்தது.

எங்கிருந்தோ பாயும் சக்தியான ஒளி, அவள் உடம்பின் மீது கொட்டும் விழுவது போலிருந்தது அந்தக் காட்சி.

அந்த வெளிச்சத்திலேயே அவர், அவளைச் சரியாகப் பார்த்தார். பின்புற இடுப்பையும் தாண்டி நீண்டிருந்த கார்காலக் கூந்தல். இந்திரநீலம் போன்ற விழிகள். வானவில் போல் வளைந்த புருவக் கொடிகள். மாலை நேரச் செம்மை படர்ந்த கன்னக் கதுப்புகள். தேன் சொரியும் அதரங்கள்.

“நீங்க யார்னு தெரியலையே?” மார்பில் கிடந்த பூணூலை நெருடியபடி திருமேனி கேட்டார்.

“பேரை பிரஸ்னத்தில் தெரிஞ்சுக்கிட்டீங்களே?” அவள் சொன்னாள்.

திருமேனி சற்று நேர யோசனையிலாழ்ந்தவர் நினைவுக்கு வந்தவராக முகம் மலர்ந்தார். ‘மாலினி.’

“மாலினி இல்லையா?”

“ஆமாம், என் சரியான உருவத்தை நீங்கள் பார்த்திருக்கீங்க...” அவள் சொன்னாள்.

“நன்றாக ஞாபகமிருக்கிறது. அது ஒருவகையில் அதிர்ஷ்டகரமானதென்று நினைக்கிறேன்.”

“மறுபடியும் அந்த உருவத்தைப் பார்க்க விரும்புறீங்களா?”

“ஆகா, அதிசயமான காட்சியாயிற்றே... மறுபடி பார்க்க முடிந்தால்... நல்லது.”

அவள் உருவம் மெதுவாக உயரத் தொடங்கியது. தேவ நாராயணன் கண்முன்பாக அந்த உருவம் வளர்ந்து புளிய மரத்தின் உயரத்தையும் தாண்டியது. இப்போதைய நிலையில் அவள் விரும்பினால், திருமேனியை அவளின் உள்ளங்கைக்குள் எடுத்துக் கொள்ளலாம்.

"போதுமா திருமேனி?" அவள் கேட்டாள்.

அதன்பிறகு அந்த உருவம் படிப்படியாகக் குறைந்து வந்து சாதாரண மனிதப் பெண்ணின் அளவுக்கு வந்தது.

"மேற்கொண்டு என்ன செய்யப் போகிறீர்கள்?" அவள் கேட்டாள்.

"இங்கே நாங்க பிரஸ்னம் ஆரம்பிச்சதே சம்பந்தப்பட்ட மோகினி எங்கே இருக்கிறாங்கிறதைத் தெரிஞ்சுக்கத்தான். எதிரிகள் யாராவது கடத்திக்கொண்டு போனார்களா, அல்லது சுயவிருப்பத்தின் பேரில் வெளியேறினார்களா என்பதைக் கண்டுபிடிக்கத்தான்."

"அதுக்குப் பிறகு எங்கே இருக்கு அந்த மோகினின்னு கண்டுபிடிக்கலாம்தானே?"

"ஆமாம், அதுவும் இயல்புதானே?"

இந்த பதிலைக் கேட்டதும் அவள் சற்று நேரம் மௌனமாக நின்றாள்.

அடுத்ததாக அவள் என்ன சொல்லப்போகிறாள் என்பதை அறியும் ஆவலுடன், திருமேனி அவளையே பார்த்துக் கொண்டிருந்தார்.

"அப்படியானால் நானே அதையும் சொல்லட்டுமா? பிரஸ்னத்தை இந்தக் கட்டத்துடன் நிறுத்திக் கொள்வதுதான் நல்லது" அவள் வார்த்தைகள் மிகவும் கூர்மையாக இருந்தன. ஒரு கட்டளை மாதிரியும் இருந்தது.

என்ன செய்வதென்றே புரியாமல் அப்படியே அசைவற்று நின்றார் திருமேனி. தன்னிடம் இப்படிச் சொல்வது சாதாரணமான ஒரு நபர் அல்ல!



சற்று நேரத்துக்கு முன்புதான் பார்த்தோம். தேவாம்சமுள்ள மோகினி! அவள் வார்த்தைக்கு மாறாக நடந்துகொண்டால் ஏதாவது தொல்லைகள் ஏற்படலாம்.

"பிரஸ்னத்தை நானாக நிறுத்திவிட்டால், அது மற்றவர்களிடம் சந்தேகத்தை ஏற்படுத்தாதா? எங்களை இதற்காக அழைத்து வந்தவர், அவ்வளவு சுலபத்தில் இதிலிருந்து பின்வாங்குபவராகத் தெரியவில்லை."

"பவத்ராதன் நம்பூதிரி அப்படிப்பட்டவர் என்றா சொல்கிறீர்கள்?"

"அவர் பெயர்கூட உங்களுக்குத் தெரிந்திருக்கிறதே?" திருமேனியின் குரல் முணுமுணுப்பது போல் ஒலித்தது.

"அவர் பெயர் எனக்குத் தெரியாமல் இருக்குமா? எத்தனை வருடங்களாக எனக்கு அவரைத் தெரியும்? அவர் மிகவும் நல்ல மனிதர் என்பதில் எனக்குக் கருத்து வேறுபாடு இல்லை."

"அதனால்தானே சிலை காணவில்லை என்றதும் கண்டுபிடிக்க முயற்சி எடுக்கிறார்."

"உண்மைதான். இப்போது நான் இருக்கும் இடம் எனக்கு மிகவும் பிடித்துப் போய்விட்டது. இப்படியொரு மாற்றம் எனக்கு ஏற்படும் என்று என் ஜாதகத்தில் உள்ளது."

"நான் என்ன செய்யணும்னு சொல்றீங்க?" திருமேனி கேட்டார்.

"நீங்களும் நல்ல மனிதர். உங்களை நான் ஒருபோதும் தொல்லைப்படுத்தமாட்டேன். அதனால் ஏற்படும் மானாவமானங்களைத் தாங்கிக்கொள்ள வேண்டும். எனக்காக... இந்தாருங்கள்... இதை வைத்துக் கொள்ளுங்கள்" மாலினி தன் இடது காதில் கிடந்த கம்மலைக் கழற்றி திருமேனியிடம் கொடுத்தாள்.

கம்மலிலிருந்த வைரக்கல், நாகமாணிக்கத்தைப் போல் அவர் கையில் பளபளத்தது.

"உங்களது பூஜையறையில் இருக்கும் பரதேவதையின் பாதத்தில் இந்த வையுங்கள். ஐஸ்வரியம் ஏற்படும்."

“அப்படியானால் இன்னொரு உதவியையும் செய்ய வேண்டும்” விண்ணப்பக் குரலில் திருமேனி கேட்டார்.

“சொல்லுங்கள்.”

“இன்றைக்கு நடந்ததைப் போல் ஏதாவது ஆச்சரியத்தை ஏற்படுத்தி பிரஸ்னத்தை நிறுத்திவிட்டால்... மற்றதை நான் பார்த்துக் கொள்கிறேன்.”

“உங்களது விருப்பப்படியே...”

அவள் அங்கிருந்து மறைந்தாள்.

திருமேனி தனது படுக்கையில் வந்து படுத்துக் கொண்டார்.

அதுவரை நடந்த சம்பவங்கள் அவரது உறக்கத்தைக் குலைத்தன. எப்படியெல்லாமோ புரண்டும் உருண்டும் படுத்துப் பார்த்தார். இருந்தும் உறக்கம் வருவதாகத் தெரியவில்லை.

சட்டென்று மென்மையான விரல்கள் அவர் கண்ணிமைகளைத் வருடுவது போல் அவருக்குத் தோன்றியது. விரைவிலேயே உறங்கத் தொடங்கினார்.

மறுநாள் வழக்கம்போல் பிரஸ்னம் ஆரம்பமானது. சர்ச்சைகள் நடந்தன. தேவநாராயணன் பெரும்பாலும் அமைதி காத்தார் என்றே சொல்லலாம்.

உடனே பண்டிதர் ஆலங்காட்டு சங்கரன் நம்பூதிரி விஜன் என்கிற வார்த்தையை வைத்துப் பேசத் தொடங்கினார்.

“இதுவரை நடந்ததை வைத்துப் பார்த்தால் ஏதோ ஒரு நம்பூதிரியின் வீட்டில் அந்த மோகினி வசிப்பதாகத் தெரிகிறது. மேலும் முயன்றால், சரியான இருப்பிடத்தைக் கண்டுபிடித்து விடலாம் என்றும் தோன்றுகிறது.”

தேவநாராயணன் அப்போது ஆகாயத்தைப் பார்த்துக் கொண் டிருந்தார். 'உடனடியாக அதிசயம் ஏதாவது நடக்க வேண்டுமே' என்று அவர் மனம் பரபரத்தது.



அவர் எதிர்பார்த்தது போலவே நடந்தது. இல்லத்தின் அருகிலிருந்த பெரிய ஆலமரம் ஒரு தடவை குலுங்கியது. கிளைகள் மாறுமாறாக அலைந்தன. காற்றடிக்கத் தொடங்கியது. மரம் பேயாட்டம் போட்டது. மழை பெய்வதுபோல் பழுத்த இலைகள் கீழ்நோக்கி உதிரத் தொடங்கின.

அதிகமான இலைகள் வந்து குவிந்த இடம் பிரஸ்னம் நடத்த வந்த பண்டிதர்கள் இருந்த மத்தியப்பகுதிதான். சற்று நேரத்துக்குள் மழை பெய்வதற்கான அறிகுறிகள் தென்பட்டன.

முந்தைய நாள் நடந்த இயற்கையின் திடீர்ச் சீற்றம் போல் ஏதோ நடக்கப் போகிறதென்று ஏனைய பண்டிதர்கள் ஒவ்வொருவராகப் பின்வாங்கத் தொடங்கினர்.

தான்னிக்காட்டு மனையில் சாப்பிட உட்கார்ந்தபோது தேவ நாராயணன் நம்பூதிரி கூறினார்: “நிலைமை இப்படியே தொடர்ந்தால் பிரஸ்னத்தைத் தொடர்வது சாத்தியமல்ல, எங்கேயோ, ஏதோ தவறு நடந்திருக்கிறது.”

“எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது” மீனங்காடன் அதை ஆமோதிப்பது போல் பேசினார்.

“ஒருவேளை பகவதியின் அனுமதி பெற்று அவள் போயிருக்கலாம். அதனால்தான் இப்படியெல்லாம் நடக்கிறது என்று நினைக்கிறேன்” கோவிந்தன் நம்பூதிரி கூறினார்.

இவர்களின் பேச்சைக் கவனித்த விஷ்ணு நம்பூதிரி கூறினார்: “நீங்கள் பேசியதையெல்லாம் நானும் கேட்டுக் கொண்டிருந்தேன். நானும் உங்கள் கருத்துகளை ஒப்புக் கொள்கிறேன். நீங்கள் குறிப்பிட்டது போல் ஏதாவது நடந்திருந்தால், வீணாக நாம் ஏன் பகவதியின் கோபத்துக்கு ஆளாக வேண்டும்?”

ஆனால், பவத்ராதன் நம்பூதிரி இதனால் திருப்தியடைந்ததாகத் தெரியவில்லை. தேவபிரஸ்னம் நடத்த வேண்டும் என்ற யோசனையைத் தெரிவித்து, அதற்கான ஏற்பாடுகளைச் செய்தது அவர்தான். பவத்ராதனைப் பொறுத்த வரையில் தான் மேற்கொண்டது நல்ல நோக்கத்துக்காகத்தான். ‘கோயிலிலிருந்து காணாமற் போன ஒரு

மோகினி சிலையையோ, அதன் இருப்பிடத்தையோ கண்டுபிடிக்க முடியவில்லை என்றால் நான் இந்தக் கோயிலில் பூசாரியாக இருந்து என்ன பயன்?' என்று ஓடியது அவரது சிந்தனை.

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள் திருமேனி?" விஷ்ணு நம்பூதிரி பவத்ராதனைப் பார்த்துக் கேட்டார்.

"நீங்கள் இதுவரை வெற்றி அடைந்திருக்கிறீர்கள். அதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை!" பவத்ராதன் சொன்னார்.

"அது எப்படி?" விஷ்ணு கேட்டார்.

"யாரும் சிலையைப் பெயர்த்து எடுத்துச் செல்லவில்லை. சுயவிருப்பத்தின் பேரிலேயே அது இடம்பெயர்ந்திருக்கிறது என்பது நமக்குத் தெரிந்ததே, அதனால்தானே?"

இந்த வார்த்தையைக் கேட்டபடி டாக்டர் அஸ்வதி வெளியே வந்தாள்.

"இந்தச் செய்தியே எனக்கு விநோதமாகத் தெரிகிறது. பிரதிஷ்டை செய்து வைத்திருக்கும் சிலைகளிலிருந்து சக்தி வெளியேறுவதுண்டு என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் சிலையே தானாக இப்படி வெளியேறியது என்பதை இப்போதுதான் முதன் முதலாகக் கேள்விப்படுகிறேன்."

"இதிலுள்ள ஆச்சரியமே அதுதானே!" விஷ்ணு நம்பூதிரி கூறினார்.

"காரணம் என்னவாக இருந்தாலும் பிரஸ்னத்தை இதோடு நிறுத்திக் கொள்வதுதான் நல்லது என்பது என் கருத்து. நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?"

மற்ற நால்வரையும் பார்த்தபடி தேவநாராயணன் கேட்டார்.

"அதுதான் நல்லது" நால்வரும் ஒரே குரலில் கூறினர்.

'பிரஸ்னத்தை மேற்கொண்டும் தொடர வேண்டாம்' என்று முடிவானது. ஆனால், பவத்ராதனின் மனதில் மட்டும் அது ஒரு கேள்விக்குறியாக நின்றது.



அன்று இரவில் சாப்பிட்டபடி மந்தாகினியிடம் பேசிக் கொண்டிருந்தான் உண்ணிக்கிருஷ்ணன். அப்போதுதான், அவள் இடது காதில் கம்மல் இல்லாததை கவனித்தான்.

"மந்தாகினி, இடது காதுல கம்மலைக் காணோமே?" அவள் முகத்திலிருந்து பார்வையை அகற்றாமல் கேட்டான்.

"ராத்திரியில எங்கேயோ விழுந்துடுச்சு... எங்கெல்லாமோ தேடியும் கிடைக்கலை."

"விலை உயர்ந்ததாச்சே... அதை அப்படியே விட்டுட முடியுமா?"

"தேடிப் பார்த்தேன். கிடைக்காததால... சரி போகட்டும்னு விட்டுட்டேன்."

"அப்படியானால், நாளைக்குக் காலையில பட்டணத்துலேர்ந்து ஒரு ஜோடி புதுக்கம்மல் வாங்கிடலாம்" உண்ணிக்கிருஷ்ணன் கூறினான்.

"அதெல்லாம் வேண்டாம்ங்க. இருக்கிறதே போதும்" மந்தாகினி மறுத்தாள்.

"அது சரி, இப்பிடி ஒற்றைக் கம்மலோடவே இருக்கப் போறியா? யாராவது பார்த்தா என்ன நினைப்பாங்க?"

"அது ஒரு கஷ்டமான காரியமா என்ன? யாரும் பார்க்காதபடி தான் நடந்துக்கிறேன். இப்பப் பாருங்க" மந்தாகினி தன் தலைமுடியைக் காதை மறைத்து இழுத்துவிட்டுக் கொண்டு கேட்டாள்.

"அப்படியானா, நான் நினைச்சாதான் இனிமேல் உன் காதைப் பார்க்க முடியும் இல்லையா?" உண்ணிக்கிருஷ்ணன் குறும்புடன் கேட்டான்.

மந்தாகினி வெட்கத்துடன் தலையைத் தாழ்த்திக் கொண்டாள்.

சாப்பாட்டை முடித்துக்கொண்டு இருவரும் வெளிப்புறத் திண்ணைக்கு வந்தனர்.

"இன்னிக்கு மத்தியானம் சுவாரஸ்யமான செய்தி ஒண்ணு கேள்விப்பட்டேன்..." அங்கிருந்த தூணில் சாய்ந்துகொண்டு உண்ணி கூறினான்.

மந்தாகினி அவன் காலடியில் அமர்ந்து, அவன் கால்களைத் தன் மடியில் போட்டு வருடிக் கொண்டிருந்தாள்.

“அவ்வளவு சுவாரஸ்யமான விஷயம் என்னங்க?” அவள் கேட்டாள்.

“சுவாரஸ்யம் மட்டுமில்லை; அதிசயமான செய்தியும்கூட.”

“விஷயத்தைச் சொல்லுங்க” அவள், அவன் முகத்தைப் பார்த்தபடி பேசினாள்.

நிலவொளி அந்தப் பகுதியெங்கும் பனிபோல் பரவியிருந்தது.

வெளியே அவர்கள் இருவரும் அமர்ந்து பேசிக் கொண்டிருப்பதை தனலட்சுமி வீட்டுக்குள் மறைந்து நின்று கவனித்துக் கொண்டிருந்தாள்.

அவர்கள் எப்போது எதைப்பற்றிப் பேசிக்கொண்டாலும், உடனடியாக அதை அப்படியே தன்னிடம் வந்து தெரிவிக்க வேண்டும் என்பது புவனேஸ்வரன் நாயரின் கட்டளை.

“தேங்காய் வியாபாரியைப் பார்க்கிறதுக்காக மத்தியானம் படகுத்துறைக்குப் போயிருந்தேன். அப்போது ஒரு திருமேனி அந்தப் பக்கமாக வந்தார்.”

“அப்புறம்?” அவள் மிகுந்த ஆர்வத்துடன் கேட்டாள்.

“அவர் ஒரு தேவபிரஸ்னத்துல கலந்துட்டு வந்தவராம்.”

“அவர் பேர் என்னங்க?”

“மீனங்காட்டு மனையைச் சேர்ந்தவர்...”

“மீனாங்காட்டு சச்சிதானந்தன் நம்பூதிரிதானே அவர்?”

“உனக்கு எப்படித் தெரியும் மந்தாகினி?”

“தெரியும்... அவர் முட்டாள்தனமா உங்ககிட்ட ஏதாவது சொன்னாரா?” மந்தாகினியின் குரல் சற்று உரத்து ஒலித்தது.

“சொன்னார். அதாவது திருப்பனங்காட்டுக் கோயிலில் இருந்த ஒரு மோகினி சிலை காணாமல் போயிடுச்சாம்.”



“அப்படியா சொன்னார்?” மந்தாகினி உட்கார்ந்த இடத்திலிருந்து துள்ளியெழுந்தாள்.

## 17

மந்தாகினியின் பரபரப்பைக் கவனித்த உண்ணிக்கிருஷ்ணனின் எண்ணம் வேறொரு திசையில் பயணம் செய்தது.

‘சிலை காணாமற்போன கோயில் அவளுக்குத் தெரிந்த ஒன்றாக இருக்கலாம். ஒருவேளை மந்தாகினி அந்த ஊரைச் சேர்ந்தவளாகவும் இருக்கலாம்.’ இதுவரை மந்தாகினியின் குடும்பத்தைப் பற்றியோ, அவளது ஊரைப் பற்றியோ உண்ணிக்கிருஷ்ணன் கேட்டதே இல்லை.

அதற்கும் ஒரு காரணம் இருந்தது. தன் ஊனங்களை அகற்றிய தன், தனது வாழ்க்கைக்குத் தேவையான எல்லா ஐஸ்வர்யங்களையும் தந்து கொண்டிருக்கும் மந்தாகினி, அவனுக்கு எல்லாமாக இருந்தாள். எனவே, அவளிடம் அவளைக் குறித்து விசாரிப்பது என்பதே மரியாதையற்ற - நன்றியற்ற ஒரு செயலாகத் தோன்றியது.

“என்ன மந்தாகினி, என்ன ஆச்சு உனக்கு?” உண்ணிக்கிருஷ்ணன் கேட்டான்.

“ஒன்றுமில்லை... எனக்குத் தூக்கம் வருது. நாம தூங்கப் போகலாமே!”

“நல்ல நிலா வெளிச்சம்... இன்னும் கொஞ்ச நேரம் பேசிட்டிருக்கணும்னு தோணுது.”

“இருக்கட்டும், வாங்க போய்த் தூங்கலாம்” அவள், அவன் சட்டையற்ற தோள் மீது கை வைத்து அழைத்தாள்.

அந்தக் கைவிரல்கள் எவ்வளவு மென்மையாக இருக்கின்றன.

வேறு எந்தக் கேள்வியும் கேட்காமல் அவன் எழுந்து, அவளுடன் படுக்கையறைக்குள் நுழைந்தான். உண்ணிக்கிருஷ்ணனின் கைவிரல்கள் அவளின் கன்னப்பகுதிகளில் அளைந்தன.

“ராத்திரி... ரொம்ப நேரம் ஆயிடுச்சு. படுத்துத் தூங்குங்க” அவள், அவன் நெற்றியில் விரல்களைச் செலுத்தியபடி கூறினாள்.

அவன் கண்ணிமைகள் சட்டென்று கனம் தாங்காதவை போல அழுந்திக் கண்களை மூடிக் கொண்டன. அவன் உடனே உறக்கத்தில் அமிழத் தொடங்கினான். தொடர்ந்து அழகான ஒரு கனவுக்குள் அவன் ஊர்ந்து விழவும் செய்தான்.

**மீ**னங்காடன் நம்பூதிரி அப்போதும் படுக்கச் செல்லவில்லை. மணி பதினொன்றுக்கு மேல் ஆகியிருந்தாலும் அவர் நண்பர்களுடன் அமர்ந்து சுவாரஸ்யமான அரட்டையில் ஈடுபட்டிருந்தார். அப்போது தான் நண்பர்களில் ஒருவர், அவர் கலந்துகொண்ட தேவ பிரஸ்னத்தைப் பற்றிய செய்தி ஒன்றை எடுத்துப் போட்டார்.

அதைப்பற்றிப் பேசிக்கொண்டே வந்தவர் ராசிப் பலகையின் மீது நிழல் படிந்த விஷயத்தைப் பற்றிப் பேச முயன்றதும் சட்டென்று நாக்குக் குழறியது. சொல்ல வந்த விஷயம் நாக்கை விட்டுத் தாண்டாமல் மனசுக்குள்ளேயே தங்கிப் போனது.

அப்போது மச்சுப் பகுதியில் ஒரு வெளிச்சம் தெரிந்தது. சங்கிலி விளக்கு ஒன்று அவ்வளவு உயரத்தில் நகர்வது போலத் தோன்றியது. ஊன்றிக் கவனித்தபோது அவ்வளவு உயரத்தில் இடுப்பு வரை தெரிந்த அந்த உருவத்தின் இடுப்புக்கு மேற்பட்ட பகுதி தெரியவில்லை.

திருமேனிக்கு உடனடியாக விஷயம் விளங்கியது. அதனால் தான் சொல்ல வந்ததைச் சட்டென்று அத்துடன் நிறுத்திக் கொண்டார்.

"என்னங்க, பேச்சைப் பாதியிலேயே நிறுத்திட்டீங்க?" நண்பர் கேட்டார்.

"அதுவா... வந்து.. திடும்னு வந்த மழையால தேவபிரஸ்னத்தை நிறுத்த வேண்டியதாப் போச்சுன்னு வைச்சுக்கங்க, அவ்வளவுதான்."

அதன்பிறகு அவர் அதைப்பற்றி எதுவும் பேசவில்லை.

வேறு எவரும் எதுவும் கேட்கவில்லை.

**த**னலட்சுமிக்கு உறக்கம் வரவுமில்லை.

உண்ணிக்கிருஷ்ணன் சொன்ன வார்த்தைகள் அன்று முழுவதும் அவள் மனத்தை அலைக்கழித்துக் கொண்டிருந்தது.



உண்ணிக்கிருஷ்ணன், சிலை காணாமல் போனதைப் பற்றிச் சொன்னதும், மந்தாகினி சட்டென்று பரபரப்புடன் எழுந்ததைப் பார்த்த கூர்மையான புத்தி கொண்ட தனலட்சுமியின் மனதில் அது பல்வேறு சந்தேகங்களை எழுப்பத் தவறவில்லை.

சிறு வயதிலிருநதே அவள் எத்தனையோ ஆச்சரியகரமான கதைகளைக் கேட்டிருக்கிறாள். அவற்றில் மோகினி, கந்தர்வர்களைப் பற்றிய கதைகளே அதிகம்.

மந்திர சக்தியைப் பயன்படுத்தி, மோகினிகளை மயக்கியோ, அடிமைப்படுத்தியோ தங்களது வீடுகளில் வேலைக்காரிகளாகவும், தொடுப்புகளாகவும் மந்திரவாதிகள் வைத்திருந்த கதைகள் அவள் மனதில் வேரூன்றியிருந்தன.

இந்த இல்லத்திலிருக்கும் மந்தாகினியின் அசாதாரணமான அழகும், கம்பீரமான உடல் கட்டமைப்பும் தனலட்சுமியிடம் ஏற்கெனவே ஒருவித சந்தேகத்தை ஏற்படுத்தியிருந்தன. மேற்படிக் கதைகள் அவளுக்கு நினைவு வந்தவுடன், அவற்றை மந்தாகினியின் மீது பொருத்திப் பார்க்கவும் அவள் தவறவில்லை.

இன்றைய பேச்சு விவரங்களை எப்படியாவது மறுநாள் பொழுது விடிந்ததும் புவனேஸ்வரன் நாயரிடம் தெரிவித்து விடுவதென்று அப்போதே தீர்மானித்துக் கொண்டாள்.

காலையில் எழுந்தவுடன் அடுப்படி வேலைகளை அவசர அவசரமாக முடித்தாள்.

"என்ன தனலட்சுமி, இன்னிக்கு வேலையெல்லாம் ரொம்பவும் சுறுசுறுப்பா நடக்கிற மாதிரி தெரியுதே?" மந்தாகினி கேட்டாள்.

"கடைத்தெரு வரைக்கும் போயிட்டு வரணும். நிறையப் பொருளுங்க தீர்ந்து போயிருக்கு. அதனாலதாம்மா..."

"அப்படியா, அப்ப சரி" மந்தாகினி அதன்பிறகு எதையும் கேட்கவில்லை.

மதியம் தாண்டிய நேரத்தில் மந்தாகினியும் உண்ணியும் சாப்பாட்டை முடித்துக்கொண்டு உள்ளறையில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தபோது, கூடையை எடுத்துக்கொண்டு தனலட்சுமி புறப்பட்டாள்.

அவள் நேராகப் போன இடம் புவனேஸ்வரன் நாயரின் வீடுதான்.

தெருவாசற்படியைத் தாண்டியபோதே தனலட்சுமியின் இருப்புக் கொள்ளாமையைக் கவனித்த புவனேஸ்வரன் நாயர், ஏதோ முக்கியமான செய்தி அவளுக்குக் கிடைத்திருக்கிறது என்பதை சுலபமாக உணர்ந்து கொண்டார்.

“என்னடியம்மா, பனங்காட்டு மனையில ஏதோ விசேஷம் இருக்கிறாப்பல இருக்கே...” ஆர்வத்தை அடக்க முடியாதவராகப் புவனேஸ்வரன் கேட்டார்.

“அதனாலதான் இந்த ஓட்டம் ஓடி வந்திருக்கிறேன்.”

புவனேஸ்வரன் ஒருதடவை சுற்றுமுற்றும் பார்த்தார்.

ராமுண்ணி முற்றப் பகுதியில் கொப்பரைத் தேங்காய்களைப் புரட்டிப் போட்டுக் கொண்டிருந்தான். வேறு யாரும் அந்தப் பகுதியில் இல்லை. தனலட்சுமி வருவதைக் கவனித்ததும் ராமுண்ணியும் அங்கிருந்து நழுவி விட்டான்.

“நேத்து அதிசயமான ஒரு விஷயத்தைப் பத்தி அவங்க பேசிக்கிட்டாங்க” தனலட்சுமி இளந்திண்ணையில் அமர்ந்தபடி பேசினாள்.

புவனேஸ்வரன் நாயர் சாய்வு நாற்காலியில் ஓய்வாகப் படுத்திருந்தார். அவள் பேசத் தொடங்கியதும் தலையை மட்டும் அவள் பக்கமாகத் திருப்பினார்.

“என்ன... என்ன...?” அவர் பரபரப்பு அடைந்தார்.

“சின்னத் திருமேனி படகுத்துறைப் பக்கம் போயிட்டு வந்தாராம். வர்ற வழியில ஒரு... ஒரு... ஒரு...” அதன் பிறகு எவ்வளவு முயன்றும் அவள் நாக்கு அசையவே இல்லை.

“என்ன தனம்... இப்படிப் பாதியிலேயே நிறுத்திட்டா எப்படி? சொல்ல வந்ததை முழுசாச் சொல்லு!”

அப்போது அவள் முகத்துக்கு நேராக ஒரு கை தென்பட்டது. மணிக்கட்டின் கீழுள்ள கைப்பகுதி மட்டும்.



அதன் சுட்டுவிரல் அவள் கழுத்தை நோக்கி நீண்டு வந்தது. அதன் மொத்த விரல்களிலுமிருந்த கூர்மையான நகங்களைக் கவனித்த தனலட்சுமி ஒருகணம் அப்படியே அசைவற்றுப் போனாள்.

அவள் கழுத்தைக் கடந்து மறுபுறம் செல்லும் அளவுக்கு அந்த நகங்கள் நீளமுள்ளவையாக இருந்தன.

"என்ன தனம் பேசமாட்டேங்கிறே? உன்னைப் பார்த்தா, ஏதோ பேயறைஞ்சவ மாதிரி இருக்கே. ஏன், என்ன ஆச்சு?” நன்றாகத் திரும்பிக் கொண்ட புவனேஸ்வரன் நாயர் கேட்டார்.

தனலட்சுமி அப்போதும் மௌனமாக உட்கார்ந்திருந்தாள்.

புவனேஸ்வரன் நாயர் தன் வலது கையை நீட்டி அவள் தலையைப் பிடித்து உலுக்கினார்.

"ஐயோ, என்னைக் கொல்லாதீங்க!” என்று அலறியபடி அவள் அங்கிருந்து துள்ளியெழுந்தாள்.

அவளது அலறலைக் கேட்டு புவனேஸ்வரன் நாயரின் இரண்டு மனைவியரும், வேலைக்காரர்களும் அந்தப் பக்கமாக ஓடிவந்தனர்.

"இவளுக்கு என்னவோ ஆயிடுச்சு. உள்ளே கொண்டு போய் தண்ணியோ, காபியோ குடுங்க” நாயர் கூறினார்.

வேலைக்காரி ஒருத்தி உடனே தனலட்சுமியை வீட்டுக்குள் அழைத்துக்கொண்டு போனாள்.

அவள் பேசத் தொடங்கியது என்னவோ பனங்காட்டு மனையைப் பற்றித்தான். எனவே, அந்த வீட்டைச் சேர்ந்த கண்ணுக்குத் தெரியாத ஏதோ ஒரு சக்திதான் தனத்தின் வாயைக் கட்டிப்போட்டிருக்கிறது என்பது அவருக்குப் புரிந்தது.

'அவளுக்கு மறுபடி நன்றாகப் பேசும் சக்தி வரட்டும். முடிந்தால் அவளிடமிருந்தே விஷயத்தைத் தெரிந்து கொள்ளலாம்' என்று அமைதி காத்தார் நாயர்.

சற்று நேரத்துக்குள் தனலட்சுமி பழைய நிலைக்குத் திரும்பி விட்டதாகத் தோன்றியது. ஆனால், வாயைத் திறந்து எதையும் பேசுவதில்லையென்று அவள் தீர்மானம் செய்துவிட்டது போல்

தெரிந்தது. இருப்பினும் தம்புராட்டியை மிகவும் நுட்பமாகக் கவனிப்பது என்றும் அவள் தீர்மானித்தாள்.

**அ**ன்று மாலை நேரத்தில் புவனேஸ்வரன் நாயர், சேகரக் கைமளின் வீட்டுக்குப் போனார்.

“கைமள், நாம உடனடியா சோமதத்தனைப் பார்க்கணும். அவளைப் பத்தி ஏதோ ஓர் ஊகம் கிடைச்சிருக்கு. அதை வெச்சு இனிமே நூல் பிடிக்க வேண்டியதுதான்.”

சேகரக் கைமள், புவனேஸ்வரன் நாயருடன் புறப்பட்டார். அன்றும் சோமதத்தனின் வீட்டுக்குச் செல்லும் செம்மண் பாதையை அடையும்போது இருள் பரவத் தொடங்கி விட்டிருந்தது.

அன்றைக்குப் பார்த்த மிருதன் அப்போதும் அதே இடத்தில் நின்று கொண்டிருந்தான்.

“எஜமானைத்தானே பார்க்கப் போறீங்க?” மிருதன் கேட்டான்.

“ஆமாம்.”

“நீங்க வர்றதைத் தெரிஞ்சுதான் என்னை அனுப்பி வெச்சிருக்கார்.”

இருவரும் அவனைப் பின்தொடர்ந்தனர்.

தெருவாசற்படியை அடைந்தவர்கள் உட்புறம் எட்டிப் பார்த்தனர். மாந்திரீகர் உட்கார்ந்திருந்தார். அவருக்கு அருகில் வேறு யாரோ ஒருவரும் உட்கார்ந்திருந்தார்.

வீட்டுவாசற்படி வரை வந்த மிருதன் உடனே திரும்பி விட்டான்.

இருவரும் வாசல்படி ஏறினர்.

“அதோ, அந்த வராந்தாவின் ஓரத்தில் உட்கார்ந்திருங்கள். இதோ வந்து விடுகிறேன்” சோமதத்தன் கூறினார்.

இருவரும் உட்கார்ந்த பிறகு அங்கிருந்து பார்த்தபோதுதான் விளக்கு வெளிச்சத்தில் சோமதத்தனுக்கு அருகிலிருந்த உருவம் சற்றுத் தெளிவாகத் தெரிந்தது.



புவனேஸ்வரன் நாயர் சட்டென்று கைமளின் கையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டார்.

அந்த அளவுக்குப் பைசாசிகமாகவும், பயங்கரமானதாகவும் இருந்தது சோமதத்தனுக்கு அருகிலிருந்த உருவம்.

ஏராளமாக நெளிந்துபோன ஓர் அலுமினியப் பாத்திரம் போல் தளர்வடைந்த தோல், அந்த உடம்பை மூடியிருந்தது. அந்த மனித உருவத்தின் கண்கள் இருக்க வேண்டிய பகுதியில் வட்டவடிவமான இரண்டு குழிகள் தென்பட்டன. மூக்கு இருக்க வேண்டிய இடத்தில் ஏறத்தாழ முக்கோணமான வெற்றிடம். அதன் கீழ்ப்புறத்தில் இற்றுப்போன பற்களும், கழுத்தின் கீழே வெறும் எலும்புக்கூடாகவும் இருந்தது.

“இறந்து நூறு வருஷம் ஆன பிறகு உன்னை எதுக்காக சவக்குழியில் இருந்து எழுப்பிக்கொண்டு வந்திருக்கேன்னு தெரியுமா?” மாந்திரீகர் அந்த விகார உருவத்திடம் கேட்டார்.

“தெரியலீங்களே!” அந்த உருவம் பேசியதைக் கேட்டதும் புவனேஸ்வரன் நாயரும், சேகரக் கைமளும் நடுங்கவே செய்தார்கள்.

“கோவிலகத்துக்குள் (நம்பூதிரிகளின் வீடு) இருந்து அவளைத் தூக்கிக்கொண்டு வரவேண்டும். அவள் ஆணவமும் அகங்காரமும் இதோடு அடங்க வேண்டும்.”

“அதனால் எனக்கு ஏதாவது ஆகிவிடுமோ என்று தோன்றுது” அந்த உருவம் தாழ்ந்த குரலில் கேட்டது.

“உன்னைத் தவிர வேறு யாரும் அவளை நெருங்க முடியாது. காரணம் அவளிடம் பிரத்தியேகமான ஒரு சக்தி உண்டு. அது அவள் விரதத்துடன் தவம் செய்ததற்குக் கிடைத்த பலன். சண்டாளனான நீ அவளைத் தொட்ட விநாடியில், அவளது மொத்த சக்தியும் இல்லாமலாகி விடும்.”

“அப்படியானா, நான் போய் அவளைத் தூக்கிட்டு வந்துடுறேன்” அந்த உருவம் மிகவும் மெதுவாக எழுந்து நடக்க முடியாத நோயாளி ஒருவர் நடப்பதுபோல் நடந்து மறைந்தது.

“என்னுடைய சக்தியைப் பார்த்தீர்களா? பக்கத்தில் ஒரு கோவிலகம் உள்ளது. அங்கு க்ஷத்திரியப் பெண் ஒருத்தி கடுமையான விரதமிருந்து மாந்திரீக ஸித்தி கைவரப் பெற்றிருக்கிறாள். அவளுக்கு நான் தரப்போகும் தண்டனைதான் இது. இன்று இரவு அவள் எனது படுக்கையில் இருப்பாள்!”

தாங்கள் வந்து சேர்ந்திருப்பது அற்புதமான சக்தியுள்ள ஒரு மாந்திரீகனிடம் என்பதும், தங்களது எதிரியை அழிக்கும் வல்லமையுள்ள ஒரு மனிதர் இவர் என்பதும் அவர்களுக்குப் புரிந்தது.

“அன்றைக்கு நான் உங்களிடம் கொடுத்து அனுப்பிய பொருள் பிரயோஜனப்படவில்லை, இல்லையா?” மாந்திரீகர் கேட்டார்.

“இல்லை.”

“அப்படின்னா, விஷயம் கொஞ்சம் சிக்கலானதுன்னு அர்த்தம்”

“மேற்கொண்டு என்ன செய்யலாம்?” சேகரக் கைமள் கேட்டார்.

“நீங்க குறிப்பிட்ட பொண்ணு மேலதான் உங்களுக்குச் சந்தேகம் இல்லையா?” சோமதத்தன் கேட்டார்.

“அவள் பனங்காட்டு மனைக்கு வந்த பிறகுதான் இந்த அற்புதமெல்லாம் நடந்திருக்கிறது.”

“சரி, இரண்டாம் கட்டமாக நான் ஒரு பொருளைக் கொடுத்து அனுப்புகிறேன்.”

“என்ன மாதிரியான பொருள்?”

“நான் ஒரு உருவத்தைத் தருகிறேன். இதுதான் அந்த உருவம்” சோமதத்தன் தன் கழுத்தில் கிடந்த ருத்திராட்ச மாலையிலிருந்து வட்ட வடிவமான செப்புத்தகடு ஒன்றை அவிழ்த்து எடுத்து முற்றத்தில் போட்டார்.

தகடு விழுந்த இடத்தில் சட்டென்று வெள்ளையான நூல் மாதிரி புகை உயர்ந்தது. கண்மூடித் திறப்பதற்குள் அந்தப் புகை பிரமாண்டமான பைசாசிக உருவமாக வளர்ந்து நின்றது.



“நீங்க சொன்ன ரெண்டு பேரையும் ஸ்வாஹா பண்றதுக்கு இவள் ஒருத்தி போதும்!” என்றவர் அந்த உருவத்தை நோக்கிக் கையை நீட்டினார். அது பழையபடி செப்புத்தகடாக மாறி அவர் கைக்கு வந்து சேர்ந்தது.

சிவப்புநிறப் பட்டுத்துணி ஒன்றில் அதை முடிந்த சோமதத்தன் கைமளிடம் கொடுத்தார். “இதை அவர்களது படுக்கையறையில் போட்டு வைக்க ஏற்பாடு செய்தால் போதும்.”

சேகரக் கைமள் அதை வாங்கித் தமது மடியில் பத்திரப்படுத்திக் கொண்டார்.

அதற்குச் சன்மானமாக புவனேஸ்வரன் நாயர் தன் கழுத்தில் கிடந்த கனமான தங்கச் செயினைக் கழற்றி மாந்திரீகனிடம் கொடுத்தார்.

அவர்கள் புறப்படுவதற்காக எழுந்தபோது தெரு வாசற்படியில் ஒரு காட்சியைக் கண்டனர்.

அவ்வளவுதான், இருவரின் கால்களும் பசை போட்டு ஒட்டியது போல் அங்கிருந்து நகர மறுத்தன.

## 18

புவனேஸ்வரன் நாயரும் சேகரக் கைமளும் பார்த்த காட்சி எப்படிப்பட்டவர்களையும் திடுக்கிட வைக்கக் கூடியது.

மகா மாந்திரீகனான சோமதத்தன் கட்டளையிட்டு அனுப்பிய பைசாசிகமான உருவம், பேரழகியான ஒரு பெண்ணைத் தன் இரண்டு கைகளிலும் ஏந்திக்கொண்டு வந்தது.

அந்த பயங்கர உருவத்தின் நிலையைப் பார்த்தால், அதன் கைகளிலிருந்த பெண்ணின் உடலைச் சுமக்கும் சக்திகூட அதற்கு இருக்காது என்றுதான் நினைக்கத் தோன்றும்.

இருப்பினும் அந்த பயங்கர உருவம் தன் சக்திக்கு மீறிய செயலைச் செய்வது சோமதத்தனின் மகத்தான மாந்திரீக சக்தியால்தான் என்பது இருவருக்கும் புரியவே செய்தது.

இந்தக் காட்சியைப் பார்த்ததும், எவ்வளவுதான் சக்தி நிரம்பியவளாக இருந்தாலும் தன்னுடைய எதிராளியையும் சோமதத்தன் வெகு சுலபமாகவே வெற்றி கொண்டு விடுவார் என்பதில் புவனேஸ்வரன் நாயருக்கு எந்தவிதமான சந்தேகமும் இல்லாமல் போனது.

“நீங்கள் புறப்படலாம். மறக்காமல் நான் சொன்னது மாதிரி, அந்தச் செப்புத் தகட்டை அவளது படுக்கையறையில் மறைவான ஓரிடத்தில் போட்டு விடுங்கள். அது தன் வேலையைப் பார்த்துக் கொள்ளும்” மாந்திரீகன் மறுபடியும் நினைவூட்டினார்.

இருவரும் விடைபெற்றுப் புறப்பட்டனர்.

“இந்தத் தடவை அவள் நம்மிடமிருந்து தப்பிக்க முடியாது என்று தோன்றுகிறது. என்ன சொல்கிறீர்கள் கைமளே?” புவனேஸ்வரன் நாயர், கைமளின் முகத்தைப் பார்த்தபடி கேட்டார்.

“உண்மை. எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது” கைமள் ஒப்புக்கொண்டவராக பதிலளித்தார்.

இருப்பினும் கைமளின் மனதில் மற்றொரு விதமான சந்தேகம் எழாமல் இல்லை. தனக்கு நேர்ந்த அனுபவத்தை வைத்துப் பார்க்கும்போது, எதிராளியின் சக்தியும் சாமானியமானதல்ல. நடப்பது நடக்கிறபடி நடக்கட்டும். இந்தச் சூழ்நிலையில் புவனேஸ்வரன் நாயரைத் திருப்திப்படுத்தா விட்டால், அது தனக்கு பாதகத்தை ஏற்படுத்தும் என்பதால் மேலுக்குத் தலையாட்டி ஒப்புக்கொண்டார் கைமள்.

இந்தத் தடவையும் இருவரும் நடந்தேதான் பயணம் செய்தனர். புவனேஸ்வரன் நாயரை பெரிய வீட்டில் விட்டுவிட்டுத்தான் கைமள் தன்னுடைய வீட்டுக்குத் திரும்பினார்.

மறுநாள் புவனேஸ்வரன் நாயர், ராமுண்ணியைப் பனங்காட்டு மனைக்கு அனுப்பி வைத்தார்.

ராமுண்ணி வந்தபோது மந்தாகினி திண்ணையில் உட்கார்ந்திருந்தாள்.

“என்ன ராமுண்ணி, தனலட்சுமியைத் தேடி வந்திருக்கிறீர்களா?”



எதிர்பாராமல் மந்தாகினியை சந்திக்க நேர்ந்ததால் சற்றுத் தயங்கிய ராமுண்ணி, அவளது விசாரிப்பைக் கேட்டதும் பயப்படவே செய்தான். ‘தான் எதற்காக வந்திருக்கிறோம் என்பதைக்கூட தம்புராட்டி தெரிந்து கொண்டிருக்கலாம். உண்மையிலேயே மிகவும் பொல்லாதவள்தான் இந்தத் தம்புராட்டி!’ என்று அவன் மனம் உள்ளுக்குள் பொருமவும் செய்தது.

அவ்வளவு தூரம் வந்து, மந்தாகினியின் கண்ணில் தட்டுப்பட்ட பிறகு அவனால் சட்டென்று அங்கிருந்து விலகவோ, தயக்கமின்றி பதிலளிக்கவோ முடியவில்லை.

“பெரியவீட்டுப் பண்ணைக்காரர் சொல்லியனுப்பி இருக்கிறாரா?” என்று மறுபடியும் கேட்ட மந்தாகினி, உட்புறம் திரும்பி, “தனலட்சுமி, தனலட்சுமி...” என்று குரல் கொடுக்கவும் செய்தாள்.

அந்த அழைப்பை எதிர்பார்த்துக் காத்திருந்தவளைப் போல் தனலட்சுமி வெளியே வந்தாள்.

“உன்னைப் பார்க்கத்தான் ராமுண்ணி வந்திருக்கிறார். என்னத்தையோ கொடுக்க வந்திருக்கிறார், வாங்கிக்கம்மா” மந்தாகினி மிகவும் இயல்பான குரலில் கூறினாள்.

அவள் குரலில் எந்தவிதமான கடுமையும் தென்படாததால் ராமுண்ணி ஓரளவு ஆறுதலடைந்தான். ‘இருப்பினும் மந்தாகினிக்கு முன்பாகத் தனது மடியிலிருக்கும் பொட்டலத்தை வெளியே எடுக்கலாமா, வேண்டாமா’ என்று தயங்கினான்.

‘தனலட்சுமியைத் தவிர வேறு யாரிடமும் கொடுக்கக்கூடாது’ என்று சொல்லித்தான் புவனேஸ்வரன் நாயர் அதை அவனிடம் கொடுத்திருந்தார். அது என்ன, ஏது, அதனால் என்ன விளைவு ஏற்படும் என்பதெல்லாம் ராமுண்ணிக்குத் தெரியாது. புவனேஸ்வரனும் அதைக் கூறிடவில்லை. இருப்பினும் பிரச்சினைக்குரிய ஏதோ ஒரு பொருள் அது என்பது ராமுண்ணிக்கு விளங்கியது.

‘இந்த நேரத்தில், தான் அதை தனலட்சுமியிடம் கொடுத்தால் ஒருவேளை தம்புராட்டி என்ன, ஏதென்று விசாரித்து வாங்கிப் பார்த்தால் என்ன செய்வதென்று யோசித்தான்.

“நீ கொண்டு வந்திருக்கிறது எதுவா இருந்தாலும் அவள்கிட்டயே கொடுத்திடு. அதை நான் வாங்கவோ, பார்க்கவோ விரும்பவில்லை” என்ற மந்தாகினி சட்டென்று வீட்டுக்குள் போனாள்.

ராமுண்ணிக்கும் அது நல்லதாகவே தோன்றியது. தனலட்சுமியை அருகே வருமாறு அழைத்தான்.

“இந்தா தனம், இந்தப் பொட்டலத்துக்கு உள்ளே இன்னொரு பொட்டலம் இருக்கு. இதைப் பத்திரமா அவங்களோட படுக்கை அறைக்குள்ள அவங்க கண்ணுக்குத் தெரியாம எங்கேயாவது மறைச்சு வைக்கணும்” ராமுண்ணி மிகவும் தாழ்ந்த குரலில் அவளிடம் சொல்லிவிட்டுப் பொட்டலத்தைக் கொடுத்தான்.

தனலட்சுமி அதை வாங்கித் தன் மடியில் செருகினாள்.

“வேற ஏதாவது சொன்னாரா?” தனலட்சுமி கேட்டாள்.

“அவங்களோட படுக்கையறையில இதை வெச்ச பிறகு, உன்னை ராத்திரியில அவரோட தேங்காய் கிட்டங்கிக்கு வரச்சொன்னார்” ராமுண்ணி நமுட்டுச் சிரிப்புடன் கூறினான்.

அவளுக்கு விஷயம் புரிந்தது.

“கொப்பரை வெச்சிருக்கிற கிட்டங்கியில உன்னை எதிர்பார்த்துக் காத்திருப்பேன்னு சொன்னார்.”

“வேற என்ன?”

“இந்தாம்மா தனம், என்னையும் கொஞ்சம் ஞாபகம் வெச்சுக்க நானும் பெரிய வீட்டு எஜமான் மாதிரி ஒரு ஆம்பிளைதான்” ராமுண்ணி அவளுக்கு நினைவூட்டினான்.

“நீ ஆம்பிளைதான்யா இல்லேங்கலை. ஆனா, நீ பெரிய வீட்டு எஜமானா என்ன?” என்ற தனலட்சுமி செல்லமாக ராமுண்ணியின் வயிற்றில் குத்தினாள்.

தனத்தின் கை அவன் மேல் பட்டதும் ஒருகணம் அவன் சிலிர்த்துப் போனான். உடம்பை நெளித்தபடி சிரித்தான்.

“உனக்கு இது போதும்யா...” அவள் சொன்னாள்.



சட்டென்று தன் வலது கையை உயர்த்தி தனத்தின் கன்னத்தைச் செல்லமாக நிமிண்டிவிட்டு அத்துடன் திருப்தியடைந்தவனாக ராமுண்ணி அங்கிருந்து கிளம்பினான்.

‘சீக்கிரமாக இரவு வராதா?’ என்று தனலட்சுமி ஏங்கத் தொடங்கினாள்.

“ராமுண்ணி போயாச்சா?” மந்தாகினி கேட்டாள்.

“ம்... போயிட்டார்” சுற்றுப்புறச் சூழலுக்குத் திரும்பிய தனலட்சுமி பதிலளித்தாள்.

“தனம், எனக்கொரு சந்தேகம்.”

“கேளுங்கம்மா.”

“ஆமா, அந்தப் பெரிய வீட்டுப் பண்ணையாருக்கு இந்த இல்லத்தோட அப்படியென்ன ஒரு பகை?’

“பகையா, யாரும்மா சொன்னது?”

“இல்லேங்கிறயா, இல்லேன்னா ரொம்ப நல்லதாப் போச்சு!”

அதன் பிறகு மந்தாகினி எதையும் பேசவில்லை.

மாலை நேரத்தில் உண்ணிக்கிருஷ்ணன் திரும்பி வந்தான்.

“போன இடத்துல ஏதாவது சேதி உண்டாங்க?” அவனைப் பார்த்த மந்தாகினி கேட்டாள்.

“சொல்லிக்கிற மாதிரி எதுவும் இல்லை” என்ற உண்ணி வீட்டுக்குள் போய் உடை மாற்றிக்கொண்டு திரும்பி வந்தான்.

“இருந்தாலும் உங்க முகத்தைப் பார்த்தா என்னமோ போல இருக்கே.”

“அதெல்லாம் ஒண்ணுமில்லை” அவன் முகத்தை திருப்பிக் கொண்டு உட்கார்ந்தான்.

“இல்லை... என்னமோ நடந்திருக்கு. என்கிட்ட எதையோ மறைக்கிறீங்க. சொல்லுங்க கேட்போம்” மந்தாகினி அவனை நெருங்கி உட்கார்ந்தாள்.

“யோசிச்சுப் பார்க்கும்போது இப்ப இருக்கிற எதுவும் இல்லாம பழையபடியே இருந்திருக்கலாமோன்னு தோணுது...” உண்ணி தாடையில் கையைப் பதித்தவாறு பேசினான்.

மந்தாகினி அவன் மடியில் தலை வைத்துப் படுத்துக் கொண்டாள்.

நிலவொளி அவள் முகத்தின் மீது தெளிவாக விழுந்தது.

“இப்படி நினைக்கிற அளவுக்கு என்ன நடந்தது? என்கிட்ட அலுப்பு வந்துடுச்சா?” அவள், அவன் முகத்தைப் பார்த்தபடி கேட்டாள்.

உடனே எதுவும் பதில் சொல்லாத உண்ணிக்கிருஷ்ணன் தீவிர யோசனையில் ஆழ்ந்து விட்டதாக அவளுக்குத் தோன்றியது.

“என்ன நடந்ததுன்னு சொல்லுங்க” மந்தாகினி வற்புறுத்தினாள்.

“எப்படிச் சொல்றதுன்னுதான்.”

“பரிகாரமில்லாத விஷயமும் இந்த உலகத்துல இருக்கா என்ன?”

“சொல்றதுக்கு ரொம்பவும் மனசு வருத்தமா இருக்கு. இருந்தாலும் சொல்றேன். நம்ம கோயில் பூசாரியைப் பார்த்தேன். ஒருகாலத்துல அந்தக் கோயில் நம்ம இல்லத்தைச் சேர்ந்தது. கோயில் ஊராளுங்க கிட்டயும், சுத்திலும் இருக்கிற இடம் பெரிய வீட்டுக்கும் சேர்ந்துடுச்சு.”

“ஓரளவு புரியுது. அந்தப் பூசாரி உங்ககிட்ட எதையாவது சொல்லியிருப்பார்.”

உண்ணி வியப்புடன் அவளைப் பார்த்தான்.

“அவர் சொன்னதைச் சொல்லுங்களேன்.”

“உன்னைப் பத்தித்தான் பேசினார்.”

“என்னைப் பத்தியா? அப்படின்னா நான் அதைத் தெரிஞ்சுக்காம இருக்கலாமா?”

“நீ ஒரு நம்பூதிரிப் பெண் இல்லைன்னு சொல்றார்.”

“உங்க முகத்தைப் பார்த்ததுமே இப்படி ஏதாவது ஒண்ணு இருக்கும்னு நெனைச்சேன். எதனால அவருக்கு அப்படித் தோணுச்சாம்?”



“அவர் சொல்றதும் நியாயமாத்தான் இருக்கு.”

“அந்த நியாயத்தை நானும் தெரிஞ்சுக்கிறேனே!” மந்தாகினி எழுந்து உட்கார்ந்தாள். அவனின் இரண்டு தோள்களிலும் கையைப் பதித்தபடி அவள் கேட்டாள்: “நான் இங்கே வந்து எத்தனை நாளாச்சுன்னு ஞாபகம் இருக்கா?”

“இருக்கே... இன்னிக்கு பௌர்ணமி... இருபத்தெட்டு நாளாச்சு.”

“ஒரு தடவையாவது கோயிலுக்குப் போயிருக்கிறியா மந்தாகினி?”

“ஓகோ, இதுதான் விஷயமா? அதுக்குப் பரிகாரம் பண்ணிட்டாப் போச்சு.”

சாப்பிட வருமாறு தனலட்சுமி அழைத்ததும் இருவரும் எழுந்தனர்.

அன்றைக்கு தேங்காய்ப் பால் ஊற்றிய கைக்குத்தல் அரிசிக்கஞ்சி தயாரிக்கப்பட்டிருந்தது.

அவர்கள் சாப்பிடுவதை தனலட்சுமி ஒளிந்திருந்து கவனித்தாள். மந்தாகினி கஞ்சி குடிப்பது என்னமோ போலிருந்தது. வளைத்து, கரண்டி போல் மடக்கிய பலா இலையில் சூடான கஞ்சியை எடுத்த மந்தாகினி அதை வாயருகே கொண்டு போனதும் மாயமாக மறைந்தது. அதாவது கஞ்சியை மந்தாகினி வாய்க்குள் ஊற்றி அரைத்து மென்று சாப்பிடவே இல்லை. தனலட்சுமி கூர்ந்து கவனித்தாள். அவள் தன்னைக் கவனிப்பதை மந்தாகினியும் உணர்ந்தாள்.

“தனலட்சுமி உனக்குக் கஞ்சி இருக்கா இல்லையா?” மந்தாகினி கேட்டாள்.

“தாராளமா இருக்கே.”

“நீ பார்க்குற பார்வையைப் பார்த்தா இல்லையோன்னு தோணுச்சு. அதனாலதான் கேட்டேன்.”

அந்த வார்த்தைகள் தனலட்சுமியைச் சுருக்கென்று தாக்கியது. அதன்பிறகு அவள் மந்தாகினியின் பக்கம் பார்க்கவே இல்லை.

சாப்பாட்டுக்குப் பிறகு சற்று நேரம் வராந்தாவில் உட்கார்ந்து பேசிய இருவரும் படுக்கையறைக்குள் நுழைந்தார்கள்.

உட்புறத்தில் கதவைத் தாழிடும் சத்தம் கேட்டதும் தனலட்சுமி நிம்மதியடைந்தாள். ராமுண்ணி அவளிடம் கொடுத்த செப்புத் தகட்டை அந்த அறைக்குள் ஏற்கெனவே போட்டுவிட்டிருந்தாள் தனலட்சுமி.

சாப்பிட்டுவிட்டு தனலட்சுமி, புவனேஸ்வரன் நாயரின் தேங்காய் கிட்டங்கியை நோக்கிப் புறப்பட்டாள்.

உண்ணிக்கிருஷ்ணன் உறங்கியவுடன் மந்தாகினி கட்டிலிலிருந்து மெதுவாக எழுந்தாள். அன்று நள்ளிரவு வேளையில் அவள் திருப்பனங்காட்டு கோயிலுக்குப் போக வேண்டி இருந்தது. கோயிலில் இருக்கும் பகவதி அன்று பத்து மைல் தொலைவிலிருக்கும் மற்றொரு கோயிலுக்குப் போக வேண்டிய நாள். மந்தாகினியும் பகவதியுடன் போகவேண்டும். இதில் எந்தவிதமான தவறும் ஏற்பட்டு விடக்கூடாது. அப்படி ஏதாவது நடந்தால் பகவதிக்குக் கோபம் ஏற்படும். பின்னர் அது ஏதாவது விபரீதத்தை உண்டாக்கலாம்.

எழுந்தவள் உண்ணிக்கிருஷ்ணன் முகத்தின் மேற்புறம் கையை உயர்த்தி அப்படியும் இப்படியும் ஆட்டினாள். அவள் திரும்பி வருவது வரையில் அவன் விழித்துவிடாமல் இருப்பதற்காக அவள் செய்த ஏற்பாடு அது.

திரும்பி வாசலை நோக்கி நடக்கத் தொடங்கியபோது அங்கிருந்து சன்னமான புகைச்சுருள் எழும்புவதை கவனித்தாள். அவள் கண் முன்பாகவே அந்தப் புகைச்சுருள் ஓர் ஆல மரத்தின் அளவுக்கு உயர்ந்து விரிந்தது. கண் மூடித் திறப்பதற்குள் அது ஒரு பைசாசிகமான உருவமாக மாறவும் செய்தது.

உண்ணிக்கிருஷ்ணனை ஒருதடவை திரும்பிப் பார்த்துவிட்டு அவள் அந்த அறையிலிருந்து வெளியேறினாள். அந்தப் பைசாசிக உருவமும் அவளைத் தொடர்ந்தது. தன்னைப் பார்த்து மந்தாகினி பயந்து ஓடுவதாக அந்த உருவம் நினைத்திருக்க வேண்டும்.

முற்றப்பகுதிக்கு வந்ததும் அந்த உருவம் மேலும் வளரத் தொடங்கியது.



மந்தாகினி மேற்புறம் பார்த்தாள்.

அந்த உருவத்தின் வாயிலிருந்து கூர்மையான வளைந்த பற்கள் வெளிப்பக்கமாக நீண்டிருந்தன. கண்களிலிருந்து நெருப்பு ஜ்வாலைகள் வெளிப்பட்டன. கழுத்தில் மனித எலும்புகளாலான மாலை ஒன்று கிடந்தது. அதன் வலது கரம் நீண்டு மந்தாகினியின் பின்புறத் தலையைப் பிடித்தது.

அடர்ந்து கருமையாக வளர்ந்திருந்த அவள் தலைமுடியைக் கொத்தாகப் பிடித்து மேற்புறமாக உயர்த்த முயன்றது அந்த உருவம். அதன் முகத்தில் பீதியேற்படுத்தும் சிரிப்பு ஒன்று வெளிப்பட்டுக் கொண்டிருந்தது.

அந்த உருவம் மந்தாகினியைத் தரையிலிருந்து உயர்த்தத் தொடங்கியது.

மந்தாகினி திரும்பி, அந்தப் பைசாசிக உருவத்தின் முகத்தைப் பார்த்தாள்.

## 19

மந்தாகினி திரும்பிப் பார்த்ததும், ‘சரிதான், இவள் நம்மிடம் கெஞ்சி, எப்படியாவது உயிர் தப்பிக்க நினைக்கிறாள் போலிருக்கிறது’ என்று நினைத்தது அந்தப் பைசாசிக உருவம்.

"என்னை என்ன செய்யப் போறே?" மந்தாகினி கேட்டாள்.

"உன்னை இந்தத் துளசி மாடத்துல போட்டு மோதித் துவைச்சுத் துண்டு துண்டாக்கப் போறேன்."

அதன் குரலும் அருவருப்புக்கு உரியதாக இருந்தது.

"நீ யாரு?"

"பேரு சுடலைப் பிசாசு. என் சக்தி என்னன்னு உனக்குத் தெரியாது."

"நான் யாருன்னு உனக்குத் தெரியுமா?"

“இந்த இல்லத்துல இருக்கிற நம்பூதிரிப் பொண்ணு. அதிகமாப் போனா, நீ ஒரு பிரம்மரக்ஷஸா இருக்கலாம்... அவ்வளவுதானே?”

“உன் ஆயுள் முடிஞ்சு போயிடுச்சா?” மந்தாகினி, பைசாசிக உருவத்தின் உயரத்தைப் பார்த்தவாறு கேட்டாள்.

அந்த உருவம் ஏறத்தாழ இருபது அடி உயரத்துக்கு மேல் இருந்தது.

“நீ இதைவிட உயரமாக முடியுமா?”

“என் உயரமே இவ்வளவுதான்... ஏன், இது போதாதா உனக்கு?”

“நான் என்ன நினைச்சேன்னா, நீ இதைவிட இன்னும் அதிகமா வளருவேன்னுதான்.”

நின்ற நிலையிலேயே இப்போது மந்தாகினி மேற்புறமாக உயரத் தொடங்கினாள். அவள், சுடலைப் பிசாசைவிட உயரமாக வளர்ந்த பிறகு அவளது தலைமுடியைப் பிடித்திருந்த பிசாசினால் தரையில் நிற்க முடியவில்லை. காரணம், மந்தாகினி, மேற்புறமாக விடுவிடு வென்று வளர்ந்தாள் - அந்த அளவுக்கு விரைவாக. தரையில் காலூன்றாமல் பிசாசினால் நிற்க முடியாது என்பது மந்தாகினிக்கு நன்றாகத் தெரியும். தன்னை நிலைநிறுத்திக் கொள்வதற்காக சுடலைப் பிசாசு, மந்தாகினியின் தலையிலிருந்து கையை எடுக்க முயன்றது. ஆனால், என்ன அதிசயம்! பசை போட்டு ஒட்டிக்கொண்டதுபோல் பிசாசின் கை, மந்தாகினியின் தலைமீது படிந்திருந்தது.

“நான் யாருன்னு இப்ப உனக்குப் புரிஞ்சதா?” மந்தாகினி கேட்டாள்.

“என்னை மன்னிச்சிடு தாயே, என்னை ஏவி விட்டதால் உன்கிட்ட வந்து சேர்ந்தேன். என்கிட்ட ஒப்படைச்ச வேலையை முடிக்காம நான் திரும்பிப் போனால், என்னைச் சாம்பலாக்கிடுவாங்க.”

“அப்படி எதுவும் நடக்காம நான் பார்த்துக்கிறேன். இதோ இந்தக் கோயில்ல பாலை மரம் ஒண்ணு இருக்குது. அதில் தற்சமயம் போய்த் தங்கிக்க. அப்புறமா உனக்கு நான் ஒரு இடத்தைக் காட்டுகிறேன்.”



சுடலைப் பிசாசு தனது சுய வடிவத்துக்குத் திரும்பியது. மந்தாகினியின் யோசனைப்படி ஒரு வௌவாலாக மாறி அங்கிருந்த பாலை மரத்தில் தலைகீழாகத் தொங்கத் தொடங்கியது.

தனக்கு எதிராக மிகவும் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தொடங்கியிருக்கிறார்கள். தான் இப்போதுகூட திருப்பணங்காட்டுக் கோயிலில் தன் பழைய இடத்தில் போய் அமர்ந்து கொள்ளலாம். அதன்பிறகு யாராலும் தன்னை எதுவும் செய்ய முடியாது. ஆனால், உண்ணியின் நிலைமை அவள் விட்டுச் செல்லும் அளவுக்கு இல்லை. எதிர்பாராமல் அவர்களுக்கு இடையே ஏற்பட்ட உறவு, அந்த அளவுக்கு வலிமையானதாக மாறிவிட்டிருந்தது.

தான் உண்ணியை விட்டுப் பிரிந்த மறுவிநாடியே அவர் கொல்லப்படுவார் என்று அவளுக்குத் தெளிவாகத் தெரிந்தது. இன்று அவர் உயிருடன் இருப்பதற்குக் காரணமே நான்தான்.

இந்த நிலையில் நான் அவரைப் பிரிவது என்பது சாத்தியமே இல்லை.

மறுபடியும் வீட்டுக்குள் வந்தவள், உண்ணி படுத்திருப்பதைப் பார்த்துவிட்டுத் திருப்தியுடன் வெளியே வந்து படுக்கையறைக் கதவை மூடி, தாழ்ப்பாளைப் போட்டு அதன்மீது தன் கையிலிருக்கும் பாம்பு வடிவ வளையலைக் கழற்றி வைத்தாள்.

ஒருவேளை உண்ணிக்கு யாராவது ஏதாவது ஆபத்து ஏற்படுத்த நினைந்தால், அந்த வளையல் வடிவம் மாறி வருபவரைச் சமாளித்துக் கொள்ளும் என்பது மந்தாகினிக்குத் தெரியும்.

ஆகாயத்தில் மிதந்து கொண்டிருந்த பௌர்ணமி நிலவு அந்தப் பகுதியையே பால் போன்ற ஒளியால் குளிப்பாட்டியிருந்தது.

கிருஷ்ணப் பருந்து பறப்பது போன்ற வேகத்தில் அவள் பறந்து கொண்டிருந்தாள்.

பகவதி தேடும்போது தான் அங்கே இல்லாவிட்டால், அதுவும் ஒரு பிரச்சினையாகிவிடும் என்பதும் அவள் கவனத்தில் இருந்தது.

ஒரு தடவைதான் பகவதி அழைப்பார். அதைக் கேட்டவுடன் அவர் எதிரில் போய் நிற்கவேண்டும்.

மந்தாகினி தனது பழைய இடத்தில் போய் நின்ற அதே நேரத்தில் பகவதியின் குரல் கேட்டது.

“மந்தாகினி.”

அழகான ஒரு பாடலைப் போல் அந்தக் குரல் காதில் விழுந்ததும் மந்தாகினி பகவதியின் முன்னால் தலை குனிந்து நின்றாள்.

பகவதி அவளைப் பார்த்துப் புன்னகைத்தார்.

இருவரும் ஒன்றாகப் புறப்பட்டனர்.

போகும் வழியில் பகவதி கேட்டார்: “கோயிலில் ஒரு தேவபிரஸ்னம் நடந்தது உனக்குத் தெரியுமா?”

“தெரிந்தது தாயே” மந்தாகினி பதிலளித்தாள்.

“அது எதுக்காகன்னும் உனக்குத் தெரிஞ்சிருக்கணுமே.”

“அதுவும் தெரியும்.”

“ஒரு விஷயத்தை நினைவில் வைத்துக்கொள். எல்லா நேரமும் சக்தி ஒரே மாதிரி இருக்காது. நான் சொல்வது உன் சக்தியைத்தான்.”

“உண்மையாகவா பகவதி?” மந்தாகினி திடுக்கிட்டவளாகக் கேட்டாள்.

“உண்மைதான், நான் எப்போதும் உன் ஒருத்தியை மட்டுமே கவனித்துக் கொண்டிருக்க முடியுமா? பக்தஜனங்கள் உட்பட எவ்வளவு வேலைகள் இருக்கின்றன?”

“எனக்கும் அதெல்லாம் தெரிகிறது தேவி. எல்லாமே எதிர்பாராமல் நடந்துவிட்ட சம்பவங்கள்.”

“உன் பிறப்பில் நீ கொஞ்ச நாள் மனிதப் பெண்ணாக வாழ வேண்டும் என்று உள்ளது. அதை நிறைவேற்றிக் கொண்டிருப்பதாக நினைத்துக் கொள்.”

அதற்குள் கோயில் வந்துவிட்டது.

திருப்பனங்காட்டு பகவதியும், பெரிய திருக்காவு பகவதியும் சகோதரிகள். ஸ்ரீ பத்ரகாளியின் அம்சத்தில் பிறந்த இந்த இருவரும் அபாரமான சக்திகளைப் பெற்றிருந்தனர். எல்லா பௌர்ணமி நாட்களிலும் இந்த இருவரும் தவறாமல் சந்தித்துக் கொள்வார்கள். இதுவரை இந்தப் பழக்கம் எதனாலும் தடைப்பட்டதில்லை.



“மந்தாகினி” பகவதி அவளை அழைத்தார்.

அவள் பகவதியின் அருகே வந்தாள்.

“மூன்றாம் யாமம் முடியும்போது வந்தால் போதும்... போய்விட்டு வா.”

“வேண்டாம் தாயே... நான் உங்க பக்கத்திலேயே இருந்துடுறேன். எங்கேயும் போக வேண்டியதில்லை” மந்தாகினி பதிலளித்தாள்.

அவள் இப்படி பதில் சொன்னதற்கும் காரணமிருந்தது.

நிலவொளி பொழியும் இந்த நேரத்தில் இல்லத்துக்குப் போனால், பிறகு உண்ணி அவ்வளவு சுலபத்தில் விடமாட்டார். போய்விட்டால் அவரை எழுப்பாமலும் இருக்க முடியாது.

எதற்காக வீண் வம்பு என்றுதான் பேசாமல் இருந்தாள்.

“சரி, அப்படியானால் அந்த வில்வ மரத்தின் அடியில் போய் நில்” பகவதி கூறினார்.

மந்தாகினி வில்வ மரத்தின் கீழே அமர்ந்திருக்கும்போது மற்றொரு சம்பவம் நிகழ்ந்தது.

பௌர்ணமி நிலவொளியில் குளத்திலிருந்த வெண்ணாம்பல் பூக்கள், நட்சத்திரங்கள் போல் மலர்ந்து தலையாட்டிச் சிரித்துக் கொண்டிருந்தன.

ஒவ்வொரு பௌர்ணமி நாளன்றும், அந்தக் குளத்தில் பிரதிரூபன் என்ற கந்தர்வன் குளிக்க வருவது வழக்கம். குளத்தில் இறங்கிவிட்டால் நேரம் போவது தெரியாமல் குளிப்பது அவன் இயல்பு.

அந்தக் குளத்தின் அடிப்பரப்பில் ஏராளமான நாக மாணிக்கங்கள் இருந்தன. அவற்றின் ஒளியில் குளத்துக்குள் நீந்தி விளையாடும் வண்ண வண்ண மீன்களை வேடிக்கை பார்ப்பது அவனுடைய பொழுதுபோக்கு.

குளத்தின் அடிப்பரப்பில் கவிழ்ந்து படுத்தபடி முழங்கைகள் இரண்டையும் ஊன்றி, தாடையைத் தாங்கியபடி மீன்களின் போக்குவரத்தைக் கவனித்துக் கொண்டிருந்தான் கந்தர்வன்.

சற்று நேரத்துக்குப் பிறகு பிரதிரூபன் நீரின் மேல் மட்டத்துக்கு வந்தான். தனது உடைகளை எப்போதும் வில்வ மரத்தின் கீழ்தான் வைப்பான்.

சட்டென்று கண்ணுக்குத் தெரியாத அதிருஸ்யமான அந்த உடைகளை மந்தாகினி கவனிக்கவே இல்லை.

தனது உடைகளை வைத்திருக்கும் மரத்தின் அடிப்புறத்தைக் கவனித்த பிரதிரூபன் ஒருகணம் அயர்ந்தே போனான். தேவதை போன்ற அழகி ஒருத்தி அங்கு அமர்ந்திருப்பதைக் கவனித்தான்.

அவள் யாரென்று தெரிந்து கொள்ளும் வல்லமை அந்த கந்தர்வனுக்கு இல்லை.

சட்டென்று அவளுக்கு முன்னால் போய் நின்றால், ஒருவேளை அவள் பயப்படலாம் என்று கருதிய கந்தர்வன், என்ன செய்யலாம் என்று யோசித்தான். அதுமட்டுமின்றி, உடைகள் வேறு அவளுக்கு அருகில் இருந்தன. இந்த நிலையில் எப்படி அவளை நெருங்குவது?

உடனே ஒரு மயிலின் வடிவமெடுத்த கந்தர்வன் அவளை நோக்கி மெதுவாக நடந்து சென்றான்.

மந்தாகினி அழகான அந்த ஆண் மயிலை வைத்த கண் வாங்காமல் பார்த்தாள்.

நாகச் சிலைக்கு அருகே வந்த மயில் தன் அலகால் அங்கிருந்த உடையைக் கொத்தி எடுத்துக்கொண்டு வில்வ மரத்தின் பின்புற நிழலில் மறைந்தது. சற்று நேரத்துக்குள் அவளுக்கு முன்னால் பேரழகு வாய்ந்த கந்தர்வன் ஒருவன் நின்று கொண்டிருந்தான்.

“நீங்க யாருன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?” பிரதிரூபன் கேட்டான்.

“என் பெயர் மந்தாகினி. நான் திருப்பனங்காட்டு பகவதியுடன் அவருக்குத் துணையாக வந்திருக்கிறேன்.”



“அப்படியானால் பகவதியின் மோகினித் தோழியா?” கந்தர்வன் கேட்டான்.

“ஆமாம்.”

“நான் பௌர்ணமி தோறும் இங்கே வருவதுண்டு. இதுவரை நான் உங்களைப் பார்த்ததே இல்லையே!” பிரதிரூபன் கேட்டான்.

“இதுவரை நான் இந்தக் குளத்துக்கு அருகே வந்ததில்லை. அதனால் நீங்கள் பார்த்திருக்க மாட்டீர்கள்.”

“அதோ குளத்தில் மறுபுறம் ஆறு கால் மண்டபம் ஒன்று இருக்கிறது. முல்லைப் பந்தல் படர்ந்த குளுமையான மண்டபம். அந்த இடத்துக்கு வருவதானால் கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருக்கலாம்” கந்தர்வன் அழைத்தான்.

“என்னால் அங்கெல்லாம் வரமுடியாது” மந்தாகினி அவள் அழைப்பை நிராகரித்தாள்.

“இப்படிப் பேசினா எப்படி? பௌர்ணமி நிலா இப்படி பாலொளி சிந்தும்போது, இரவுப் பூக்கள் மலர்ந்து காற்றில் மணம் பரப்பும்போது, இயற்கையோடு ஒன்றிக் கலக்காம இருக்கிறது எப்படி?”

“நான் அதையெல்லாம் ரசிக்க முடியாது. எனக்குத் தேவையும் இல்லை” மந்தாகினியின் குரல் மிகவும் உறுதியுடன் ஒலித்தது.

“இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் என்னுடைய வேண்டுகோளை நிராகரிக்கக் கூடாது. வீணாக ஒரு கந்தர்வனின் சாபத்தை வாங்கிக் கொள்ளாதீர்கள்.”

கந்தர்வ சாபம் என்பது அப்போது அவளுக்கு ஞாபகம் வந்தது.

அதே நேரம் அவள் மனதில் உண்ணிக்கிருஷ்ணனின் உருவம் தெளிவடைந்து வந்தது.

ஒரு மனிதப் பெண் என்ற நிலையில் அவளை மட்டுமே நேசித்து, உறவு கொண்டுள்ளவன். எனவே, இந்தப் பிறவியில் வேறெவருடனும் உறவு கொள்ள அவள் மனம் ஒப்புக்கொள்ளவில்லை.

“என்னை வற்புறுத்தாதீர்கள். நான் ஏற்கெனவே ஒருவருக்குச் சொந்த மானவள்.”

“அப்சரஸுகளும், மோகினிகளும் யாருக்கும் சொந்தமாக முடியாது என்பது தெரியாதா? இன்னொரு விஷயத்தையும் சொல்லி விடுகிறேன். நான் இன்று வரையில் யாரையும் விரும்பியதில்லை யாரிடமும் இப்படி அன்பை யாசித்ததுமில்லை. என்னை ஏமாற்றக் கூடாது.”

“இல்லை, நான் உங்கள் வேண்டுகோளை ஏற்றுக்கொள்ள முடியாது” மந்தாகினி அங்கிருந்து எழுந்து போக முயன்றாள்

சட்டென்று பிரதிரூபன் அவளுக்கு முன்னால் வந்து நின்று கண்மூடித் திறப்பதற்குள் அவளைக் கைகளில் ஏந்திக்கொண்டு குளத்தின் மேற்புறமாகப் பறந்து அக்கரைக்கு வந்து சேர்ந்தான்.

அங்கிருந்த ஆறு கால் மண்டபத் தரையில் சிந்திக் கிடந்த முல்லைப் பூக்களுக்கு மேல் அவளைப் படுக்க வைத்தான்.

அவனது பிடியிலிருந்து வெளியறுவதற்காக மந்தாகினி துள்ளியெழுந்தாள்.

பிரதிரூபன் மீண்டும் அவளைப் பிடிப்பதற்காகப் பாய்ந்தான்.

“பகவதி, என்னைக் காப்பாத்துங்க. என்னைக் காப்பாத்துங்க” என்றோர் அலறல் அவள் தொண்டையிலிருந்து உயர்ந்தது வார்த்தைகள் வெளியேறுவதற்கு முன்னாலேயே கந்தர்வனின் கை அவள் வாயைப் பொத்தியது.

## 20

மந்தாகினியால் குரல் எழுப்ப முடியவில்லை. பிரதிரூபன் அவளைக் கற்பழிக்கும் முயற்சியில் தீவிரமாக இருந்தான். முல்லைப் பூக்கள் சிதறிக் கிடக்கும் தரையில் கிடத்தப்பட்டவள் அவனிடமிருந்து உருண்டும் புரண்டும் விலகப் போராடிக் கொண்டிருந்தாள்.

அப்போது பகவதியின் குரல் கேட்டது.



“மந்தாகினி... எங்கே இருக்கிறே?

பகவதியின் குரலைக் கேட்டதும் எழுந்த தைரியத்தில் “காப்பாற்றுங்கள் தாயே!” என்று ஓங்கிக் குரல் கொடுத்தாள் மந்தாகினி.

அவள் குரல் கேட்ட மறுகணம் பகவதி அங்கு தோன்றினார்.

“இதற்காக உன்னை ஒரு நாள் நிச்சயமாகப் பழிவாங்கியே தீருவேன்” என்று சபதமிட்டு மறைந்தான் கந்தர்வன்.

“என்ன நடந்தது?” பகவதி கேட்டார்.

“ஒரு கந்தர்வன் என்னைத் தொல்லைப்படுத்தினான். நல்லவேளையாக நீங்கள் வந்து விட்டீர்கள்.”

“இப்ப அந்த கந்தர்வன் எங்கே?”

“நீங்கள் வந்ததும் மாயமா மறைஞ்சிட்டான்” அவனது சபதத்தைப் பற்றி மந்தாகினி எதுவும் சொல்லவில்லை.

“நல்லவேளையாக நீ தப்பித்து விட்டாய். சரி புறப்படலாம்.”

மந்தாகினி பனங்காட்டு இல்லத்திலிருந்து வெளியேறிய சற்று நேரத்திலேயே அங்கு ஒரு சம்பவம் நிகழ்ந்தது.

தனலட்சுமி, புவனேஸ்வரன் நாயரின் தேங்காய் கிட்டங்கியை அடைந்தாள்.

நாயர் அவளை எதிர்பார்த்துக் காத்திருந்தார்.

அவளைப் பார்த்தவுடன் சிம்மினி விளக்கின் திரியை உயர்த்தினார்.

இளமை ததும்பி வழியும் தனலட்சுமியின் தசைப்பற்று நிறைந்த உடம்பைக் கண்ணாரக் காண்பதுதான் அவரது நோக்கமாக இருந்தது.

“உன்னை இப்படியெல்லாம் பார்த்து எவ்வளவு நாளாச்சு தனம்...” என்றவாறு அவள் கையைப் பிடித்துக் கட்டிலில் உட்கார வைத்தார்.

அவள் எந்தவிதமான எதிர்ப்பும் காட்டாமல் மௌனமாக இருந்தாள்.

"உண்மையைச் சொன்னா நீ எப்படி இருக்கிறே தெரியுமா? கடைந்தெடுத்த தந்தச் சிலை மாதிரி. இந்த அழகையெல்லாம் ரசிக்காம இருக்கிறவன் மனுஷனா?" புவனேஸ்வரன் நாயரின் வலது கரம் அவள் தோள் வழியாகக் கீழ்ப்புறம் இறங்கியது.

"மறந்துட்டேன். நீ ஏதாவது சாப்பிடுறியா?"

"நான் சாப்பிட்டுட்டுத்தான் வர்றேன்."

"வேற எதையும் சாப்பிடலையே?"

"இல்லை."

"அப்படின்னா அங்கே இருக்குது பாரு ஒரு பாட்டில், எடுத்துக்க"

தனலட்சுமி, அவர் சுட்டிக்காட்டிய திசையில் பார்த்தாள். அந்த மூலையில் வாழையிலையை மூடி போல் சுருட்டி வைத்திருந்த சாராய பாட்டில் ஒன்றும், இரண்டு தம்ளர்களும் இருந்தன.

கட்டிலிலிருந்து எழுந்தவள், தம்ளரின் முக்கால் பாகத்துக்கு அந்த நிறமற்ற திரவத்தை ஊற்றி எடுத்துக்கொண்டு தண்ணீரைக் குடிப்பதுபோல் தொண்டைக்குள் இறக்கினாள்.

"அதில எதுக்கு மிச்சம்? அதையும் குடிச்சிடு" நாயர் படுத்தபடி கூறினார்.

"மேற்கொண்டு ஒரு சொட்டு உள்ளே போனாக்கூட நான் தூங்கிப் போயிடுவேன். வேண்டாம்" என்றவள் மிகவும் சுவாதீனமாக நாயரை நெருங்கினாள் சிரித்தவாறே.

"நீ மட்டும் எப்படி தனம்... எப்பவும் இப்படிச் சின்னப்பொண்ணு மாதிரியே உடம்பைக் கச்சிதமா வைச்சிருக்கிறே?" நாயர், அவள் கையை வருடியவாறு கேட்டார்.

"என்னங்க... நீங்க நான் இன்னும் சின்னப் பொண்ணுதானே?" அவள் வலது கை விளக்கை நோக்கி நீண்டது.

"வேண்டாம், விளக்கு இருக்கட்டுமே... இங்கே நம்மளைத் தனியா வேற யார் இருக்காங்க?"



தனம் அவர் மார்பில் சரிந்தாள். அவளின் மூச்சுக்காற்று வெப்பத்துடன் புவனேஸ்வரன் நாயரின் இடது கன்னத்தில் பதிந்து காற்றோடு கலந்தது.

அவளின் வியர்வையில்கூட சாராய நெடி இருந்தது.

எங்கிருந்தோ ராக்கோழி கூவும் குரல் கேட்டது.

"தனம், எழுந்திரு..." நாயர், அவளைப் படுக்கையிலிருந்து உயர்த்தினார்.

"ஏன்... என்னங்க ஆச்சு?" அவள் கேட்டாள்.

"நான் கொடுத்து அனுப்பியிருந்த பொருளைப் படுக்கை அறைக்குள்ளே பத்திரமா வெச்சுட்ட இல்லையா?"

"அதனாலதான் லேட்டாச்சு... கச்சிதமா எல்லாத்தையும் முடிச்சுட்டுத்தான் வந்தேன்."

"அப்படின்னா, இதுக்குள்ளே காரியம் முடிஞ்சிருக்கும். நாம ஒருதடவை போய்ப் பார்த்துட்டு வந்துட்டா என்ன?"

"இந்த நடு ராத்திரியிலயா?"

"நேரம் எதுவானா என்ன? விஷயம் முடிஞ்சிடுச்சா இல்லையான்னு தெரிஞ்சே ஆகணும்."

"அவ்வளவு அவசரமா?"

"பார்த்தவுடனே உன்னை உன்னோட வீட்டுல விட்டுடறேன்."

தனலட்சுமியிடம் ஒப்படைத்த வேலை ஏதோ விபரீதமானது என்று அவளுக்குத் தெரியும். எனவே, அதற்குப் பிறகு அந்த வீட்டுக்குள் தான் இருப்பது உசிதமல்ல என்றுகூட நினைத்தாள்.

புவனேஸ்வரன் நாயர் எழுந்தார். உடைகளைச் சரிப்படுத்திக் கொண்டார். சிம்னி விளக்கை அணைத்தார். டார்ச் லைட் அவர் கையிலிருந்தது.

கிட்டங்கியிலிருந்து வெளியேறிய இருவரும் ஒற்றையடிப் பாதை வழியே நடக்கத் தொடங்கினர். புவனேஸ்வரன் நாயரின் கையில்

கைத்தடி ஒன்று இருந்தது. அதன் முனையில் நீண்ட வாள் ஒன்று மறைவாக வைக்கப்பட்டிருந்தது. அதை அவ்வப்போது தரையில் தட்டிச் சத்தம் எழுப்பிக்கொண்டே வந்தார்.

இந்தத் தடவையும் தன்னுடைய முயற்சி தோல்வியடைந்தால் கையிலிருக்கும் கத்தியால் குத்திக் கொல்வதென்றும் அவர் தீர்மானித்திருந்தார்.

மாந்திரீகன் கொடுத்து அனுப்பியிருந்த செப்புத் தகட்டிலிருக்கும் பிசாசு, யாராவது ஒருவரை விட்டு வைத்தாலும் தனது முடிவில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்த அவர் விரும்பவில்லை.

பனங்காட்டு மனையின் முற்றப்பகுதியில் கால் வைத்ததும் நாயரின் முகத்தில் திருப்தி நிலவியது. காரணம் அந்த மனையே அப்போது அமைதியாக இருந்ததுதான்.

துளசி மாடத்துக்கு அருகில் வந்தவர் தனத்தைத் தன்னுடன் நெருக்கமாக நிற்க வைத்துக்கொண்டு கிசுகிசுப்பான குரலில் கேட்டார் "அவங்க எந்த அறையில படுத்துக்குவாங்க?"

"அதோ, அங்கே இருக்கிற அறையிலதான்."

"ஜன்னல்கிட்டப் போய்ப் பார்க்கலாம். ஏதாவது தெரியும்."

இருவரும் மந்தாகினியின் படுக்கையறையை நோக்கிச் சத்தம் எழுப்பாமல் நடந்தனர்.

ஜன்னல்கள் மூடியிருந்தன. உள்ளிருந்து எந்தவிதமான சத்தமும் கேட்காததால், நினைத்த காரியம் எந்தவிதத் தடையும் இன்றி நடந்திருக்கும் என்றே தோன்றியது. எதற்கும் தனது கருத்தை உறுதிப்படுத்திக் கொள்ள நினைத்தார்.

"ஒண்ணும் சரியாப் புரியலை... நாம வீட்டுக்குள்ளேயே போய்ப் பார்த்துடலாம். அவனோ, அவளோ யாராவது ஒருத்தர் உயிரோடு இருந்தாலும் விட்டு வைக்கக்கூடாது. என் மூணு பசங்களைக் கொன்னுருக்காங்களே" புவனேஸ்வரன் நாயர் ரகசியம் பேசுவதுபோல் அவள் காதில் கூறினார்.

"வாங்க, உள்ளே போகலாம்" தனலட்சுமி அவரை வீட்டுக்குள் அழைத்துப் போனாள்.



புவனேஸ்வரன் நாயர் இதுவரை அந்த வீட்டுக்குள் நுழைந்ததில்லை. இதுதான் முதல் தடவை. அதனால் எங்கெங்கு அறைகள், எங்கெங்கு பாதை என்பது அவருக்குச் சரியாகத் தெரியவில்லை.

நிலவும், மேகத்துண்டு ஒன்றின் பின்னால் மறைந்து கொண்டிருந்ததால் அந்த இல்லம் இருந்த பகுதியே இருளில் ஆழ்ந்திருந்தது போலிருந்தது.

புவனேஸ்வரன் நாயர் டார்ச் லைட்டை எரிய வைக்க முயன்றபோது தனலட்சுமி அதைத் தடுத்தாள்.

இருவரும் உண்ணிக்கிருஷ்ணன் படுத்திருக்கும் அறை வாசலை அடைந்தனர்.

அதே நேரம் முற்றப் பகுதியில் மேகத்திலிருந்து விடுபட்ட நிலவு, தெளிவாக ஒளி சிந்தியது.

வீட்டுக்குள் வந்த சன்னமான வெளிச்சத்தில் அந்த அறை வாசலில் ஏதோ ஒன்று பளபளப்புடன் நெளிவது தெரிந்தது.

நாகப்பாம்பின் வடிவிலிருந்த தங்க வளையல்தான் அது என்பதை இருவரும் உணர்ந்தனர். புராதனமான அந்த வளையல் சொக்கத்தங்கம் என்பதும், அதில் பதிக்கப்பட்டிருக்கும் வைரங்கள் மிகவும் விலை உயர்ந்தது என்பதும் நாயருக்கு உடனேயே தெரிந்துவிட்டது.

இருப்பினும் அதைத் தன் கையில் எடுப்பதற்கு ஏனோ தயங்கினார். அப்படி பயந்ததற்குக் காரணம் அதுவரை நடந்த அதிசயமான சம்பவங்கள்தான். எனவே, அவர் தனலட்சுமியிடம், "அந்த வளையலை இப்படி எடு" என்றார்.

தனலட்சுமி சட்டென்று குனிந்து அதைக் கையில் எடுத்தாள். உடனே அதன் வடிவம் மாறியது. கண் மூடித் திறப்பதற்குள் அது ஒரு தங்க நாகமாக மாறியது. தனலட்சுமி அவசர அவசரமாகக் கையை உதறினாள்.

அவள் கையிலிருந்து அது கீழே விழுந்தது. ஆனால், கீழே விழுந்ததும் அது மீண்டும் வளையலாகத் தெரிந்தது. இது எப்படி நடந்தது.

புவனேஸ்வரன் நாயர் அதை வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தார்.

உடனே அதை எடுக்கக்கூடாது என்ற முடிவுக்கு வந்தார். ஆனால், வேறொரு யோசனை பிறந்தது.

தன் கையில் உள்ள வாளுள்ள கைத்தடியில் அதை எடுப்பது அல்லது குறைந்தபட்சம் அதை விரட்டவாவது செய்யலாமே.

கைத்தடியிலிருந்து கத்தியை உருவினார்.

“வேண்டாங்க” தனலட்சுமி அவரது நோக்கத்தை உணர்ந்தவள் போல் அவர் கையைப் பிடித்துத் தடுத்தாள். அதனால் அவருக்கும் பயம் தோன்றவே செய்தது. எனவே கத்தியை மீண்டும் உறைக்குள் போட்டுக் கொண்டார்.

“அவன் உள்ளே இருக்கிறானா?” நாயர் கேட்டார்.

“இருங்க, பார்க்குறேன்” தனலட்சுமி வாசல் பக்கமாக நகர்ந்தாள்.

உடனே வளையல் சரியான ஒரு நாகப் பாம்பாக மாறி, வாசற்படியில் படமெடுத்து ஆடவும் செய்தது.

“இது என்னப்பா ஆச்சரியம்!” நாயர் மெதுவாகப் பின்வாங்கினார்.

பாம்பு காவலிருப்பதால் அறைக்குள் ஆள் இருப்பது உறுதி யானது. சற்று நேரத்துக்கு முந்தைய நிகழ்ச்சி நினைவிலிருந்ததால் அதைக் கையால் தொடவும் முடியாத நிலை.

மாந்திரீகன் சோமதத்தனின் முயற்சி இந்தத் தடவையும் தோல்வியடைந்து விட்டதாகத் தோன்றுகிறது.

‘மேற்கொண்டு என்ன செய்வது? தனக்கு இன்னும் ஐந்து ஆண் பிள்ளைகள் இருக்கிறார்கள். மூன்று பேர் அநியாயமாகக் கொல்லப் பட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சக்தி வாய்ந்த இவள் யார்?’

புவனேஸ்வரன் நாயர் குழப்பமடைந்தார். அது எப்படி இருந்தாலும் தான் மேற்கொண்டும் அங்கிருப்பது நல்லதல்ல என்று தோன்றியது. எனவே, எவ்வளவு சீக்கிரம் அந்த இடத்தை விட்டு அகல



முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் அகலுவதுதான் புத்திசாலித்தனம் என்று நினைத்தவராக அங்கிருந்து வெளியேற விரும்பினார்.

“சரி, நான் கிளம்புறேன். எங்கேயோ, என்னமோ தப்பு நடந்திருக்கு. எதுக்கும் நீ தூங்காம வழக்கம் போல கவனிச்சு, விவரத்தை என்கிட்ட வந்து சொல்லு, யோசிக்கலாம்” புவனேஸ்வரன் தனலட்சுமியிடம் கூறினார்.

“நீங்க சொல்லலேன்னாலும் என்னால இன்னிக்கு கண்ணை மூட முடியுமா?” அவள் அந்த வளையலைப் பார்த்து முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

இருவரும் முற்றப்பகுதிக்கு வந்தனர்.

“நீ வழக்கம்போல் உரலறையில் படுத்துக்க. ஆனால், தூங்காதே, அவள் வந்தவுடனே என்ன செய்யறாள்னு கவனி” நாயர் எச்சரித்துவிட்டு வெளியேறினார்.

சாலைக்கு வந்தவர் விரைவாகத் தனது வீட்டை நோக்கி நடக்கத் தொடங்கினார்.

தனலட்சுமி கண்களை மூடாமல் காத்திருந்தாள்.

விடியற்காலை வேலையில் கோழி கூவியதும், உட்புற அறையில் காலடியோசை கேட்டதும் ஒரே நேரத்தில் நிகழ்ந்தன.

தனலட்சுமி பூனை மாதிரி சத்தம் எழுப்பாமல் மெதுவாக நடந்து வந்து சமையல் கட்டு வழியாக எட்டிப் பார்த்தாள்.

மந்தாகினி நின்று கொண்டிருந்தாள்.

அவள் சுற்றுமுற்றும் கண்களை ஒட்டி அறையைச் சோதனை செய்வதுபோல் தோன்றியது.

அறை வாசலில் போட்டிருந்த வளையல் நாகமாக மாறிப் படமெடுத்து நின்று கொண்டிருந்தது.

அவள் வியப்புடன் அதைப் பார்த்தாள்.

# 21

**தா**ன் அருகில் வந்த பிறகும் வளையல் நாகமாகவே இருப்பதைப் பார்த்த மந்தாகினிக்குச் சந்தேகம் தோன்றியது.

‘என்னமோ நடந்திருக்கிறது’ என்று மனதுக்குத் தட்டுப்பட்டது ‘ஒருவேளை உண்ணிக்கு ஏதாவது நிகழ்ந்திருக்குமோ?’ அவளுக்குள் பீதி உயரத் தொடங்கியது.

உடனே உண்ணியைப் பார்க்கவேண்டும் என்ற பரபரப்பு ஏற்பட்டதால், வாசற்படியில் கிடந்த நாகத்தைக் கையில் எடுத்தாள்.

உடனே அது பழையபடி வளையலாக மாறியது. அதைக் கையில் அணிந்தவள், கதவைத் திறந்துகொண்டு அறைக்குள் நுழைந்தாள். அறைக்குள் விளக்கு அணைந்துவிட்டிருந்தது.

மந்தாகினி விளக்கை ஏற்றினாள்.

அறைக்குள் எரிந்த விளக்கு வெளிச்சம் கதவின் இடைவெளி வழியாக வெளியே வந்தபோது, தனலட்சுமி சமையலறையிலிருந்து வெளியே வந்தாள்.

அவள் நிதானமாகப் படுக்கையறையின் கதவை நெருங்கி உட்புறமாகப் பார்த்தாள்.

உண்ணியின் தலையில் மந்தாகினி கை வைப்பதையும், அவன் உறக்கத்திலிருந்து விழித்து எழுந்தது போல் கண் திறப்பதையும் அவள் கவனித்தாள்.

“என்னங்க, நல்ல தூக்கமா? ஏன் என்னமோ மாதிரி இருக்கீங்க என்ன ஆச்சு?” கட்டிலில் அமர்ந்தபடி கேட்டாள் மந்தாகினி.

“எனக்கு ஒண்ணும் ஆகலை. ஆனா, ஒரு கனவு கண்டேன்.”

“அதை நான் தெரிஞ்சுக்கலாமா?” அவள், அவன் மார்பில் முகத்தைப் பதித்துக் கண்களை மேற்புறமாக உயர்த்தினாள்.

“ரொம்பவும் சுவாரஸ்யமான கனவு.”

“உண்மையாகவா?”



“கந்தர்வர்கள் இப்படிக் கூடவா நடந்துக்குவாங்க?” அவன், அவளின் பின்கழுத்துப் பகுதியில் வலது கையைப் போட்டபடி பேசினான்.

“கந்தர்வனா?” சட்டென்று அவள் மனம் குளத்தின் அருகே பார்த்த கந்தர்வனை எண்ணியது.

“ஆமாம், கனவில் வந்த கந்தர்வன், ஒருத்தனோட மனைவியைக் கடத்திட்டுப் போனான்.”

“யாரோட மனைவியை?” அவள் தன்னுள் எழுந்த பரபரப்பை மறைத்துக்கொண்டு கேட்டாள்.

“என் மனைவியை அதாவது தேவதை மாதிரி இருக்கிற இந்தச் சிலையை” அவன், அவள் மூக்கைப் பிடித்தான்.

“ஐயோ... அப்புறம்?”

“அவன் ஒரு மல்லிகைக் கொடிப் பந்தலுக்குக் கொண்டு போய் உன்னைக் கற்பழிச்சுட்டான்.”

“சேச்சே... அப்படியெல்லாம் நடக்காது.”

‘பிரதிரூபன் தன்னைப் பழிவாங்கியே தீருவேன்’ என்று சபதம் செய்தது மந்தாகினிக்கு ஞாபகம் வந்தது. அவன்தான் இந்தக் கனவுக்குக் காரணமா? ஒருவேளை அப்படியும் இருக்கலாம்.

“கனவுதானே, பரவாயில்லை. அதை மறந்துடுங்க” அவள், அவன் நெற்றியில் விழுந்து கிடந்த தலைமுடியை ஒதுக்கிவிட்டாள்.

தனலட்சுமி இதையெல்லாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவளுக்கு அங்கு நடப்பதெல்லாம் மிகவும் அதிசயமாகத் தோன்றியது. வளையல் பாம்பாக மாறியது.

‘இந்தத் தம்புராட்டி சாதாரணப் பெண்ணல்ல; தான் சந்தேகப்பட்டது போல் கந்தர்வக் கன்னியாகவோ, மோகினியாகவோ இருக்க வேண்டும் என்பது உறுதி. இந்த நிலையில், இந்த வீட்டில் இருப்பது ஆபத்துதான்’ என்றும் தோன்றியது.

பொழுது விடிந்ததும் கண்விழித்து எழுந்த தனலட்சுமி யாரிடமும் சொல்லாமல் கொள்ளாமல் பனங்காட்டு மனையிலிருந்து வெளியேறி நேராகப் பெரிய வீட்டுக்கு வந்து சேர்ந்தாள்.

புவனேஸ்வரன் நாயர் இன்னும் கண்விழிக்கவில்லை. வேலைக் காரன் ராமுண்ணிதான் அவளை முதன் முதலாகப் பார்த்தான்.

"என்னம்மா, விடிஞ்சும் விடியாத இந்த நேரத்துல?" ராமுண்ணி கேட்டான்.

"நான் உடனே எஜமானைப் பார்த்தாகணும்" அவள் குரல் பதற்றத்துடன் ஒலித்தது.

"அப்படி என்ன விஷயம்?" அவளை நெருங்கி வந்த ராமுண்ணி கேட்டான்.

"அதையெல்லாம் நான் எப்படிச் சொல்ல... என்னன்னு சொல்ல மேற்கொண்டு என்னால் அங்கே ஒரு கணம்கூட இருக்க முடியாது"

"சரி, என்னவானாலும் அவர் எழுந்த பிறகு பேசிக்கலாம். நீ சமையல்கட்டுப் பக்கம் போய் காபி சாப்பிடு. உன்னைப் பார்த்தா ரொம்பக் களைப்பா இருக்கிற மாதிரி இருக்கு. நேத்து ராத்திரியெல்லாம் தூங்கலை போல இருக்கே" ஒரு மாதிரியாகச் சிரித்தபடி பேசினான்.

"உங்களுக்கு எப்பவும் கேலிதான்" என்றவள் மாராப்பை இழுத்துவிட்டுக் கொண்டு சமையல்கட்டுப் பக்கம் நகர்ந்தாள்.

புவனேஸ்வரன் நாயர் அன்று மிகவும் தாமதமாகவே கண் விழித்தார். காலைக் கடன்களை முடித்து, டிபன் சாப்பிட்டுவிட்டு திண்ணைக்கு வந்தபோதுதான் ராமுண்ணி, தனலட்சுமி வந்திருக்கும் விவரத்தை அவரிடம் கூறினான்.

தகவலைக் கேட்டதும் உடனடியாக அவளை அழைத்துவரச் சொன்னார், உத்வேகத்துடன்.

ராமுண்ணி அவளை அழைத்து வந்தான்.

"என்ன தனம், விடியற்காலையில?"

"எஜமான், இனிமேல என்னால அந்த வீட்டில ஒரு நிமிஷம்கூட இருக்க முடியாது" அவள் மூச்சு விடாமல் பேசினாள்.



"என்ன நடந்ததுன்னு சொல்லு."

தான் பார்த்ததையெல்லாம் கண்ணும் காதும் வைத்து கொஞ்சம் மிகைப்படுத்தியே விளக்கினாள்.

"இதையெல்லாம் உன் கண்ணாலேயே பார்த்ததா வேற சொல்ற."

"ஆமாங்க"அவள் சத்தியமே செய்தாள்.

நாயர் சற்று நேரம் யோசனையில் ஆழ்ந்தார்.

"தனலட்சுமி, ஒரு வேலை செய். நான் சொல்ற வரைக்கும் நீ அங்கேயே இரு. இதுக்கு உடனடியா நாம ஒரு மாற்று ஏற்பாடு செய்யலாம்."

"எனக்கு பயமா இருக்குதுங்க."

"வீணாப் பயப்படாதே, பயமாயிருந்தா விளக்கு வெச்சதும் இங்கே வந்துடு."

"போய்த்தான் ஆகணும்னு நீங்க சொன்னா, போறேன்."

புவனேஸ்வரன் நாயரை எதிர்த்துப் பேசினாலோ, மறுத்தாலோ என்ன நடக்கும் என்று அவளுக்கு நன்றாகத் தெரியும். எனவே, அதிகமாக மறுக்காமல் இணங்கினாள்.

தனலட்சுமி அங்கிருந்து போனதும் ராமுண்ணியை சேகரக் கைமளின் வீட்டுக்கு அனுப்பி வைத்தார்.

கைமள் உடனே வந்து சேர்ந்தார்.

"கைமளே, நாம் திரும்பவும் தோல்வியடைந்திருக்கிறோம்" நாயர் பேசினார்.

"அப்படியா சொல்றீங்க?"

"திரும்பவும் மாந்திரீகர்கிட்டப் போயிட்டு வந்திடலாம்னு தோணுது."

"போகலாம்...." கைமள் இழுத்தவாறு பேசினார்.

"என்ன... வேண்டாம்கிறீங்களா..."

"அப்படி இல்லை... எதனால நம்ம திட்டம் நடக்காமப் போச்சுன்னு யோசிக்கிறேன். அந்த அளவுக்கு அவள் பெரிய ஆளா என்ன?" கைமள் தனக்கு நேர்ந்த அனுபவத்தை ஒரு முறை நினைவு கூர்ந்தார்.

"உடனே புறப்பட்டாத்தான் ராத்திரிக்குள்ளே திரும்பி வரமுடியும்?" புவனேஸ்வரன் நாயர் வீட்டுக்குள் நுழைந்தார்.

சோமதத்தனின் இருப்பிடத்தை அடைந்தபோது மாலை நேரமாகிவிட்டது.

மிருதன் அப்போதும் வழியில் காவல் இருந்தான்.

"என்ன, நாம நினைச்சது நடக்கலையா?" அவர்களைப் பார்த்ததும் சோமதத்தன் கேட்டார்.

"இல்லைங்க. ரெண்டு பேரும் உயிரோட இருக்கிறாங்க" நாயர் உதட்டைப் பிதுக்கியபடி கூறினார்.

"ஓகோ... அந்த அளவுக்கு வந்தாச்சா?" சோமதத்தன் அவசரமாக பூஜையறைக்குள் நுழைந்தார். சற்று நேரம் கழித்துத் திரும்பி வந்தபோது அவர் கையில் ஓலைச்சுவடி ஒன்று இருந்தது.

சுவடியைப் பிரித்தவர் ஒவ்வோர் ஓலையையும் கவனத்துடன் புரட்டிப் பார்த்தார்.

"இந்த நிலைமையில ஒரே ஒரு வழிதான் இருக்கு. அதாவது பழிக்குப் பழி."

சோமதத்தன் சொன்னதற்கு என்ன பொருள் என்று அவர்களுக்கு விளங்கவில்லை.

"கொஞ்சம் விளக்கமாச் சொன்னா நல்லது" நாயர் கேட்டார்.

"சொல்றேன். அதுக்குத் தகுந்த ஒரு நபரை அனுப்ப முடியுமான்னு முதல்ல பார்த்துக்கிறேன்" மீண்டும் தனது பூஜையறைக்குள் நுழைந்த சோமதத்தன் மந்திரக்கோலைக் கையில் எடுத்தார்.

அதன் முனையால் வராந்தாவில் ஒரு வட்டம் போட்டார். அதற்குள் தன்னிடமிருந்த ஓலைச்சுவடியை வைத்தார். அதன் முன்பாக அமர்ந்துகொண்டு மந்திரங்களை உச்சரிக்கத் தொடங்கினார்.



சற்று நேரத்துக்குள் கண்ணுக்குத் தெரியாத கை ஒன்று ஓலைச்சுவடியின் இதழ்களைப் புரட்டுவது போல் ஒவ்வொன்றாக நிதானமாகப் புரண்டு கொண்டிருந்தது. ஏறத்தாழ சுவடியின் மையப் பகுதி வந்ததும் அது தானாகவே நின்றுவிட்டது. சோமதத்தன் ஓலைச்சுவடியைக் கையில் எடுத்துக் குறிப்பிட்ட அந்தப் பகுதியை வாசித்தார். பிறகு வந்திருக்கும் இருவரையும் பார்த்துக் கூறினார்: "இன்று இரவு நீங்கள் இங்கு தங்க வேண்டும். உங்களுக்கு வேண்டிய சாப்பாடெல்லாம் இங்கேயே கிடைக்கும். மருசிகை..." உட்புறம் திரும்பிக் குரல் கொடுத்தார்.

உள்ளேயிருந்து பெண் குரல் ஒன்று, "என்னங்க?" என்று பதில் குரல் கொடுத்தது.

"ரெண்டு பேருக்குச் சாப்பாடு தேவை. எனக்கு வழக்கம்போல லைட்டாப் போதும்" உத்தரவு கொடுத்தவர், ஜோல்னா பை ஒன்றைத் தோளில் போட்டுக்கொண்டு அங்கிருந்து வெளியேறினார்.

சோமதத்தன் கிழக்குத் திசையில் நடக்க ஆரம்பித்தார்.

சற்றுத் தொலைவு வந்ததும் ஆள் நடமாட்டம் இல்லாத பகுதியாகத் தென்பட்டது. புதர்களும், உயரம் குறைந்த மரங்களும் நிறைந்த ஒரு பாதையில் பயணத்தைத் தொடர்ந்தார்.

ஆகாயத்தில் மழை பெய்வதற்கான அறிகுறிகள் தென்பட்டன.

விரைவிலேயே காரிருள் சூழ்ந்து கொண்டது. இருப்பினும் சோமதத்தன் ஒரு பூனையைப் போல தயக்கமின்றிப் பயணத்தைத் தொடர்ந்தார். மிகவும் பலவீனமான நட்சத்திரங்களின் வெளிச்சத்தில் சிறுத்த ஓர் ஒற்றையடிப் பாதையாக மாறிய வழியில் அவர் பாட்டுக்கு நடந்து கொண்டிருந்தார்.

ஏறத்தாழ ஐந்து மைல் தொலைவு வந்த பிறகு பிரமாண்டமாகப் படர்ந்து வளர்ந்திருந்த ஓர் ஆலமரத்தின் அடிப்பகுதியை அடைந்தார். அதன் அருகில் மோகினி கோயில் ஒன்று இருந்தது.

அந்த இடத்தை அடைந்ததும் நின்றார்.

நடந்து வந்த களைப்பைப் போக்கிக் கொள்வதற்காக அந்த ஆலமரத்தின் வளைந்து உயர்ந்த வேர்ப்பகுதியின் மீது அமர்ந்தார்.

தான் படித்த ஓலைச்சுவடியில் குறிப்பிட்ட இடம் அதுதான் என்பதை உறுதி செய்துகொண்ட பிறகு, மீண்டும் கிழக்குத் திசையில் தனது பயணத்தைத் தொடர்ந்தார்.

அதற்குள் மரங்கள் மிகவும் அடர்த்தியாக வளர்ந்திருந்த காட்டுப்பகுதி குறுக்கிட்டது.

சுமார் பத்து மைல் தொலைவு வந்தபிறகு முன்பு கண்டது போலவே அதே அமைப்புடன் மற்றொரு கோயில் தென்பட்டது.

அதுவும் ஒரு சிறிய கோயில்தான்.

அதையொட்டி எட்டி மரம் என்றும் மரோட்டி மரம் ஒன்றும் வளர்ந்திருந்தன. அவற்றின் கிளைகள் கோயிலை மூடியிருந்தன.

சோமதத்தன் கோயிலை நெருங்கினார்.

உட்புறம் எட்டிப் பார்த்தார்.

பார்த்தவர் - பார்த்த அதே விநாடியிலேயே சட்டென்று திடுக்கிட்டவராய் பின்னுக்கு நகர்ந்தார்.

அதற்குள் கூரிருட்டில் பளபளத்தன இரண்டு ஒளிப்பொட்டுகள் அவை அசையவும் செய்தன!

## 22

“**யா**ர் அது... சோமதத்தன்தானே?” மோகினி கோயிலுக் குள்ளிருந்து ஒரு குரல் கேட்டது.

“ஆமாம்... அடியேன்தான் வந்திருக்கிறேன்” சோமதத்தன் பணிவுடன் பதிலளித்தார்.

“என்ன விஷயம்?”

“என்னுடைய எல்லா முயற்சிகளும் தொடர்ந்து தோல்வியடைந் துள்ளன. அதனால் காரணம் தெரிந்துகொள்ள வந்திருக்கிறேன்.”

“சரி, எனக்கு என்ன கொண்டு வந்திருக்கிறாய்?”



“என்னையே தரத் தயாராக இருக்கிறேன். இதோ... என் தலையை உங்கள் காலடியில் அர்ப்பணிக்கிறேன்” சோமதத்தன் கோயிலுக்குள் தனது கையை நீட்டி, பலிக்கல்லின் மேற்புறம் இருக்கும் இருபக்க விளிம்புகளும் கூர்மையாக்கப்பட்ட நீண்ட வாளை எடுத்தார்.

மிகவும் பலவீனமான இந்த வெளிச்சத்திலும் அந்த வாள் பளபளக்கவே செய்தது.

தன் கழுத்து அறுபட்டுக் கீழே விழுமளவு விசையுடன் வாளை ஓங்கி வீசினார் சோமதத்தன்.

ஆனால், கண்ணுக்குத் தெரியாத கை ஒன்று அதைத் தடுத்தது: “சோமதத்தா, எனக்குத் தேவையானது ஆணின் ரத்தமல்ல... ஒரு பெண்ணின் ரத்தம்” பெண் குரல் ஒன்று ஒலிக்கவும் செய்தது.

“எவரின் ரத்தத்தை வேணும்னாலும் தர்றேன்.”

“நீ நினைத்தால் உடனடியா தனலட்சுமியின் ரத்தத்தை எனக்குத் தர முடியுமே.”

“தனலட்சுமியா?”

“ஆமாம்... உன்னைத் தேடி வந்திருக்கிறவங்க கிட்டக் கேட்டால் தெரியும். பேரை மறக்காதே. அவங்க அவளை உங்கிட்ட ஒப்படைப் பாங்க.”

“அப்படியானால் உடனே கிளம்பறேன்.”

“புறப்படு. நான் இங்கேயேதான் இருப்பேன். நாளை இரவு இதே நேரத்தில் அவளைக் கொண்டுவந்து பலி கொடு.”

“அப்படியே செய்றேம்மா” சோமதத்தன் மகிழ்ச்சி நிறைந்த மனதாகத் திரும்பினார்.

வீட்டுக்கு வந்து சேர்ந்தபோது புவனேஸ்வரன் நாயரும் கைமளும் உறக்கத்தில் ஆழ்ந்திருந்தனர். அவர்களை எழுப்பாமல் சோமதத்தன் மாளிகையை அழைத்தார்.

அவள் எழுந்து வந்தாள்.

பேரழகான ஒரு பெண்ணை என்னென்னமோ மயக்குமொழிகள் பேசிக் கடத்திக்கொண்டு வந்திருந்தார்.

ஓர் இல்லத்துக்குப் பேய் விரட்டப் போனபோதுதான் அவளைச் சந்தித்தார். உறவினர் யாருமற்ற அவளை மந்திர சக்தியைப் பயன்படுத்திக் கடத்தி வந்தார். இப்போது அவள் ஏறத்தாழ ஒரு மனைவி மாதிரி சோமதத்தனிடம் நடந்து கொள்கிறாள். பார்வதி என்ற அவளது உண்மையான பெயர் வெளியே தெரிந்தால் ஏதாவது பிரச்சினை கிளம்பலாம் என்று தோன்றியதால், 'மரீசிகை' என்று மாற்றுப் பெயரைச் சூட்டியுள்ளார்.

பொழுது விடிந்து சற்று நேரத்துக்குப் பிறகு சோமதத்தன் கண் விழித்தபோது, புவனேஸ்வரன் நாயரும், கைமளும் அங்கிருந்து கிளம்பத் தயாராக இருப்பதைக் கவனித்தார்.

"அதுக்குள்ளே புறப்பட்டுட்டீங்களா?" மாந்திரீகன் கேட்டார்.

"நீங்க தேவையானதைச் செஞ்சு முடிச்சிருப்பீங்கன்னு நெனைச்சோம்... அதான்."

"இன்னும் என் வேலை முழுமையடையலை. நான் நேத்துப் போய்ப் பார்த்தது வனதுர்காங்கிற தேவதையை. சக்தி வாய்ந்த தேவதை. அவளை மகிழ்ச்சிப்படுத்த நரபலி கொடுக்க வேண்டும். அதுவும் பெண் ஒருத்தியை."

மாந்திரீகனின் வார்த்தைகளைக் கேட்டதும் இருவரும் சற்றுத் தயங்கினார்கள்.

'இதுவரைக்கும் நடந்திருக்கிறதெல்லாம் ஏகப்பட்ட சிக்கலைக் கிளப்பியிருக்கு. இந்த நிலையில பலி கொடுக்க யாரைன்னு தேடுறது?'

இதுவரை வரிசை வரிசையாகத் தோல்விகள்...

இந்த முயற்சியும் தோல்வியடைந்தால்...

"நீங்க இவ்வளவெல்லாம் யோசிக்க வேண்டியதே இல்லை. ஆளையும் வனதுர்காவே சொல்லிட்டாங்க."

"அப்படியா... யாருங்க ஆள்?" வியப்பு நிறைந்த குரலில் கேட்டார் நாயர்.



"உங்களுக்குத் தெரிஞ்ச பொண்ணுதான். தனலட்சுமி வேணும்னு சொன்னாங்க."

"யாரு, தனலட்சுமியையா?"

"ஆமாம், அவளையேதான். கல்யாணம் ஆகாம, பல ஆண்களோட தொடர்புள்ள ஒருத்திதான் இந்த விஷயத்துக்குத் தேவை."

"அவளைக் கூட்டிட்டு வந்தா ஊர்க்காரங்க என்னைச் சந்தேகப்படுவாங்களே?" நாயர் கேட்டார்.

"நீங்க கூட்டிட்டு வரணும்னு இல்லை. கைமள் மட்டும் அவளோட வந்தாலும் போதும்."

நாயர், கைமளைப் பார்த்தார்.

கைமள் தலை குனிந்தபடி நின்று கொண்டிருந்தார். "இதுல பயப்படுறதுக்கு எதுவும் இல்லை. எல்லாத்தையும் யோசிச்சுத்தான் வனதுர்கா சொல்லியிருப்பாங்க. இந்தத் தடவை எப்படியும் உங்க நோக்கம் நிறைவேறிடும்" சோமதத்தன் உறுதியளித்தார்.

புவனேஸ்வரன் நாயரும், கைமளும் அப்போதும் தயங்கியபடி நின்றனர்.

"உங்களுக்கு எந்தவிதமான சந்தேகமும் தயக்கமும் வேண்டாம். நீங்க யோசிகிற அளவுக்கு இதுல எந்தவிதமான சிக்கலும் வராது. நான் சொன்னபடி செய்யுங்க" இந்தத் தடவை சோமதத்தனின் குரல் சற்று கடுமையாக ஒலித்தது.

இருவரும் அங்கிருந்து புறப்பட்டனர்.

பெரிய வீட்டை அடைந்த போதுதான் அவர்கள் மற்றொரு சம்பவத்தை அறிந்தனர். முந்தைய நாள் இரவு முழுவதும் புவனேஸ்வரன் நாயரின் முதல் மனைவி தூங்கவே இல்லையாம். சம்பவம் இதுதான். அவரின் இரண்டு மனைவியரும் தனித்தனியாக வேறு வேறு அறையில்தான் படுத்துக் கொள்வார்கள். புவனேஸ்வரன் தனக்கு விருப்பமான அறைக்குள் நுழைந்து கொள்வார். இதுகூட புவனேஸ்வரன் நாயரின் யோசனைதான்.

சாரதாம்மா படுக்கையில் படுத்திருந்தாள். புவனேஸ்வரன் வருவதாக இருந்தால் பத்து மணிக்குள் வந்துவிடுவார். இல்லையென்றால் இன்னோர் அறைக்குள் புகுந்து விட்டார் என்று அர்த்தம்.

முந்தைய நாள் மாலை நேரமாகியும் நாயர் வரவில்லை. இரவிலும் வருவதாகத் தெரியவில்லை. எனவே, இனி அவரை எதிர்பார்க்க முடியாது என்றும் நினைத்தனர்.

தூக்கம் வராததால் சாரதாம்மா கடிகாரத்தின் 'டிக் டிக்' ஓசையைக் கவனித்துக் கொண்டிருந்தாள். ஒரு கணத்தில் கடிகாரத்தின் 'டிக் டிக்' சத்தம் நின்றுவிட்டதாக அவளுக்குத் தோன்றியது. ஒருவேளை தூக்கக் கலக்கத்தினால் இப்படித் தோன்றுகிறதோ... என்னவோ என்று நினைத்து, கண்ணை நன்றாகத் திறந்து பார்த்தாள்.

இல்லை, தூக்கக் கலக்கமெல்லாம் கிடையாது. சத்தம் நின்று போனதென்னவோ உண்மைதான்.

அந்த அறையின் மேற்குப்புற ஜன்னலின் ஒரு கதவு திறந்து கிடந்தது. அதன் கொக்கி துருப்பிடித்துக் கழன்று போயிருந்தது.

கடிகாரம் சாவி கொடுக்காததால் நின்று போயிருக்கலாம் என்று தோன்றியது.

சற்று நேரத்தில் யாரோ கதவைத் தட்டுவது போல் தோன்றியது மிகவும் மெதுவாகத் தட்டுவதும் தெரிந்தது.

'ஒருவேளை அவர்தான் வந்துவிட்டாரோ? கதவு தாழ்கூடப் போடாமல் திறந்துதானே கிடக்கிறது. கதவைத் தட்டுவது கணவராக இருக்க முடியாது. அவரிடம் இந்தப் பழக்கமெல்லாம் கிடையாது நேராகக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே வந்து விடுவார். அதனால் கதவைத் தட்டுவது அவர் அல்ல' என்று விளங்கியது.

மறுபடியும் அதே மாதிரி கதவு தட்டப்பட்டது. அவள் எழுந்தாள் அறைக்குள் சிம்னி விளக்கின் திரி தாழ்த்தி வைக்கப்பட்டிருந்தது திரியை உயர்த்தினாள். சிம்னியில் புகை ஏராளமாகப் படிந்திருந்ததால் திரியை உயர்த்தியும் வெளிச்சத்தில் பெரிய வேறுபாடு தெரியவில்லை இருப்பினும் விளக்கைக் கையில் எடுத்துக்கொண்டு கதவை நெருங்கினான்.



"யாரது?" கதவைத் திறப்பதற்கு முன் சாரதாம்மா கேட்டாள்.

வெளியிலிருந்து எந்தவிதமான பதிலும் வரவில்லை. இருப்பினும் விளக்கு கைவசம் இருந்ததால் கதவைத் திறந்தாள்.

சாரதாம்மா திடுக்கிட்டுப் போனாள்.

சரஸ்வதியம்மாள்!

புவனேஸ்வரன் நாயரால் மிதித்துக் கொல்லப்பட்ட அவரின் இளைய சகோதரி சரஸ்வதியம்மாள் எதிரில் நின்று கொண்டிருக் கிறாள்.

"அவர் எங்கே?" எதிரில் நிற்பவள் கேட்டாள்.

"தெரியலையே" நடுங்கும் குரலில் சாரதாம்மா பேசினாலும் சத்தம் வெளியே கேட்கவில்லை.

"என்னைத் தெரியுதா?" எதிரிலிருக்கும் பெண் உருவம் கேட்டது.

"தெரியுது" இந்தத் தடவை அவள் குரல் ஒருவாறாக வெளிவந்தது.

"அவர்கிட்டச் சொல்லிடு, ஏக முதலாளியா மொத்தத்தையும் அனுபவிக்கச் சந்தோஷப்பட வேண்டாம்னு. நான் இனிமேல் அடிக் கடி வருவேன்எனக்கு " எந்தவிதமான பதிலுக்கும் காத்திருக்காமல் அந்த உருவம் திரும்பிப் போனது.

ஏறத்தாழப் பாதம் வரை அந்த உருவத்தின் தலைமுடி நீண்டு கிடந்தது. அந்தத் தலைமுடியைக் கொத்தாகப் பிடித்துத்தான் நாயர் அவளை இழுத்துக்கொண்டு போனார். சாரதாம்மாவின் கல்யாணம் முடிந்த மறு மாதம்தான் அந்த சம்பவம் நடந்தது.

அலறலும், சத்தமும் கேட்டதால் ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தபோது அந்தக் காட்சி தெரிந்தது.

சரஸ்வதியின் அடிவயிற்றுப் பகுதியில் தன் கணவர் ஓங்கி மிதிப்பதையும், அதைத் தொடர்ந்து அவள் மட்ட மல்லாக்க விழுந்ததும் சாரதாம்மாவுக்கு நன்றாகத் தெரிந்தது.

சரஸ்வதியின் உடம்பை எரிக்கும்போதுகூட யாரும் போக வில்லை. பொதுவாக இதுபோன்ற சடங்குகளுக்குப் பெண்கள் யாரும் போவது வழக்கமில்லையே?

அந்த நேரத்தில் என்னென்னமோ ஹோமங்களையும் செய்தார்கள். அதெல்லாம் சரஸ்வதியின் ஆவியை ஒதுக்கிக் கட்டுப்படுத்துவதற்காகத்தான் செய்வதாக அன்று குறிப்பிட்டார்கள்.

சேகரக் கைமள்தான் அதையெல்லாம் செய்தார். அவருடன் மீனவர் ஒருவரும் இருந்தார். ரத்த பலி கொடுப்பதற்காக ஆறு பெரிய சேவல்களைக் கொண்டு வந்திருந்தார்கள்.

பத்து அங்குல நீளமுள்ள ஆணி ஒன்றை ஹோம நெருப்பில் போட்டுக் காய்ச்சி எடுத்து வீட்டின் தென்மேற்கு மூலையிலிருந்த எட்டி மரத்தில் அறைவும் செய்தார்கள்.

அப்படி அறையப்பட்ட சரஸ்வதியம்மாள் இதோ மறுபடி வந்திருக்கிறாள்.

அதன்பிறகு சாரதாம்மாவால் உறங்க முடியவில்லை. கணவர் ஒருவேளை தங்கையின் அறையில் இருக்கலாம் என்பதால் அங்கு செல்லவும் விரும்பவில்லை.

கணவர் அங்கே இருப்பதாக வைத்துக் கொண்டாலும், நடந்த விஷயங்களைச் சொன்னால் நம்பிவிடுவார்களா என்ன? எனவே விடிய விடியக் கண்ணைத் திறந்தபடி படுத்துக் கிடந்தாள்.

மதிய நேரமானபோது புவனேஸ்வரன் நாயர் வந்து சேர்ந்தார்.

சாப்பாட்டை முடித்து, வராந்தாவுக்கு வந்து வெற்றிலை போட்டுக் கொண்டிருந்தபோது நாயரை நெருங்கினாள் சாரதாம்மாள்.

அவள் வருகைக்கு ஏதோ காரணம் இருககவேண்டும் என்று நினைத்த நாயர் கேட்டார்: "என்ன சேதி?"

இரவில் நடந்த விஷயங்களை முழுவதுமாக அவரிடம் சொன்னாள்.

"சேச்சே... அதுக்கெல்லாம் வழியே இல்லை. ராத்திரி தூங்கும் போது இதுக்குத்தான் கண்டதையும் நினைச்சுட்டுப் படுக்கக் கூடாதுன்னு சொல்றாங்க" நாயர் ஆறுதல் கூறினார்.

"அதெல்லாம் கிடையாது... நான் சொன்னது அவ்வளவும் நிஜம். நானே என் கண்ணால பார்த்தேன்."



"அப்படியே பார்த்திருந்தாதான் என்ன? தேவையான பரிகாரத்தைச் செஞ்சுட்டா போகுது" நாயர் மிகவும் சாதாரணமான ஒரு விஷயமாக அதை எடுத்துக் கொண்டதாகத் தெரிந்தது.

அன்றிரவுக்குள் தனலட்சுமியை எப்படியும் சோமதத்தனிடம் அனுப்பி வைக்கவேண்டும். ராமுண்ணியை அனுப்பி உடனே தனலட்சுமியை அழைத்து வருமாறு கூறினார்.

மாலை நேரச் சூரியன் மேற்குத் திசையில் சரியத் தொடங்கிய போது நாயர் உலாவப் புறப்பட்டார்.

வீட்டை ஒட்டியிருந்த தோட்டத்தின் தென்மேற்கு மூலையில் வளர்ந்திருந்த எட்டி மரத்தின் அடியில் வந்து நின்றார்.

## 23

எட்டி மரத்தின் தண்டுப்பகுதியில் பட்டைகள் செதில்களைப் போல் சிம்புகளாக இருந்தன. அதில் ஆணியறைந்தபோது புவனேஸ்வரன் நாயரையும் அழைத்து வந்திருந்தனர். நள்ளிரவு வேளையில் நடந்தது அந்த சம்பவம்.

சேகரக் கைமள் அந்த ஆவியை சுத்தியலால் அடித்து மரத்தில் பதிக்கவில்லை. அவரது நெற்றியாலேயே இடித்து மரத்துக்குள் ஆணியை இறக்கினார். உடல் முழுவதும் சிவப்பு நிறமான ஆரத்தித் தண்ணீரைக் கெட்டியாகப் பூசிக்கொண்டு, ரத்தத்தில் குளித்தது போல் வலது கையால் ஆணியைப் பிடித்துக்கொண்டு நெற்றியாலேயே அந்த மரத்துக்குள் இறக்கினார்.

உடைந்த மண் பானையிலிருந்து தண்ணீர் பீய்ச்சியடிப்பது போல் ரத்தம் அவர் நெற்றியிலிருந்து வெளிப்பட்டது. ஆனால், என்ன அதிசயம்! அதில் ஒரு பொட்டு ரத்தம்கூட தரையில் விழவில்லை. எட்டி மரத்தில் இறங்கிக் கொண்டிருந்த ஆணியைச் சுற்றித் தெறித்த ரத்தத் துளிகளை யாரோ உறிஞ்சி எடுப்பது போல் தெரிந்தது.

எட்டு அங்குலம் அளவுக்கு ஆணி மரத்தில் இறங்கிய பிறகு சேகரக் கைமள் திரும்பினார். அவர் நெற்றியில் ஆழமான காயம்

தென்பட்டது. அதில் மஞ்சள் தூளைப் போட்டு அழுத்திப் பிடித்துக் கொண்டார்.

ஆணியடித்த இடம் நாயருக்கு நன்றாகவே தெரியும். கிளையொன்று ஒடிந்து போன அடையாளத்தின் இடது புறத்தில் இருந்தது ஆணி.

புவனேஸ்வரன் மரத்தின் மீதிருந்த பட்டைப் பகுதியை விலக்கிவிட்டு ஆணி அடித்த பகுதியைப் பார்த்தார்.

சந்தேகம் தீராதவராக மீண்டும் பார்த்தார்.

அங்கு ஆணி இல்லை.

'ஒருவேளை ஆணி துருப்பிடித்துக் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்து போயிருக்கலாமோ?' என்று அந்த இடத்தை நகத்தால் கீறிப் பார்த்தார். அங்கு ஆணிக்குப் பதில் ஒரு துவாரம் தென்பட்டது. அடித்த ஆணியை ஆட்டிப் பிடுங்கி எடுத்தது மாதிரியான துவாரம்.

சற்றுத் தொலைவில் நட்டு வைத்திருந்த தென்னம் பிள்ளையின் அருகே சென்றார். அதன் கீற்று ஒன்றிலிருந்து ஈர்க்கிலி ஒன்றை உடைத்துக்கொண்டு வந்து துவாரத்துக்குள் செலுத்தினார். அது எந்தவிதமான தடையுமின்றி தாராளமாக மரத்துக்குள் நுழைந்தது.

'ஆணி துருப்பிடித்து இற்றுப் போகவில்லை' என்று நினைத்தவர் மரத்துக்குச் சுற்றிலுமிருந்த மண் தரையை செருப்புக் காலால் துழாவினார்.

அதோ ஆணி!

மண்ணில் மறைந்து கிடந்தது தெரிந்தது.

நெருங்கிப் பார்த்தார். ஆணி எந்தவிதமான சேதாரமும் இல்லாமல் இருந்தது. நாயருக்கு விஷயம் புரிந்துவிட்டது.

'சரஸ்வதியின் ஆவி விடுதலையாகியிருக்கிறது. மேற்கொண்டு தாமதிப்பதில் அர்த்தமில்லை' என்ற முடிவுக்கு வந்தவராக சேகரக் கைமளின் வீட்டை நோக்கிச் செல்ல முயன்றார்.

மாலை நேரமாகி விட்டிருந்தது.



திரும்பினார்.

சட்டென்று அவரது இடுப்பு வேட்டியின் கீழ் முனையை யாரோ பிடித்து இழுப்பது போல் தோன்றியது. கழுத்தைத் திருப்பினார். வேட்டி ஆணியில் சிக்கிக் கொண்டிருந்தது. ஆணி, வேர்ப்பகுதியில் சிக்கிக் கொண்டிருந்தது.

நாயர் குனிந்து வேட்டியை ஆணியிலிருந்து விடுவிக்க முயன்றார்.

"ஹி... ஹி... ஹி... ஹி..." திடுமென்று யாரோ உரத்த குரலில் சிரிக்கும் சத்தம் கேட்டது.

சற்றும் எதிர்பாராமல் கேட்க நேர்ந்த அந்தச் சிரிப்புச் சத்தம் அவரை ஒருகணம் நடுங்க வைத்தது.

அதேநேரம் அந்த எட்டி மரம் யாரோ பிடித்துக் குலுக்கியது போல் மொத்தமாகக் குலுங்கியது. எட்டி மரத்தின் கருமையான கிளைகளுக்கு நடுவிலிருந்துதான் சிரிப்புச் சத்தம் கேட்டதாக அவருக்குத் தோன்றியது.

ஒரு விநாடி மேற்புறம் பார்த்தவர் பிறகு தலைதெறிக்கும் வேகத்தில் அங்கிருந்து ஓடத் தொடங்கினார். அப்போதும் அவருக்குப் பின்னாலிருந்து அந்தச் சிரிப்பு தொடர்வதாகத் தோன்றியது.

நேராக சேகரக் கைமளின் வீட்டை அடைந்த பிறகுதான் நாயரின் ஓட்டம் நின்றது. இந்தச் சமயத்தில் நாயர் தனியாக வந்திருப்பதைப் பார்த்ததும் கைமளின் மனதில் சந்தேகம் தோன்றியது.

'ஒருவேளை தனலட்சுமி அகப்படவில்லையோ? அதைச் சொல்லத்தான் வந்திருக்கிறாரோ? அவள் கிடைக்காவிட்டால் என்ன? அவளைப்போல் வேறு ஒரு பெண்ணைக் கண்டுபிடித்தால் போகிறது.'

"என்னங்க நாயர், மூச்சிரைக்க ஓடி வர்றீங்க?" கைமள் கேட்டார்.

"ஆணி கழன்று போய்க் கிடக்குது கைமள்!" நாயர் பரபரப்பு மாறாமல், மூச்சிரைத்தபடி பேசினார்.

கைமளுக்கு விஷயம் இன்னதென்று பிடிபடவில்லை. விழித்தபடி நாயரைப் பார்த்தார்.

“நான் சொன்னது புரியலையா?” நாயர் கேட்டார்.

“சரஸ்வதிக்காக நீங்க மரத்துல ஆணி அறைஞ்சீங்களே... அதை யாரோ கழற்றி மண்ணுல போட்டிருக்காங்களனக்கு” நாயர் ஒருவாறாக விஷயத்தை விளக்கினார்.

அதைக் கேட்டதும் சேகரக் கைமள் இடிவிழுந்தது போல் தலையில் கைவைத்தது அப்படியே திண்ணையில் உட்கார்ந்தார்.

அப்படியொரு சம்பவம் நடந்தால் அதன் விளைவுகள் என்ன என்பது கைமளுக்கு நன்றாகத் தெரியும். பொதுவாக இப்படிப்பட்ட சம்பவங்கள் நடப்பது அரிது. கோடியில் ஒன்று இப்படி நடக்கலாம்.

கடுமையான மந்திரச் சடங்குகளுடன் பந்தன ஹோமங்கள் செய்து ஆணியில் ஆவாஹம் செய்து ஒரு தடவை மரத்தில் அறைந்து விட்டால், அதன்பிறகு அந்த ஆவி எந்தவிதமான சக்தியுமின்றி அடங்கிவிடும்.

ஒருவேளை ஏதோ ஒரு காரணத்துக்காக யாராவது வேண்டு மென்றே ஆணியை உருவியிருந்தால், அப்படி ஆணியை உருவியவர்தான் முதல் பலி ஆக வேண்டியிருக்கும். காரணம் என்ன வென்றால், ஆணி அடிப்பதுடன் கூடவே அங்கு ஒரு மூர்த்தியைக் காவல் வைக்கவும் செய்வார்கள்.

அந்த இடத்திலிருந்து வெளிப்பட்ட பிறகு அந்த ஆவி தேடுவது தன்னை ஆணியடித்த மனிதரைத்தான்.

“உங்க தங்கையின் ஆவியை ஆணியடிச்சுக் கட்டிப்போட்டது நான்தான். இப்ப என்ன செய்யுறதுன்னு எனக்கு எதுவும் விளங் கலையே” கைமள் எதுவும் புரியாமல் புலம்பினார்.

“அப்படின்னா விஷயம் ரொம்பவும் ஆபத்தானதுன்னு சொல்றீங்க?” கைமளின் முக உணர்ச்சிகளைக் கவனித்த நாயர் கேட்டார்.

“ஆமாம், எல்லாம் ஒண்ணா சேர்ந்து நம்மளை ரொம்பவும் இக்கட்டான ஒரு நிலைமைக்குத் தள்ளியிருக்கு” கைமள் கூறினார்.

“அதுக்கு உடனடியா நாம என்ன செய்யணும்னு சொல்லுங்க”



“எதுக்கும் முதல்ல தனலட்சுமியைக் கொண்டுபோய் சோமதத்தன் கிட்டே ஒப்படைப்போம். பெரிய வேலை நடந்தா, ஒருவேளை இந்தச் சின்ன விஷயம் எல்லாம்கூட அதோட அடிபட்டுப் போயிடலாம்.”

“அப்படியே செஞ்சுட்டாப் போச்சு.”

“சீக்கிரமா வாங்க... நான் காத்திருக்கேன்.”

“ராமுண்ணிகூட அவளைஅனுப்பி வைக்கிறேன். நீங்க மூணு பேருமா கிளம்புங்க. இந்த விஷயத்துக்கு தனம்கூட நான் வர்றது அவ்வளவு நல்லதில்லை.”

புவனேஸ்வரன் நாயர் சொல்வதும் சரிதான் என்று கைமளுக்குப் புரிந்தது.

“நீங்க சொல்றது வாஸ்தவம்தான். இருந்தாலும் உங்க குடும்பத்துல இருந்து யாராவது ஒருத்தர் வர்றதுதான் நல்லது. உங்க பையனை அனுப்புங்களேன்.”

“யாரு, நாலாவது பையன் கிருஷ்ணன் குட்டியையா அனுப்பச் சொல்றீங்க? அவன் இந்த விஷயத்துக்கெல்லாம் தோதானவன்னு தோணலை. மாட்டேன்னு என் முகத்துக்கு நேராவே சொல்லிடுவான். அதனால அவனுக்கு அடுத்தவன் ஹரிஹரனை வேணும்னா அனுப்பி வைக்கிறேன். அவன்தான் இதுக்குப் பொருத்தமானவன்.”

கைமள் ஒப்புக்கொண்டார்.

இரவு சுமார் ஒன்பது மணியளவில் மூவரும் புறப்பட்டனர். ‘ராமுண்ணியை அழைத்துக்கொண்டு போக வேண்டுமா?’ என்று யோசித்தார்கள். இந்த விஷயம் அவன் மூலமாக ஊருக்குள் தெரிந்துவிடுமோ என்ற பயம் ஏற்பட்டதுதான் காரணம்.

ஹரிஹரனுக்கும் இதைப்பற்றி எதுவும் சரியாகத் தெரியாது. ஆனால், விஷயம் ஏதோ விபரீதமானது என்பது புரிந்தது. அதுவும் தனது குடும்பத்தின் நன்மைக்காக எதையோ செய்கிறார்கள் என்பதற்காகப் புறப்பட்டான்.

வழக்கம்போல் இரவுச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு புவனேஸ்வரன் நாயர் வெளித் திண்ணையில் வந்து அமர்ந்தார். அவர் மனம் அப்போதும் நிம்மதியற்றுத் தவித்துக் கொண்டிருந்தது.

ஓர் எதிரியைச் சமாளிக்க முற்படும்போது புதிதாக மற்றொரு எதிரி முளைக்கிறான். சரஸ்வதியிடம் தான் இரக்கமில்லாமல் நடந்து கொண்டதால், நிச்சயம் அவள் தன்னைப் பழிவாங்குவாள் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. அதுவும் அவள் பழிவாங்குவது குறிப்பாகத் தன்னை மட்டும்தான்.

எல்லாரும் படுத்துக்கொண்டனர்.

ராமுண்ணி படுக்கைக்குப் போவதற்கு நாயரின் அனுமதியை எதிர்பார்த்து முற்றத்தில் உலாவிக் கொண்டிருந்தான். அவரது அனுமதிக்குப் பிறகு உறங்குவதுதான் அவன் வழக்கம்.

சில நேரம் நாயர் எங்காவது வெளியே போக வேண்டியிருந்தால், அவன்தான் துணையாகப் போக வேண்டியிருக்கும். ஒருவேளை தேங்காய் கிட்டங்கிக்கு அவர் யாரையாவது வரச் சொல்லியிருக்கிறாரோ என்னவோ?

“ராமுண்ணி இப்படி வா” நாயர் அழைத்தார்.

அவன் வேகமாக நாயரை நெருங்கினான்.

“இங்கே படுத்திருந்தா எனக்குத் தூக்கம் வரும்னு தோணலை. வா... நம்ம கிட்டங்கிக்கே போயிடலாம்” நாயர் கூறினார்.

அப்படியானால் தன்னுடைய யூகம் சரியானதுதான் என்று எண்ணிக் கொண்டான்.

ஆனால், உண்மையில் நாயர் அப்படி எந்தத் திட்டத்தையும் மனதுள் வைத்திருக்கவில்லை. அந்த வீட்டில்தான் சரஸ்வதி செத்துப் போனாள். அதனால், அங்கு இந்தச் சூழ்நிலையில் படுப்பது பாதுகாப்பானதல்ல என்று நினைத்தார் நாயர்.

கிட்டங்கியில் இருப்பது விசாலமான, இரண்டு கதவுகள் உள்ள அறை. கதவில்லாத கம்பி வைத்த பெரிய ஜன்னல்கள் வேறு உண்டு ஓரளவு இயற்கை வெளிச்சம் அறைக்குள் பிரதிபலிக்கும்.



ராமுண்ணி வெளிப்புறமிருந்த திண்ணையில் படுத்துக் கொண்டான். நாயர் அறைக்குள் படுத்துக்கொண்டார்.

சோமதத்தனிடம் போனவர்கள் எப்போது திரும்பி வருவார்களோ... புதிதாக என்ன செய்தியைக் கொண்டு வரப்போகிறார்களோ... என்று என்னவெல்லாமோ யோசனையில் ஆழ்ந்திருந்தவர் அப்படியே கண்மயங்கிப் போனார்.

எங்கோ ரக்கோழியொன்று கூவியது.

அதைத் தவிர வேறு எந்தச் சத்தமும் கேட்கவில்லை. ரக்கோழியும் கூவிவிட்டு அடங்கிவிட்டது போல் தோன்றியது.

அவ்வப்போது பல்லிகள் ஒரு சுவரிலிருந்து மற்றொரு சுவருக்குத் தாவும் சன்னமான சத்தம்கூடத் தெளிவாகக் கேட்டது.

ராமுண்ணி நல்ல உறக்கத்தில் ஆழ்ந்திருந்தான். அவன் உறக்கமே எப்போதும் அப்படித்தான். நல்ல தூக்கத்தில் அவனை ஆற்றில் தூக்கிப் போட்டால்கூட சாமானியத்தில் விழிக்கமாட்டான். அப்படியொரு கும்பகர்ணன் அவன்.

அப்படிப்பட்டவனுக்கு யாரோ தன் பெயரைச் சொல்லி அழைப்பதாகத் தோன்றியது. ஒரு கனவு போலும், யதார்த்தம் போலவும் அவன் சிந்தை குழம்பியது.

“ராமுண்ணி”- மறுபடியும் குரல் கேட்டது.

இந்தத் தடவை கண்களை முழுசாகத் திறந்தான். தெளிவற்ற வெளிச்சத்தில் பெண் உருவம் ஒன்று எதிரில் நிற்பது தெரிந்தது.

“உன்னைத்தான் கூப்பிடுறேன், எழுந்திரு” இம்முறை அந்தக் குரல் ஒரு கட்டளைபோல் ஒலித்தது.

ராமுண்ணி வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தான்.

“நான்தான் வந்திருக்கிறனே” அந்த உருவம் வடக்குப்புறமாக முகத்தைத் திருப்பிக் கொண்டது.

‘கடவுளே....’ ராமுண்ணியின் குரல் அவன் தொண்டையைவிட்டு வெளியேறவில்லை வெளிப்பட்டிருந்தால் அது ஓர் அலறலாக இருந்திருக்கும்.

“வீணா சத்தம் போடக்கூடாது. நான் யார்னு தெரிஞ்சுதா?” அந்த உருவம் கேட்டது.

“தெரியு....மே” அவன் குரல் பாதி அலறல் போலக் கேட்டது.

“சொல் பார்க்கலாம்.”

“சரஸ்வதியம்மா...” அவன் திக்கித் திணறிப் பேசினான்.

“பரவாயில்லையே, என்னைத் தெரிஞ்சு ஞாபகம் வெச்சிருக்கிறே, அப்படின்னா நான் சொல்றபடி செய்” அவள் கேட்டுக்கொண்டாள்.

## 24

“**செ**ய்யுறேன். நீங்க என்ன சொன்னாலும் தட்டாமச் செய்யுறேன் தயவுசெஞ்சு என்னைக் கொன்னுடாதீங்க” ராமுண்ணி மிகவும் பயந்தவனாகப் பணிவுடன் கேட்டான்.

“அப்படின்னா எழுந்து என்கூட வா” சரஸ்வதியம்மாள் கட்டளையிடுவது போல் பேசினாள்.

அவன் நன்றாக எழுந்து நின்றான். அவன் உடம்பு மொத்தமும் நடுங்கிக் கொண்டிருந்தது.

சரஸ்வதியம்மாளின் ஆவி, அவனை புவனேஸ்வரன் நாயரின் அருகே அழைத்துச் சென்றது.

அவர் நல்ல தூக்கத்திலிருந்தார்.

“இதோ படுத்திருக்கிறவரின் இடுப்பில் ஒரு தாயத்து இருக்கிறது அதை அவிழ்த்து எடு!” சரஸ்வதி கூறினாள். பிறகு தேங்காய் கிட்டங்கிக்கு வெளியே வந்து இருட்டில் நின்று கொண்டாள்.

எப்படிப்பட்ட கொடிய பிசாசையும் பக்கத்தில் நெருங்கவிடாத சக்திவாய்ந்த தாயத்து ஒன்றை புவனேஸ்வரன் நாயர் இடுப்பில் கட்டியிருந்தார். சரஸ்வதியின் மரணத்துக்குப் பிறகுதான் அப்படி ஒரு பாதுகாப்பை அவர் செய்துகொண்டார்.



ராமுண்ணி, புவனேஸ்வரன் நாயரை நெருங்கி, அவர் இடுப்பிலிருந்த கயிற்றை மிகவும் நிதானமாக அவிழ்த்து எடுத்தான்.

அதைக் கையில் எடுத்துக்கொண்டு வெளியே வந்தான்.

“இந்தாங்க, நீங்க கேட்ட தாயத்து” ராமுண்ணி அதை அவளுக்கு நேராக நீட்டினான்.

“கிட்டே கொண்டு வராதே.... அது எனக்கு வேண்டாம். முதலில் அதைப் பக்கத்திலிருக்கிற குளத்தில் எறிந்துவிட்டு வா!” கட்டளை இட்டாள்.

ராமுண்ணி தாயத்துடன் குளத்தை நோக்கிச் சென்றான்.

கரையில் நின்றபடி அதை விசையுடன் குளத்தின் மையத்தை நோக்கி வீசி எறிந்தான். நிலா வெளிச்சத்தில் தாயத்து தண்ணீரில் விழுந்ததும் ஒரு வட்டச் சலனத்தை ஏற்படுத்தி, அது கரையை நெருங்கவும் செய்தது.

அவன் குளத்திலிருந்து திரும்ப முற்பட்டபோது எதுவோ பூண்டெழும் இரைச்சல் கேட்டது. திரும்பிப் பார்த்தவன் வியப்பில் வாயடைத்துப் போனான்.

குளத்து நீர் கொதிப்பது தெரிந்து. அதுவும் தாயத்து விழுந்த மையப்பகுதியில் குமிழிகள் தோன்றி வெடித்துப் பொங்கி வந்தன.

சட்டென்று அதிலிருந்து ஒரு கறுப்பு உருவம் மேலெழும்பி வந்தது.

ராமுண்ணி ஓட முயன்றாலும் முடியவில்லை. கால்கள் மண்ணில் புதைத்து வைத்ததைப் போல் அசையாமலிருந்தன.

குளத்தின் நீர்ப்பரப்பில் அந்த உருவம் நின்று கொண்டிருந்தது.

ஏறத்தாழ மூன்று ஆள் உயரமிருந்த அந்தக் கறுப்பு உருவம் தலைமுடியை அவிழ்த்துப் போட்டிருக்கும் பயங்கரமான தோற்றங் கொண்ட பிசாசு என்பது ராமுண்ணிக்கு விளங்கியது.

“என்னை விடுதலை செஞ்சதுக்கு ரொம்ப நன்றி. ஆனால், என்னைத் தாயத்துக்குள்ளே அடைச்சு வெச்சவனை சும்மா விடமாட்டேன்” அது அலறும் குரலில் கூறியது.

அதைக் கேட்டதும் ராமுண்ணிக்குப் போன உயிர் திரும்பி வந்தது போலிருந்தது.

இப்போது அவன் ஓடத் தொடங்கினான்.

அந்த உருவம் நேராகப் பாய்ந்து போனது மடுமலை சேந்தனை நோக்கித்தான். அவன் ஒரு பெரிய மாந்திரீகன். அவன்தான் அதை புவனேஸ்வரன் நாயருக்கு வழங்கியவன்.

காட்டுவாசியாக இருந்த சேந்தன், ஒரு துர்தேவதையைத் தாயத்துக்குள் ஆவாஹித்து அடக்கியிருந்தான். அந்தத் தேவதை உக்கிரமான சக்திகள் பெற்றிருந்தது.

தாயத்திலிருந்து வெளிப்பட்டதும் அதன் மொத்தக் கோபமும் சேந்தன் மீது திரும்பியது.

சேந்தன் ஆழ்ந்த உறக்கத்திலிருந்தான்.

எட்டி மரம் ஒன்றின் மீது பரண் போட்டு அதைக் குடிசை போலச் செய்திருந்தான். அதுதான் அவனது இருப்பிடம்.

மரத்துடன் குடிசையும் பலமாக அசைவது தெரிந்ததும் முதலில் சுழல் காற்றாக இருக்கும் என்று நினைத்தான். ஆனால், அந்தக் குலுக்கல் தொடர்ந்த போதுதான் மெதுவாகக் கண்களைத் திறந்தான். ஒரு விநாடி பயந்து போனான்.

தான் எப்போதோ ஒரு காலத்தில் தாயத்துக்குள் அடக்கிக் கொடுத்த பிசாசு மரத்தை உலுக்கிக் கொண்டிருக்கிறது. அது மரத்தை வேருடன் பிடுங்கி எறிய முற்படுகிறது என்பது சேந்தனுக்கு விளங்கவும் செய்தது.

தனது இறுதிக்காலம் நெருங்கிவிட்டது புரிந்தது. இருப்பினும் ஒருதடவை முயற்சி செய்து பார்ப்போம் என்று நினைத்தவனாகத் தன் தலைமாட்டில் வைத்திருந்த வாளைக் கையில் எடுத்தான்.

எத்தனையோ மிருகங்களின் தலையை வெட்டியெறிந்திருக்கிற வாள் அது. ஒரு தடவை அந்த வாளைச் சுழற்றினான். இரண்டாவது தடவை சுழற்றும்போது வலது கையை மேற்புறமாக உயர்த்தினான்



ஒரே விநாடியில் -

அவன் இடது கை அறுபட்டுக் கீழே விழுந்தது. அதிலிருந்து வழிந்த ரத்தம் அந்தப் பிசாசின் வாயில் சொட்டியது. மனித ரத்தம் வாயில் பட்டதும் அது திருப்தியடைந்தது போல் தோன்றியது.

"இப்போது என்னைத் திருப்திப்படுத்திவிட்டதால் உன்னை விட்டுவிடுகிறேன்!" என்று சொன்ன அந்த பயங்கர உருவம் அங்கிருந்து மறைந்தது.

அது நேராக வந்து சேர்ந்த இடம் புவனேஸ்வரன் நாயரின் தேங்காய்க் கிட்டங்கிதான். வெளியே சரஸ்வதி நின்று கொண்டிருந்தாள்.

அந்தப் பிசாசு, சரஸ்வதியை நெருங்கியது.

அவள் பயந்து நடுங்கினாள்.

"உன்னைக் கட்டிப் போடத்தான் என்னைத் தாயத்துக்குள் அடைத்துப் போட்டார்களா? அப்படியானால் உன் கதையையும் முடித்து விடுகிறேன்" அந்த உருவம் சரஸ்வதியைப் பிடித்தது.

பிடித்த கையை மேற்புறமாக உயர்த்தி சரஸ்வதியைத் தூக்க முயன்றபோது மந்தாகினி அங்கு வெளிப்பட்டாள்.

"சுடலை.... என்ன இது?" மந்தாகினி பிசாசிடம் கேட்டாள்.

அந்தக் குரலைக் கேட்டதும் சுடலை என்கிற பிசாசு, சரஸ்வதியைக் கீழே விட்டது.

"நான், தெரியாமல் செய்து விட்டேன்" சுடலை, மந்தாகினியைப் பார்த்துக் கைகூப்பியபடி பேசியது.

"சரி... போகட்டும். காவில் இருக்கிற கருவில்வ மரத்தடியில் இருந்துகொள்!" மந்தாகினி கூறினாள்.

மிகவும் பணிவுடன் அங்கிருந்து பாய்ந்து சென்ற சுடலை, கருவில்வ மரத்தின் அடிப்பகுதியை அடைந்து அங்கிருந்து ஒரு சிலை ஒன்றுக்குள் புகுந்து கொண்டது.

“சொல்லுங்கம்மா” சரஸ்வதி கூறினாள்.

“உன்னை நான் காப்பாத்திட்டேன். இனிமேல் ரொம்பவும் எச்சரிக்கையா நடந்துக்கணும்” மந்தாகினி நினைவூட்டினாள்.

“சரஸ்வதி” மந்தாகினி அழைத்தாள்.

“இருந்தாலும் நான் அவரைப் பழிவாங்கியே தீரணும்.”

“செய்யலாம். அதுக்கான நேரம் இன்னும் வரலை. வரும்போது நானே உனக்கு அதைச் சொல்றேன்...” மந்தாகினி சொன்னாள்.

**சே**கரக் கைமளும் ஹரிஹரனும் சேர்ந்து தனலட்சுமியை மாட்டு வண்டியில் ஏற்றிப் பயணம் போய்க் கொண்டிருந்தனர்.

தனக்கு என்ன நேரப் போகிறது என்று அவளுக்குப் புரியவில்லை. எங்கேயோ தொலைவான இடத்துக்குத் தன்னைக் கொண்டு போகிறார்கள் என்பது விளங்கியது. அதுமட்டுமின்றி, தனக்கு ஏதோ நன்மையான காரியத்தைச் செய்யப் போகிறார்கள் என்றும் அவள் நினைத்தாள்.

மாட்டுவண்டி இருட்டினூடாகப் பயணம் செய்து கொண்டிருந்தது. வண்டியின் அசைவில் கண்ணயர்ந்தவள் சட்டென்று விழித்தவுடன் கேட்டாள்: “நாம எங்கே போய்ட்டிருக்கிறோம்?”

“அதெல்லாம் அங்கே போய்ச் சேர்ந்த பிறகு உனக்கே புரியும்” அவள் தோளில் கையை வைத்து அழுத்திய ஹரிஹரன் கூறினான். அவன் அப்போதுதான் முதல் தடவையாக அவளை நெருங்கி யிருந்தான்.

“கைமள், தூங்கிட்டிங்களா என்ன... சத்தத்தையே காணோம்?” ஹரிஹரன் கேட்டான்.

“நான் எப்படித் தூங்குறது? தூங்கிட்டா, வண்டி நாம நினைச்ச இடத்துக்குப் போகாது” கைமள் பதிலளித்தார்.

“நல்லது... கவனமா வண்டியை ஓட்டுங்க. நான் கொஞ்ச நேரம் கண்ணை மூடலாம்னு பார்க்கிறனே.”

“சரி செய் தம்பி.”



இருவரும் கூண்டு வண்டிக்குள் படுத்துக்கொண்டனர். கைமளுக்கு விஷயம் புரிந்தாலும் நமக்கு எதற்கு வம்பு என்று பேசாமல் வண்டியைச் செலுத்தினார்.

சோமதத்தனின் இருப்பிடத்தை நெருங்கும்போது வழக்கம்போல் மிருதன் நின்று கொண்டிருந்தான்.

மிருதனைப் பார்த்ததும் மாடுகள் மேற்கொண்டு நகராமல் அப்படியே நின்றன. பதிலாக, பயந்துபோன மாடுகள் தீனக்குரல் எழுப்பத் தொடங்கின. என்ன செய்தும் மாடுகள் முன்னோக்கி நகர்வதாகத் தெரியவில்லை.

அதுமட்டுமின்றி, வண்டியை ஏடாகூடமாகத் தள்ளிக்கொண்டு பின்னோக்கி நகரவும் செய்தன.

அதேபோல் மாடுகளைக் கண்ட மிருதனின் கண்கள் பிரகாசம் அடைந்தன.

“இந்த மாட்டை எனக்குத் தர்றீங்களா?” மிருதன் கேட்டான்.

“எதுக்குப்பா?” கைமள் கேட்டார்.

“எனக்கு வேணும்.”

“அப்புறம் நாங்க எப்படித் திரும்பிப் போறது?”

“அதுக்கெல்லாம் வழியிருக்கு.”

“எப்படி?”

“பலி கொடுத்த பிறகு உங்களுக்கு அபாரமான சக்தி கிடைக்கப் போகுது. உங்ககூட ரத்த சாமுண்டியே வருவாங்களே” மிருதன் கூறினான்.

“அப்படியானா மாட்டை எடுத்துக்கோ!” கைமள் அவனது கோரிக்கைக்கு இணங்கினார்.

மிருதன் மாட்டை நெருங்கினான்.

அது முன்னைவிட உரத்த குரலில் பயத்துடன் அலறத் தொடங்கியது.

## 25

எப்பேர்ப்பட்ட பயங்கரமானவர்களையும் நடுங்க வைக்கக்கூடிய காட்சியை அவர்கள் கண்டனர்.

கைமளின் உடல் இலை போல் ஆடியது.

ஹரிஹரன் கண்களைப் பொத்திக் கொண்டான்.

தனலட்சுமி அலற முயன்று வாயைப் பிளந்தாலும்... என்ன காரணத்தாலோ சத்தம் வெளிவரவில்லை.

அந்தக் காட்சி அப்படிப்பட்டதாக இருந்தது.

மிருதன் முதலில் இடது புறமிருந்த காளை மாட்டை நெருங்கினான். அதன் இரு கொம்புகளைப் பிடித்து மேற்புறமாக உயர்த்தினான். பின்னங்கால்கள் இரண்டும் தரையில் பதிந்திருக்க, காளையின் முன்னங்கால்கள் தொங்கியவாறே மேற்புறம் உயர்ந்தன. அவன் வாய் அருகே மாட்டின் கழுத்துப் பகுதி வந்ததும் தன் பற்களை அங்கு பதித்துக் கடித்தான். மாட்டின் ரத்தக்குழாய் அறுபட்டு ரத்தம் பீய்ச்சியடிக்கத் தொடங்கியது. ஒரு பொட்டு ரத்தத்தைக்கூட வெளியே விடாமல் மிருதன் உறிஞ்சிக் குடித்தான். ஒருசில நிமிடங்களுக்குள் மாட்டின் உடம்பிலிருந்த உயிர் ஒடுங்குவது தெரிந்தது.

மொத்த ரத்தமும் உறிஞ்சப்பட்டு மாடு உயிரற்று, சக்கையானது. வாழை மட்டையை வீசியெறிவது மாதிரி மாட்டை ஒதுக்கித் தள்ளினான். பொத்தென்று தரையில் விழுந்தது மாட்டின் உடம்பு.

உடனே வலதுபுறமிருந்த மாட்டை நெருங்கினான். முந்தைய சம்பவமே இப்போதும் தொடர்ந்தது.

சேகரக் கைமள் மயங்கி விழுந்து விடாமலிருகக, இரண்டு கைகளாலும் வண்டியைப் பிடித்துக் கொண்டார்.

தன் வேலை முடிந்ததும் மிருதன் அவர்களை அழைத்தான் "வாங்க போகலாம்."

மூவரும் இயந்திர கதியில் அவனைப் பின்தொடர்ந்தனர். சோமதத்தனின் இருப்பிடத்துக்கு வந்ததும் மிருதன் வழக்கம்போல் வெளியில் நின்றுகொண்டான். மூவரையும் உள்ளே போகுமாறு சொல்லிவிட்டு மிருதன் அங்கிருந்து மறைந்தான்.



அந்த வீட்டு வராந்தாவில் யாரும் இல்லை.

ஒரே ஒரு நிலவிளக்கு மட்டும் எரிந்து கொண்டிருந்தது.

சேகரக் கைமள் ஒருதடவை கனைத்தார்.

"மூன்று பேரும் வெளியிலுள்ள சவுக்கையில் காத்திருங்கள். அதற்குள் முன்னால் உங்களுடன் வந்திருக்கும் பெண்ணை குளித்துவிட்டு வரச்சொல்லுங்கள். வரும் வழியில் அவள் அசுத்தமாகியிருக்கிறாள். வடக்குப்புறத்திலுள்ள குளியலறையில் தண்ணீர் இருக்கிறது" சோமதத்தனின் குரல் மட்டும் உள்ளிருந்து கேட்டது.

சேகரக் கைமள், ஹரிஹரனின் முகத்தைப் பார்த்தார். அவன் தலைகுனிந்து கொண்டான்.

தனலட்சுமி குளியலறையை நோக்கி நடந்தாள்.

சற்று நேரத்துக்குப் பிறகு சோமதத்தன் வெளியே வந்தார். அவர் கையில் தாமரை இலை ஒன்றும் அதில் விபூதியும் இருந்தன.

இலையை அவர்களுக்கு முன்னால் நீட்டினார். இருவரும் விபூதியை எடுத்து நெற்றியிலும் தொண்டைப் பகுதியிலும் பூசிக்கொண்டனர்.

"நாளைக்கு பூஜை ஆரம்பமாகும். சக்தி வாய்ந்த ஹோமம். இதுவரை யாரும் பெறாத அபூர்வமான சக்தியை நான் பெறுவேன். அந்த சக்தியுடன் நான் அவளுடன் மோதுவேன்" சோமதத்தன் யாருக்கோ விளக்குவது போல் பேசினார்.

அவர் பேச்சும், தோரணையும், கம்பீரமான தோற்றமும் அவர் சொன்னதைச் செய்வார் என்கிற நம்பிக்கையை ஏற்படுத்தியது.

'இந்தத் தடவை எப்படியும் வெற்றி பெற்று விடுவோம்' என்று உறுதி கைமளின் மனதில் பதிந்தது.

தனலட்சுமி குளித்துவிட்டு வந்தாள்.

நிலவிளக்கின் வெளிச்சத்தில் சோமதத்தன் அவளைப் [illegible] அவளின் உருண்டு திரண்ட உருவத்தைக் கவனித்ததும் [illegible] அடைந்தார்.

‘இவளின் ரத்தத்தால் சாமுண்டி கண்டிப்பாக வெளி[illegible] அதேபோல் எந்தவிதத் தடையுமின்றித் தனது [illegible] நிறைவேறிவிடும்’’ என்ற உறுதி பிறந்தது.

“உங்கள் எல்லாருக்கும் உள்ளே சாப்பாடு தயாராக [illegible] போய்ச் சாப்பிட்டு விட்டு வாருங்கள்” சோமதத்தன் கூறினார்

சேகரக் கைமளும் ஹரிஹரனும் அதற்காகக் காத்திருந்[illegible] போல் கை கால் முகம் கழுவப் போனார்கள். நீண்ட [illegible] அவர்களைக் களைப்பு அடைய வைத்திருந்தது.

தனலட்சுமியின் உணவு சமையல்கட்டில் பரிமாறப்[illegible]

கைமளுக்குக் கஞ்சியும் புழுங்கித் தாளித்த கிழங்கும் [illegible] பப்படமும், மாவடு ஊறுகாயும் ஹரிஹரனுக்கு சாதம், [illegible] அவியல், பப்படம் என்று அவரவருக்குப் பிடித்த [illegible] தனித்தனியே தயாராகியிருந்தன.

‘இது எப்படி சாத்தியாமனது!’ என்பதுபோல் இருவரும் [illegible] ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

தங்களது வீட்டில் சாப்பிடும் அதே சுவையை [illegible] உணர்ந்தனர் அவர்கள். ‘தங்களது விருப்பம் சோம[illegible] சமையல்காரர்களுக்கு எப்படிப் புரிந்திருக்கும்?’ நினைக்க [illegible] அவர்களுக்கு வியப்பாக இருந்தது.

“சமையல் உங்களுக்குத் திருப்தியா இருந்ததா?” [illegible] கட்டிலிருந்து ஒரு பெண் குரல் கேட்டது.

தலையை உயர்த்தி இருவரும் பார்த்தபோது அழகான [illegible] ஒருத்தி நின்று கொண்டிருந்தாள்.

மோகினியைப் போலிருந்தது அவள் அழகு.

“எதுக்காக இப்படிக் கேட்கிறீங்கன்னு தெரிஞ்சுக்க[illegible] கைமள் கேட்டார்.



[illegible] திருப்தியாத்தான் இருக்கும். இருக்கணும். அதெல் [illegible] வீட்டுல சமைச்சதுதானே” அந்தப் பெண் கூறினாள்.

[illegible] செய்தி இருவருக்குமே வியப்பு அளிப்பதாக இருந்தது.

[illegible] இப்படியெல்லாம் தனித்தனியா சமையல் செய்யறது [illegible] அவங்கவங்க வீட்டுக்கு ஆளை அனுப்பி [illegible] செய்வோம்.”

“[illegible] எப்படி சாத்தியம்?”

[illegible] அதுக்கெல்லாம் ஆளுங்க இருக்குறாங்க. அவங்க, [illegible] தூரத்துல இருந்தாலும் விருந்தாளி வீட்டுச் சாப்பாட்டையே [illegible] சேர்த்துடுவாங்க.”

[illegible] பேச்சு மேலும் மேலும் அவர்களை வியப்பு அடையச் [illegible] பரஸ்பரம் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

[illegible] முடித்துக்கொண்டு எல்லாரும் சவுக்கையில் வந்து [illegible]

[illegible] கருக்கலில் சேவல் கூவியதும் கண்விழித்தனர்.

[illegible]த்துக்கான ஆயத்தங்கள் செய்யப்பட்டிருந்தன.

[illegible] அதே நேரம் புவனேஸ்வரன் நாயர் குளிப்பதற்காகக் [illegible] இறங்கினார்.

[illegible] மூழ்கி எழுந்தபோதுதான் இடுப்பிலிருந்த தாயத்து [illegible] போயிருப்பதை உணர்ந்தார்.

[illegible] தண்ணீரில் இருந்தபோதும் அவர் உடல் குப்பென்று [illegible]

[illegible]க்கு பயந்துதான் தாயத்தைக் கட்டிக் கொண்டிருந்தார். [illegible] அதுவும் காணாமல் போயிருக்கிறதே!

‘[illegible] செய்வது?’ பிரமை பிடித்தவர் போலானார்.

[illegible] எப்படி மடுமலை சேந்தனிடம் போவது? என்ன [illegible] கடைசியில் அவனிடம் போக வேண்டியதுதான் என்று [illegible]

ராமுண்ணியை அழைத்தார்.

"ரொம்பவும் அவசரமான, அவசியமான விஷயம் [illegible] வரைக்கும் போக வேண்டியிருக்கு."

மடுமலை என்ற பெயரைக் கேட்டதும் ராமுண்ணியின் [illegible] பயம் உயர்ந்தது.

"இங்கேயிருந்து போயிருக்கிறவங்க எப்போ [illegible] வருவாங்கன்னு தெரியலை. அதுவரைக்கும் நாம [illegible] வேண்டாமா? அதனால கண்டிப்பா போயே தீரணும்?"

"அதுக்கென்ன, போகலாங்க" ராமுண்ணி வேறு [illegible] ஒப்புக்கொண்டான்.

உடனே இருவரும் புறப்பட்டனர்.

கிராமத்தின் எல்லையைக் கடந்து காட்டுக்குள் [illegible] வைத்தபோது எதையோ உடைத்துக் கலைக்கும் சத்தம் [illegible] எதிரே நின்று கொண்டிருந்தது பிரமாண்டமான ஒரு யானை.

மூங்கில் காட்டுக்குள் புகுந்து அதம் பண்ணிக் [illegible] யானை.

புவனேஸ்வரன் பின்னோக்கி நகர்ந்து நின்றார். என்ன [illegible] என்று தெரியாமல் ராமுண்ணி தடுமாறினான்.

மாலை நேரமாகியிருந்தது.

எந்தவிதமான தீர்மானத்துக்கும் வரமுடியாமல் [illegible] குழம்பிக் கொண்டிருந்தபோது நல்லவேளையாக சேந்தன் [illegible] வந்தான்.

அவன் காட்டு யானை ஒன்றின் மீது அமர்ந்திருந்தான் [illegible] ஆடி அசைந்து வந்துகொண்டிருந்தது. சேந்தனிருந்த [illegible] நெருங்கியதும் அதம் பண்ணிக் கொண்டிருந்த யானை [illegible] ஒருபுறமாக ஒதுங்கிப் போனது.

"நீங்க என்னைத் தேடி வர்றதை நான் தெரிஞ்சுக்கிட்[illegible] அதனாலதான் நானே வந்துட்டேன்" யானையிலிருந்து கீழே [illegible] சேந்தன் கூறினான்.



[illegible]வேளை, கடவுள்தான் உன்னை அனுப்பி வைத்தார் என்று [illegible]"

"[illegible] வருவீங்கன்னு நான் எதிர்பார்த்தேன்" தாயத்திலிருந்து [illegible] பைசாசிக உருவத்தை நினைத்துக்கொண்ட சேந்தன் [illegible]

"[illegible] எதிர்பார்த்தீங்க?" நாயர் கேட்டார்.

"தாயத்துலேர்ந்து வெளியேறினதும் அது நேரா என்கிட்டதான் [illegible] அதாவது என் வீட்டுக்கு. அப்பவே நினைச்சேன்."

"[illegible] என்ன பண்ணலாம்?"

"தாயத்தை அவிழ்த்தது யார்?" சேந்தன் விசாரித்தான்.

[illegible] வந்து விழுந்ததும் ராமுண்ணி நடுங்கத் தொடங்கினான்.

[illegible] அதை அவிழ்த்து எடுத்தோம் என்பதை அவர்கள் [illegible]கொண்டால், அந்த நிமிடமே தன்னை வெட்டிப் [illegible]விடுவார்கள் என்பதை உணர்ந்த ராமுண்ணி விஷயம் [illegible]இருக்க, மனத்துக்குள்ளாகத் தனக்குத் தெரிந்த மொத்தத் [illegible]ளிடமும் வேண்டிக் கொண்டான்.

[illegible]வேளையாக, சேந்தனும் அந்தக் கேள்விக்கு முக்கியத்துவம் [illegible] மறுமுறை கேட்கவில்லை.

"[illegible]ளிப்பதற்காக குளத்தில் இறங்கியபோதுதான் தாயத்து [illegible] கவனித்தேன்."

"[illegible]வேளை குளத்திலேயே விழுந்துவிட்டதோ என்னவோ?" [illegible] கூறினான்.

"[illegible]க்கலாம்..." என்று நாயர் பதிலளித்த போதுதான் [illegible]ணியின் இதயத்துடிப்பு பழைய நிலைக்குத் திரும்பியது.

"[illegible] நீங்க வந்திருக்கிறது?" சேந்தன் கேட்டான்.

"[illegible] விஷயத்திலிருந்து காப்பாத்தணும், வேற என்ன?" நாயர் [illegible]

“செஞ்சுடலாம்... ஆனா, அதுக்கு நரபலி கொடுக்கணும். ஒரு பெண்ணை... அதுவும் இதுவரை எந்த ஆணும் தொடாத ஒருத்தியை”

“எந்த ஆணும் தொடாத ஒருத்தியா?” புவனேஸ்வரன் நாயர் யோசனையில் ஆழ்ந்தார்.

“அப்படி ஒருத்தியைக் கொண்டு வந்தா... நான் மிச்சத்தைப் பார்த்துக்கிறேன்” சேந்தன் உறுதியளித்தான்.

“சரி, முயற்சி செய்கிறேன்” என்று கூறிய புவனேஸ்வரன் நாயர் ராமுண்ணியுடன் திரும்பினார். வீட்டுக்கு வந்து சேர்ந்த பிறகும் நாயரின் யோசனை அதைச் சுற்றியே வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

‘ஆண் தொடாத ஒரு பெண்ணை எங்கேயிருந்து எப்படிக் கண்டுபிடிப்பது?’ இறுதியில் அவர் ஒரு முடிவுக்கு வந்தார்.

“ராமுண்ணி, பத்தாயிரம் ரூபா வரையிலும் செலவு பண்ணலாம் பதினஞ்சு வயசான ஏதாவது ஒரு பொண்ணைத் தேடிக் கண்டு பிடிச்சுட்டு வா. அதாவது கன்னிப்பொண்ணா இருக்கணும் ஞாபகமிருக்கட்டும்.”

“தேடுறேங்க எஜமான்” பத்தாயிரம் ரூபயை மனதில் கனவு கண்ட ராமுண்ணி கூறினான்.

தனிமையில் நடந்து வரும்போதுதான், தான் ஏற்றுக்கொண்ட விஷயம் அவ்வளவு சுலபமானது அல்ல என்பது புரிந்தது. எதற்கும் தனது பெரிய அக்காளின் வீட்டுக்குப் போய்ச் சொல்லி வைக்கலாம் என்று தீர்மானித்தான்.

“கல்யாணியக்கா...” வீட்டுக்குள் நுழைந்தும் நுழையாமலும் ராமுண்ணி, தன் சகோதரியை அன்புடன் அழைத்தான்.

அவளுக்கு எதுவும் புரியவில்லை.

‘தம்பி வெகுநாள் கழித்து வந்திருக்கிறான். என்ன விஷயமாக வந்திருக்கிறானோ என்னவோ?’ அவள் யோசனை காரியக்காரனான தம்பியின் வருகையைப் பற்றி இப்படி யோசித்தது.

“என்னடா தம்பி, என்ன சேதி?” கல்யாணி கேட்டாள்.



“ஒரு முக்கியமான விஷயத்துக்காக வந்திருக்கிறேன்க்கா. விஷயம் ரொம்பவும் ரகசியமும் கூட.”

“சங்கதியைச் சொல்லு நீ.”

“விளக்கமாகவே சொல்லிடுறேன். எங்க எஜமானோட மச்சினிச்சி பம்பாயில வேலை செய்யுறாங்க. அவங்ககூட உதவியாயிருக்க ஒரு சின்னப் பொண்ணு வேணும்னு சொல்றாங்க. ஐயாயிரம் ரூபா அட்வான்ஸ் கிடைக்கும்.”

கல்யாணி யோசனையில் ஆழ்ந்தாள்.

சட்டென்று மனதில் தட்டுப்பட்டது மூன்றாம் வீட்டைச் சேர்ந்த மாதவியின் மூத்த மகளின் உருவம்தான். ஏழைக்குடும்பம். மூத்த மகளுக்கே பதினான்கு வயதுதான். அவளுக்கு கீழே மேலும் ஐந்து பெண் குழந்தைகள் வேறு இருந்தனர். மாதவியின் கணவர் கூலி வேலை செய்பவர். அந்த வீட்டார் ஒப்புக்கொண்டால் விஷயம் சுலபமாகிவிடும்.

கல்யாணி கல்லெறிந்து பார்த்தாள். மாங்காய் விழவே செய்தது. பெண் குழந்தையை அழைத்துக்கொண்டு போகும்போது அக்கா கல்யாணிடமும் ஆயிரம் ரூபாயைக் கொடுக்கத் தவறவில்லை ராமுண்ணி.

மாலை நேரம் கடந்துவிட்டிருந்தது.

குளிர்ந்த காற்று வீசியது.

யாரோ தன்னைத் தொடர்ந்து வருவதுபோல் தோன்றியதால் ராமுண்ணி சட்டென்று திரும்பிப் பார்த்தான், ஆனால் எவரும் தட்டுப்படவில்லை.

மறுபடியும் நடக்கத் தொடங்கினான்.

நாலெட்டு வைப்பதற்குள் மீண்டும் யாரோ தன்னைத் தொடர்வது போல் தோன்றவே, மனதுள் பயம் எழும்பத் தொடங்கியது.

எதிர்பாராத ஒரு கணத்தில் அவன் தோள் மீது மிகவும் சில்லென்றிருந்த ஒரு கை பதிந்தாற் போலிருந்தது.

திடுக்கிட்ட ராமுண்ணி திரும்பினான்.

## 26

நிலவொளியில் ஆள் யாரென்று தெரிந்தது.

தம்புராட்டி.

பனங்காட்டு இல்லத்தைச் சேர்ந்த மந்தாகினித் தம்புராட்டி.

'இந்த நேரத்தில் எங்கே போயிட்டு வர்றாங்களோ?' ராமுண்ணி யோசித்தான்.

"எங்கேயிருந்து வர்றீங்க ராமுண்ணி?" மந்தாகினி கேட்டாள்.

"இவ என் அக்கா மகள். இவளைக் கூட்டிட்டு வர்றதுக்காக எங்க வீட்டுக்குப் போயிட்டு வர்றேன்" ராமுண்ணி பதிலளித்தான்.

"அவள் பேரு சுமதிதானே?" மந்தாகினி கேட்டாள்.

'இதெப்படி இந்தத் தம்புராட்டிக்குத் தெரிந்தது?' ராமுண்ணி வியப்புடன் யோசித்தாள்.

"உன் மருமகள் ரொம்ப அழகா இருக்கிறாளே..." மந்தாகினி சுமதியை நெருங்கினாள்.

ராமுண்ணியின் மனம் எதிர்பாராத குறுக்கீட்டால் படபடக்கத் தொடங்கியது. மந்தாகினி தன்னுடன் வந்தால் ஏதாவது பிரச்சினையாகி விடலாம். சுமதியை எங்கே கொண்டு செல்கிறோம் என்பதைத் தெரிந்து கொள்ளலாம். அது மேலும் சிக்கலை உருவாக்கலாம். எனவே தம்புராட்டியை அங்கிருந்து என்ன சொல்லி அகற்றலாம் என்று யோசிக்கத் தொடங்கினான்.

கடைசியில் ஓர் உபாயம் தென்பட்டது.

"தம்புராட்டி, உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா? நாங்க வர்ற வழியில உங்க வீட்டு எஜமான் நாலஞ்சு பேர்கிட்டச் சத்தம் போட்டுட்டிருந்தார். அது ஏதாவது அடிதடியில முடியும்னு நினைக்கிறேன்" ராமுண்ணி கூறினான்.

அதைக்கேட்டு பரபரப்பு அடைந்த மந்தாகினி கேட்டாள் "நீங்க சொல்றது எந்த இடம்?"



"முந்தின முச்சந்தியிலதான்."

"இந்தப் பனி படர்ந்திருக்கிற பாதையில நான் எப்படி அவ்வளவு தூரம் போறது?"

மந்தாகினி சொன்னதும் உண்மைதான்.

மேற்குத் திசையிலிருந்து பனிப்படலம் நெருங்கிக் கொண்டிருந்தது. கண்மூடித் திறப்பதற்குள் அந்தப் பகுதி முழுவதும் பனியால் சூழ்ந்தது போல் ஆகிவிட்டடது. ராமுண்ணி சட்டென்று பெண் குழந்தை சுமதியின் கையைப் பிடிக்க, கை நீட்டினான்.

"நான் இங்கேதான் இருக்கிறேன் மாமா" பெண் குழந்தை பதிலளித்தது.

குரலை வைத்து சுமதி நின்று கொண்டிருக்கும் இடத்தைத் தோராயமாக நிதானித்து அவள் கையை பற்றிக்கொண்டு நடக்கத் தொடங்கினான். தேங்காய் கிட்டங்கியை நெருங்கியதும் ஒருகணம் தயங்கினான். இந்தக் குழந்தையைப் பெரிய வீட்டுக்கு அழைத்துச் செல்வது நல்லது அல்ல.

புவனேஸ்வரன் நாயரின் பிள்ளைகள் லேசுப்பட்டவர்கள் அல்ல. ஹரிஹரனும் அவன் தம்பி சசிதரனும் குறிப்பாகப் பயப்பட வேண்டியவர்கள்.

"நீ இங்கேயே இரும்மா... நான் உடனே திரும்பி வர்றேன். யார் வந்து கூப்பிட்டாலும் வெளியே வராதே!" எச்சரித்துவிட்டு ராமுண்ணி அங்கிருந்து கிளம்பினான்.

சுமதி தலையாட்டி அவனது எச்சரிக்கையை ஏற்றுக்கொண்டாள்.

பெரிய வீட்டின் தெருவாசற்படியை அடையும் வரையில் ஓட்டமா நடையா என்று புரியாமல் பாய்ந்து வந்தான். அங்கிருந்து பார்த்தபோது திண்ணையில் போட்டிருந்த சாய்வு நாற்காலியில் புவனேஸ்வரன் நாயர் சாய்ந்து உட்கார்ந்திருந்தார். அவரின் இரண்டாம் மனைவி அவர் வலது காலை பிடித்துவிட்டுக் கொண்டிருந்தாள்.

நல்லவேளை, அவருக்கு அருகில் உட்கார்ந்திருப்பது இரண்டாம் மனைவி. முதல் மனைவியாக இருந்தால் தோண்டித் துருவி விசாரிப்பாள்.

அவன் தெருவாசற்படி தாண்டுவதை நாயரும் கவனித்தார்.

"போதும், நீ புறப்படு..." நாயர் மனைவியிடம் கூறினார்.

அவள் வீட்டுக்குள் போனதும் ராமுண்ணி அவரை நெருங்கியதும் ஒரே சமயத்தில் நடந்தது.

"விஷயம் நல்லபடியா முடிஞ்சிடுச்சா?" புவனேஸ்வரன் கேட்டார்.

"முடிஞ்சிடுச்சு எஜமான்."

"குழந்தை எங்கே?"

"கிட்டங்கியில விட்டிருக்கேன்."

"நல்ல வேலை செஞ்சே."

"மேற்கொண்டு என்ன செய்யறது? அங்கேயே இருந்துட்டுப் போகட்டுமா?"

புவனேஸ்வரன் நாயர் யோசனையில் ஆழ்ந்தார்.

சாய்வு நாற்காலியிலிருந்து எழுந்து வீட்டுக்குள் போனார் கடிகாரத்தைப் பார்த்தார்.

மணி பதினொன்றுக்கு மேல் ஆகிவிட்டிருந்தது. 'உடனேயே சேந்தனிடம் போனால் என்ன?' அவர் மனம் கேட்டது. 'இந்த நேரம் போனால் யாருக்கும் எதுவும் தெரியாமலும் இருக்கும். அதுதான் நல்லது.'

வெளியே வந்தவர் ராமுண்ணியைப் பார்த்தார்.

"என்னங்க எஜமான்?"

"இப்பவே அந்தப் பொண்ணை கொண்டு போயிடலாமான்னு பார்க்குறேன்."

"எங்கே கொண்டு போகணும்?"

"உனக்கு அதைச் சொன்னா புரியாது. சரி, நீ போய்ப் படுத்துக்கோ."



"அப்புறம்... எஜமான்...." என்றபடி தலையைச் சொறிந்தான் ராமுண்ணி.

"என்ன, பணமா?"

"ஆமாம் எஜமான், மிச்சத்தை வந்து தர்றேன்னு சொல்லிட்டுத் தான் கூட்டி வந்திருக்கேன்."

"அதனால் என்ன?" என்ற நாயர் மறுபடி வீட்டுக்குள் போனார். திரும்ப வந்தபோது அவர் கையில் ரூபாய் நோட்டுகள் சிலவும் சில்லறையும் இருந்தன. கொத்தாகக் கையைவிட்டு அள்ளி எடுத்து வந்தார் போலும்.

"இந்தா, வெச்சுக்க. தேங்காய் வியாபாரி இப்பத்தான் கொடுத்துட்டுப் போனான்" அவனிடம் நீட்டினார்

"நான் தர்றேன்னு சொன்னா சொன்னதுதான். இதை நீ தற்சமயச் செலவுக்கு வெச்சுக்க. இப்ப நான் ரொம்பவும் சிக்கல்ல இருக்கேன்... அப்புறம் பார்க்கலாம்."

ராமுண்ணி தயங்கினான்.

சுமதியைக் கொண்டு வந்திருப்பது நிச்சயமாக நல்ல காரியத்துக்காக அல்ல என்பது ராமுண்ணிக்குத் தெரியும். காரணம், அவர் சேந்தனைப் பார்க்கப் போனபோது அவனும் உடனிருந்தான்.

ஆனால், இவ்வளவு சின்னப் பெண்ணை என்ன செய்யப் போகிறார்கள் என்று தெளிவாக விளங்கவில்லை. இருப்பினும் ஆபத்தான ஏதோ ஒன்று நடக்கப் போகிறது என்பதை அவன் மனம் எடுத்துச் சொல்லவே செய்தது.

சேந்தனைப் பார்த்தாலே பயம் தோன்றும். அந்தத் தாடியும் மீசையும்... தொப்பூழ் வரை நீண்டு கிடந்த தாடி, கயிறுபோல் பிரிபிரியாகத் தொங்கும். சற்றுத் தொலைவிலிருந்து பார்த்தால் பாம்புக்குட்டிகள் தொங்கிக் கொண்டிருப்பது போலிருக்கும். சிவப்பு நிறக் கண்கள். புகையிலை மற்றும் கஞ்சாவை மென்று அரைத்ததால் கறைபடிந்த பற்கள். அதிலும் மேற்புறப் பற்கள் வெளிப்புறமாக நீண்டு துருத்திக் கொண்டிருக்கும்.

கழுத்தில் ருத்திராட்ச மாலை. அதன் நடுவே பதக்கம் போல் தொங்கிக் கொண்டிருந்தது காட்டுப்பூனையின் மண்டையோடு.

கை விரல்களில் அழுக்குப் படிந்த நீண்ட நகங்கள், இடுப்பில் உடையாக அணிந்திருப்பது ஏதோ மரத்தின் பட்டைகள். ஆகமொத்தம் பயம், அருவருப்பு, வெறுப்பு ஆகியவற்றை ஏற்படுத்தும் வடிவம் சேந்தனுடையது.

'தன் எஜமான் அந்தச் சேந்தனுடன் வைத்திருக்கும் தொடர்பு நல்லதற்கு அல்ல. அவர்கள் மோசமான எதையோ செய்யத் திட்டம் போட்டிருக்க வேண்டும்.'

"அந்தப் பொண்ணு அங்கே தனியா உட்கார்ந்திருக்குதா?" நாயர் கேட்டார்.

"ஆமாங்க..."

"உங்களை யாரும் பார்க்கலையா?"

"இல்லை."

"சரி, நீ போகலாம். உன்னை நான் அப்புறமாக கவனிக்கிறேன்."

"அப்போ மாதவியம்மா விஷயம்."

"பொண்ணின் அம்மாதானே? பணத்தைக் கொடுத்துடலாம் ரொம்ப நெருக்கினாங்கன்னா, எங்கிட்டதான் கொண்டு வந்து விட்டிருக்கிறேன்னு சொல்லிடு."

"அப்படித்தான் சொல்லியிருக்கேன்."

"அப்படின்னா கவலையை விடு, நீ போ."

ராமுண்ணி மேற்கொண்டு பேசாமல் அங்கிருந்து நகர்ந்தான் 'அதன்பிறகும் அங்கு நின்ற கொண்டிருந்தால் உடம்புக்கு நல்லதல்ல' என்று அவனுக்குத் தெரியும்.

புவனேஸ்வரன் நாயர் கிட்டங்கியை நோக்கி நடந்தார்.

"யாரது?" வெளியே காலடிச் சத்தம் கேட்டதும் பயம் நிறைந்த குரலில் சுமதி கேட்டாள்.



"நான்தாம்மா... பயப்படாதே" நாயர் அறைக்குள் வந்தார்.

சுமதி உட்கார்ந்த இடத்திலிருந்து எழுந்தாள்.

"என்னை இதுவரைக்கும் பார்த்திருக்க மாட்டே இல்லே...."

"ராமுண்ணியோட எஜமான்தானே நீங்க?"

"ஆமாம், அவரேதான். ஆமாம், இதுக்கு முன்னால் எப்பவாவது என்னைப் பார்த்திருக்கியா?"

"திருவிழாவுக்கு வந்திருக்கும்போது பார்த்திருக்கிறேன்."

"அப்புறம் எதுக்காகப் பயப்படணும். சரி வா போகலாம்."

சுமதி அவரைப் பின்தொடர்ந்தாள்.

புவனேஸ்வரன் நாயர் டார்ச் லைட்டை எரிய விட்டபடி நடந்து கொண்டிருந்தார்.

அகலமான பாதை, சிறுத்து ஒற்றையடிப் பாதையாக மாறியிருந்த வழியில் அவர்கள் பயணம் தொடர்ந்தனர். பாறைகள் நிறைந்த பகுதிக்கு வந்ததும் அவள் பயப்படுவது தெரிந்தது. உடனே புவனேஸ்வரன் நாயர் தன் தோளில் போட்டிருந்த துண்டை எடுத்து ஒரு முனையைப் பிடித்துக் கொண்டு மறுமுனையை சுமதியிடம் நீட்டிப் பிடித்துக்கொள்ளச் சொன்னார்.

இருவரும் நடை பயணத்தைத் தொடர்ந்தனர்.

மலையடிவாரத்தில் சேந்தன் நிற்பது டார்ச்லைட்டை வெளிச்சத்தில் தெரிந்தது.

"அங்கே நிற்குறது பூதமுங்களா?" சுமதி பயம் விலகாதவளாகக் கேட்டாள்.

"இல்லேம்மா... அவர்தான் நாட்டு வைத்தியர்."

"எனக்கு உடம்புக்கு நோய் எதுவும் இல்லையே?"

"நீ ரொம்ப தூரம் போக வேண்டி இருக்கே. அதுக்கு முன்னாடி உன் உடம்பை பரிசோதித்து, நோய் எதுவும் தாக்காம இருக்க மருந்து தரப்போறார்."

“நான் எப்ப பம்பாய்க்குப் போகணும்ங்க?”

“அதுக்காகத்தான் இதெல்லாம். நீ ரொம்பக் கெட்டிக்காரியா இருக்கிறியே.”

இருவரும் சேந்தனுக்கு முன்னால் வந்து நின்றார்கள்.

“பரவாயில்லை, நல்ல குழந்தைதான்” சுமதியை நிலவொளியில் பார்த்த சேந்தன் திருப்தியுடன் கூறினான்.

“சரி, மேற்கொண்டு நான் என்ன செய்யணும்?” நாயர் கேட்டார்.

“நல்ல கேள்வி கேட்டீங்க. நீங்க கூட வராம எப்படி?” வந்தா எதிராளியையும் பார்க்கலாம்.

“எந்த எதிராளியை?” நாயர் சற்று பயத்துடன் கேட்டார்.

“அதுதான் சரஸ்வதி தம்புராட்டியை.”

“உண்மையாகவா... அதுக்குள்ளே இதெல்லாம் தயாராயிடுச்சா?” நாயரின் பயம் இப்போது வியப்பாக மாறிவிட்டிருந்தது.

## 27

மரணமடைந்த பிறகு தன்னால் எரியூட்டப்பட்ட சரஸ்வதியை மறுபடி நேரில் பார்க்க புவனேஸ்வரன் நாயர் பயந்தார் என்றாலும், மாந்திரீகனான சேந்தன் அருகில் இருப்பதால் ஆபத்து எதுவும் நடக்காது என்று திடமாக நம்பினார்.

“என்ன சேந்தன், ரொம்பத் தூரம் போக வேண்டியிருக்குமோ?” நாயர் கேட்டார்.

“அதோ தெரிகிறது பாருங்கள்... அந்தப் பாறைக்கு அருகில் போகவேண்டும். அதன்பிறகு நீங்கள் ஒருபோதும் சரஸ்வதி தம்புராட்டியைப் பார்க்க வேண்டியிருக்காது. அந்த அளவுக்குச் சக்தி வாய்ந்தது இந்த தேவதை.”

“நான் பார்க்கணும்கிறதெல்லாம் அவசியமில்லை. உன் விருப்பம் எப்படியோ, அப்படியே பண்ணிடலாம்.”



நரபலியை நேரடியாகப் பார்க்கும் தைரியம் இல்லாததால் நாயர் பதிலளித்தார்.

“அப்படின்னா ஒரு வேலை செய்யலாம். நீங்க இங்கேயே நில்லுங்க. நான் கொஞ்ச நேரத்துல வந்திடுறேன்” சேந்தனின் இந்த யோசனை நாயருக்கு உடன்பாடானதாக இருந்தது.

சேந்தன், சுமதியை அழைத்துக்கொண்டு நடக்கத் தொடங்கினான். நாயர் பாறை மீது ஏறி அமர்ந்து கொண்டார்.

பாறைகள் சிலவற்றைக் கடந்த சேந்தன் ஒரு குகைக்குள் நுழைந்தான். குகைக்குள் கல்விளக்கு ஒன்று எரிந்து கொண்டிருந்தது.

அந்த வெளிச்சத்தில் அதற்குள் இருந்த சிலை ஒன்றை சுமதி கவனித்தாள். கவனித்த அந்த விநாடியில் அவள் அலற முற்பட்டாள்.

விஷயத்தை யூகித்த சேந்தன் சட்டென்று சுமதியின் வாயைப் பொத்துவதற்காகக் கை நீட்டினான். ஆனால், அதற்கு இடம் தராமல் அவள் பின்வாங்கித் திரும்பி நின்றாள்.

அவள் நின்ற தோரணையே மிகவும் கம்பீரமாக இருந்தது. சேந்தன் அதை மனதுள் பாராட்டவும் செய்தான்.

அங்கிருந்த சிலையின் காலடியில் கிடந்த நீண்ட வாளை சேந்தன் கையில் எடுத்தான்.

“ஓம் ரத்த சாமுண்டி, ஓம் ரத்த சாமுண்டி.....” வாளை உயர்த்திய சேந்தன் மந்திரத்தை உச்சரித்தவாறு சுமதியின் கழுத்தை நோக்கி விசையுடன் இறக்கினான்.

ஆனால், வாள் கீழ்ப்புறம் இறங்கவேயில்லை.

யாரோ மேற்புறம் இழுத்துப் பிடித்திருப்பது போல் அந்தரத்திலிருந்து நகராமலிருந்தது. சேந்தன் எவ்வளவோ முயன்றும் வாள் கீழிறங்குவதாகத் தெரியவில்லை.

தன் உடம்பிலுள்ள மொத்த சக்தியையும் ஒன்று திரட்டிக் கீழ்ப் பலமாக இழுத்தான். ம்ஹூம்... வாள் கீழிறங்குவதாகத் தெரியவில்லை.

“நான் உங்களுக்கு உதவணுமா?” அவனுக்கு நேராகத் திரும்பிய சுமதி கேட்டாள்.

சேந்தன் அவளைப் பார்த்தபோது அங்கு சுமதிக்கு பதில் வேறு யாரோ நின்று கொண்டிருந்தாள்.

அவள் சுமதியுமல்ல... சரஸ்வதியுமல்ல.

உடல் முழுவதும் உருகிய தங்கம் போல் ஜொலித்துக் கொண்டிருந்த ஒரு பெண் உருவம்.

"என்னைத் தெரியுதா?" அந்த உருவம் கேட்டது.

"தெரிய...லை....யே..." சேந்தன் நடுங்கியபடி பதிலளித்தான்.

சேந்தனின் கை வாளிலிருந்து விடுபட்டிருந்தது. இருப்பினும் அந்த வாள் அந்தரத்திலேயே தொங்கிக் கொண்டிருந்தது.

"என்ன, வாள் கைக்கு வரமாட்டேங்குதா?" என்று கேட்டவள் தன் கையை உயர்த்தி வாளைப் பிடித்தாள்.

"அடேய் துரோகி, அப்பாவியான ஓர் ஏழை வீட்டுப் பெண்ணைப் பலிகொடுக்கவா முயன்றாய்? உன்னை நான்..." வார்த்தை முடிவதற்கு முன்பே கீழிறங்கியது வாள். கண்ணிமைக்கும் நேரத்துக்குள் சேந்தனின் வலது கை, தோள்பட்டையிலிருந்து அறுபட்டுக் கீழே விழுந்தது.

அடுத்த விநாடி சேந்தனிடமிருந்து உரத்த குரலில் அலறல் எழுந்தது.

அந்த அலறல் புவனேஸ்வரன் நாயருக்கும் கேட்டது.

பாறை மீது உட்கார்ந்திருந்த நாயரின் காதுக்குள் அந்த அலறல் துல்லியமாக விழுந்தது. ஆனால், அது சேந்தன் குரலா, சுமதியின் குரலா என்பதை அப்போது அவரால் பிரித்தறிய முடியவில்லை. உயிர் வேதனையில் சுமதியிடமிருந்து புறப்பட்ட அலறலாகத்தான் இருக்க வேண்டுமென்று நினைத்தார்.

இவ்வளவும் நடந்துவிட்டதால் குகைக்குள் நடப்பதை மறைவாக நின்று பார்த்தால் என்ன என்ற ஆவல் நாயருக்கு எழுந்தது. எனவே மெதுவாகக் குகை வாசலை நோக்கி நடந்தார்.



குகையை நெருங்கியபோது குகைக்குள்ளிருந்து மறுபடியும் அலறல் எழுந்தது. இப்போது எழுந்த அலறல் ஆணினுடையது என்று அவருக்குத் தெளிவாகத் தெரிந்தது.

சந்தேகம் நிறைந்த விழிகளுடன் குகைவாயிலின் ஓரமாக வந்து கவனமாக உட்புறத்தை எட்டிப் பார்த்தார்.

அங்கே சேந்தனின் இரு கைகளும் தோள்பட்டையிலிருந்து அறுபட்டு விழுந்திருந்தன.

ஒளியாலேயே வார்த்து எடுத்தது போன்ற உருவம் ஒன்று கையில் வாளுடன் சேந்தனுக்கு முன்னால் நின்று கொண்டிருப்பதைக் கவனித்தார்.

அவ்வளவுதான், நாயர் தலைதெறிக்கத் திரும்பி ஓடத் தொடங்கினார்.

சேந்தன் தரையில் விழுந்து புரளத் தொடங்கினான்.

"இதுதான் உனக்கு தண்டனை. நீ இதுவரை செய்த கெட்ட காரியங்களுக்கான பரிகாரத்தைச் செய்து உயிரை மாய்த்துக்கொள்ள வேண்டியதுதான்" அவனுக்கு முன்னாலிருந்த பெண் உருவம் கட்டளையிட்டது.

அப்போதுதான் சேந்தன் அந்த உருவத்தை நன்றாகப் பார்த்தான். அவன் அது வரை பார்த்தேயிராத ஒரு பெண்மணி.

"நான் யார் என்று நீ தெரிந்துகொள்ள வேண்டிய அவசியமில்லை" என்று சொன்ன மந்தாகினி அங்கிருந்து வெளியேறினாள்.

கண்மண் தெரியாமல் ஓடிக்கொண்டிருந்த புவனேஸ்வரன் நாயருக்கு மூச்சு வாங்கியது. அருகிலிருந்த ஆலமரத்தின் அடிப்பகுதியில் சற்று ஒதுங்கி நின்றார்.

"இவ்வளவு நேரம் ஓடியும் இவ்வளவு தூரம்தான் வரமுடிந்ததா?" ஆலமரத்தின் மறுபுறத்திலிருந்து ஒரு குரல் கேட்டது.

"யாரது?" சட்டென்று திடுக்கிட்டட நாயர் பதற்றத்துடன் கேட்டார்.

“நான்தாங்க சுமதி” அவள் எழுந்து அவருக்கு முன்பாக வந்து நின்றாள்.

“நீ... நீ... நிஜமாவே நீதானே?” நடுங்கும் குரலுடன் கேட்டார்.

“என்னங்க... என்னென்னமோ கேட்குறீங்க?” உங்களைப் பார்த்தா என்னமோ மாதிரி இருக்கு. வாங்க போகலாம்” அவள் முன்புறமாக நடந்தாள்.

‘இவளிடம் மேற்கொண்டு என்னத்தைச் சொல்ல?’ நாயர் குழப்பத்துடன் யோசித்தார். இருப்பினும் வேறு வழியில்லாததால் அவளுடன் நடக்கத் தொடங்கினார். வீட்டை அடைந்தபோது ராமுண்ணி நின்று கொண்டிருந்தான். அவனுக்கு அருகில் சுமதி நின்று கொண்டிருக்கிறாள்.

புவனேஸ்வரன் நாயர் சுற்றுமுற்றும் பார்த்தார். தன்னுடன் வந்தவளைக் காணோம். அதற்குப் பதில் ராமுண்ணியின் அருகில் நின்று கொண்டிருக்கிறாள்.

“இந்தப் பொண்ணு எப்படி இங்கே வந்து சேர்ந்தாள்?” நாயர் கேட்டார்.

“நான் வந்தபோது இவள் இங்கேயே நின்னுட்டிருந்தாள் எஜமான் யாரோ ஒரு கிழவி இவளை இங்கே கொண்டு வந்து விட்டுட்டுப் போனாளாம்.”

“யாரு, கிழவியா?”

“ஆமாங்க” சுமதி பதிலளித்தாள்.

‘அப்படியானால் தன்னுடன வந்தவள் உண்மையான சுமதியில்லை’ நாயர் சிரித்துக் கொண்டார்.

‘தான் ஏமாற்றப்பட்டிருக்கிறோம்!’

தன்னுடன் வந்தவள் வேறு யாரோ ஒருத்தி.

அவள் யாராக இருக்கும்?’

“எஜமான், நான் வர்ற வழியில ஒருத்தரைப் பார்த்தேன்” ராமுண்ணி கூறினான்.



“யாரைப் பார்த்தே?”

“உண்ணிக்கிருஷ்ணன் தம்புரானோட சம்சாரத்தை.”

“நிஜமாவா? இந்த நடுராத்திரியில அவங்க எங்கே போயிட்டு வந்தாங்களாம்?” நாயர் வியப்புடன் கேட்டார்.

“நான் அதைக் கேட்கலைங்களே” ராமுண்ணி தயக்கத்துடன் பேசினான்.

“அப்படின்னா?” நாயருக்கு ஏற்கெனவே மனதுள் ஒரு சந்தேகமிருந்தது. ஆனால், தன் சந்தேகத்தை உறுதிப்படுத்தும் எந்த அடையாளமும் இல்லாததால், ஒரு முடிவுக்கு வரமுடியவில்லை.

இதுவரை தனக்கு அப்படியோர் அனுபவம் ஏற்பட்டதில்லை. எல்லாமே கேள்விப்பட்டவைதான்

‘சரி, எதற்கும் சேகரக் கைமளும் ஹரிஹரனும் வந்தபிறகு தீர்மானிக்கலாம்’ என்று நினைத்தவராக நாயர் வீட்டுக்குள் போனார்.

அன்று நாயருக்கு உறக்கம் வரவில்லை.

விடியற்காலையில் சேவல் கூவுவது வரை கண்ணைத் திறந்தபடி படுத்துக் கிடந்தார். ஒன்றிரண்டு தடவை கண்ணிமைகள் மூடியபோது குகைக்குள் பார்த்த சேந்தனின் வெட்டுப்பட்ட உருவம் கண்முன் வந்து நின்றது. இரண்டு தோள்பட்டைப் பகுதிகளிலும் தசைப்பிசிறுகள் தொங்க... ரத்தம்வடிந்து கொண்டிருந்த விகார உருவம்.

அவர் கட்டிலில் கிடந்து துடித்தார்.

சட்டென்று கட்டிலிலிருந்து துள்ளி எழுவார்.

மறுபடி படுப்பார்.

**சோ**மதத்தன், தனலட்சுமியை வனதுர்காவுக்குப் பலி கொடுப்பதற்காக ஹோமத்தைத் தொடங்கினார்.

சேகரக் கைமள் அவருக்குச் சீடராகச் செயல்பட்டார்.

“ஓம் வனதுர்காய நம...” மந்திர வாக்கியங்கள் தொடர்ந்தன.

நடக்கப் போகும் விபரீதத்தைப் புரிந்து கொள்ளாமல் தனலட்சுமி அப்பாவியாக விக்கிரகத்தின் முன்னால் கைகூப்பியபடி உட்கார்ந்து கொண்டிருந்தாள். அவள் தலைமுடி அவிழ்ந்து கிடந்தது. நெற்றியில் சந்தனக் கீற்றும் குங்குமப் பொட்டும் அழகாக இடம் பிடித்திருந்தன.

ஆலத்தி நீரில் நனைத்த புடவையை மார்பின் மேற்பகுதி வரை இழுத்துக் கட்டியிருந்தாள்.

பயங்கர வடிவம் கொண்ட வனதுர்காவின் கையிலிருந்த வாள் பளபளத்தது. அந்த வாள்தான் சோமதத்தன் கைவழியாக தனலட்சுமியின் கழுத்தை வெட்டப் போகிறது.

தனலட்சுமியும் மந்திரம் சொல்லிக் கொண்டிருந்தாள். அவள் சுயநினைவை இழந்தவளைப் போல் தென்பட்டாள்.

விக்கிரகத்துக்கு முன்புறமிருந்த பலிக்கல்லில் இதற்கு முன் விழுந்த ரத்தக் கறை மறையாமல் திட்டுத் திட்டாகத் தெரிந்தது.

பல தடவை நரபலியை ஏற்று வாங்கியிருந்த துர்கா, அடுத்த பலிக்காகத் தாகத்துடன் காத்திருந்தாள்.

**ம**ந்தாகினி சட்டென்று திடுக்கிட்டு விழித்தாள்.

அவள் உண்ணிக்கிருஷ்ணனின் மார்பில் தலை சாய்த்துப் படுத்திருந்தாள். பயங்கரமான கனவு கண்டு விழித்தவளைப் போல் கண்களைத் திறந்தாள்.

“என்ன மந்தாகினி... என்ன ஆச்சு?” உண்ணி கேட்டான்.

“ஒண்ணுமில்லைங்க... எனக்குத் தூக்கம் வரலை” அவள் எழுந்து உட்கார்ந்தாள். உண்ணிக்கிருஷ்ணனும் அவளுடன் எழுந்திருக்க முற்பட்டபோது அவள், அவன் நெற்றியில் கை வைத்தாள்.

குளிர்ச்சியான அவள் விரல்கள் நெற்றியில் பட்டபோது ஆழ்ந்த அமைதியில் - விவரிக்க முடியாத சுகத்தில் அமிழ்ந்ததைப் போல அவன் கண்களை மூடிக் கொண்டான்.

மந்தாகினியின் உதடுகளிலிருந்து நித்ரா மந்திரம் வழிந்தது. உண்ணிக்கிருஷ்ணன் ஆழ்ந்த உறக்கத்துள் அமிழ்ந்தான்.



மந்தாகினி கட்டிலிலிருந்து எழுந்தாள். போர்வையை எடுத்து உண்ணிக்கிருஷ்ணனின் கழுத்துவரை போர்த்தினாள். தலையணையை அவனுக்கு இடதுபுறமாக அண்டக்கொடுத்தவள், ஒரு தடவை அவன் முகத்தை ஊன்றிப் பார்த்துவிட்டுப் புறப்பட்டாள்.

படுக்கையறைக்கு வெளியே வந்தவள் கதவை மூடி வெளிப்புறமாகத் தாழிட்டாள்.

இடது கையிலிருந்த நாக வடிவ வளையலைக் கழற்றி படுக்கையறையின் நிலை மீது வைத்தாள்.

வலது கையை உயர்த்தி வளையலின் மேற்புறமாக அசைத்தாள்.

வளையல் நிமிர்ந்து நாகமாக மாறிப் படம் எடுத்து நின்றது.

“ம்... இப்படித்தான் இருக்க வேண்டும்” அவள் மந்திரித்தாள்.

மறுபடியும் அதன் மேற்புறமாகக் கையை அசைத்தாள்.

நாகம், வளையலாக மாறியது மீண்டும்.

திண்ணைக்கு வந்தாள்.

வெளியே சமுத்திரப் பரப்பாக இருள் மண்டிக் கிடந்தது.

எங்கும் ஒரே அமைதி.

அவள் தன் இரு கைகளையும் அந்தரத்தில் நீட்டினாள்.

## 28

**ம**ந்தாகினி அந்தரத்தில் பாய்ந்தாள்.

அவள் போகும் வழியில் ஒரு பெரிய பனை மரம் இருந்தது. உச்சத்தில்தான் முதன் முதலாகக் காய்த்ததும்கூட.

நீண்டு உயர்ந்த ஓர் அரக்கனைப் போல் அந்த மரம் வானைத் தொடுவது மாதிரி இருளைப் படைத்துக்கொண்டு நின்று கொண்டிருந்தது.

சற்று நெருங்கி வந்தபோதுதான் மந்தாகினி அந்த மரத்தைக் கவனித்தாள். தன் வலது கையை வீசி பனை மரத்தின் நடுப்பகுதியில் வலுவாகத் தட்டினாள்.

வாளால் வெட்டியதுபோல் பனைமரம் இரண்டு துண்டாகியது மேற்புறத் துண்டு பெருத்த சத்தத்துடன் தரையில் விழுந்தது.

மந்தாகினி முன்புறமாக விரைந்து கொண்டிருந்தாள்.

அவள், வனதுர்காவின் குகைக் கோயிலுக்கு முன்னால் வந்து நின்றாள்.

உட்புறமாக எட்டிப் பார்த்தபோது தனலட்சுமியின் கழுத்தை வெட்டுவதற்காக சோமதத்தன் வாளை ஓங்குவது தெரிந்தது.

சட்டென்று உட்புறம் பாய்ந்தவள், சோமதத்தனின் கையிலிருந்த வாளின் கூர்மையான பகுதியைக் கையில் பிடித்தாள்.

சோமதத்தனால் தன் கண்களையே நம்ப முடியவில்லை. யாரோ ஒரு பெண்மணி பலிகொடுக்க விடாமல் தன் கையிலிருக்கும் வாளைத் தடுத்துப் பிடித்துக் கொண்டிருக்கிறாள்.

அவள் சாதாரணமான ஒரு பெண்மணியாகத் தெரிந்தாள் சோமதத்தனுக்கு. எனவே, வாளை விசையுடன் பின்னுக்கு இழுத்தார்.

ஆனால், நடந்தது நேர்மாறாக இருந்தது.

கூர்மையான முனையைப் பிடித்திருந்த அவள் கை, வாளை அவளை நோக்கி இழுத்துக் கொண்டிருந்தது. ஆனால், அவள் கையில் காயம் ஏற்படவோ, ரத்தம் வடியவோ இல்லை.

சோமதத்தன் மீண்டும் வாளை வலுவுடன் பின்னுக்கு உருவினார். "இதென்ன விளையாட்டு?" என்று கோபத்துடன் கேட்கவும் செய்தார்.

இந்தத் தடவை வாளின் கைப்பிடி மட்டும் சோமதத்தனின் இழுப்புக்கு ஈடுகொடுக்க மாட்டாமல் அவர் கைக்கு வந்தது. வாள்பகுதி அப்போதும் அவள் கையிலேயே இருந்தது.

வாளை உயர்த்தியவள், சோமதத்தனின் வயிற்றுக்கு நேராக எறிந்தாள். 'உஸ்' என்ற சத்தத்துடன் பாய்ந்த வாள் அவர் வயிற்றைத் துளைத்துக்கொண்டு முதுகுப்பக்கமாக வெளி வந்தது.



எதிர்பாராத இந்தத் தாக்குதலால் நிலை குலைந்த சோமதத்தன், அப்படியே மட்டமல்லாக்க விழுந்தார். வாளின் கூர்மையான பகுதி மண்ணில் இறங்கி அவரைத் தரையோடு தரையாகப் படுக்க வைத்தது.

தனலட்சுமியை நெருங்கிய மந்தாகினி, அவள் கையைப் பிடித்துக்கொண்டு அங்கிருந்து வெளியேறினாள்.

சேகரக் கைமள் வியப்புடன் இதையெல்லாம் பார்த்துச் சிலைபோல் நின்றிருந்தார்.

தனலட்சுமியுடன் வெளியேறிய மந்தாகினி, அங்கிருந்து மிதந்தவாறே பறக்கத் தொடங்கினாள். ஆனால், தனலட்சுமி அதையெல்லாம் உணரக்கூடிய நிலையில் அப்போது இல்லை. சுயநினைவற்றிருந்தாள்.

தனலட்சுமியை அவளது வீட்டுத் திண்ணையில் படுக்க வைத்த பிறகு மந்தாகினி பனங்காட்டு இல்லத்துக்கு விரைந்தாள்.

கனவில் நடப்பதைப் போல் அதுவரை எல்லாவற்றையும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த சேகரக் கைமள், சட்டென்று சுயநினைவு திரும்பியவராக சோமதத்தனின் வயிற்றில் பாய்ந்திருந்த வாளை உருவி எடுக்க அவரை நெருங்கினார்.

வாளின் அருகே கையைக் கொண்டு சென்றவர் விசுக்கென்று கையைப் பின்னுக்கு இழுத்துக்கொண்டார். காரணம், வாள் உலையில் காய்ச்சிய இரும்பு போல் கனன்று கொண்டிருந்தது. அதேநேரம் சோமதத்தனின் வயிற்றுப் பகுதியிலிருந்த மாமிசம் கருகும் வாடையும் உயர்ந்தது.

சேகரக் கைமள் என்ன செய்வதென்று தெரியாமல் தவித்தார்.

"இப்படி வாருங்கள்...." வலியால் துடித்துக் கொண்டிருந்த சோமதத்தன் கைமளை அழைத்தார்.

கைமள், சோமதத்தனை நெருங்கிக் குனிந்து நின்றார்.

"அவளைச் சும்மா விடக்கூடாது. ரொம்பவும் சக்தி வாய்ந்தவள் தான். ஆனால் இதற்குமேல் என்னால் எதுவும் செய்ய முடியாது" மிகவும் சோர்வடைந்தவராகப் பேசினார் சோமதத்தன்.

"நாங்க என்ன பண்ணணும்னு சொல்லுங்க" கைமள் கேட்டார்.

"என் பிதாமகன்களின் குரு ஒருவர் கோட்டைக்குள் சமாதியடைந்திருக்கிறார். அங்கு போய் நரபலி நடத்தி, ரத்தத்தை அவர் உதடுகளில் விழும்படிச் செய்தால் அவர் விழித்துக் கொள்வார்" சோமதத்தன் வேதனையால் துடித்தபடி பேசினார்.

"குருவின் பெயர்?"

"அஷ்டமுகப் பெருமாள். ஆனைமருதையையே வெறும் விரலால் கட்டிப் போட்டவர். அவர் சமாதியடைந்து இருநூற்றைம்பது வருஷங்கள் ஆகிவிட்டது. நூற்று இருபத்தைந்தாவது வயதுக் கணக்கின்படி இன்னும் ஐந்து வருஷங்கள் அவர் செயல்படும் சாத்தியம் உள்ளது" சோமதத்தன் தெரிவித்தார்.

"நீங்கள் குறிப்பிடும் கோட்டை எங்கு உள்ளது?"

"இங்கிருந்து நேராகக் கிழக்குத் திசையில் பயணம் செய்தால் மலையடிவாரத்தில் பளிச்சென்று தெரியும். இந்த நாட்டை ஒரு காலத்தில் ஆட்சி செய்த மன்னர்களின் கோட்டை மணியனார் கோட்டை என்றால் எல்லாருக்கும் தெரியும்."

"மணியனார் கோட்டையா? அது எனக்குத் தெரிந்ததுதான். கோட்டைக்குள் சமாதி எந்த இடத்தில் இருக்கிறது?"

"பாதாளச் சிறைக்குள்... அதன் வரலாறு உங்களுக்குத் தெரியுமா?"

"கோட்டை மட்டும்தான் தெரியும்; வரலாறெல்லாம் தெரியாது"

"அப்படியானால் கேட்டுக் கொள்ளுங்கள். இந்த வாள் என் உடம்பைச் சுட்டுப் பொசுக்கிக் கொண்டிருக்கிறது. இருந்தாலும் வாயால் பேச முடிவதுவரை பேசுகிறேன்" சோமதத்தன் தன் பேச்சைத் தொடர்ந்தார்.

கைமள் ஆவல் நிறைந்தவராக சோமதத்தன் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தார்.

"மணியனார் கோட்டையின் ராணியாக இருந்த மணியம்மாள் பேரழகியாக விளங்கியவள். இருபத்தோராவது வயதில் நாட்டு



நிர்வாகத்தை ஏற்றுக்கொண்ட ராணி, எல்லாக் கலைகளிலும் சிறந்து விளங்கினாள். காமதேவனையே ஆசைப்பட வைத்த பேரழகு அவளுடையது.

"அப்போது நாட்டில் ஏற்பட்ட பச்சிளங் குழந்தைகளின் மரணத்துக்குப் பரிகாரம் செய்வதற்காக பாண்டிய நாட்டிலிருந்து அஷ்டமுகப் பெருமாள் என்ற மாந்திரீகரை வரவழைத்தனர்.

"பெருமாள் மந்திர வித்தைகளில் எவ்வளவுக்கு எவ்வளவு தேர்ந்தவராக இருந்தாரோ, அதே மாதிரி மோசமான குணங்களுடன் பெண்கள் விஷயத்தில் மிகவும் பலவீனமானவராகவும் இருந்தார்.

"மகத்தான தனது மந்திர சக்தியால் சிசுக்களின் மரணத்தை மாற்றிக் காட்டுகிறேன் என்றவர், அதற்குப் பிரதியுபகாரமாக ஒரே ஒரு நாள் இரவு முழுவதும் ராணி தன்னுடன் தங்க வேண்டும் என்று கூறினார்.

"நாட்டு நலன் கருதி ராணி அதற்கு உடன்பட்டாள்.

"நாட்டு மக்களுக்குப் பிறக்கும் தலைச்சன் குழந்தைகள்தான் இறந்து கொண்டிருந்தன. உண்மையைச் சொன்னால் இந்தச் சம்பவத்தின் காரணகர்த்தாவே அஷ்டமுகப் பெருமாள்தான்.

"அந்த நாட்டு மக்களின் குழந்தைகளைக் கொன்று கொண்டிருந்தவை, பெருமாள் அனுப்பி வைத்த யோகினிகள்தான். ராணி, தன் கோரிக்கைக்கு இணங்கியதும் பெருமாள், யோகினிகளைத் திரும்ப அழைத்துக் கொண்டார்.

"சொன்ன சொல்லைக் காப்பாற்றுவதைத் தவிர ராணிக்கு வேறு வழியில்லை. பெருமாள், ராணியின் பூமேனியை அசுத்தமாக்கி விட்டார். அதனால் ராணி தற்கொலை செய்து கொண்டாள்.

"திருமணமாகாமலே கற்பிழந்த ராணியின் ஆவி பெருமாளைப் பழிவாங்க முற்பட்டதால், அவர் தானாகவே தன் உயிரைத் துறந்து சமாதியடைந்தார்.

"நடந்த செய்திகளைக் கேள்விப்பட்ட ராணியின் முறைப்பையன், பெருமாளின் உடம்பை பாதாளச் சிறைக்குள் போட்டுக் கல்லறை

எழுப்பினார். போதாக்குறைக்கு சங்கிலி போட்டுப் பெருமாளின் உடம்பைப் பலவாறாகப் பிணைக்கவும் செய்தார்.

“பெருமாளின் உடம்பில் பிணைக்கப்பட்டுள்ள சங்கிலிகளை அகற்றி, கல்லறைக்குள் இருக்கும் பெருமாளின் மண்டையோட்டின் மீது ரத்தத்தைச் சொரிந்தால் அவர் மறுபடி விழித்துக கொள்வார். அதன்பிறகு மற்றவற்றை அவர் பார்த்துக் கொள்வார்.”

இதைச் சொல்லி முடித்தவுடன் சோமதத்தனின் உடம்பு அசை வற்றுப் போனது. சேகரக் கைமள் குகையிலிருந்து வெளியேறினார்.

வெளியே கடுமையான இருட்டு.

ஆகாயத்தில் நட்சத்திரங்கள் கண்சிமிட்டிக் கொண்டிருந்தன.

கைமள் இருட்டைப் பொருட்படுத்தாமல் நடக்கத் தொடங்கினார். இரவின் மூன்றாம் யாமம் முடிவடையும் நேரத்தில் தனது வீட்டை அடைந்தார்.

‘புவனேஸ்வரன் நாயரிடம் என்ன பதில் சொல்வது?’ என்று யோசித்துக் குழப்பத்தில் ஆழ்ந்தார் கைமள். ‘நாம் செய்தியைச் சொன் னதும் பதிலுக்கு அவர் எப்படிப் பொங்கிக் குமுறப் போகிறாரோ?

ஒருவேளை தான் சொல்வதையே அவர் நம்பாமல் போனால். என்ன இருந்தாலும் நடந்ததைச் சொல்ல வேண்டியதுதான். வேறு வழியில்லை’ என்றெல்லாம் பலவாறாக யோசித்த கைமள் கண்களை மூடிப் படுத்தார்.

பொழுது விடிந்ததும் பெரிய வீட்டுக்கு வந்தார். அங்கு ஊர்ப் பெரியவர்கள் ஒட்டுமொத்தமாகக் குழுமியிருந்தனர்.

விஷயம் என்னவென்று புவனேஸ்வரன் நாயர், கைமளிடம் சொன்னார்.

“உட்காருங்கள் கைமள். போன காரியம் நல்லபடியாக நடந் திருக்கும் என்று நினைக்கிறேன். நம்ம ஊர்க்காரப் பெரியவங்கள்லாம் இங்கே குழுமியிருக்கிறது கோயில் திருவிழா நடத்துறதைப் பத்தி முடிவு பண்றதுக்காகத்தான்.”



கைமளுக்கு அது ஒரு புதிய செய்தியாக இருந்தது.

எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட கோயில் அது. ஒரு காலத்தில் பனங்காட்டு இல்லத்துக்குச் சொந்தமானதாக இருந்த பத்ரகாளியின் கோயில்.

பகவதி அந்தக் கோயிலுக்கு வந்ததற்குப் பின்னணியில் எத்தனையோ ஐதீகக் கதைகள் இருந்தன. பனங்காட்டு இல்லத்தைச் சேர்ந்த சிவன் கோயிலுக்கு அருகில்தான் பத்ரகாளி கோயிலும் இருந்தது.

எத்தனையோ வருடங்களுக்கு முன் அங்கு பூஜைகளும், திருவிழாக்களும் இடைவெளி அறுபடாமல் நடந்து கொண்டு தானிருந்தது. ஆனால், இப்போதைய தலைமுறைக்கு அப்படிப்பட்ட தகவல்கள் எதுவும் தெரியாமல் இருந்தது.

கோயில் சீர்படுத்தப்படாமல் புதர் மண்டி, காடு பிடித்துக் கிடந்தது.

தாருகனைக் கொன்றுவிட்டு ரத்தம் சொரியும் அவன் தலையுடன் உள்ள பத்ரகாளி உருவத்தைத்தான் அங்கு பிரதிஷ்டை செய்திருந்தனர்.

அந்தக் கோயிலுக்குச் சுற்றிலும் என்னென்னவோ சக்திகள் உலாவிக் கொண்டிருப்பது நாயருக்குத் தெரியும். அதுவும் ஓலைச்சுவடி ஒன்றின் மூலம்தான் அவருக்குத் தெரிந்தது.

‘அந்தக் கோயிலில் மறுபடி திருவிழா நடத்தி பகவதியைத் திருப்திப்படுத்திவிட்டால், தற்போது தன் குடும்பத்தில் நடந்து கொண்டிருக்கும் குழப்பங்கள் எல்லாம் தீர்ந்து விடும்’ என்ற நம்பிக்கையும் அதன் மூலம் பிறந்தது.

ஒருபுறம் மாந்திரீக ரீதியிலான முயற்சிகளும், மறுபுறம் பகவதியைத் திருப்திப்படுத்தும் முயற்சியும் தொடரட்டும் என்பது அவர் நோக்கம்.

அங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த பகவதியைப் பற்றி அவருக்கு வேறொரு ரகசியமும் தெரிந்தது. அதாவது, தேவியை முறைப்படி பூஜை செய்து திருப்தி செய்துவிட்டால், அந்த பக்தனுக்காக பகவதி எந்தவிதமான உதவியும் செய்வாள் என்பது புரிந்தது. எனவே,

பனங்காட்டு இல்லத்துககு வந்திருக்கும் அவளைத் தொலைத்துக்கட்ட இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்துவதென்று தீர்மானித்தார்.

“நான் ஒரு முக்கியமான விஷயத்தைச் சொல்ல வேண்டியிருக்கிறது” கைமள் ஒருவகையாக மென்று விழுங்கிப் பேசினார்.

அப்போதுதான் அவர் பேச்சில் ஏதோ விபரீதம் இருப்பதை நாயர் உணர்ந்தார். உடனே உட்கார்ந்த இடத்திலிருந்து எழுந்தார்.

“என்ன விஷயம்?” நாயர் மெதுவான குரலில் கேட்டார்.

“எல்லாமே சிக்கலாகிவிட்டது. தனலட்சுமி தப்பித்து விட்டாள். சோமதத்தன் சுவாமியை மாகினி கொன்றுவிட்டது” கைமள் மூச்சு விடாமல் பேசினார்.

“பிறகு...” புவனேஸ்வரன் நாயரின் உடம்பு குப்பென்று வியர்த்தது.

“சாவதற்கு முன்னால் சுவாமி ஓர் உபாயம் சொல்லிக் கொடுத்திருக்கிறார்.”

“என்ன உபாயம்?”

“அது கொஞ்சம் விரிவாகப் பேசவேண்டிய விஷயம். இதெல்லாம் முடிஞ்ச பிறகு பேசலாமே.”

நாயர் ஒப்புக்கொண்டார்.

பிறகு திருவிழாவை எப்படி நடத்துவது என்பது பற்றித் தீவிரமாக விவாதித்தனர்.

“திருவிழா ரொம்பவும் கம்பீரமா இருக்கணும். பக்கத்து ஊர்க்காரங்கல்லாம் மூக்கில் விரல் வைச்சு அதிசயப்படணும்” வீரராகவன் பிள்ளை கூறினார்.

“ஆமாம், அதுதான் சரி. பத்து நாள் திருவிழா என்றால் பத்தாம் நாளன்று நீராட்டுவிழா நடக்க வேண்டும்” நாயர் கூறினார்.

“பள்ளிவேட்டை நாளன்று அருமையான ஒரு சங்கீதக் கச்சேரிக்கு ஏற்பாடு செய்யலாம். அதற்கு பாண்டிய நாட்டிலிருந்து நல்ல ஒரு வித்வானை நான் ஏற்பாடு செய்கிறேன்” பஞ்சாயத்து உறுப்பினரான ராமன் ஆசாரி முன்வந்தார்.



“அப்படியே செஞ்சுட்டாப் போகுது.”

திருவிழாவுக்குத் தேவையான மொத்தச் செலவில் மூன்றில் இரண்டு பங்கை தான் ஏற்றுக்கொள்வதாக நாயர் தெரிவித்தார்.

“ஒரு முக்கியமான விஷயம்... திருவிழாவில் பன்னிரண்டு யானைகள் கலந்து கொள்ள வேண்டும்.”

“அதென்ன, குறிப்பாகப் பன்னிரண்டு யானைகள்?” வீரராகவன் பிள்ளை கேட்டார்.

“அதில்தான் திருவிழாவின் மகிமையே இருக்கிறது.”

“அது செலவை அதிகப்படுத்தும் விஷயமாயிற்றே” மற்றொருவர் குரல் எழுப்பினார்.

“யானைகளுக்காக ஆகும் அதிகப்படியான செலவையும் நான் ஏற்றுக் கொள்கிறேன்” நாயர் கூறினார்.

இப்படியாக அன்றைய சபை கலைந்தது.

“யானைகளின் விஷயத்தை நான் ஏன் ஏற்றுக்கொண்டேன் என்பது உங்களுக்குப் புரிந்ததா கைமள்?” புவனேஸ்வரன் நாயர் தனக்கு முன்பாக நின்று கொண்டிருந்த கைமளிடம் கேட்டார்.

“புரியவில்லையே” கைமள் கையை மலர்த்திக் காட்டினார்.

“அங்குதான் இருக்கிறது சூட்சுமம்” புவனேஸ்வரன் நாயர் பூடகமாகச் சிரித்தபடி சொன்னபோதிலும் கைமளுக்கு அது விளங்கத்தான் இல்லை!

## 29

**யா**னைகளைப் பற்றி புவனேஸ்வரன் நாயர் பூடகமாகக் குறிப்பிட்ட போதும் கைமளுக்குப் புரியத்தான் இல்லை.

இருந்தாலும் நாயர் தனக்கு ஆதாயமில்லாத ஒரு விஷயத்தில் இவ்வளவு ஆர்வம் காட்டமாட்டார் என்பது கைமளுக்கு நன்கு தெரிந்ததால், மேற்கொண்டு எதையும் கேட்கவில்லை அவர். ஒரு

விஷயம் அவருக்குத் தெளிவாகப் புரிந்தது. தனலட்சுமி தப்பித்து விட்டாள் என்பதைத் தான் எடுத்துச் சொன்ன பிறகும் நாயர் அதில் அவ்வளவாகக் கவனம் செலுத்தாததால், நாயர் வேறு ஏதோ ஒரு பெரிய திட்டத்தை மனதுள் உருவாக்கியிருக்கிறார் என்று தீர்மானித்தார்.

எல்லாரும் போய்விட்டார்கள் என்பதை உறுதி செய்து கொண்ட பிறகு கைமளைத் தன் அருகே அழைத்த புவனேஸ்வரன் நாயர் கேட்டார்: “நீங்கள் எதையோ ஆரம்பித்தீர்கள். ஏதோ கொஞ்சமெல்லாம் புரிந்தது. சோமதத்தன் செத்துப் போயிட்டார் இல்லையா? அப்படியானால் நாம வேற ஒரு ஆளைத் தேடிக் கண்டுபிடிக்கணும். வேற என்ன செய்யுறது?”

“விஷயம் அவ்வளவு சுலபம்னு எனக்குத் தோணலை. கொஞ்சம் அசாதாரணமான விஷயம்தான். இல்லேன்னா அவரைக் கொல்ல முடியுமா? அந்தக் காட்சியை நான் கண்ணாலே பார்த்தேன். என் சப்த நாடிகளும் அப்படியே தளர்ந்து போயிடுச்சு...” கைமள் அதை மீண்டும் கண்முன்னால் பார்த்துக் கொண்டிருப்பது போல் பேசினார்.

கைமளின் பேச்சிலிருந்த உண்மை அப்போதுதான் புவனேஸ்வரன் நாயருக்கு உறைத்தது. ஒருகணம் அப்படியே அசைவற்று நின்றார்.

அவர் இறந்துட்டாலும், நமக்கு ஒரு நல்லவழி சொல்லிக் கொடுத்திருக்கிறார். நாம அந்த அளவுக்கெல்லாம் பயப்பட வேண்டியதில்லை” கைமள் ஆறுதலளிக்கவும் தவறவில்லை.

“அப்படியானால் சீக்கிரமா யாரையாவது கொண்டுபோய்க் கொன்று, சமாதியில் இருக்கிறவரை எழுப்புங்க - உங்களுக்குத் துணையா சதாசிவனைக் கூட்டிட்டு போய்” புவனேஸ்வரன் நாயர் தன் ஆறாம் மகனை சிபாரிசு செய்தார்.

“அப்படியே செஞ்சுடலாம். நாங்க இன்னிக்கே புறப்படுறோம்” கைமள் கூறினார்.

சேகரக் கைமளும், சதாசிவனும் பலியிடுவதற்காக யாரை அழைத்துக்கொண்டு, போவது என்பது பற்றி யோசித்தார்கள்.



கடைசியில் படகோட்டும் வேலை செய்யும் கண்ணன் என்ற இளைஞனைக் கொண்டு போவதென்று முடிவானது.

கைமள், கண்ணனை நெருங்கி, சதாசிவன் அழைப்பதாகக் கூறினார். உடனே அவருடன் புறப்பட்டான் கண்ணன்.

வெகு தூரம் படகில் பயணம் செய்ய வேண்டி இருந்ததால், கண்ணனுக்கு அந்தப் பயணத்தில் எதுவும் விபரீதமாகப் படவில்லை. கைமள் பெரிய கைத்தடியுடன், வாள் ஒன்றையும் தன்னுடன் எடுத்து வந்திருந்தார்.

மூவரும் படகிலேறித் தங்களது பயணத்தைத் தொடர்ந்தனர். ஆகாயத்தில் நிலவு நல்ல வெளிச்சம் பொழிந்து கொண்டிருந்ததால் படகுப் பயணம் கடினமாக இருக்கவில்லை.

ஏறத்தாழ ஐந்து மைல் தொலைவு போனபிறகு கைமள் படகை வலதுபுறமாகக் கரையில் ஒதுக்கச் சொன்னார்.

கரையை ஒட்டி வளர்ந்திருந்த மரத்தில் படகைக் கட்டிப்போட்ட கண்ணன், அவர்களுடன் நடந்தான்.

புதர் மண்டிக் கிடந்த பாதை வழியாகச் சற்றுத் தொலைவு சென்ற பிறகு ஒற்றையடிப்பாதை முடிவடைந்தது. மணியனார் கோட்டை இருளடைந்து காணப்பட்டது.

பரஸ்பரம் ஒருவருக்கொருவர் எதையும் பேசிக் கொள்ளாமல் பயணம் செய்தனர். அதற்கும் காரணமிருந்தது. பேச ஆரம்பித்தால் தங்களையும் மீறி தங்கள் வாய் மூலமாக ஏதாவது ரகசியம் வெளியாகிவிடலாம் என்று சதாசிவனும் கைமளும் நினைத்தனர்.

கோட்டை வாசலை அடைந்தனர்.

மூடியிருந்த கதவையொட்டி காட்டுச்செடிகள் கண்டபடி வளர்ந்திருந்தன.

சதாசிவன் டார்ச் லைட்டை எரியவிட்டான்.

கையிலிருந்த பெரிய வாளால் கைமள் செடிகளை வெட்டினார்.

கூர்மையான வாளாக இருந்ததால் விரைவிலேயே செடிகள் வெட்டுப்பட்டு விழுந்தன.

உட்புறமும் அதேபோல் செடிகள் ஏராளமாக வளர்ந்திருந்தன. கைமள் கொஞ்சமும் சளைக்காமல் அவற்றையெல்லாம் வெட்டித் தள்ளினார்.

"இதோ, இதுதான் வழி என்று நினைக்கிறேன்" சதுரமான ஒரு குழியை நெருங்கிய கைமள் கூறினார். எட்டிப் பார்த்தபோது கீழ்ப்புறமாகக் கருங்கல் படிகள் தென்பட்டன.

"உள்ளே ஏதாவது பூச்சி பட்டைங்க இருக்கப் போகுது" சதாசிவன் கூறினான்.

"அதுக்கெல்லாம் என்கிட்ட மாற்று வழி இருக்கு" கைமள் தன் கையிலிருந்த பிரம்பைச் சுட்டிக்காட்டிப் பேசினார். "இது நம்ம கையில் இருக்கிற வரையில் எப்படிப்பட்ட உயிரும் நம்ம பக்கத்திலேயே நெருங்காது."

பாம்புகளைத் தொட்டால், தொட்டவுடனேயே இறந்து போகு மளவுக்கு சர்ப்பகந்தி மருந்தினால் பக்குவம் செய்யப் பட்டிருந்தது அந்தப் பிரம்பு. அவர்கள் நடக்கும்போது ஏதேதோ உயிரினங்கள் ஓடி மறையும் சரசரப்பு சத்தம் கேட்டது.

கடைசியாகக் கீழ்த்தளத்துக்கு வந்தனர்.

இரண்டு புறமும் வரிசையாக அறைகள் இருந்த ஒரு வராந்தாப் பகுதியை அடைந்தனர். வெகு காலமாகி விட்டதால் அங்கிருந்த இரும்புக் கம்பிகள் துருப்பிடத்துக் கிடந்தன. தாங்கள் இருக்கும் இடம் பாதாளச் சிறைப்பகுதிதான் என்பது அவர்களுக்கு விளங்கியது.

"இங்கே பாருங்க" சதாசிவன் டார்ச் லைட்டை ஒருபுறமாக அடித்தான்.

அது ஒரு சமாதி!

அகலமான கருங்கல் பலகை ஒன்றால் சமாதியின் மேற்புறத்தை மூடியிருந்தனர். அதைச் சங்கிலிகளால் பிணைத்திருந்தனர். சங்கிலி பித்தளையால் செய்யப்பட்டிருந்தது. துருப்பிடித்துப் போகாமல் இருப்பதற்காகத்தான் பித்தளையால் செய்யப்பட்டுள்ளது என்று கைமளுக்குப் புரிந்தது.



"வரவேண்டிய இடத்துக்குச் சரியா வந்து சேர்ந்திருக்கிறோம்" கைமள் கண்ணனை ஓரக்கண்ணால் பார்த்தபடி கூறினார்.

"இனி நான் என்ன செய்யணும்?" சதாசிவன் கேட்டான்.

"முதல்ல சங்கிலியை அறுத்துட்டு, சமாதியை மூடியிருக்கிற கருங்கல் மூடியை நகர்த்தணும்..." கைமள் கூறினார்.

"அதுக்கு நாம எதையும் கொண்டு வரலையே?" சதாசிவன் விழித்தபடி கேட்டான்.

கைமள் தன் கையிலிருந்த வாளால் சங்கிலியின் இணைப்புகளில் வெட்டினார். குறுக்கு நெடுக்காகப் போட்டிருந்த ஆறு சங்கிலிகளின் இணைப்புகளும் ஒவ்வொன்றாகக் கழன்று கொண்டன.

"இனி, கருங்கல் பலகையை நகர்த்த வேண்டியதுதான்" கைமள் கூறினார்.

மூவருமாகச் சேர்ந்து கருங்கல் பலகையை அலாக்காகத் தூக்கி ஒருபுறம் வைத்தனர்.

சதாசிவன் சமாதிக்குள் டார்ச் லைட் வெளிச்சத்தைப் பாய்ச்சினான்.

உள்ளே இற்றுப்போகத் தொடங்கிய எலும்புக்கூடு ஒன்று தென்பட்டது.

அதன் வாய் பிளக்கப்பட்டிருந்தது.

கண்கள் இருக்க வேண்டிய இடத்தில் குழிந்து, இருள் தென்பட்டது.

கண்ணன் பயந்தவனாகச் சற்றுப் பின்வாங்கினான்.

"கண்ணா, நாம் இந்த எலும்புக்கூட்டை இங்கிருந்து எடுத்துப் போக வேண்டும். ஒரு முக்கியமான மாந்திரீக விஷயத்துக்காக!" கைமள் கூறினார்.

சேகரக் கைமள் ஒரு மாந்திரீகர் என்று அவனுக்குத் தெரியும். எனவே, அவர் சொன்னதில் உட்பொருள் எதுவும் இருப்பதாக கண்ணன் சந்தேகப்படவில்லை.

"கண்ணன் முதலில் அந்த எலும்புக்கூட்டின் மண்டையோட்டுக்கு அருகில் உள்ள பொருள்களை எடுக்க வேண்டும்" கைமள் கூறினார்.

கண்ணன் குனிந்தான்.

அந்தத் தருணத்துக்காகக் காத்திருந்த கைமளின் வாள் பட்டென்று அவன் கழுத்தைத் துண்டித்துக்கொண்டு கீழிறங்கியது.

அதேநேரம் ஒரு பெரிய பாறை ஒன்று உருண்டு விழும் சத்தம் வெளிப்புறத்திலிருந்து கேட்டது.

கண்ணனின் அறுபட்ட கழுத்திலிருந்து வடிந்த ரத்தம் அஷ்டமுகப் பெருமாளின் உச்சந்தலை வழியாக வாய்ப்பகுதிக்குள் சொட்டியது.

சதாசிவன் டார்ச் லைட்டை எரியவிட்டு அந்த எலும்புக்கூட்டைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

கீழ்ப்புறமாக விழுந்த ரத்தம் தரையில் படாமல் காற்றில் கரைவது போல் மறையத் தொடங்கியது.

ரத்தத்தை உறைய வைக்கும் அந்தக் காட்சியை கைமளும் சதாசிவனும் நடுங்கியபடி பார்த்துக் கொண்டிருந்தனர்.

எத்தனையோ பிணங்களைப் பார்த்திருப்பவர் கைமள்.

ஒருதடவை, கிழக்குத் திசையிலிருக்கும் பாண்டவன் மலையின் உச்சிப்பகுதி என்ன காரணத்தாலோ வெடித்துச் சிதறியபோது அதையொட்டிய பகுதியிலிருந்த நாலைந்து குடும்பங்கள் மண்ணோடு மண்ணாக மறைந்தன. தேவியின் கோபம்தான் இதற்குக் காரணம் என்று யாரோ சொன்னார்கள்.

அதில் இரண்டு பேரின் உடம்பு ஒருசில வாரங்களுக்குப் பிறகு கிடைத்தது.

எலும்புகள் தொங்கிக்கிடந்த அவற்றின் உடம்பில் மாமிசப் பகுதிகள் கருகியிருந்தன. கண்கள் இருந்த இடத்திலிருந்து உணர்வு இழைகளைக் கொண்ட புழுக்கள் வெளிவந்தன. வேடிக்கை பார்க்க வந்தவர்கள் பயத்துடன் அங்கிருந்து ஓடிப்போனார்கள். கைமளும் அவர் சீடனும்தான் அந்த ஆவிகளை எட்டி மரத்தில் அறைந்தனர்.



ஆனால், இங்கு கண்ட காட்சி அப்படிப்பட்டதல்ல. கண்ணனின் உடம்பிலிருந்து கொட்டிய கொழகொழத்த ரத்தம், பாசம் பிடித்திருந்த அந்த எலும்புக்கூட்டின் மண்டையோட்டில் விழுந்து, பற்கள் கழன்று போயிருந்த வாய்ப்பகுதிக்குள் வழிந்து காணாமலாகிக் கொண்டிருந்தது.

கூடவே அந்த வாய்க்குள் ஏதோ ஒன்று அசைவதாகவும் சதாசிவனுக்குத் தோன்றியது.

"கைமளே... அங்கே கவனிச்சீங்களா?" சதாசிவன் கைமளைக் கையால் தொட்டுப் பிடித்தபடி கேட்டான்.

"ஸ்... ஸ்..." கைமள், தன் உதடுகளின் மீது விரல் பதித்து அவனை எச்சரித்தார்.

கைமள் மற்றொரு பயங்கரமான காட்சியைக் கண்டு கொண்டிருந்தார்.

அந்த எலும்புக்கூட்டின் வாய்க்குள் சிவப்பு நிற நாக்கு ஒன்று அசைந்து கொண்டிருந்தது. அந்த நாக்கு விழுந்து கொண்டிருக்கும் ஒவ்வொரு துளிரத்தத்தையும் சப்புக் கெட்டி ரசித்துச் சுவைப்பது விளங்கியது.

உயிருள்ள ஒரு மனிதன் தன் வாய்க்குள் விழும் பானத்தைச் சுவைத்துக் குடிப்பது போலிருந்தது அந்தக் காட்சி.

ஆர்வத்துடனும், மயிர்க்கூச்செறிந்தபடியும் அதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவர்கள் நம்ப முடியாத மற்றொரு காட்சியையும் கண்டனர்.

அந்த எலும்புக்கூட்டின் மீது பாசம் போன்ற ஏதோ ஒன்று படிந்து மூடியது. கண்ணிமைக்கும் நேரத்தில் அது சட்டென்று உடல் முழுவதையும் மூடியது.

"ஆ....!" ஆச்சரியம் தாங்க முடியாத சதாசிவன் வாய்விட்டுச் சொல்லவும் செய்தான். அந்தப் பாசத்தின் ஊடாக அவ்வப்போது சிவப்பு நிற நூல் போன்ற ஒன்றும் தென்பட்டது. அது அந்த உடம்புக்கு உருவம் கொடுப்பதுபோல் தோன்றியது.

இப்போது உடல் முழுவதும் போர்வையால் இறுகப் போர்த்தியது போல் தோன்றியது. கறுத்து இருண்ட கண்குழிக்குள் ஏதோ ஒருவிதப் பளபளப்பு தென்பட்டது. உள்ளுக்குள் அந்தப் பளபளப்பு சுற்றிச் சுழல்வது போலவும் தெரிந்தது. ஒருசில விநாடிகளுக்குள் அந்தப் பளபளப்பு மெதுவாக மேற்புறம் உயர்ந்து வந்தது.

சிவப்பு நிற விழிகளுடன் கூடிய இரண்டு கண்கள்.

அந்த விழிகளின் பார்வை தங்கள் மீது பதியாமல் இருப்பதற்காக இருவரும் சற்று ஒதுங்கி நின்றனர்.

சிவந்த விழிகள் வெளியே வந்தபிறகு மீண்டும் உட்புறமாகச் சென்று மறைந்தன.

சற்று நேரத்துக்குள் அந்த எலும்புக்கூட்டின் கன்னப் பகுதிகளிலும் பாசம் படிந்து உட்புறமாக ஒட்டிக்கொண்டன.

சிவப்பு நிற நாக்கு ஒருதடவை வெளியே வந்து உதடுகளை நக்கித் துடைப்பதுபோல் செய்து மறைந்த பிறகு, அந்த இடத்தில் சிவப்பு நிற உதடுகள் தென்பட்டன. உதடுகளின் இடைவெளிகளில் கூர்மையான பற்கள்.

அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே அந்த எலும்புக் கூட்டுக்குள் இதயம், நுரையீரல், குடல் பகுதிகள் என ஒவ்வொன்றும் யாரோ கொண்டுவந்து பொருத்துவதுபோல் படிந்து கொண்டிருந்தன.

சதாசிவன் தாங்க முடியாத பயத்துடன் இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்தான்.

“பயப்படாதே சதாசிவா!” கைமள் அவனைத் தேற்ற முயன்றார்.

தன்னால் தொடர்ந்து அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாததால் தன்னிடமிருந்த டார்ச் லைட்டை கைமளிடம் கொடுத்துவிட்டு அங்கிருந்து நகர்ந்தான் அவன்.

சற்று நேரத்துக்குள் யாரோ ஆழ்ந்து மூச்சுவிடும் சத்தம் உயர்ந்தது.

சத்தம் கேட்டதால் சதாசிவன் தலையைத் திருப்பிப் பார்த்தான். அதோ, டார்ச் லைட்டின் வட்ட வடிவ வெளிச்சத்துக்கு நடுவே அஷ்டமுகப் பெருமாள்.



ஆறரை அடி உயரம்!

மெலிந்த உடல்...

தீட்சண்ணியம் நிறைந்த குறுகிய கண்கள்.

மழைக்காலப் பறவையின் இறக்கைகள் போன்ற புருவங்கள்.

நீண்டு மூக்கு...

சன்னமான உதடுகள்.

கூர்மையான கீழ்த்தாடை...

ஆங்காங்கே உலர்ந்து வறண்டது போல் காட்சியளிக்கும் தலைமுடி.

நெஞ்சுப் பகுதியில் எட்டுத் தலை நாக வடிவில் கருமையான மச்சம் ஒன்று...

அவர் கையில் ஒரு சூலம்!

வழக்கமான வேல் போன்ற ஒரு முனையுடன் மற்றொரு முனையில் அரிவாள் ஒன்றையும் இணைத்த மாதிரி இருந்தது.

மொத்தத்தில் அருவருப்பையும் பயத்தையும் ஏற்படுததும் உருவத்துடன் இருந்தார் அஷ்டமுகப் பெருமாள்.

“பரவாயில்லை. நல்ல வேலை செய்தீர்கள்!” அஷ்டமுகப் பெருமாள் வாயைத் திறந்து பாராட்டவும் செய்தார்.

“தங்கள் சித்தம் ஸ்வாமி” கைமள் பணிவுடன் அவருக்குப் பதிலளித்தார்.

“அவள் வந்திருந்தாள்...” பெருமாள் முன்புறம் நகர்ந்தபடி பேசினார்.

“யார் ஸ்வாமி?”

“அவள்தான்... அந்த மோகினி, ஆனால், அதற்குள் எனக்கு உயிர்த்துடிப்பு வந்துவிட்டது.”

கண்ணனின் கழுத்துக்கு மேல் கத்தியை ஓங்கும்போது மந்தாகினி பாதாளச் சிறையின் வாசலுக்கு வந்துவிட்டிருந்தாள்.

ஆனால், அவளால் கீழ்ப்புறமாக இறங்க முடியவில்லை. எனவே, ஒரு பெரிய பாறாங்கல்லை உருட்டி வெளிப்புற வழியை அடைத்து விட்டாள்.

“சரி, வாருங்கள் போகலாம்” பெருமாள் நடக்க முற்பட்டார். பிறகு எதையோ நினைத்துக் கொண்டவரைப் போல் திரும்பி நின்று தன் கையிலுள்ள சூலத்தால் கண்ணனின் உடம்பைத் தொட்டார்.

உடனேயே அதிலிருந்து புகைச்சுருள்கள் உயர்ந்தன. அதன் பிறகு அவர் பாட்டுக்கு நடக்கத் தொடங்கினார்.

இருட்டு அவருக்கு ஒரு பொருட்டாகத் தெரியவில்லை.

சுரங்க வாசலுக்கு வந்தவர் நின்றார்.

“ஓகோ... வாசலை அடைத்துவிட்டுப் போய்விட்டாளா... ஹா... ஹ்....ஹா...” அவர் சிரிப்பு வில்லத்தனமாக இருந்தது.

தன் கையிலிருக்கும் சூலத்தால் வாசலை அடைத்திருந்த பாறையைத் தொட்டார்.

காகித உருண்டையொன்று உருள்வதுபோல் அந்தக் கருங்கல் விலகியது.

பெருமாள் படிக்கட்டில் ஏறினார்.

சதாசிவன் டார்ச் லைட்டை அடித்தபடி தொடர்ந்தான். கைமள் இருவருக்கும் இடையில் நடந்து கொண்டிருந்தார்.

எல்லாரும் மேலே வந்தபிறகு அந்தப் பாறையை பழையபடி அதே இடத்தில் தள்ளி மூடினார் பெருமாள்.

ஆற்றங்கரைக்கு வந்தவர்கள் படகில் ஏறினர்.

“நான் துடுப்பு போடுகிறேன்” சதாசிவன் துடுப்பைக் கையில் எடுத்தான்.

“வேண்டாம்... அதற்கு அவசியம் இல்லை” பெருமாள் தடுத்தார்.

படகு தானாகவே நகர்ந்தது. விரைவாக. படகில் வேறு எந்தவிதமான அசைவும் ஏற்படவில்லை.



## 30

அதே நேரம் பனங்காட்டு இல்லத்தை அடைந்த மந்தாகினி, “உண்ணி... உண்ணி...” என்று பரபரப்புடன் உண்ணிக்கிருஷ்ணனை எழுப்பினாள்.

உண்ணிக்கிருஷ்ணன் தூக்கிவாரிப் போட்டவனாக எழுந்தான்.

“என்ன, என்ன மந்தாகினி?” அவன் கண்களைக் கசக்கியபடி கேட்டான்.

எரிந்து கொண்டிருந்த கோல்விளக்கின் வெளிச்சத்தில் மந்தாகினியின் திகைப்பு நிரம்பிய முகம் அவனுக்குத் தெளிவாகத் தெரிந்தது.

“சொல் மந்தாகினி, என்ன நடந்தது? ஏன் இவ்வளவு பதற்றப்படுறே?” உண்ணி, அவளின் இரண்டு தோள்பட்டைகளிலும் தன் கைகளைப் பதித்தபடி கேட்டான்.

“என்கூட வாங்க...” அவன் கேள்விக்கு பதில் சொல்லாமல் அவனை அழைத்தாள்.

உண்ணிக்கிருஷ்ணன் கட்டிலிலிருந்து எழுந்தான். பக்கத்துக் கொடியிலிருந்த ஷர்ட்டை எடுக்கப் போனவனைத் தடுத்தாள்.

“நீங்க போட்டிருக்கிற கறுப்பு ஷர்ட்டும், வேட்டியும் போதும், கிளம்புங்க.”

இருவரும் பனங்காட்டு மனையிலிருந்து வெளியேறினார்கள்.

இருவரும் வந்து சேர்ந்த இடம் பகவதி கோயில். திருவிழா நடக்க இருக்கும் கோயிலுக்கு முன்னால் வந்ததும் மந்தாகினி நின்றாள்.

“இங்கே கன்னாபின்னான்னு செடிங்க வளர்ந்திருக்கு, ஜாக்கிரதையா வாங்க” அவள், அவனை எச்சரித்தாள்.

உண்ணிக்கிருஷ்ணன் அவளின் நெருக்கத்திலேயே உட்புறம் வந்து சேர்ந்தான்.

கருவறைக்கு முன்னால் வந்து நின்றார்கள்.

மந்தாகினி, தன் கையிலிருந்த மோதிரத்தைக் கழற்றி, உண்ணிக்குத் தெரியாமல் கருவறைக்குள் போட்டாள். கருவறைக்குள் வெளிச்சம் பரவியது.

“உள்ளே பாருங்க... தேவியின் இடது புறமிருக்கிற மூன்றாம் கையில் பனையோலைச் சுவடி ஒன்று இருக்கிறது... தெரியுதா உங்களுக்கு?” அவள் சுட்டிக் காட்டினாள்.

“தெரியுது.”

“அதை உடனடியா எடுக்கணும்... பயப்படக்கூடாது.”

உண்ணிக்கிருஷ்ணன் தேவியை வணங்கிவிட்டுக் கரு வறைக்குள் நுழைந்தான். தேவியின் கையிலிருந்த ஏட்டுச்சுவடியை எடுத்து மந்தாகினியிடம் கொடுத்தான்.

“போதும்... வெளியில வந்துடுங்க” மந்தாகினி கூறினாள்.

இருவரும் வந்த வழியே திரும்பினர்.

“இது எதுக்கு மந்தாகினி?”

“இதுல நிறைய விஷயங்கள் இருக்கு. நமக்குத் தேவையான நிறைய மந்திரங்கள் உண்டு இதுல. நீங்க இதையெல்லாம் கத்துக்கணும். நமக்கு இது ரொம்ப அவசியம். இதை வேற யாராவது எடுக்கறதுக்கு முன்னால எடுக்கணும்னு தோணுச்சு, அவ்வளவுதான்.”

“மந்திரமெல்லாம் நமக்கு எதுக்கு?” உண்ணிக்கிருஷ்ணன் கேட்டான்.

“நீங்கள் ஒரு நம்பூதிரி இல்லையா? உங்களுக்கு இப்போ வேதமெல்லாம் தெரியும். சில மந்திரங்களை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். அதாவது துர்மந்திரவாதங்களுக்கு எதிரான பரிகாரமான மந்திரங்கள் சிலவற்றை.”

“ஐயோ, என்ன மந்தாகினி? நீ வேண்டாத வேலையெல்லாம் இழுத்துப் போட்டுக்கிறே?”

“வேண்டாத வேலையெல்லாமில்லை. இப்பவே உங்க முன்னேற்றத்தைப் பார்த்துப் பொறாமைப்படுகிற எதிரிகள்



இருக்கிறாங்க. அவங்கள்லாம் எதையாவது செய்யலாம். நீங்க யாருக்கும் எந்தவிதமான தொல்லையும் தரவேண்டாம். ஆனால், உங்களைத் தற்காத்துக்கொள்ள வேண்டாமா?”

“அது வேண்டியதுதான். கத்துக்கிறேன்...” உண்ணி ஒப்புக் கொண்டான்.

“பொழுது விடிந்ததும் ஆரம்பிக்க வேண்டியதுதான்.”

“என் குரு யார்?”

“தற்சமயம் நான்தான். என்ன, பரவாயில்லையா?” மந்தாகினி சிரித்தாள். அவள் கன்னத்தில் சிரிப்பின்போது, விழுந்த குழி மிகவும் அழகாக இருந்தது.

“மந்தாகினி, உண்மையிலேயே உன்னைப் பார்த்தா ஒரு தேவதை மாதிரி இருக்கிறே...” உண்ணி அவள் கன்னங்களை வருடியபடி கூறினான்.

“உண்மையாவா சொல்றீங்க? நான் அவ்வளவு அழகாவா இருக்கிறேன்?”

“அப்புறம்...? சரி... அது கிடக்கட்டும். நான் தினமும் ஒரு விஷயத்தைப் பற்றி யோசிக்கிறதுண்டு.”

“அப்படிப்பட்ட யோசனை என்னயோ?”

“நீ இங்கே வந்தபிறகு ஒரு தடவைகூட உங்க அப்பா-அம்மாவைப் பார்க்கப் போகலையே?”

“ஓ.... அதுவா, போகணும். நாம ரெண்டு பேரும் ஒரு தடவை போயிட்டு வரலாம். சரி, இப்பப் படுத்துத் தூங்குங்க. நாளைக்குக் காலையில சீக்கிரமா எழுந்திருக்கணும்!” அவள் அவன் நெற்றியில் விரல்களை அளையவிட்டாள்.

உண்ணிக்கிருஷ்ணன் தூக்கத்தில் அமிழ்ந்தான்.

அஷ்டமுகப் பெருமாள், சேகரக் கைமள் மற்றும் சதாசிவனுடன் திருவல்லூரை நோக்கி நடந்து கொண்டிருந்தார்.

மாலை நேரம் முதிர்ந்து கொண்டிருந்தது.

அவர்கள் ஒரு பெரிய ஆலமரத்தின் அடிப்பகுதியை அடைந்தனர். அது ஓர் அசாதாரணமான தோற்றத்துடன் இருந்தது. எத்தனையோ நூற்றாண்டைக் கடந்த அந்த மரம், ஏராளமான விழுதுகளை இறக்கியிருந்தது. ஒவ்வொரு விழுதும் மரத்தின் சுற்றளவைவிடப் பெரிதாக இருந்தது. ஏறத்தாழ ஒரு ஏக்கர் நிலப்பரப்பை ஆக்கிரமித்து, அந்த மரம் கப்பும் கிளையுமாகப் படர்ந்திருந்தது.

அஷ்டமுகப் பெருமாள் அந்த மரத்தை ஒருதடவை ஏறிட்டார். பிறகு தன் கையிலிருந்த சூலத்தைத் தரையில் குத்தி நிறுத்தினார்.

“நீங்கள் இங்கேயே இருங்கள். ஒரு முக்கியமான விஷயம்...” பெருமாள் தன் கடுமையான விழிகளை அவர்கள் மீது நாட்டியபடி பேசினார்.

அவரின் பார்வையைத் தாங்கமாட்டாமல் இருவரும் நடுங்கினர்.

பெருமாள் என்ன சொல்லப் போகிறாரோ என்று ஆர்வத்துடன் இருவரும் அவரைப் பார்த்தனர்.

“இதோ, இந்தச் சூலத்திலிருந்து மூன்று முழச் சுற்றளவுக்கு மேல் நீங்கள் வெளியே போகக்கூடாது. எவ்வளவு நேரமானாலும் இங்கிருந்து நகராதீர்கள், நான் வருவது வரை!”

இப்படி எச்சரிக்கை செய்தவர் அடர்ந்து வளர்ந்திருந்த ஆலமரத்தின் விழுதுகளுக்கிடையே நுழைந்து நகர்ந்தார். சாய்ந்தும் தவழ்ந்தும்தான் பெருமாள் அதற்குள் முன்னேறினார். ஏறத்தாழ பாதி தொலைவு வந்தபிறகு படுத்தவாறே உட்புறம் பார்வையைச் செலுத்தினார்.

“ம்... இருக்கிறது” மந்திரிப்பதுபோல் தனக்குத் தானே பேசிக் கொண்டார்.

அதன்பிறகு பாம்பைப்போல் தரையில் ஊர்ந்து போகத் தொடங்கினார். அவர் சென்று சேர்ந்த இடம் மிகவும் பழைமையான ஒரு சிலையின் காலடிப் பகுதி.



படுத்த நிலையிலேயே அந்தச் சிலையை ஒரு தடவை ஏற இறங்கப் பார்த்தார்.

“ஆமாம், அதுவேதான், சந்தேகமில்லை!” என்றவர் படுத்த நிலையிலிருந்து மெதுவாக எழுந்திருக்க முயன்றார்.

என்ன காரணத்தாலோ முடியாதவராகச் சட்டென்று பின்னுக்கு நகர்ந்தார். அவர் வந்து சேர்ந்த சிலை பயங்கரமான தோற்றமுள்ள வனதுர்காவினுடையது. எப்படிப்பட்டவர் பார்த்தாலும் பயந்து நடுங்கக்கூடிய அந்தச் சிலையின் மீது பாசம் ஏராளமாகப் படிந்திருந்ததால் அதன் உருவம் சரிவரத் தெரியாமல் மறைந்திருந்தது.

“அடியேன் திரும்பவும் வந்திருக்கிறேன்” அஷ்டமுகப் பெருமாள் அந்தச் சிலையின் முகத்தைப் பார்த்துப் பேசினார்.

“நீ மறுபடியும் உருப்பெறுவதை நானும் கவனிக்கவே செய்தேன்” பெருமாள் கண் முன்பாகவே சிலையின் மேற்புறம் இருந்த கழுகு வாய் திறந்து பேசியது.

“இந்தத் தடவை எப்படியாவது என்னைக் காப்பாற்ற வேண்டும். நூற்றியொரு கன்னிப்பெண்களின் கன்னித்தன்மையை அழித்து இங்கேயே உங்கள் முன்னால் பலியிடுகிறேன். இது சத்தியம்!” பெருமாள் தன் வலது கைச் சுண்டு விரலைச் சூலத்தன் மீது வீசினார்.

விரலிலிருந்து தெறித்த ரத்தம் சிலையின் உதடுகளில் விழுந்தது. சட்டென்று பாய்ந்து வந்த கழுகு, அந்த ரத்தத்தைச் சுவைத்துத் தனது தொண்டைக்குள் இறக்கிக்கொண்டது.

“சரி, அதற்கு நான் உனக்கு என்ன செய்யவேண்டும்?” கழுகு கேட்டது.

“மேற்கொண்டு என்னை யாரும் அழிக்காமலிருக்க உதவுங்கள். உங்கள் கழுத்தில் கிடக்கும் நாகமாணிக்கத்தை எனக்குத் தரவேண்டும். நான் அதைப் பத்திரமாக என் உதரப் பகுதியிலேயே வைத்துக் கொள்கிறேன்” பெருமாள் வேண்டுகோள் வைத்தார்.

“சரி, உனது விருப்பப்படியே நடக்கட்டும்” கழுகு இந்த வார்த்தைகளைச் சொன்னதும் வனதுர்காவின் கழுத்தில் கிடந்த நாகம் படம் எடுத்தவாறே பெருமாளின் வலதுகை மணிக்கட்டில் கொத்தியது.

மறுவிநாடி அவர் கையில் நாகமாணிக்கம் விழுந்து பளபளத்தது. உடனே பெருமாள் அதை விழுங்கவும் செய்தார்.

‘இனிமேல் எந்த ஒரு சக்தியும் என்னை எதுவும் செய்ய முடியாது’ என்ற நம்பிக்கையுடன் அங்கிருந்து வெளியே வந்தார்.

“சரி, வாருங்கள் போகலாம்” பெருமாள் தனது சூலத்தை உருவியபடி அவர்களிடம் கூறினார்.

விரைவிலேயே அவர்கள் திருவல்லூர் வந்து சேர்ந்தனர்.

“நான் எங்கே தங்குவது?” பெருமாள் கேட்டார்.

“நல்ல இடமிருக்கிறது. ஒரு வாரியாரின் வீடு. அங்கு இப்போது யாரும் இல்லை. பகவதி கோயிலுக்கு வடக்குத் திசையில் உள்ளது.”

“ரொம்பவும் நல்லது. ஆட்கள் எவரும் குடியில்லாத அப்படிப்பட்ட இடம்தான் எனக்குத் தேவை” பெருமாள் தன் தலையிலிருந்த வறண்ட முடிக்கற்றைகளைக் கையால் சிக்கெடுத்தபடி பேசினார்.

பகவதி கோயிலின் தென்புறத்தில் புதர்களும், பட்டை உரிந்த மரங்களும் சூழ்ந்துள்ள வாரியாரின் வீட்டில் தற்போது யாருமே இல்லை. அது வாரிசற்றுப் போய் வெகு நாட்களாகிறது. அந்த வீட்டின் கடைசி வாரிசாக இருந்த வாரியார் வீட்டுப் பெண்மணி ஒருவர் இன்னதென்று விளங்காத ஏதோ ஒரு காரணத்தால் தற்கொலை செய்துகொண்டு இறந்து போனார்.

அவரது உடம்பு அவர் தூக்குப் போட்டு இறந்துபோன உரலறையிலேயே கிடந்து இற்றுப் போனது. தற்போது அந்த உடம்பின் எலும்புத் துண்டுகள் அந்த அறைக்குள் சிதறிக் கிடக்கின்றன.

அஷ்டமுகப் பெருமாளுக்கு உகந்த இடம் அதுதான் என்பது கைமளுக்குத் தெரியும்.

தகர்ந்து விழுந்திருந்த தெருவாசற்படியைத் தாண்டி, முற்றப் பகுதியில் காலெடுத்து வைத்தபோது, அந்த வீட்டின் மேற்குப் புறமிருந்த எட்டி மரம் பயங்கரமாக ஒருதடவை குலுங்கியது.

“யாரது... சாவித்ரியா... அமைதியா இருக்கிறது நல்லது” பெருமாள் மரத்தைப் பார்த்துக் கூறினார்.



‘சாவித்ரி’ என்ற பெயரைக் கேட்டதும் கைமள் ஒருகணம் தயங்கினார். அந்த வீட்டின் உரலறையில் தற்கொலை செய்து இறந்து போனவள் பெயரும் அதுதான். கைமள் அதைப்பற்றிக் கேள்விப் பட்டிருந்தார்.

பெருமாளின் கட்டளைக்குக் கட்டுப்பட்டதுபோல் எட்டி மரம் அசைவற்றுப் போனது. பெருமாளின் சக்தி இன்னதென்று அந்த ஒரு சம்பவத்தின் மூலமே இருவருக்கும் விளங்கியது போலிருந்தது.

ஆச்சரியம் தாங்காமல் சதாசிவன் மூக்கில் விரல் பதித்தான்.

‘இந்தத் தடவை நாம் ஜெயிப்பது உறுதி’ என்று கைமளும் மனக்கோட்டை கட்டினார்.

“அப்படியானால் நாங்கள் கிளம்பட்டுமா?” கைமள் கேட்டார்.

“ராத்திரி நேரத்தில் விடைபெறும் வழக்கம் நல்லதல்ல... போய்விட்டுக் காலையில் வாருங்கள்” பெருமாள் சொன்னார்.

‘எத்தனையோ வருடங்களுக்கு முன்னால் செத்துப்போன வாரியார் வீட்டுப் பெண்மணியின் பெயர்கூட இவருக்குத் தெரிந்திருக்கிறது!’

இருவரும் அங்கிருந்து கிளம்பினர்.

பொழுது விடிந்ததும் பகவதி கோயிலைச் சுற்றியுள்ள புதர் மற்றும் மரங்களை வெட்டுவதற்கு வேலையாட்கள் வந்தனர்.

மாலை நேரத்துக்குள் பெரும்பாலான வேலை முடிந்து விட்டது. அந்தச் செலவைக்கூட புவனேஸ்வரன் நாயரே ஏற்றுக்கொண்டார்.

வேலைக்கு நடுவே, நாயர் ஓய்வு ஏற்படுத்திக்கொண்டு பெருமாளிடம் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ளவும் செய்தார்.

‘முதலிலேயே பெருமாளைப் பற்றித் தெரிந்து, அவரை அணுகியிருந்தால் தன் பிள்ளைகளில் எவரையும் பறிகொடுத்திருக்க வேண்டியிருந்திருக்காது’ என்றுகூட நினைத்தார்.

“எத்தனையோ வருடங்களுக்குப் பிறகு கோயிலில் திருவிழா நடக்கப் போகிறது இல்லையா?” பெருமாள் கேட்டார்.

“ஆமாம், எனக்கு நினைவு தெரிந்து, கோயிலில் திருவிழா நடந்த ஞாபகம் இல்லை” நாயர் விளக்கினார்.

“இந்தக் கோயிலின் தேவி மிகவும் சக்தி வாய்ந்தவள்!” பெருமாள் கூறினார்.

“நானும் கேள்விப்பட்டிருக்கிறேன்.”

“போதாக்குறைக்கு இப்போது நானும் உங்களுக்குத் துணையாக வந்துவிட்டேன்.”

“இதை என் நல்ல காலம் என்றுதான் சொல்லவேண்டும்.”

“ஒரு விஷயம்... என்னைப்பற்றி வேறு எவரிடமும் எதுவும் சொல்ல வேண்டாம். இதுவரை தெரிந்து கொண்டவர்கள் இருந்து விட்டுப் போகட்டும்.”

“அதற்கென்ன... அப்படியே செய்துவிட்டால் போகிறது.”

பகல் நேரத்தில் அவர்கள் பேசிக்கொண்டது இவ்வளவுதான்.

மறுநாள் திருவிழாவை முன்னிட்டுக் கோயிலில் கொடியேற்றினார்கள். உறங்கிக் கிடந்த ஊர் விழித்துக் கொண்டது.

விஷயத்தைக் கேள்விப்பட்டு அக்கம்பக்கம் ஊர்களிலிருந்து மட்டுமின்றி, தொலைவிலிருந்தெல்லாம்கூட ஆட்கள் குவியத் தொடங்கினர்.

திருவிழா நடக்கும் மைதானம் முழுவதும் குருத்தோலைகளும் தோரணங்களுமாக கோயிலின் சுற்றுப்புறம் களைகட்டியது.

மாலை நேரம் தாண்டியதும் ஆகாயத்திலிருந்து நட்சத்திரங்கள் வெடித்துச் சிதறுவதுபோல் விளக்குகள் ஜொலித்தன.

கோயிலுக்கு முன்பாக நிறுவப்பட்ட மிகப்பெரிய கல் விளக்கில் நூற்றுக்கணக்கான திரிகள் ஜெகஜ்ஜோதியாக ஒளி சிந்தின.

நான்கு புறங்களிலிருந்தும் பக்திப் பாடல்கள் உரத்த குரலில் எழுந்து கொண்டிருந்தன.

கருவறைக்குள் நிலவிளக்குகளுக்குப் பின்னால் தேவியின் வடிவம் தெளிவாகத் தெரிந்தது.



தேவியின் கண்களில் சக்தி கனிந்திருந்தது.

அஷ்டதிக்குப் பாலகர்களும், அஷ்ட நாகங்களும் அஸ்வினி தேவதைகளும் தேவிக்கு முன்னால் வணங்கி நின்றார்கள்.

பள்ளிவேட்டை முடிந்து தேவி வந்தார்.

பன்னிரண்டு யானைகள் தேவியை வரவேற்றன.

நிகழ்ச்சி நிரலின்படி மறுநாள் சங்கீதக் கச்சேரி நடப்பதாக இருந்தது.

கருவறைக்கு எதிர்ப்புறத்தில் மேடை அமைக்கப்பட்டிருந்தது. மேடையின் திரைச்சீலை மேற்புறமாக உயர்ந்தது.

ஓர் அறிவிப்பு எழுந்தது. “பிரபல சங்கீத சாம்ராட் சங்கீதக் கடலை நீந்திக் கடந்த சங்கீதச் சக்ரவர்த்தி ஸ்ரீவில்லிபுத்தூர் வேதநாயகம் பாகவதர் அவர்கள்....”

மேடைக்கு முன்புறம் ஜனங்கள் குழுமினர்.

பாகவதர் மேடைக்கு வந்தார்.

கம்பீரமான தோற்றம்...

மாநிறம், இரட்டை நாடி உடம்பு. தோள்வரை புரளும் தலைமுடி. கொண்டைக்காய் பருமனில் தங்கத்தால் கட்டப்பட்ட ருத்திராட்ச மாலை இரண்டு சுற்றாக அவர் கழுத்தில் தொங்கியது. நெற்றியில் சந்தனப் பொட்டு. இரு காதுகளிலும் வைரக் கடுக்கன்கள். பத்து விரல்களிலும் வைர மோதிரம் பளபளக்க, பாகவதர் சபையோரை இரு கை கூப்பி வணங்கினார்.

சபை நிரம்பி வழிந்தது.

குறைந்தபட்சம் பத்தாயிரம் பேராவது அங்கு இருப்பார்கள்.

கைதட்டல் ஒலி காதைப் பிளந்தது.

சுருதி முழங்கியது.

மூச்சு விடுவதைக்கூடக் கட்டுப்படுத்திக் கொண்டு கவனத்தை மேடைப்பக்கம் திருப்பியிருந்தனர் பார்வையாளர்கள்.

“வாதாபி கணபதி...” கச்சேரி ஆரம்பமானது.

ஒவ்வொரு பாடலின் முடிவிலும் கைதட்டும் ஓசை வானைப் பிளந்தது.

இப்படியொரு கச்சேரி அந்தப் பகுதியில் இதற்கு முன்பு நடந்ததாக அவர்களுக்குத் தெரியவில்லை.

அடுத்ததாக ரூபக தாளத்தில், கானடா ராகத்தில் சரஸ்வதித் திருநாளின் பாட்டு ஆரம்பமானது.

ஆரோகணம் தொடங்கியது.

“ச...ரி....க..ம...ப...த...நி...ச.”

சபையோர் நிம்மதியில்லாதது போல் நெளிந்தனர்.

அடுத்தது அவரோகணம்.

“ச...நி...ப....ம...ப...சா...ச...ரி...ச...”

“நிறுத்துங்கள்... தவறாகப் பாடக்கூடாது” யாரோ சபைக்குப் பின்புறமிருந்து உரத்த குரலில் கூறும் சத்தம் கேட்டது. கூடவே காற்றும் விசையாக வீசியது.

கருவறைக்கு முன்புறமிருந்த கல்விளக்கில் எரிந்து கொண்டிருந்த தீபங்கள் ஒரு விநாடி அலைக்கழிந்தவை போல் தள்ளாடின.

மொத்த சபையுமே சட்டென்று தலையைத் திருப்பிப் பார்த்தது 'நீ யார்?' என்பது போல்!

## 31

**உ**ண்ணிக்கிருஷ்ணன் நின்று கொண்டிருந்தான்.

காது கேட்க முடியாத - வாய் பேச முடியாதவன் என்று ஒரு காலத்தில் ஊரார் யாரை எண்ணிக் கொண்டிருந்தனரோ, அதே உண்ணிக்கிருஷ்ணன் உரத்த குரலில் பேசுகிறான்.

உண்ணிக்கிருஷ்ணன் பேசத் தொடங்கிவிட்டான் என்பது உள்ளூரைச் சேர்ந்த ஒருசிலருக்குத் தெரியும். என்றாலும் அந்த ஊரை



ஒட்டியிருந்த சுத்துப்பட்டுக் கிராமங்களைச் சேர்ந்தவர்களுக்கும் அந்த ஊரின் பெரும்பாலானவர்களுக்கும் அது புதிய செய்தியாகத்தான் இருந்தது. அதற்கும் காரணம் இருந்தது. உண்ணி பெருமளவு மாறிப் போயிருந்தாலும் ஊரார் இன்னும் அவனைப் பழையபடியேதான் நினைத்துக் கொண்டிருந்தனர். அதுவுமல்லாமல் அவர்கள் உண்ணியுடன் பேச வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டதில்லை.

திருவிழா... கச்சேரி போன்றவற்றை மறந்து எல்லாரும் உண்ணி பேசிய விஷயத்தை ஆச்சரியத்துடன் வாயைப் பிளந்து பார்த்துக் கொண்டிருந்தனர்.

பார்வையாளர்கள் அப்போதும் நம்ப முடியாதவர்களைப் போல் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

அதுமட்டுமா? சங்கீதச் சக்ரவர்த்தி ஸ்ரீவில்லிபுத்தூர் வேதநாயகம் பாகவதர் பாடிய பாட்டை தவறு என்றும் உரத்த குரலில் கண்டிக்கிறானே!

“என்னய்யா இது... நாம என்ன, தேவலோகத்திலயா இருக்கிறோம்?” கூட்டத்தில் ஒருவர் குரல் கொடுத்தார்.

அப்போது மற்றோர் அதிசயமும் நடந்தது.

உண்ணிக்கிருஷ்ணன் 'தவறு' என்று உரத்த குரலில் சொன்ன அதே நேரம் ஒரு தடவை வலுவாகக் காற்றடித்தது. கல்விளக்கில் எரிந்து கொண்டிருந்த தீப நாளங்களை அந்தக் காற்று அசைத்தது மட்டுமல்ல, திரியிலிருந்து தீப நாளங்கள் வேறுபட்டு மேற்புறமாக உயர்ந்து அந்தரத்தில் மறைந்தன.

“விளக்கிலிருந்து தீபங்கள் அணைந்து விட்டன. நாசமாப் போன காற்று” மேடையின் முன்பாக வலதுபுறம் அமர்ந்திருந்த புவனேஸ்வரன் நாயர் முணுமுணுத்தார்.

அப்போதும் காற்று வீசிக் கொண்டிருந்தது.

இருந்தாலும் வேறு விளக்குகள் நிறைய எரிந்து கொண்டிருந்ததால் வேண்டிய வெளிச்சம் இருக்கவே செய்தது.

“நான் பாடினது தப்புன்னா, எது சரியானது?” பாகவதர் ஏளனத்துடன் கேட்டார்.

“ஆமாம், எனக்கு நினைவு தெரிந்து, கோயிலில் திருவிழா நடந்த ஞாபகம் இல்லை” நாயர் விளக்கினார்.

“இந்தக் கோயிலின் தேவி மிகவும் சக்தி வாய்ந்தவள்!” பெருமாள் கூறினார்.

“நானும் கேள்விப்பட்டிருக்கிறேன்.”

“போதாக்குறைக்கு இப்போது நானும் உங்களுக்குத் துணையாக வந்துவிட்டேன்.”

“இதை என் நல்ல காலம் என்றுதான் சொல்லவேண்டும்.”

“ஒரு விஷயம்... என்னைப்பற்றி வேறு எவரிடமும் எதுவும் சொல்ல வேண்டாம். இதுவரை தெரிந்து கொண்டவர்கள் இருந்து விட்டுப் போகட்டும்.”

“அதற்கென்ன... அப்படியே செய்துவிட்டால் போகிறது.”

பகல் நேரத்தில் அவர்கள் பேசிக்கொண்டது இவ்வளவுதான்.

மறுநாள் திருவிழாவை முன்னிட்டுக் கோயிலில் கொடியேற்றி னார்கள். உறங்கிக் கிடந்த ஊர் விழித்துக் கொண்டது.

விஷயத்தைக் கேள்விப்பட்டு அக்கம்பக்கம் ஊர்களிலிருந்து மட்டுமின்றி, தொலைவிலிருந்தெல்லாம்கூட ஆட்கள் குவியத் தொடங்கினர்.

திருவிழா நடக்கும் மைதானம் முழுவதும் குருத்தோலைகளும் தோரணங்களுமாக கோயிலின் சுற்றுப்புறம் களைகட்டியது.

மாலை நேரம் தாண்டியதும் ஆகாயத்திலிருந்து நட்சத்திரங்கள் வெடித்துச் சிதறுவதுபோல் விளக்குகள் ஜொலித்தன.

கோயிலுக்கு முன்பாக நிறுவப்பட்ட மிகப்பெரிய கல் விளக்கில் நூற்றுக்கணக்கான திரிகள் ஜெகஜ்ஜோதியாக ஒளி சிந்தின.

நான்கு புறங்களிலிருந்தும் பக்திப் பாடல்கள் உரத்த குரலில் எழுந்து கொண்டிருந்தன.

கருவறைக்குள் நிலவிளக்குகளுக்குப் பின்னால் தேவியின் வடிவம் தெளிவாகத் தெரிந்தது.



தேவியின் கண்களில் சக்தி கனிந்திருந்தது.

அஷ்டதிக்குப் பாலகர்களும், அஷ்ட நாகங்களும் அஸ்வினி தேவதைகளும் தேவிக்கு முன்னால் வணங்கி நின்றார்கள்.

பள்ளிவேட்டை முடிந்து தேவி வந்தார்.

பன்னிரண்டு யானைகள் தேவியை வரவேற்றன.

நிகழ்ச்சி நிரலின்படி மறுநாள் சங்கீதக் கச்சேரி நடப்பதாக இருந்தது.

கருவறைக்கு எதிர்ப்புறத்தில் மேடை அமைக்கப்பட்டிருந்தது. மேடையின் திரைச்சீலை மேற்புறமாக உயர்ந்தது.

ஓர் அறிவிப்பு எழுந்தது. “பிரபல சங்கீத சாம்ராட் சங்கீதக் கடலை நீந்திக் கடந்த சங்கீதச் சக்ரவர்த்தி ஸ்ரீவில்லிபுத்தூர் வேதநாயகம் பாகவதர் அவர்கள்....”

மேடைக்கு முன்புறம் ஜனங்கள் குழுமினர்.

பாகவதர் மேடைக்கு வந்தார்.

கம்பீரமான தோற்றம்...

மாநிறம், இரட்டை நாடி உடம்பு. தோள்வரை புரளும் தலைமுடி. கண்டைக்காய் பருமனில் தங்கத்தால் கட்டப்பட்ட ருத்திராட்ச மாலை இரண்டு சுற்றாக அவர் கழுத்தில் தொங்கியது. நெற்றியில் சந்தனப் பொட்டு. இரு காதுகளிலும் வைரக் கடுக்கன்கள். பத்து விரல்களிலும் வைர மோதிரம் பளபளக்க, பாகவதர் சபையோரை இரு கை கூப்பி வணங்கினார்.

சபை நிரம்பி வழிந்தது.

குறைந்தபட்சம் பத்தாயிரம் பேராவது அங்கு இருப்பார்கள்.

கைதட்டல் ஒலி காதைப் பிளந்தது.

சுருதி முழங்கியது.

மூச்சு விடுவதைக்கூடக் கட்டுப்படுத்திக் கொண்டு கவனத்தை மேடைப்பக்கம் திருப்பியிருந்தனர் பார்வையாளர்கள்.

“வாதாபி கணபதி...” கச்சேரி ஆரம்பமானது.

ஒவ்வொரு பாடலின் முடிவிலும் கைதட்டும் ஓசை வானைப் பிளந்தது.

இப்படியொரு கச்சேரி அந்தப் பகுதியில் இதற்கு முன்பு நடந்ததாக அவர்களுக்குத் தெரியவில்லை.

அடுத்ததாக ரூபக தாளத்தில், கானடா ராகத்தில் சரஸ்வதித் திருநாளின் பாட்டு ஆரம்பமானது.

ஆரோகணம் தொடங்கியது.

“ச....ரி....க..ம...ப...த...நி...ச.”

சபையோர் நிம்மதியில்லாதது போல் நெளிந்தனர்.

அடுத்தது அவரோகணம்.

“ச...நி...ப.....ம....ப...சா...ச...ரி...ச...”

“நிறுத்துங்கள்... தவறாகப் பாடக்கூடாது” யாரோ சபைக்குப் பின்புறமிருந்து உரத்த குரலில் கூறும் சத்தம் கேட்டது. கூடவே காற்றும் விசையாக வீசியது.

கருவறைக்கு முன்புறமிருந்த கல்விளக்கில் எரிந்து கொண் டிருந்த தீபங்கள் ஒரு விநாடி அலைக்கழிந்தவை போல் தள்ளாடின.

மொத்த சபையுமே சட்டென்று தலையைத் திருப்பிப் பார்த்தது 'நீ யார்?' என்பது போல்!

## 31

**உ**ண்ணிக்கிருஷ்ணன் நின்று கொண்டிருந்தான்.

காது கேட்க முடியாத - வாய் பேச முடியாதவன் என்று ஒரு காலத்தில் ஊரார் யாரை எண்ணிக் கொண்டிருந்தனரோ, அந்த உண்ணிக்கிருஷ்ணன் உரத்த குரலில் பேசுகிறான்.

உண்ணிக்கிருஷ்ணன் பேசத் தொடங்கிவிட்டான் என்பது உள்ளூரைச் சேர்ந்த ஒருசிலருக்குத் தெரியும். என்றாலும் அந்த ஊரை



ஒட்டியிருந்த சுத்துப்பட்டுக் கிராமங்களைச் சேர்ந்தவர்களுக்கும் அந்த ஊரின் பெரும்பாலானவர்களுக்கும் அது புதிய செய்தியாகத்தான் இருந்தது. அதற்கும் காரணம் இருந்தது. உண்ணி பெருமளவு மாறிப் போயிருந்தாலும் ஊரார் இன்னும் அவனைப் பழையபடியேதான் நினைத்துக் கொண்டிருந்தனர். அதுவுமல்லாமல் அவர்கள் உண்ணியுடன் பேச வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டதில்லை.

திருவிழா... கச்சேரி போன்றவற்றை மறந்து எல்லாரும் உண்ணி பேசிய விஷயத்தை ஆச்சரியத்துடன் வாயைப் பிளந்து பார்த்துக் கொண்டிருந்தனர்.

பார்வையாளர்கள் அப்போதும் நம்ப முடியாதவர்களைப் போல் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

அதுமட்டுமா? சங்கீதச் சக்ரவர்த்தி ஸ்ரீவில்லிபுத்தூர் வேதநாயகம் பாகவதர் பாடிய பாட்டை தவறு என்றும் உரத்த குரலில் கண்டிக் கிறானே!

“என்னய்யா இது... நாம என்ன, தேவலோகத்திலயா இருக் கிறோம்?” கூட்டத்தில் ஒருவர் குரல் கொடுத்தார்.

அப்போது மற்றோர் அதிசயமும் நடந்தது.

உண்ணிக்கிருஷ்ணன் 'தவறு' என்று உரத்த குரலில் சொன்ன அதே நேரம் ஒரு தடவை வலுவாகக் காற்றடித்தது. கல்விளக்கில் எரிந்து கொண்டிருந்த தீப நாளங்களை அந்தக் காற்று அசைத்தது மட்டுமல்ல, திரியிலிருந்து தீப நாளங்கள் வேறுபட்டு மேற்புறமாக உயர்ந்து அந்தரத்தில் மறைந்தன.

“விளக்கிலிருந்து தீபங்கள் அணைந்து விட்டன. நாசமாப் போன காற்று” மேடையின் முன்பாக வலதுபுறம் அமர்ந்திருந்த புவனேஸ் வரன் நாயர் முணுமுணுத்தார்.

அப்போதும் காற்று வீசிக் கொண்டிருந்தது.

இருந்தாலும் வேறு விளக்குகுள் நிறைய எரிந்து கொண்டிருந்த தால் வேண்டிய வெளிச்சம் இருக்கவே செய்தது.

“நான் பாடினது தப்புன்னா, எது சரியானது?” பாகவதர் ஏளனத்துடன் கேட்டார்.

“அப்படின்னா பனங்காட்டு மனையைச் சேர்ந்த கிறுக்குப் பிள்ளையே பாடட்டுமே...” புவனேஸ்வரன் நாயரின் அடியாட்களில் ஒருவர் குரலெழுப்பினார்.

அதைத் தொடர்ந்து புவனேஸ்வரன் நாயரின் அடியாட்களில் சிலர் கேலிக்குரல் எழுப்பவும் செய்தனர்.

“நிறுத்துங்கய்யா... கிறுக்கன் பாடப் போறான்” நாயரின் மகன் சதாசிவன் மற்றவர்களை அடக்கியபடி கூறினான்.

பார்வையாளர்களாக அமர்ந்திருந்த மொத்தப் பேரின் பார்வையும் உண்ணியை நோக்கியே இருந்தது. அவன் நின்றிருந்த இடத்திலிருந்து மேடையை நோக்கி நடந்தான்.

முன்புறம் அமர்ந்திருப்பவர்கள், உண்ணிக்கிருஷ்ணனுக்கு வழிவிட்டு ஒதுங்கினர்.

என்ன நடக்கப் போகிறதோ?

சூழ்நிலை அமைதியாக இருந்தது.

ஒவ்வொருவரின் மூச்சுக்காற்றும் எழுப்பிய சத்தத்தைத் தவிர வேறு சத்தம் இல்லை. உண்மையிலேயே ஊசி விழுந்தால்கூடக் கேட்கும் அமைதி.

மேடைக்கு வந்த உண்ணிக்கிருஷ்ணன் சப்பணமிட்டு அமர்ந்தான்.

வேதநாயகம் பாகவதரின் அருகில் அமர்ந்தவன் ஒரு தடவை தொண்டையைக் கனைத்துவிட்டுப் பாடத் தொடங்கினான்.

“ச....ரி...க...ம...ப...த...னி...ச...”

பார்வையாளர்கள் வாய் பிளந்தனர்.

சங்கீதத்தில் புலமை வாய்ந்த பலர் அங்கு இருந்தனர். ஆனால் உண்ணிக்கிருஷ்ணன் பாடத் தொடங்கிய பிறகுதான் பாகவதர் செய்த தவறு புரிந்தது.

பாகவதர் அவரோகணத்தில் ‘ச... னி... ப... ம... ப... ச... ஸ... ரி... ஸ’ என்று பாடினார். ‘ம’ வரவேண்டிய இடத்தில் ‘ஸா’ பயன்படுத்தியிருந்தார்.



சபையோர் மெய்ம்மறந்து கேட்டுக்கொண்டிருக்க, உண்ணிக் கிருஷ்ணன் பாடிக் கொண்டிருந்தான்.

**“மா ம வ ச த... ஜனனீ...**
**... ... ... ... ...**
**... ... ... ... ...**
**காமதான... நிரதர**
**கடாக்ஷ... விலாசினி... அம்ப!”**

அவன் பாடிக் கொண்டிருந்தபோது அங்கு வீசிக் கொண்டிருந்த காற்றுகூட யாரோ பிடித்து நிறுத்தியது போல் கட்டுக்குள் அடங்கி இருந்தது.

அதே சமயம் கருவறைக்குள்ளிருந்து அந்த பாட்டுக்குத் தாளம் போடுவது போல் மணியோசை எழும்பியது.

உண்ணிக்கிருஷ்ணன் சரணத்தைத் தொடர்ந்தான்.

**“கூருமே... குசலம்... சபா...**
**... ... ... ... ....**
**சத்ருஸ... ராஜித வேணி...”**

அப்போது கல்விளக்கில் அதிசயமான சம்பவம் ஒன்று நிகழ்ந்தது.

கல் விளக்கின் திரியிலிருந்து பிரிந்து சென்ற தீபங்கள் பழையபடி திரும்பி வந்து பொருந்திக்கொண்டன.

உண்ணிக்கிருஷ்ணன் இடைவெளியின்றிப் பாடிக் கொண் டிருந்தான்.

அண்ட சராசரங்களும் அந்தப் பாட்டில் லயித்துப் போனது போலிருந்தது. காற்றே இல்லாதபோதுகூட மென்மையாக அசைந்து சலசலக்கும் ஆலமரத்தின் இலைகளும், அந்தப் பாட்டில் மெய்ம்மறந்து தங்களது இயல்பைத் தவறவிட்டது போலிருந்தது.

தாங்கள் காண்பது கனவா நனவா? முன்னொரு காலத்தில் அக்பரின் அரசவையிலிருந்த தான்சேன் பாட்டுப் பாடியே விளக்கில் தீபத்தை வரவழைத்த அதிசயத்தைக் கேள்விப் பட்டிருந்தனர். அதெல்லாம் வெறும் கற்பனை என்று நினைத்தவர்கள், இப்போதுதான் அப்படி நடந்திருக்கவும் வாய்ப்பு உள்ளது என்று தெரிந்து கொண்டனர்.

பனங்காட்டு மனையைச் சேர்ந்த கிறுக்கன், கானடா ராகம் பாடி தீபத்தை எரிய வைத்திருக்கிறான்.

**"தாருணா.... தனுஜாளி...**
**தாரணோ... படுசரிதே.."**

பாட்டு முடிந்தது.

இப்போது கல்விளக்கிலிருந்த எல்லாத் திரிகளும் ஜெகஜ் ஜோதியாக எரிந்து கொண்டிருந்தன.

பார்வையாளர்கள் இடைவெளியில்லாமல் கை தட்டினார்கள்.

உண்ணி மேடையிலிருந்து எழுந்தான்.

அப்போதுதான் சுயநினைவுக்குத் திரும்பிய வேதநாயக பாகவதர் சட்டென்று எழுந்து தன் கழுத்தில் கிடந்த தங்க ருத்திராட்ச மாலையைக் கழற்றி உண்ணியின் கழுத்தில் போட்டுவிட்டு எதிர்பாராமல் அவன் காலில் சாஷ்டாங்கமாக விழுந்தார்.

"என்னை மன்னிச்சிடுங்க" பாகவதர் தாழ்ந்த குரலில் கூறினார்.

"அதெல்லாம் வேண்டாம், எழுந்திருங்க...." உண்ணிக் கிருஷ்ணன், பாகவதரைப் பிடித்து எழுப்பினான். அவர் தன் கழுத்தில் போட்ட மாலையைக் கழற்றி அவர் கழுத்திலேயே போட்டான்.

"இனிமேல் இந்த மேடையில் நான் பாடமாட்டேன். பாடுவதற்கு அருகதை இல்லை. நீங்களே பாடுங்கள்" பாகவதர் வற்புறுத்தினார்.

"பரவாயில்லை பாகவதர்... நீங்கள் பாடுங்கள். இனிமேல் உங்களுக்குத் தவறு ஏற்படாது" உண்ணி, பாகவதருக்குத் தன்னம்பிக்கை ஊட்டினான். பிறகு மேடையிலிருந்து இறங்கிய உண்ணி, கூப்பிய கைகளுடன் வந்த வழியே திரும்பி மறைந்தான்.

**அ**ங்கிருந்து புறப்பட்டவன் நேராக இல்லத்துக்கு வந்தான். மந்தாகினி அவனை எதிர்பார்த்துக் காத்திருந்தாள். வந்ததும் கைதட்டி அவனைப் பாராட்டினாள்.

"ரொம்ப நல்லாப் பாடினீங்க."



"நீ சொன்னதாலதான் பாடினேன்."

"இனிமேல் சங்கீதத்தில் உங்களை யாரும் ஜெயிக்க முடியாது" அவன் மார்பில் சாய்ந்த மந்தாகினி கூறினாள்.

"முதல்ல ரொம்பவும் பயந்து போயிட்டேன். அப்புறம் ஏதோ ஒரு அசட்டு தைரியம். எல்லாமே நான் எதிர்பாராதவிதமா நல்லபடியா முடிஞ்சிடுச்சு."

"இனிமே உங்களுக்கு எந்தவிதமான தவறும் ஏற்படாது."

"புவனேஸ்வரன் நாயர் முன்புறம் உட்கார்ந்திருந்தார்."

"நானும் கவனித்தேன்."

"மேற்கொண்டு அவர் என்ன செய்யப் போகிறாரோ?"

"அந்த பயமே இனிமேல் வேண்டாம். அதுக்காகத்தான் அந்தச் சுவடியைப் படிக்கச் சொன்னேன்" அவள், அவனை வராந்தாவுக்கு அழைத்துப் போனாள்.

"இதைத்தான் காலையிலேயே ஆரம்பிச்சாசே?"

"ஆரம்பிச்சுட்டாப் போதுமா? முழுசையும் படிச்சு மனப்பாடம் பண்ணுங்க."

"இதில இருக்கிறது எல்லாத்தையுமா?" உண்ணி வியப்பு நிறைந்தவனாகக் கேட்டான்.

"ஆமாம், அப்பத்தான் எந்த நேரத்துலயும் எந்த மந்திரத்தையும் பயன்படுத்த முடியும்? எப்ப, எது தேவைப்படும்னு யாருக்குத் தெரியும்? எல்லாவற்றையும் மனப்பாடம் பண்ணிட்டா, நேரத்துக்கு ஏற்றாற்போல் எதை வேண்டுமானாலும் பயன்படுத்தலாமே."

"அந்த நாயரைத் தவிர வேறு யாரு நம்மளைத் தொல்லைப் படுத்தப் போறாங்க? அவரைச் சமாளிக்க இருக்கிறதெல்லாம் போதாதா?"

"உங்களை அன்னிக்கு ஒருநாள் சாக்கு மூட்டைக்குள்ளே கட்டி, கிணத்துக்குள்ளே தூக்கிப் போட்டது ஞாபகமிருக்கா? அன்னிக்கு நான்

எவ்வளவு கஷ்டப்பட்டு உங்களைக் காப்பாத்த வேண்டியிருந்தது தெரியுமா?"

"அன்னிக்கு என்னைக் காப்பாத்துனது நீதானா மந்தாகினி?"

"ஆமாம், அவங்க உங்களைத் தண்ணிக்குள்ள தூக்கிப்போட்ட பிறகு பெரிய சூறைக்காற்று அடிச்சு, படகு ஏரிக்குள்ள மூழ்கிப் போச்சு. எப்படியோ நாம தப்பிச்சுட்டோம்."

"உனக்கு நீச்சல் தெரியுமா மந்தாகினி?"

"அப்பா கத்துக்கொடுத்தது. கோயிலுக்கு வடக்கே ஆறு ஒண்ணு ஓடுது. நாங்க ஆத்துக்கு மறுபுறம் குடியிருந்தோம். தினமும் நீந்தித்தான் கோயிலுக்கு வரணும்."

"ஒரு முக்கியமான விஷயத்தை மறந்துட்டேன்" உண்ணிக் கிருஷ்ணன் அவள் தோள்களைப் பற்றியபடி பேசினான்.

"நீங்க எதைப்பத்தி சொல்லப் போறீங்கன்னு எனக்குத் தெரியும்."

"எங்கே, சொல்லு பார்க்கலாம்..." உண்ணி அவள் கன்னத்தில் செல்லமாகத் தட்டியபடி கேட்டான்.

"எங்க அப்பாவை இங்கே வரவழைக்கணும்னு சொல்லப் போறீங்க."

"ஆமாம், மந்தாகினி. அதையேதான் நினைச்சேன். நான் மனசுக்குள்ள நினைக்கிறதை உன்னால் எப்படி இவ்வளவு தெளிவா சொல்ல முடியுது?" மந்தாகினியைத் தன் பக்கமாக இழுத்து அவள் நெற்றியில் முத்தமிட்டான்.

"அதோ பாருங்க, அந்தப் பல்லி நம்மளையே பார்த்துட்டிருக்கு" அவள் அவனிடம் கொஞ்சும் குரலில் பேசினாள்.

"அதை மட்டும்தானா நீ பார்த்த... நம்மளைப் பார்த்ததும் அது எப்படிக் கண்ணை மூடுது பார்த்தியா?" அவளை இழுத்து அணைத்தவாறு கேட்டான்.

"உண்மைதான், சரி, இனி மந்திரத்தைப் படிக்கணும்."



"விடமாட்டே போலிருக்கே..." என்றவன் சுவடியைக் கையில் எடுத்தான்.

"உங்க நன்மைக்குத்தானே."

"இங்கே பாரு... மந்தாகினி, இந்த மந்திரம் ரொம்பவும் முக்கியமானதுதான்னு தோணுது."

"வாசிங்க... கேட்கலாம்."

"பந்தன மோக்ஷ யந்திரம்!"

"பாதாளச் சிறையில இருக்கிறவங்ககூட இந்த யந்திரத்தை எழுதி, உச்சரித்தால் உடனே தளைகள் எல்லாம் அறுபட்டு விடுதலையடைஞ்சிடுவாங்க. இதுமாதிரி இன்னும் எவ்வளவு மந்திரங்கள் இருக்கு, நீங்க படிச்சுத் தெரிஞ்சுக்கிறதுக்கு" மந்தாகினி கூறினாள்.

"நீ சொல்றதைப் பார்த்தால் இந்த ஜென்மம் பூராவும் படிச்சால்கூட அதெல்லாம் தீராது போலிருக்கே" உண்ணிக்கிருஷ்ணன் இரக்கத்தை வேண்டி அவள் முகத்தைப் பார்த்தான்.

"ஆயுள் முடியாமல் இறந்து போனவங்களோட ஆவியை காஞ்சிர மரத்தில் ஆணியறைவது வழக்கம். இதெல்லாம் உங்களுக்குத் தெரியாது. இப்படிப்பட்ட ஆவிகளை எழுப்பி, தங்களது விருப்பங்களுக்கு ஏற்படச் செயல்பட வைக்க மந்திரவாதிகளால் முடியும். நிரூபணம் தேவையா உங்களுக்கு?" மந்தாகினி கேட்டாள்.

"அதெல்லாம் வேண்டாம். கேட்கிறதுக்கே பயமா இருக்கு. நான் அப்படிப்பட்ட எதையும் பார்க்கவோ கேட்கவோ வேண்டாம்" உண்ணி பயத்துடன் பேசினான்.

"சரி வாங்க... நான் உங்களுக்கு ஒரு வேடிக்கையைக் காட்டுகிறேன்" அவன் தோளைப் பிடித்தபடி மந்தாகினி சொன்னாள்.

உண்ணி அங்கிருந்து எழுந்தான்.

இருவரும் பனங்காட்டு மனையின் தென்புறமாக நடந்தனர். வெளியே இருட்டு அப்பி வைத்தாற் போலிருந்தது.

மந்தாகினி எந்தவிதத் தயக்கமும் இல்லாமல் நடந்ததால், அவன் அவளைப் பின்தொடர்ந்தான்.

அவன் கண்களை அகல விரித்துப் பார்த்தான். இருட்டில் தன் கை கால்களையே அடையாளம் தெரிந்துகொள்ள முயலவில்லை. ஆனால், அந்த இருட்டிலும் மந்தாகினி பளிச்சென்று தெரிந்தாள். இருட்டுக்குள் நெருப்பு ஜுவாலையொன்று நடப்பது போல் நகர்ந்து கொண்டிருந்தாள் மந்தாகினி.

'ஒருவேளை அவள் அணிந்திருக்கும் வெள்ளை உடை மற்றும் தங்க நகைகளால் இந்த ஜொலிப்பு ஏற்பட்டிருக்கலாம்' என்று நினைத்தான்.

நடந்துகொண்டே இருந்தவர்கள் நின்ற இடம் இல்லத்தின் தென்மேற்கு மூலைப்பகுதி. அந்த இடத்தில் சுற்றுச்சுவர் இடிந்து கிடந்தது.

"வாங்க, நாம வெளியே போகலாம்" மந்தாகினி கூறியதும் மறுக்காமல் பின்தொடர்ந்தான்.

சுவரைத் தாண்டி வெளியே வந்தனர்.

"இதோ... நின்று கொண்டிருக்கும் இந்த இருளின் கனம் எவ்வளவு தெரியுமா?" மந்தாகினி கேட்டாள்.

எத்தனையோ நூற்றாண்டுகளைக் கடந்த காஞ்ஞிர மரத்தின் அடியில் நின்று கொண்டிருந்தனர் இருவரும்.

"உண்ணி, அதோ பாருங்கள்..." மரத்தின் தாய்த்தண்டில் அறைந்திருந்த ஆணிகளைக் காட்டி, "இதெல்லாம் ஆணிகள் என்பது தெரியுமில்லையா?" என்று கேட்டாள்.

"ஆமாம்... ஆணிகள்... தெரிகிறது."

"எதற்காக அறைந்திருக்கிறார்கள் தெரியுமா?"

"தெரியாது."

"ஆவிகளை அறைஞ்சிருக்காங்க. நீங்க விரும்பினால் ஒரு தடவை நிரூபிக்கிறேன்."

"ஆவிகளைப் பார்க்கிறதா?" உண்ணிக்கிருஷ்ணன் வியப்புடன் அவளைப் பார்த்தான்.



உண்ணிக்கிருஷ்ணனின் கையிலிருந்த சுவடியை வாங்கிய மந்தாகினி, ஒரு தடவை அதைப் புரட்டினாள். குறிப்பிட்ட பகுதியில் நிறுத்திவிட்டு அதை வாசித்தாள்.

அவளது உச்சரிப்பை அவனால் கவனிக்க முடியவில்லை. மந்திரத்தை உச்சரித்தபடியே காஞ்ஞிர மரத்திலிருந்த ஓர் ஆணியைப் பிடித்து இழுத்தாள்.

உடனேயே மரத்திலிருந்து இளஞ்சூடான பச்சை ரத்தம் பீறிட்டது.

உண்ணிக்கிருஷ்ணன் பயந்தான்.

அந்த காஞ்ஞிர மரம் ஒருதடவை பயங்கரமாகக் குலுங்கியது.

அவசர அவசரமாக இலைகள் சலசலத்தன.

திடுமென்று அதற்குள்ளிருந்து பயங்கரமான உருவமொன்று வெளிவந்தது.

அதுவரை அவன் கற்பனையில் மட்டுமே கண்டிருந்த ரக்ஷஸ் அது.

அவிழ்த்துப் போட்ட தலைமுடியும், வெளியே நீட்டிக்கொண்டிருக்கும் கோரைப்பற்களுள்ள வாயுமாக, கூர்மையான நீண்ட நகங்களுடன் அந்த உருவம் அவர்களுக்கு முன்னால் வந்து நின்றது.

உண்ணிக்கிருஷ்ணன் சட்டென்று மந்தாகினியின் பின்னால் மறைந்து கொண்டான்.

"ஒன்றுமில்லை... ஒருதடவை பார்க்க வேண்டுமென்று தோன்றியது... அதனால்தான். உன் பெயர் காத்துதானே? சரி, நீ போகலாம்" மந்தாகினி கூறினாள்.

மந்தாகினியின் பேச்சைக் கேட்டதும் அந்த உருவம் பின்வாங்கத் தொடங்கியது. அதன் உருவமும் மாறியது.

அழகான இளம்பெண் ஒருத்தியாக மாறிய அந்த உருவம் பழையபடி மரத்துக்குள் நுழைந்தது.

மந்தாகினி பழையபடி அதே இடத்தில் ஆணியைச் செருகினாள்.

**அ**தே நேரம் எவருக்கும் தெரியாமல் முக்கியமான ஹோமம் ஒன்று நடந்துகொண்டிருந்தது, புவனேஸ்வரன் நாயரின் தேங்காய் கிட்டங்கியில்.

அஷ்டமுகப் பெருமாள் தனக்கு முன்புறமிருந்த ஹோம குண்டத்தில் உயிருள்ள, பன்னிருண்டு பெரிய தேள்களை வீசியெறிந்தார்.

அவை நெருப்பில் விழுந்து ஜொலித்தன.

நெருப்பில் கனன்ற அவற்றின் நிறம் ரத்தச் சிவப்பாக மாறியது.

சற்று நேரத்தில் அந்தத் தேள்கள் மொத்தமும் ஹோம நெருப்பிலிருந்து வெளியே ஊர்ந்துவரத் தொடங்கின.

பெருமாள் அவற்றை வெற்றிப் பெருமிதத்துடன் பார்த்துச் சிரித்தார்.

## 32

**அ**ற்புதமான அந்தக் காட்சியைக் கண்ட புவனேஸ்வரன் நாயரும் மாந்திரீகரான சேகரக் கைமளும் வியர்த்து விதிர்விதிர்த்தனர்.

அதற்குப் பிரத்தியேகமான ஒரு காரணமும் இருந்தது. தன்னுடைய வாழ்க்கையில் அதுவரை எப்படிப்பட்ட மந்திர வேலைகளை யெல்லாமோ செய்திருப்பவர் சேகரக் கைமள்.

நோய் வந்து மரணமடைந்த மனிதர்களின் உடம்பில் பிற பூதங் களைப் புகுத்தி, அந்த உடம்பை உயிருடன் உள்ளவர்கள் தொடுவதற்கு வாய்ப்பில்லாமல் செய்து மரணமடைந்த உடம்பே தானாக எழுந்து சவக்குழிக்குள் படுத்துக் கொள்ளுமாறு செய்பவர் கைமள்.

அதேபோல் திருமணமாகாமலே கர்ப்பமடைந்த பெண்களின் கருப்பையிலிருந்து குழந்தையைப் பாம்பு வடிவில் வெளியே கொண்டு வந்திருக்கிறார்.

அப்படிப்பட்ட கைமள் தன்னுடைய வாழ்க்கையில் முதன் முதலாக இப்போதுதான் இப்படிப்பட்ட காட்சிகளைப் பார்க்கிறார்.



அதுமட்டுமின்றி, தன் குருவாக இருந்த ருத்ரநாதக் கைமள் நடத்திய எத்தனையோ ஹோமங்களின்போது உதவியாளனாகவும் செயல்பட்டிருக்கிறார்.

தேள், பல்லி, ஓணான், சொறித்தவளை, சிலந்தி போன்றவற்றை ஹோமகுண்டத்தில் அவர் பலியிட்டு, அதன் மூலம் பைசாசிகமான பல வேலைகளை குரு செய்வதை நேரடியாகப் பார்த்திருக்கிறார்.

பாம்புப் புற்றுக்கு மேற்புறம் ருத்ரஹோமம் நடத்தி நினைத்த நபரின் தலையைக் கொய்து வரச்செய்து, சின்னாபின்னமாக்கு வதையும் பார்த்திருக்கிறார்.

அப்படிப்பட்ட ருத்ர நாதக் கைமள் இப்போது உயிருடன் இல்லை.

ஒருநாள் அவர் அங்கிருந்த ரத்த சாமுண்டி கோயிலுக்கு முன்புறமிருந்த இருளடைந்த காஞ்ஞிர மரத்தின் சிகரங்களுக்கு மேல் கடந்து போனதைப் பார்த்திருக்கிறார்கள்.

அதன்பிறகு அவர் என்ன ஆனார் என்று எந்தவிதமான தகவலும் இல்லை. சுமார் பதினைந்து வருடங்கள் கழித்து அந்த காஞ்ஞிர மரம் வேருடன் பெயர்ந்து விழுந்தபோது ஒரு கருநாகப் பாம்பின் எலும்புக்கூடும் சேர்ந்து விழுந்து நொறுங்கியது.

அந்த எலும்புத் துண்டுகளைச் சேகரித்து நதியில் போட்டுவிட வேண்டுமென்று சேகரக் கைமளுக்கு கனவில் ஒரு சேதி கிடைத்தது.

மறுநாள் காலையில் அந்த கருநாகத்தின் எலும்புத் துண்டுகளை ஒன்றுவிடாமல் மண் கலசம் ஒன்றில் சேகரித்து, யாருக்கும் தெரியாமல் ஆற்றங்கரையை அடைந்து ஆற்று நீரில் போட்டார். அங்கிருந்து அவர் திரும்ப முற்பட்டபோது தண்ணீரிலிருந்து காற்றுக் குமிழிகள் புறப்படும் சத்தம் கேட்டது. சேகரக் கைமள் திரும்பிப் பார்த்தார்.

என்ன ஆச்சரியம்....

ஆற்றுத் தண்ணீரில் மிதந்து கொண்டிருந்த கலசத்தின் மேற்புறம் அவர் குருநாதர் காட்சியளித்தார்.

சேகரக் கைமள் ஒருகணம் பயந்து போனார். தான் காண்பது கனவா... நனவா என்று புரியாமல் குழம்பவும் செய்தார்.

சற்று நேரத்துக்குள் குருநாதரின் வடிவம் மறுபடி ஒரு பாம்பாக மாறி, அந்தக் கலசத்துக்குள்ளேயே புகுந்து கொண்டது; கலசமும் அத்துடன் ஆற்றுக்குள் அமிழ்ந்து போனது.

அந்த ஆச்சரியத்திலிருந்து மீளாததால் சேகரக் கைமள் நாலைந்து நாள் தூங்கவே இல்லை.

அப்படிப்பட்ட ருத்ர நாதக் கைமளையே தோற்கடிக்கும் விதத்தில் ஹோமகுண்டத்துக்குள் ஹோமிக்கப்பட்ட விஷ உயிர்கள் வழக்கப்படி கருகிச் சாம்பலாகவில்லை.

அப்படியானால் இங்கு என்னதான் நடக்கிறது?

ஜ்வலித்துக் கொண்டிருக்கும் தீக்கங்குகளை நோக்கி எறியப்பட்ட உயிர்கள் அதற்குள் கிடந்து துடித்துச் சாகாமல் தீக்கங்குகளின் நிறத்துக்கு மாறி ஊர்ந்து நடக்கத் தொடங்கின.

நெருப்பால் செய்யப்பட்ட உயிர்கள் காற்று வாங்க வருவது மாதிரி ஹோமகுண்டத்துக்கு வெளியே வந்து மீண்டும் ஹோம குண்டத்துக்குத் திரும்பின. நெருப்பு என்பது அந்த உயிர்களுக்கு ஒரு பொருட்டாகத் தெரியவில்லை.

அதையே பார்த்துக் கொண்டிருந்த சேகரக் கைமள், புவனேஸ்வரன் நாயர் ஆகியோரின் இதயத்துடிப்பு சட்டென்று அதிகரித்தது.

எலும்புகளை உடைத்துக்கொண்டு இதயம் உடம்புக்கு வெளியே வந்து விழுந்துவிடுமோ என்றுகூட பயந்தனர்.

"அஷ்டமுகப் பெருமாள் உண்மையிலேயே கெட்டிக்காரன் தான்" கைமள் தன்னை மறந்து கூறவும் செய்தார்.

'ஒரு நூற்றாண்டுக்கு மேல் சமாதியில் கிடந்து மறுபடி உயிர்பெற்று வந்திருக்கிறவரல்லவா அவர்! உண்மையிலேயே அவர் சரியான ஓர் ஆவிதான்' என்று கைமள் நினைத்தார்.

கெட்டிக்காரரான தன் குருவைவிட வெகு கெட்டிக்காரர் அஷ்டமுகப் பெருமாள். அதற்குள் ஹோம குண்டத்துள் போடப்பட்ட ஜீவராசிகள் மொத்தமும் வெளியே வந்துவிட்டன. இப்போது அவற்றின் நிறம் பழுக்கக் காய்ச்சிய வெண்கலம் போல் பளபளத்தது.



கூர்மையான வால் பகுதிகளை முன்புறமாக வளைத்து உயர்த்திப் பிடித்திருக்கும் அவை நடுக்கத்தை ஏற்படுத்தின. பிறகு யாரோ கட்டளையிட்டதுபோல் அவை ஒரு வரிசையாக நின்றன.

கைமள் அவற்றை எண்ணிப் பார்த்தார்.

பன்னிரண்டு.

பன்னிரண்டும் ஒரே மாதிரி இருந்தன.

அஷ்டமுகப் பெருமாள் தன் கண்களால் ஒரு தடவை அவற்றைப் பார்த்தார். பிறகு திருப்தியடைந்தவராகப் புன்னகைத்துவிட்டு முன்புறமாகப் பாய்ந்தார்.

ஹோமகுண்டத்தின் அருகிலேயே அவரது விசித்திரமான மந்திர சூலம் தரையில் குத்தி நாட்டி வைக்கப்பட்டிருந்தது.

தனக்கு முன்பாக வரிசையில் நின்று அடுத்து என்ன கட்டளை என்பதுபோல் பார்த்துக் கொண்டிருக்கும் தேள்களைத் தாண்டி நீண்ட அவர் கையின் சுண்டுவிரலை மந்திர சூலத்தின் அரிவாள் போன்ற பகுதியை நோக்கி வீசினார்.

பட்டென்று ரத்தம் தெறித்தது.

மற்ற இருவரும் திடுக்கிட்டனர்.

ஆனால், எதுவுமே நடக்காதது போல் தன் கையிலிருந்து சொட்டும் ரத்தத்தை ஒவ்வொரு தேளின் மீதும் விழும்படியாகப் பிடித்தார்.

வியப்பால் நாயர் மற்றும் கைமளின் கண்விழிகள் வெளியே வந்து விடுவதுபோல் பிதுங்கின.

ரத்தம் விழுந்த கணத்திலேயே ஒவ்வொரு தேளுக்கும் இறக்கைகள் முளைத்தன.

ஒருவித விசில் சத்தத்துடன் அவை மேல்நோக்கி உயர்ந்து, வடக்குத் திசையை நோக்கிப் பறந்து சென்றன - விரைவாக.

**கோ**யிலில் அப்போதுதான் பள்ளிவேட்டை நடந்து முடிந்திருந்தது.

பன்னிரண்டு யானைகளும் கோயிலின் வடக்குத் திசையிலிருந்த மைதானத்தில் வரிசையாக நின்று தென்னங் கீற்றுகளைச் சுவைத்துக் கொண்டிருந்தன. அவற்றின் அருகே காஸ் விளக்குகள் ஒளியுமிழ்ந்து கொண்டிருந்தன.

பள்ளிவேட்டையும் கதகளி நாட்டியமும் நடந்து கொண்டிருந்த தால், திருவிழாவுக்கு வந்தவர்கள் கலையாமல் இருந்தனர்.

யானைகள் வரிசையாக நின்றிருந்தாலும் அவற்றின் முன்னங் கால்களைக் குறுக்குச் சங்கிலி போட்டுப் பிணைத்திருந்தனர். யானைப் பாகர்கள் தங்கள் கையிலிருக்கும் அங்குசத்தை யானைகளின் பின்காலில் சாய்ந்து வைத்திருந்தனர்.

மிகவும் பணிவுடன், தங்கள் மாவுத்தர்களுக்கு அடங்கியனவாக பின்புறக் காலில் படும் அங்குசத்தை அசையவிடாமல் யானைகள் சோகைகளைச் சுவைத்துக் கொண்டிருந்தன.

எங்கிருந்தோ பறந்து வந்த பன்னிரண்டு ஒளிப்புள்ளிகள் யானைகளின் மீது அமர்ந்தன.

அடுத்த விநாடி -

பன்னிரண்டு யானைகளும் ஒரே சமயத்தில் தீனி தின்பதை நிறுத்தின. மொத்த யானைகளும் தங்களது தும்பிக்கைகளை உயர்த்தி உரத்த குரலில் பிளிறத் தொடங்கின. பயங்கரமான அவற்றின் குரலைக் கேட்டு கதகளி அரங்கை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவர் களும் நாட்டியமாடிக் கொண்டிருந்தவர்களும் பீதியுடன் திரும்பிப் பார்த்தனர்.

யானைகளுக்கு என்ன நேர்ந்தது?

சட்டென்று அவற்றின் கால்கள் அசைந்தன.

சங்கிலிகள் உடைபட்டன. அந்தச் சத்தம் மிகவும் துல்லியமாக எல்லாருக்கும் கேட்கவும் செய்தது.

என்னமோ நடந்திருக்கிறது.

ஒவ்வொருவரும் பரஸ்பரம் அருகிலிருந்தவர்களுடன் முணுமுணுப்புக் குரலில் பேசிக்கொண்டனர்.



பார்வையாளர்கள் சட்டென்று எழுந்து நாலாபுறமும் சிதறியோடத் தொடங்கினர்.

அதற்குள் யானைகள் அங்கிருந்து இடம் பெயரத் தொடங்கி யிருந்தன.

உடைந்த சங்கலிகளையும் இழுத்துக்கொண்டு பன்னிரண்டு யானைகளும் முன்னோக்கி நகர்ந்தன.

பகவதி கோயிலின் முன்புறத்தை அடைந்தவை ஏதோ கண்ணுக்குத் தெரியாத ஒரு சக்தியின் எதிர்ப்புக்கு அடிபணிவதுபோல் சற்று நின்று, கிழக்குப் புறமாகத் திரும்பி, கருவறையின் பின்புறத்தை நோக்கி தென்புறமாக விரையத் தொடங்கின.

அதற்குள் செய்தி காட்டுத்தீ போல் பரவியது.

உண்ணிக்கிருஷ்ணனும், மந்தாகினியும் தூங்காமல் வராந்தாவில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

உண்ணிக்கிருஷ்ணனுக்குத் தூக்கம் வந்தபோதும் மந்தாகினி அவனை உறங்க விடாமல் இழுத்துவைத்துப் பேசிக் கொண்டிருந்தாள்.

“இந்த ராத்திரியில் தூங்காமல் படிப்பதா?” உண்ணி கேட்டாள்.

“கோயிலில் இப்போது கதகளிப்பாட்டு கேட்கிறதே... ஊரார் மொத்தமாகக் கண்விழித்துக் கொண்டிருக்கிறார்கள். நாம மட்டும் தூங்கலாமா?” மந்தாகினி, உண்ணியை விழித்திருக்க உற்சாகப்படுத்தி னாள்.

“இப்போது எந்தச் சத்தத்தையும் காணோமே” உண்ணி காதைக் கூர்மையாக்கிக் கொண்டு கேட்டான்.

மந்தாகினியும் கூர்ந்து கவனித்தாள்.

“உண்மைதான்!”

“ஆனா, வேற என்னென்னமோ சத்தமெல்லாம் கேட்கிறதே?” உண்ணி கூறினான்.

“ஆமாம்... ஆட்கள் அலறி ஓடுவது மாதிரித் தெரிகிறது.”

அதேநேரம் பனங்காட்டு இல்லத்தின் முன்பாக யாரெல்லாமோ ஓடும் சத்தம் கேட்டது.

“என்னங்க விஷயம்?” என்று கேட்டபடி உண்ணி ஓலைச் சுவடியைக் கீழே வைத்துவிட்டு எழுந்திருக்க முயன்றான்.

“எழுந்திருக்காதீங்க. அப்படியே உட்காருங்க... என்ன நடக்குதுன்னு தெரிஞ்சுக்கலாமே” உண்ணியை உட்கார வைத்துவிட்டு மந்தாகினி எழுந்தாள்.

ஓரிரு விநாடிகள் நின்றவாறு கவனித்தவள், பிறகு தெரு வாசற்படியை நோக்கி மெதுவாக நடக்கத் தொடங்கினாள்.

அப்போதும் ஆட்கள் திபுதிபுவென்று ஓடிவந்து கொண்டிருந்தனர்.

“என்ன நடந்தது... எதற்காக ஓடி வருகிறீர்கள்?” மந்தாகினி அவர்களைப் பார்த்துக் கேட்டாள்.

“யானைக்கு மதம் பிடித்துவிட்டது” ஓடிக்கொண்டே ஒருவர் பதிலளித்தார்.

“ஒரு யானைக்கு இல்லை... மொத்த யானைகளுக்கும்” மந்தாகினி தனக்குத்தானே பேசிக் கொள்வதுபோல் சொன்னாள். பிறகு என்ன நினைத்தாளோ மறுபடி உண்ணியிடம் வந்து நின்று கொண்டாள்.

“என்னவாம் மந்தாகினி?”

“கோயில் யானைகளுக்கு மதம் பிடிச்சிருக்காம். குழப்பம் பண்றதுக்குன்னே ஊருக்குள்ளே நாலு பேர் இருக்க மாட்டாங்களா? அப்படி யாராவது வேடிக்கை காட்டியிருப்பாங்க!” மந்தாகினி கூறினாள்.

“எதுக்காக அப்படிச் செய்யணும்?”

“நீங்க பாட்டுப் பாடினது அவங்களுக்குப் பிடிக்காமல் போயிருக்கலாம். அதனால யானையைக் கிளப்பி விட்டிருக்கலாம்.”

“அப்படியானா, அதை உடனே செஞ்சிருக்கணுமே.”

“அப்போ முடியாமப் போயிருக்கும்.”



“யானை இந்தப் பக்கமா வருமா என்ன?” உண்ணி பயத்துடன் கேட்டான்.

“வந்தா வரட்டுமே... அப்போ பார்த்துக்கலாம்” மந்தாகினி பயமில்லாதவளாகப் பேசினாள்.

“என்ன மந்தாகினி... பைத்தியம் மாதிரிப் பேசுறே? இங்கே வந்துட்டா...?”

“வந்துட்டா?”

“இந்த மனையையே இடிச்சுத் தரைமட்டம் ஆக்கிடாதா?” உண்ணிக்கிருஷ்ணன் வீட்டுக்குள் நுழைய முயன்றவாறு கேட்டான்.

**ஹோ**மகுண்டத்திலிருந்து தேள்கள் வெளியேறிப் பறந்து போனவுடன் கைமளும், நாயரும் அங்கிருந்து எழுந்தனர்.

“அதனால் ஏற்படும் விளைவுகளை தாங்கள் கண்ணாரப் பார்க்க வேண்டுமென்று அவர்கள் விரும்பியதுதான் காரணம்.

“பெருமாள் ஸ்வாமி... நான் ஒரு விஷயம் கேட்கலாமா?” நாயர் கேட்டார்.

“கேளுங்கள்” பெருமாள் கோபத்துடன் சொன்னார்.

“இந்த யானைகள் வேறு யாரையாவது ஏதாவது செய்துவிடுமோ என்றுதான்....” நாயர் இழுத்தாற்போல் கேட்டார்.

அவரது பயத்துக்குக் காரணமிருந்தது.

நாயர்தானே பன்னிரண்டு யானைகளின் செலவையும் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டவர். எனவே, ஊரார் மத்தியில் தன் பெயருக்கு ஏதாவது பழிவந்துவிடுமோ என்று பயந்தார்.

யானைகளால் பொதுமக்களுக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டால்.... உள்ளூர்க்காரர்கள் மட்டுமின்றி, வெளியூர்க்காரர்களும் ஏராளமான பெரிய மனிதர்களும் திருவிழாவுக்கு வந்திருக்கிறார்களே! எல்லாவற்றுக்கும் சிகரமாக உண்ணிக்கிருஷ்ணன் பாட்டுப் பாடி விளக்கேற்றியதுகூட அங்கிருக்கிறவர்களுக்குத் தெரியும்.

மேற்கொண்டும் அப்படிப்பட்ட அதிசயங்கள் நடப்பதற்கு வாய்ப்பு இருப்பதாகவும் எதிர்பார்த்தார்கள்.

இந்த சமயத்தில்தான் யானைகள் சங்கிலிகளை அறுத்துக் கொண்டு ஓடத் தொடங்கின.

"யானைகள் வேறு எவரையும் தொல்லைப்படுத்தாது" என்று பெருமாள் உறுதியளித்த பிறகு சேகரக் கைமளும், புவனேஸ்ரன் நாயரும் மெதுவாக அங்கிருந்து நகர்ந்தனர்.

நாயரின் கேள்வியில் மற்றோர் உள்நோக்கமும் இருந்தது அதையும் தீர்த்து வைத்தது அவரது பதில்.

'ஒருவேளை யானைகள் தங்களை ஏதாவது செய்துவிடுமோ?' என்று நாயர் பயந்தார்.

கைமளும் நாயரும் விரைந்து கோயில் மைதானத்தை அடைந்தனர். அலங்கோலமடைந்திருந்த சுற்றுப்புறத்தைப் பார்த்ததும் நாயர் முதலில் சற்று வருத்தப்பட்டாலும் பிற்பாடு மகிழ்ச்சி அடைந்தார்.

'இதையெல்லாம் நாளைக்குக்கூட சீர்செய்துவிடலாம். அதற்குள் தன் எதிராளிகள் ஒட்டுமொத்தமாகத் தொலைந்து போயிருப்பார்கள்' என்ற எண்ணம் நாயருக்குள் உறுதியடைந்தது.

கோயில் பூசாரி பயந்து நடுங்கியபடியே கருவறை வாசலில் நின்று கொண்டிருந்தார்.

"என்ன நடந்தது திருமேனி?" நாயர் கேட்டார்.

"யானைகள் சங்கிலியை அறுத்துக்கொண்டு தெற்குப்பக்கமாகப் பாய்ந்திருக்கின்றன" திருமேனி பதற்றத்துடன் பேசினார்.

"அப்படியா, வாங்க... நேரடியாகவே போய் என்ன ஏதுன்னு பார்த்து விடலாம்" கைமள் அழைத்தார்.

அதற்குள் பன்னிரண்டு யானைகளும் பனங்காட்டு மனை வாசலை நெருங்கிவிட்டிருந்தன!



## 33

**தெ**ரு வாசற்படியில் சங்கிலிகள் குலுங்கும் சத்தம் கேட்டதும் உண்ணிக்கிருஷ்ணன் வாசிப்பை நிறுத்திவிட்டு, அந்தப் பக்கமாகப் பார்த்தான்.

வெளிப்புறமிருந்த இயற்கை வெளிச்சத்தில் யானைகளின் முகபடாம்களிலிருந்த பித்தளைக்குமிழ்கள் தெளிவற்றுத் தென்பட்டன.

"அங்கே பார்த்தியா?" உண்ணிக்கிருஷ்ணன் கேட்டான்.

"யானைகளா... ஓ... பன்னிரண்டு யானைகள்தானே?" மந்தாகினி எழுந்தாள். வராந்தாவிலிருந்து முற்றத்தில் காலெடுத்து வைத்தாள். அதற்குள் யானைகள் பன்னிரண்டும் தும்பிக்கைகளை உயர்த்தி முன்கால்களால் மனையின் வெளிப்புறச் சுவரை இடிக்க முற்பட்டன.

சட்டென்று தெருவாசற்படிக்கு வந்த மந்தாகினி, வலது கையை 'நிறுத்துங்கள்' என்பதுபோல் உயர்த்தியபடி சொன்னாள்: "குழந்தைகளா, என்ன செய்யறீங்க?" அவள் குரல் ஓர் அதட்டல் போல் இருந்தது.

அவள் வாயிலிருந்து வார்த்தைகள் வெளிவந்த விநாடியில் யானைகள் நின்ற நிலையிலேயே அசைவற்றுப் போயின. பன்னிரண்டு யானைகளும் பின்னங்கால்களை மட்டும் தரையில் ஊன்றி நின்றுகொண்டிருந்தன.

சங்கிலி விளக்கை எடுத்துக்கொண்டு அதற்குள் அவளை நெருங்கினான் உண்ணிக்கிருஷ்ணன். அவளுக்கு ஏதாவது ஆபத்து ஏற்படுமோ என்ற பயத்தினால் ஓடி வந்தான்.

அங்கு அவன் கண்டது என்ன... ஓர் அற்புதமான காட்சி. உண்ணி தன் வாழ்க்கையில் இதுவரை இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தைச் சந்தித்ததில்லை.

"மந்தாகினி.... என்ன இதெல்லாம்?" அவன் கேட்டான்.

"அதிசயமா இருக்குது இல்லையா?" மந்தாகினி உண்ணிக் கிருஷ்ணனை நோக்கித் திரும்பினாள்.

அவளது தைரியமும், பயமற்ற தோரணையும் அவனை மேலும் வியப்புக்கு உள்ளாக்கியது.

“உனக்கு பயம் கிடையாதா?”

“எதுக்கு பயப்படணும்? இந்த யானைங்கள்லாம் ஒரு காலத்துல இந்த மனையைச் சேர்ந்ததாகக்கூட இருக்கலாம். பழைய ஜென்ம வாசனையாலே யானைங்க உங்களைப் பார்க்க வந்ததாகவும் இருக்கலாம்” மந்தாகினி குறும்பாகச் சிரித்தபடி சொன்னாள்.

உண்ணிக்கு எதுவும் புரியவில்லை.

குழந்தை ஒன்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது போல் அவளையே மிரள மிரளப் பார்த்தபடி நின்றான் அவன்.

“என்னங்க....?” அவள் அழைத்தாள்.

“என்ன?”

“ரொம்ப நாளுக்கு முன்னாடி இந்த இல்லத்தைச் சேர்ந்த தம்புரான்கள் யானை மீது அமர்ந்து திருவிழாவுக்குப் போவார்கள் என்று என் அப்பா சொல்லிக் கேள்விப்பட்டிருக்கிறேன்” அவள் யானைகளுக்கு நேராக, உண்ணிக்குத் தெரியாமல் கை வீசியபடி பேசினாள்.

அதுவரை பின்னங்கால்களால் நின்றிருந்த யானைகள் முன்னங்கால்களைக் கீழே இறக்கி, வசதியாக நின்றுகொண்டு அவனை நோக்கித் தும்பிக்கைகளை விசிறுவதுபோல் அசைத்தன.

உண்ணிக்கு விஷயம் புரியவில்லை.

“இருக்கலாம்... நான் இதுவரை யானை மீது அமர்ந்ததே இல்லை” அவன் வெட்கத்துடன் கூறினான்.

“இப்போது ஏறி உட்காருகிறீர்களா?” அவள் கேட்டாள்.

“வேண்டாம். யாராவது பார்த்தால் என்ன நினைப்பார்கள்?” தயக்கத்துடன் பின்னுக்கு நகர்ந்தபடி பேசினான்.

“அதுக்கென்ன... யார் பார்த்தாலும் என்ன? நானும்தான் அந்தக் காட்சியைப் பார்க்கிறேனே? அதோ தந்தம் நீண்ட யானை



இருக்கிறதே... அதன் பெயர் கேசவன்... நான் அதைக் கூப்பிடுகிறேன். அதன்மீது ஏறிக்கொள்ளுங்கள்!” மந்தாகினி தெரு வாசற்படியிலிருந்து சற்று விலகி நின்று சைகை காட்டினாள்.

அந்த யானை மெதுவாகத் தலையாட்டியபடி அவளை நெருங்கி நின்றது.

“நீ சொல்றதை ஒரு குழந்தை கேட்டுக்கிற மாதிரி, யானை எப்படி அனுசரிக்குது? இதையெல்லாம் எங்கேருந்து கத்துக்கிட்டே மந்தாகினி?” உண்ணி கேட்டான்.

“எல்லாம் அப்பாதான் கத்துக்கொடுத்தார். அவருக்கு நிறைய விஷயங்கள் தெரியும். கேசவா, அவரை உன் முதுகில் ஏற்றிக்கொள்.”

உடனே யானை தனது முன்னங்கால்களை மடக்கி முன்புறமாகத் தாழ்ந்தது.

“ம்... மேலேறி உட்காருங்கள்” மந்தாகினி வற்புறுத்தினாள்.

“வேண்டாம் மந்தாகினி.”

“இப்படிச் சொன்னால் எப்படி? என்மீது உங்களுக்கு அன்பு இருப்பது உண்மையானால், நான் சொன்னதைச் செய்யுங்கள்” வற்புறுத்தினாள்

மந்தாகினி இப்படிச் சொன்ன பிறகு உண்ணியால் அதைத் தட்ட முடியவில்லை. தன் கையிலிருக்கும் சங்கிலி விளக்கை மந்தாகினியிடம் கொடுத்துவிட்டு யானையை நெருங்கினான்.

அப்போதும் யானை குனிந்த நிலையிலேயே நின்றிருந்தது. யானையின் கழுத்தில் கிடந்த கயிற்றைப் பிடித்துக்கொண்டு உண்ணி மேலேறியபோது, யானை தனது தும்பிக்கையால் அவனுக்கு உதவியது.

யானையின் முதுகில் ஏறி அமர்ந்தான்.

“சரி, கோயிலை மூன்று தடவை வலம் வந்தபிறகு திரும்பி வாருங்கள்” மந்தாகினி, யானைகளிடம் கூறினாள்: “திரும்பி வரும்போது கேசவன் மட்டும் வந்தால் போதும். அவரைப் பத்திரமாப் பார்த்துக்கங்க.”

அவள் குரல் ரகசியம் பேசுவது போல் ஒலித்தது.

**கோ**யில் மைதானத்தில் ஒரே களேபரமாக இருந்தது. ஆனால், யாருக்கும் எதுவும் புரியவில்லை. ஒருசிலர் மைதானத்திலருந்து வெளியேறாமல் காத்திருந்தனர். மைதானத்துக்கு வெளியே மேகங்கள் சூழ்ந்து வெளிச்சத்தை மறைத்துக் கொண்டிருந்தன.

யானைகள் மைதானத்தை விட்டு வெளியேறிவிட்டதால் மைதானத்தில் மீதமிருப்பவர்களும், கதகளி நாட்டியக்காரர்களும் ஒருவிதமான குழப்பத்துடன் தங்கள் தங்கள் இடத்திலேயே நின்று கொண்டிருந்தனர்.

வேகமாகப் புறப்பட்டுப் போன யானைகள், எப்போது வேண்டுமானாலும் திரும்பி வரலாம். இருட்டில் கண்மண் தெரியாமல் ஓடியவர்கள்கூட அபாயம் கடந்துவிட்டது என்பதைத் தெரிந்து கொண்டதும் அங்கங்கே நின்று மூச்சு வாங்கிக்கொண்டு தாங்கள் இருப்பது எந்த இடம் என்பதை நிதானிக்க முயன்று கொண்டிருந்தனர். மைதானத்தில் வெளிச்சம் தெரிந்ததுடன் அங்கிருந்து எந்தவிதமான சத்தமும் எழாததால் மீண்டும் கோயிலை நோக்கி வந்தனர் பக்தர்கள்.

அப்போது கோயில் மைதானத்தில் மீண்டும் சங்கிலிகளின் சத்தம் தெளிவாகக் கேட்டது. எல்லாரது பார்வையும் அந்தப் பக்கமாகத் திரும்பின.

'அதோ, ஒரு யானை வருகிறது. ஆனால், நிதானமாக நடந்து வருகிறது.' வேடிக்கை பார்த்தவர்கள் தங்கள் கண்களையே நம்ப முடியாமல் கண்களைக் கசக்கிக்கொண்டு பார்த்தனர். அங்கிருந்த விளக்கு வெளிச்சத்தில் யானையின் மீது அமர்ந்திருக்கும் உண்ணிக்கிருஷ்ணனின் உருவம் தெளிவாகத் தெரிந்தது.

ஏற்கெனவே சங்கீதம் பாடி அதிசயம் நிகழ்த்திய உண்ணிக் கிருஷ்ணன்!

''பனங்காட்டு மனைக்கார உண்ணி அதோ யானை மேல் உட்கார்ந்திருக்கிறார்'' யாரோ ஒருவர் உரத்த குரலில் கூறினார்.

கேசவன் என்ற யானையைத் தொடர்ந்து மற்ற யானைகளும் வந்தன. அவை ஒழுங்குமுறையில் வரிசையாக வந்தன.



கனவில் நடக்கும் காட்சி போல் ஜனங்கள் நடப்பதை வேடிக்கை பார்த்தனர்.

உண்ணிக்கிருஷ்ணனைச் சுமந்து வந்த யானை கோயிலை வலம் வரத்தொடங்கியது. மற்ற யானைகளும் அப்படியே செய்தன.

மூன்று தடவை வலம் வந்த பிறகு மற்ற யானைகள் தீனி கிடந்த தங்களது பழைய இடத்துக்குத் திரும்பின. கேசவன் மட்டும் உண்ணியைச் சுமந்துகொண்டு பனங்காட்டு மனையை நோக்கித் திரும்பியது.

"உண்ணி சாதாரண ஆள் இல்லேன்னு தெரியுதுப்பா!" ஊர்க்காரர்களில் ஒருவர் சொன்னார்.

"அதெல்லாம் சமீப காலமாகத்தான். அதுவரைக்கும் காதும் கேட்காம, வாய் பேசவும் முடியாத கிறுக்கனாத்தான் இருந்தார்" மற்றொருவர் பதிலளித்தார்.

"சிலரோட ஜாதகம் அப்படி... தசாபுக்தி மாறிடுச்சுன்னா, மேலே மேலே போய்க்கிட்டே இருப்பாங்க" இன்னொருவர் பேசினார்.

"சாத்துக்குட்டி, உனக்கு விஷயம் தெரியுமா? அந்த உண்ணிகூட யாரோ ஒரு பொண்ணு புதுசா வந்து சேர்ந்திருக்கிறாள்" நடப்பதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த கேசவனின் பாகன் பரமு நாயர், அருகிலிருந்த மற்றொரு பாகனிடம் கூறினார்.

"பொண்ணா, ஒருவேளை கல்யாணம் பண்ணிட்டு வந்திருப் பாரோ என்னவோ?" வேறொரு பாகன் அவர்களிடையே புகுந்து பேசினார்.

"அப்படியெல்லாம் இல்லேன்னு பேசிக்கிறாங்க. பொண்ணும் லேசுப்பட்டவள் இல்லேன்னு தெரியுது" பரமுநாயர் தாழ்ந்த குரலில் பேசினார்.

"அப்படின்னா?"

அந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல முற்பட்ட பரமு நாயரின் முகத்தில் எதுவோ வந்து விழுந்தது. சட்டென்று அவர் அதைக் கையில் எடுத்தார். அது எண்ணெயில் நனைந்த திரி.

"என்ன இது" பரமு ஆச்சரியத்துடன் திரியைக் கையால் தடுத்துப் பிடித்தபடி பேசினார்.

"விளக்குத் திரிதான். ஆகாயத்திலிருந்து வந்து விழுந்தது" பரமு முகத்தில் படிந்திருந்த எண்ணெய்ப் பசையைத் துடைத்தபடி பேசினார்.

தான் பேசியதில் ஏதோ விபரீதம் இருந்திருக்க வேண்டும் என்று உடனேயே அவருக்குப் பிடிபடவும் செய்தது. உண்ணியின் வீட்டிலுள்ள பெண்ணைப் பற்றியல்லவா பேசிக் கொண்டிருந்தோம்? அப்போதுதானே இது நடந்தது. எனவே, மேற்கொண்டு அதைப்பற்றிப் பேசாமலிருப்பதே நல்லது என்று தீர்மானித்தார்.

"என்னமோ சொல்ல வந்தீங்க... அப்புறம் அப்படியே நின்னு போச்சே?" ஒரு பாகன் கேட்டார்.

"அப்படி எதுவும் சொல்ல வந்ததா எனக்கு ஞாபகமில்லையே" பரமு நாயர் மழுப்பினார்.

உண்ணிக்கிருஷ்ணனைச் சுமந்து வந்த கேசவன் பனங்காட்டு மனையின் முன்னால் வந்து நின்றது.

மந்தாகினி அப்போதும் அங்கேயே நின்று கொண்டிருந்தாள்.

யானை முன்னங்கால்களை மடக்கியது. உண்ணி பக்குவமாக யானை மேலிருந்து இறங்கினான்.

"கேசவா, இனி நீ போகலாம்!" மந்தாகினி கூறினாள்.

நீண்ட தந்தங்களை உடைய அந்த யானையும் நல்ல பிள்ளை போல் மௌனமாக வந்த வழியே திரும்பியது.

**பு**வனேஸ்வரன் நாயரும், கைமளும் இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்கள் ஆலமரத்தை நெருங்கும்போதுதான் உண்ணி யானை மீது அமர்ந்து கோயிலை அடைந்திருந்தான்.

"கைமள், பார்த்தீங்களா?" நாயர், பல்லைக் கடித்தபடி கேட்டார்.

கைமள் எதுவும் பதிலளிக்கவில்லை.

"நாம கண்ணால் பார்த்ததெல்லாம் நிஜமா?" என்ற நாயர் நம்பிக்கை வராமல் தன் மணிக்கட்டுப் பகுதியைக் கிள்ளிப் பார்த்துக் கொண்டார்.



"அப்படியானால், நாம நினைச்சது மாதிரி விஷயம் அதேதான்" கைமள் கூறினார்.

"எதுக்குறீங்க?"

"அவள் சாதாரணமானவள் இல்லை."

"யாரு, உண்ணிகூட இருக்கிறவள்தானே?"

"அவளேதான்."

"இருக்கட்டுமே... நம்ம பெருமாள் அவளைவிட எவ்வளவு பெரிய கெட்டிக்காரர்?"

"அதுவும் உண்மைதான்."

"அப்புறம் எப்படி இந்த மாதிரி நடக்குது?"

"அதுதான் எனக்குப் புரியலை. இதுல வேற என்னென்னவோ சிக்கலுங்க இருக்கிறதாத் தோணுது..." கைமள் தலையில் கை வைத்தபடி பேசினார்.

எவ்வளவு யோசித்துப் பார்த்தாலும் கைமளுக்கு எதுவும் பிடிபடவே இல்லை

ஹோமாக்னியின் கனிந்த கங்குகளுக்கு மத்தியில் விழுந்த பிறகும், புதிதாக உயிர் பெற்றவை போல் ஊர்ந்த தேள்கள்!

எப்படிப்பட்டவர்கள் பார்த்தாலும் வியப்படையும் அந்தக் காட்சி, இப்போதும் கைமளின் மூளைக்குள் குறுகுறுப்பை ஏற்படுத்தியது.

'சே... யோசிக்கவே முடியவில்லையே!' கைமள் நடந்ததை மறுபடி நினைவில் கொண்டு வந்தார்.

அஷ்டமுகப் பெருமாள் தன் சுண்டு விரலைக் காயப்படுத்தி, ரத்தத் துளிகளைச் சொட்டச் செய்ததும், தேள்கள் இறக்கைகள் முளைத்துப் பறந்தன.

இதெல்லாம் துர்மந்திரவாத வகையைச் சேர்ந்தவைதான். உண்மையைச் சொன்னால், தற்போது இப்படிப்பட்ட வேலைகளைச் செய்யக்கூடிய மந்திரவாதிகள் வேறெவருமே இல்லை எனலாம்.

அப்படிப் பார்த்தால் அஷ்டமுகப் பெருமாள்கூட உயிரோடு இருக்கும் ஒருவர் இல்லையே? எந்தக் காலத்திலோ இறந்து போனவர்.

அப்படிப்பட்டவருக்கும் தோல்வியா?

உண்மையில் என்னதான் நடக்கிறது?

**அ**ஷ்டமுகப் பெருமாள் தனது இருப்பிடத்தில் தயாராக்கியிருந்த ஹோமகுண்டத்துக்கு முன்னால் அமர்ந்து இடைவெளியில்லாமல் மந்திரம் ஜெபித்துக் கொண்டிருந்தார். துர்தேவதைகளை மனதுள் இருத்தி, அவற்றின் சிலை வடிவங்களை ஹோமகுண்டத்தின் மறுபுறம் ஆவாஹனம் செய்து வைத்திருந்தார்.

திடுமென்று ஹோமகுண்டத்தில் எரிந்து கொண்டிருந்த நெருப்பு ஜுவாலையின் நிறம் மாறத் தொடங்கியது.

நெருப்புக் கங்குகள் மங்கலடையத் தொடங்கின.

"என்ன"அதைக் கவனித்த அஷ்டமுகப் பெருமாளின் சிவந்த கண்கள் மேலும் சிவந்தன. விழிகளை ஒட்டியிருந்த நரம்புப் பகுதிகளில் திடுமென்று ரத்த ஓட்டம் அதிகரித்தாற் போலிருந்தது.

ஏதோ விபரீதம் நடந்திருப்பதாக அவருக்குத் தோன்றியது.

தீக்கங்குகள் இப்போது முற்றிலுமாக வெறும் கரிக்கட்டைகளாக மாறியிருந்தன. ஹோமகுண்டத்தின் நெருப்பு சுத்தமாக அணையப் போவதை உணர்ந்தார்.

'சட்டென்று அடுப்பு ஊதும் குழாயை எடுத்து ஹோம குண்டத்தை ஊதினார்.

மிகச்சிறிய தீக்கங்குகள் கொஞ்சம் பளபளத்தன.

ஹோமப் பொடியைத் தூவியதைப் போல் நெருப்புத் துணுக்குகள் மேற்புறம் உயர்ந்தன.

நன்றாக உலர்ந்த மரத்துண்டுகளை நெய்யில் முக்கி, அக்னி மந்திரம் ஜெபித்தபோது நெருப்பு கொழுந்துவிட்டு எரிந்தது. அவற்றைக் கையாலேயே எடுத்து ஹோமகுண்டத்துக்குள் எறிந்தார். ஆனால், அப்படி எரிந்து கொண்டிருந்த மரத்துண்டுகளும் ஹோம குண்டத்துள் விழுந்ததும் அணையேவ செய்தன.



"ஓகோ... சவாலுக்கு இதுவும் ஒரு வழியா?" பெருமாள் எவரிடம் என்றில்லாமல் பொருமினார்.

அப்போது மற்றொரு காட்சி தென்பட்டது.

அணைந்துபோன ஹோமகுண்டத்தின் சாம்பல் மற்றும் கரித்துண்டுகளை விலக்கிக்கொண்டு பன்னிரண்டு தேள்களும் எந்தவித மாற்றமுமின்றிப் பழையபடி திரும்பி வந்தன.

அஷ்டமுகப் பெருமாள் அசந்தே போனார்!

கோயிலில் நடந்த சம்பவத்தை ஜீரணித்துக் கொள்ள முடியாமல் கைமளும் புவனேஸ்வரன் நாயரும் கற்சிலைகள் போல் அசைவற்றுப் போனார்கள்.

"நிலைமை இப்படியே தொடர்ந்தால் என்ன செய்வது கைமளே?" நாயர் கேட்டார்.

"இதெல்லாம் மாந்திரீகத்தில் சகஜம். எதிராளி ஒருவருக்கு ஒருவர் தங்களது பலத்தைப் பயன்படுத்தத்தானே செய்வார்கள்? கடைசியில் கெட்டிக்காரன் ஜெயிப்பதுதான் வழக்கம். அவசரப்படாதீர்கள், கொஞ்சம் பொறுங்கள்!" கைமள், நாயருக்கு ஆறுதல் சொன்னார்.

புவனேஸ்வரன் நாயரும் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டுதான் இருந்தார். எனவே, கைமள் சொல்வதும் 'சரிதானே' என்று ஆறுதல் அடைந்தார்.

## 34

**கோ**யில் மைதானத்தில் நடந்த சம்பவங்களைச் சொல்வதற்காக கைமள், பெருமாளின் வீட்டை நோக்கி ஓடினார்.

பெருமாள் வெளித்திண்ணையில் உட்கார்ந்திருந்தார். கைமள் சொன்னதையெல்லாம் கேட்டபிறகு பெருமாள் சொன்னார்: "பரவாயில்லை, முடிஞ்சவரைக்கும் அவளும் விளையாடிப் பார்க்கட்டும். ஒரு கட்டத்துல தானாவே... என்னால முடியாதுன்னு கையைத் தூக்கத்தானே போறாள்... அதனால போறவரைக்கும் போகட்டும்!"

“நீங்க சொல்றதும் நியாயம்தான். இருந்தாலும் அவள் லேசுப் பட்டவள் இல்லேன்னு தெரியுது” கைமள் தன் அபிப் பிராயத்தைத் தெரிவித்தார்.

“நீங்க சொல்றது உண்மையா இருந்தா, எனக்கு ரொம்பவும் சந்தோஷம். சமபலம் கொண்ட விரோதிகளை எனக்கு ரொம்பவும் பிடிக்கும். அப்பத்தான் சுவாரஸ்யமாப் போராட முடியும்? சோர்ந்து போகக்கூடாதுங்கற உறுதி பிறக்கும். சரி, அதெல்லாம் எப்படி இருந்தாலும் என்னிக்காவது ஒருநாள் நான் அவளோட மர்மங்களைக் கண்டுபிடிக்காம விடமாட்டேன்” பெருமான் தனக்கு அருகிலிருந்த சூலத்தை வருடியபடி பேசினார்.

“இந்த விஷயத்தில் தோல்வியடைந்து விட்டால் அதன் பிறகு நாம் இருவரும் உயிருடன் இருக்க முடியாது!” பெருமாள் இந்த விஷயத்தை மிகவும் சாதாரணமாக எடுத்துக்கொள்ளக் கூடாது என்பதற்காக கைமள் சொல்லி வைத்தார்.

பெருமாள் சற்று நேரம் மௌனமாக யோசனையில் ஆழ்ந்தார் பிறகு திண்ணையிலிருந்து முற்றத்துக்கு வந்தவர் அண்ணாந்து ஆகாயத்தைப் பார்த்து நட்சத்திரங்களின் நிலையை ஆராய்ந்தார் நள்ளிரவு ஆகப்போகிறது.

தனக்குள் எதையோ முனகியபடி வந்தவர் தன் கையிலிருந்த சூலத்தால் வராந்தாவில் ஓர் அரைவட்டம் வரைந்தார். அதன் மேற்புறமாகத் தன் வலது கையை உயர்த்தினார்.

“அக்னி” பெருமாள் உரத்த குரலில் அழைத்தார். அடுத்த விநாடி அவரின் உள்ளங்கையில் கோள வடிவிலான வெளிச்சப்பந்து ஒன்று மின்னியது. அது ஜுவாலை விட்டு எரிந்து கொண்டிருந்தது.

தான் வரைந்த அரை வட்டத்துக்குள் அதை வைத்தார்.

கைமள் வியப்புடன் அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண் டிருந்தார்.

எரிந்து கொண்டிருந்த அக்னி ஜுவாலையின் மேற்புறமாக வலது கையைக் கவிழ்த்துக் குடை மாதிரிப் பிடித்து உயர்த்தினார். கையுடன் மேல்நோக்கி எழுந்த ஜுவாலை வட்டவடிவில் எரிந்து கொண்டிருந்த



“ஓம்... ஹ்ரீம்... ரத்த சாமுண்டீஸ்வரியாய நமஹ” பெருமாள் மந்திரித்தார்.

வட்ட வடிவில் கண்ணாடி போல் எரிந்து கொண்டிருந்த ஜுவாலைக்குள் கைமள் ஒரு காட்சியைக் கண்டார்.

பயங்கர வடிவம் கொண்ட ரத்த சாமுண்டி தேவியின் உருவம் அதற்குள் அசைவுடன் தென்பட்டது. அவளின் சிவந்த கண்கள் தன்னை உற்றுப் பார்ப்பதுபோல் கைமளுக்குத் தோன்றியது.

கைமள் ஒருகணம் நடுங்கினார்.

“தேவி, அவளின் உருவத்தைக் காட்டித் தாருங்கள்!” பெருமாள் அந்த உருவத்திடம் வேண்டினார்.

கண்மூடித் திறப்பதற்குள் அந்த உருவம் மறைந்து, அதற்கு பதில் வேறொரு உருவம் தெளிவடைந்து வந்தது. உண்மையில் கைமள் அசந்தே போனார். அந்த உருவம் ஓர் ஓவியம் போலில்லாமல் முப்பரிமாணத்துடன் தெரிந்தது.

உண்ணிக்கிருஷ்ணன் மந்தாகினியின் மடியில் தலைவைத்துப் படுத்திருந்தான்.

வெள்ளை நிறப் புடவையை அவள் அணிந்திருந்தாள். மிகவும் மெல்லிய சருகு போலிருந்த அந்தப் புடவையால் அவள் உடம்பின் அழகைச் சிறைப்பிடிக்க முடியவில்லை. அழகான முகம்... அதற்கேற்றாற்போல் செதுக்கி எடுத்தது போன்ற உடம்பு. உயர்ந்திருந்த அவள் கையின் பரப்பைத் தாண்டி உயர்ந்திருக்கும் மார்பகப் பகுதிகள், உன்மத்தம் ஊட்டுவதாக இருந்தன.

உண்ணிக்கிருஷ்ணன் அவள் முகத்தைப் பார்த்தபடி எதையோ கேட்டிருக்க வேண்டும். அவள், அவன் கன்னத்தை வருடியவாறு பதிலளித்தாள்.

அவர்களுக்கு முன்னால் பூஜையறை வாசலில் எரிந்து கொண்டிருந்த நிலவிளக்கின் வெளிச்சம் அவர்களின் மீது படிந்து கொண்டிருந்தது.

“இவ்வளவும் அவனுக்காகத்தானே!” அஷ்டமுகப் பெருமாள் வெறுப்புடன் கேட்டார்.

“இப்படிப்பட்டவள் அந்த ஒன்றுக்கும் உதவாத நம்பூதிரியைக் காப்பாற்றுவதற்காகத் தன் சக்தியைச் செலவிட்டுக் கொண்டிருக்கிறாள். எங்கிருந்துதான் வந்து சேர்ந்தாளோ?” கைமள் பேசினார்.

“உங்கள் பேச்சின்படி பார்த்தால் அந்த நம்பூதிரிப் பையன் தொலைந்துவிட்டால், அவளும் வந்த வழியைப் பார்த்துப் போய் விடுவாள் இல்லையா?”

“அதுக்குப் பிறகு அவளுக்கு அங்கே என்ன வேலை?”

“ம்....” பெருமாள் பெருமூச்சு விட்டபடி தலையாட்டினார்.

பெருமாளின் திட்டம் கைமளுக்கு நன்றாகப் புரிந்தது. ‘உண்ணிக்காக வந்திருப்பவள், அவன் போனபிறகு அங்கு வசிப்பாளா என்ன?

இதுவரை எவருக்கும் தோன்றாத ஒரு நல்ல யோசனை அது.’

கைமள் மீண்டும் அக்னியில் தென்படும் காட்சியைப் பார்த்தார்.

எப்படிப்பட்டவர்களும் மெய்ம்மறந்து உட்கார்ந்து ரசிக்கக்கூடிய காட்சி அது.

பெருமாளே அப்படியே உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருந்தார்.

“அவனை அங்கிருந்து எழுந்திருக்க விடாமலே கொல்ல வேண்டும். அதை அவளும் கண்ணாரப் பார்க்க வேண்டும்!” சொன்ன பெருமாள் அங்கிருந்து எழுந்தார்.

தனது பூஜையறைக் கதவைத் திறந்தார்.

உள்ளிருந்து சூலம் ஒன்றை எடுத்து வந்தார்.

ஏறத்தாழ ஆறடி நீளமுள் அந்த சூலத்தை அக்னியில் காட்டினார்.

விரைவிலேயே அந்த சூலத்தின் மும்முனைகளும் கனிந்து சிவந்தன.

“இது போய்விட்டு வரட்டும்...” என்ற பெருமாள் சூலத்தை மேற்குத் திசையை நோக்கி வீசி எறிந்தார்.



அந்தரத்தில் காற்றைப் பிளந்துகொண்டு சூலம் ‘ஸ்... ஸ்’ என்ற சத்தமெழுப்பியபடி பாய்ந்து போனது.

“அது அவன் மார்பில் பதியாமல் திரும்பி வராது!” பெருமாள் திடமான நம்பிக்கையுடன் பேசினார்.

மந்தாகினியின் மடிமீது தலைவைத்துப் படுத்தபடி, உண்ணிக் கிருஷ்ணன் யானை மீது ஏறிய அனுபவத்தை மகிழ்ச்சியுடன் விவரித்துக் கொண்டிருந்தான்.

“இன்னிலேர்ந்து நீங்க ஒரு சங்கீத சாம்ராட்டாவும் மாறிட்டீங்க” மந்தாகினி அவன் மார்பில் விரல்களால் அளைந்தபடி பேசினாள்.

“நடக்கிறதையெல்லாம் பார்த்தா எனக்கு ஒரு கனவு மாதிரித் தோணுது” உண்ணி, அவள் கண்களைப் பார்த்தபடி கூறினான்.

“நீங்க இன்னும் ஒரு விஷயத்தைத் தெரிஞ்சுக்கணும்.”

“மேற்கொண்டு எதையும் நான் தெரிஞ்சுக்கத் தயாரா இல்லை.”

“அப்புறம்...?”

“நான் எல்லாத்தையும் தெரிஞ்சுகிட்டா, நீ என்னை விட்டுப் போய்டுவியே.”

மந்தாகினி அதற்கு பதில் சொல்லாமல் ஆகாயத்தை ஏறிட்டாள்.

கார்த்திகை நட்சத்திரம் கண்களுக்குத் தட்டுப்பட்டது. அவனிடமிருந்து அப்படியொரு வார்த்தை பிறக்குமென்று அவள் சற்றும் எதிர்பார்க்கவே இல்லை. ஆனால், அந்த வார்த்தைகள் அவளுக்கும் மனவருத்தத்தை ஏற்படுத்தியது. தொண்டை அடைத்துக் கொண்டாற் போலிருந்தது.

“நான் சொன்னது உண்மைதானே? அதனால்தான் பதில் சொல்லலை இல்லையா?” உண்ணி திரும்பவும் கேட்டான்.

அப்போது கிழக்குத் திசையிலிருந்து ஏதோ ஒன்று காற்றைக் கிழித்துக் கொண்டு வரும் சத்தம் கேட்டது. மந்தாகினி தலை உயர்த்திப் பார்த்தாள்.

திரிசூலம் ஒன்று பாய்ந்து வருகிறது. நெருப்புத் துணுக்குகளை உதிர்த்தவாறு சீறிப் பாய்ந்து வந்த சூலம், உண்ணிக்கிருஷ்ணனின் மார்புப் பகுதியை நெருங்கிய அதே கணத்தில்... மந்தாகினியின் கைவிரல்கள் அதைத் தடுத்து நிறுத்தின.

சூலம் இப்போது அவள் விரல்களை உரசியபடி அந்தரத்தில் மிதந்து கொண்டிருந்தது.

உண்ணி, இதையெல்லாம் கவனிக்காமல் அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

அவள் விரல்களை ஊடுருவி சூலம் முன்னேற முயன்ற போதிலும் முடியாமல் போனது.

ஓரிரு விநாடிகளுக்குப் பிறகு அவள் சூலத்தை விசையுடன் பின்னுக்குத் தள்ளினாள்.

ஒருகணம் தடுமாறியது போல் பின்வாங்கிய சூலம், சர்ரென்று திரும்பி வந்த வேகத்தில், வந்த திசையிலேயே சீறிப் பாய்ந்தது.

மந்தாகினி உண்ணியைத் தன் பக்கமாக இழுத்தாள். அவன் தன் விரல்களால் அவள் வயிற்றுப் பகுதியில் கோலம் போட்டான்.

"என்னங்க, வழக்கமில்லாம?" அவள் கேட்டாள்.

"மந்தாகினி, நீ வந்து மூன்று மாதங்கள் ஓடிவிட்டன. இன்றுவரை நீ துளசிமாடத்தில் விளக்கேற்றாமல் ஒருநாள்கூட இருந்ததில்லை. சமையல் கட்டிலிருந்தும் நீ ஒதுங்கியிருந்ததாகத் தெரியவில்லை" அவளைப் பார்த்துப் புன்னகைத்தவாறு கேட்டான்.

மந்தாகினிக்கு விஷயம் புரிந்தது. அவள் மெதுவாக, அவன் கையை அங்கிருந்து அகற்றினாள்.

"நான் சொன்னது உனக்குப் புரியலையா?" உண்ணிக் கிருஷ்ணன் அவளின் இரண்டு தோள்களையும் பிடித்தபடி கேட்டான்.

"புரியாம என்ன? அதுக்கெல்லாம் இப்ப என்ன அவசரம்? இந்த மாதிரி சந்தர்ப்பத்தில் நமக்குக் குழந்தைகள் பிறந்தால் நம்மால் இப்படியெல்லாம் இருக்க முடியுமா?" அவள், அவன் கணுக்கால் பகுதியை வருடியபடி பதிலளித்தாள்.



"நான் அதைச் சொல்லவில்லை மந்தாகினி. இதோ இந்த சொத்துகளையெல்லாம் கவனமாகப் பார்த்துக்கொள்ள யாராவது வேண்டாமா? அந்த நாயருக்கு எத்தனை பையன்கள்... அதுவே எனக்கு பயத்தை ஏற்படுத்துகிறதே."

"நேரம் வரும்போது என்ன செய்யணும்னு நான் சொல்றேன். அப்போ நடக்கவேண்டியதெல்லாம் நடக்கவும் செய்யும்."

அவள் சொன்னதற்கு என்ன அர்த்தம் என்று உண்ணிக் கிருஷ்ணனுக்குப் புரியவில்லை. ஆனால், அந்த விநாடியிலிருந்து அவனுக்குள் ஒரு சந்தேகம் வேர் விடவும் செய்தது.

'மாதவிலக்கு ஆகாமல் இவளால் எப்படி மாதம் முப்பது நாளும் துளசி மாடத்தில் விளக்கேற்ற முடிகிறது? மூன்று நாட்களாவது குறைந்தபட்சம் ஒதுங்கியிருக்க வேண்டாமா?' அதுதான் அவள் சிந்தையைக் குடைந்து கொண்டிருந்தது. 'இதுவரை ஒருநாள்கூட அவள், அவனை விட்டுப் பிரிந்து தனியாகப் படுத்துக்கொள்ளவும் இல்லை. இதற்கெல்லாம் காரணம் என்னவாக இருக்கும்?'

"மந்தாகினி, நான் ஒரு யோசனை சொல்லட்டுமா?" அவன் அவளின் வழவழப்பான முன்புறக் கையை வருடியபடி கேட்டான்.

"சொல்லுங்க..." அவள் சொல்வதைக் கேட்டுக்கொள்ளத் தயாரானாள்.

"நாம ஒரு வைத்தியரைப் பார்த்தா என்ன?" உண்ணி, அவள் காதில் கிசுகிசுத்தான்.

"எதுக்காக?"

"அப்பத்தான் நீ ஏன் ஒதுங்காம இருக்கிறேங்கிற காரணம் புரியும். அது தெரிஞ்சாதான் இந்த வீட்டில இன்னொரு குட்டிக் கிருஷ்ணன் பிறப்பான்."

"அதுக்கென்ன.. உங்க விருப்பப்படியே செஞ்சுட்டாப் போகுது." அவனைத் திருப்திப்படுத்துவதற்காகச் சொன்னாள்.

சொன்ன பிறகுதான் 'அப்படிச் சொல்லியிருக்க வேண்டாமோ' என்றும் தோன்றியது. ஒருவேளை வைத்தியர் வரலாம்.

வைத்தியராக வருபவர் ஜோதிடராகவும் இருந்துவிட்டால், தன்னை அடையாளம் காணவும் வாய்ப்பு உண்டு.

நாள், நட்சத்திரம் கேட்பார்கள். தனக்கு ஏது அதெல்லாம்?

ஒருவேளை அப்படியும் இருக்கலாம்.

ஒருதடவை பகவதி குறிப்பிட்டது அவளுக்கு ஞாபகம் வந்தது ஒரு பௌர்ணமி தினத்தன்று தான் ஆகாயத்தைப் பார்த்தபடி நின்று கொண்டிருக்கிறோம்.

தென்றல் மென்மையாக வீசிக் கொண்டிருக்கிறது.

காற்றில் இலஞ்சிப் பூவின் வாசனை கலந்து வந்தது. மேற்குத் திசையைப் பார்த்தபோது சாட்சாத் திருப்பனங்காட்டு தேவி வந்து கொண்டிருக்கிறார்.

தன்னிடம் நெருங்கி வந்தவர், "கதவைத் திற" என்றார்.

அப்படியே செய்தபோது ஒரு துண்டுக் கற்கண்டை தன் வாயில் போட்டுவிட்டு "இன்று உனக்குப் பிறந்த நாள். இந்த நட்சத்திரம்தான் உன்னுடையது" என்றார்.

இதுதான் அந்த ஞாபகம்.

அப்படியே அந்த நட்சத்திரத்தைச் சொல்வதாக வைத்துக் கொண்டாலும் விடாமல் பிரஸ்னம் பார்ப்பார்.

ஆனால், பிரஸ்னம் தெளிவடையாது.

தன்னால் அதைச் சரிப்படுத்த முடியாது. எனவே, ஜோதிடத்தின் மூலம் தான் யார் என்பது தெரிந்துவிட்டால் அதை உண்ணியிடம் சொல்வார்கள்.

அந்த உண்மையைத் தெரிந்துகொண்ட பிறகு உண்ணியின் மனநிலை எப்படி இருக்கும் என்பதைச் சொல்ல முடியாது.'

எனவே, மந்தாகினி தர்மசங்கடத்தில் ஆழ்ந்தாள்.

"சரி, நல்ல ஒரு வைத்தியரைப் பார்ப்போம். அவர் ஜோதிடராகவும் இருந்தால் நல்லது. நம் குழந்தை என்ன நட்சத்திரத்தில்



பிறக்கும் என்பதையும் சொல்லி விடுவார்" உண்ணி அவள் கன்னத்தை வருடியபடி பேசினான்.

மந்தாகினி புன்னகைத்தாள்.

**அ**ஷ்டமுகப் பெருமாள் வாசல்புறத்தையே கவனித்துக் கொண்டிருந்தார்.

'இந்தத் தடவை அவன் எப்படியும் தப்பிக்கவே முடியாது' என்று நினைத்தார்.

அதோ சூலம் திரும்பி வருகிறது.

சூலத்தின் முனை கனிந்த சிவப்பிலிருந்தது மாறியிருந்ததால் தன் நோக்கம் நிறைவேறிவிட்டதாக நினைத்தார்.

ஆனால், சூலத்தில் ரத்தத்துளிகள் இல்லை.

"என்ன இது" பெருமாளின் கண்கள் கனன்றன.

சூலத்தின் கூர்மையான மூன்று முனைகளும் வளைந்து போயிருக்கின்றன. அது உண்மைதானா என்பதை நிலவிளக்கின் அருகே கொண்டுபோய் சோதித்தார்.

"கைமளே, கல்லின் மீது மோதியதைப் போல் சூலத்தின் முனைகள் மழுங்கியிருக்கிறதே" பெருமாள் சூலத்தை அவரிடம் காட்டியபடி கூறினார்.

கைமள் அந்தச் சூலத்தை வாங்கி, விரலால் அதன் முனைகளைத் தடவிப் பார்த்தார்.

"கல்லின் பிசிறுகள் ஒட்டியிருப்பதாகவும் தெரிகிறது" கைமள் கூறினார்.

"அப்படியானால் இந்தச் சூலம் போய் மோதிய இடம் பாறைதானா?" பெருமாள் சந்தேகத்துடன் கேட்டார்.

"அப்படியும் நடக்குமா என்ன?" கைமள் வியப்புடன் கேட்டார்.

## 35

உண்ணிக்கிருஷ்ணன் அப்போது விளையாட்டாக மந்தாகினியின் கையைப் பிடித்து இழுத்தான்.

“என்ன இது” கையை இழுத்தவன் அதிர்ந்தான்.

“என்ன சொல்கிறீர்கள்?” என்றபடி மந்தாகினி தன் கையைப் பார்த்தாள்.

சூலம் அவள் கையில் பதித்த மூன்று அடையாளங்கள்.

அப்போதுதான் அவளுக்கு விஷயம் புரிந்தது. உடனே மந்தாகினி பதிலளித்தாள். “நீங்க யானை மேல ஏறினீங்களே, அப்போ யானையோட தந்தம் படிந்த அடையாளம் இது.”

“வலிக்குதா மந்தாகினி?” அவள் கைப்பகுதியை வருடியபடி கேட்டான்.

“இல்லையே!” என்ற மந்தாகினி உள்ளங்கையை தன் தொடையில் அழுத்தித் தேய்த்துவிட்டுப் பார்த்தாள். அப்போது சட்டென்று மந்தாகினிக்கு ஒரு விஷயம் ஞாபகம் வந்தது.

‘நாளைக்கு திருப்பனங்காட்டு பகவதியின் பிறந்தநாள். பின்னிருட்டு வேளையில் தேவி நீராடப் போவார். அவருடன் செல்ல வேண்டும். தன்னுடன் சேர்த்துப் பதினெட்டுப் பேர் துணையாகப் போகவேண்டும். தேவி ஒவ்வொருவரையும் தனியாகக் கவனிப்பார். உடன் வந்திருப்பவர்களுக்குப் பிறந்த நாள் பரிசளிப்பார். அப்போது தான் அங்கு இல்லாவிட்டால் என்ன நடக்கும் என்பதைச் சொல்ல முடியாது.

மந்தாகினி, என்ன செய்வதென்று தெரியாமல் குழம்பினாள்.

‘இப்போதைய சூழலில் உண்ணிக்கிருஷ்ணனை எப்படித் தனியாக விட்டுவிட்டுப் போவது?

போகாதிருக்கவும் முடியாது.

இது தன் எதிர்காலத்தைப் பாதிக்கக்கூடிய ஒரு விஷயமும்கூட.’



“என்ன யோசிக்கிறே மந்தாகினி?” உண்ணி விசாரித்தான்.

“அப்படியெல்லாம் எதுவுமில்லை... வாங்க போய்ப் படுக்கலாம்” அவனையும் எழுப்பிவிட்டுப் படுக்கையறையை நோக்கி நடந்தாள்.

அவன் உறக்கத்தில் ஆழ்ந்துவிட்டான் என்று தெரிந்தவுடன் மந்தாகினி எழுந்தாள்.

திருப்பனங்காட்டு பகவதி கோயில் பூசாரியான பவத்ராதன் நம்பூதிரி உறங்காமல் மறுநாள் காலை பூஜைக்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தார்.

மறுநாள் பகவதியின் பிறந்தநாள் என்பது அவருக்கும் தெரியும். விடிவதற்கு முன்பே தேவி குளிக்கப் போவார். அதை எவரும் பார்க்கக்கூடாது என்பதும் அவருக்குத் தெரியும். அந்த நேரம் மட்டும் அங்கிருந்து எங்காவது விலகியிருக்க வேண்டியதுதான் என்று நினைத்தார்.

கிழக்கில் விடிவெள்ளி முளைத்தது.

தேவி நீராடுவதற்காக வெளியேறினார்.

பதினெட்டு மோகினிகளும் அவருடன் புறப்பட்டனர்.

முன்னர் எப்போதோ நடந்த ஒரு சம்பவத்தை அவர் கேள்விப் பட்டிருந்தார். அவரது பெரிய மாமாதான் அதைச் சொன்னவர். அவர் இறக்கும்போது வயது நூற்றுமூன்று. பெரிய பண்டிதர். மிகப்பெரிய மந்திரவாதியும்கூட.

பூதப் பிரேதாதிகளை நேரில் பார்த்திருப்பவர். அவர் சில காலம் திருப்பனங்காட்டுக் கோயிலில் பூஜை நடத்தியிருக்கிறார். தான்னிக்காட்டு மனையுடன் அன்றைக்கு அவருக்கு இருந்த நட்பின் அடிப்படையில் நடந்தது அதெல்லாம்.

எனவே, நண்பரின் வேண்டுகோளுக்கு இணங்கித்தான் அவர் கோயிலுக்கு வர ஆரம்பித்தார்.

அந்த சமயத்தில்தான் தேவியின் பிறந்த நாளும் வந்தது.

திருமேனிக்கு இந்த விஷயம் தெளிவாகத் தெரியுமாதலால் கோயிலின் உள்ளேயும் வெளியேயும் அலங்காரங்களைச் செய்திருந்தார். தென்னங்குருத்தோலை மற்றும் செத்திப் பூங்கொத்துகளையும் கட்டுவதற்காக மேலும் இரண்டு பேரை அமர்த்தியிருந்தார்.

கோயிலுக்குப் பூக்கட்டும் சங்கரன் மாராரின் இரண்டு பையன்களை அதற்காகத் தேர்ந்தெடுத்திருந்தார். மூத்தவன் கிருஷ்ணன் குட்டி. இளையவன் சங்கரன் குட்டி.

இரண்டு பேரும் ஓரளவு விவரம் தெரிந்தவர்கள். அவ்வப்போது மது வகைகளைத் தொட்டுப் பார்ப்பவர்கள்.

என்றுமில்லாத வழக்கமாக அன்றைக்கு மட்டும் கோயிலை அலங்கரிப்பதன் காரணத்தை திருமேனியிடம் கேட்டனர்.

"முட்டாள்களா... இதுகூடவா தெரியாது? நாளைக்கு தேவியின் பிறந்தநாளாயிற்றே" திருமேனி கூறினார்.

"இதுவரை பிறந்தநாளை இப்படிக் கொண்டாடியதாக ஞாபகமில்லையே?" கிருஷ்ணன் குட்டி கேட்டான்.

"சாதாரணமா இதை யார்கிட்டயும் சொல்றதில்லை."

"ஏன்?"

"ஏன்னா, தேவியும் அவரோட பரிவாரமும் அன்னிக்குக் காலையில குளிக்கிறதுக்காகக் கோயிலிலிருந்து வெளியே போவாங்க. அப்போ அவர்கூட மோகினிகளும் போவாங்க."

"நாம அதையெல்லாம் பார்க்க முடியுமா?" சங்கரன்குட்டி கேட்டான்.

"பார்க்க முடியுமான்னு கேட்டா என்ன அர்த்தம்? பார்க்காம இருக்கிறதுதான் உத்தமம்" திருமேனி கூறினார்.

"என்ன திருமேனி... இப்படிச் சொல்றீங்க?"

"ஏன்னா, இதுவரையிலும் அந்தக் காட்சியை எவரும் பார்த்ததாகத் தெரியலை. ஒருவேளை பார்த்தாக்கூட அதை வெளியில சொல்லலைன்னு தோணுது."



"ஓகோ, அப்படியா சேதி?" கிருஷ்ணன்குட்டி தன் தம்பியை நோக்கிக் கண்ணைச் சிமிட்டினான்.

'அப்படியானால் எப்படியும் அந்தக் காட்சியைப் பார்த்துவிடுவது' என்று தீர்மானித்தனர் அவர்கள்.

இருட்டும் வரை காத்திருந்து, படகுத் துறையில் கட்டிப்போட்டிருந்த படகுக்குள் ஒளிந்து கொண்டனர்.

மறுநாள் பரஸ்பரம் ஒருவர் கழுத்தை மற்றவர் நெரித்த நிலையில் இருவரது பிணங்களும் ஆற்றிலிருந்து கண்டெடுக்கப்பட்டன.

தேவி நீராடப் போவது ஆற்றின் தென்புறமுள்ள படித்துறையில்தான். அந்த நேரத்தில் இயற்கைகூட அமைதியாக இருக்கும். ஆற்றில் அலைகள்கூட எழும்பாதாம்.

ஆற்றின் மேற்பரப்பு கண்ணாடி போல் பளபளப்பாக இருந்தது. ஆகாயத்திலிருந்த நட்சத்திரங்கள் ஆற்றில் தங்களது முகத்தைப் பார்த்துக் கொண்டன.

மல்லிகைப் பூக்களை அள்ளி இறைத்தாற்போல் ஆற்றுப்பரப்பில் நட்சத்திரங்கள் பளபளத்தன.

தேவியும் தோழியரும் நீரில் இறங்கினர். தோழிகள் தண்ணீரிலும் சூழ்ந்து நின்றனர். கிழக்குத் திசையில் செம்மை பரவி, வெளிச்சக் கீறல் தென்படத் தொடங்கியதும் எல்லாரும் கரையேறினர்.

"என் பிறந்த நாளான இன்று நீங்கள் எல்லாரும் என்னைவிட்டு எங்கும் போகாமல் இருக்க வேண்டும்" தேவி கட்டளையிட்டார்.

அந்த வார்த்தைகளைக் கேட்டதும் மந்தாகினியின் உள்ளம் துணுக்குற்றது. 'தேவீ' என்று மனதுள் கூவியவாறே நெஞ்சில் கை வைத்தாள். அன்றைய விடிகாலை பூஜையின்போது வழக்கத்தைவிட கூட்டம் அதிகமாக இருந்தது. கோயில் குடமுழுக்கு செய்யப்பட்டிருந்ததால், பக்தர்கள் அதிகரித்திருந்தனர்.

மதிய பூஜையை முடித்துவிட்டுத் திருமேனி சற்று கண்ணயர்ந்திருந்தார். கோயில் சுற்றுப்புறம் சுத்தமாக இருந்ததால் ராமன் அங்குமிங்கும் சுற்றிக் கொண்டிருந்தான். இன்னும் ஏதாவது மராமத்து வேலை மீதமிருக்கிறதா என்று பார்ப்பதுதான் அவன் நோக்கம்.

அப்படிச் சுற்றிப் பார்த்து வந்தபோது மோகினி சிலைகளின் மீது அவன் பார்வை பதிந்தது.

முந்தைய நாள் இரவு வரை சிலை இல்லாமலிருந்த இடத்தில் இதோ ஒரு சிலை இருக்கிறது!

ராமன் கண்களைக் கசக்கிக்கொண்டு பார்த்தான்.

சந்தேகமில்லை. தான் கண்ணால் காண்பது உண்மைதான்! உடனே திருமேனியிடம் ஓடினான். ஓடி வரும் காலடியோசை கேட்டதால் திருமேனி கண்களைத் திறந்து முகத்தைச் சுளித்து அவனைப் பார்த்தார்.

“திருமேனி... திருமேனி...” ராமன் அழைத்தான்.

“என்ன விஷயம், சொல்லுப்பா?” அவர் பதில் குரல் கொடுத்தார்.

“ஒரு அதிசயம்.”

“விஷயத்தைச் சொல்லு.”

“மோகினி சிலைகள் எல்லாம் சரியா இருக்குது.”

“நிஜமாவா சொல்றே... அது எப்படிச் சாத்தியம்?” திருமேனிக்கு எதுவும் புரியவில்லை.

“ஒரு சிலை காணாமப் போச்சுன்னு நீங்க சொல்லலையா? இப்போ பதினெட்டு சிலையும் சரியா இருக்கு.”

“உண்மையாவா?” பவத்ராதன் படுத்த இடத்திலிருந்து துள்ளி எழுந்தார்.

இருவரும் மந்தாகினியின் சிலையை நெருங்கினர்.

“எந்த சிலை காணாமல் போனது என்று தெரியவில்லையே” நம்பூதிரி எல்லாச் சிலைகளையும் ஒருதடவை எண்ணிப் பார்த்தார்.

ஒவ்வொரு சிலையின் பக்கப் பகுதிகளையும் தொட்டுப் பார்த்தார்.

எல்லாச் சிலைகளும் ஒரேமாதிரி சுவரோடு சுவராக ஒட்டியிருந்தன. எதிலும் எந்தவிதமான வேறுபாடும் தெரியவில்லை.



“ராமா, நீ இங்கேயே இரு. நான் இதோ வந்திடுறேன்” பவத்ராதன் நம்பூதிரி வேகவேமாக தான்னிக்காட்டு மனையை நோக்கி ஓடினார்.

விஷ்ணு நம்பூதிரி மனையிலேயே இருந்தார்.

“காணாமல் போன சிலை திரும்பக் கிடைத்துவிட்டது” பவத்ராதன் கூறினார்.

“உங்களுக்கு அப்படித் தோன்றியிருக்கும்” விஷ்ணு நம்பூதிரி பதிலளித்தார்.

“என்ன தம்பி... அதற்காகத்தானே நாம தேவபிரஸ்னம் நடத்தினோம்.”

“அப்பவும் சிலை அங்கே எங்கேயாவது இருந்திருக்கும். நாம சரியா கவனிக்காம விட்டிருக்கலாம். நீங்க என்ன சொல்றீங்க திருமேனி? சிலை எங்கேயாவது வெளியே போயிட்டுத் திரும்பி வருமா?”

திருமேனி உண்மையில் குழப்பத்தில் ஆழ்ந்தார்.

“எல்லாம் ஒரே ஆச்சரியமா இருக்கு.”

விஷ்ணு நம்பூதிரி தான் கூறியதை ஒரு வேடிக்கையாக எடுத்துக் கொண்டிருக்கிறார் என்று புரிந்தது. இவருக்கு எப்படியும் உண்மையை உணர்த்த வேண்டுமென்று பவத்ராதன் உறுதி பூண்டார்.

‘இதில் எதோ ஒரு சிக்கல் இருக்கிறது’ என்று தோன்றியதால் பவத்ராதன் அங்கிருந்து மௌனமாக வெளியேறினார்.

திருமேனி திரும்பவும் கோயிலுக்கு வருவதற்குள் ராமன் வேறொரு விஷயத்தைக் கண்டுபிடித்திருந்தான்.

“திருமேனி, இங்கே பாருங்கள். இந்த ஒரு சிலையின் இடது கையில் மட்டும் ஏதோ மூன்று புள்ளிகள் தெரிகின்றன. இது வேறு எந்தச் சிலைக்கும் கிடையாது.”

பவத்ராதன் ஊன்றிப் பார்த்தார். ராமன் சொன்னது உண்மைதான். சிலையின் உள்ளங்கைப் பகுதியில் ஏதோ குத்தியது மாதிரி மூன்று புள்ளிகள் தெரிந்தன.

அவர் உடனே கோயிலிலிருந்து வெளியேறினார் அவர் நேராகப் போனது அந்த ஊரின் இரும்புப் பட்டறைக்கு. பட்டறையிலிருந்து ராமன்குட்டி, கோயில் பூசாரியைப் பார்த்ததும் எழுந்து நின்று வணங்கி வரவேற்றான்.

“ராமன்குட்டி... ஒரு நிமிஷம் என்னோடு வா... உடனே திரும்பி வரலாம்” திருமேனி கூறியதும் என்ன ஏதென்று விளங்காமல் அவருடன் கிளம்பினான் ராமன்குட்டி.

பவத்ராதன் அவனச் சிலையின் அருகே கொண்டு போனார்.

“இதோ, இந்தச் சிலையின் கையிலுள்ள அடையாளம் எதனால் ஏற்பட்டது என்று சொல்ல முடியுமா?”

ராமன்குட்டி அந்தச் சிலையின் உள்ளங்கைப் பகுதியை ஊன்றிப் பார்த்தான். பிறகு சொன்னான்: “இது ஒரு சூலத்தால் குத்திய அடையாளம் மாதிரித் தெரிகிறது.”

“எனக்கும் அதுதான் சந்தேகம். அதை உறுதிப்படுத்திக் கொள்ளத் தான் உன்னைக் கூட்டிக்கொண்டு வந்தேன்” திருமேனி கூறினார்.

“இது எப்படி நடந்திருக்கும் திருமேனி?” ராமன்குட்டி கேட்டான்.

“தெரியலை... இனிமேல்தான் தெரிஞ்சுக்கணும். நீ எனக்கு ஒரு உதவி செய்யணுமே.”

“சொல்லுங்க” ராமன்குட்டி கூறினான்.

“கொஞ்சம் நீளமான ஒரு சங்கிலி... அப்புறம் தரையில் அடித்து இறக்குவதற்கு ஏற்றாற்போல் கடப்பாரை ஒன்றின் மீது ஒரு வளையம். கடப்பாரை தரைக்குள் சுமார் நாலரையடி இறங்கும்படி இருக்க வேண்டும். நோக்கத்தையும் சொல்லிடுறேன்.”

திருமேனி என்ன சொல்ல வருகிறார் என்று புரியாமல், புரிந்து கொள்ளும் ஆர்வத்துடன் அவரையே பார்த்துக் கொண்டிருந்தான் ராமன் குட்டி.

“விஷயம் சுலபம். இந்தச் சிலை இங்கிருந்து எங்கும் போகாதபடி பார்த்துக் கொள்வதற்காகத்தான். தேவிக்குப் பணிவிடை செய்ய ஸ்தூல வடிவம் தேவையில்லை. சொல்வது புரிந்ததா?”



எதுவும் புரியாமல் ராமன்குட்டி பேந்தப் பேந்த விழித்தான்.

“ராமன்குட்டி, இந்தச் சிலை காணாமல் போனதால்தான் கோயிலில் நிறையச் செலவு செய்து தேவபிரஸ்னம் நடத்த நேர்ந்தது” திருமேனி விளக்கினார்.

“நானும் கேள்விப்பட்டிருக்கேன். ஆனால், இவ்வளவு விவரமாத் தெரிஞ்சுக்கலை. சரி, நீங்க சொன்னபடியே செஞ்சுடலாம்” ராமன்குட்டி விடைபெற்றுப் புறப்பட்டான்.

பட்டறைக்கு வந்தவன் யானை கட்டும் சங்கிலி ஒன்றைத் தேடியெடுத்தான். அதில் ஓர் இணைப்பு விடுபட்டிருந்தது. நெருப்பில் போட்டுக் காய்ச்சி விடுபட்டதை இணைத்தான். திருமேனி கேட்டபடி எல்லாவற்றையும் தயார்செய்து நேராகக் கோயிலுக்கு வந்தான்.

தான் குறிப்பிட்ட வேலையை அவன் கச்சிதமாக முடித்துக் கொண்டு வந்ததில் திருமேனி மிகவும் சந்தோஷமடைந்தார். பிறகு திருமேனி சொல்லியது போலவே மந்தாகினி சிலையின் ஒரு கை மற்றும் காலையும் இணைத்துச் சங்கிலியால் கட்டி, அதை வளையத்தில் கோத்து வளையமுள்ள கடப்பாரையைத் தரையில் அடித்து இறக்கினான். பிறகு திருமேனி யாருக்கும் தெரியாமல் வில்வ மரக் கிளை ஒன்றை வெட்டி வந்து சிலையின் பின்புறமாக மறைத்து வைத்தார்.

**உ**ண்ணிக்கிருஷ்ணன் வெகு தாமதமாகத்தான் கண்விழித்தான். தான் திரும்பி வரும்போது கண்விழிக்கத் தக்க வகையில்தான் அவனைத் தூங்க வைத்திருந்தாள் மந்தாகினி.

அருகில் மந்தாகினியைக் காணோம்.

ஒருவேளை குளிக்கப் போயிருப்பாள் என்று நினைத்து மேலும் சற்று நேரம் அப்படியே படுத்திருந்தான். அதன்பிறகும் அவள் வரவில்லை.

படுக்கையிலிருந்து எழுந்தவன் வீட்டுக்குள்ளும், வெளியிலும் அவளைத் தேடினான்.

“மந்தாகினி...” அழைத்துப் பார்த்தான்.

அவன் குரலுக்கு பதில் குரல் கிடைக்கவில்லை.

உண்ணி திடுக்கிட்டான். 'அவள் தன்னருகில் இல்லை' என்று தெரிந்ததும் அவனுக்குள் விவரிக்கமுடியாத ஒருவித பீதி எழுந்தது.

'அவளை எங்கேயென்று தேடுவது?'

யாரிடம் போய்க் கேட்பது?

ஒருவேளை தான் மயக்கமாகி விழுந்து கிடந்த அதே கோயிலுக்குத் திரும்பிப் போயிருப்பாளோ?

அப்படியே போயிருந்தாலும் அந்தக் கோயில் எங்கே இருக்கிறதென்று தனக்குத் தெரியாதே.'

அப்போது தெருவாசற்படியில் யாரோ வந்து நிற்பது தெரிந்தது.

தொலைவிலிருந்து சரியாகத் தெரியாததால் ஊன்றிக் கவனித்தான். அது ஒரு பெண் உருவம்.

விடிகாலைப் பனி விலகாதிருந்ததால் உருவம் சரியாகத் தெரியவில்லை.

"யாரது?" உண்ணி கேட்டான்.

"அடியேன் வந்திருக்கிறேன்."

"புரியலையே."

"வாரியர்வீட்டு தாத்ரிக் குட்டியம்மா."

"என்ன விஷயம்?"

"உங்களுக்கு உதவலாம்னுதான்."

உண்ணி யோசித்தான். 'மந்தாகினியைக் காணவில்லை. பசிக்கவும் செய்கிறது. தற்சமயத்துக்கு வாரியார் வீட்டுப் பெண்ணே சமைத்துப் போடட்டும். எதையாவது சமைத்துப் பசி தீர்ப்பாளே.'

மந்தாகினி வருவதற்கு முன்பு எங்கிருந்தெல்லாம் சாப்பிட்டிருக்கிறோம். பசி வரும்போது எதையும் கவனிக்க முடிந்ததில்லை.

சமீப காலமாகத்தான் இல்லத்துச் சாப்பாட்டைச் சாப்பிடத் ஆரம்பித்தோம்.



"சரி, உள்ளே வாம்மா" உண்ணிக்கிருஷ்ணன் அனுமதி கொடுத்தான்.

தாத்ரிக்குட்டி தெருவாசற்படியைத் தாண்டி முற்றத்துக்கு வந்தாள். அவள் கண்கள் சுற்றுமுற்றும் பார்த்தன.

அவை சட்டென்று பளபளப்பு அடைந்தன.

## 36

**தா**த்ரிக்குட்டி முற்றம் வழியாக நடந்து, இல்லத்தின் வடக்குப் புறத்தில் வந்து நின்றாள்.

உண்ணிக்கிருஷ்ணன் சமையலறை வாசல் கதவைத் திறந்து விட்டான்.

கொஞ்சம்கூடத் தயக்கமில்லாமல் வீட்டுக்குள் நுழைந்தவள், நேராகச் சமையல்கட்டை நோக்கி நடந்தாள். அந்த இடம் அவளுக்கு ஏற்கெனவே பழக்கமானது போலிருந்தது.

"தாத்ரிகுட்டி, இதுக்கு முன்னால இங்கே வந்திருக்கியா?" உண்ணி கேட்டான்.

"வந்திருக்கிறேன். பெரிய தம்புராட்டி இருக்கிறப்போ, என்னை அடிக்கடி வரச்சொல்லி ஆள் அனுப்புவாங்க."

"சின்ன வயசுல நான் பார்த்ததா ஞாபகம் இல்லையே" உண்ணி அவள் உடலழகை ஊன்றிக் கவனித்தபடி கூறினான்.

மந்தாகினியைவிட மெலிந்த உடம்பு.

சிவப்பு நிறம். உயரமான உடல்வாகு.

முப்பது வயதை நெருங்கியிருக்கலாம்.

அவளின் மார்புப் பகுதிகளும், புட்டப் பகுதிகளும் பிரத்தியேகமாகச் செதுக்கப்பட்டிருந்தவை போலிருந்தன. சன்னமான சல்லாத் துணியால் உடலை மறைத்திருந்தாள். ஆனால், துணி அந்த முயற்சியில் தோல்வியடைந்து பெரும்பாலான பகுதிகளை வெளிக்காட்டிக் கொண்டிருந்தது.

வசியம் செய்யப்பட்டவனைப் போல உண்ணிக்கிருஷ்ணன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"சின்னத் திருமேனி... என்ன இப்படிப் பார்க்கிறீங்க? நான் இனிமேல் இங்கேதான் இருப்பேன். நீங்க போகச் சொன்னால்தான் போவேன்" அவள் வெட்கம் கலந்த குரலில் பேசினாள்.

உண்ணி சட்டென்று தன் அசட்டுத்தனத்தை மறைத்துக்கொண்டு அங்கிருந்து நகர்ந்தான். தலை துவட்டும் துண்டை எடுத்துக்கொண்டு ஆற்றை நோக்கி நடக்கத் தொடங்கினான். குளித்தவுடன் வழியில் எங்கும் நிற்காமல் இல்லத்துக்குத் திரும்பினான். தெரிந்த ஒருசிலர் எதிர்ப்பட்ட போதும் அவர்களுடன் பேச்சுக் கொடுக்காமல் கிளம்பி விட்டான்.

தாத்ரிக்குட்டி தன் மனத்தை ஆக்கிரமித்திருப்பதை அவன் உணர்ந்தான்.

இதற்கு என்ன காரணம்?

எவ்வளவு முயன்றபோதும் மந்தாகினியின் உருவம் மனதில் தோன்ற மறுக்கிறதே... ஏன்?'

"மந்தாகினியின் படத்தை வரைந்து வைத்திருக்க வேண்டும்" அவனையும் மீறி வார்த்தைகள் வெளியே வந்து விழுந்தன.

இல்லத்துக்கு வந்ததும் தாத்ரிக்குட்டி இட்லியையும் காபியையும் முன்னால் கொண்டுவந்து வைத்தாள்.

மந்தாகினி போவதற்கு முன்னால் மாவு அரைத்து வைத்திருக்கலாம் என்று நினைத்தாள்.

"நான் வர்றதுக்குத் தாமதமாயிடுச்சா?"

"ஏன் அப்படிக் கேட்கறீங்க?"

"ரெண்டுமே சூடாறிப் போயிருக்கே... அதனால்."

"நீங்க குளிக்கப் போனதும் இறக்கி வைச்சேன்."

அவள், அவன் முகத்தைப் பார்க்காமல் பேசினாள்.



உண்ணிக்கிருஷ்ணன் தாத்ரிக்குட்டியின் வடிவழகைப் பார்த்தவாறு சாப்பிட்டான். அவளுக்கும் அது தெரிந்திருந்தது. எனவே, நன்றாகப் பார்த்துக் கொள்ளட்டும் என்பது மாதிரி நின்றாள்.

"மந்தாகினி எங்கே போனாளோ, என்னவோ?" உண்ணியாரிடம் என்றில்லாமல் சாப்பிடும்போது கேட்டான்.

தாத்ரி எதுவும் பதில் சொல்லவில்லை.

"கொஞ்சம் வெளியே போயிட்டு வர்றேன்" என்றவன் சட்டையை மாட்டிக்கொண்டு புறப்பட்டான். தாத்ரி அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

கண் பார்வையிலிருந்து அவன் மறைந்தவுடன் அவள் கண்கள் ஜொலித்தன.

பெரிய வீட்டின் முன்வாசல் வழியாக உண்ணி நடந்து போனான். புவனேஸ்வரன் நாயர் அவனைக் கவனிக்கத் தவறவில்லை.

"ராமுண்ணி" நாயர் அழைத்தார்.

ராமுண்ணி, "என்னங்க?" என்றபடி ஓடிவந்தான்.

"அதோ போறவன் பனங்காட்டுமனை உண்ணிதானே?"

ராமுண்ணி சிறுதிண்ணை மீது ஏறிநின்று எட்டிப் பார்த்துவிட்டுச் சொன்னான். "ஆமாங்க!"

"எங்கே போறான்னு பார்த்துட்டு வாயேன்" நாயர் கூறினார்.

முதலாளியின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு ராமுண்ணி, உண்ணிக்கிருஷ்ணனைப் பின்தொடர்ந்தான்.

உண்ணிக்கிருஷ்ணன் நேராக வயலுக்குப் போனான். அறுவடைப் பருவம் நெருங்கிக் கொண்டிருந்தது.

பனங்காட்டு இல்லத்துக்குச் சொந்தமான வயலை இப்போது கவனித்துக் கொள்பவர் காரியஸ்தர் பத்மநாபன் நாயர்.

உண்ணியைப் பார்த்ததும் பத்மநாபன் நாயர் நெருங்கி வந்து வணங்கி நின்றார்.

“என்ன பரமு நாயரே, விவசாயம் தேறுமில்லையா?” உண்ணி கேட்டான்.

“எல்லா வருஷத்தை விடவும் இந்த தடவை விளைச்சல் ரொம்ப நல்லா இருக்குன்னு ஊரில் பேசிக்கிறாங்க.”

“அறுவடைக்கு முன்னால எப்படி அதைச் சொல்றது?”

“கதிரைப் பார்த்தா தெரியாதா?”

“அப்படியா சொல்றீங்க? சரி, இருந்தா நல்லது. இல்லத்துக்கும் உங்களுக்கும் நம்ம வேலையாளுங்களுக்கும் தேவையானதைக் கொடுத்துடுங்க. நம்ம ஊர் நாவிதமிருக்கும் நூறு மரக்கால் குடுங்க. அப்புறம் இன்னொரு விஷயம், அந்தப் பெரிய வீட்டு நாயருக்கு நூற்றைம்பது மரக்கால் நெல் குடுத்துடுங்க. அங்கேதான் சாப்பாட்டுக்கு நிறைய பேரு இருக்காங்களே” உண்ணி கூறியதைக் கேட்ட பத்மநாபன் நாயர் திகைப்பில் ஆழ்ந்தார்.

“யார், பெரியவீட்டுக்கா?”

“ஆமாங்க... ஏன் திகைக்கிறீங்க?”

“அவங்க உங்களுக்கு எவ்வளவு தொல்லை கொடுத்திருக்காங்க? அப்படிப்பட்டவங்களுக்கு...”

“அதையெல்லாம் வீணா ஏன் நினைக்கணும்? மறந்துடுங்க போகட்டும்.”

“சரிங்க, அப்படியே செஞ்சுடுறேன்.”

உண்ணிக்கிருஷ்ணன் நேராக நாவிதரின் கடைக்கு வந்தான் முடிவெட்டி சவரம் செய்த பிறகு ஒரு நூறு ரூபாய் நோட்டை எடுத்து அவரிடம் நீட்டினான். இதுவரை தன் தலைமுடியை வாரி, நினைக்கும் போதெல்லாம் சீர் செய்து அனுப்பியவராயிற்றே.

புறப்படும்போது சொன்னான்: “அறுவடை முடிஞ்ச பிறகு காரியஸ்தர்கிட்டேயிருந்து அவர் குடுக்கிற நெல்லை வாங்கிக்கிங்க நான் சொல்லியிருக்கேன்.”

நாவிதர் நன்றி நிறைந்த முகத்துடன் உண்ணிக்கிருஷ்ணன் நடந்து செல்வதையே கவனித்தார்.



உண்ணி இல்லத்துக்குத் திரும்பி வந்தபோது மதியச் சாப்பாட்டுக்கான நேரம் ஆகியிருந்தது.

சாதத்தைப் பரிமாறிவிட்டு, தாத்ரிக் குட்டி அவனை அழைத்தாள்.

சாப்பிடும்போது உண்ணிக்கு ஒரு சந்தேகம். ‘இவ்வளவு பதார்த்தங்களையும் அவள் ஒருத்தியே எப்படிச் சமையல் செய்திருக்க முடியும்.’

சும்மா சொல்லக்கூடாது, சமையல் மிகவும் நன்றாக இருந்தது. நம்பூதிரியின் வீட்டில் சமையல் செய்வது போலவே இருந்தது.

உண்ணி, தாத்ரிக்குட்டியை அழைத்தான்.

“ஏன் திருமேனி?” தாத்ரிக்குட்டிஅவனருகே வந்து கேட்டாள்.

“இதையெல்லாம் எப்படி இவ்வளவு சீக்கிரம் சமைச்சே?”

“நான் சமையல்ல கெட்டிக்காரி.”

“ரொம்ப நல்ல சமையல்.”

“ரொம்ப நன்றி திருமேனி. உங்க தயவிருந்தா போதும்” தாத்ரி மிகவும் பணிவுடன் பேசினாள்.

“இருந்தாலும் தாத்ரிகுட்டி, உன்னைப் பார்த்தா எனக்கு சந்தேகமாகத்தான் இருக்கு.”

“என்ன சந்தேகம்?” அவள் திகைப்புடன் கேட்டாள்.

“உன்னைப் பார்த்தா நம்பூதிரி வீட்டுப் பெண் போலவே இருக்கு.”

உண்ணியின் வார்த்தைகள் அவளை வெட்கம் கொள்ள வைத்தன, தலைகுனிந்தாள்.

“ஒருவகையில நீ வந்ததும் நல்லதுக்குத்தான். மந்தாகினி போனவுடன் சரியா வந்து சேர்ந்தியே.”

அவன் வார்த்தைகள் ஒவ்வொன்றும் அவளைத் திக்குமுக்காட வைத்துக் கொண்டிருந்தன.

சாப்பாட்டுகுப் பிறகு சற்று நேரம் கண்ணயரலாம் என்று கட்டிலில் வந்து படுத்தான். தலைமாட்டுப் பகுதியில் மேஜை மீது சங்கிலி விளக்கும், அருகிலேயே ஓலைச்சுவடியும் இருந்தன.

சரி, தூக்கம் வருவது வரை வாசிப்போமே என்று அதைக் கையில் எடுத்தான்.

வடயக்ஷிணி மந்திரத்தை வாசித்தான்.

**ஏஹ்ஹேி யக்ஷியக்ஷி**
**மகாயக்ஷி வடவிருக்ஷாய**
**ஸ்ரீ ஸீக்ரம் மே சர்வ சௌக்யம்**
**குரு.... குரு**

மனித நடமாற்றமற்ற காட்டுக்குப் போய் பெரிய ஆலமரத்தின் அடியில் இரவு நேரத்தில் ஆயிரம் தடவை வீதம் ஆறு நாட்கள் ஜெபிக்க வேண்டும். ஏழாம் நாளன்று ஆலமரத்தின் அடிப்பகுதியைச் சுத்தம் செய்து சந்தனத்தைக் கலக்கித் தெளித்து, நெய்விளக்கு ஏற்றி, அந்த விளக்கின் மீது யக்ஷி இருப்பதாக பாவித்து நள்ளிரவு வரை ஜெபிக்க வேண்டும்.

அப்போது காற்சிலம்பின் ஓசை மற்றும் உடலிலுள்ள ஆபரணங்களின் இசையுடன் மேளதாள வாத்தியங்களின் இன்னிசையும் கேட்கும். பிறகும் மந்திரத்தைத் தொடரவேண்டும். அருகே வரும் யக்ஷி தன்னுடன் கூடும்படி கூறுவாள். அவளது ஆசையை நிறைவேற்றி விட்டால் - அவள் அதில் மகிழ்ந்தால், அவர் விரும்பியதெல்லாம் கிடைக்கும். மாறாக, அவள் திருப்தியடையவில்லையென்றால் விஷயம் விபரீதமாகி விடும்.

"திருமேனி, யக்ஷிணி மந்திரம் படிச்சு என்ன செய்யப் போறீங்க?"

குரல் கேட்டு உண்ணி திரும்பினான். தாத்ரிக்குட்டி நின்று கொண்டிருந்தாள்.

அவளுக்குப் பின்புறம் கதவு திறந்து கிடந்தது. அங்கிருந்து வந்த வெளிச்சம் அவள் உடம்பை வெகு சுத்தமாக வெளிக்காட்டியது. போதாக்குறைக்கு அவள் ஒருபுறமாகச் சரிந்துவேறு நின்று கொண்டிருந்தாள்.

"நான் படிக்கிறது அதுதான்னு உனக்கு எப்படித் தெரிஞ்சது?" உண்ணி கேட்டான்.



"என் அப்பாவும் ஒரு மாந்திரீகர்தானே?" அவள் சொன்னாள்.

"அப்படியா, அப்போ நான் அவரைப் பார்க்க விரும்புறதா அவர்கிட்டச் சொல்லு."

"நாளைக்குச் சொன்னால் போதுமில்லையா?"

"அப்போ இன்னிக்கு உங்க வீட்டுக்குப் போகலையா?"

"நீங்க தனியா இருக்கீங்களே."

"மந்தாகினி வராமல் இருக்க மாட்டாள்..."

"இனிமேல் அவங்க திரும்பி வருவாங்கன்னு சொல்ல முடியாது."

"அப்படின்னு யார் சொன்னது?"

"அப்பாதான் சொன்னார்."

"ம், பார்க்கலாம், சரி, நீ போகலாம்."

சற்று நேரம் தயங்கித் தயங்கி நின்றவள் பிறகு அங்கிருந்து நகர்ந்தாள்.

உண்ணிக்கிருஷ்ணன் மீண்டும் ஓலைச்சுவடியை எடுத்து வாசிக்க ஆரம்பித்தான். வாசித்துக் கொண்டிருக்கும்போதே உறங்கிப் போனான்.

தாத்ரிக்குட்டி நேராகப் போனது அவளை அனுப்பிவைத்த அஷ்டமுகப் பெருமாளிடம்தான்.

"என்ன, போன காரியம் இவ்வளவு சீக்கிரமா முடிஞ்சிடுச்சா?" மாந்திரீகர் கேட்டார்.

"முடியல, என்னை மன்னிச்சிடுங்க!" அவள் தாழ்மையான குரலில் பேசினாள்.

"நல்ல விண்ணப்பம், இதுக்கா உன்னை அனுப்பி வைச்சேன். நீ நினைச்சா ஒரே தடவையில ரெண்டு பயில்வான்களை நசுக்கிக் கொன்னுடலாம். அந்த நம்பூதிரிப் பையன் அவங்களைவிட பலசாலியா என்ன?" பெருமாள் தன் இரண்டு புருவங்களையும் மேற்புறமாக உயர்த்திக் கொண்டு கேட்டார்.

“அவர் கையில் ஒரு மாந்திரீகச்சுவடி இருக்கிறது. அதிலிருக்கும் மந்திரங்கள் என்னை அவர்கிட்டயே நெருங்க விடமாட்டேனென் கிறது” அவள் தன் தோல்வியை ஒப்புக் கொண்டாள்.

“ஓகோ. அதுதான் விஷயமா? கேவலம் ஒரு ஓலைச்சுவடியை அவன் கையில் இருந்து அகற்றுறதுக்கு உன்னால முடியலைன்னா சொல்றே? நீ துணி வேண்டாம்னு நினைச்சா, அவன் ஓலையைக் கைவிட மாட்டானா?”

“அப்படியொரு யோசனை எனக்கு வரலை.”

பெருமாள் சற்று நேரம் கண்ணை மூடி யோசித்தார். அவர் மனதில் உண்ணிக்கிருஷ்ணனைக் கண்டு கொண்டிருந்தார். அவன் தூங்கிக் கொண்டிருக்கும் காட்சி தென்பட்டது. ஆனால், அவன் உறக்கத்துக்கு ஒரு பிரத்தியேகத் தன்மை இருந்தது.

அவன் வாசித்துக் கொண்டிருந்த மாந்திரீகச் சுவடி, அவன் மார்பின் மீது கவிழ்ந்து கிடந்தது.

அந்தச் சுவடி எதைப் பற்றியது என்பதைத் தெரிந்து கொள் வதற்காக மறுபடி கண்களை மூடி மனதுள் சிந்தனையை ஒருமுகப் படுத்தினார்.

‘சகஸ்ர மந்திர யோகம்.’

சம்பூர்ணன் என்ற கந்தர்வன், ரோகிணி என்ற தன் காதலிக்குச் சொல்லி, அவளால் எழுதப்பட்ட சுவடி அது.

‘என்ன’ பெருமாள் வியப்பு அடைந்தார்.

அந்தச் சுவடியைப் பற்றி அவரும் கேள்விப்பட்டிருந்தார். ஆனால், அது புழக்கத்தில் இருப்பதாக அவருக்குத் தெரியவில்லை. ‘அப்படியானால், முதலில் அதைக் கைப்பற்ற வேண்டியதுதான்’ என்று தீர்மானித்தார்.

“ரத்த மோகினி” பெருமாள் அழைத்தார்.

“என்னங்க” தாத்ரிக்குட்டி அவருக்கு முன்பாக வந்து நின்றாள்.

“முதலில் அவன் வாசித்துக் கொண்டிருக்கும் ஓலைச்சுவடியை அவனிமிருந்து அகற்றி விடு. அகற்றியவுடன் எனக்கு விஷயத்தைத் தெரியப்படுத்து” பெருமாள் கட்டளையிட்டார்.



“முயற்சி பண்றேன்...” அவள் அங்கிருந்து கிளம்பினாள்.

மாலை மங்கி இருள் பரவத் தொடங்கியது.

திருப்பனங்காட்டு பகவதி மாலை நீராடலுக்குப் புறப்படத் தயாரானார்.

பகவதி தன் தோழிகளை அழைத்தார்.

ஒருத்தியைத் தவிர மற்றவர்கள் எல்லாரும் வந்து சேர்ந்தனர்.

ஒருமுறை அவர்களைப் பார்த்த பகவதி, “மந்தாகினி, எங்கே?” என்று முன்புறமிருந்த மோகினியிடம் கேட்டார்.

“பந்தனம் பண்ணியிருக்காங்க” அந்த மோகினி பதிலளித்தாள்.

“யார் பந்தனம் பண்ணியது?”

“பவத்ராதன் நம்பூதிரி.”

“எதுக்காகப் பண்ணினார்?”

“உங்க தவறினால் அல்ல.”

“அப்புறம்?”

“தெரியலை தேவி.”

“சரி நான் போய்ப் பார்த்துட்டு வர்றேன். நீங்க இங்கேயே இருங்க” கட்டளையிட்ட தேவி, மந்தாகினி சிலையை நெருங்கினார்.

சங்கிலியால் பிணைக்கப்பட்டிருந்த மந்தாகினியைக் கண்டார்.

## 37

“என்ன மந்தாகினி இது?” தேவி கேட்டார்.

அப்போதுதான் சிலை அசைந்தது.

அவள் தலை குனிந்தபடியே தேவியைப் பார்த்தாள்.

“உண்மையிலேயே உனக்கு இந்த சங்கிலியை உடைக்கும் வல்லமை கிடையாதா?” தேவி கேட்டார்.

“இருக்கிறது” மந்தாகினி தாழ்ந்த குரலில் பேசினாள்.

“பிறகு ஏன் செய்யவில்லை?”

பவத்ராதன் திருமேனி உண்ணியின் தாய்மாமா.”

தேவி சந்தேகத்துடன் மந்தாகினியைப் பார்த்தார். அதன்பிறகு ஞானதிருஷ்டியால் உண்ணியைப் பார்த்தார். அவர்களுக்கிடையே இருந்த உறவு நெருக்கத்தை உணர்ந்தார்.

“புரிந்துவிட்டது. எவ்வளவு பெரிய தவறு செய்திருக்கிறாய்? இதையெல்லாம் தவிர்த்திருக்கலாம்.”

“மன்னிச்சிடுங்க தேவி!” மந்தாகினி தாழ்மையுடன் வேண்டினாள்.

“உம்... என்னுடன் புறப்படு மந்தாகினி” தேவி அவள் கண்களைப் பார்த்தார்.

அந்தக் கண்களிலிருந்து புறப்பட்ட ஜுவாலை சங்கிலியின் கண்ணிகளில் பதிந்தது. நிமிட நேரத்துக்குள் அந்த சங்கிலி மெழுகு போல் உருகி உருவமிழந்தது.

மந்தாகினி இருந்த இடத்திலிருந்து நகர்ந்து வந்தாள்.

தேவி திரும்பி நடக்கத் தொடங்கினார். மந்தாகினி அவரைப் பின்தொடர்ந்தாள்.

திருப்பனங்காட்டு பகவதி ஆற்றில் இறங்கியபோது இரைச்சலுடன் பாய்ந்து கொண்டிருந்த ஆற்று வெள்ளம் சட்டென்று அமைதியடைந்தது. தேவி நின்றிருந்த பகுதியைத் தாண்டி ஆற்று வெள்ளம் பழையபடி விசையுடன் பாய்ந்தது.

தேவி இருந்த பகுதி எந்தவிதமான ஓசையுமின்றி அமைதியாக இருந்தது. அதாவது ஆற்றின் ஒரு கரையில் நீர் அசைவற்றும், மறுகரையில் வேகத்துடனும் பாய்ந்து கொண்டிருந்தது.

தோழிகளாக வந்திருந்த மோகினிகள் தேவியைச் சூழ்ந்து நின்றுகொண்டிருந்தனர்.

நீர்வாழ் பிராணிகள்கூட நீருக்குள் ஒதுங்கிச் சென்றன.



நேரம் நகர்ந்து கொண்டிருந்தது. வழக்கமான நேரம் தாண்டியும் தேவி கரையேறுவதாகத் தெரியவில்லை.

மந்தாகினி பரபரத்தாள். ‘உண்ணிக்கு ஏதாவது ஆகியிருக்குமோ?’ என்று பயந்தாள்.

தேவிக்கு விருப்பமில்லாத எதையாவது செய்துவிட்டால் அதற்குரிய தண்டனையை அனுபவிக்க வேண்டும். தண்டனை எப்படி இருக்கும் என்பதை வரையறுத்துச் சொல்ல முடியாது.

ஒருதடவை கூத்தம்பலத்தில் நடந்ததை மந்தாகினியால் மறக்க முடியவில்லை. அவளால் மட்டுமல்ல, எந்த மோகினித் தோழியாலும் மறக்க முடியாது, அந்த அனுபவத்தை.

அன்று சித்ரா பௌர்ணமி நாள்.

நள்ளிரவு.

சர்வ சராசரங்களும் உறக்கத்தில் ஆழ்ந்திருக்கும் போதுதான் கூத்தம்பலத்துக்கு வருவார். அப்போதும் தோழிகள் உடனிருப்பது வழக்கம்.

கூத்தம்பலத்தில் நின்று கொண்டிருக்கும் சிலைகள் உயிர்பெற்று அன்று நடனமாடும். தேவலோகக் கின்னரர்கள் சங்கீதம் இசைப்பார்கள்.

கந்தர்வக் கன்னிகள் பாடுவார்கள்.

நடனம் உச்சகட்டத்தை அடைந்தபோது ஒருத்தியின் நடன அசைவு தாளத்தை மீறி அமைந்தது. சர்வ சலனங்களுடையதும், நாதப் பிரம்மத்தின் பிறப்பிடமுமான தேவியின் மனதிலிருந்து கோபம் சட்டென்று வெளிப்படவும் செய்தது.

நடந்த தவறுக்குக் காரணம் என்ன என்று தேவி யோசித்தார்.

கீதிகா என்ற நடனமணி பாட்டுப் பாடிக் கொண்டிருந்த கந்தர்வனையே கவனித்துக் கொண்டிருந்தாள். அந்த விநாடியிலேயே அவள் அவன் மீது காதல் கொண்டாள். எனவே, கவனம் சிதறியது. கவனம் சிதைந்ததால் நடன முத்திரையும் தவறியது.

"கீதிகா" தேவி அழைத்தார்.

சட்டென்று நடனம் நிலைத்தது.

அத்துடன் மொத்தமும் அசைவற்று சபையே அமைதியில் ஆழ்ந்தது.

"கீதிகா, அந்தத் தூணின் பக்கமாக ஒதுங்கி நில்!" தேவி கட்டளையிட்டார்.

அவள் விலகி நின்ற கணத்திலேயே கற்சிலையாக மாறவும் செய்தாள்.

மீண்டும் நடனம் ஆரம்பமானாலும் கீதிகாவுக்கு மட்டும் விமோசனம் கிடைக்கவில்லை.

அதுதான் தேவியின் இயல்பு.

தேவிக்குக் கோபம் வந்தால் எப்படியோ... மகிழ்ச்சி ஏற்பட்டாலும் அதே மாதிரிதான்.

இதேபோல் மற்றொரு சம்பவம்.

கிராமத்திலுள்ள பெரிசுகளுக்கு திருப்பனங்காட்டு பகவதியைப் பற்றிய ஐதீகங்கள் ஏறத்தாழ மனப்பாடம் என்று சொல்லலாம்.

ஒருதடவை தென்திசையிலிருநது தேர்ந்த ஓவியர் ஒருவர் அங்கு வந்திருந்தார். அவர் வண்ங்களை வெறும் பச்சிலை மற்றும் பூக்களாலேயே தயாரித்தார். துணைக்குக் கற்களையும் தூள் செய்து சேர்த்துக்கொண்டார்.

இப்படி ஒருதடவை உருவாக்கும் வண்ணங்களால் ஓவியம் வரைந்தால், அவை நூற்றாண்டுகள் தாண்டியும் அழியாமல் இருக்கும். காலமாற்றங்களும், பருவங்களும்கூட அந்த வண்ணக் கலவையைச் சிதைக்க முடியாதிருந்தது. இப்படிப்பட்ட ஓவியர்தான் கோயிலுக்கு வந்தவர்.

தென் திசையிலிருந்த படகாளி விக்கிரகத்துக்கு முன்புறமிருந்த சுற்றுச்சுவரின் உட்புறத்தைப் படம் வரைவதற்காக ஓவியர் தேர்ந்தெடுத்தார்.



சுவரிலிருந்த பாசம் மற்றும் குங்குமச் சந்தனக் கீற்றுகளைக் கரண்டி விட்டு முதலில் மாதிரி வடிவத்தை வரைந்தார்.

மோகினி மற்றும் கந்தர்வர்களின் கதைகளை ஏராளமாகக் கேள்விப்பட்டிருந்த ஓவியர் முதலில் வரைந்தது ஒரு மோகினியின் வடிவத்தை.

அந்த ஓவியம் முழுமையடைய ஏழு நாட்கள் தேவைப்பட்டன. வரைந்து முடிந்தவுடன் ஓவியம் பூரணத்துவம் பெற்றது. சாதாரணமாக இப்படி நடக்கக்கூடாது.

அதுவரை அருகிலிருந்த பாலை மரத்தில் குடியிருந்த நிசீதனி என்கிற மோகினிக்கு ஓவியர் வரைந்திருப்பது தன் உருவத்தைத்தான் என்பது புரிந்தது. எனவே, ஒரு பௌர்ணமி நாளன்று அந்த மோகினி புதிய ஓவியத்துள் குடியேறினாள்.

ஓவியர் மண்டபத்தில் படுத்து உறங்கிக் கொண்டிருந்தார்.

கால் சலங்கைகளின் சத்தம் கேட்டுக் கண் திறந்த ஓவியருக்கு முன்னால் மோகினி நின்றிருந்தாள். தான் வரைந்த ஓவியம் தசை மற்றும் எலும்புடன் தன் முன்பாக நின்று கொண்டிருக்கிறது.

"எதுக்காக என்னைக் கூப்பிட்டீங்க?" மோகினி கேட்டாள்.

"நானா... கூப்பிடவில்லையே" ஓவியர் பயத்துடன் பதிலளித்தார்.

"அப்புறம் எதுக்காக எனக்கு உருவம் கொடுத்தீங்க?"

"நான் எங்கே உருவம் கொடுத்தேன்? அது என் கற்பனையில் பிறந்த உருவம்."

"இருக்கலாம். ஆனால் ஓவியத்துக்கு முழுமை வந்து விட்டதே. அதனால் நான் ஓவியத்துக்குள் புகுந்து கொண்டேன். இப்பொழுது என் தேவை நீங்கள்தான்."

அவள் ஓவியருடன் அன்றைய இரவைக் கழித்தாள். ஆனால், ஓவியரால் மோகினியின் ஆசைக்கு ஈடுகொடுக்க முடியாமல் போனதால் அவரைக் கொன்று விட்டாள்.

கிழக்குத் திசையில் நட்சத்திரக் கூட்டம் உயர்ந்தது.

தேவி தனது நீராட்டத்தை முடித்துக் கொள்வதாகத் தெரிய வில்லை. மந்தாகினி பரபரப்பின் உச்சத்துக்கே சென்றாள்.

உண்ணிக்கிருஷ்ணனுக்கு ஆபத்து ஏற்பட சாத்தியங்கள் நிறைய இருந்தன. ஆனால், அப்போதைய சூழ்நிலையில் அவளால் என்ன செய்ய முடியும்?

தேவியை விட்டுவிட்டுப் போவது சாத்தியமே இல்லை; மனதால்கூட அப்படி நினைக்க முடியாது.

**உ**ண்ணிக்கிருஷ்ணன் திண்ணையில் நிலவிளக்கின் முன்பாக அமர்ந்து, மாந்திரீகச் சுவடியை வாசித்துக் கொண்டிருந்தான்.

ஏறத்தாழச் சுவடியின் நடுப்பகுதியை அடைந்தபோது அதில் மற்றொரு சுவடியை மேற்கோள் காட்டியிருப்பதை உண்ணி கவனித்தான்.

திருப்பனங்காட்டு பகவதி கோயிலின் முன்புறம் பலிக்கல்லின் அடியில் சுயம்புவான ஓலைச்சுவடி ஒன்று இருக்கிறது. அதைப் படித்து மனப்பாடம் செய்துவிட்டால், அதற்கு மிஞ்சிய மந்திரங்கள் எதுவும் இல்லை.

உண்ணிக்கிருஷ்ணன் அந்தப் பகுதியை திரும்பவும் வாசித்தான்.

திருப்பங்காட்டு பகவதி கோயில்.

அப்படியொரு கோயிலை அவன் அதுவரை கேள்விப்பட்டதே இல்லை.

மறுநாள் காரியஸ்தர் பரமு நாயரிடம் அதைப்பற்றிக் கேட்க வேண்டும் என்று நினைத்தான்.

“திருமேனி, பால் கொண்டு வந்திருக்கிறேன்” தாத்ரிக்குட்டி கூறினாள்.

உண்ணிக்கிருஷ்ணன் சுவடியை மூடிக் கட்டி துணியால் பொதிந்து மேலே எடுத்து வைத்தான். பிறகு உள்தளத்துக்கு வந்தான்.

அவன் பால் அருந்திக் கொண்டிருக்கும்போது வேண்டுமென்றே அவன் கண்களில் படும் விதமாக மிகவும் கவர்ச்சிகரமாக நின்றாள்.



எவர் பார்த்தாலும் ஒருகணம் தடுமாறும் உடலழகை வஞ்சனை யின்றி அவனுக்கு விருந்து வைத்தாள். அதற்கேற்றாற்போல் அவளது மேலாடைகள் சல்லாத் துணிபோல் ஒளி ஊடுருவக்கூடியதாக இருந்தன.

“தாத்ரிக்குட்டி, இவ்வளவு அழகா இருக்கிறியே, ஏன் இன்னும் கல்யாணம் பண்ணிக்கலை?” உண்ணி கேட்டான்.

“என் மனசுக்குப் பிடிச்சவங்களா இதுவரையிலும் யாரும் தட்டுப்படலை...” பதிலளித்தாள்.

“நிஜமாவா?”

“நான் முதன்முதலா ரொம்ப நெருக்கத்துல பார்க்கிற ஆண் பிள்ளையே நீங்க தான்!”

அந்த வார்த்தைகள் அவனை உச்சி குளிரச் செய்தது என்னவோ உண்மை!

அத்துடன் மந்தாகினியின் வடிவமும் அவன் மனதிலிருந்து சுத்தமாக மறைந்து போயிருந்தது. அதற்குக் காரணம் அவள் தேவியை நெருங்கியிருந்ததுதான்.

தேவிக்குச் சுற்றிலும் திவ்விய ஒளி பரவிக் கிடந்ததால், அண்ட சராசரங்களும் அதன் சைதன்யத்தில் அமிழ்ந்து போயிருந்தது. எனவே மந்தாகினியின் வடிவம்கூட உண்ணியின் மனதிலிருந்து சுத்தமாக மறைந்து போனது.

எனவே, அவன் மனதில் தாத்ரிக்குட்டி இடம் பிடிப்பது இயல்பான ஒரு விஷயமாயிற்று.

பாலைக் குடித்த உண்ணி மீண்டும் திண்ணைக்கு வந்து ஓலைச்சுவடியை எடுத்து விரித்தான்.

முன்னர் அவன் வாசித்து நிறுத்தியிருந்த திருப்பனங்காட்டு கோயில் சுவடி விஷயத்துக்கு மேல் என்ன காரணத்தாலோ அவனால் நகர முடியவில்லை.

மனப்பாடம் செய்வது கடினமான காரியமாகத் தோன்றியது.

மூடிய ஓலைச்சுவடியுடன் உண்ணி படுக்கையறைக்கு வந்தான். தூண்டாமணி விளக்கு வெளிச்சத்தில், தலையணையில் சரிந்தபடி மேற்கொண்டும் அந்த ஓலைச்சுவடியைப் பற்றி ஏதாவது சொல்லப் பட்டிருக்கிறதா என்று அதன் தாள்களைப் புரட்டினான்.

அப்போது தாத்ரிக்குட்டி அந்த அறைக்குள் வந்தாள். வந்தவள் உண்ணியைப் பார்த்தபடி நின்றாள். அவளின் கண்கள் அப்போது நெருப்புத் துண்டுகளைப் போல் ஜொலித்தன.

காமாக்னி அந்தக் கண்களில் பளபளத்தது.

"இன்னும் உங்களுக்குத் தூக்கம் வரலையா?" குழைவான குரலில் கேட்டாள்.

"ஓகோ, நீ இங்கேதான் நின்னுட்டிருக்கியா?" சுவடியிலிருந்து கண்களை அகற்றியவன் அவளைப் பார்த்துக் கேட்டான்.

"தனியாகப் படுத்துக்கொள்ள பயமாக இருக்கிறது. நீங்களும் வேற தனியா இருக்குறீங்க?"

அப்போது யதேச்சையாக என்பது போல் அவளது முந்தானைத் துணி கீழ்நோக்கி நழுவியது. உள்ளுடை ஏதுமணியாத அவள் உடலின் வாளிப்பும், குழிந்த தொப்பூழ்க்கொடியும் உண்ணியைப் பித்துப் பிடிக்கச் செய்தன. அவள் பார்வை அப்போதும் அவன் கண்களின் மீதே பதிந்திருந்தது.

அவன் ரத்தக் குழாய்களில் திடுமென்று ரத்தப் பாய்ச்சல் அதிகரித்தாற் போலிருந்தது. அதை அவன் பார்வையே புலப் படுத்தவும் செய்தது.

"திருமேனி, முதலில் அந்தச் சுவடியைத் தள்ளி வையுங்கள். இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் அது பக்கத்தில் இருப்பது நல்லது அல்ல" அவள் கூறினாள்.

**அ**ஷ்டமுகப் பெருமாள் தனது இருப்பிடத்திலிருந்த ஹோம குண்டத்தில் சமிதுகளை எரித்து அதில் நெய் ஊற்றிக் கொண்டிருந்தார். ஜுவாலைகளை நோக்கியபடி அக்னி நிமித்தத்துக்கான மந்திரங்களை உச்சரித்துக் கொண்டிருந்தார்.



"ஓம்... ஓம்... ஓம்... ஓம்"

ஜுவாலைகளின் நடுவே உண்ணிக்கிருஷ்ணன் கட்டிலில் படுத்தபடி ஓலைச்சுவடி வாசிப்பது தெரிந்தது. அவனுக்கு அருகிலேயே தாத்ரிக்குட்டி நின்று கொண்டிருந்தாள்.

அப்போதைய அவளது தோற்றம் பெருமாளுக்கே மிகவும் பிடித்துப்போனது. எந்த முனிவன் பார்த்தாலும் பரவசப்பட்டுப் போகும் உடலழகு. ஆனால், பெருமாளின் நோக்கம் உண்ணியின் கையிலிருக்கும் சுவடியை அப்புறப்படுத்துவதுதான். பெருமாள் அவளை அழைத்தார். "ரத்த மோகினி" அதைக் காதில் வாங்கிய தாத்ரிக்குட்டி சட்டென்று திரும்பிப் பார்த்தாள்.

"என்ன தயக்கம்?" பெருமாள் கேட்டார்.

"அவர் கையில் இருக்கும் சுவடியில் விஷ்ணு சக்கரம் வரையப்பட்டிருக்கிறது. என்னால் அவரை நெருங்க முடியவில்லை" அந்த பயங்கர ரக்ஷஸ் பதிலளித்தாள்.

அதைக் கேட்ட அஷ்டமுகப் பெருமாள் நெற்றியைச் சுளித்தார்.

அவள் சொன்னது உண்மைதான். அவன் அந்தச் சுவடியைத் தள்ளி வைக்காவிட்டால், அவளால் அவனை நெருங்க முடியாது. விஷ்ணு சக்கரம் மிகவும் ஆபத்தான சங்கதியும்கூட. அசுர சக்திகள் அதற்குப் பயப்படாமல் இருக்க முடியாது.

'இனி என்ன செய்யலாம்?' பெருமாள் யோசனையில் ஆழ்ந்தார்.

'உண்ணிக்கிருஷ்ணனுக்கு அவள் மீதுள்ள மோகத்தைத் தூண்டிவிட வேண்டியதுதான். வேறு வழி இல்லை.'

"ரத்த மோகினி" பெருமாள் திரும்பவும் அழைத்தார்.

அவள் திரும்பினாள்.

"உன் இடுப்பிலுள்ள தங்க அரைஞாண் கொடியை அவனுக்குக் காட்டு!"

அவளுக்கு விஷயம் புரிந்தது.

அவள் தன் வயிறை உள்வாங்கி இழுத்தாள். உடனே... சேலையின் செருகல் மெதுவாக நெகிழத் தொடங்கியது!

## 38

**உ**ண்ணிக்கிருஷ்ணன் கஜுராஹோ சிற்பம் போலிருந்த தாத்ரிக்குட்டியைக் கண்டான். ஆனால், ஒரேயொரு வேறுபாடு. இந்தச் சிற்பம் உயிருடன் இருந்தது.

வானவில்லை இரண்டாக வெட்டியெடுத்து வைத்த புருவக் கொடிகள். கெண்டை விழிகள். தடித்த கீழுதடு. வலம்புரிச் சங்கு போன்ற வழவழப்பான கழுத்து. செந்தெங்கின் கனிகள் போன்ற மார்பிடங்கள். தாமரையிலை போன்ற வயிறுப்பகுதி. பளிங்குக் கல்லில் வடித்தெடுத்தது போன்ற உடல்வாகு.

'மந்தாகினி எங்கே போயிருப்பாள்?' சட்டென்று அவன் உள்மனம் விழித்துக்கொண்டு கேட்டது.

ஆனால், அஷ்டமுகப் பெருமாளின் மாந்திரீக சக்தியால், உண்ணிக்கிருஷ்ணனின் மூளை உருக்கப்பட்டிருந்தது. எனவே, அந்தப் பிராந்தியத்திலிருந்து மந்தாகினியின் வடிவம் முற்றிலுமாக அகற்றப்பட்டது.

எவ்வளவு முயன்றும் மந்தாகினியின் உருவம் அவன் மனதில் தெளிவடையவே இல்லை.

"என்னை உங்களுக்குப் பிடிச்சிருக்கா?" தாத்ரிக்குட்டி போதை பூசிய குரலில் கேட்டாள்.

"இல்லாமல்...?" உண்ணி மயக்கத்தில் குழறினான்.

"அப்புறம் ஏன் இன்னும் சுவடியைக் கையிலேயே வெச்சுருக்கீங்க... என்னை வாரி எடுத்துக்கங்க!" வேண்டுகோளா, கட்டளையா என்று புரியாத குரலில் பேசினாள்.

உண்ணிக்கிருஷ்ணனால் அந்த வேண்டுகோளைத் தட்ட முடியவில்லை. வேட்கை நிரம்பிய அவள் பார்வையைத் தவிர்க்கவோ அதிலிருந்து தப்பிக்கவோ அவனால் சுத்தமாக முடியவில்லை.



உண்ணி கட்டிலிலிருந்து எழுந்து கையிலிருந்த சுவடியை மேற்புறச் சுவரலமாரியில் வைத்தான்.

தாத்ரிக்குட்டி அவனை நெருங்கியவளாகக் கட்டிலில் அமர்ந்தாள். அவள் மார்பில் பதித்த தன் கை விரல்களைக் கீழ்ப்புறமாக இறக்கி அளைந்தான். மென்மையான விரல்கள் உடல் பகுதிகளில் ஊர்ந்தபோது அவன் மெய்ம்மறந்து போனான். அவன் தலை சட்டென்று அவள் மார்பில் பதிந்தது.

உடலிலிருந்து தலையை எடுக்காமலே மேற்புறமாகத் தலையை உயர்த்த, தன் இரு கைகளையும் அவன் முதுகுப்புறமாக எடுத்துச் சென்றாள்.

**தே**வி தன் திருப்பங்காட்டு நீராட்டத்தை முடித்துக் கொண்டு நிமிர்ந்தார். தேவியின் அடர்ந்த கருங்கூந்தல் பனங்குலை மாதிரி ஆற்றுப் பரப்பில் பரவிக்கிடந்தது. அவர் தலையிலிருந்து நீரூற்றுப் போல் தண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.

அப்போது அந்த வழியாகத் தாமரை இலையொன்று நீரில் மிதந்து வந்தது. அதன்மீது செப்பு நிறத்தில் வட்ட வடிவமாக நீர்த்திவலைகள் பாதரசம் போல் தளும்பிக் கொண்டிருந்தன.

மந்தாகினியை நெருங்கிய அந்த இலை ஒரு சுழியில் அகப்பட்டதுபோல் சுழன்று அவள் மார்புப் பகுதியை உரசிக் கொண்டு நின்றது.

அவள் சட்டென்று உண்ணிக்கிருஷ்ணனை நினைத்தபடி, தியானம் செய்து தாமரை இலையில் கிடந்த செப்புநிறத் தண்ணீரை உற்றுப் பார்த்தாள்.

மந்தாகினி திடுக்கிட்டாள்.

இருப்பினும் அவள் தேவியைக் கவனித்தாள். தேவி, அப்போதும் தலைமுடியிலிருந்த நீரை வடியவிட்டுக் கொண்டிருந்தார். கூடவே ஆதிநாராயணனைப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தார்.

அந்தத் தருணத்தைப் பயன்படுத்தி மந்தாகினி தாமரை இலைத் தண்ணீரைக் கவனித்தாள்.

உண்ணியின் மார்புமீது யாரோ ஒரு பெண். அதுவும் உடை நழுவிய நிலையில்...

'என்ன செய்யலாம்?' யோசித்தாள்.

விரைவில் ஒரு தீர்மானத்துக்கு வந்தவளாக பரமசிவனை மனதுள் வணங்கிவிட்டுக் கழுத்திலிருந்த தங்கச்சங்கிலியை அவிழ்த்து, தேவிக்குத் தெரியாமல் பின்புறமாக வீசி எறிந்தாள்.

**தா**த்ரிக்குட்டி, உண்ணிக்கிருஷ்ணனை மயக்கி, பலவீனப் படுத்திய பிறகு, அவளது சொந்த வடிவத்துக்குத் திரும்பி, அவனை அழிக்குமாறு உத்தரவிட்டிருந்தார் அஷ்டமுகப் பெருமாள்.

அவள், அவன் உடலை நெருங்கி, அவன் உதட்டில் தன் உதடுகளைப் பொருத்த முற்பட்டபோது அந்த அறையின் மேல் மச்சின் சுவர்ப்பரப்பில் அசாதாரணமான அளவில் ஒரு பல்லி ஒன்று தென்பட்டது.

அந்த பல்லி கீழ்ப்புறமாகப் பார்த்தது.

தாத்ரிக்குட்டி உண்ணியின் உடலிலிருந்து எழ முற்பட்டாள். பல்லி, சரியாக ஓலைச்சுவடியின் மீது பாய்ந்தது. சுவடி நேராக தாத்ரிக் குட்டியின் உச்சந்தலையில் விழுந்து, அங்கிருந்து நழுவி உண்ணியின் கழுத்தில் உரசிவிட்டு அவன் மார்புப் பகுதியில் வந்து பதிந்துவிட்டது.

பயங்கரமான அலறலுடன் உண்ணியிடமிருந்து விடுபட்டு தாத்ரிக்குட்டி எழுந்தாள்.

அதற்குள் அவள் உருவம் மாறிவிட்டிருந்தது.

பயங்கர வடிவத்துடன் ரத்த மோகினியாக அவள் உருவம் தென்பட்டது.

உண்ணி அதைப் பார்த்து ஒருகணம் பயந்து நடுங்கினான்.

வாழ்க்கையில் இதுவரை இப்படியோர் அனுபவத்தை அவன் அடைந்ததே இல்லை. இதுமாதிரிக் கதைகளைக் கேள்விப்பட்டதாகக் கூட அவனுக்கு ஞாபகமில்லை.



தன் உடலில் மந்திரச்சுவடி விழுந்ததால்தான் தாத்ரிக்குட்டியின் உருவம் இப்படி மாறியது என்று அவனுக்குப் புரிந்தது. எனவே, ஓலைச்சுவடியை மார்பிலேயே வைத்திருந்தான்.

அந்த ரத்த ரக்ஷஸ் மெதுவாகப் பின்வாங்கியது.

கன்னங்கரேலென்ற நிறத்தில், வாயின் இரு புறமும் கோரைப் பற்கள் சிறிய தந்தங்களைப் போல் நீண்டிருக்க, வெறித்த விழிகளுடன்... அந்த உருவத்தைப் பார்க்கவே அவனுக்குப் பயமாக இருந்தது.

அதேசமயம், அங்கிருந்து எழுந்திருக்கவும் அவனுக்குப் பயமாக இருந்தது. எனவே, அப்படியே படுத்திருப்பதுதான் நல்லதென்று முடிவு செய்தான்.

பின்புறமாக நகர்ந்துகொண்டே இருந்த ரக்ஷஸ் நிற்காமல் விரைந்தோடிச் சிறிதாகிக் கடைசியில்... ஒரு வௌவாலாக மாறி அங்கிருந்து பறந்து மறைந்தது.

**ஓ**லைச்சுவடி அங்கு விழுந்ததே ஓர் எதிர்பாராத செயலாகத்தான் மாந்திரீகனான அஷ்டமுகப் பெருமாளுக்குத் தோன்றியது. அதனால் அவர் ஏமாற்றமடையவில்லை. அதனால், தன்னுடைய திட்டம் சற்றுத் தாமதமானாலும் வெற்றி பெற்றுவிடும் என்று அவர் நம்பவும் செய்தார்.

**ம**றுநாள் புவனேஸ்வரன் நாயர் தன் வேலைக்காரன் ராமுண்ணியை அழைத்தார்.

"டேய் ராமுண்ணி, ஒரு தடவை மனைவரை போய்ப் பார்த்து விட்டு வா" என்றார்.

பனங்காட்டு மனைக்குப் போவதென்பது ராமுண்ணிக்கு விருப்பமில்லாத விஷயம். முடிந்தவரை அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களைத் தவிர்க்கவும் செய்தான். காரணம், அந்தக் கிராமத்தில் அதுவரை நடந்த எல்லாவிதமான துர் சம்பவங்களிலும் புதிதாக வந்த தம்புராட்டி பின்னணியில் இருக்கிறாள் என்று அவன் திடமாக நம்பினான்.

அந்தத் தம்புராட்டி என்னவெல்லாமோ அதிசய சக்திகள் கைவரப் பெற்றவள் என்றுதான் அவன் நினைத்தான். பிறவியி

லிருந்தே காது கேளாமலும், வாய் பேசாமலும் இருந்த உண்ணி பேசத் தொடங்கியதும், எப்படிப்பட்ட அபாயங்களிலிருந்து எல்லாம் அவன் தப்பித்திருப்பதும் அந்தத் தம்புராட்டியினால்தான் என்று அவன் உறுதியாக நம்பினான்.

“எதுக்குங்க எஜமான்?” தலை சொறிந்தபடி கேட்டான் ராமுண்ணி.

“மனையில் அந்தத் தம்புராட்டி இருக்கிறாளான்னு பார்த்துட்டு, அந்தக் கிறுக்கனைப் பத்தி ஏதாவது தெரியுதான்னு கவனி” நாயர் கூறினார்.

“அவங்க இருக்கிறாங்களான்னு நான் எப்படிப் பார்க்க முடியும்?”

“டேய் முட்டாள்... வாசல்ல நின்னுட்டுக் குடிக்கத் தண்ணி கேளு. சாதாரணமாவே நீ அங்கே போகும்போது அவளாவே வந்து உன்கிட்ட விவரம் சொல்றது வழக்கமாச்சே.”

“என்னமோ எஜமான், போய்ப் பார்க்கிறேன்...” ராமுண்ணி அங்கிருந்து கிளம்பினான்.

“டேய், அந்தப் பொண்ணு அங்கே இருக்கிறாளான்னு தெரிய வேண்டியது முக்கியம். ஞாபகம் வெச்சுக்க!” நாயர் அவனுக்கு நினைவூட்டினார்.

ராமுண்ணி தலையை ஆட்டியபடி நடையைத் தொடர்ந்தான்.

வழியிலிருந்த கோயிலுக்கு அருகே ஒரு விநாடி நின்றவன், “கடவுளே, எதுவும் நடக்காம இருக்கட்டும்...” என்று வேண்டிக் கொள்ளவும் தவறிவில்லை.

பனங்காட்டு மனையின் தெருவாசற்படியிலிருந்து எட்டிப் பார்த்தான்.

உண்ணிக்கிருஷ்ணன் திண்ணையின் தூணில் சாய்ந்து அமர்ந்திருந்தான். அவன் கால்கள் இளந்திண்ணை மீது கிடந்தன. அவன் கால்களுக்குச் சற்றுத் தள்ளி பத்மநாபன் நாயர் அமர்ந்திருந்தார்.

‘தம்புரானும் காரியஸ்தனும் சேர்ந்து ஏதோ ஒரு திட்டம் தீட்டுகிறார்கள்’ என்று தோன்றியதால் ராமுண்ணி, தெருவாசற்படிக்கு வெளியிலேயே மறைவாக நின்றுகொண்டு கவனித்தான்.



உண்ணிக்கிருஷ்ணனும் பத்மநாபன் நாயரும் திருப்பனங்காட்டுக் கோயிலைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர்.

“அந்தக் கோயில் தான்னிக்காட்டு இல்லத்துக்கு சொந்தமானது. இப்போது அதற்குச் சரியான பராமரிப்பு இல்லை. கடைசி வாரிசும் வெளியூரில் இருக்கிறார். இப்போது பூஜையெல்லாம் ஒழுங்கா நடக்குதான்னே தெரியலை தம்புரான். என்ன விஷயம்... திடீர்னு கோயிலைப் பத்திக் கேட்கிறீங்க?” காரியஸ்தர் கேட்டார்.

“ஒண்ணுமில்லை... அங்கே சில ஓலைச்சுவடிகள் இருக்கிறதாத் தெரிய வந்தது. அதெல்லாம் நம்ம கைக்கு வந்தா நல்லது. அதுக்குத்தான்” உண்ணி காரணத்தை விளக்கினான்.

“ஒரு யோசனை, அந்தக் கோயிலுக்கு உரியவங்களோட பராமரிப்பே இல்லேன்னா, கோயிலையும் கோயிலைச் சேர்ந்த நிலத்தையும் விலைக்கு வாங்கிடலாம்.”

“வாங்கிடலாம். வாங்குறதுல ஒண்ணும் சிக்கல் இல்லை. வாங்கிட்டா யார் அந்தக் கோயிலைப் பார்த்துக்கிறது? நீங்க சொன்னதைப் பார்த்தா இங்கேருந்து இருபது மைலுக்குக் குறையாம இருக்கும். நாம அடிக்கடி அங்கே போயிட்டு வர்றதும் சாத்தியமா?”

“சரி தம்புரான்... நான் வேணும்னா முதல்ல ஒரு நடை போய்க் கோயிலைப் பார்த்துட்டு வர்றேன்...” பத்மநாபன் நாயர் தன் அபிப்பிராயத்தைக் கூறினார்.

“அப்படியானா, நாம ரெண்டு பேருமே போயிட்டு வரலாம். எனக்கும் வெளியிடத்துக்குப் போன மாதிரியும் இருக்கும்” உண்ணி கூறினான்.

“உங்க விருப்பப்படியே செஞ்சுட்டாப் போகுது.”

“அப்புறம் இன்னொரு விஷயத்தையும் உங்ககிட்டச் சொல்லணும். விஷயம் ரகசியமா இருக்கட்டும்... பிற்பாடு வெளியே தெரிஞ்சாப் பரவாயில்லை.” உண்ணிக்கிருஷ்ணன் தாழ்ந்த குரலில் பேசினான்.

விஷயம் முக்கியமானதுதான் என்று உறைக்கவே காரியஸ்தர் சற்று நிமிர்ந்து உட்கார்ந்தார்.

“மந்தாகினியைக் காணோம். எங்கே போனாள்னு தெரியலை. தற்சமயம் இந்த விஷயம் நம்ம ரெண்டு பேருக்கு மட்டும் தெரிஞ்சாப் போதும். அதுக்கு உடனடியா ஒரு மாற்று ஏற்பாடு செய்யணும். சாப்பாடே இப்ப ஒரு பிரச்சினையாயிடுச்சு. திடீர்னு ஒரு பொண்ணு வந்தாள். கடைசியில் அவ ஒரு பூதம்னு தெரிஞ்சது. நான் சின்னப் பையனா இன்னும் கல்யாணம் பண்ணாம இருக்கிறேனா, யாரோ ஒரு ரக்ஷஸ் தாத்ரிக்குட்டிங்கிற பேர்ல வீட்டுக்குள்ளே வந்துட்டாள். அதனால உங்களுக்கு தெரிஞ்ச நல்ல குடும்பத்துப் பெண்ணா யாராவது இருந்தாப் பாருங்க.”

பத்மநாபன் நாயர் எழுந்து வராந்தாச் சுவரில் சாய்ந்து நின்று யோசனையிலாழ்ந்தார்.

பத்மநாபன் நாயர் கெட்டிக்காரர். எந்த ஒரு பிரச்சினையையும் சுலபமாகச் சமாளிக்கக் கூடியவர். இன்னும் குறிப்பாகச் சொல்வதானால், உண்ணி ஒரு நல்ல நிலைக்கு வந்ததற்கு உண்மையில் மனமார மகிழ்ச்சியடைந்தவர் அவர். அப்படிப்பட்ட இயல்பு அவருடையது.

“தம்புரான், உங்களுக்குத் தெரியாத விஷயமும் இருக்கு. இந்த விஷயத்தை முடிஞ்சவரைக்கும் ரகசியமாவே வெச்சிருக்கணும். அப்பத்தான் எல்லாம் நல்லபடியா நடக்கும். அதுக்கு நான் சில திட்டங்கள் வெச்சிருக்கிறேன்.”

பத்மநாபன் நாயர் என்ன சொல்ல வருகிறார் என்று உண்ணிக்குப் புரியவில்லை. விழித்தான்.

“தம்புரான், இங்கிருந்த தம்புராட்டியை எல்லாரும் பயம் கலந்த மரியாதையுடன் பார்த்தார்கள். அந்த பயத்தினால்தான் பெரிய வீடு நம்மளை அதிகமா தொல்லை பண்ணாம இருக்குது. என்ன காரணம்னு எனக்கும் தெரியாது. அதனால அவர் காணாமப் போனது வெளியில தெரியாம இருக்கிறதுதான் நல்லது. அதனால அவங்களை மாதிரியே ஒரு தம்புராட்டி இங்கே வரணும். அதுக்கொரு வழி கண்டுபிடிக்கணும். நான் யோசிச்சுப் பார்க்கிறேன்...” பத்மநாபன் நாயர் துண்டை உதறித் தோளில் போட்டுக்கொண்டார்.



உண்மையிலேயே காரியஸ்தர் சொன்னது உண்ணிக்குப் புரியவில்லை.

‘அவர் சொன்னதற்கு என்ன அர்த்தம்? மந்தாகினி எங்கே போயிருப்பாள்?’ என்று என்னவெல்லாமோ நினைத்துக் குழம்பிய உண்ணிக்கிருஷ்ணன் அதே இடத்திலேயே அமர்ந்திருந்தான்.

‘மந்தாகினி எதனால் தன்னைவிட்டுப் போனாள்? அவனுக்குத் தெரிந்து அதற்கு எந்தக் காரணமும் இருக்கவில்லை. இங்கு இப்போது எல்லாவித வசதிகளும் இருக்கின்றன.

அவள் வந்தபோது இருந்த நிலையில் இப்போது மனை இல்லை.

ஏறத்தாழக் கையைவிட்டுப் போயிருந்த சொத்துகள் எல்லாம் திரும்பக் கிடைத்திருக்கின்றன. ஊருக்குள்ளும் உண்ணிக்கு இப்போது நல்ல பேர். ஊர் விஷயங்களில் அவனையும் பொருட்டாக மதித்துச் சேர்த்துக் கொள்கின்றனர்.

வீரராகவன் பிள்ளை தன் சகோதரி மகளை உண்ணிக்கு மணம் செய்து கொடுக்க விரும்புவதாகவும் ஆள் மூலம் தகவல் சொல்லியனுப்பினார்.

அவர் சகோதரியின் கணவரும் பண்டிதரான ஒரு நம்பூதிரிதான்.

அவள் பார்ப்பதற்கும் அழகாக இருந்தாள்.

ரதியைப் போன்ற வடிவம்.

ஒரு தடவை கோயிலில் உண்ணி அவளைப் பார்த்திருக்கிறான்.

‘ஆனால், திருமணம் தேவையா?

அவன் மனம் இன்னும் மந்தாகினியை மறக்க முடியாமல் தவித்துக் கொண்டிருந்தது.

இத்தனைக்கும் நடுவே மந்தாகினியிடம் அதிசயமான ஏதோ ஒரு சக்தி இருப்பதாக அவனுக்குத் தோன்றியது.

அப்போது யாரோ தெருவாசற்படியைத் தாண்டி வருவது தெரிந்தது.

நெருங்கிய போதுதான் ஆள் யாரென்று அடையாளம் தெரிந்தது.

பெரிய வீட்டு வேலைக்காரனான ராமுண்ணி.

ஒரு திருடனைப் போல் தயங்கித் தயங்கி வந்தவன் துளசி மாடத்தின் அருகே நின்றான்.

"என்ன ராமுண்ணி, என்ன விசேஷம்?" உண்ணி விசாரித்தான்.

உடனே தன் தோளில் கிடந்த துண்டை எடுத்து இளந் திண்ணையில் ஒரு தட்டுத் தட்டிவிட்டு அமர்ந்தான்.

"தாகமா இருக்குது தம்புரான்" ராமுண்ணி கூறினான்.

"இரு கொண்டு வர்றேன்" உண்ணி எழுந்து வீட்டுக்குள் போனான். கையில் நீர் மோர் நிறைந்த சொம்புடன் வந்தான்.

பத்மநாபன் நாயரின் எச்சரிக்கை உண்ணிக்கு ஞாபகம் வந்தது.

"தம்புராட்டி இல்லையா?" ராமுண்ணி கேட்டான்.

'ஓகோ, இந்த விஷயத்தை தெரிந்து கொள்ளத்தான் வந்திருக்கிறானா?'

"ஒதுங்கி இருக்கிறாள்."

ராமுண்ணிக்கு விஷயம் புரிந்தது.

"வேலைக்காரி கூடவா இல்லை."

"ஏதோ வேலையா வெளியில போயிருக்கா."

"நான் உங்க காரியஸ்தரைப் பார்க்கத்தான் வந்தேன். அவர்தான் இல்லையே..." சொல்லிவிட்டு அங்கிருந்து எழுந்து நடையைக் கட்டினான்.

## 39

**ப**னங்காட்டு மனையின் தெருவாசற்படியைத் தாண்டும் போது பத்மநாபன் நாயர் மனதில் இரண்டு விதமான தீர்மானங்கள் உருவாகியிருந்தன.



'முதலாவது, உண்ணிக்குப் பொருத்தமான ஒரு பெண்ணைப் பார்த்து மணமுடிக்க வேண்டும். இரண்டாவது, தான்னிக்காட்டு இல்லத்துக்கு சொந்தமான கோயிலையும் இடத்தையும் விலைக்கு வாங்கவேண்டும்.

இரண்டும் தேவையான விஷயங்கள்தான்.'

பத்மநாபன் நாயருக்குப் பிடிவாதமான சில குணங்கள் இருந்தன. தான் பணிபுரியும் எஜமான் என்ன கேட்டாலும் தன்னால் முடிந்த அளவு உயர்ந்தபட்சம் அதை நிறைவேற்றிக் கொடுப்பது, இதில் எந்தவிதமான கெடுதல் இருந்தாலும் தவறாமல் தயங்காமல் சுட்டிக்காட்டுவது.

தன் சொல்லை எடுத்துக்கொள்ளாவிட்டால், அதன் விளைவுக்குத் தான் பொறுப்பு இல்லையென்று முகத்துக்கு நேராகவே சொல்லிவிடுவார். இந்த விஷயத்தில் எப்போதுமே அவர் விட்டுக் கொடுப்பது இல்லை.

அவருக்கு உண்ணிக்கிருஷ்ணனை என்ன காரணத்தாலோ மிகவும் பிடித்துப் போய்விட்டது. அந்த இல்லத்தின் சொத்துகளையெல்லாம் புவனேஸ்வரன் நாயர் கைப்பற்றி அனுபவித்து வருவது அவருக்கும் தெரிந்தே இருந்தது. புவனேஸ்வரன் நாயரிடம் பண பலமும் ஆள்பலமும் இருந்ததால் அடங்கியிருக்க வேண்டியிருந்தது.

இன்று நிலைமை வெகுவாக மாறியிருக்கிறது.

பனங்காட்டுமனை உண்ணிக்கிருஷ்ணனுக்கு இப்போது ஓரளவு சொத்து கிடைத்துவிட்டது. நெல், தேங்காய் மூலம் நல்ல வருமானம் வருகிறது. ஊருக்குள் அவன் மீது நல்ல அபிப்பிராயம். எங்காவது நான்கு பேர் சேர்ந்து நின்று பேசினால், நிச்சயம் அது உண்ணிக்கிருஷ்ணனைப் பற்றித்தான் என்று உறுதியாகச் சொல்லலாம். உண்ணி, பிறருக்கு உதவும் நல்ல மனம் கொண்டவன்.

பத்மநாபன் நாயர் வீட்டை அடைந்தார். சாப்பாட்டை முடித்துக் கொண்டு பயணம் புறப்பட ஆயத்தமானார். தற்சமயம் உண்ணிக் கிருஷ்ணனை அழைத்துக்கொண்டு போகாமல், தனியாகவே செல்வதென்று தீர்மானித்தார். தான் போய் விசாரித்து விஷயம் தெரிந்த பிறகு உண்ணியிடம் சொல்வதுதான் முறை என்று நினைத்தார்.

“எங்கேயோ பெரிய பயணம் புறப்படுகிற மாதிரித் தெரியுதே” அவர் மனைவி கோமதி அம்மாள் கேட்டார்.

“ஆமாம், ஒரு அவசர வேலை!”

கோமதியம்மாள் படித்தவர். இரண்டு பெண் குழந்தைகளின் தாய். இருவருக்கும் கல்யாணம் செய்து அனுப்பியாகி விட்டது. மாப்பிள்ளைகள் பட்டணத்தில் நல்ல வேலைகளில் இருந்தார்கள். வேறு யாரும் இல்லாததால் கணவனைக் கவனித்துக் கொள்வது மட்டுமே அவரது வேலை.

“பட்டணம் பக்கமா போறீங்க?”

“எல்லாத்தையும் போயிட்டு வந்த பிறகு சொல்றேன் கோமதி. நீ வெளியில இறங்கி நில்லு.”

பத்மநாபன் நாயர் எங்காவது வெளியில கிளம்புவதானால், கோமதியின் முகத்தை சகுனமாகப் பார்த்துவிட்டுத்தான் கிளம்புவார். மனைவியைப் பார்த்துவிட்டுப் போனால், காரியம் வெற்றிகரமாக நிறைவேறும் என்பது அவரது நம்பிக்கை.

அந்த நம்பிக்கை அவருக்கு மட்டுமில்லை; அந்தக் கிராமத்திலுள்ள பெரும்பாலானவர்களும் கோமதி அம்மாளை ராசியான வராகவே கருதினார்கள். கணவர், வெளியில் கிளம்புபோது சிரித்த முகத்துடன் வழியனுப்பி வைப்பாள்.

கோமதியம்மாள் தெரு வாசல்படியில் அவரை எதிர்பார்த்துக் காத்திருந்தாள்.

“நான் வரட்டுமா” என்று கேட்டபடி அவர் வீட்டிலிருந்து வெளியேறினார்.

அவர் வழக்கமே அதுதான்.

சற்றுத் தொலைவு நடந்த பிறகு தெரு திரும்பி மேற்குத் திசையில் தொடரும் பாதையில் மாட்டுவண்டி ஒன்று தட்டுப்பட்டது. தான் போகும் பாதையை நோக்கியே வண்டி சென்று கொண்டிருந்தது. இந்த இரண்டு சகுனமும் ஒன்றுக்கு ஒன்று எதிரான விஷயங்களாக இருந்தன.



இருப்பினும் அவர் நடையின் வேகத்தை அதிகப்படுத்தினார்.

மாட்டு வண்டிக்குச் சற்றுத் தொலைவு வந்ததும் கைதட்டினார். வண்டி நின்றது.

பத்மநாபன் நாயர் வண்டியோட்டியை நெருங்கினார்.

“யாரு, பத்மநாபன் நாயரா? வாங்க, வண்டியில ஏறுறீங்களா?” வண்டிக்காரர் சாண்டி கேட்டார்.

“அதுக்குத்தானே கூப்பிட்டேன்?” என்றபடி வண்டியில் ஏறினார் பத்மநாபன்.

வண்டிக்காரர் தன் வழக்கமான பாஷையில் மாடுகளைக் கிளப்பி விரட்டினார்.

வண்டி முன்புறமாக நகரத் தொடங்கியது.

“வெத்திலை போடுறீங்களா?” நாயர் கேட்டார்.

“நான் உங்ககிட்டக் கேட்கணும்னு நெனைச்சேன். நீங்களே கேட்டுட்டீங்க. நல்ல நாட்டுப் புகையிலை என்கிட்ட இருக்குது. போடுறீங்களா?” மூக்கணாங் கயிறை வண்டியின் சட்டத்தில் கட்டிவிட்டு, இடதுபுறமிருந்த மரப்பெட்டியிலிருந்து ஒரு சிறு பொட்டலத்தை வெளியே எடுத்தார் சாண்டி.

அது சர்க்கரைப் பாகில் ஊற வைத்த பன்னீர் புகையிலையும் கூட.

வக்கணையாக வெற்றிலை போட்ட பிறகு பழைய விஷயங்கள் நினைவுக்கு வரவே, இருவரும் கதை பேசத் தொடங்கினர்.

பேச்சோடு பேச்சாக வண்டிக்காரர் சாண்டியிடம், நாயர் கேட்டார்: “ஆமாம், உங்களுக்குத் தெரிந்து கல்யாண வயதில் நம்பூதிரிப் பெண்கள் யாராவது இருக்கிறார்களா?”

மாட்டு வண்டி வைத்திருக்கும் சாண்டிக்கு நம்பூதிரிமார்களின் இல்லங்களுடன் தொழில்ரீதியான தொடர்பு இருந்தது. அவர்களின் விளைபொருள்களை நகருக்கு எடுத்துச் செல்வதும், கடைக்காரர்களிடம் ஒப்படைப்பதும் சாண்டியின் வேலைதான்.

சாண்டி, யோசனையில் யாராவது தட்டுப்படுகிறார்களா என்று தேடினார். பிறகு கேட்டார்: "ஆமாம், இப்போது எங்கே போகிறீர்கள்?"

"அது கொஞ்சம் தூரமான இடம். திருப்பனங்காட்டுக் கோயில் தெரியுமா?" நாயர் திருப்பிக் கேட்டார்.

"தெரியுமே, தான்னிக்காட்டு இல்லத்துக்காரங்களோட கோயில். அந்த ஊர் புளி, பனையோலை இதையெல்லாம் நான்தானே பட்டணத்துக்குக் கொண்டு போறேன்."

"அப்படியானா என் பயணம் சுலபமாயிடுச்சு. அங்கேதான் போயிட்டிருக்கேன்" நாயர் வெற்றிலை எச்சிலை லாகவமாக இரண்டு விரல்களின் இடுக்கு வழியாக வெளிப்புறமாகத் துப்பிவிட்டுப் பேசினார்.

"நல்லவேளை, நானும் அங்கேதான் போறேன். பேச்சுத் துணைக்கு நீங்க கிடைச்சது என்னோட அதிர்ஷ்டம்!" சாண்டி மகிழ்ச்சியுடன் பதில் அளித்தார்.

வண்டி அதன்பாட்டுக்குப் போய்க் கொண்டிருந்தது.

"அங்கே நீங்க யாரைப் பார்க்கணும்? விஷ்ணு நம்பூதிரி இப்ப ஊர்லதான் இருக்கிறார். அவரு வெளியூர்ல வேலை செய்யறார்."

"நான் சாக்ஷாத் அவரையேதான் பார்க்கணும்... நல்லதாப் போச்சு."

"அப்படியானா, இந்தப் பயணம் சுலபமானதுதான்" சாண்டி கூறினார்.

"நான் சொன்ன விஷயம்...." நாயர் நினைவூட்டினார்.

"நம்மளோட மதியச் சாப்பாடே ஒருவேளை அந்த வீட்டுலதான் இருக்கும்" சாண்டி கூறினார்.

"நிஜமாவா!" வியப்பை அடக்கமாட்டாதவராக நாயர் வாயைத் திறந்து கேட்டுவிட்டார்.

சூரியன் உச்சிக்கு வந்துவிட்டிருந்தான். மாடுகளின் நிழல் அவற்றின் உடல் பகுதியை விட்டுத் தாண்டாமலே நகர்ந்து கொண்டிருந்தது.



இரண்டு புறங்களிலும் படர்ந்து பந்தல் போல் வளர்ந்திருந்த மரங்களின் பசிய நிழல்களின் ஊடாக நடந்த மாடுகள் சற்றுத்தொலைவு சென்றதும் நின்றன. வண்டி ஒரு பெரிய புளிய மரத்தின் அடிப்புறத்தை அடைந்திருந்தது. சாண்டி வண்டியிலிருந்து குதித்தான்.

"இறங்குங்க நாயரே."

பத்மநாபன் இறங்கினார்.

மாடுகளை நுகத்தடியிலிருந்து விடுவித்துப் புளிய மரத்தின் பெரிய வேர்களில் பிணைத்தார். வண்டியின் கீழிருந்து கொஞ்சம் வைக்கோலை எடுத்து அவற்றுக்கு முன்னால் போட்டார்.

"இதுதான் நான் சொன்ன இல்லம். சாத்தங்கேரி மனைங்கிறது பேரு. உண்ணிக்கிருஷ்ணனுக்கு ஏற்ற பொண்ணு இங்கேதான் இருக்கு."

நாயர் பெண்ணைப் பற்றி விசாரித்தது பனங்காட்டு மனையைச் சேர்ந்த உண்ணிக்கிருஷ்ணனுக்காகத்தான் இருக்குமென்று சாண்டி யூகித்திருந்தார். பணம் சேர்ந்த பிறகு இன்னொரு திருமணம் செய்து கொண்டால் என்ன என்று உண்ணி நினைத்திருக்கலாம் என்பது அவரது யூகம்.

விஷயம் ரொம்பவும் ரகசியமாக இருக்க வேண்டுமென்று தான் நினைத்திருந்தும் வண்டிக்கார மனுஷன் கெட்டிக்காரத்தனமாக யூகித்து விட்டாரே என்ற வியப்பு நாயரின் முகத்தில் தெரிந்தாலும் அதை மறைத்துக்கொண்டார். அதற்கு மேல் அதைப்பற்றிப் பேசாமலும் இருந்துவிட்டார்.

"வாங்க... உள்ளே போகலாம். இந்த வீட்டுக்காரங்க பழைய ஆளுங்க மாதிரியெல்லாம் தீண்டாமை பார்க்கிறதில்லை. நான் அடிக்கடி இந்த மனையில் சாப்பிடறதுண்டு" சாண்டி கூறினார்.

இருவரும் தெருவாசற்படி தாண்டினர்.

வராந்தாவில் நடுவயது மனிதர் ஒருவர் உட்கார்ந்திருந்தார். ஏதோ ஒரு புத்தகத்தை வாசித்துக் கொண்டிருந்தார். வருபவர்களை அவர் கவனிக்கத் தவறவில்லை.

“அம்மா ஸ்ரீகுட்டி ரெண்டு இலை போடும்மா” அவர் உட்புறம் பார்த்துக் குரல் கொடுத்தார்.

“வாங்க வண்டிக்காரரே.... நான் இப்பத்தான் சாண்டியைப் பற்றி யோசிச்சேன். உங்களுக்கு நூறு வயசு. ஆமாம், கூட இருக்கிறவர் யாரு?” நடுவயதுக்காரர் கேட்டார்.

சாண்டி, நாயரை அவருக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

சாத்தங்கேரி மனை திருமேனியின் பெயர் ஜாதவேதன் நம்பூதிரி. அறுபது வயது இருக்கலாம். இரட்டை நாடி உடம்பு. நான்கு முழ வேட்டி கட்டியிருந்தார். தலைமுடியை ஒட்ட வெட்டியிருந்தார். சிவந்த நிறம். நெற்றியில் சந்தனக் கீற்று ஒட்டியிருந்தது.

“அப்புறம் பனங்காட்டு உண்ணி இப்ப சௌகரியமா இருக்கிறதாக் கேள்விப்பட்டேன். ரொம்ப சந்தோஷம் அந்தத் தம்பியோட குறை எல்லாம் நீங்கிட்டதாகவும் பேச்சு. சிலதெல்லாம் ஒரு குறிப்பிட்ட வயசு வரைக்கும்தான். நல்ல காலம் ஆரம்பமாயிட்டா, யார் தடுத்து நிறுத்த முயற்சி பண்ணினாலும் ஒண்ணும் பலிக்காது. காலெடுத்து வைக்கிற ஒவ்வொரு எட்டும் உச்சியை நோக்கித்தான் இருக்கும்.”

“அப்பா அவங்களுக்கு சாப்பாடு போட்டுடலாமா?” உள்ளிருந்து பெண்குரல் ஒன்று கேட்டது.

“சவுக்கையில் பரிமாறும்மா. நானும் இவங்க கூடவே உட்கார்ந்துடுறேன்” திருமேனி பதிலளித்தார்.

மூவரும் சவுக்கையை நோக்கி நடந்தனர்.

ஸ்ரீகுட்டிதான் சாதம் பரிமாறினாள். சாத்தங்கேரி மனை ஜாதவேதன் நம்பூதிரியின் இளைய மகள் ஸ்ரீதேவிக்குட்டி.

இளந்தளிர் போன்ற பெண்.

கொன்றை மரம் பூத்துக் குலுங்கியதுபோல் அவள், அவர்களுக்கு முன்னால் தென்பட்டாள்.

சாண்டி, நாயரிடம் ஜாடையாகக் கண்ணைச் சிமிட்டினார்.



நாயருக்கு விஷயம் விளங்கிவிட்டது. தான் பார்க்க வந்த பெண் இவள்தான்!

உண்ணிக்குப் பொருத்தமான பெண்தான். தோற்றத்திலும் ஏறத்தாழ மந்தாகினியைப் போலவே இருந்தாள். ஊன்றிக் கவனித்தால்தான் வித்தியாசங்களைக் கண்டுபிடிக்க முடியும். நாயர் அவள் உருவத்தை மனதில் பதிய வைத்துக் கொண்டார்.

‘உண்ணிக்கிருஷ்ணனிடம் விஷயத்தைச் சொல்லிவிட்டு மேற்கொண்டு யோசிக்கலாம்’ என்று திட்டமிட்டார்.

சாப்பாட்டை முடித்துக்கொண்டு எல்லாரும் திண்ணைக்கு வந்தனர்.

“நாயரே, நீங்கள் வேறு எங்காவது போக வேண்டுமா?” திருமேனி கேட்டார்.

“திருப்பனங்காட்டுக் கோயில் வரைக்கும் போகணும். விஷ்ணு நம்பூதிரியைப் பார்த்துக் கோயில் விஷயத்தைப் பேசணும். என்னமோ நம்ம உண்ணிக்கு அந்தக் கோயிலோட ஒரு ஈடுபாடு. அதுதான் விசாரிக்கலாம்னு வந்தேன்.”

“நல்ல யோசனை. கோயிலைக் கவனிக்கத் தகுந்த ஆள் இருந்தா புண்ணியமான வேலையும்கூட. ஊர்க்காரங்களுக்கும் பிரயோஜனப் படும். பொறுப்பாக் கவனிக்க ஆள் கிடைச்சுட்டா, விலைகூட ஒரு பொருட்டு இல்லை அவருக்கு.”

“அப்ப ஒரு நடை போயிட்டு வர்றேன்...” பத்மநாபன் எழுந்தார்.

“நானும் அந்தப்பக்கம் போக வேண்டி இருக்கு. வண்டியில உட்காருங்க போகலாம்!” சாண்டியும் அங்கிருந்து எழுந்தார்.

காளை மாடுகள் ஓய்வை முடித்துக்கொண்டு நடை போடத் தொடங்கின.

“உங்களுக்குப் பிடிச்சிருக்கா?” சாண்டி கேட்டார்.

“திருப்தியா இருக்கு. பேசி முடிச்சுட வேண்டியதுதான். பார்க்கலாம்” நாயர் சிரிப்புடன் கூறினார்.

மாட்டு வண்டி திருப்பனங்காட்டுக் கோயிலை அடைந்தபோது மாலை நேரம் ஆகியிருந்தது.

அப்போது கோயிலுக்குள்ளிருந்து சங்கநாதம் எழுந்தது.

“பகவதியைக் கும்பிட்டுட்டு வர்றேன்” நாயர், வண்டியிலிருந்து இறங்கி நடந்தார்.

அங்கிருந்தவாறே கோயிலை ஒட்டுமொத்தமாக நோட்டமிட்டார்.

ஒருகாலத்தில் புகழ்பெற்றிருந்த கோயில். தோற்றத்திலேயே அதன் பெருமை தெரிந்தது. கோயிலின் சுற்றுப்புறச் சுவர் ஆங்காங்கே உடைந்திருந்தது. உடையாத இடங்களில் பச்சை நிறப் பாசம் சுவர்களில் பளிச்சென்று தெரிந்தது. வெகு காலமாகப் படிந்திருந்த பாசம், ஒருசில இடங்களில் உதிர்ந்து, புதிதாகப் படர்ந்திருந்ததால் மாறுபட்ட பச்சை வண்ணங்களில் படம் வரைந்தது போலிருந்தது அந்தக் காட்சி.

பிரமாண்டமான ஆலமரம் ஒன்று கோயிலுக்கு முன்னால் நின்றிருந்தது. அதன் அடிப்பரப்பில் யாரோ ஒரு காலத்தில் கட்டிய வட்டமான சிமெண்டுத் தரை, ஆங்காங்கே வெடிப்பு விட்டு அதன் வழியே வேர்கள் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தன. பெரும் வேர்கள் சில, பாம்புகள் சுருண்டு படுத்திருப்பது போல் காட்சியளித்தன.

ஆலமரத்தடித் திண்ணையில் நாகதேவதைகளின் சிலைகள் வரிசையாக நடப்பட்டிருந்தன. எண்ணெய் மற்றும் அழுக்கு, பாசம் போன்றவை நாகதேவதைச் சிலைகளின் மீது படிந்து மரத்தின் பட்டைகள் போல் செதில்களாகத் துருத்திக் கொண்டிருந்தன.

ஆலமரத்தின் கிளைகளில் கிருஷ்ணப் பருந்துகள் ஏராளமாகக் குடியிருந்தன.

அவ்வப்போது அவை குரல் கொடுத்தன. கரும்பச்சை நிறத்தில் பெரிய பெரிய இலைகளுடன் விளங்கிய அந்த மரத்தின் உட்பகுதியில் இருள் ஒளிந்திருந்தது.

அங்கிருந்து என்னென்னவோ சத்தங்கள் எழுந்தன.

பத்மநாபன் நாயர் அந்தப் பக்கமாகப் பார்வையைத் திருப்பினார்.



காட்டுப் பூனையளவு பெரிதாக இருந்த வௌவால்கள் ஒவ்வோர் இலைக்குப் பின்னும் ஒளிந்திருப்பதுபோலத் தோன்றியது.

அந்த மரத்தின் அடிப்புறத்தில் ஆலம் பழங்கள் ஆயிரக் கணக்கில் சிதறிக் கிடந்தன. கூடவே ஏதேதோ மரங்களின் பழங்களும், கொட்டைகளும் கிடந்தன.

‘இல்லத்துக்கு இதுவும் ஒரு வருமானம்தான்!’ என்று நினைத்தவர் கோயிலின் உட்புறத்தைப் பார்த்தார்.

## 40

திருப்பனங்காட்டு பகவதி கோயிலின் வெளிவாசல் திறந்தே கிடந்தது.

பத்மநாபன் நாயர் உட்புறமாக கண்களைச் செலுத்தினார். கருவறைக்குள் எண்ணெய் விளக்கு எரிந்து கொண்டிருப்பது தொலைவிலிருந்தே தெரிந்தது. ஆனால், அதன் வெளிச்சம் அதிகத் தொலைவுக்குப் பரவாமல் அந்த இடத்திலேயே தங்கி நிற்பது போலவும், அந்த வெளிச்சத்தில் பஞ்சலோகத்தாலான பகவதியின் சிலை உயிர்த்துடிப்புடன் அசைவதாகவும் நாயருக்குத் தோன்றியது.

மற்ற இடங்கள் எல்லாம் இருண்டு கிடந்தாலும், கருவறை விளக்கின் வெளிச்சத்தை லட்சியமாக்கி அவர் நடந்தார்.

அந்தப் பிராந்தியமே அமைதியில் மூழ்கியிருந்தது. இரவுப் பறவைகள்கூட குரல் கொடுக்காமல் ஓய்வெடுப்பது போலிருந்தது.

கோயிலுக்கு முன்புறமிருந்த ஆலமரத்தின் இலைகள் ஆகாயத்தில் படம் வரைந்து வைத்தவை போல் தெரிந்தன.

“தேவி, மகாமாயே” நாயர் கண்களை மூடி, கருவறைக்கு நேராக நின்று மனமுருகப் பிரார்த்தித்தார். ‘வந்த காரியம் நல்லபடியாக நடக்கட்டும். உண்ணிக்கிருஷ்ணனுக்கு ஏற்ற பொருத்தமான பெண் ஒருத்தி மனைவியாக வாய்க்க அனுக்கிரகம் செய்யுங்கள்!” என்று வேண்டிக் கொண்டார்.

“யாரது?” முன்பின் பழக்கமில்லாத ஆண்குரல் கேட்டவுடன் நாயர் திரும்பிப் பார்த்தார்.

வலது கையில் வாழையிலைத் துண்டில் மடித்த பிரசாதத்துடன் பவத்ராதன் நம்பூதிரி நின்று கொண்டிருப்பதைக் கவனித்தார்.

“வழக்கமில்லாத இந்த நேரத்தில் யார் தெரியவில்லையே...” பவத்ராதன் மறுபடியும் கேட்டார்.

“நான் தெற்குப் பக்கத்துலேர்ந்து வர்றேன். பனங்காட்டு இல்லத்தோட காரியஸ்தன். பெயர் பத்மநாபன்!” பதிலளித்தபடி ஒதுங்கி நின்றார்.

“இந்தாங்க பிரசாதம்” பவத்ராதன் தன் கையிலிருந்த இலைப் பொட்டலத்தை நாயரின் கைகளில் போட்டார்.

அது கைக்கு வந்ததும் அதிலிருந்து சந்தனத்தை எடுத்து நெற்றியில் தீற்றிக் கொண்டார் நாயர்.

“நம்பூதிரி, தான்னிக்காட்டு மனை பக்கத்தில்தான் இருக்கிறதா?” நாயர் கேட்டார்.

“ஆமாம், இதெல்லாம்கூட அவங்க இடம்தான். அங்கே நீங்க யாரைப் பார்க்கணும்? மனை கிழக்குப் பக்கமாத் தெரியுறதுதான்.”

“கோயிலுக்கு உரியவரைப் பார்க்கத்தான் வந்திருக்கிறேன். வந்து சேர்றதுக்கு ராத்திரியாயிடுச்சு. இவ்வளவு நேரமாகும்னு நான் நினைக்கலை...” நாயர் தெரிவித்தார்.

“இந்த நேரத்துக்கு மேல தான்னிக்காட்டு மனைக்குப் போக வேண்டாம். அவங்க இனிமேல் யாரையும் சந்திக்க மாட்டாங்கன்னு நினைக்கிறேன். நீங்க தப்பா நினைக்கலேன்னா இந்த மண்டபத் திலேயே ராத்திரி தங்கிக்கலாம்!” திருமேனி கூறினார்.

“ரொம்பவும் நல்லதாகப் போய்விட்டது. சாப்பிடுவதற்குப் பக்கத்தில் கடை ஏதாவது இருக்கிறதா, திருமேனி?” நாயர் கேட்டார்.

“இப்படியே வடக்குத் திசையில் நேராப் போனா கூப்பிடு தொலைவில் ஒரு சின்ன ஒட்டல் இருக்கு. அதுவும் நாயர் ஒருத்தருதுதான். அங்கே சாப்பிட ஏதாவது இருக்கும். சீக்கிரமாக் கிளம்புங்க. நாம பேசிட்டே இருந்தா, நேரம் போறதே தெரியாது” திருமேனி திரும்பி நடக்கத் தொடங்கினார்.



பதமநாபன் நாயர் நேராகச் சாண்டியிடம் வந்தார். பவத்ராதன் கூறியதையெல்லாம் சொன்னார். பிறகு இருவரும் ஒன்றாகத் திருமேனி குறிப்பிட்ட கடையை நோக்கி நடந்தனர்.

அவர்கள் கடையை அடைந்தபோது கடைக்காரர் கடையை ஏரக்கட்டிக் கொண்டிருந்தார். எல்லாப் பொருள்களும் தீர்ந்து விட்டிருந்தன. நேந்திரம் பழமும், ரொட்டியும்தான் இருந்தன. அத்துடன் காபியும் சாப்பிட்டுப் பசியாறிக் கொண்டனர்.

இரவில் படுத்துக்கொள்வதிலும் அவர்கள் இருவரும் ஒரு தீர்மானத்துக்கு வந்துவிட்டிருந்தனர்.

சாண்டி, தனது வண்டியிலேயே படுத்துக் கொள்வதாகச் சொன் னார். நாயர் கோயில் மண்டபத்தில் படுப்பதென்றும் முடிவாகியிருந்தது.

படுத்த பிறகும் நாயருக்கு உறக்கம் வரவில்லை.

மனதில் என்னவெல்லாமோ யோசனைகள் மேலெழும்பின.

பௌர்ணமி கடந்து மூன்று நாள் ஆகியிருந்தது.

சுற்றுப்புறம் இருளும் வெளிச்சமும் கலந்து ரம்மியமாகக் காட்சியளித்தது. நாயர் படுத்த நிலையிலேயே தலையைத் திருப்பிச் சுற்றுமுற்றும் பார்த்தார்.

கோயில் சுவர்களில் ஆங்காங்கே முளைத்து எழுந்தவை போல் சிலைகள் நின்றிருந்தன.

முதலில் அந்தக் காட்சி, கண்களுக்குத்த தட்டுப்படவில்லை.

நிலவு வெளிச்சம் நன்றாகத் தெளிவடைந்து வந்தபோதுதான் அது தென்பட்டது. மிகவும் ஆச்சரியரகமான காட்சியாக இருந்தது அது.

பல்லிகள்கூட அசைந்ததாகத் தெரியவில்லை.

கருவறை வாசல் மூடியிருந்தது.

நாயரின் கண்கள் சுத்தமாகத் தூக்கத்தைத் தொலைத்து விட்டிருந்தன.

மெதுவாக எழுந்தார்.

அங்கிருந்த ஒவ்வொரு சிலையையும் நெருங்கி ஊன்றிக் கவனித்தார். ஒவ்வொன்றும் உயிருடன் இருப்பது போலவே தோன்றி யது. பார்த்துக்கொண்டே நடந்தவர், கருவறையின் வெளிமதிலை அடைந்தார்.

"என்ன இது!" நாயர் தன்னையும் மீறி வாய்விட்டு அரற்றினார்.

சுவருடன் ஒட்டி நிற்பது போலிருந்த சிலைகள் உயிர்பெற்றவை போல் தெரிந்தன. சட்டென்று பின்னுக்கு நகர்ந்தார்.

நிலவொளியில் குளித்துக் கொண்டிருந்த சிலைகள் ஒவ்வொன் றையும் கண்ணாரப் பார்த்தபடி நகர்ந்தார். நகர்ந்தவர் மந்தாகினியின் சிலைக்கு அருகே வந்தார். அதற்கு மேல் பெயர்க்க முடியாதபடி அவர் பாதங்கள் அங்கேயே பதிந்துவிட்டவைபோல் நின்றுவிட்டன.

அங்கிருந்து அசையவே அவருக்குத் தோன்றவில்லை.

நிலவொளி சரியாக மந்தாகினியின் சிலைமீது பொழிந்து கொண்டிருந்தது.

நாயரின் கண்களில் சுருக்கங்கள் படியத்தொடங்கின. அந்த முகத்தை எங்கோ பார்த்திருப்பதுபோல் தோன்றியது. அவருக்கு வேறு ஒரு விஷயமும் புலப்பட்டது. அந்தச் சிலையின் ஒருகாதில் ஆபரணம் இல்லை. மற்ற சிலைகளில் அப்படி எதுவும் தட்டுப்பட வில்லை. ஓரிரண்டு சிலைகளில் பெயர்ந்து விழுந்த அடையாளமாவது தெரிந்தது. ஆனால், இந்தச் சிலையில் மட்டும் கழற்றி எடுத்ததுபோல் அவ்வளவு கச்சிதமாக இருந்தது. காதின் துவாரம்கூடத் தெளிவாகத் தெரிந்தது.

மற்ற சிலைகள் எல்லாவற்றிலும் காது ஆபரணங்கள் இதுபோல் ஆனதாகத் தெரியவில்லை. அந்தக் காட்சி அவர் மனதை என்னவோ செய்தது. இருப்பினும் அங்கிருந்து திரும்பி, தனது பழைய இடத்திலேயே வந்து படுத்துக்கொண்டார்.



காற்றே இல்லாமல் இருந்தது.

நேரம் போய்க்கொண்டிருந்தது.

விடிவெள்ளி நட்சத்திரம்டகூட தலைக்கு மேற்புறமாகத் தெரியத் தொடங்கியது.

தோளில் கிடந்த துண்டைச் சுருட்டித் தலையணை போல் வைத்துப் படுத்திருந்தார். அப்போதுதான் அவர், அவரையும் மீறித் தூக்கத்தில் அமிழ்ந்திருக்க வேண்டும். மென்மையான குரல் ஒன்று அவர் காதில் விழுந்தது.

"பத்மநாபன் நாயர்."

"கடவுளே... தம்புராட்டி" அந்தக் குரல் கேட்டதும் நாயர் தன்னையும் மீறிப் பேசினார்.

அவர் நன்கு கேட்டுப் பழக்கப்பட்ட குரல்.

எத்தனையோ தடவை நீர்மோர் மற்றும் சாப்பாடு பரிமாறியுள்ள தம்புராட்டியின் குரல்.

படுத்த நிலையிலேயே கண்களைத் திறந்தார். ஆனால், அருகில் எவரும் தட்டுப்படவில்லை.

'ஒருவேளை தன் பிரமையாக இருக்குமோ?' என்று நினைத்த வராக மீண்டும் கண்களை மூடிப் படுத்துக்கொண்டார்.

மீண்டும் அதே குரல்!

"பத்மநாபன் நாயர்."

"தம்புராட்டி, நான் இங்கே இருக்கிறேன்" நாயர் இப்போதும் தன்னை மறந்தவராகப் பேசினார்.

"எழுந்திருங்கள்... உங்களிடம் ஒரு விஷயம் கேட்க வேண்டும்" மீண்டும் அதே குரல்.

பத்மநாபன் நாயர் பதறியடித்து எழுந்தார்.

எதிரில் சாக்ஷாத் மந்தாகினி நின்று கொண்டிருந்தாள்.

“கடவுளே, நான் பார்க்கிறது கனவா, நிஜமா?” அவர் இரு கைகளையும் கூப்பியபடி பேசினார்.

“உண்ணி உங்ககிட்ட இந்தக் கோயிலை விலைக்கு வாங்குறதைப் பத்திச் சொல்லியிருக்கிறார் இல்லையா?” மந்தாகினி கேட்டாள்.

“ஆமாம்.”

“கொஞ்ச நேரத்துக்கு முன்னால்தான் எனக்கு விஷயம் தெரியும். அப்பாதான் சொன்னார். நீங்க இங்கே வந்திருக்கிறதா. கவனிச்சுக் கன்னும் சொன்னார்.”

“அப்பாவா?” நாயர் புரியாதவராகக் கேட்டார்.

“பூஜையை முடிச்சுட்டுப் போனாரே திருமேனி. நீங்க பார்த்திருக்கணுமே அவரை.”

“அவரையா... ஆமாம், பார்த்தேன், பார்த்தேன்...”

“இன்னொரு விஷயம். இந்தக் கோயில்ல எல்லாருமே இருக்கிறாங்க. தேவதைகள் மட்டுமில்லாம ரத்த ரக்ஷஸுகளும் இருக்கிறாங்க. அதனால் என்னைக் காவல் இருக்கச் சொல்லியிருக்கிறார் அப்பா.”

“இப்போ இங்கேதான் இருக்குறீங்களா தம்புராட்டி?”

“தவிர்க்க முடியாத ஒரு அவசியத்துக்காக வந்திருக்கிறேன். வேற எதையும் கேட்காதீங்க. படுத்துத் தூங்குங்க.”

நாயர் கண்ணை மூடிப் படுத்துக்கொண்டார். அதன்பிறகு என்ன நடந்தது என்று அவருக்கு ஞாபகமில்லை.

விடியற்காலையில் கண்விழித்தார்.

கோயில் குளத்தில் குளித்தார். காலைக் கடன்களை முடித்துக் கொண்டார்.

பகவதியை வணங்கிவிட்டுப் புறப்பட்டார்.

பிறகு சாண்டியை அழைத்துக்கொண்டு நேராக தான்னிக்காட்டு மனையை நோக்கி விரைந்தார்.



விஷ்ணு நம்பூதிரியும், அவர் மனைவியும் வெளித்திண்ணையில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

“நீங்க பத்மநாபன் நாயர்தானே?” விஷ்ணு நம்பூதிரி கேட்டார்.

“ஆமாம், என் பேர் உங்களுக்கு எப்படித் தெரிஞ்சது?” நாயர் ஆச்சரியத்துடன் கேட்டார்.

“விடியற்காலை நேரத்தில் ஒரு பெண்மணி வந்திருந்தாங்க. அவங்கதான் சொன்னாங்க. எனக்குப் பழக்கமில்லாதவங்க யாரோ. உட்காருங்க. ஆமா கூடவந்தவர் ஏன் நிற்கிறார்? இந்த வீட்டுல அப்படிப்பட்ட கடுமையான ஆசாரங்கள் எதுவுமில்லை. தயங்காம உட்காருங்க” விஷ்ணு நம்பூதிரி வரவேற்றார்.

இருவரும் வராந்தாவில் உட்கார்ந்தனர்.

நம்பூதிரி கேட்பதற்கு முன்பே நாயர் தானாகவே வந்த விஷயத்தைத் தெரியப்படுத்தினார்.

“பனங்காட்டு உண்ணின்னுதானே சொன்னீங்க... கேள்விப் பட்டிருக்கேன். ஒருகாலத்துல ஓகோன்னு இருந்த குடும்பம். இப்ப பழையபடி எல்லாம் வந்து சேர்ந்ததாகக்கூடக் கேள்விப்பட்டேன்” விஷ்ணு நம்பூதிரி ஒப்புக்கொண்டார்.

“நடுவுல கொஞ்சம் நொடிச்சுப் போயிருந்தது. நல்ல வேளையா திரும்பவும் எழுந்து நின்னுடுச்சு. ஆள் பெரிய பக்திமான்கூட. குறிப்பாகச் சொல்லணும்னா கோயில் விஷயங்கள்ல ரொம்பவும் ஆர்வமுள்ளவர்.”

“அப்படிப்பட்டவருக்குக் கோயிலைக் கொடுக்கறதுல எந்தவிதமான தயக்கமும் கிடையாது. நானும் இந்த விஷயத்தைப் பத்தித்தான் யோசிச்சுட்டிருந்தேன். இந்தக் கோயில்ல பிரதிஷ்டை பண்ணியிருக்கிறது பகவதியை. அதாவது இரு முகக் காளி. ஒன்று சாந்த சொரூபினியான பகவதி. மற்றது உக்கிரகாளி. தவிர ஏராளமான சிலைகளும் கோயில்ல இருக்கு. ஆனா, அதெல்லாம் முக்கியமானதா எனக்குத் தெரியலை.”

விஷ்ணு நம்பூதிரி சொன்னதன் பொருள் நாயருக்குப் புரியவில்லை.

“நான் நிரந்தரமா வெளியூர்ல தங்குறதுன்னு தீர்மானம் பண்ணியிருக்கிறேன். நல்ல நேரத்துல வந்திருக்கீங்க. என்ன அஸ்வதி, நீ என்ன நினைக்கிறே?” என்றபடி தன் மனைவியைப் பார்த்தார் விஷ்ணு நம்பூதிரி.

அவள் புன்னகை புரிந்தாள்.

“இன்னொரு விஷயத்தையும் நான் சொல்லிடுறேன். கோயிலுக்குள்ளே, கோயிலுக்குச் சம்பந்தமே இல்லாத சில சிலைகளும் இருக்கு. அதனால நானும் என் நண்பர் ஒருத்தரும் ஒரு திட்டம் போட்டிருக்கோம்.”

விஷ்ணு நம்பூதிரி என்ன சொல்ல வருகிறார் என்று நாயருக்குப் புரியவில்லை.

“என் நண்பர் வேறு மாநிலத்தைச் சேர்ந்தவர். அவர் ஒரு அருங்காட்சியகம் கட்ட நினைக்கிறார். அதனால், பகவதியின் சிலையைத் தவிர மற்ற சிலைகளை அவரிடம் எடுத்துக் கொள்ளும்படிச் சொல்லிட்டேன். அவரும் ஒரு பெரும் தொகை தரச் சம்மதித்துவிட்டார்” விஷ்ணு நம்பூதிரி விளக்கினார்.

“அதுக்கான ஒப்பந்தமெல்லாம் முடிஞ்சிடுச்சுங்களா நம்பூதிரி?” நாயர் கேட்டார்.

“ஒப்பந்தம் எல்லாம் எழுதி முடிச்சாச்சு. சீக்கிரத்திலேயே அவர் சிலைகளை எடுத்துட்டுப் போயிடுவார்.”

“அப்ப அதெல்லாம் போக, கோயிலுக்கும் கோயிலைச் சுத்தியுள்ள நிலத்துக்கும் என்ன விலை நிர்ணயிச்சிருக்கீங்க?”

“ஐம்பதாயிரம் ரூபா போதும். இது இடத்தோட துல்லியமான விலையெல்லாம் கிடையாது. குத்துமதிப்பான விலைதான்.”

அஸ்வதி இருவருக்கும் டீ கொண்டுவந்து கொடுத்தாள்.

டீ சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது நாயரின் மனதில் முந்தைய நாளிரவு நடந்த சம்பவம் நினைவு வந்தது.

பவத்ராதன் நம்பூதிரியைச் சந்தித்ததும், அவர் தனக்காக ஒரு பெண்ணைக் காவலுக்கு ஏற்பாடு செய்ததும் ஞாபகம் வந்தது.



இவ்வளவு நேரம் பேசியபோதிலும் விஷ்ணு நம்பூதிரி அதைப்பற்றி எதுவும் பேசவில்லையே என்பதும் நாயருக்கு வியப்பாக இருந்தது. பனங்காட்டு மனை உண்ணியின் மனைவியின் அப்பா தான் அந்தக் கோயிலின் பூசாரி என்பது விஷ்ணு நம்பூதிரிக்குத் தெரியாதா என்ன?

ஏன் அதைப்பற்றி எதுவும் பேசாமல் இருக்கிறார்? ஒரு வேளை வேண்டுமென்றே மறைத்து வைக்கிறாரா? ‘நேரடியாகக் கேட்டு விட்டால் என்ன?’ என்றுகூட நினைத்தார்.

ஆனால், எப்படிக் கேட்பது?

அப்படியானால் கோயிலில் நேற்றுப் பார்த்த விஷயத்தைச் சொல்ல வேண்டுமா?

அதைச் சொல்வது சரிதானா?

நாயர் ஏகத்துக்குக் குழம்பினார்.

கடைசியில் கேட்டுவிடுவதென்று தீர்மானித்தார்.

“ஒரு சின்ன சந்தேகம்...” நாயர் தயங்கியபடி இழுத்தார்.

“தயக்கமே வேண்டாம்... கேளுங்க.”

“இப்போ கோயில்ல பூஜை செய்யுறாரே அவருக்குப் பெண் குழந்தைகள் யாராவது இருக்குறாங்களா?”

அதைக்கேட்ட விஷ்ணு நம்பூதிரி, உடனே அஸ்வதியின் முகத்தை ஏறிட்டார்.

அஸ்வதி வாசற்படியோரமாக நின்று கொண்டிருப்பது நாயருக்கும் தெரியும். டீ சாப்பிட்ட தம்ளர்களை எடுத்துக்கொண்டு போனவள், வாசல் அருகிலேயே நின்றுவிட்டாள்.

“நம்ம கோயில் பூசாரியைப் பத்தியா கேட்கறீங்க?” அஸ்வதி கேட்டாள்.

“அவருக்கேதான்.”

“இருக்கிறாளே... பேர்கூட மந்தாகினி” அஸ்வதி பதிலளித்தாள்.

“ஏன் கேட்கிறீங்க?”

“சும்மா தெரிஞ்சுக்கத்தான்.”

“மந்தாகினியை உங்களுக்குத் தெரியுமா?” விஷ்ணு நம்பூதிரி கேட்டார்.

அந்தக் கேள்வி நாயரை மேலும் குழப்பத்துக்குள்ளாக்கியது. ‘அப்படியானால் மந்தாகினி இவர்களுக்குத் தெரியாமல்தான் உண்ணியுடன் குடும்பம் நடத்தினாரா?

ஒருவேளை உண்ணி, மந்தாகினியை வீட்டாருக்குத் தெரியாமல் அழைத்துக்கொண்டு வந்திருக்கவும் செய்யலாம்’. எனவே, அதைப் பற்றி மேற்கொண்டு எதுவும் கேட்காமல் இருப்பதே நல்லது என்று நினைத்தார்.

“அஸ்வதி, தண்ணி வேணுமே” விஷ்ணு நம்பூதிரி உட்புறம் பார்த்துக் குரல் கொடுத்தார்.

ஆனால், அங்கு அஸ்வதி இல்லை.

அதற்குள் எங்கு போயிருப்பாள் என்று நினைத்த விஷ்ணு நம்பூதிரி வீட்டுக்குள் வந்தார். ஒவ்வோர் அறையாகத் தேடினார். அஸ்வதியை எங்கும் காணவில்லை. கொல்லைப்பக்கம் வந்தபோது அஸ்வதி தொறட்டியின் உதவியுடன் தென்னை மரத்திலிருந்து இளநீர் ஒன்றைப் பறிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தாள்.

சந்தேகம் கொண்ட விஷ்ணு நம்பூதிரி திரும்பி வந்து பழைய இடத்தில் உட்கார்ந்தார்.

“என்ன திருமேனி?” நாயர் கேட்டார்.

“ஒண்ணுமில்லை” விஷ்ணு நம்பூதிரி சந்தேகம் தீராதவராகப் பதிலளித்தார்.

## 41

**ப**த்மநாபன் நாயரைப் பொறுத்தவரையில் அவருக்குத் தெரிய வேண்டியதெல்லாம் தெரிந்துவிட்டது.



உண்ணிக்கிருஷ்ணன் கேட்டுக்கொண்டது, கோயில் மற்றும் கோயிலைச் சார்ந்த இடம் பற்றி. இது சாதாரணமாக அவ்வளவு சுலபத்தில் கிடைக்கக்கூடியதல்ல. ஆனால், கிடைத்துவிட்டது.

பரம்பரையாக, ஒரு குடும்பச் சொத்தாக பூர்வீகர்களால் கட்டப் பட்டுக் காப்பாற்றப்பட்டு வரும் கோயிலைப் பெரும்பாலும் எந்தக் குடும்பத்தாரும் விற்பதில்லை. அதுவும் பத்மநாபன் நாயருக்குத் தெரியும்.

சூழ்நிலை சரியில்லாததால்தான் விஷ்ணு நம்பூதிரி பரம்பரைச் சொத்தை விற்கிறார்.

முதல் விஷயம், கோயிலுக்கு அருகில் எங்கும் வீடுகள் இல்லை. இருக்கிற ஒருசில வீடுகளும் நம்பூதிரிகளிடமிருந்து இடத்தை வாங்கி வீடு கட்டிக்கொண்ட இந்துக்கள் அல்லாதவர்கள். எனவே, அப்படிப் பட்டவர்களுக்கு இந்தக் கோயில் மீது எந்த விதமான ஈடுபாடும் கிடையாது.

அதனால்தான் கோயில் இப்படிப்பட்ட நிலைமையில் இருக்கிறது.

“அப்ப நான் கிளம்பட்டுமுங்களா?” நாயர் எழுந்தார்.

“கோயில் விஷயம் உறுதிதானே?” விஷ்ணு நம்பூதிரி கேட்டார்.

“எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரமா முடிச்சுட லாம். அவரும் வந்து ஒரு தடவை கோயிலைப் பார்த்துடட்டும்.”

“நீங்க சொல்றதும் சரிதான்.”

வண்டிக்காரர் சாண்டியும் புறப்படத் தயராக எழுந்து நின்றார்.

திரும்பும் வழியில் கோயிலுக்கு முன்னால் வண்டியை நிறுத்தச் சொன்னார் நாயர்.

வண்டிக்காரர் மூக்கணாங்கயிறை இழுத்துப் பிடித்தார்.

கருவறைக்கு முன்னால் நின்று கைகூப்பித் தொழுதவர், கருவறையை ஒரு தடவை வலம் வந்தார்.

முந்தைய நாள் இரவில் பார்த்த சிற்பங்களை மீண்டும் ஒருதடவை பார்க்க அவர் மனம் விரும்பியது. மெதுவாகச் சிலைகளைப் பார்த்தபடி நடந்தார்.

முந்தைய இரவில் சந்தேகத்தை ஏற்படுத்திய சிலையின் அருகில் வந்தார்.

'உண்மைதான். அந்தச் சிலையின் ஒரு காதில் எந்தவிதமான ஆபரணமும் இல்லை.

அது மட்டுமா?

அந்தச் சிலையின் முகம்?

அந்தப் புருவங்கள்...

அழகான அந்த மூக்கு...

கூர்மையான தாடைப் பகுதி...'

நாயர் அந்தச் சிலையையே பார்த்துக் கொண்டிருந்தார்.

"நாயரே, நேரம் ரொம்ப ஆகிடுச்சு. இப்பக் கிளம்பினாத்தான் சரியா இருக்கும்" சாண்டி தெருவிலிருந்தபடி குரல் கொடுத்தார்.

எனவே, அங்கிருந்து புறப்பட மனமில்லாமல் கிளம்பினார்.

கோயில் வாசலைக் கடக்க முற்படும் தன்னை யாரோ அழைப்பதுபோல் நாயருக்குத் தோன்றியது.

அது தன் தம்புராட்டி மந்தாகினியின் குரல்தான் என்று அவருக்குப் புரிந்தது. உடனே கருவறையை நோக்கி நடக்கத் தொடங்கினார்.

கருவறைக்கு முன்னால், தரையில் தாயத்து ஒன்று கிடந்தது.

"அதை எடுத்துக்கொண்டு போய் உண்ணிகிட்டக் குடுங்க" அசரீரியாக ஒரு குரல் கேட்டது. தயங்காமல் தாயத்தைக் கையில் எடுத்துக்கொண்டு கோயிலிலிருந்து வெளியேறினார்.

அதற்குள் சாண்டி இரண்டாம் தடவை குரல் கொடுத்தார்.

அங்கிருந்து எடுத்த தாயத்தை மடியில் வைத்திருந்த ரூபாய் நோட்டுகளுடன் சேர்த்து, பத்திரப்படுத்தினார்.

அவர் வண்டியில் ஏறிக்கொண்டதும் காளைகள் பாயத் தொடங்கின.



மாலை நேரம் முதிர்வதற்குள் நாயர் பனங்காட்டு மனையை அடைந்தார். உண்ணியைப் பார்த்ததும் நாயர் ஒன்றுவிடாமல் நடந்ததையெல்லாம் மூச்சுவிடாமல் கொட்டித் தீர்த்தார்.

ஜாதவேதன் நம்பூதிரியின் வீட்டுக்குப் போனதையும், அவர் மகளைப் பற்றியும் சொல்லத் தவறவில்லை. கடைசியில் திருப்பனங்காட்டுக் கோயிலில் தனக்கு நேர்ந்த விசித்திர அனுபவத்தையும் விவரித்தார்.

"நிஜமாவா சொல்றீங்க. மந்தாகினியைப் பார்த்தீங்களா?" உண்ணி அடக்க முடியாத ஆர்வத்துடன் கேட்டான்.

"ஆமாம் தம்புரான், பார்த்தேன். உங்களைப் பத்தி விசாரிச்சாங்க."

"ஏன் சொல்லாமக் கொள்ளாம இங்கேருந்து கிளம்பிப் போனாளாம்."

"அதை மட்டும் சொல்லலை."

"அப்படியானால், அங்கே போனால் என் மந்தாகினியைப் பார்க்க முடியும், இல்லையா?" உண்ணி பரவசத்துடன் கேட்டான்.

"ஆமாம், எப்படி இருந்தாலும் நாம அந்தக் கோயிலை வாங்கப் போறோம். அந்தக் கோயில் பூசாரியோட மகள்தான் அவங்க. அப்புறம் என்ன சிக்கல்?" நாயர் கேட்டார்.

"அப்போ வாங்கறதைத் தள்ளிப் போடவேண்டாம். சீக்கிரமா முடியுங்க. பணமோ, நகையோ எது தேவையோ கொடுத்து முடிங்க. என்னிக்குப் பத்திரம் எழுதலாம்?" உண்ணி கேட்டான்.

"அதெல்லாம் உங்க விருப்பத்தைப் பொறுத்தது. அதுக்கு முன்னால ஒருதடவை போய்க் கோயிலைப் பார்த்துட்டு வந்துடுங்களேன்."

"அதுவும் நல்லதுதான். நான் இதுவரை அந்தக் கோயிலைச் சரியாப் பார்த்ததுகூட இல்லை. திருப்பனங்காட்டுக் கோயில்.... அன்னிக்கு ராத்திரிதானே முதல் தடவையா மந்தாகினியை அங்கே பார்த்தேன்..." வார்த்தைகள் உண்ணியையும் மீறி வாயிலிருந்து வெளியே வந்து விழுந்தன.

“ஏற்கெனவே, நீங்க அந்தக் கோயிலைப் பார்த்திருக்கீங்களா தம்புரான்?” நாயர் சந்தேகத்துடன் கேட்டார்.

“அப்படிச் சொல்ல முடியாது. மந்தாகினி அந்தக் கோயிலைப் பத்தி என்கிட்டச் சொல்லியிருக்கிறாள். ஏதோ ஞாபகத்துல தவறாப் பேசிட்டேன்” உண்ணி தன் தவறைத் திருத்திக் கொண்டான்.

உண்ணியின் பேச்சுத் தடுமாற்றத்தில் ஏதோ ஒரு மர்மம் இருப்பதை நாயர் புரிந்துகொண்டாலும் ஏனோ அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் மறைத்துக் கொண்டார்.

உண்ணியின் குறைகள் நீங்கியது மட்டுமின்றி, அந்தக் குடும்பம் பழையபடி தலைநிமிர்ந்து நிற்பதிலும் மந்தாகினியின் வருகை ஒரு குறிப்பிடத்தக்க இடம் பெற்றிருப்பது நாயருக்குத் தெரியும். என்னென்னவோ ஆச்சரியகரமான சம்பவங்கள் நடந்ததற்கெல்லாம் பின்னணி மந்தாகினிதான் என்று தெரிந்தாலும், நாயர் அதைப் பற்றியெல்லாம் தோண்டித் துருவி விசாரிக்காமல் இருந்துவிட்டார்.

தனக்கும் அதற்கும் என்ன தொடர்பு என்று தன் வேலையைப் பார்த்துக்கொண்டு போனார்.

“நாளை மறுநாள் வியாழக்கிழமை நாம புறப்படலாம் இல்லையா? வண்டிக்காரர் சாண்டியையே ஏற்பாடு பண்ணிட்டிங்கன்னா, மாட்டுவண்டியிலேயே போயிட்டு வந்துடலாம்...” உண்ணி ஒரு தீர்மானத்துக்கு வந்துவிட்டிருந்தான்.

“பத்திரத்தை ரிஜிஸ்டர் செய்ய வேண்டாமா, அதை எப்ப வெச்சுக்கலாம்?”

“அவ்வளவெல்லாம் தேவையா? பத்திரத் தாளில் எழுதி வாங்கிட்டாப் போதாதா?”

“போதாது. பத்திரத்தைப் பதிவு செய்யணும். நம்ம உரிமையை உறுதிப்படுத்தணும்” நாயர் ஒரு காரியஸ்தராக, தனது கடமையில் கவனமாக இருந்தார்.

“அப்போ பணத்தோடவே போயிடலாம்.”



“இந்தாங்க ஒரு தாயத்து. இது அந்தக் கோயில் கருவறை வாசலிலிருந்து கிடைச்சது. இதை உங்ககிட்டக் கொடுக்கச் சொல்லியும் உத்தரவு” நாயர் தன் மடியிலிருந்த தாயத்தை எடுத்து உண்ணியிடம் கொடுத்தார்.

“யார் கொடுத்தது?”

“ஆளைப் பார்க்க முடியலை. வெறும் குரல் மட்டும்தான் கேட்டது.”

உண்ணிக்கிருஷ்ணன் அந்தத் தாயத்தையும், அதில் கோத்திருந்த சரடையும் ஒருதடவை பார்த்துவிட்டு மூக்குக்கு அருகே கொண்டு போனான்.

இலஞ்சிப் பூவின் மணம் மூக்கைத் துளைத்தது.

மந்தாகினியின் வாசனை. அவள் தலைமுடியோ தாமரைப்பூவின் மகரந்த மணமுள்ளது.

சட்டென்று தன் உடம்பிலுள்ள ரோமக்கால்கள் குத்திட்டு நிற்பது போல் உண்ணிக்குத் தோன்றியது.

“சரி, நீங்க புறப்படுங்க. நம்ம வியாழக்கிழமை பயணத்துல எந்தவிதமான மாற்றமும் கிடையாது. வேண்டிய ஏற்பாடு பண்ணுங்க.”

பத்மநாபன் நாயர் அங்கிருந்து கிளம்பியதும் படுக்கை அறைக்குள் நுழைந்த உண்ணி, அந்தத் தாயத்தைத் தன் இடுப்பில் கட்டிக்கொண்டான். அதன்பிறகு, அவன் மனமே பரபரப்புகளிலிருந்து விடுபட்டு நிம்மதியடைந்ததைப் போல் உணர்ந்தது. எந்தவிதமான இடையூறுமில்லாமல் அன்று இரவு அமைதியாக உறங்கினான்.

**தி**ருப்பனங்காட்டுக் கோயிலிலிருந்து பத்மநாபன் நாயரும், சாண்டியும் கிளம்பிய சற்று நேரத்துக்குள்ளேயே, விஷ்ணு நம்பூதிரியும் அவரின் வேற்று மாநில நண்பரும் கோயிலுக்கு வந்தனர்.

சதாசிவன் என்ற அந்த நண்பர் சிற்பங்களுடன் மிகுந்த ஈடுபாடு உள்ளவர். பழைமையான இந்தச் சிற்பங்களை வாங்கிக் கொள்வதுடன் அவற்றைப் பத்திரமாகப் பாதுகாப்பதாகவும் விஷ்ணு நம்பூதிரியிடம் உறுதியளித்தார்.

“மிஸ்டர் சதாசிவன்.”

“சொல்லுங்க விஷ்ணு.”

“இந்தச் சிற்பங்கள் எல்லாம் வீணாகிடக்கூடாதேன்னுதான் உங்களுக்கு விக்கிறேன். என் காலத்துக்குப் பிறகு இதெல்லாம் கவனிக்க ஆளில்லாம அழிஞ்சுடுமோங்கிறதுதான் என் பயம். இப்பவே நேரா நேரத்துக்கு பூஜைகள் நடக்கிறதில்லை. ஏதோ பவத்ராதன் நம்பூதிரியோட பிடிவாதத்தால என்னமோவெல்லாம் நடந்துட்டிருக்குது...” என்றார் விஷ்ணு.

பழைய கட்டடங்களை விலைக்கு வாங்கி இடித்து, பழம் பொருள்களை விற்பனை செய்யும் ஒரு நபருக்குத்தான் தனது மனையை விற்றிருந்தார் விஷ்ணு.

பெரிய மந்திரவாதிகளை வரவழைத்து மிகுந்த செலவில் பூஜைகளை நடத்தி, அங்கிருக்கும் மூர்த்திகளைப் பொருத்தமான வேறு இடங்களுக்கு மாற்றிய பிறகுதான் இப்படிப்பட்ட இல்லங்களை இடிக்கும் வேலை ஆரம்பமாகும்.

சற்று நேரத்துக்குள் வெளிப்புறமுள்ள சிலைகளைப் பெயர்த்து எடுப்பதற்காக வேலையாட்கள் வந்து சேர்ந்தனர்.

“முதலில் வெளியிலுள்ள சிலைகளைப் பெயர்த்தெடுங்கள். பிறகு கோயிலின் கருவறைக்கு வெளியே உள்ள சிலைகளை எடுக்கலாம். ஒரு விஷயத்தை ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள். எந்தக் காரணத்தை முன்னிட்டும் கருவறைக்குள் யாரும் நுழையக்கூடாது” விஷ்ணு நம்பூதிரி எச்சரிக்கத் தவறவில்லை.

“அப்படியே செய்கிறோம். எங்கள் ஆட்கள் யாரும் கருவறைப் பக்கம் போகாமல் நான் பார்த்துக் கொள்கிறேன்” சதாசிவன் உறுதியளித்தார்.

அதன்படியே கோயிலின் வெளியே இருந்த சிலைகளைத் தரையிலிருந்து பெயர்த்து எடுத்துச் செல்வதற்கு வசதியாக வைத்தனர். அதற்கே மாலை நேரம் வரை வேலை செய்ய வேண்டியிருந்தது.

மறுநாள் காலையில் அவற்றை லாரியில் ஏற்றுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்கள்.



சதாசிவன் மற்றும் வேலையாட்கள் தங்குவதற்காகத் தான்னிக் காட்டு மனையில் அறைகளை ஒதுக்கிக் கொடுத்திருந்தார் விஷ்ணு. மனையின் வெளிப்புறமிருந்த சவுக்கையை அதற்காக அவர்களிடம் ஒப்படைத்திருந்தார்.

இல்லத்தை விற்றுவிட்டிருந்தாலும் அதை இடிப்பதற்கு முன் இரண்டு மாத கால அவகாசம் கேட்டிருந்தார் விஷ்ணு நம்பூதிரி.

இரவுச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு எல்லாரும் அவரவருக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் படுத்துக் கொண்டனர்.

இரவின் மூன்றாம் யாமம் தொடங்கப் போகிறது.

என்ன காரணத்தாலோ விஷ்ணு நம்பூதிரிக்கு உறக்கம் வரவில்லை. முக்கியமான காரணம், தன் முன்னோரின் சொத்து தன் கையை விட்டுப் போகிறதே என்கிற வருத்தம்தான். இந்தத் தடவை இங்கிருந்து கிளம்பிவிட்டால் தானும் திரும்பி வரப்போவதில்லை.

இயற்கையே அமைதியில் ஆழ்ந்திருந்தது.

இருப்பினும் திறந்து கிடந்த ஜன்னல்கள் மூலமாக, கிழக்குப்புற மலைச்சரிவின் தாளலயம் போல் ஒலித்துக் கொண்டிருந்த இயற்கை யொலிகள் தெளிவாகக் கேட்டுக் கொண்டிருந்தன.

அவர் படுத்திருந்த இடத்திலிருந்து பார்த்தால் நிலவொளியில் மூழ்கிக்கிடந்த திருப்பனங்காட்டு பகவதி கோயில் தெளிவாகத் தெரிந்தது.

நூற்றாண்டுகள் கடந்த அந்தக் கோயில் விஷ்ணு நம்பூதிரியின் மனதில் பல்வேறுபட்ட ஓவியங்களை வரைந்து காட்டியது.

இன்றுவரை அந்த ஊரிலிருந்து எவருக்குமே அந்த இல்லம் மற்றும் கோயிலின் சரியான காலநிர்ணயம் தெரியாது. ஊரிலேயே மிகவும் வயதான மனிதராகக் கருதப்பட்ட நூற்றுநான்காம் வயதில் மரணமடைந்த சங்குப் பணிக்கரின் குழந்தைப் பருவத்திலும் அந்தக் கோயில் அப்படியே இருந்ததாம்!

அவரின் சிறு வயதிலிருந்து அவரும் கோயிலை பற்றித் தெரிந்துகொள்ளப் பலரை அணுகியிருக்கிறார். ஆனால், எந்தவிதப் பலனும் ஏற்படவில்லை.

அந்தக் கோயிலைப் போல் இரண்டு வடிவங்களில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் கோயில் வேறு எங்கும் இருப்பதாகத் தெரியவில்லை.

சாக்ஷாத் பரமேஸ்வரியின் இரண்டு வடிவங்கள்.

மகிஷாசுர வதத்துக்குப் போன கார்த்தியாயினியின் பயங்கர வடிவம் ஒன்று. அமைதி தவழும் உமாதேவியின் அழகான முகம் மற்றது.

நல்லவர்களை ஆசீர்வதிக்கும் அதே நேரம், தீயவர்களை தண்டிக்கவும் தயங்காத பரமேஸ்வரி.

காலம், கோயிலின் பிரதாபங்களை இல்லாமலாக்கி விட்டது. காரணம் அன்றைய காரணவர்களின் நடவடிக்கைகள்தான்.

எல்லாம் எதற்காக? அவர்களது நடவடிக்கைகளின் பலன்தான் இப்போது கடைசி வாரிசாக - ஒற்றையாக மீந்திருக்கும் தான். படர்ந்து பரவி, குடும்பப்பேரை விளங்க வைக்காமல் சுருங்கிப் போய்விட்ட குடும்பம்.

'தானும் எச்சரிக்கையுடன் இல்லாமல் போய்விட்டால்...' திடுமென்று அப்படியொரு சிந்தனை அவருள் உயர்ந்தது.

திடுமென்று ஒரு குரல் கேட்டது போலிருந்தது.

யாரோ அவரைப் பேர் சொல்லி அழைப்பது போல்.

ஜன்னல் வழியாக வெளியே பார்த்தார்.

"விஷ்ணு... விஷ்ணு..."

மறுபடியும் அதே குரல் கேட்டது.

யாரோ வெளியே நிற்பதும் தெரிந்தது.

தெளிவாகத் தெரியவில்லை.

'இந்த நேரத்தில் தன்னை அழைப்பது யாராக இருக்கும்?' ஒரு விநாடி யோசித்த விஷ்ணு தலையணைக்கு அருகிலிருந்த டார்ச் லைட்டை எடுத்து சுவிட்சை அழுத்தி வெளிப்புறமாக வெளிச்சம் பாய்ச்சினார்.



இல்லத்தின் அருகிலிருக்கும் பிரமாண்டமான புளிய மரத்தின் அடியில் அந்த உருவம் நின்று கொண்டிருந்தது.

அத்துடன் மற்றொரு காட்சியும் அவர் கண்களுக்குத் தெரிந்தது. அதாவது, புளிய மரத்தின் வேர்ப்பகுதி மண்ணிலிருந்து மேற்புறமாக உயர்ந்து கொண்டிருந்தது.

## 42

**யா**னை ஒன்று தும்பிக்கையால் வளைத்தால்கூட பிடிக்க முடியாத அவ்வளவு பெரிய புளிய மரம் அது. அப்படிப்பட்ட மரத்தின் வேர்கள் தரையிலிருந்து உயர்ந்து கொண்டிருந்தன.

"கடவுளே... இதென்ன காட்சி?" விஷ்ணு நம்பூதிரி மார்பில் அடித்துக் கொண்டபடி புலம்பினார்.

அவரின் அலறல் போன்ற புலம்பலைக் கேட்டு அவரருகில் படுத்திருந்த அஸ்வதி படுக்கையிலிருந்து விழித்துத் துள்ளியெழுந் தாள்.

"என்னங்க, என்ன நடந்தது?" தூக்கக் கலக்கத்துடன் அஸ்வதி கேட்டாள்.

விஷ்ணு கையைச் சுட்டிக்காட்டினார்.

அவளும் அதைப் பார்த்தாள்.

புளிய மரத்தின் வேர்கள் பாதிக்கு மேல் தரையிலிருந்து உயர்ந்துவிட்டிருந்தன. மீதமுள்ள பகுதியும் உயர்ந்து கொண்டிருந்தன. மொத்தப் பகுதியும் உயர்ந்துவிட்டால் புளிய மரம் இல்லத்தின் மீது சாய்ந்து விழுவது உறுதி.

"பகவதி, எங்களைக் காப்பாற்றுங்க!" அஸ்வதி உரத்த குரலில் வேண்டினாள்.

ஆனால், அந்த அலறல்களைச் சவுக்கையில் படுத்திருந்த சதாசிவனும் அவரின் வேலையாட்களும் கேட்டதாகத் தெரிய வில்லை.

"நீங்க வெளியில போய் என்னன்னு பாருங்க. தேவி ஒரு வேளை கோபிச்சிருக்கலாம்..." அஸ்வதி வற்புறுத்தினாள்.

கடைசியில் என்ன நடந்தாலும் சரி என்று நினைத்தவராக, விஷ்ணு கதவைத் திறந்துகொண்டு புளிய மரத்தின் அடிப்பகுதியை நோக்கி விரைந்தார்.

அருகில் சென்று பார்த்தபோது புளிய மரத்தின் நிழலுக்குள் யாரோ நிற்பது தெரிந்தது.

"விஷ்ணு வந்துட்டீங்களா?" நிழலிலிருந்த உருவம் கேட்டது.

"ஆமாம்... நீங்க யார்ன்னு தெரியலையே" விஷ்ணு நம்பூதிரி பயபக்தியுடன் பேசினார்.

"தெரியலையா... நல்லதாப் போச்சு. எல்லாத்தையும் வித்துட்டுப் போகப் போறதாத் தோணுது. இந்த ஊரைவிட்டே வெளியேறுறதா தீர்மானம் பண்ணியாச்சு இல்லையா?"

அதற்கு விஷ்ணு எந்தவிதமான பதிலும் சொல்லவில்லை.

"இன்னொரு விஷயம்.. இதையெல்லாம் யாரும் பணம் கொடுத்துச் செஞ்சதில்லை. அதனால இதுக்காகப் பணம் வாங்குறதும் நல்லதில்லை. நல்ல மனசோட இதையெல்லாம் பாதுகாக்கிறோம், பராமரிக்கிறோம்னு யாராவது சொன்னா ஒப்படைச்சுடுங்க. அப்படிப்பட்டவங்க, எது கொடுத்தாலும் வாங்கிக்கங்க. நீங்களா எதையும் வற்புறுத்தி வாங்கக்கூடாது!"

அப்போதும் பேசிக் கொண்டிருப்பது யாரென்று அவருக்கு விளங்கவில்லை.

சட்டென்று ஆகாயத்தில் ஒரு மின்னல் வெட்டியது. அந்த ஒருகணத்தில் விஷ்ணு நம்பூதிரி மரத்தின் மறைவிலிருந்த நபரைப் பார்த்தார்.

"கடவுளே... தாயே.. பகவதி" இந்தத் தடவை அவரின் அலறலை மற்றவர்களும் கேட்டனர்.

உறங்கிக் கிடந்தவர்கள் வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்து வந்தனர்.



"என்னங்க விஷயம்?" கேட்டனர்.

"ஒண்ணுமில்லை... எல்லாத்தையும் நாளைக்குக் காலையில விளக்கமா சொல்றேன்" மேற்கொண்டு எதையும் பேசாமல் வீட்டுக்குள் நுழைந்தவர், கட்டிலில் கவிழ்ந்து படுத்துக்கொண்டார்.

அஸ்வதியும் எதுவும் கேட்டுக்கொள்ளவில்லை.

தூக்கம் வராமல் பொழுது விடிவதுவரை நேரத்தைக் கடத்திய விஷ்ணு நம்பூதிரி, கட்டிலிலிருந்து எழுந்து காலைக் கடன்களை முடித்துக்கொண்டு, டிபன்கூடச் சாப்பிடாமல் நேராகக் கோயிலுக்குப் போனார்.

"தாயே, என்னை மன்னிச்சுடுங்க. நான் எதையும் விலைக்கு விற்கமாட்டேன். ஒழுங்காகப் பராமரிக்கிறவர்கிட்டயே ஒப்படைச்சுடுறேன் தாயே..." கருவறைக்குள் நேரடியாகப் பார்க்காமல் தலையைத் தாழ்த்தி சாய்த்தபடி வேண்டினார்.

அதே விநாடியில் யாரோ குறிபார்த்துப் போட்டது போல் தாமரை மொட்டு ஒன்று விஷ்ணு நம்பூதிரியின் கையில் விழுந்தது.

உடனே அவருக்கு அதன் பொருள் விளங்கவும் செய்தது. தன் வேண்டுகோளை தேவி ஏற்றுக்கொண்டார் என்பதற்கு அடையாளம் அது.

அப்படியென்றால், கோயிலில் இருக்கிற பொருள்களை அதே நிலையில் பராமரிக்கக்கூடிய ஒருவருக்குத்தான் கொடுக்க வேண்டுமென்பது தேவியின் கட்டளை.

'அப்படிப்பட்டவர் யார் இருக்கிறார்?'

எல்லாவற்றையும் மொத்தமாகச் சேர்த்து பராமரிக்குமளவுக்கு பனங்காட்டு உண்ணி பெருந்தனக்காரரா?

குறைந்தபட்சம் சதாசிவத்திடமிருந்து வாங்கியிருக்கும் இரண்டு லட்ச ரூபாய் மட்டுமின்றி, வேலை நடக்காமல் போனதற்கான நட்ஷடஈடும் தரவேண்டி இருக்குமே?

என்ன செய்யலாம்?

விஷ்ணு நம்பூதிரி யோசித்தார்.

கடைசியில் பனங்காட்டு மனைக்கு ஆள் அனுப்புவது என்ற முடிவுக்கு வந்தார்.

அந்தச் சூழலில்தான் அஸ்வதி ஆறுதல் அளிப்பது போல் ஒரு வார்த்தை சொன்னாள்.

"பகவதியே ஒரு வழி காட்டுவார்."

விஷ்ணு அதை ஒப்புக்கொண்டாற்போல் தெரிந்தது. இருந்தும் அன்றிரவும் அவருக்கு உறக்கம் வரவில்லை.

**அ**தே இரவில் பனங்காட்டு மனையில் மற்றொரு சம்பவம் நடைபெற்றது.

மந்தாகினியைப் பற்றி யோசித்தவாறு உண்ணிக்கிருஷ்ணன் வராந்தாவில் உட்கார்ந்திருந்தான். நேரம் நள்ளிரவு தாண்டியிருந்தது.

தெருவாசற்படியில் யாரோ நின்று கொண்டிருப்பதுபோல் தோன்றியது.

யாரென்று கேட்காமல், நேராக அந்த உருவத்தை நோக்கி நடந்தான்.

முன்பின் அறிமுகமில்லாத பெண்மணி.

பயம் தோன்றியது.

தாத்ரிக்குட்டியின் மூலம் ஏற்பட்ட அனுபவம் மனதிலிருந்து இன்னும் மறையாமலிருந்தது.

'பயப்படாதீங்க... திருப்பனங்காட்டுக் கோயில்லேர்ந்து வர்றேன். உங்ககிட்ட ஒரு முக்கியமான விஷயம் சொல்லணும்" வந்த பெண்மணி கூறினாள்.

அவள் நிழல் மறைவில் நின்று கொண்டிருந்தாலும் அந்த உடம்பிலிருந்து ஏதோ ஒரு வித ஒளி புறப்பட்டுக் கொண்டிருப்பதாகத் தோன்றியது.

தனக்கு முன்னால் நின்று கொண்டிருப்பது சாதாரணப் பெண்மணியல்ல, ஏன்... மனிதப்பெண்ணே அல்ல என்றும் புரிந்தது.



"கோயிலை மட்டும் வாங்கறது சரியில்லை. அங்கே இருக்கிற மொத்தத்தையும் இருக்கிற நிலையில அப்படியே வாங்கலேன்னா, எதுவும் முழுமையடையாது!" அந்த உருவம் கூறியது.

"அந்த அளவு என்கிட்டப் பணமில்லையே" உண்ணி உள்ள நிலைமையை வெளியிட்டான்.

"அதுக்காகத் தயங்கவேண்டாம். இந்தாங்க... இதை வெச்சுக்கங்க. உங்களுக்குத் தேவைப்படுறதுக்கு மேல இதில இருக்கு" ஒரு சிவப்பு நிறத் துணிப் பையை அவன் கையில் போட்ட அந்த உருவம் கூறியது.

தங்க நாணயங்கள் முடிந்த ஒரு பை போலத் தெரிந்தது.

வந்த உருவம் சட்டென்று மறைந்தது.

உண்ணிக்கிருஷ்ணன் அந்தப் பையைத் திண்ணைக்கு எடுத்து வந்தான். நிலவிளக்கின் முன்னால் அமர்ந்து, தோளிலிருந்த துண்டைத் தலையில் விரித்தான். பிறகு அந்தப் பையின் வாய்ப்பகுதியை அவிழ்த்து துண்டில் அதைத் தலைகீழாகக் கவிழ்த்தான்.

அவன் கண்களையே அவனால் நம்ப முடியவில்லை. லட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள விலையுயர்ந்த நகைகளும், ரத்தினக் கற்களும் பையிலிருந்து விழுந்தன.

"கடவுளே, என்ன இதெல்லாம்? என்னால் எதையும் நம்ப முடியவில்லையே?" உண்ணி தன் இரண்டு கைகளையும் நெஞ்சில் பதித்தபடி வியப்பின் உச்சிக்குப் போனான்.

வந்துபோன உருவம் பகவதியாகத்தான் இருக்க வேண்டுமென்று தோன்றியது அவனுக்கு.

மறுநாள் வழக்கத்தைவிடச் சீக்கிரமாக வந்து சேர்ந்தார் பத்மநாபன் நாயர்.

உண்ணி, அவரிடம் நடந்ததை நடந்தபடி விவரித்தான்.

"அதுதான் கடவுள் சித்தம்னா அப்படியே செஞ்சிடுவோம்" நாயர் மறுபேச்சு பேசாமல் ஒப்புக்கொண்டார்.

அதன்பிறகு நேரம் கடத்தாமல் பத்மநாபன் நாயர் உடனேயே தான்னிக்காட்டு இல்லத்துக்கு விரைந்தார். விஷ்ணு நம்பூதிரி வராந்தாவில் உட்கார்ந்து எதைப்பற்றியோ தீவிர யோசனையில் ஆழ்ந்திருந்தார்.

நாயர், தான் எடுத்து வந்திருந்த சிவப்புப் பையை அப்படியே அவரிடம் கொடுத்தார்.

விஷ்ணு நம்பூதிரி பையைத் திறந்து பார்த்தார்.

அவர் கண்கள் வியப்பால் விரிந்தன.

சதாசிவனை வரவழைத்துப் பேசினார்.

தான் வாங்கிய இரண்டு லட்ச ரூபாயுடன் நஷ்ட ஈடாக மேற்கொண்டு இருபத்தையாயிரம் ரூபாய் தருவதாக விஷ்ணு நம்பூதிரி கூறினார். ஆனால், சதாசிவன் அதற்கு உடன்படவில்லை.

உண்மையில் சதாசிவனது திட்டமே வேறு. மொத்தச் சிற்பங்களையும் அமெரிக்கக் கோடீஸ்வரர் ஒருவருக்குத் தருவதாக சதாசிவன் ஏற்கெனவே பேரம் பேசி வைத்திருந்தார். ஆனால், விஷ்ணுவிடம் தான் அருங்காட்சியகம் ஒன்றைத் தொடங்கவிருப்பதாகப் பொய் சொல்லியிருந்தார்.

முன்னர் செய்து கொண்ட ஒப்பந்தத்தைத் தவிர வேறு எந்த மாற்று ஏற்பாட்டுக்கும் தான் தயாராக இல்லையென்று ஒரேயடியாக மறுத்தார் சதாசிவன்.

விஷ்ணுவுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை.

"மேற்கொண்டு என்ன செய்யறதுன்னு எனக்குப் புரியலை" என்று விஷ்ணு நம்பூதிரி பையைத் திரும்பவும் பத்மநாபன் நாயரிடமே ஒப்படைத்தார்.

மதிய நேரம்...

வேலைக்காரர்களின் அடுத்த கட்ட நடவடிக்கை, வெளியிலுள்ள சிற்பங்களைப் பெயர்த்து எடுப்பதுதான்.



அங்கு மொத்தம் பதினெட்டு சிற்பங்கள் இருந்தன. மொத்தத்தையும் வெகு கவனமாகப் பெயர்த்து எடுக்க சதாசிவன் தீர்மானித்தார். மேற்கொண்டு தாமதித்தால் ஊரிலுள்ள பக்தர்களேகூட இதைத் தடுக்க முற்படலாம். எனவே, உடனுக்குடன் முடிப்பதுதான் நல்லதென்று முடிவு செய்தார்.

கடப்பாரை, கூந்தாலம் போன்றவற்றுடன் வேலைக்காரர்கள் சிற்பங்களை நெருங்கினர்.

என்ன காரணத்தாலோ வேலையாட்களின் மனதில் சன்னமான பயம் மேலெழும்பியது. ஆயுதங்களுடன் கையை ஓங்கியபோது கண்ணுக்குத் தெரியாத ஏதோ ஒரு சக்தி அவர்களைப் பின்னுக்கு இழுப்பதாகத் தோன்றியது.

"என்ன, வெறுமனே பார்த்துட்டு நிக்குறீங்க?" சதாசிவன் வேலைக்காரர்களிடம் கேட்டார்.

வேலைக்காரர்களிலேயே மிகவும் பலசாலியானவர் குட்டப்பன். களிமண் உருண்டைகளை எறிந்து வடிவமைத்தது போன்ற தசை அவருடையது.

கைகளை மேற்புறமாக உயர்த்தும்போது ஒருபெரிய தேங்காய் அளவுக்கு அவர் கைகளில் தசைகள் உருண்டு திரளும். அந்தக் கைகளின் மீது யாராவது கை போட்டால் உடைவது போடுபவரின் கையாகத்தான் இருக்கும்.

பெரிய பெரிய வீடுகளைப் பிரிக்கும்போது பிரமாண்டமான உத்திரங்களைப் பிரிக்க ஒரு முனையில் குட்டப்பன் மட்டும் இருந்தால் போதும்.

அப்படிப்பட்ட குட்டப்பன் முதலில் நின்றிருந்த சிலையின் அடிப்பரப்பில் கூந்தாலத்தை ஓங்கிப் போட்டான். ஆனால், சிலை அசைவதாகத் தெரியவில்லை.

"குட்டப்பா, சிலை உடையாம பக்குவமா எடுக்கணும். இல்லேன்னா நாம செய்யறதுக்கு அர்த்தமே இல்லாமப் போயிடும்!" சதாசிவன் எச்சரித்தார்.

அப்போது வேறொரு வேலையாள், மற்றொரு சிற்பத்தைப் பரிசோதித்துக் கொண்டிருந்தார். அவர் ஒரு சிற்பியும்கூட.

ஒவ்வொன்றாகப் பார்த்துக்கொண்டே, வந்தவர் மந்தாகினியின் சிலையருகே எதையோ யோசித்தபடி நின்றார்.

"என்ன அச்சுதா, அங்கேயே நின்னுட்டீங்க?" சதாசிவன் அவரைப் பார்த்துக் கேட்டார்.

அச்சுதன் தன் கையிலிருந்த உளியைச் சிலையின் அருகில் கொண்டு சென்று தட்டினான். பிறகு எதையோ கண்டுபிடித்தது போல் பேசினான்.

"இந்தச் சிலை சுலபமா பெயர்ந்துடும்னு தோணுது. ஏன்னா, இதுக்கு முன்னாலேயே இதை யாரோ பேர்த்தெடுத்துத் திரும்பவும் பிரதிஷ்டை செஞ்சிருக்காங்க. எந்த ஒரு சிலையையாவது நம்மளால பேர்த்தெடுக்க முடிஞ்சா, மத்ததையும் பேர்த்தெடுக்குறதுல சிரமம் இருக்காது."

"பொதுவா சிற்பங்களைப் பிரதிஷ்டை செய்யுறவங்க, சிலை நகராம இருக்கிறதுக்காகச் சில வேலைகள் செய்யறதுண்டு. அந்த சூட்சுமத்தைக் கண்டுபிடிச்சுட்டா சுலபமாயிடும்" சதாசிவன் அச்சுதனை ஆமோதிப்பது போல் பேசினார்.

"யாராவது முதல்ல இங்கே வாங்க. இந்த சிலையைப் பேர்த்தெடுங்க... பார்க்கலாம். அதுதான் சுலபம்னு தோணுது" அச்சுதன் வேலையாட்களிடம் கூறினான்.

குட்டப்பனுக்கு அந்தப் பேச்சு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. இருப்பினும் கடப்பாரையை எடுத்துக்கொண்டு சிலையை நெருங்கினான். அச்சுதன் சொன்னது உண்மைதான். சிலைக்கும் பீடத்துக்கும் நடுவே ஒரு சிறிய விரிசல் தென்பட்டது. யாரோ பெயர்த்தெடுத்துத் திரும்பவும் வைத்திருக்க வேண்டும். கடப்பாரையை அந்த விரிசலுக்குள் செலுத்தினான். ஏறத்தாழ இரண்டங்குல கடப்பாரை உள்ளே போனது. அதற்கு மேல் போகாததால் கடப்பாரையை வெளியே இழுத்தான். ஆனால், கடப்பாரை வரவில்லை. குட்டப்பன் தன் மொத்த சக்தியையும் பிரயோகித்து இழுத்தான்.



ம்...ஹூம்... அது அசைவதாக இல்லை.

மறுபடி மூச்சைப் பிடித்துக்கொண்டு மொத்த பலத்தையும் பிரயோகித்தான்.

சட்டென்று 'ஐயோ' என்றோர் அலறல் எழுந்தது. கடப்பாரை குட்டப்பனின் நெஞ்சைத் துளைத்துக்கொண்டு முதுகுப்பக்கம் எட்டிப் பார்த்தது.

சதாசிவன் ஒருகணம் அதிர்ந்து பின்வாங்கினார்.

'ஏதோ சிக்கல் இருக்கிறது!' என்பது தெரிந்தது.

மேற்கொண்டு எதைப்பற்றியும் யோசிக்காமல் நஷ்ட ஈட்டுத் தொகைகூட வேண்டாம் என்று கொடுத்த பணத்தை மட்டும் பெற்றுக்கொண்டு அங்கிருந்து இடம்பெயர்ந்தார்.

பேசியபடி கோயிலிலுள்ள மொத்தத்துக்கும் ஒரு விலை கொடுத்த பத்மநாபன் நாயர், உடனே பனங்காட்டு மனைக்கு விரைந்தார்.

நடந்ததை உண்ணியிடம் விவரித்தார்.

"அப்படியானால் நாளைக் காலையிலேயே நாம் அந்தக் கோயிலுக்குப் போகவேண்டும். இவ்வளவு நடந்தும் இன்னும் கோயிலைப் பார்க்காமலிருப்பது வருத்தமாக இருக்கிறது" என்றான் உண்ணி.

"போகலாம் இருங்கள், நான் வண்டிக்காரர் சாண்டியிடம் தகவல் சொல்லிவிட்டு வருகிறேன்" என்று உற்சாகத்துடன் புறப்பட்டார் பத்மநாபன் நாயர்.

மறுநாள் மூவரும் திருப்பனங்காட்டுக் கோயிலை நோக்கித் தங்கள் பயணத்தைத் தொடங்கினர்.

கோயிலை அடைந்தபோது மதிய நேரமாகிவிட்டது. எனவே, மதியச் சாப்பாட்டுக்குப் பிறகு கோயிலுக்குள் போகலாம் என்று பத்மநாபன் நாயர் சொல்லவே, முதலில் தான்னிக்காட்டு மனைக்கு வந்தனர்.

மகாராஜா ஒருவரை வரவேற்பதுபோல் விஷ்ணு நம்பூதிரி, உண்ணிக்கிருஷ்ணனை வரவேற்றார்.

மதியச் சாப்பாடு அருமையாக இருந்தது.

"கொஞ்ச நேரம் இளைப்பாறிவிட்டுக் கோயிலுக்குப் போகலாம். அங்கே உடனடியா போய்ப் பார்க்கிறதுக்கு யாரும் இல்லையே?" விஷ்ணு நம்பூதிரி கூறினார்.

அந்த வார்த்தைகள் உண்ணிக்கிருஷ்ணனின் மனதில் கவலையை ஏற்படுத்தின என்றாலும் சட்டென்று பத்மநாபன் நாயரைப் பார்த்தான்.

திருப்பனங்காட்டுக் கோயில் பூசாரியின் மகள் மந்தாகினிதான் தன் மனைவி என்பதை நாயர், விஷ்ணு நம்பூதிரியிடம் சொல்லாம லிருந்ததுகூட ஒருவிதத்தில் நல்லதுதான் என்று தோன்றாமல் இல்லை. அது வேறு சிக்கல்கள் எதையாவது இழுத்து வந்துவிட்டிருக்கும்.

"கோயிலைப் பார்த்துட்டு வந்த பிறகு நீங்க இன்னிக்குப் புறப்பட வேண்டாம். நாளைக்குக் காலையில் ரிஜிஸ்டர் செய்த பிறகு உங்கள் விருப்பம்போல் புறப்படலாம்" விஷ்ணு நம்பூதிரி கூறினார்.

உண்ணிக்கிருஷ்ணன் அதற்கு ஒப்புக்கொண்டான்.

சாயந்தரம் வெயில் மேற்குப்புறமாகச் சரியத் தொடங்கியபோது மூவருமாகக் கோயிலுக்குக் கிளம்பினார்கள்.

உண்ணிக்கிருஷ்ணன் புதிதாகக் கண்பார்வை பெற்றவனைப் போல் எல்லாவற்றையும் வியப்புடன் பார்த்துக்கொண்டு நடந்தான்.

அன்றொரு நாள் நிலவொளியில் கண்ட சிற்பங்கள் அதேபடி இன்றும் நின்று கொண்டிருந்தன.

பிறகு ஒவ்வொரு மோகினி சிலையாகப் பார்த்துக்கொண்டே வந்தான். மந்தாகினியின் சிலை இருந்த இடம் வந்ததும் அப்படியே நின்றான்.

சிற்பத்தை ஊன்றிப் பார்த்தான்.



'இதன் காலடியில்தானே விழுந்து கிடந்தோம்' என்று அவனுக்கு ஞாபகம் வந்தது.

அந்த நேரம் பார்த்து எங்கோ போயிருந்த பவத்ராதன் நம்பூதிரி சரியாக அப்போது அங்கு வந்து சேர்ந்தார்.

## 43

"என்னங்க உண்ணி, இப்படிக் கண்ணிமைக்காம உற்றுப் பார்க்குறீங்க?" பவத்ராதன் நம்பூதிரி கேட்டார்.

அப்போதுதான் உண்ணி அவரை முதன்முதலாகப் பார்க்கிறான்.

"தம்புரானைத் தெரியலையே..." உண்ணி எதிர்க்கேள்வி கேட்டான்.

"நான்தான் இந்தக் கோயில் பூசாரி. யாருமில்லாம ரொம்ப நாளா பாழாகிக் கிடந்தது. என்னமோ அந்த நேரத்துல எனக்குத் தோணுச்சு. இந்தக் கோயிலைச் சீர்ப்படுத்தி பூஜைகளை ஆரம்பிச்சா என்னன்னு" பவத்ராதன் கூறினார்.

"அப்படியானால்..." என்ற உண்ணி வார்த்தைகளை முடிக்காமல் சட்டென்று குனிந்து அவர் காலைத் தொட்டு வணங்கினான்.

"நான் வெறும் கோயில் பூசாரிதானேப்பா, என்ன... இதெல்லாம்...?"

"பூசாரிங்கிறதோட.... மந்தாகினியின் அப்பாவும்கூட இல்லையா?" உண்ணி சொன்னான்.

"மந்தாகினியா, யாரது?" அந்தப் பெயரில் எனக்கு மகள் யாரும் இல்லையே?" திருமேனி சந்தேகத்துடன் உண்ணியைப் பார்த்தார்.

ஆனால், உண்ணிக்கிருஷ்ணன் அவரின் வார்த்தைகளை நம்பாமல், மந்தாகினி சிலையின் இடுப்புப் பகுதியில் கை வைத்தான். அவன் கை வைத்த பகுதியில் தாயத்துடன் கூடிய சரடை அவிழ்த்து எடுத்தது போன்ற அடையாளம் தென்பட்டது அல்லது உண்ணி அப்படி உணர்ந்தான்.

“இந்தச் சிலை மந்தாகினியைப் போல் இருக்கிறது. கடந்த சில நாட்களாக அவள் இல்லத்திலிருந்து காணாமல் போனாள். மறுபடி அவளை இங்கு சந்தித்ததாக பத்மநாபன் நாயர் தெரிவித்தார்.”

உண்ணியின் வார்த்தைகள் பவத்ராதன் நம்பூதிரியை மிகவும் சங்கடப்படுத்தின. நம்பமுடியாத ஒரு கற்பனைக் கதையைவிட விறுவிறுப்பான - சுவாரஸ்யமான கதையை அல்லவா உண்ணி சொல்கிறான்.

பவத்ராதன் சந்தேகம் நிரம்பியவராக உண்ணியின் முகத்தைப் பார்த்தார்.

“மந்தாகினியா, அவள் யாரென்று எனக்குத் தெரியவில்லையே...” பவத்ராதன் குழப்பத்துடனும் திகைப்புடனும் வார்த்தைகளை மென்று விழுங்கினார்.

“இந்தக் கோயில் பூசாரியின் மகள்தான் மந்தாகினி. தெரியாதா உங்களுக்கு? நீங்கள்தான் பூசாரி என்றும் சொன்னீர்கள்?” உண்ணி சிலை மீதிருந்த தன் பார்வையை விலக்கி பவத்ராதனின் முகத்தில் பதித்தான்.

உண்மையிலேயே அவர் குழம்பினார். தலையும் வாலும் புரியவில்லை.

“இந்தக் கோயிலில் இருக்கும் ஒரே பூசாரி நான்தான். எனக்கு....” எவ்வளவு முயன்றும் அவரால் அதற்கு மேல் பேச முடியவில்லை.

“என்ன திருமேனி, எதையோ சொல்ல வந்து பாதியிலேயே நிறுத்தி விட்டீர்கள்...” உண்ணி ஆவலுடன் கேட்டான்.

‘என்ன செய்வது, எப்படிக் கூறுவது?’ என்ற தெரியாமல் திருமேனி குழம்பினார். ஆனால், சில நொடிகளுக்குள் ஒரு விஷயத்தை அவரால் யூகிக்க முடிந்தது. மோகினி சிலையொன்று காணாமல் போனதும், அதற்காக தேவபிரஸ்னம் நடத்தியதும் அவரின் நினைவு மண்டலத்தில் தெளிவடைந்து வந்தது. அதுதான் இந்தக் குழப்பங்களுக்கெல்லாம் காரணம் என்பதும் அவருக்குப் புரிந்தது. அதே நேரம் அது வெளியில் சொல்லக்கூடாத விஷயம் என்பதையும் உணர்ந்தார்.



‘எப்படிச் சொல்வது, அதை என்னவென்று விளக்குவது? வாயைத் திறந்து சொன்னால் அதன்மூலம் என்னென்ன விபரீதங்கள் நிகழுமோ?

ஒரு விஷயம் உறுதியாகத் தெரிந்தது. உண்ணியின் முன்னால் இருப்பது மந்தாகினியின் சிலை. மந்தாகினி ஒரு தேவமோகினி. அவள் கொஞ்ச காலம் இங்கிருந்து காணாமல் போய், உண்ணியுடன் வசித்திருக்கிறாள். ஆனால், இதையெல்லாம் தான் புரிந்துகொண்டதாகக் காட்டிக் கொண்டாலோ, அதை விளக்கினாலோ எந்தவிதமான பலனும் ஏற்படாது என்பதுடன் சிலசமயம் தனக்கு அது ஏதாவது விபரீதத்தையும் ஏற்படுத்தலாம்.

“திருமேனி, மந்தாகினி எங்கே?” உண்ணி கேட்டான்.

அதற்குப் பதிலளிக்காத பவத்ராதன் உண்ணியின் கண்களை உற்றுப் பார்த்தார்.

“ஒரு நிமிஷம்... இதோ வந்துடுறேன்” பவத்ரதன் அங்கிருந்து கிளம்பினார்.

கோயில் வாசலைக் கடந்து வெளியே வந்தவர், திரும்பி நின்று ஒரு தடவை பகவதியை வணங்கினார்.

“தாயே, என்னைக் காப்பாத்துங்க” மனமாரப் பிரார்த்தனை செய்தார். அதே விநாடி அவருக்குள்ளிருந்து ஏதோ ஒரு குரல் கட்டளையிட்டதைப் போல் உணர்ந்தார். அடுத்த விநாடி தெருவில் நடக்க ஆரம்பித்தார்.

இறுதியாக விஷ்ணு நம்பூதிரியிடம் வந்தான்.

அவர் மனைவியுடன் எங்கோ வெளியே கிளம்பிக் கொண்டிருந்தார். இருப்பினும் எதிரில் வந்ததால் விஷ்ணு நம்பூதிரி கேட்டார்: “என்னங்க உண்ணி, என்ன சேதி?”

“கோயில் வரைக்கும் கொஞ்சம் வந்துட்டுப் போறீங்களா?” உண்ணி கேட்டான்.

“நாங்க அவசரமா ஒரு இடத்துக்குக் கிளம்பிட்டிருக்கோம். டாக்டரை உடனடியா பார்த்தே ஆகணும்.”

அந்த பதிலைக் கேட்டதும் மேற்கொண்டு எதுவும் கேட்காமல் உண்ணி, கோயிலை நோக்கித் திரும்பி நடந்தான்.

மந்தாகினி சிலையை அடைந்தான்.

அவன் மனம் ஏகக் குழப்பத்திலாழ்ந்திருந்தது.

கூத்தம்பலத்தின் பக்கமாக மறைவாக நகர்ந்தவன், தன் இடுப்பிலிருந்த தாயத்தை அவிழ்த்து மந்தாகினி சிலையின் இடுப்புப் பகுதியில் பொருத்திப் பார்த்தான்.

அங்கிருந்த அடையாளத்தில் அது துல்லியமாகப் பொருந்தியது.

“அப்படியானால், மந்தாகினிதான் இது!” அவன் உதடுகள் முணுமுணுத்தன.

பத்மநாபன் நாயர் அவனை நெருங்கி வந்ததும் உண்ணி சட்டென்று அங்கிருந்து நகர்ந்தான். பத்மநாபன் நாயருக்கு இந்த விஷயம் தெரியவேண்டாம் என்று அவன் விரும்பினான்.

அன்று பகல் முழுவதும் கோயில் பகுதியைச் சுத்தப்படுத்தும் வேலை நடந்தது. முட்செடிகள், புல் முதலியவற்றை வெட்டிச் சீர்படுத்தினார்கள்.

குப்பை கூளங்கள் அகன்றதுமே கோயில் புதிய பொலிவு பெற்றாற் போலிருந்தது.

நூற்றாண்டுகளுக்கு முன் அது கட்டப்பட்டபோது இருந்த அழகு திரும்பக் கிடைத்தது மாதிரித் தெரிந்தது.

ஆனால், உண்ணிக்கிருஷ்ணனின் மனம் மட்டும் குமைந்து கொண்டிருந்தது.

‘மந்தாகினி இல்லாமல் தான் எப்படி வாழ்வது? தன்இதயத்துள் புகுந்து கொண்டதன்றி, தன்னை இன்றைய நிலை வரை முன்னேற்றிய அவளை அவ்வளவு சுலபத்தில் மறந்துவிட முடியுமா?’

கடந்த கால சம்பவங்கள் ஒவ்வொன்றாக அவன் மனதுள் வரிசையாகத் தொடர்படம் போல் தெளிவடைந்து வந்து கொண்டிருந்தன.



‘இந்தச் சிலையின் காலடியில் நினைவற்று விழுந்துகிடந்த போதுதான் முதல் தடவையாக, “உண்ணிக்கிருஷ்ணன்!” என்ற குரல் கேட்டது

அன்றுதான் முதன் முறையாக ஒரு குரல் தன் காதுக்குக் கேட்டது. தனக்கு இப்படியொரு பேர் இருப்பதும் தெரிந்தது.

சரஸ்வதியின் கையிலிருந்த எழுத்தாணியை எடுத்து தன் நாவில் எழுதினாள். தொடர்ந்து ஒவ்வொரு காட்சியும் துல்லியமாக ஞாபகம் வந்தது.

தன்னை எதிர்த்தவர்கள் தொடர்ந்து தோல்வியைத் தழுவினர்.

இந்த நிலையில் மேற்கொண்டு என்ன செய்ய முடியும்? தன்னால் எந்த அளவு எதிராளிகளிடம் மோத முடியும்?

மந்தாகினி யார்? உண்மையிலேயே மோகினிதானா? இனிமேல் அவள் சிலையாகவே இருந்துவிடுவாளா?

மாலை நேரமானதும் பத்மநாபன் நாயர் திரும்பி பயணத்துக்கான ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினார்.

“புறப்படலாங்களா தம்புரான்?” நாயர் கேட்டார்.

“புறப்படலாம். ஆனா நான் இன்னிக்குப் புறப்படுறதா இல்லை.”

“அப்போ தான்னிக்காட்டு மனையில் தங்கப் போறீங்களா?”

“அப்படியே வைச்சுக்கோங்க.”

“சரி, அப்போ நாங்க நாளைக்கு வர்றோம். கோயில் பூஜைக்கு யாரையாவது ஏற்பாடு செய்ய வேண்டாமா?”

“ஒரு பூசாரி இருக்கிறாரே, காலையில போனவர் இன்னும் வரலை. காத்திருந்து பார்க்கலாம்.”

“அப்ப நாங்க கிளம்பட்டுமா?”

“செய்யுங்க.”

நாயரும் சாண்டியும் வண்டி கட்டிக்கொண்டு புறப்பட்டார்கள்.

"இரவு சீக்கிரமாக வராதா?" என்று ஏங்கியபடி காத்திருந்தான் உண்ணி.

இரவின் மூன்றாம் ஜாமத்தில் மோகினிகளும், அவர்களைச் சேர்ந்த பூதகணங்களும் தங்களது இருப்பிடங்களை விட்டு வெளியேறுவார்கள் என்று உண்ணி, தான் படித்தவற்றிலிருந்து தெரிந்து கொண்டிருந்தான்.

சாப்பிட வேண்டுமென்றுகூடத் தோன்றவில்லை. கூத்தம்பலத் திலேயே காத்திருந்தான்.

மாலை நேரம் கடந்தது. பறவைகளின் குரல்கள் அடங்கிக் கொண்டிருந்தன. ஒரு கட்டத்தில் அந்தப் பகுதியே கனமான அமைதியில் மூழ்கியது.

விடிவெள்ளி உச்சி வானத்துக்கு வந்தது.

நிலவு வெளிச்சம் பகல் போல் காய்ந்து கொண்டிருந்தது.

உண்ணிக்கிருஷ்ணன், மந்தாகினி சிலையைப் பார்த்தபடி படுத்திருந்தான்.

மூன்றாம் யாமம் நெருங்குவதற்குள் தன்னையும் மறந்து உறங்கிவிட்டான்.

யாரோ தன்னருகில் படுத்திருப்பது போல் தோன்றவே, திடுக் கிட்டு விழித்தான். தலையைத் திருப்பாமல் கைகளால் துழாவினான்.

பழக்கப்பட்ட வழுவழுத்த உடல். இருப்பினும் சந்தேகம் விலகாதவனாகக் கேட்டான்: "யாரது?"

"நான்தான்... மந்தாகினி" அவள் குரல், அவன் காதில் கிசுகிசுப் பாக ஒலித்தது.

சட்டென்று இரு கைகளாலும் அவளை வாரியணைத்து கன்னங்கள், கண்கள், உதடுகள், கழுத்துப்பகுதி என்று கண்மண் தெரியாமல் மாறிமாறி முத்தமிட்டான்.

"இது கோயில் பகுதி... இங்கே எதுவும் கூடாது. தேவி கோபிப்பார்" அவள் மென்மையான குரலில் தடுத்தாள்.



"கோபிக்கட்டும்... என்னைச் சபிச்சு இல்லாமல் பண்ணட்டும். நீயில்லாமல் இருக்கிறதைவிட அது எவ்வளவோ மேல். இத்தனை நாளா நீ இல்லாம நான் எப்படியெல்லாம் கஷ்டப்பட்டேன் தெரியுமா?" அவன் மறுபடியும் அவளை அணைக்க நெருங்கினான்.

"வாங்க, போகலாம்" அவள் எழுந்தாள்

பால் பொழியும் நிலவொளியில், சன்னமான சிலைகளுக்குள் உடம்பைச் சிறைப்படுத்தியிருந்த மந்தாகினி, அவனுடன் நடக்கத் தொடங்கினாள்.

அவர்கள் கோயிலின் பின்புறத்தை அடைந்தனர். மேலும் சற்றுத் தொலைவு நடந்தனர்.

"கோயில் எல்லையைத் தாண்டிவிட்டோம். இதெல்லாம் எங்களுக்காக தேவி ஒதுக்கியிருக்கிற இடம். நாங்கள் பொழுது போக்குவதும் விளையாடுவதும் இங்குதான்."

மந்தாகினி அவனை, கல்தூண்கள் உயர்ந்து நிற்கும் மண்டபத்துக்கு அழைத்துப் போனாள்.

"இங்கு நாம் சுதந்திரமாக இருக்கலாம். கோயிலை சொந்தமாக்கிக் கொண்டீர்கள்.. இல்லையா? நானும் இனிமேல் உங்கள் சொந்தம்தான்."

உண்ணியின் உதடுகள் தாகத்துடன் அவள் முகத்தை நெருங்கின.

"நீங்கள் முக்கியமான விஷயத்தை மறந்து விட்டீர்களே" மந்தாகினி கேட்டாள்.

உண்ணி புரியாமல் விழித்தான்.

"ஓலைச்சுவடி."

கோயில் பலிபீடத்தின் கீழுள்ள பவித்திரமான ஓலைச்சுவடிகள்.

'அது கையில் கிடைத்தால்தான் உயிர் வாழ முடியும். இல்லாவிட்டால் புவனேஸ்வரன் நாயர் தன்னை இல்லாமலாக்கி விடுவார்.'

"அது எங்கே இருக்கிறது?"

“இனி, இன்று முடியாது, நாளை நள்ளிரவில்தான் எடுக்க முடியும்” மந்தாகினி அவன் மார்பில் சரிந்தபடி கூறினாள்.

## 44

**வி**டியற்காலையில் உண்ணிக்கிருஷ்ணனை எழுப்பியவர் பவத்ராதன் நம்பூதிரிதான்.

அவன் அவரை, அந்த நேரத்தில் அங்கு சுத்தமாக எதிர் பார்க்கவே இல்லை.

“யார் திருமேனியா... என்னை மன்னிச்சிடுங்க... நான் உங்களை ரொம்பவும் வேதனைப்படுத்திவிட்டேன்” உண்ணி மன்னிப்பு கோரும் குரலில் பேசினான்.

“பரவாயில்லை உண்ணி, தெரியாததால என்கிட்ட அப்படி யெல்லாம் கேட்டிங்க. இப்ப உங்க குழப்பமெல்லாம் தீர்ந்திருக்குமே” பவத்ராதன் இப்படிக் கேட்டதும் உண்ணி சந்தேகத்துடன் அவரைப் பார்த்தான்.

“உண்மைதான். ஆனா, நீங்க என் கேள்விகளுக்கு பதில் சொல்லாததால எனக்கு உங்க மேல எந்தவிதமான வருத்தமும் கிடையாது. எப்படியிருந்தாலும் இப்ப நீங்க வந்ததும் நல்லதுக்குத்தான். உங்ககிட்ட ஒரு விஷயத்தைச் சொல்லணும்னு நினைச்சேன்.”

“சொல்லுங்க.”

“நீங்கதான் பழையபடி கோயிலைக் கவனிச்சுக்கணும். கோயிலுக் காக எவ்வளவு பணம் தேவைப்பட்டாலும் உங்களுக்குக் கிடைக்கும். வழக்கமா நடக்க வேண்டியதெல்லாம் எந்தவிதக் குறைவுமில்லாம நடக்கட்டும்.”

“ஆகட்டும் உண்ணி... எல்லாம் உங்க மனம் போலவே நடக்கும்” பவத்ராதன் உணர்ச்சிவசப்பட்டு நெகிழ்ந்த குரலில் பேசினார்.

மிச்சம் மீதமிருந்த மராமத்து வேலைகள் அன்றிலிருந்து மறுபடியும் ஆரம்பமானது.



மதிய நேரத்தில் பத்மநாபன் நாயரும் சாண்டியும் வந்து சேர்ந்தனர்.

“மனையில ஏதாவது விசேஷம் உண்டா?” உண்ணி, நாயரிடம் கேட்டான்.

“இருக்கு, அதைச் சொல்லத்தானே வந்திருக்கிறேன்” நாயர் பேச்சைத் தொடங்கினார்.

“சீக்கிரமாச் சொல்லுங்க.”

“வாரிசற்றுப் போயிருந்த வீட்டுக்குள்ளே ஒரு மந்திரவாதி குடியிருக்கிறான். புவனேஸ்வரன் நாயர்தான் அவனுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து வருகிறார் என்று தோன்றுகிறது. நீங்க ரெண்டு பேரும் வீட்டுல இல்லாமல் போனதைத் தெரிஞ்சுக்கிட்டு அவங்க நம்ம ஆளுங்களைப் பிடிச்சு மிரட்டியிருக்காங்க.”

“நிஜமாவா?”

“நீங்க இனிமேல் ஊருக்குள்ள திரும்பி வரமாட்டிங்ககிறது அவங்க பேச்சு.”

“ஓகோ, அந்த அளவுக்கு வந்துட்டாங்களா?”

“அதனால் மேற்கொண்டும் நீங்க இங்கே தங்கியிருக்கிறது அவ்வளவு நல்லதாத் தோணலை. எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் ஊர் போய்ச் சேரவேண்டும். இல்லேன்னா, புதுசு புதுசா பிரச்சினைகள் ஏதாவது முளைக்கலாம்.”

உண்ணி யோசனையில் ஆழ்ந்தாள்.

‘நாயர் சொல்வது சரிதான். இருந்தாலும் தான் மட்டும் அங்கு செல்வது ஆபத்தை விலைக்கு வாங்குவதற்கு சமம். புவனேஸ்வரன் நாயர் புதிதாகக் கொண்டு வந்திருக்கும் மாந்திரீகன்தான் திருவிழாவில் நடந்த குழப்பங்களுக்கெல்லாம் காரணம் என்று தோறுகிறது.

மந்தாகினி தன்னுடன் இருந்ததால் அதிலிருந்தெல்லாம் தன்னால் தப்பிக்க முடிந்தது. அன்றெல்லாம் தான் அவளை சாதாரணமான ஒரு மனிதப் பெண்ணாகவே நினைத்திருந்தோம்? நல்லவேளையாக இப்போதாவது உண்மை தெரிந்ததே. என்ன இருந்தாலும் பலி பீடத்துக்கு அடியிலுள்ள ஓலைச்சுவடியை எடுக்காமல் இங்கிருந்து

கிளம்புவது நல்லது அல்ல. இதையெல்லாம் நாயரிடம் எப்படி விளக்கிச் சொல்வது?' எனவே, ஒரு தந்திரத்தைப் பிரயோகித்தான்.

"இந்தக் கோயிலை நாம் வாங்கியிருக்கும் விஷயத்தை நம் ஊர்க்காரர்களிடம் சொல்லுங்க. அவசியமான வேலைகளை முடித்துக் கொண்டு இரண்டு நாளில் நான் வருவதாகவும் தெரிவியுங்கள்."

**பு**வனேஸ்வரன் நாயர், அஷ்டமுகப் பெருமாளின் அருகே அமர்ந்து, மீண்டும் பனங்காட்டுமனை மற்றும் அதன் சொத்துகளைக் கைப்பற்ற என்ன செய்யலாம் என்பது பற்றித் தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்தார்.

அந்த விஷயத்துககாக மீதமுள்ள தன் நான்கு பிள்ளைகளையும் தயார்ப்படுத்தியிருந்தார். குமாரன்குட்டி, அதுவரை இறந்து போயிருந்த சகோதரர்களின் மொத்த உடல் வலுவையும் சேர்த்துப் பெற்றவன் போலிருந்தான். இருபத்தெட்டு வயதுக்குள் நான்கு பேரைக் கொலை செய்து திறமை பெற்றிருந்தான்.

ஏறத்தாழ நூறு பேருக்கு மேல் அவர்களிடம் அடியாட்கள் இருந்தனர். பெரியவீட்டு எஜமானுக்காக எதையும் செய்ய அவர்கள் தயாராக இருந்தனர். உண்ணிக்கிருஷ்ணன் ஊரில் இல்லாததால், உண்ணியின் ஊழியர்கள் சிலரும் பயத்தினால் பெரியவீட்டுப் பக்கம் சேர்ந்திருந்தனர்.

உண்ணி ஊரிலில்லாத நேரம் பார்த்து முதலில் மனை மற்றும் சொத்துகளைக் கைப்பற்றுவது, அதன்பிறகு உண்ணி எப்போது திரும்பி வந்தாலும் அவனைக் கொல்வது என்பது அவர்களின் திட்டம். எதிர்பாராத விதமாக அவனுடன் மந்தாகினி வந்தால் அவளைத் தொலைத்துக்கட்டும் பொறுப்பை அஷ்டமுகப் பெருமாள் ஏற்றுக் கொண்டார். அவர் அதற்கான தீவிர ஏற்பாடுகளில் மூழ்கியிருந்தார்.

அடியாட்களில் பெரும்பாலானவர்கள், அஷ்டமுகப் பெருமாள் தங்கியிருந்த வீட்டில் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

உண்ணிக்கிருஷ்ணன் பனங்காட்டு மனைக்கு வந்துவிட்டால், உடனே அடியாட்கள் அங்கு போய்விட வேண்டுமென்று அஷ்டமுகப் பெருமாள், குமாரன்குட்டியிடம் சொல்லி வைத்திருந்தார்.



குமாரன்குட்டியும் அடியாட்களுக்குத் தேவையான ஆயுதங்களைச் சேகரித்துத் தயாராக வைத்திருந்தான். வாள், வேல், கடப்பாரை, கத்தி என்று எல்லாவித ஆயுதங்களும்கூர் தீட்டிப் பளபளப்பாக்கப்பட்டிருந்தன.

உண்ணிக்கிருஷ்ணன் இரவை எதிர்பார்த்துக் காத்திருந்தான்.

மாலை நேரம் ஆகியிருந்தது.

சற்றுத் தொலைவில் காளைகளின் கழுத்து மணியோசை கேட்டது. வண்டி கோயிலுக்கு முன்புறமிருந்த ஆலமரத்தின் கீழே நின்றது.

உண்ணி எதிர்பார்த்தது போல் பத்மநாபன் நாயர் வண்டியிலிருந்து இறங்கினார்.

"உண்ணி" கோயில் வாசற்படியில் கால் வைத்த நாயர் அழைத்தார். அவரைப் பார்த்தால் எதையோ பார்த்து பயந்து மிரண்டுபோனவரைப் போல் தெரிந்தார்.

"என்னங்க?" உண்ணி கேட்டான்.

"நிலைமை ரொம்பவும் மோசமாகிடுச்சு. நாம எதிர்பார்க்காத தெல்லாம் நடந்திருக்கு. உங்களை எதிர்பார்த்து ஊர்ல பயங்கரமான ஆயுதங்களோட ஒரு படையே காத்திருக்கு!" நாயர் மூச்சு விடாமல் ஒரேடியாகப் பேசினார்.

"விஷயத்தைச் சொல்லுங்க."

"வேற என்ன, கூட்டமா கொள்ளையடிக்கிறதுதான் அவங்க திட்டம். அதுக்குத் தோதா ஆளுங்களையும் திரட்டியிருக்காங்க."

"ஓகோ... அவ்வளவுதானே" என்ற உண்ணி யோசனையில் ஆழ்ந்தான்.

'ஒன்று அவர்கள் தன்னைப் பழைய நிலைக்குக் கொண்டுபோய் விடுவார்கள். அல்லது இந்தத் தடவை கொல்லவும் செய்யலாம். அவர்களை எந்தவிதத்திலும் எதிர்க்கும் வல்லமை தனக்கு இல்லை. எனவே, தனக்கு இருக்கும் ஒரே வழி, தேவி பலிபீடத்தின் கீழே இருக்கும் ஓலைச்சுவடியைக் கைப்பற்றுவதுதான். அந்த மந்திரங்களை

முழுவதுமாகக் கற்றுப் பயன்படுத்தத் தனக்கு வாய்ப்பு இல்லா விட்டாலும். ஓலைசுவடிக்கென்றே ஒரு சக்தி இருக்கத்தான் செய்யும்' என்று அவன் மனம் திடமாக நம்பியது.

'எனவே, என்ன ஆனாலும் ஓலையில்லாமல் கிளம்புவது இல்லை' என்பதில் உறுதியாக இருந்தான். 'அதற்காகவாவது நாயரை அங்கிருந்து அப்புறப்படுத்துவது அவசியம். என்ன செய்யலாம்?'

சட்டென்று ஒரு யோசனை தோன்றியது.

'ஜாதவேதன் நம்பூதிரியின் இல்லத்துக்கு அவர்களை அனுப்பித் தங்கவைக்க வேண்டியதுதான். தன் திட்டம் நிறைவேறியதும் அவர்களுடன் சேர்ந்து கொள்ளலாம்.'

"நாயரே, நான் ஒரு உண்மையைச் சொல்லட்டுமா? இப்ப ஒரு கடுமையான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறேன். விவரத்தை நாம் போகும்போது வழியில் சொல்கிறேன். வேறு எதையும் கேட்காதீர்கள்."

"இப்ப நாங்க என்ன செய்யணும்னு சொல்றீங்க?" நாயர் கேட்டார்.

"தற்சமயம் நீங்க ஜாதவேதன் நம்பூதிரி வீட்டுல தங்கியிருங்க. நான் உங்களை அங்கே வந்து சந்திக்கிறேன். எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் வர்றேன்."

'உண்ணிக்கிருஷ்ணன் இவ்வளவு உறுதியுடன் பேசியதால் நிச்சயம் அதில் ஏதோ விஷயம் இருக்கத்தான் செய்யும்' என்று ஆறுதலடைந்தவராக அங்கிருந்து வெளியேறினார் நாயர்.

சூரியனின் கடைசிக் கிரணங்களும் கிழக்குப்புற மலையின் உச்சியிலிருந்து மறைந்தன. மீதமிருந்த சூரிய வெளிச்சம் மேகத் துண்டுகளைச் சிவப்பாக்கியிருந்தது.

விரைவிலேயே அந்தப் பகுதியை இருள் வந்து மூடிக்கொண்டது.

நோன்பிருக்கும் பக்தனைப் போல அன்ன ஆகாரம், நீர் எதுவுமின்றி உண்ணிக்கிருஷ்ணன் காத்திருந்தான். எப்பொழுது கண் அயர்ந்தான் என்று அவனுக்குத் தெரியாது.

"உண்ணி, உண்ணி, எழுந்திருங்கள்... நேரம் நள்ளிரவாகிவிட்டது" யாரோ தன் தோளைத் தட்டி அழைப்பதை உணர்ந்து விழித்தான்.



எதிரில் மந்தாகினி நின்றிருந்தாள்.

முதல் தடவை பார்த்தது மாதிரியே இருந்தாள்.

"எழுந்திருங்கள்" அவள், அவன் கையைப் பிடித்து எழுப் பினாள்.

"நிலைமை ரொம்பவும் மோசமா இருக்கிறதா பத்மநாபன் நாயர் வந்து சொன்னார்."

"அது உண்மைதான். எனக்கும் தெரியும். நேரம் கடத்தாமச் சீக்கிரமா கிளம்புங்க" மந்தாகினி அவசரப்படுத்தினாள்.

உண்ணி அவளைப் பின்தொடர்ந்தான்.

கோயிலின் பின்புறத்துக்கு வந்தனர்.

"ரத்தபீஜன், மகிஷாசுரன் போன்றவர்களைக் கொல்வதற்காக தேவி கார்த்தியாயினி எடுத்த அதே வடிவம்தான் இங்கு இருக்கிறது. நாம் வேண்டும் சுவடி இந்த உக்கிரமூர்த்தியின் கைகளில் இருக்கிறது. என்னை ஒரு கையால் தொட்டுக்கொண்டு பாருங்கள், சுவடி தென்படும்!" மந்தாகினி கூறினாள்.

உண்ணி அவள் சொன்னபடியே அவள் தோளைத் தொட்டபடி சிலைப்பக்கம் பார்த்தான். விவரிப்புக்கு அப்பாற்பட்ட வெளிச்சப் பிரவாகத்துக்கு நடுவில் உக்கிரமான காளியின் வடிவம் தெரிந்தது.

ரௌத்திரத்தால் சிவந்த ஒளியுடன் தென்பட்ட முகம், நெருப்புப் பொறிகள் தெறிப்பது போன்ற முக்கண்கள். யமனின் தேஜஸால் தலைமுடியும், விஷ்ணு தேஜஸினால் உடலும் பிரம்மப்பிரபையால் பளபளத்த கணுக்கால்களும், சூரிய ஒளியைப் போன்ற விரல்களும், வஸுக்களின் சக்தியால் கை விரல்களும், பிரஜாபதியின் தேஜஸால் பற்களும், மோகன சக்தியால் மூக்கும், வாயுவினால் காதுகளும், பளபளக்கும் புருவக் கொடிகளுடன் எல்லாவித தேஜஸாய் பொருந்திய தேவி....

கைகளில் வரதனான சூலாயுதன் வழங்கிய சூலாயுதமும், விஷ்ணு சக்கரமும், வருணனின் சங்கும், அக்னியின் வேலும், வாயுவின் வில்லும், அம்புகள் தீராத சூரியனின் அம்பறாத்தூணியும்,

இந்திர வஜ்ராயுதமும், யமதண்டமும், வைஸ்ரவணனின் கதாயுதமும், பிரம்மாவின் அக்ஷமாலையும், கிண்டியும், வாள், கேடயம், சந்திரனின் வெண்சாமரமும், சமுத்திர மாலையும் ஹிமவானின் சிங்கமும் விஸ்வகர்மாவின் திங்கள் கீற்றான சூடாமணியும், குண்டலங்களும் காப்புகளும் கந்தர்வராஜனின் கவசங்களும், நாகராஜாவின் நாக ஹாரமும் ருதுக்கள் வழங்கிய வாடாப்பூ மாலையும்...

எல்லாவற்றையும் உண்ணிக்கிருஷ்ணன் கண்ணாரக் கண்டான். அப்போது அவன் இந்த உலகத்தையே மறந்து விட்டிருந்தான்.

"அதோ... தேவியின் காலடியில் கிடப்பதுதான் நான் குறிப்பிட்ட பலிக்கல். அதன் கீழும் சுவடி உண்டு. நீங்கள் அதிர்ஷ்டசாலி. உங்களுக்காகத்தான் இந்தச் சுவடி காத்திருக்கிறது. தேவியை மனதில் தியானித்துக்கொண்டு அதை எடுங்கள்!" மந்தாகினி கூறினாள்.

அதன்பிறகு உண்ணிக்கிருஷ்ணன் ஒரு விநாடிகூடத் தயங்க வில்லை. உண்ணி, அவள் தோளிலிருந்து தன் கையை எடுத்தான். அவ்வளவுதான், ஒரு கணத்தில் எல்லாமே சூனியமாகிப் போனது.

அவனுக்கு முன்னால் தட்டுப்பட்ட ஒளி வெள்ளம் சட்டென்று மறைந்தது.

பலிக்கல்லை நகர்த்தினான். நடுங்கும் கைகளுடன் உண்ணி அங்கிருந்த சுவடியை வெளியே எடுத்தான். மந்தாகினியிடம் வந்தான்.

"இனிமேல் நீங்கள் யாருக்கும் பயப்பட வேண்டியதில்லை. எப்படிப்பட்ட சூராதி சூரனையும் வெல்லும் மந்திரங்கள் இதில் உள்ளன. முதலில் இதை மனப்பாடம் செய்யுங்கள்" மந்தாகினி கூறினாள்.

"இதைப் படித்து மனப்பாடம் செய்வதற்கெல்லாம் நேரமில்லை. எதிராளிகள் இந்நேரம் எல்லாவற்றையும் கைப்பற்றியிருப்பார்கள். அவர்கள் என்னைக் கொல்லும் தருணத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள்" உண்ணி கூறினான்.

"அப்படியா சொல்கிறீர்கள்? சரி வாருங்கள்" மந்தாகினி, உண்ணியை அழைத்துக்கொண்டு கோயிலின் முன்புறம் வந்தாள்.



"அப்படியானால் நான் சொல்கிறபடி செய்யுங்கள். இந்தச் சுவடியுடன் இப்போதே புறப்படுங்கள். தாமதிக்கக்கூடாது. என்னைத் தொடுங்களேன்" அவள் கூறினாள்.

அப்படியே செய்தான்.

கண் திறந்து பார்த்தபோது அவர்கள் இருவரும் ஜாதவேதனின் வீட்டு முன்பு நின்று கொண்டிருந்தனர்.

பத்மநாபன் நாயரும், சாண்டியும் பயணத்துக்குத் தயாராக நின்று கொண்டிருந்தனர்.

"புறப்படுங்கள்" உண்ணி வண்டியில் ஏறியபடி சொன்னான்.

மாடுகள் முன்புறமாகப் பாய்ந்தன.

வழக்கத்தைவிட மிகவும் விரைவிலேயே அவர்கள் பனங்காட்டு மனையை அடைந்தனர்.

வீட்டுக்கு முன்னால் ஒரு பெருங்கூட்டம் காத்திருந்தது.

## 45

மாட்டு வண்டியிலிருந்து இறங்கிய உண்ணிக்கிருஷ்ணன் முதலில் பார்த்தது பனங்காட்டு மனையின் திண்ணையில், பிரகாசமாக எரிந்து கொண்டிருக்கும் நிலவிளக்கின் அருகில் அமாந்திருந்த விசித்திரமான மனிதனைத்தான்.

அஷ்டமுகப் பெருமாள்!

அவரைச் சூழ்ந்திருப்பது போல் மனையின் வெளியே தீப்பந்தங்களுடன் ஒரு பெருங்கூட்டம் இருந்தது. அவர்கள் எல்லாரும் ஆயுதங்களுடன் இருக்கிறார்கள் என்பது முதல் பார்வையிலேயே தெரிந்துவிட்டது.

உண்ணிக்கிருஷ்ணனை மட்டும் பார்த்ததால் காத்திருந்தவர்கள் ஒருகணம் மௌனம் சாதித்தனர்.

பத்மநாபன் நாயரும், சாண்டியும் வண்டிக்குள் பதுங்கியிருந்தனர்.

“என்னப்பா, எல்லாரும் இங்கே என்ன செய்யுறீங்க?” உண்ணி கேட்டான்.

“யார், பனங்காட்டு உண்ணியா?” என்று கேட்டபடி புவனேஸ்வரன் நாயர் முன்னால் வந்தார்.

“அதிலேயும் சந்தேகமா உங்களுக்கு?” உண்ணி கேட்டான்.

“சந்தேகமேதான்!” நாயரின் குரலில் கேலி தொனித்தது.

“உண்ணிக்கு நல்லா காதுகேட்கும். காது கேட்காதவங்க இங்கே வேற யார் இருக்காங்க?” திடுமென்று ஒரு குரல் உண்ணிக்குப் பின்னாலிருந்து கேட்டது.

“கேசவா” மந்தாகினி அழைத்தாள்.

‘என்னங்க?’ என்பதுபோல் நீண்ட தந்தங்கள் கொண்ட ஒற்றை யானை முன்புறமாக வந்தது.

“ஒரு தடவை குரல் கொடு பார்க்கலாம்” மந்தாகினி யானையிடம் பேசினாள்.

அந்தக் கோரிக்கைக்குக் கீழ்ப்படியாமல் இருப்பது தவறு என்பது போல், யானை தனது தும்பிக்கையை உயர்த்தி ஒரு தடவை உரத்த குரலில் பிளிறியது.

ஆனால், அங்கிருந்த எவருக்கும் அது காதில் விழுந்ததாகத் தெரியவில்லை. அங்கிருந்தவர்கள் ஒருவருக்கு ஒருவர் பரஸ்பரம் பார்த்துக் கொண்டனர்.

என்னமோ நடந்திருக்கிறது.

ஆனால், அஷ்டமுகப் பெருமாள் மட்டும் எந்த பாதிப்பும் அடையாதவரைப் போலிருந்தார். அவருக்கு மட்டும் பிளிறல் கர்ணகடூரமாகக் காதில் கேட்டது. அவர் தனது மந்திர சூலத்தைத் தரையில் ஊன்றியபடி எழுந்தார்.

“என்னங்கப்பா.... யானை பிளிறினது யாருக்கும் கேட்கலையா? இப்பவாவது கேட்குதான்னு பாருங்க” அஷ்டமுகப் பெருமாள் தனது சூலத்தை யானையை நோக்கி எறிந்தார்.



‘ஸ்... ஸ்...’ என்ற சத்தத்துடன் பாய்ந்த சூலம், யானையின் அடிவயிற்றில் பாய்ந்தது.

யானை மீண்டும் பயங்கரமாகப் பிளிறியது.

இந்தத் தடவை எல்லாருக்கும் அந்தச் சத்தம் நன்றாகக் கேட்டது.

“என்ன, கேட்டதா?” பெருமாள் கேட்டார்.

“நல்லாக் கேட்குது” மொத்தக் கூட்டமும் ஒரே குரலில் கூறியது.

உடனே புவனேஸ்வரன் நாயரின் மகன் குமாரன்குட்டி தனது வாளை மேற்புறமாக எறிந்தான்.

நிலவொளியில் பாய்ந்து உயர்ந்த வாள் திரும்பவும் அவன் கைக்கே வந்து சேர்ந்தது.

“கைவசம் வேற வித்தைகள் ஏதாவது இருக்கா, அவ்வளவு தானா?” புவனேஸ்வரன் நாயர் மந்தாகினியைப் பார்த்துக் கேட்டார்.

உண்ணிக்கிருஷ்ணன் மந்தாகினியைப் பார்த்தான்.

ஒரு விநாடி யோசித்தான். தனது வித்தை அங்கு செல்லுபடியாக வில்லை என்பது புரிந்தது.

‘தற்போது கைவசமிருப்பது ஓலைச்சுவடி மட்டும்தான். அதிலுள்ள மந்திரங்களைப் படித்துப் பிரயோகிக்க நேரமில்லை. இந்த இடம் ஒரு போர்க்களமாக மாறிவிட்டிருக்கிறது. வேறு என்னதான் செய்வது?’ மந்தாகினி யோசனையுடன் தவித்தாள்.

அஷ்டமுகப் பெருமாளைப் பற்றி அவளுக்கும் தெரியும்.

கடந்த இரண்டு ஜென்மங்களிலும் அவர் பயங்கரமான மனிதராக இருந்திருக்கிறார். ருத்ர மந்திரங்களில் அவரை வெல்வதற்கு யாரும் கிடையாது என்பதும் அவளுக்குத் தெரியும்.

காரணம், அவரை யாராலும் கொல்ல முடியாது. கொன்றாலும் மறுபடி மறுபடி உயிர்த்தெழும் வல்லமை கைவரப் பெற்றிருந்தார்.

மந்தாகினி அவர் கையிலிருந்த சூலத்தைப் பார்த்தாள். அன்றொரு நாள் சுரங்கப் பாதையை பெரிய பாறையொன்றால்

முடியபோது, அதை வெகு சாதாரணமாக இந்தச் சூலத்தால்தான் தள்ளி ஒதுக்கினார். அந்த சூலம் சாதாரணமானதல்ல.

ஆனால், மந்தாகினி நின்ற நிலையைப் பார்த்த மற்றவர்கள் நின்ற இடத்திலிருந்து அசையவும் பயந்தார்கள். அவளின் முதல் வித்தையின் பலன் அது.

"என்னங்கய்யா, எல்லாரும் ஆடு திருடினவங்க மாதிரி முழிச்சுட்டு நிற்கிறீங்க? உங்ககிட்ட என்ன சொல்லியிருக்கேன்?" பெருமாள், நாயரின் ஆட்களைப் பார்த்துக் கேட்டார்.

அவர்கள் மந்தாகினியைப் பார்த்தனர்.

"பயப்படாதீங்க, அவளால அங்கேயிருந்து அசைய முடியாது. ஸ்தம்பன மந்திரத்தில் அவளைக் கட்டிப் போட்டிருக்கிறேன்" பெருமாள் கூட்டத்துக்குத் தைரியம் கொடுத்தார்.

அந்த வார்த்தைகளால் தைரியம் வரப்பெற்றவர்களாக அவர்கள் தெருவாசற்படியை நோக்கி நடக்கத் தொடங்கினர்.

நின்ற இடத்திலிருந்து அசையாமலே மந்தாகினி, தன் தலையிலிருந்து முடியிழை ஒன்றைப் பிடுங்கிக் கூட்டத்தின் மீது போட்டாள்.

கண் மூடித்திறப்பதற்குள் அந்த முடியிழை பெரும் வடக்கயிறாக மாறி முடிச்சுகளுடன் அந்தக் கூட்டத்தினரை இணைத்துக் கட்டி அசைவற்று நிற்கச் செய்தது. எவராலும் அசையக்கூட முடியாமலானது.

"ஓகோ... அடுத்த வித்தையா? அதையும் பார்த்துடலாம்" பெருமாள் தனது சூலத்தை உயர்த்தி அந்தரத்தில் ஒரு வட்டம் வரைந்தார்.

அந்த வட்டம் ஒரு நெருப்புக் கோடாக மாறி கயிறுகளின் கட்டுகளை நெருங்கி கயிறுகளைத் துண்டித்துக் கூட்டத்தினரை விடுதலை செய்தது.

கட்டுகளிலிருந்து விடுபட்டவர்கள் கூக்குரல் எழுப்பிக்கொண்டு மீண்டும் தெருவாசற்படியிலிருந்து சுற்றுச்சுவருக்குள் நுழைய முற்பட்டனர்.



"கேசவா!" மந்தாகினி அதே இடத்தில் நின்றபடி அழைத்தாள்.

யானை முன்புறம் வந்தது.

"அவர்களை விலக்கு."

யானை மிகவும் சாதுவாக அவர்களை நெருங்கி ஒவ்வொருவராகத் தூக்கி வீசியெறியத் தொடங்கியது

அதை எவரும் எதிர்பார்க்கவில்லை என்று தோன்றியது.

அஷ்டமுகப் பெருமாளும் அதைப் பார்த்துச் சற்றுத் திகைப்பு அடைந்ததாகத் தெரிந்தது.

"யானையைக் கட்டிப் போட்டால்தான் சரிப்படும்" என்ற பெருமாள் மீண்டும் தனது சூலத்தை அந்தரத்தில் சுழற்றினார்.

சட்டென்று ஒரு பெரிய சங்கிலி அந்தரத்தில் வெளிப்பட்டு, யானையின் இரு கால்களையும் நெருங்கித் தானாகவே பிணைத்துக் கொண்டது.

இப்போது யானையால் முன்னும் பின்னும் அசைய முடியாமலாகிப் போனது.

அதற்குள்ளாக யானையால் வீசி எறியப்பட்ட ஒருசிலர் கை கால் உடைந்தும், காயம் பட்டும் வலியால் அலறத் தொடங்கினர்.

"உண்ணி" மந்தாகினி அழைத்தாள்.

"என்ன பண்ணணும்னு சொல்."

"உங்க கையில் இருக்குற சுவடியில என் கட்டறுக்குற மந்திரம் இருக்கு. சீக்கிரமா அதைக் கண்டுபிடிங்க" மந்தாகினி கூறினாள்.

உண்ணி வெளிச்சத்துக்காக மாட்டு வண்டியை நெருங்கினான். லாந்தர் விளக்கை வண்டியின் முன்புறம் மாட்டி வைத்திருந்தனர். அதை அவிழ்த்து எடுத்து வண்டியின் பின்புறம் கொண்டு போனால் சுவடியைப் புரட்டிப் பார்க்க வசதியாக இருக்கும். விளக்கை அவிழ்த்து எடுத்துக்கொண்டு பின்பக்கமாகப் போனான்

அதே நேரம் உண்ணிக்கிருஷ்ணனின் ஆட்களில் சிலர் இருளில் மறைந்திருந்தனர். அவர்களில் முக்கியமானவன் முகுந்தன். நடக்கிற மந்திர வித்தைகளைப் பார்த்து அவர்கள் மிரண்டு போயிருந்தனர். அவர்களுக்குத் தைரியம் ஊட்ட எவருமில்லை.

சற்று நேரத்துக்குள் முகுந்தன், உண்ணிக்கிருஷ்ணனை நெருங்கினான். உண்ணி குறிப்பிட்ட மந்திரத்தை தேடும் முயற்சியில் தீவிரமாயிருந்தான்.

“நாங்களும் கொஞ்சம் பேர் ஆயுதங்களோட வந்திருக்கிறோம். உங்களுக்கு எப்படி உதவறதுன்னு தெரியலை தம்புரான்” முகுந்தன் கேட்டான்.

“கொஞ்சம் பொறுங்க. நம்ம ஆளுங்க யாருக்கும் எந்த விதமான சேதமும் ஆகக் கூடாதுங்கிறதுதான் என் நோக்கம். தேவைப்படும் போது சொல்றேன். எதுக்கும் தயாரா மறைஞ்சே நில்லுங்க... பார்ப்போம்” உண்ணி பதிலளித்தான். முகுந்தனை அடையாளம் தெரிந்துகொண்டு.

“தம்புரான் பொறுங்க... சொல்றேன்னு சொல்றார். கடைசிக் கட்டத்துல நாம இறங்கலாம்” முகுந்தன் தன் கூட்டாளிகளிடம் மெதுவான குரலில் கூறினான்.

அவர்கள் தங்களது கட்டாரிகளில் கையைத் தயாராக வைத்தபடி பதுங்கியிருந்தனர்.

அதற்குள் உண்ணி ஸ்தம்பனத்தை உடைக்கும் மந்திரம் இருக்கும் பகுதியைக் கண்டுபிடித்து விட்டான்.

அதை மட்டும் ஒன்றுக்கு மூன்று தடவையாகப் படித்து மனப்பாடம் செய்துகொண்டு மந்தாகினியை நெருங்குவதற்குள் அவள் தடையிலிருந்து விடுபட்டிருந்தாள்.

“நீங்கள் ஒரு தடவை சொன்னபோதே நான் விடுதலை அடைந்து விட்டேன்” மந்தாகினி கூறினாள்.

குமாரன்குட்டி தனது கட்டாரியின் கூர்மையைக் கட்டை விரல் நகத்தால் சோதித்து அறிந்தவனாகத் தந்தையை நெருங்கினான்.



“அப்பா, எனக்கு இது கொஞ்சம்கூடப் பிடிக்கலை. அந்தப் பைத்தியக்காரனோட நின்னுட்டிருக்கிறவ மோகினியோ... வேற ஏதாவதாவோ இருப்பாள். நாம் இப்படியே நேரம் கடத்தினா நல்லதில்லை. சீக்கிரமா ஒரு முடிவுக்கு வாங்க” குமாரன்குட்டி அப்பாவுக்கு நினைவூட்டினான்.

“நாம என்ன பண்றது? பெருமாள்தான் அதைக் கவனிக்க வேண்டியவர்.”

“நீங்களே அவர்கிட்டச் சொல்லுங்க. முதல்ல அவள் கதையை முடிச்சுட்டா... மத்ததெல்லாம் தானாவே சரியாயிடும்.”

புவனேஸ்வரன் நாயருக்கும் அது சரியென்று தோன்றவே, தெருவாசற்படி தாண்டி உள்ளே போனார்.

“அந்தப் பொண்ணு சரியான எமகாதகியா இருப்பாள் போலிருக்கு. நீங்க முதல்ல அவளைக் கவனிச்சுக்கிட்டா மத்ததெல்லாம் சுலபமாயிடும்” நாயர் பெருமாளிடம் கூறினார்.

“நானும் அதைப் பத்தித்தான் யோசிக்கிறேன். அவள் ஒரு மோகினிதான்கிறதுல எனக்கு சந்தேகம் இல்லை. ஆனா, சாதாரண மோகினி இல்லை. தேவ அம்சம் உள்ளவ. அதனால அவளை சுலபத்தில் நெருங்க முடியாமல் இருக்கிறது” பெருமாள் தனது சூலாயுதத்தை உறுதியாகப் பற்றியபடி பேசினார்.

“அப்புறம் என்னதான் வழி?”

“அதுக்காக விட்டுட முடியுமா? மோதிப் பார்க்க வேண்டியது தான்” கையிலிருந்த சூலத்தின் அரிவாள் போன்ற முனையைத் தாழ்த்திக் கூர்மையான பாகத்தில் தன் சுண்டுவிரலைத் தடவினார். விரலில் கீறல் விழுந்ததில் ரத்தம் பொட்டாக உருண்டு வந்து நின்றது. அதை எடுத்து சூலத்தின் முனையில் தடவினார்.

“என் ரத்தம் அந்த உண்ணியின் உடம்பில் கலந்தால், அவனின் நம்பூதிரித் தன்மை இல்லாமலாகிவிடும். அதன்பிறகு அவளால் அவனுக்கு உதவ முடியாது. இந்த ஒரு வழிதான் எனக்குத் தெரிகிறது. பார்க்கலாம்” பெருமாள் மீண்டும் சூலத்தின் முனையில் ரத்தத்தைத் தடவினார்.

மனதில் பரதேவதையைத் தியானித்து மந்திரத்தை உருவிட்டபடி சூலத்தை உண்ணியை நோக்கி வீசினார்.

சூலம் காற்றைக் கிழித்துக்கொண்டு விசையுடன் உண்ணியை நோக்கிப் பாய்ந்தது.

மந்தாகினிதான் அதை முதலில் கவனித்தவள்.

"உண்ணி, சூலம் வருகிறது. அந்தச் சுவடியையே கேடயமாப் பிடியுங்க" மந்தாகினி அவனைத் தொட்டு இழுத்தபடி கூறினாள்.

விபரீதத்தை உணர்ந்து, சுதாரித்து, உண்ணி ஓலைச்சுவடியைக் கேடயம் போல் உயர்த்திய அதே விநாடி சூலமும் அவனை நெருங்கியது.

'க்ளிங்' என்ற சத்தத்துடன் நெருப்புத் துணுக்குகள் தெறித்தன. ஓலைச்சுவடியைத் தொட்டுவிட்டதால் சூலத்திலிருந்து இடைவிடாமல் நெருப்புப்பொறி தெறித்து விழுந்து கொண்டிருந்தது.

"உண்ணி நீங்க சூலத்தைத் தொடக்கூடாது" என்று தடுத்தவள் தன் கையால் அதைப் பிடித்தாள்.

அத்துடன் பிரத்தியேகமான ஏதோ ஒரு சக்தி அவள் உடம்புக்குள் புகுந்தாற் போலிருந்தது.

அவள் அஷ்டமுகப் பெருமாளின் உடம்பை உற்றுப் பார்த்தாள்.

'அதோ, அவர் உதரத்தில் மாணிக்கம் ஜொலிக்கிறது. அதை அகற்றினால் மட்டுமே அவரை அழிக்க முடியும்' என்று உணர்ந்தவள் சூலத்தை அவரது தொப்பூழ்க்கொடியை நோக்கி எறிந்தாள்.

அவரது வயிற்றைத் துளைத்து, மாணிக்கத்தை வெளியேற்றி விட்டு மேலும் முன்னேறிய சூலம் கதவில் போய் செருகிக் கொண்டது.

பெருமாள் மட்டமல்லாக்க விழுந்தார்.

பயங்கரமான ஓர் அலறல் கேட்டது.

அதற்குள் மந்தாகினியின் உருவமும் மாறிவிட்டிருந்தது.



நெருப்பில் கனிந்த செம்பு விக்கிரகம்போல் மாறிய மந்தாகினி பெருமாளை நெருங்கினாள். அவர் கழுத்தைப் பிடித்து உயர்த்தியவள், கதவில் செருகியிருந்த சூலத்தை இடது கையால் எடுத்தாள்.

அஷ்டமுகப் பெருமாளை ஆகாயத்தை நோக்கி எறிந்தாள். தொடர்ந்து சூலத்தையும் எறிந்தாள்.

விசையுடன் பாய்ந்து சென்ற சூலம் அவரது உடலில் பதிந்து அவரையும் இழுத்துக்கொண்டு காற்றைக் கிழித்தபடி விரைந்து மறைந்தது.

இதையெல்லாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவர்கள் ஒருகணம் பிரமை பிடித்தவர்கள் போல் அசைவற்றுப் போய், பிறகு சுயநினைவுக்குத் திரும்பி பயத்துடன் கண்டபடி கலைந்து ஓடத் தொடங்கினர்.

கூட்டத்தின் முன்னால் ஓடிக் கொண்டிருந்தவர்கள் புவனேஸ்வரன் நாயரும் அவர் மகனும்தான்.

உண்ணிக்கிருஷ்ணன் ஒதுங்கி நின்று அவர்கள் ஓடுவதைக் கவனித்தான். மீண்டும் அவன் தலையைத் திருப்பிப் பார்த்தபோது அந்தப் பகுதியில் எவரும் இல்லை.

திண்ணைக்கு வந்து அமர்ந்தான் உண்ணி.

மறுநாள் காலையில் பத்மநாபன் நாயர் வந்தார்.

"ஒரு முக்கியமான விஷயத்தை உங்ககிட்டச் சொல்லத்தான் வந்தேன். ஜாதவேதன் நம்பூதிரியின் மகள் ஸ்ரீகுட்டியை நீங்கள் கல்யாணம் செய்துகொள்ள வேண்டும். வேறு வழியில்லை" நாயர் தெளிவான குரலில் கூறினார்.

"மறுபடியும் ஒரு கல்யாணமா?" உண்ணி துயரம் நிறைந்த குரலில் கேட்டான்.

"இந்தக் கல்யாணம் கண்டிப்பா நடந்தே தீரணும். இல்லேன்னா இந்தக் குடும்பத்துக்கு வாரிசு இல்லாமப் போயிடும். அதற்காகவாவது இந்தக் கல்யாணம் நடக்க வேண்டும்."

கல்யாணம் மிகவும் அமர்க்களமாக நடந்தது. பிரமாண்டமான கல்யாணத்தைப் பார்த்து ஊரார் மூக்கின் மீது விரல் வைத்தார்கள்.

அன்றிரவு உண்ணிக்கிருஷ்ணன் மார்பில் தலை சாய்த்தபடி ஸ்ரீகுட்டி கேட்டாள்:

"என்ன உண்ணி... என்னை மறந்துட்டிங்களா?"

"என்ன... உண்மையாகவா!" என்று வியந்த உண்ணி, மந்தாகினி யின் குரலால் திடுக்கிட்டு எழுந்து விளக்கின் திரியை உயர்த்தினான்.

ஆனால், கட்டிலிலிருந்தவள் ஸ்ரீகுட்டிதான்; வேறு யாருமல்ல.

"உண்ணி... நான்தான்... மந்தாகினியேதான். நான் இவளுக் குள்ளேயும் இருக்கிறேன். நான் ஒருபோதும் உங்களை விட்டுப் பிரிய மாட்டேன்."

தாயத்து இருக்கும் தன் இடுப்புப் பகுதியை விரலால் தடவிப் பார்த்தான்.

அதோ... தனக்காகத் தாயத்தைக் கழற்றிக் கொடுத்ததால் அந்த அடையாளம் தெரியும் இடுப்பு.

அவன், அவளை இறுக அணைத்தான்.

OOO

- மலையாளத்தின் ஜனரஞ்சகமான எழுத்தாளர்களில் குறிப்பிடத் தக்க இடம் பெற்றிருப்பவர் கோட்டயம் புஷ்பநாத் அவர்கள்.
- தொடர்கதை எழுதுவதில் தனி முத்திரைப் பதித்தவர்.
- இவரது புத்தகங்களைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார் எழுத்தாளர் சிவன் அவர்கள்.
- சுவாரஸ்யமான ஒரு திகில் நாவலுக்குத் தேவையான எல்லா அம்சங்களும் இவரது நாவலில் நிறைந்துள்ளன.



கவிதா பப்ளிகேஷன்
POST B
NO: 8, MASI
PONDY BAZAAR, T.NAGAR,
CHENNAI- 600 017
✆ 2436 4243, 2432 2177

Code No: 1596